**SRI J. MATHA GOWDER :** விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டாலும், தேயிலை போன்ற பொருள் களுக்கு இரு வரி இருப்பதால், அதனால் சிரமம் இருப்பதால், தேயிலைக்குள்ள விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு அரசாங்கம் கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுக்குமா?

**THE HON. SRI R. VENKATARAMAN :** இந்த யோசனையும் அங்கு ஆலோசிக்கப்பட்டது.

**SRI A. GOVINDASAMY :** விற்பனை வரிக்குப் பதிலாகத்தான் கலால் வரி போட உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் நம் ராஜ்ய சர்க்காருக்கு வருமானம் குறையாதா? அதைத் தடுக்க நம் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

**THE HON. SRI R. VENKATARAMAN :** துணி, சர்க்கரை, புகையிலை இம்மூன்று பண்டங்களுக்கு விற்பனை வரிக்குப் பதிலாக எக்ஸைஸ் வரி விதிக்க ஒத்துக்கொண்டோம். அதனால் நமக்கு முன்பு வந்த வருமானத்தைவிட இப்பொழுது அதிகம் வந்து கொண்டிருக்கிறது.

*Display of prices of articles in shops*

* 30 Q.—SRI A. A. RASHEED :
SRI A. VEDARATHNAM : } Will the Hon. the Minister for Home be pleased to state whether the Union Government have asked the opinion of the Government regarding the proposed legislation for the compulsory display of prices of articles in shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : May I know whether there is a proposal before this Government for the compulsory display of prices in the shops? If so, when do they propose to bring such a legislation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal with this Government.



20th January 1961]

**SRI A. VEDARATHNAM :** முக்கியமான உணவுப் பண்டங் களின் விலையை மட்டுமாவது கடைகளில் எழுதிப் போடும்படிச் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கடைகளில் விலை களைப் போடவேண்டுமென்றால் விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டால் அப்பொழுது கண்ட்ரோல் வருவது மாதிரியாகும். அதை பொது மக்கள் சாதாரணமாக விரும்பமாட்டார்கள். ஆகவே அம்மாதிரி உத்தேசம் இல்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that such display of prices will help the public to boycott and reject those goods which are highly priced?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the prices are high and there is exploitation, the public can freely understand them and they can take their own action.

*Potatoes*

*** 31 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் உருளைக்கிழங்கிற்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது?

(இ) இதை மாற்றி அமைக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) There is no control over the price of potatoes.

(   ) Does not arise.

**SRI A. VEDARATHNAM :** சமீபத்தில் உருளைக்கிழங்கின் விலை அவர்களுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்து விட்டதென்று அரசாங்கத்தினிடம் டெப்யுடேஷன் வந்தார்களா? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** உருளைக்கிழங்கின் விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்துவிட்டதென்று வந்து தெரிவித்தார்கள். ஆனால் அதில் நேரிடையாக நடவடிக் கைகள் எடுத்துக்கொள்ள ஒன்றுமில்லை. அதை அப்படியே அரசாங்கம் அதிக விலைக்கு வாங்கி எடுத்துக் கொள்ளமுடியாது. அப்படி கனம் அங்கத்தினர்கள் யாரும் யோசனை கூற மாட்டார்கள். ஆனால் வேறு சில வசதிகள், ரெயில் வசதிகள், வேறு ராஜ்யங்களில் விற்க வசதிகள் இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

**SRI J. MATHA GOWDER :** சென்ற ஆண்டு உருளைக்கிழங்கின் விலை மிகமிகக் குறைவாக விற்ற காரணத்தினால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம்

[20th January 1961

சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கார் அவர்களிடமிருந்து நேரிடையாக வாங்கி விற்கவில்லை என்றாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்ய சர்க்கார் என்ன யோசித்திருக்கிறது?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : சில சமயங்களில் உருளைக்கிழங்கு விலை அதிகம் ஆகிறது. அப்பொழுது அதிக லாபம் வருகிறது. குறைந்தால் நஷ்டம் ஏற்படலாம், இல்லை நஷ்டம் இல்லாமல் லாபம் குறையலாம், இதற்கெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கம் ஈடு செய்வது என்று எதிர்பார்க்க முடியாது.

SRI B. K. LINGA GOWDER : Is there any proposal before Government to fix a minimum price for potatoes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal before Government.

*Co-operative Spinning Mills*

*** 32 *Q.*—SRI S. M. ANNAMALAI** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை கூட்டுறவு நூற்பு மில்கள் ஏற்படுத்தப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : In the Draft Third Plan for the State, provision has been made for the establishment of four co-operative spinning mills. They are only tentative at this stage.

**SRI S. M. ANNAMALAI** : வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் ஒரு நூற்பு மில் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று சர்க்காருக்கு கோரிக்கை வந்திருக்கிறதா? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதை ஆரம்பிக்க முன் வருமா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : பலவிடங்களிலிருந்து அந்த விதமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எந்தவிடத்தில் என்று இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**SRI A. VEDARATHNAM** : இந்த நான்கு மில்களை எந்தெந்த இடத்தில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் ஏதாவது இந்த நூற்பு பஞ்சாலைகள் உண்டா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** தஞ்சை ஜில்லாவில் 12,000 கதிர்கள் கொண்ட ஒரு மில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சாங்ஷனாகியிருக்கிறது என்று சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். I want to add that it is in the private sector and not in the public sector.



20th January 1961]

**SRI V. SUBBIAH** : இந்த ராஜ்யத்தில் நீண்ட இழைகள் உள்ள கதிர்கள் உற்பத்தியாகும் இடத்தில் இப்பேர்பட்ட மில்கள் ஏதாவது வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கோவில்பட்டியிலும் மில் இருக்கிறது. அந்தப் பகுதியில் அதிகம் இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு கூட்டுறவு மில் இருக்கிறது, ராஜபாளையத்திலும் இருக்கிறது.

**SRI T. KARIA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, வந்தவாசியில் ஒரு நூற்பு ஆலை ஆரம்பிக்கப்போவதாக செய்தி பத்திரிகையில் வெளிவந்தது சர்க்காருக்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**THE HON. SRI R. VENKATARAMAN** : என்னுடைய பதிலில் "These proposals are tentatire" என்று சொன்னேன். எந்த இடத்தில் அமைக்கப்படும் என்று இன்னும் சொல்லப்படவில்லை. பல இடங்களிலிருந்தும் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

**SRI A. GOVINDASAMY** : இதற்கான மனுக்கள் எந்தெந்த இடங்களிலிருந்து வந்திருக்கின்றன? தனியார் துறையில் ஆரம்பிக்கப்படவிருப்பதையும் சேர்த்து கணக்கிட்டுத்தான் சர்க்கார் இந்த விபரங்களை கொடுக்கிறார்களா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : சர்க்கார் துறையில் டெக்ஸ்டைல் மில் ஆரம்பிக்கவேண்டும் என்ற உத்தேசம் இப்போது கிடையாது. இந்த மில்களை எல்லாம் கூட்டுறவு முறையிலும் தனியார் துறையிலும் ஆரம்பிப்பதாகத்தான் இருக்கிறது. இது எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று இப்போது சொல்வதற்கில்லை.

**SRI A. MARIAPPAN** : சேலம் மாவட்டத்தில் கைத்தறியாளர்கள் அதிகமாக இருப்பதினால் சேலம் ஜில்லாவுக்கு அதிகப்படியான ஸ்பின்டில்களை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : அதற்காகத்தான் கூட்டுறவு முறையில் ஒரு மில் சேலம் ஜில்லாவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Rural Industrial Estates*

*** 33 *Q.*—SRI S. M. ANNAMALAI** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் கிராமிய தொழில் பள்ளிகள் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) இப்படியானால் வடஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும்?

[20th January 1961

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (இ) During the Third Five-Year Plan, the Government propose to establish worksheds in places with a population up to five thousand and Industrial Estates in places with a population above that limit. During 1961–62, it is proposed to start an Industrial Estate at Arkonam in the North Arcot district.

*Arkonam-Erode railway line*

* 34 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணத்திலிருந்து ஈரோடு வரைக்கும் ரயில்வே இரட்டைப் பாதைகள் அமைக்கப்படும் திட்டத்தை சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்களா ?

(இ) அப்படியானால், எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The State Government have not sent any proposal for the doubling of the railway track. The Railway Administration has taken up under the Second Five-Year Plan, the doubling of certain sections between Arkonam and Erode aggregating to 89 miles. Out of the 89 miles a length of 35·17 miles has been doubled and opened for traffic. 26·50 miles of doubling work is still in progress and the proposal is still under review of the Railway Administration in respect of the remaining 27 miles.

SRI P. G. MANICKAM : ஸார், இதுவரை பூர்த்தி செய்யாத 25 மைல்களையும் இன்னும் எவ்வளவு காலத்திற்குள் பூர்த்தி செய்து கொடுப்பதாக ரயில்வே இலாகா உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கான வேலை நடந்து கொண்டுதான் இருக்கிறது. சீக்கிரத்தில் பூர்த்தியாகி விடும்.

SRI P. G. MANICKAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? இதில் எவ்வளவு செலவு செய்யப்பட்டதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொகை விவரம் என்னிடமில்லை. மைல் விவரம்தான் என்னிடமிருக்கிறது.

*National Cadet Corps*

* 35 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government of India have recommended to the Government to stop recruitment to National Cadet Corps?



20th January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI A. A. RASHEED : Sir, may I know whether there is any proposal to make it compulsory for the students to join National Cadet Corps?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal under consideration now.

*Harijan colonies*

* 36 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுத்தமான ஹரிஜனக் காலனிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் பற்றிய விவரமென்ன ?

(இ) இச்செய்தி சேரிவாழ் மக்களுக்கு எட்ட என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) The neat and sanitarily well-maintained Harijan colony in each taluk is eligible for the award of prizes. The award of prize to the best Harijan colony will be in the shape of five Ambar Charkas or a Radio Set and will not cost more than Rs. 300 per taluk.

The selection of colonies will be made by the District Harijan Welfare Committee or any other District Level Committee acting on its behalf with due regard to the following aspects, viz :—

(i) keeping of houses clean,

(ii) keeping of surroundings clean,

(iii) keeping of streets, bathrooms, wells, latrines, schools, etc., clean, and

(iv) keeping the boys and girls clean.

(இ) A press release was issued on 5th August 1960 which had appeared in the Tamil Dailies like Swadesamitran, Dinamani and Nava India. Besides this, the Collectors and the Director of Harijan Welfare have also been requested to give publicity to this scheme.

SRI A. VEDARATHNAM : ஸார், சேரி வாழ் மக்களுக்கு பத்திரிகை படிப்பதற்கு வசதிகள் மிக குறைவாக இருப்பதினாலும் இதைப்படிக்கின்றவர்கள் குறைவாக இருப்பதினாலும் அங்கு அவர்களுக்கு பிரச்சாரம் மூலமாகவோ அல்லது துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவோ இந்தப் பரிசு திட்டத்தைப்பற்றி அறிவிக்க சர்க்கார் முன்வருமா ? இந்தத் திட்டம் ஆரம்பித்தபின்னால் எந்தெந்த சேரிகளுக்கு இந்தப் பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி கிராமங்களில், சேரிகளில் நன்றாகப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும் என்று அந்தந்த ஜில்லா கலக்டர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும் அவ்விதமே செய்வார்கள் என்று நம்புகிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், ஒவ்வொரு கிராமங்களுக்கும் போய் எந்த சேரி சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று ஹரிஜன வெல்ஃபேர் கமிட்டி போய் சுற்றிப்பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும் கிராமத்தை தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இந்தக் கமிட்டி சுற்றிப்பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன வெல்ஃபேர் கமிட்டிப் போய் சுற்றிப் பார்க்க முடியாது. பரிசுகளை நிர்ணயிப்பதற்கு இந்தக் கமிட்டியிடம் கேட்கப்படுகிறது. ஹரிஜன நல இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் போய் சுற்றிப்பார்த்து இவர்களுக்கு ரிப்போர்ட் கொடுப்பார்கள்.

SRI K. B. S. MANI : ஸார், இந்தப் பரிசுத்திட்டத்தை முதலில் மக்கள் புரிந்துக்கொள்ளக்கூடிய முறையில் டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீஸர் துண்டுப் பிரசுரங்கள்மூலம் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கின்றனரா, மேலும் இந்தத் திட்டத்தில் ஒரு கிராமத்திற்கு என்று ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா, அல்லது ஒரு தாலுக்காவுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதா அல்லது மாகாணம் முழுவதிற்கும் சேர்ந்தாற்போல் ஒதுக்கப்பட்டிருக்கிறதா, இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : என்னுடைய பதிலில் இதைப் பற்றி சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் அதை நன்றாக கவனிக்கவில்லைபோலும். முதலில் ஒவ்வொரு தாலூகாவுக்கு என்றுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 300 ரூபாய் ஒதுக்கப்படும். அதாவது 5 அம்பர் சர்க்கா அல்லது ஒரு ரேடியோ செட் கொடுப்பது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இந்த வருடம் 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI B. DORAISAMI REDDIAR : ஹரிஜன காலனிகளில் எந்த சேரி சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்ப்பதற்காக எங்கள் தொகுதியிலுள்ள எம்.எல்.ஏ.-க்களை எல்லாம் அழைத்துக் கொண்டு போய் காண்பித்தார்கள். கழிந்த 18-ம் தேதியன்று நாங்கள் போய் சுற்றிப்பார்த்தோம். சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும் சேரிக்கு 5 அம்பர் சர்க்கா அல்லது ஒரு ரேடியோ செட் பரிசாக கொடுப்பது என்று தீர்மானித்திருக்கிறார்கள். அதுவும் இல்லாவிட்டால் இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற 300 ரூபாயை வேறு ஏதாவது விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இவ்விதம் கொடுப்பதற்காக எங்களை போன்ற எம்.எல்.ஏ.-களை அழைத்துக் கொண்டு போனார்கள்.

MR. SPEAKER : இது கேள்வியாக இல்லையே ?





SRI B. DORAISAMI REDDIAR : இவைகள் எல்லாம் நடந்த சம்பவங்கள், இவைகளை எல்லாம் சொன்னால்தான் எல்லோருக்கும் தெரியும். இவ்விதம் ஒவ்வொரு தாலூகாவுக்கும் கொடுத்து வருகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இத்தனையும் சொல்லி இவைகள் எல்லாம் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்டால் கேள்வி கேட்பதுபோல் இருக்கும்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : இவ்விதம் ஹரிஜன குடியிருப்புகளுக்கு வெகுமதி கொடுக்கிற பொழுது எந்த காலனியிலிருந்து அதிகமான குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள் என்பதையும் கணக்கிலெடுத்து வெகுமதி கொடுப்பதற்குரிய ஒரு அம்சமாக பரிசீலனை செய்ய முடியுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : காலனியை சுத்தமாக வைத்திருப்பதைப்பார்த்துத்தான் இப்போது பரிசுகள் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் எத்தனை மாணவர்களை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள் என்பதை சேர்ப்பதற்கில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : காலனிகளை சுத்தமாக வைத்திருந்தால் பரிசு கொடுக்கப்படும் என்று சொல்லுகின்ற நேரத்தில் பல காலனிகள் சுடுகாட்டின் ஓரத்திலும் பள்ளத்தாக்குகளிலும் ஏற்படுத்தப்படுகின்றன. இதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்விதம் இந்தச் சமயத்தில் சொல்வது நல்லதல்ல என்று நினைக்கிறேன். சுத்தமாக வைத்திருக்கும் காலனிகளுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று சொல்லும்போது அவைகள் சுடுகாட்டின் பக்கத்தில் ஏற்படுத்தப்படுகிறது என்று சொல்வது சரியல்ல, இவ்விதம் ஏற்படுத்தப்படுகின்ற காலனிகளுக்காக வேண்டிய இடங்கள் சுடுகாட்டின் பக்கத்தில் இருந்தால் அவைகளை அக்வொயர் பண்ணக்கூடாது என்று சொல்லப்பட்டுவருகிறது.

*Food-Zones.*

* 37 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு தான்ய வகையில் சோனல் (zonal system) முறையை ஒழிப்பதற்கு மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியாயின், மாநில சர்க்கார் அனுப்பிய பதிலின் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

*Film Units*

* 38 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் சமுதாய நலத் திட்டப் பகுதிக்கு "Film Unit" எப்போது வாங்கப்பட்டது?

(இ) அது இப்போது எங்கே இருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) September 1959.

(*b*) Arcot Block.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ஃபில்ம் யூனிட்டானது போளூர் சமுதாய நலத் திட்டப் பகுதியின் பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டு அதை இப்போது ஆற்காடு பிளாக் உபயோகித்துக் கொண்டுவருகிறது. அதை ஏன் மறுபடியும் போளூர் சமுதாய நலத் திட்டப் பகுதிக்கு மாற்றக்கூடாது? கலெக்டர் அவர்களுக்குச் சொல்லி அதை மாற்றுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது தனிப்பட்ட ஒரு பிளாக்குக்கென்று வாங்கியதல்ல. ஜில்லா முழுவதிலும் உள்ள எல்லா பிளாக்குகளும் உபயோகிப்பதற்கென்று வாங்கப்பட்டது. வருஷத்திற்கு ஒரு பிளாக்கில் இருக்கும். இப்போது ஆற்காடு பிளாக்கில் இருக்கிறது.

*Lighting on Madras Beach*

* 39. *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have drawn the attention of the Corporation of Madras regarding the inadequate lighting on the Madras Beach?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes.

SRI A. A. RASHEED : Is it a fact that the Marina Beach is vested in the Madras Government and if so, what steps this Government have taken for making it a brighter and beautiful Marina?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : In the main question put by the hon. Member, he has asked the Government to approach the Corporation to take action in the matter. The Government have addressed the Corporation and from the reply received from them, we understand that 400 watts Mercury discharge lamps are not available and it is owing to that, they are not able to replace the fused lamps. Anyhow by the indigenous lamps purchased now they are able to replace nearly 50 per cent of the fused lamps on the Beach Road and another 12 or so lamps are to be replaced and they will be replaced shortly.



SRI A. GOVINDASAMY : மெர்க்குரி விளக்குகள் இறக்குமதி செய்வதில் சங்கடம் இருக்கும் காரணத்தினால்தான் சென்னையில் போதுமான விளக்குகள் போடமுடியவில்லையாதலால், அந்த சங்கடங்களைத் தவிர்த்து இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நான் அதைப் பற்றித்தான் பதிலில் சொன்னேன். விளக்குகள் கிடைக்காத காரணத்தினால்தான் கால தாமதம் ஏற்பட்டது. இன்னொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கமே, மத்திய அரசாங்கத்தை பல்புகள் தருவிப்பதைப்பற்றி கேட்டுக்கொண்டிருக்கிறது. வேண்டிய பல்புகளைத் தருவிக்கும்படி அரசாங்கம் கார்ப்பொரேஷனையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that three Mercury Discharge lamps are allotted for every division in the City of Madras and so 300 lamps are available to be used in the respective divisions in the City? Therefore, it is not possible to divert a few lamps to the Marina Beach? What is the exact position and will the Hon. Minister kindly say why there is paucity of Mercury Discharge lamps?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : With regard to the first part of the question, I have no information. But as regards the second part of the question about mercury lamps, from the information that we have been able to gather from the Corporation, we understand that they have already replaced 50 per cent of the fused lamps on the Beach Road and others will be replaced shortly. About the allotment of lamps, I request the hon. Member to put a separate question.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், ஒரு பக்கத்தில் குடிசை வாழ் மக்கள் கஷ்டமான வாழ்க்கை நடத்தும்போது, அதே நேரத்தில் மிகவும் அலங்காரமான பகுதிகளை மேலும் மேலும் அலங்காரமாக்கும் விஷயத்தில் கொஞ்சம் நிதானிக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

(பதிலில்லை.)

*Reservoir across Kamandala Nadhi*

* 40 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the scheme of constructing an anicut across Kamandala river near Shanbagathope will be included in the Third Five-Year Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த நீர்வாய்க்கால் கட்டுவதைப்பற்றி சுமார் 30, 40 கிராமத்தவர்கள் மனுச் அனுப்பி இருக்கிறார்கள். இதனால் 30, 40 கிராமத்தவர்கள் [illegible]

[20th January 1961

வார்களாதலால், இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது எத்தனையோ முறை பரிசீலனை செய்யப்பட்டது. முதலில் தண்ணீர் கிடையாது. இரண்டாவது கட்டினால் செலவு அதிகம் ஆகிறது. மூன்றுவது, ஏரிகள் இருந்தால் நிறப்பலாம் என்றாலும் ஏரிகளும் இல்லை. ஆகையால் மேற்கொண்டு இதைப் பரிசீலனை செய்வது பயனற்றது என்று கைவிடப்பட்டது.

*Package Deal Scheme (Thanjavur)*

* 40-A. Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the total amount to be spent under the Package Deal in Thanjavur district this year;

(b) the amount expected as contribution from the Centre; and

(c) the nature and extent of the aid to be received from the Ford Foundation Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Rs. 23·25 lakhs.*

(b) Rs. 4·82 lakhs.*

(c) A grant of Rs. 15·37 lakhs.*

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இதுவரையில் இந்தத் திட்டத்தின்கீழ் கடனைகப் பணமும் உரமும் எவ்வளவு வழங்கப்பட்டது ? நிலச் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ? நிலம் இல்லாது உழவு வேலை செய்யக் கூடியவர்களுக்கு—கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸுக்கு—எவ்வளவு கொடுக்கப்பட்டது ? கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸ் என்பதை எந்த முறையில் எப்படி நிர்ணயிக்கிறுர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்களை யெல்லாம் அளிப்பதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட உரம் முதலியன வெளி ஜில்லாக்களுக்கு கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அப்படியானல் அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி வழங்கப் படுகின்ற உரம் வெளி ஜில்லாக்களுக்குக் கொண்டு போகப் படுகிறது என்று அதிகமாகப் புகார் இல்லை. ஒன்றிரண்டு விஷயத்தில் அந்த மாதிரியும் நடந்திருக்கலாம். பற்றுக்குறை

* These figures are tentative and are based on present estimates.



20th January 1961]

இருக்கும்போது அப்படி நடக்கலாம். ஜில்லா விட்டு ஜில்லா கொண்டு போகப்படுவதைத் தடுக்க தடை விதிக்க வேண்டு மென்று ஜில்லா கலெக்டர் அவர்கள் சொன்ஞர்கள். அதைப் பற்றி மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். இப்போது ராஜ்யத்தை விட்டு ராஜ்யத்திற்குக் கொண்டுபோவதற்குக்கூட தடை கிடையாது. மத்தியப் பிரதேசத்திலிருந்து வந்துகொண்டி ருக்கிறது. ராஜ்யத்தை விட்டு ராஜ்யம் கொண்டுபோவதைப் பற்றி பார்க்கலாம் என்று சொன்ஞர்கள். ஜில்லா விட்டு ஜில்லா கொண்டு போவதைத் தடை செய்யும் உத்தேசம் இப்போது இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இங்கு மொத்தம் எவ்வளவு உரம் வழங்கப்பட்டது ? ஏக்கருக்கு என்ன வீதசாரப் படி கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றியும் தனியாகக் கேள்வி வேண்டும்.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்த தீவிர சாகுபடித் திட்டம் தஞ்சையிலுள்ள எல்லா தாலூகாக்களிலும் எல்லாப் பகுதி களிலும் அமுலில் இருக்கிறதா ? அல்லது ஒவ்வொரு தாலூக்கா விலும் ஒவ்வொரு பகுதி எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சை வட்டார வளர்ச்சிப் பிராந்தியங்களில் 100-க்கு 20 பங்கு முதல் வருஷத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

SRI A. GOVINDASAMY : ரசாயன உரத்தோடு சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தக் கூடிய உப்பையும் கலந்து விற்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனையோ கலப் படங்கள் நடக்கின்றன. இதுவும் நடந்திருக்கலாம். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: இதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு இல்லையா ?) தடுக்க வேண்டிய பொறுப்புத்தான், தடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

SRI A. VEDARATHNAM: சென்ற வருஷம் ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டதா ? இல்லா விட்டால் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளும் ? காலம் கடந்து உத்திரவு கிடைத்த காரணத்தினல் பூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அடுத்த ஆண்டிலாவது அம்மாதிரி இல்லாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் நாட்டிலே நம் ராஜ்யத்தில்தான் முதன் முதலாக இந்தத் திட்டம் சென்ற பசலியில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நிர்ணயம் செய்ததில்

[20th January 1961

கொஞ்சம் தாமதம் ஆகியது. இந்த ஆண்டு மதிப்பிட்டபடி கடன் தொகை, மற்ற இனங்கள் எல்லாம் பரிபூர்ணமாகச் செலவிடப் பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM: நான் கேள்வி கேட்டதன் நோக்கம் ஜில்லாவிற்கு ஜில்லா உரம் போவதைத் தடுக்கவேண்டுமென்பதற்காக அல்ல. தஞ்சைக்கு ஒதுக்கப்பட்ட உரம் பூராவையும் அங்குள்ள விவசாயிகள் வாங்க முடியாமல் இருக்கின்ற காரணத்தினால்தான் வெளியிடங்களுக்குப் போகக் கூடிய நிலைமை இருப்பதால், எல்லா விவசாயிகளும் வாங்கிப் பயன் படுத்திக்கொள்ள என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஏழை விவசாயிகளுக்குக் கடனைக் கொடுக்கிறோம். வாங்க முடியாத நிலை ஒன்றும் இல்லை, வாங்கி வருகிறார்கள். பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். சிலர் கடனுக்கு வாங்கி கள்ள மார்க்கெட்டில் விற்றிருக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN: தீவிர சாகுபடிக்காக வந்த உர விநியோகத்தில் உள்ள ஊழல்கள் சம்பந்தமாக அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்தாலும் 5, 10 ரூபாய்க்கு மேல் அபராதம் விதிக்க சட்டம் இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அம்மாதிரியில்லாமல் தீவிர நடவடிக்கை எடுக்கும் முறையில் சட்டம் கொண்டுவரப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: களம் அங்கத்தினர் அவர்கள் பிரச்சாரத்திற்காக வேண்டுமானால் ஊழல்கள் என்று சொல்லலாம். அப்படியொன்றும் இல்லை. தவறுகள் இருந்தால் அப்போதைக்கப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

MR. SPEAKER:—Questions are over.

[NOTE.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## III.—POINT OF INFORMATION REGARDING A MATTER OF PRIVILEGE RAISED IN THE PREVIOUS SESSION.

9-30 a.m. SRI M. KALYANASUNDARAM: With your permission, Sir, I want to raise a matter in which all sections of the House will be interested. You will remember that during the last season the High Court issued a notice to you asking you to show cause why certain matter in the agenda shouuld not be prevented from being taken up for consideration. You were good enough to announce in this House that the High Court has no jurisdiction and you decided not to appear before the High Court. That decision was acclaimed by all sections of the House as a correct step in the direction of upholding the dignity of this House, without of course infringing the dignity of the High Court. Now so many months have passed. The High Court has passed official



20th January 1961] [Sri M. Kalyanasundaram]

orders on several cases in that connection. But we do not know where we stand with regard to that. I do not think that this House should be indifferent to the dignity of the High Court. We are vitally concerned with the dignity of the High Court also. Both Judiciary and Legislature are two limbs functioning independently under the Constitution. So, it is necessary that one should not try to undermine the prestige and dignity of the other. May I know what is the position now? May I know whether you are contemplating any further step in the matter and may I also know where matters stand now?

MR. SPEAKER: On the matter of privilege raised by the hon. Member, Sri S. Lazar I could not give my ruling in the last session. That privilege matter is not before the House now as the Legislature was prorogued by His Excellency the Governor and on prorogation all pending matters lapsed. I am aware of my powers under Article 212 of the Constitution and of the privileges of Members under Article 194. I am also aware of my duties under Article 211. Any clarification at this stage, whe- there is no matter before the House, will only be of academic interest. As the hon. Member himself said, the Legislature and the Judiciary are two limbs of the Constitution. If the Constitution is to work successfully, both the Judiciary and the Legislature must each have complete confidence in the other functioning properly and must treat the other with due respect. I do hope that there will be no occasion for any clash between the two. I do also hope that the hon. Member will have confidence in me to protect the rights of the hon. Members individually and of the House as a whole

## IV.—ANNOUNCEMENTS.

### (1) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER: Under rule 5 of the Madras Legislative Assembly Rules, I have, in consultation with the Leader of the House and the Business Advisory Committee, allotted 5 days, viz., 20th, 21st, 23rd 24th and 25th January 1961 for the discussion on the Governor's Address.

Under sub-rule (2) of the rule 159 of the Madras Legislative Assembly Rules, I have also allotted the 25th January 1961 for the discussion and voting on the Second Supplementary Estimates of Expenditure for 1960-61.

I am also to announce the following further programme of the House:—

26th January 1961 (Thursday)—Holiday—Republic Day.

27th January 1961 (Friday)—No meeting.

28th January 1961 (Saturday)—Official Business.

30th January 1961 (Monday)—

1. The Appropriation Bill, 1961.

2. Non-official Business.

31st January 1961 (Tuesday)—Official Business.

1st February 1961 (Wednesday)—Official Business.

The House will sit from 8-30 a.m. to 1-30 p.m. on all days. It is also expected that the House will again meet on 17th of February 1961. This has not been finalized. Hon. Members will be informed of it when it is finalized.

(2) PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER: Under rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following to be the Panel of Chairmen:—

1. SRIMATHI T. N. ANANDANAYAKI.
2. SRI A. VEDARATHNAM.
3. SRI V. SUBBIAH.
4. SRI M. SELVARAJ.

I have nominated only four. I shall nominate two more if occasion necessitates it.

V.—SECOND SUPPLEMENTARY ESTIMATES OF EXPENDITURE FOR 1960-61.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir,

I rise to present the Second Supplementary Statement of demands for grants for further expenditure in 1960-61. The detailed explanatory statement is placed on the table of the House.

2. The supplementary demand before the House is for a total sum of Rs. 6·12 crores. Out of this, a demand of Rs. 2·59 crores is on the revenue account and a demand of Rs. 3·30 crores on the capital account and the balance of Rs. 23 lakhs under "Loans and Advances".

3. The House is aware that we have been able to achieve the targets under all heads of development in the Second Plan and exceed some of them, largely on account of continuous process of review and reappropriation, to meet the growing tempo of Plan outlay. The current year being the last year of the Second Plan, there is an increase in Plan expenditure under many heads and we have also to take up the preliminary work in respect of Third Plan schemes. This trend is reflected in the present supplementary estimates.

4. The District Boards other than Thanjavur are being given consolidated net cost grants for primary and secondary education. On the basis of their actual requirements, it is now found that an additional amount of Rs. 40 lakhs for Primary Education and Rs. 35 lakhs for Secondary Education is required. Similar net cost grants have to be given for the first batch of 75 Panchayat Unions



for Primary Education and a sum of Rs. 40 lakhs has been asked for, for this purpose. Members would have participated in the inauguration of the first batch of 75 Panchayat Unions on 2nd October 1960. This is a major reform for which only a token amount had been provided under various heads while finalizing the Budget. The present supplementary demand includes a provision of 21 lakhs for the construction of buildings to house the offices and meeting halls of the first batch of 75 Panchayat Unions in the current year. A Block Planning Officer has been sanctioned for each of the 375 blocks into which the State has been delimited. Staff has been sanctioned for the Panchayat Unions and for the Collector's offices. In keeping with the tempo of work to be undertaken in the Panchayat Union areas, special staff has been sanctioned to the Highways Department. All these provisions will be found in this supplementary estimate under the appropriate demands. Linked up with the Panchayat reform is the long awaited increase in the emoluments of village officers about which several Members spoke when I presented the first supplementary estimates before this House for the Pay Commission expenditure. We have sanctioned an ad-hoc increase of Rs. 2 or 3 to thalayaris, Rs. 5 or Rs. 7 to the village headmen and Rs. 10 or Rs. 12 to karnams according as they hold a light charge or a normal charge. A karnam who discharges the function of Secretary to the Village Panchayat is given an additional remuneration of Rs. 2 or Rs. 3 as the case may be. This increase has been made applicable to all village officers in the State from 1st January 1961.

5. The significant provisions reflecting the increase in the tempo of Plan expenditure are as follows: Rs. 12 lakhs under Medical and Public Health reflecting the increase in bed strength in hospitals and in the number of admissions to Medical Colleges and the progress of the National Malaria Eradication programme.

Under Agriculture, a provision of Rs. 4 lakhs has been made for the Package Programme which is being implemented in 23 Blocks in the Thanjavur district. Another important item under Agriculture is the scheme for sinking of 425 sub-artesian wells in ten districts of the State.

Under Harijan Welfare, an additional amount of Rs. 10 lakhs has been asked for for scholarships.

Two important items representing preliminary works on Third Plan schemes are a provision of rupees one lakh for investigation to be undertaken for the Iron and Steel Plant at Salem and a provision of Rs. 3 lakhs under Civil Works for the preparation of plans and estimates in respect of road and bridge works to be undertaken in the Third Plan.

6. An item of expenditure that has arisen from the general debate in this House on the Budget for 1960-61, is the grant of Rs. 15 lakhs and loan of Rs. 15 lakhs to the City Corporation. This represents a special assistance to the Corporation in the current year for the improved surfacing of specified stretches of Mount Road;

[Sri C. Subramaniam] [20th January 1961

Poonamallee High Road, other important roads like Body Guard Road and the road from General Hospital to Parry's Corner as well as certain important bus routes. The improved surfacing of these roads will be done in such a manner that they will last without repairs for the next 10 or 15 years. This assistance has, in a large measure, helped in the immediate difficulties consequent on the recent heavy rains.

7. The most significant item of capital expenditure for which an increased appropriation is asked for is the Parambikulam-Aliyar Project. The demand for further expenditure on this Project in the current year is Rs. 1·37 crores over and above the budget provision of rupees one crore. Out of the seven major dams covered by the project, work has been started on five major dams and appreciable progress has already been made on the Aliyar Dam. Work on excavating foundations for Sholiar, Tirumurthi and Parambikulam Dams has been taken up and is in good progress. Construction of camps and buildings at Parambikulam, Tunocadavu, Topsip, Vettaikaranpudur, Pollachi and Thirumurthinagar have been all completed and occupied. Building camps at Sholiar and Valparai is in progress.

8. The Reserve Bank of India has recently sanctioned a sum of Rs. 65 lakhs for participation in the share capital of Madras State Co-operative Bank, District Co-operative Central Banks and Co-operative Agricultural Banks. A demand has been made for the consequent expenditure in share capital participation though it does not involve any net outgo from the State's funds. Under Road Transport, an additional amount of Rs. 30 lakhs has been asked for to put through the current year's programme of 123 vehicles for the Madras Branch and 34 vehicles for the Kanyakumari Branch. One other significant item is an additional appropriation of Rs. 35 lakhs towards compensation to zamindars. This reflects the satisfactory progress in settlement operations which are expected to come to an end in 1962–63.

9. Under "Loans and Advances", apart from the loan of Rs. 15 lakhs to the Corporation of Madras for the improved surfacing of main roads, we have asked for an additional appropriation of Rs. 5 lakhs for the Subsidized Industrial Housing Scheme.

10. Sir, with these few words, I now commend the second supplementary estimates to the House with the confidence that the House will welcome and accept these items of expenditure.

## VI.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : We will now proceed with the discussion on the Governor's Address.

Now, the hon. Member, Sri M. S. Selvarajan will move the Motion of Thanks to the Governor's Address. I propose to allot 20 minutes to the mover of the Motion, 25 minutes to hon. Member Sri P. S. Chinnadurai as leader of a party and 15 minutes each for the rest of the hon. Members participating in the debate to-day.



20th January 1961]

SRI M. S. SELVARAJAN : Sir, I beg to move—

"That an humble address be presented to the Governor as follows :

'The Members of the Madras Legislative Assembly thank the Governor for the address* delivered to the Members of the Legislature on the 19th January 1961.'"

The motion was duly seconded.

MR. SPEAKER : The hon. Member, Sri M.S. Selvarajan, may now speak on his motion.

*SRI M. S. SELVARAJAN: *கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பிரேரேபணை பண்ணக்கூடிய பாக்கியம் எனக்கு கிடைத்ததுபற்றி சந்தோஷப்படுகிறேன். கவர்னர் அவர்கள் சாதாரணமாக ராஜ்யத்தின் பொதுவான நிலைகளையும், நடந்தது, நடக்க இருப்பதையும்பற்றி சூசகமாக சில வார்த்தைகள் அடங்கிய ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பது வழக்கம். இந்த ஆண்டு ஒரு விசேஷமான காலத்தில் கவர்னர் அவர்கள் உரை வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் பூர்த்தி அடையக்கூடிய சந்தர்ப்பத்திலும், அடுத்த திட்டத்திற்கு கால்வைக்கக்கூடிய பூர்வாங்கமாக இருக்கக்கூடிய நிலையிலும் இந்த ஆண்டு கவர்னர் அவர்களுடைய உரைக்கு முக்கியத்துவம் உண்டு.*

*கவர்னர் அவர்கள் முதலில் எடுத்த எடுப்பிலே நம்மை நோக்கி வரக்கூடிய எலிஸபெத் மகாராணியாருக்கு வரவேற்பு கூறியிருக்கிறார். அது நம்முடைய இயல்பான பண்பு. அதுமாத்திரமல்லாமல், இந்திய தேசம் ஆளப்பட்டு வந்த தேசம். இந்திய தேசத்தை ஆண்டவர்களே அந்த தேசத்திற்கு நண்பர்களாக மாறியிருக்கக்கூடியது தேச சரித்திரத்தில் ஒரு புதுமை. அது உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டு. நட்பு முறையிலே பழகியிருக்கிறோம் என்பதை வெளிப்படையாக காட்டுகிற தோரணையில், தோழியாக நட்பு முறையில் இந்த நாட்டில் ராணியார் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார்கள். அதுமாத்திரமல்ல. இங்கிலாந்து தேசத்திய ராணியார் உலகம் முழுமைக்கும் ஒரு பெரிய எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். அவருடைய கணவர் முற்றிலும் ராஜபரம்பரையைச் சேர்ந்தவரல்ல. அவர் 'பார்ஷியலி காமனர்'. அவர் ராஜபரம்பரையை சேர்ந்தவராக இருந்தாலும், ஓரளவுக்கு சாதாரண பரம்பரையை சேர்ந்தவர் என்று கருதக் கூடும். அந்த நிலையில் ராணியார் காட்டிய வழி உலகம் முழுமைக்கும் பல்வேறு தேசங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டு. அரசனும் ஆண்டியும் ஒன்று என்ற பண்பு உலகம் முழுவதும் பரவி வருவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய முறையில் நடந்துகொண்ட பெருமை ராணி அவர்களுக்கு உண்டு என்*

* Printed as Appendix III on pages 132–135 infra.

கருதுகிறேன். ராணி அவர்களை வரவேற்கக்கூடிய விஷயத்தை தம்முடைய உரையில் முதலாவதாக கவர்னர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, அழிவின் மத்தியிலே செழுமை என்று சொல்லக்கூடிய வகையில் இந்த ராஜ்யத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த அதிக மழை, புயல் காரணமாக சேதங்கள், அழிவுகள் ஏற்பட்டிருந்தும், அதே சமயத்தில் அதன் காரணமாக அதிகமாக விளைச்சல் ஏற்படுவது நிச்சயம் என்ற நல்ல செய்தியையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் பெய்த பெருமழை, புயலைப்பற்றிய செய்தி இந்த அறிக்கையில் விடுபட்டிருந்தாலும்கூட, அரசாங்கம் இதுவரையில் இம்மாதிரி அழிவு, சேதம் ஏற்பட்ட காலங்களில் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய சிறந்த பெரிய முயற்சிகளையெல்லாம் இந்தப் பிரதேசத்திலும் தொடர்ந்து எடுத்துக்கொண்டு நடத்துவார்கள் என்ற நம்பிக்கையோடுதான் இந்த உரையை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். சமீபத்தில் தூத்துக்குடியில், குறிப்பாக தென் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய கடலோரப் பகுதிகளில் எல்லையற்ற சிரமங்களுக்கும் அழிவுகளுக்கும் மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். ஏறத்தாழ 10 தோணிகள், பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தோணிகள் அழிந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அதுமட்டுமல்லாமல் அந்த இடத்தில் போக்குவரத்தே ஸ்தம்பித்து போகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் அது விஷயமாக ராஜ்யத்தில் இருக்கக் கூடிய அவற்றையெல்லாம் தேடி எடுக்கக்கூடிய கருவிகாரணங்களையெல்லாம் அங்கு கொண்டு வருவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருந்தாலும் கூட, முற்றிலும் சிறந்த முயற்சிகளை அவசரமாக எடுத்துக்கொண்டு போக்குவரத்தை செம்மையாக்குவதற்கு, அவசியமானால் கடற்படை உதவியைக் கொண்டும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதை சீக்கிரமே செய்து முடிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நம்முடைய கவர்னர் அவர்கள் ராஜ்யத்திலுள்ள விளைவு நிச்சயமாக நல்ல விதமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஏறத்தாழ 12¾ லட்சம் டன் கூடுதல் விளைவு உண்டு பண்ண முடியும் என்று எதிர்பார்த்திருந்தாலும், அதன் பிரகாரம் அந்தத் துறையிலே நாம் வெற்றிபெற முடியாமல் போனதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. முக்கியமாக நல்ல விதமான தேவையான உர விநியோகம் செய்வதற்கான நிலையை நம் ராஜ்யத்திலும், மொத்தத்தில் தேசத்திலும் நாம் அடையவில்லை. அந்தப் பாதையை நோக்கி வேகமாக நடந்துகொண்டிருக்கிறோம். அந்த இலக்கை பிடிப்பதற்கு இன்று இயலாவிட்டாலும்கூட, எதிர் காலத்தில் இன்னும் பல லட்சக்கணக்கான டன், ஏறக்குறைய 33 சதவிகிதம் உயர்வு பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையோடு மூன்றாவது திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. எல்லாவிதமான திட்டங்களையும் தேசம் முழுவதிலும் வெற்றி பெறச்செய்வதற்கு





அதுதான் அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதை கவர்னர் அவர்கள் தன்னுடைய குறிப்பில் காட்டியிருக்கிறார்கள்.

அது தவிர, இந்தத் திட்டத்தின் இலக்கைப் பொறுத்தமட்டில் நாம் விரும்பியது பல்வேறாக இருக்கலாம். இரண்டாவது திட்டத்தில் நாம் பல கோடி ரூபாய் பெறுமான திட்டங்களை விரும்பிக் கேட்டிருந்தாலும் ரூ. 152 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் ரூ. 181 கோடி நாம் செலவு செய்யக்கூடிய அளவிற்கு நம்முடைய திட்டங்களை வேகமாக நம்முடைய முயற்சியை தளர விடாமல் நடத்திக்கொண்டே இருந்தோம். மத்திய அரசாங்கமும் நமக்கு உதவியாக இருந்தது. அந்த அளவுக்கு நாம் முயற்சி செய்தால், அந்த அளவுக்கு நமக்கு நிச்சயம் உதவி கிடைக்கும் என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. அந்த நிலையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்ட முதலீடு சுமார் ரூ. 291 கோடி என்று தற்போதைக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி, நெய்வேலி போன்ற பெரிய திட்டங்களை மத்திய அரசாங்கமே நிறைவேற்றுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். ஆகவே, நாம் எதிர்பார்த்த அளவிற்கு நாம் நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கிறோம் என்ற பூரண திருப்தி இந்த ராஜ்ய மக்களுக்கு ஏற்படலாம் என்பதைத்தான் கவர்னர் அவர்கள் தன்னுடைய குறிப்பிலே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். கடந்த இரண்டு வருஷ காலமாக இந்த சபைக்கு அரசாங்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட அறிக்கையில் மூன்றாவது திட்ட காலத்தில் கிட்டத்தட்ட ரூ. 275, 280 கோடி வரையிலும் நாம் பெற முடியும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது ரூ. 291 கோடி என்று திட்ட முதலீடு வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது சிறிய விஷயமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளுவதற்கு முடியும். எதிர்பார்த்தபடி நாம் பெற்றிருக்கக்கூடிய தொகையை முற்றிலும் சிறந்த முறையில் நாம் செலவழிப்பதோடு கூட, நம்முடைய ராஜ்யத்தின் பொறுப்பு ரூ. 100 கோடி இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லாத் துறைகளிலும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலமாகத்தான் திட்டத்தின் இலக்கை சித்திபெறச் செய்வதற்கு முடியும்.

இன்றைய தினம் நாம் திட்டத்தின் இலக்கைப் பெறுவதற்கு ஏதேனும் தடை இருக்குமானால், அது விலைவாசிகளின் உயர்வு தான். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு முழு முயற்சியும் இன்று அரசாங்கத்தின் தரப்பில் மாத்திரம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறதே தவிர, எந்த எதிர்க் கட்சியினரை எடுத்துக்கொண்டாலும், நியாயமான அளவுக்கு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உருப்படியான ஆலோசனையைச் சொல்லு வதற்கு யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. இத்தகைய பெரிய காரியத்தை செயலாற்றும் பணியில், அரசாங்கம் மட்டுமே தனித் தரப்பில் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்

கிறது. உணவுப் பொருள்களின் விலைகளை அனுசரித்து, மற்றும் பல்வேறு பொருள்களின் விலைகளும் உயர்ந்து கொண்டே போகின்றன. இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மட்டும் இந்த நிலைமை ஏற்பட்டதாக நான் கருத வில்லை. உலகம் முழுவதிலும் ஏற்பட்டு இருக்கக்கூடிய பதட்ட நிலைமையும் இதற்குக் காரணம் என்று நான் கருதுகிறேன். உலகத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நம் நாடு மட்டும் தனித்து நிற்க முடியாது. ஆகவே தேசம் முழுவதிலும் வளர்ந்து வரும் பொருளாதார நிலைமை இதற்கு ஒரு காரணம். அதோடு உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமையும் மற்றொரு காரணம். திட்டத்தின் முழு வெற்றியைப் பெறவேண்டுமானால், அதாவது செயல்படும் திட்டங்களின் முழுப்பலனையும் நாம் அடையவேண்டுமானால், விலைவாசிகளின் உயர்வை ஒரு நியாயமான வரம்பிற்கு நாம் கட்டுப் படுத்த வேண்டும். இதை அரசாங்கம் உணர்ந்துகொண்டுதான் வருகிறது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இரண்டாவது திட்டத்தில் 14 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. மூன்றாவது திட்டத்தில் நமது அரசாங்கம் 27 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. என்றாலும் இன்னும் நிறைவேற்றுவதற்குத் திட்டங்களே இல்லை என்று அரசாங்கம் இருந்துவிடக்கூடாது. மேல் திசையில் இருக்கக்கூடிய நதிகளில் வீணாகப் போகும் தண்ணீரைப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும். புனலாறு, பம்பையாறு, மேல் பெரியார் திட்டங்கள் எல்லாம் நம்முடைய பரிசீலனையில் இருந்துதான் வரவேண்டும். ஒருகால் மூன்றாவது திட்டத்தில் இவைகள் எல்லாவற்றையும் நிறை வேற்றும் வாய்ப்பு இல்லாமல் போனாலும் கூட, மத்திய அரசாங்கத்தின் உதவி பெற்று இவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாமாகையால், எல்லாத் திட்டங்களையும் பரிசீலனை செய்தாகவேண்டும் என்பதை நான் வற்புறுத்துகிறேன். குறிப்பாக, திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், ராம நதி, சேர்வலார், கடனா நதி போன்ற திட்டங்கள், முன்பாத்தியதை கொடுத்து, கூடிய சீக்கிரம் நிறவேற்றக்கூடிய திட்டங்கள்.

நம்முடைய ராஜ்யத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய 100-க்கு 70 பேர், 50 பேர்களாக ஆகும்பொழுது, நிச்சயமாக எல்லா மக்களுடைய வாங்கும் சக்தி பெருகும். இத்தகைய இலக்கைப் பெறுவோமா என்பதை சிந்தித்துப் பார்க்கும்பொழுது, அதற்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கும் அம்சம் நமது ராஜ்யத்திலே வளர்ந்து வரும் தொழில் பெருக்கம்தான். வெளி தேசங்களிலேயிருந்து வருகிற தொழில் நிபுணர்கள், வர்த்தகர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும்கூட நமது ராஜ்யத்தில் ஏற்பட்டு வரும் தொழில் வளத்தையும், பெருக்கத்தையும் கண்டு நம்மையும், நம் தேசத்தையும் பாராட்டும் வகையில் பேசியிருப்பது நம் கவனத்திற்குரியது. தொழில் துறை, வர்த்தகத் துறை தலைவர்கள்





எல்லோரும், தொழில் வளர்ச்சிக்கு நமது ராஜ்யத்தில் கிடைக்கும் ஊக்கமும், ஆக்கமும் வேறு எந்த ராஜ்யத்திலும் கிடைப்பதில்லை என்று பாராட்டியிருக்கிறார்கள்.

வருகிற காலத்தில் நமது ராஜ்யத்தில் உள்ள மாவட்டங்களில் 26 தொழில் பேட்டைகளும், 100 தொழில் பட்டறைகளும் நிறுவ வழிவகை செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இதனால் பல சிறு ரகத் தொழில்களும் முன்னேற்றமடையும்.

தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தப்பட்ட வரையில், அதை ஒரு சூதாட்டப் பணயமாக தேர்தல் சமயத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று யார் யாரோ நினைத்தார்கள். தூத்துக்குடியை ஒரு ஆழ்கடல் துறைமுகமாக ஆக்க உறுதியான முடிவு எடுக்கப்பட்டு அதற்காக மூன்றாவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற சந்தோஷகரமான செய்தியை கவர்னர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். நம்முடைய ராஜ்ய அரசாங்கத்தின் முயற்சி பாராட்டுதலுக்குரியது. நமது பாரதப் பிரதமரின் கண்ணியமான பக்கத் துணையும் இதற்கு உதவி செய்திருக்கிறது. இந்தத் துறைமுகத் திட்டம் மேன்மேலும் பல தொழில்கள் வளருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமென்று நான் நம்புகிறேன்.

**(Sri V. Subbiah in the Chair.)**

இந்த ராஜ்யத்தில் விடுபட்டு இருக்கக்கூடிய ரெயில்வே இணைப்பு சம்பந்தமான திட்டங்களும் சித்தி பெறும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில் அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சேலம்—பெங்களூர் ரெயில்வே இணைப்பு ஏற்கெனவே இருந்ததுதான். புதிது புதிதாக ரெயில்வே இணைப்புகள் கொடுத்து வருகின்ற நிலையில், ஏற்கெனவே இருந்த அந்த ரெயில்வே லைனை மத்திய சர்க்கார் போட்டுத்தான் ஆக வேண்டும். "That goes without saying". நாம் புதிதாகப் போடும்படி வற்புறுத்த வேண்டிய திட்டங்களில், திருநெல்வேலி—கன்னியாகுமரி இணைப்புத் திட்டம் முதலிடம் பெறும்படியாக இருக்கவேண்டும். கீழ் திசையில் தூத்துக்குடி—மானாமதுரை, விருதுநகர் — அருப்புக்கோட்டை — மானாமதுரை ரெயில்வே இணைப்புத் திட்டங்கள் நாம் கோரிப் பெறவேண்டிய திட்டங்கள். இவற்றை எல்லாம் பெறமுடியுமென்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது. சாவித்திரிக்கு கொடுக்கப்பட்ட குழந்தை வரத்தின் காரணமாக சத்தியவான் உயிர் பெற்றதுபோல், இத்திட்டங்கள் எல்லாம் விரைவில் நிறைவேற்றப்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இதுபோன்று, இன்னும் தூத்துக்குடி—மானாமதுரை, மேலும் கடலோர மார்க்கமாக திருச்செந்தூர்—கன்னியாகுமரி இணைப்புப் பாதையும் செயலில் வரக்கூடியதுதான். இதை எல்லாம் அடுத்து, சேது சமுத்திரம் திட்டத்தைப் பெறுவதற்கு நமது ராஜ்ய சர்க்கார் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். தூத்துக்குடி துறைமுகத்திட்டம் வந்து விட்டதே என்ற திருப்தியுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. இந்தத் திட்டங்களை அடுத்து சேது சமுத்திரம் திட்டம் தானாகவே வரும். இத்திட்டங்களினால் மேலும் தொழில் பெருக்கம் ஏற்படும்.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் வந்துவிட்டது என்ற பெருமையோடு கவர்னர் அவர்கள் உரை ஆற்றியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக, நமது அரசாங்கத்துக்கு எல்லோருடைய பாராட்டுதலும் உரியது.

மின்சார இணைப்பு சம்பந்தப்பட்ட வரையில் சுமார் பத்தாயிரம் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பாக்கியுள்ள 3,000 கிராமங்களுக்கு மூன்றாவது திட்டத்தில் மின்சார சக்தி கொடுத்துவிட முடியும். ஆகவே, இரண்டு திட்ட காலத்திற்குள் 150 ஆண்டு காலம் அந்நிய ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு வந்த ஒரு அடிப்படையான கிராம தேவை பூர்த்தியாகிறது என்று நான் கருதுகிறேன். சாதாரணமாக, ஒரு கிராமத்தில் ஒரு கோவில்போல ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது. இப்பொழுது ஊர்தோறும் குடி தண்ணீர் கிணறும் வெட்டப்பட்டு வருகிறது. கிராமங்களிலெல்லாம் ரோடு இணைப்பு பெறுகின்றன. மேலும் ஒவ்வொரு கிராமத்தையும் கூட்டுறவு இணைப்பின்கீழ் கொண்டுவந்துவிடுகிறார்கள். மின்சார இணைப்பும் கொடுத்துவிட்டால், ஒரு கிராமத்தின் ஐந்து அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகிவிடுகின்றன. இதற்கு நமது ராஜ்ய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எடுத்துக் கொண்ட முயற்சிகளே காரணம்.

முன்பு கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்திய காலத்தில், மின்சார இணைப்புக்கு விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில், குறைந்த பட்ச கட்டணத் தொகையைக் குறைப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டது. மினிமம் காரண்டி ரத்து செய்வதின் மூலம் வாக்குறுதி செய்யப்பட்டிருக்கிறது. பிற்
10·00 a.m. போக்கான இடங்களில் ஒரு குதிரை ஓட்ட வேகத்திற்கு 35 ரூபாயும், மற்ற இடங்களில் 45 ரூபாயுமாக கணக்கிடப்படுமென்று பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க சீக்கிரம் வழிவகை செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 18,000 கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுத்துவிட்டதினால், நம்முடைய கடமை பூர்த்தியாகிவிட்டது என்று கருதக்கூடாது. பல ஆயிரக்கணக்கான குக்கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. வழக்கமாக, புதுப் புது திட்டம் போடும்போதெல்லாம், தனித் தனியாக ரெம்யூனரேடிவ் ஆக 10 சத விகிதம் கட்டுப்படியாக வேண்டும் என்று பார்ப்பதனால், பல்வேறு பஞ்சாயத்துக்களில் உள்ள குக்கிராமங்கள், ஹரிஜனப் பகுதிகள், கடலோரப் பகுதிகள், விடுபட்டுப் போகின்றன. போதிய மட்டில், பஞ்சாயத்துக்களில், குக்கிராமங்களில் இவற்றிற்கு மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்து அவைகளுக்கு விசேஷச் சலுகைகள் கொடுத்து, பஞ்சாயத்துக்களில் விட்டுப்போகும் குக்கிராமங்களுக்கு நிச்சயமாக மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டும், ரெம்யூனரேடிவ் ஆஸ்பெக்டைப் பார்க்காமல் ரிஜிட்டாக இல்லாமல்—கடினமாக இல்லாமல்—அப்பகுதிகள்கூட வசதி பெறும் அளவுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை மின்சார இலாகா கவனத்தில் கொள்ளும் என்று நினைக்கிறேன்.



சென்ற தடவை கவர்னர் உரைக்கு பிறகு, பட்ஜெட் உரைமீது விவாதம் நடைபெற்றபோது, நெய்வேலியில், 35 லட்சம் டன் வருஷத்திற்கு உற்பத்தி செய்யலாம் என்று சொல்லி, 40 லட்சம் டன் வரை உற்பத்தி செய்ய மத்திய சர்க்கார் முன் வரலாம் என்று சொன்னார்கள். பின்னால், அந்த வாக்குறுதிக்கும் அதிகமான அளவில், 45 லட்சம் டன் உற்பத்தி செய்ய வாய்ப்புக்கு மத்திய சர்க்கார் வழிவகை செய்திருக்கிறது என்பதைக் கேட்க மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அறுபது லட்சம் டன் வரை உற்பத்தி செய்யக்கூடும் என்றிருப்பது பாராட்டுதலுக்கு உரியது. இம்மாதிரியான பெரிய திட்டங்கள் ஒருபுறம் இருக்க, ஊட்டியில் பிலிம் இண்டஸ்ட்ரியும் சரி, மேட்டூரில் காகிதத் தொழிற்சாலையும் சரி, இன்னும் ஜில்லாக்கள் தோறும், சர்க்கரை ஆலைகளும் சரி ஏற்படுத்துவது, இந்த இராஜ்யத்திற்கு பெருமை தரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதே சமயத்தில், குறைந்த பட்சம், ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டொரு சர்க்கரை ஆலைகளையாவது நிறுவ சர்க்கார் திட்டமிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

போக்குவரத்துத் துறையில், சிறுசிறு துறைமுகங்களை விருத்தி செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஜில்லாவுக்கு ஓரிரு சிறு துறைமுகங்களாவது அபிவிருத்தி வசதிகள் செய்து தர வேண்டும். கன்யாகுமாரி முதல் சென்னை வரையில் உள்ள 550 மைல் கடலோரப் பாதையை, நாஷனல் ஹைவேயாக எடுத்துக்கொள்ள வழிவகை செய்தாலும் அது சம்பந்தமான பணச் செலவுப் பொறுப்பு நமக்கு நீங்கும். அது தேசீயப் பெருஞ்சாலையாக மாறினால், பல்வேறு இராஜ்யங்களுக்கும், தேசங்களுக்கும் அது தேசப் பாதுகாப்பு ரஸ்தாவாக உபயோகப்படுவதை உன்னிப் பார்த்தால், கீழ்த்திசை கடலோரப் பகுதி சாலையை, நாஷனல் ஹைவேஸாக மாற்றியே ஆகவேண்டும் என்பதை நாம் நன்கு உணரமுடியும். ஆகவே, அதை தேசீயப் பெருஞ்சாலையாக மாற்ற ராஜ்ய சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ராஜ்ய சர்க்காருக்குத் தலைமை தாங்கும் கவர்னர் அவர்கள் தன் உரையில் இந்த சட்ட சபையில் அங்கத்தினர்கள் கண்யமான முறையில் நடந்துக்கொள்வார்கள் என்ற கருத்தைச் சொல்லியிருப்பது, இந்த சட்ட சபையில் நாம் கடைபிடிக்கும் முறை வெளியிலும் பிரதிபலிக்க வேண்டும் என்றுதான் சுட்டிக் காட்டியிருக்கிறார் என்று கருதுகிறேன். எப்படியாயினும், நான் இந்தியன், நாம் இந்த தேசத்தின் பகுதி பங்காளியென்ற உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பதையே கவர்னர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த உரையை ஆற்றிய கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பிரேரேபித்து, அதை இந்தச் சட்ட சபை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன்.

[20th January 1961

* SRIMATHI HEMALATHA DEVI : தாற்காலிகச் சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் பேரில், கனம் செல்வராஜன் அவர்கள் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை வழி மொழிந்து, ஒரு சில விஷயங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நமது பண்டைக்கால பழக்கம் விருந்தோம்பல். அதற்கு உதாரணமாக, கவர்னர் அவர்கள் உரையில், முதன் முதலாக, பிரிட்டிஷ் பெண்ணரசி எலிஸபெத் ராணி அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, எலிஸபெத் ராணி அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் அளவில் அதிகப்படியாகச் செலவு ஆகும் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் சொல்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து இதுவரை வந்த தலைவர்களுக்காக ஆன செலவைக் கணக்கிடாதவர்கள் தற்போது செலவுத் தொகை அதிகமாகிறது என்று சொன்னார்கள் என்றால், உண்மையிலேயே நேர்மைக்கு நெருங்குகிறது, ஆகையினால் அரசாங்கத்தைக் குறை கூறவேண்டும், இது பிரசாரத்திற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறார்களோ என்றுதான் தோன்றுகிறது. வெள்ளையன் நம் நாட்டிலிருந்து வெளியேறவேண்டும், சுயராஜ்யம் வேண்டும் என்ற காலத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வெறுத்தோமே தவிர, அந்நாட்டு அரசியையோ, வெள்ளையர் இனத்தையோ நாம் வெறுக்கவில்லை என்பதை அவர்கள் உணரவேண்டும். நம்மை அடக்கி ஆண்ட அந்த அன்னிய நாட்டினருடன், நட்பு உறவு கொண்டு இருக்கும் தேசம் உலகத்திலேயே நம் இந்தியா ஒன்றுதான் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய, சிறந்த முறையில் பரிகாரம், உதவியளித்திருப்பதை, முக்கியமாக விவசாயத் துறையில் விதைகள் உர வகைகள் வாங்குவதற்கு கடன் தொகைகளைக் கொடுத்து தக்க சமயத்தில், உதவியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத் தக்க விஷயமாகும். பிறகு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், இந்த சட்ட மன்றம் கேட்டதற்கு மாறாக, திட்ட முதலீடு 291 கோடியே என்று குறைந்து விட்டிருந்த போதிலும், முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் நாம் போட்டவை பெரும்பாலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது நமக்கு மன நிம்மதியை அளிக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் விவசாயத்தில் உணவு உற்பத்தியை 52 லட்சம் டன் என்ற குறிக்கோளை ஏற்று இருக்கிறார்கள். மேலும், நெய்வேலியில், ரசாயன உரத்திற்கான உற்பத்தித் தொழிற்சாலை, முதலியவற்றை ஏற்படுத்துவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதன் மூலமாக உர உற்பத்தி பெருக விவசாயம் முன்னேற்றத்தில் விளங்க முடியும் என்பது நிச்சயம்.



20th January 1961] [Srimathi Hemalatha Devi]

விவசாயத்தைப் பொறுத்த வரை, உற்பத்தி பெருகவேண்டும் என்று சொல்லும்போது, நம் நாட்டில் மக்கள் தொகையில் வளர்ச்சியும் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆனால், நில விஸ்தீரணமோ, அன்று போலவே இன்றும் இருக்கிறது. அதில் வளர்ச்சி கிடையாது. மக்கள் உற்பத்தி அதிகம் ஆக, ஆக, அதிகப் படியாக சாதாரண நிலங்களிலும் விளைச்சல் நிலங்களிலும் வீடுகள் கட்டிக்கொண்டே போகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இருந்ததைவிட நிலப் பரப்பு குறைந்துகொண்டே போகிறது. ஆகவே, நல்ல முறையில் உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்று சொல்லும்போது, அதிகரித்துக்கொண்டே போகும் மக்களுக்கு குறைவாக உள்ள நிலங்களில் அதிகப்படியான உணவு தானியங்களை உற்பத்திச் செய்யத்தக்க திட்டங்களை மேற்கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

பெரிய பாசன திட்டங்களுக்கு 14·5 கோடியிலிருந்து, 27 கோடி என்று அதிகரித்திருக்கிறார்கள். சிறிய பாசனத்திட்டங்களுக்கும் நான்கு கோடி என்பதை இரு மடங்காக்கியிருக்கிறார்கள், ரூபாய் எட்டு கோடி என்று உயர்த்தியிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே சேலம் ஜில்லாவில், தர்மபுரி தாலூக்கா ஒரு வரண்ட பிரதேசம். அது நீர் வளம், நில வளம் குறைந்த பிரதேசம். ஆகவே, அங்கு இருக்கும் சின்னாறுக்கு பெரிய பாசன வசதித் திட்ட அடிப்படையிலே, அந்த தாலூக்கா பூராவுக்கும் நீர் வள நில வள அத்தியாவசியமாக இருப்பதால், வெள்ளைக் கோயில் மலைச் சாரம் குன்றுக்கும், மல்லேச்சுவரம் கோயில் குன்றுக்கும் இடையிலே ஒரு அணையைக் கட்டினால், தர்மபுரி பூராவும் நல்ல பயன் அடையும். அந்த திட்டத்தை நல்ல முறையிலே நடத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே, காலம் கிடைத்தபோது, சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட விதைப் பண்ணைகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்து இதை நல்ல முறையில் கண்காணிக்கவேண்டும் என்றும் மண்வளப் பாதுகாப்புக்காக 2½ கோடியும் ஒதுக்கியிருக்கிறார்கள். இது உண்மையில் நம் நாடு நல்ல முறையில் வளம் பெறவேண்டுமென்ற கருத்துடன் போடப்பட்டிருக்கிற திட்டங்களாதலால் நிச்சயமாக நாட்டில் நல்ல வளம் ஏற்படும் என்று கூற விரும்புகிறேன்.

அதோடு கூட மின்சாரத்தைப் பொறுத்த மட்டில் சமீபத்தில் சில மாதங்களுக்கு முன்புதான் மேட்டூர் மலைக்குடைவுத் திட்ட வேலையைத் துவக்கி இருக்கிறார்கள். இப்போது குந்தா திட்டத்தின் மூன்றாவது பகுதி வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு கனடாவில் இருந்து நமது அரசாங்கத்திற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் தனி நாடாக வேண்டுமென்று சொல்கிறார்களே அதுபோன்று, தனி நாடாக ஆனால் இப்படி வெளிநாட்டாரின் உதவி எல்லாம் கிடைக்குமா? தனி நாடானால் அவர்கள் உதவி அளிக்க முன்வருவார்களா? ஏகோபித்த இந்தியா என்று இருப்பதினால்

தான் நம் தேசத்தையும், நம் தேசத் தலைவரையும் மதித்து இந்த மாதிரியாக நல்ல முறையில் உதவி அளிக்க முன்வருகிறார்கள் என்பதை உணரவேண்டும்.

அதோடு கூட நெய்வேலியில் 35 லட்சம் டன்னிலிருந்து 45 லட்சம் டன்னாக நிலக்கரியின் அளவை அதிகரிக்க வேண்டுமென்ற நிலைமையில் நம் அரசாங்கம் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் யந்திர சாலை ஒன்று அமைத்து 60 லட்சம் டன் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது மிகவும் வரவேற்கத் தக்கது. இப்படி நிலக்கரி உற்பத்தி அதிகப்படுமானால் சேலம் ஜில்லாவில புது உருக்கு ஆலையை ஏற்படுத்துவதற்கு இது மிகவும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். நமது அரசாங்கமும் சேலத்தில் இரும்பு உருக்கு ஆலையை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய ஆர்வம் கொண்டு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுள்ளார்கள். ஆகையால் நான் நம்முடைய அரசாங் கத்தை சேலம் மக்களின் சார்பாகப் பாராட்டி நன்றி யறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுகூட பெரிய தொழில்கள் மட்டும் அல்ல. சிறிய தொழில்களுக்கும் நம் அரசாஙகம் அக்கறை காட்டுவார்கள் என்கிற உறுதியை கவர்னர் பெருமான் உரையிலே கேட்டோம். குறிப்பாக தென் பிராந்தியத்திலே எல்லாம் புதிய இருப்புப் பாதை போடும் திட்டம் இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களின் வலிவான வற்புறுத்தலின்பேரில் தக்க பலன் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். முன்பு இருந்த பாதைகளைத்தான் பழைய படி போடவேண்டும். புதிதாக ஒன்றும் போடப்போவதில்லை. சேலம், பங்களூர் ரயில் பாதையும், அதே போன்று திருநெல்வேலி கன்னியாகுமரி பாதையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே போடுவதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சில மசோதாக்கள் எல்லாம் இந்த அவையிலே வரப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக சீட்டு நடத்துவதைக் குறித்த மசோதா வரப்போவதாக இருக் கிறது. மாதா மாதம் சீட்டு நடத்துகிறவர்கள் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்குக் கொடுக்க வேண்டும் என்று திருத்தம் செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக சுதந்திரம் அடைந்த நாடு சுபிட்சமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய அரசாங்கம் முக்கியமாக பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம், கூட்டுறவு அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் போட்டு ஏராளம் செலவு செய்கிறார்கள். இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே இந்த நாட்டில் பிறந்த வர்கள் எல்லோரும் சுபிட்சப்படவேண்டும் என்பதுதான். குறிப்பாக கல்வியிலும், விவசாயத்திலும், தொழிலிலும், பொருளா





தாரத்திலும், கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் பிற் போக்கான நிலையிலுள்ள நம் தேசத்தை சுதந்திரமடைந்த பிறகு ஐந்து ஆண்டு திட்டங்களின் மூலம் தொழில் வளம், கல்வி வளம், நீர் வளம் மிகுந்த விவசாயம் வளம் பெற, பொருளாதாரம் வளம் பெற திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். உண்மையில் ஜனநாயக அடிப்படையில் நாடு எல்லா வகையிலும் வளம் பெறு வதற்கு நாம் போட்டிருக்கிற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து நன்றி கூறி பிரேரேபித்ததை ஆமோதிக்கும் வகையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததற்காகவும் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI P. S. CHINNADURAI :** மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரை அவருடைய சர்க்காரின் எதிர்கால வேலைத் திட்டங்களைக் குறித்த சுருக்கமான அறிக்கை என்றுதான் சாதாரணமாக மக்களால் கருதப்பட்டு வந்திருக்கிறது. அப்படிப் பார்க்குமிடத்தே உண்மையிலே கவர்னர் உரையைக் கேட்டவர்களும், கவர்னர் உரையைப் பத்திரிகையில் படித்தவர்களும் வருத்தமும், திகைப்பும் அடை வார்கள் என்று நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 398 கோடி ரூபாய் இந்த மாநிலத்தில் பல்வேறு வகையிலும் செலவிடப்படுவதற்கான ஒரு ஏற்பாட்டை இந்தச் சபையானது அங்கீகாரம் செய்தது. 398 கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செலவிடுவதற்குப் போதாது. அதுவும் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றுக்கும், வெவ்வேறு இனங் களுக்கும் செலவிடுவதற்கு மற்ற மாநிலங்களுக்கு ஒப்ப நம் மாநிலத்திற்கும் சரி சமத்துவமான முறையில் ஒதுக்குவது என்றால் இன்னும் அதிகமாகவேண்டும் என்றும் அந்தச் சமயம் இங்கே வற்புறுத்தப்பட்டது. ஆயிரம் கோடி ஒதுக்கவேண்டு மென்று சொல்வாரும், இரண்டாயிரம் கோடி பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்துவாரும் அன்றைக்கு இங்கே பேசிய நிலைமையைக் கண்டோம். பொதுவாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பார்க்குமிடத்து இந்த 398 கோடி ரூபாய் போதாது என்று எல்லோரும் வற்புறுத்தினார்கள். ஆனாலும் அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் 398 கோடி ரூபாய் போதாது என்று வற்புறுத்தி அதற்கு ஏகமனதாக அங்கீகாரம் அளித்தது சபை. ஆனால் அந்த 398 கோடி ரூபாயை கூட வற்புறுத்தி மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறுவதற்குத் தவறிவிட்டது இந்த அரசாங்கம். அதோடு அந்த உண்மையை ஒப்புக்கொள்ளாமல் அதைப் பூசி மெழுகி பேசியிருக்கின்ற வார்த்தைகளைத் தான் நான் கவர்னர் பெருமான் உரையில் காண் கின்றேன் என்று சொல்ல விரும்புகிறேன். சுமார் 107 கோடி ரூபாய் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இங்கே இருப்பது உண்மையில் [illegible]

[Sri P. S. Chinnadurai] [20th January 1961

அதிருஷ்டம் என்று நினைக்கிறேன். இந்த 107 கோடி ரூபாயை யாவது எந்த வகையிலாவது பெற்றே ஆகவேண்டுமென்ற எண்ணமும் உறுதிப்பாடும் அவருக்கு வரவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். இந்த 107 கோடி ரூபாய் வெட்டை நாம் எந்த வகையில் சரிக்கட்டப் போகிறோம்? அல்லது எவ்வகையில் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி அந்தத் தொகைக்கும் மேலாகவே நம் திட்டங்களுக்குப் பெறப்போகிறோம் என்பது பற்றி கவர்னர் பெருமான் உரையில் ஏதாவது இருக்கும் என்று எதிர்பார்த்தேன். என்னைப்போல பல மக்களும் எதிர்பார்த்திருப்பார்கள் என்பது இயல்பேயாகும். ஆனால் 107 கோடி ரூபாயைச் சரி செய்வதற்கான ஏற்பாடு எதையும் கவர்னர் பெருமான் உரையில் செப்ப வில்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் இதனைக் குறித்து சற்றேனும் கவலை தெரிவிப்பார்கள் என்றும் எதிர் பார்த்தேன். மாறாக அவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி ஏன் என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் உள்ளத்தில் இருந்து உண்மையில் இந்த மகிழ்ச்சி வெளிப்பட்டிருக்குமானால் நான் வருந்துவேன். அவர்களைத் தேர்ந்தெடுத்த தொகுதிகளும், இந்த மாநிலமும் வருந்தும் என்றும் முதற்கண் நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

இன்று 107 கோடி ரூபாய் வெட்டு ஏற்பட்டது என்றால் எதிலே ஏற்பட்டது என்பதைச் சற்றுக் கவனிக்கவேண்டும். மின்சாரத் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 118 கோடி ரூபாய் நாம் ஒதுக்கி இருந்தோம். அந்த 118 கோடி ரூபாய் முழுவதையும் பெற்றாலும் கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே மின்சாரம் போதுமான அளவில் தொழில்களுக்குக் கொடுப்பது பற்றாக்குறையாக இருக்கும் என்று அன்றைக்கே இங்கு சொல்லப்பட்டது. இன்று அந்த 118 கோடி ரூபாய் கூட ஒதுக்கப்படவில்லை. ஆனால் 101 கோடி தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பதினேழு கோடி ரூபாய் மின்சார அபிவிருத்தித் துறையில் மாத்திரம் வெட்டு. அதுவுமின்றி விவசாயத்துறையிலே 28 கோடி ரூபாயானால் நீர்பாசன வசதியின் விகிதம் 48 கோடி. ஆக மொத்தம் 118 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 80 கோடி ரூபாய்தான் பாசன வசதிக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதன்மூலம் 38 கோடி ரூபாய் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு 138 கோடி ரூபாயும் மின்சார வசதிக்கு 17 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 107 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 55 கோடி ரூபாய் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையிலேயும் மின்சாரத் துறையிலேயும் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பெரிய துறையிலேயும் வெட்டு ஏற்படுமானால் உண்மையிலே விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் எப்படி முன்னேற முடியும் என்று நான் கேட்கிறேன். மின்சாரம் இல்லையென்றால் தொழில்கள் முன்னேற வகை கிடையாது இந்த வேளாண்மைத் துறையில் நாம் இரண்டாவது



20th January 1961] [Sri P. S. Chinnadurai]

ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு அடைந்திருக்கிறோமோ, அதே இடத்தில்தான் நம்மை வைத்திருக்கிறோம். அதுவும் இந்தப் பெரிய துறையிலே வெட்டு ஏற்பட்டிருப்பது எப்படி நமக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்பது கவர்னர்பெருமான் உரையிலிருந்து தெரிந்துக்கொள்ள முடியவில்லை.

நம் நாட்டிற்கு பிரிட்டிஷ் அரசியார் வருவது வரவேற்கத் தக்கதுதான், மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். ஆனால் இது ஒரு சாதாரண விஷயம். இதை ஒரு பெரிய விஷயமாக கருத மாட்டேன். மகிழ்ச்சிக்குரிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கும் போது அதை எல்லாம் விட்டுவிட்டு இதை மட்டும் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது எனக்கு மிகவும் வியப்பை அளிக்கிறது. உதாரணமாக வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால், இதைக் கடுமையாக பாதிக்கும் பிரச்னை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற திட்டத்திலே இருப்பதைப் பார்க்கிலும் புதிய பாசன திட்டங்களுக்கு அதிகமான தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இது கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது போதாது என்பதற்கு ஆதாரங்கள் கொடுக்கிறேன். இதற்கு 12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதனால், இப்பொழுது 33 ஆயிரம் பாசன ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த 33 ஆயிரம் பாசன ஆதாரங்களில் 4 ஆயிரம் கிணறுகள்தான் தூர் எடுக்கமுடியும். பன்னிரெண்டு கோடி ரூபாய்க்குப் பதில் 8 கோடி ரூபாய் ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் 4 ஆயிரம் பாசன ஆதாரங்களுக்கு தூர் எடுக்கப் போதாது இருக்கும்போது இந்த 8 கோடி ரூபாயினால் எப்படி பயன் பெற முடியும் என்று சிந்தித்துப்பார்த்தால், இதில் மூன்றில் இரண்டு பங்கு வேலைதான் செய்யமுடியும். ஆனால் 3 ஆயிரம் சொச்சம் பாசன ஆதாரங்களுக்குத்தான் தூர் எடுக்க முடியும், பழுது பார்க்கமுடியும். அப்படியிருக்கும்போது 33 ஆயிரம் பாசன ஆதாரங்களுக்கு பழுது பார்க்க வேண்டுமென்றால் எத்தனை ஐந்தாண்டு திட்டங்கள் வேண்டும். குறைந்தது 10 ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றினால்தான் எல்லா பாசன ஆதாரங்களையும் பழுது பார்க்கமுடியும். இப்பொழுது உள்ள ஏரிகள் எல்லாம் நம் மூதாதையினரால் ஏற்படுத்தப்பட்டது. நமது சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டது அல்ல. இவைகள் பல தலைமுறையாக இருந்து வருகின்றன. இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைப்பார்த்தால் குறைந்தது 50 ஆண்டுகள் ஆகும். இதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்துக் கொள்ளாததைப்பற்றி நினைத்தால் மிகவும் வேதனை அளிக்கும். இது ஒரு கட்சிப் பிரச்னையல்ல, மக்களுடைய பிரச்னை என்று மனதில் கொண்டு, கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னையல்லவா என்பதை சற்று யோசித்துப்பார்க்கவேண்டும். இப்பொழுது இவ்வளவு பெரிய வெட்டு ஏற்படுவதற்கு காரணம்

என்ன? நம்முடைய ராஜ்ய மந்திரிகளின் செல்வாக்கு டெல்லியில் இல்லையா? நம்முடைய ராஜ்யத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு மந்திரியாக இருக்கிறார் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் என்ன செய்ய முடியும். அவர்கள் திருவள்ளுவர் படத்தையும், மகாகவி பாரதியார் படத்தையும், தியாகராஜர் படத்தையும் ஸ்டாம்புகளில் இடம் பெறச்செய்ய முடிந்ததே தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. (குறுக்கீடு) அப்படியிருந்தும் நம்முடைய செல்வாக்கு அங்கு பயன்பெற முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? இதைக் கண்டுபிடித்து நம்முடைய செல்வாக்கு பயன்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகத்தைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய அம்சம். இதை நாங்கள் வரவேற்கிறோம். முதலில் மத்திய சர்க்காருக்குக் கூட இந்த வேலையை எடுத்துக்கொள்ளும்படி சொல்வதற்கு நமது சர்க்காருக்கு துணிவு இல்லாமல் இருந்தது. மத்திய சர்க்கார் கூட ஒரு காலத்தில் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். ஆனால் இந்த சட்டசபையில் ஒரு தீர்மானம் நடந்து இந்தச் சர்க்காரும் இதைப்பற்றி மத்திய சர்க்காருக்குச் சொல்லித் துணிவு ஏற்பட்டு இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை அணுக நேர்ந்தது, மத்திய சர்க்காருக்கும் ஏற்படுத்தவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதுபோலவே பல விஷயங்களிலும் நாம் துணிவுடன் நடந்து கொண்டால் நம் மக்களுக்கு நன்மை செய்ய முடியும். இப்பொழுது மத்திய சர்க்காரில் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் இருக்கிறார், வேண்டுமென்றால் இன்னொரு அமைச்சரையும் அங்கு நியமிப்பதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யலாம். இது எனது வேண்டுகோள் என்றுகூட சொல்ல விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தியை எடுத்துக்கொண்டால் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே கிராமங்களிலெல்லாம் மின்சார வசதி பெற முடியும் என்று கவர்னர் பெருமான் உரையிலே குறிப்பிட்டிருக்கிறது. எப்படி இதை நிறைவேற்றப் போகிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் கிராமங்களிலே பொதுவாக மின்சார இணைப்பு மிகக் குறைவாக இருக்கிறது. பெரிய அளவிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மோட்டார் என்ஜின்களை வாங்கியும்கூட இன்னும் மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் மனம் உடைந்திருக்கிறார்கள். திண்டாட்ட நிலையில் இருக்கிறார்கள். இது உடனடியாக கவனிக்கப்படவேண்டிய விஷயம் என்று குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளின் நன்மையைக் கருதி இதற்கு உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்ண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது ஒரு லட்சம் கிணறுகளுக்கு மின்சார இணைப்பு தேவையாக இருக்கிறது. இதற்கு மின்சாரம் இணைப்பு ஏற்பட்டால் சுமார் 7 லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வரும். அவ்வாறு மின்சார இணைப்பு கொடுக்காததினால்தான் இப்போது பல லட்சக்



கணக்கான நிலங்கள் சாகுபடிக்கு இல்லாமல் இருக்கின்றன. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று வாயலவில் சொன்னால் மட்டும் போதாது. இதற்கு வேண்டிய மின்சாரத்தை செய்து கொடுப்பதற்கு நாம் செயல் திட்டத்திலே ஒரு உருவான வகையில் முற்படவேண்டும். சென்ற ஆண்டிலே மின்சார கட்டணத்தை குறைக்கவேண்டுமென்று சட்டசபையிலே கோரிக்கை விடப்பட்டது. இதற்கு சட்டசபையிலே கனம் மின்சார அமைச்சர்கூட இந்த விஷயத்தை கவனிப்பதாகச் சொன்னார். அவர்கள் இன்னும் கவனிக்கிறார்கள். ஒரு ஆண்டு கழிந்தும் இன்னும் கவனிக்கிறார். இந்த முறையிலே விவசாயிகளினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றினால் விவசாயிகளின் நிலை எப்படி உயரும் என்று நான் எண்ணுகிறேன். இது விவசாயிகளையும் அவர்களுடைய குடும்பங்களையும் பாதிப்பதல்லாமல், நாட்டினுடைய பொருளாதார நிலையையும் பாதிப்பதாகும்.

மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டுமென்ற விவசாயி 10-30
களின் கோரிக்கையை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று a.m.
நான் அந்த ராஜ்ய சர்க்காரை இப்பொழுது குறிப்பாக வற்புறுத்த விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுகிற விஷயத்தில் போதுமான அக்கறை காட்டப்படவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் இத்தனை ஆயிரம் வீடுகள் கட்டப்படுகிறது. இத்தனை ஆயிரம் மனைகள் வழங்கப்படும் என்று உறுதியாக தெரிவிக்கப்படவில்லை இந்த சபையிலே. கனம் அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவித்தால் நல்லது. இத்தனை லட்சம் செலவாகும், இத்தனை கோடி செலவாகும் என்று சொல்லி எங்களை மயக்க வேண்டாம். அந்த எண்ணிக்கை எங்களை மயக்குகிறது. அதற்குப் பதிலாக கொஞ்சம் பெரிய மனது பண்ணி இன்னின்ன வேலைகள் செய்வோம், இத்தனை ஏக்கர்கள் பாசன வசதி பெறும் என்றளவில் சொல்லப் படுமானால் அல்லது இவ்வளவு வீடுகள் அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்படும் என்ற முறையில் சொல்வார்களேயானால் அது ஓரளவிற்கு திருப்தியளிப்பதாகயிருக்கும். வெறும் லட்சத்தையும், கோடியையும் போட்டு எங்களை திணறடிக்க வேண்டாம், என்று தங்கள் மூலம் நான் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். சிறு தொழில்கள் சம்பந்தமாக நமது சர்க்கார் வெகு அக்கறை காட்டி வருவதாக அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் சிறிய "பௌண்டரீஸ்", பம்ப் செட்டுகள் தயாரிக்கப்படுவதும், பல்வேறு இயந்திரங்கள் தயாரிப்பதற்கும் சிறிய சிறிய பௌண்டரீஸ் நிறைய இருக்கிறது. அவைகளுக்கு கோக் என்ற ஒரு வகை நிலக்கரி கிடைப்பதில்லை, போதுமான அளவிலே. அவைகளுக்கு கோக் போதுமான அளவு கிடைக்கச் செய்வதற்கு நமது ராஜ்ய சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? அந்த நிலக்கரியை அவர்களுக்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கு வேண்டிய வாகன்கள் கிடைக்கவில்லை என்ற குறை சென்ற பல மாதங்களுக்கு முன்பே இந்த அமைச்

சரவையிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை. அது, மத்திய சர்க்கார் விஷயம் என்று சொல்வார்கள். அது மத்திய அரசாங்க விஷயம் என்று சொல்லி நாம் வாளாயிருப்பது சரியல்ல. நமது ராஜ்யத்தில் தொழில் சிவனுள்ள முறையில் நடக்க வேண்டுமானால் அதற்குரிய மூலப்பொருள்கள் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளில் அவசியம் இந்த ராஜ்ய சர்க்கார் கவனம் செலுத்தியாக வேண்டுமென்று நான் இங்கு உறுதியாக குறிப்பிட விரும்புகிறேன். மேலும் நமது மாநிலத்தில் ஆட்சிமொழி தமிழ் என்று நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழிலேதான் எல்லா வகையான வேலைகளும் இனிமேல் நடத்தப்படும் என்றளவு நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. கல்லூரிகளில் தமிழ் மொழியை போதனை மொழியாகக் கொண்டு எல்லா வகைப் பாடங்களையும் போதிப்பதற்கான ஏற்பாடுகளை விரைவாக நாங்கள் செய்து வருகிறோம் என்று சர்க்கார் கூறுகிறார்கள். அந்த அளவு இதை வரவேற்க வேண்டியதுதான். ஆயினும் அந்த வேகம் போதாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்தது போல் ஒன்றிரண்டு கல்லூரிகளில் தமிழ் மொழியை போதனை மொழியாக ஆக்கி விட்டோம் என்று கூறி அந்தளவு திருப்தியடைந்து கொள்ளவோ அல்லது மக்களை திருப்தியடைந்து விடுமாறு கூறுவதோ சரியான பலனை அளிக்காது. தமிழ் தன்மையான தனது உயரிய ஸ்தானத்தை பெறுக வேண்டுமானால் இன்று அரசாங்கம் தமிழுக்கு ஆக்கம் கொடுத்து வளர்க்கிற வேகத்தை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். நீதி ஸ்தலங்களில் தமிழ் மொழி இன்னும் தனக்குரிய ஸ்தானத்தை பெறவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளை விரைவுபடுத்தவேண்டும். சட்ட புத்தகங்களை தயாரிப்பதும், தமிழிலேயே நிறைவேற்றுவதற்குமுள்ள தக்க ஏற்பாடுகளை செய்யவேண்டும். பொதுப் பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்குள்ள ஆணைக்குழகம், பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் வைக்கப்படுகிறது, தமிழிலே வைக்கப்படவில்லை என்று அறிகிறேன். தமிழ் மொழியில், கலைக்கல்லூரிகளில் பட்டம் பெற்று வெளி வருகிற மாணவன் இங்கு ஆங்கிலத்தில் தேர்வு எழுத வேண்டுமென்ற நிலை நீடிக்குமானால் அது நல்லதல்ல என்று இங்கு குறிப்பாக சொல்ல விரும்புகிறேன். தமிழுக்கு, கல்லூரிகளில் ஆக்கம் அளிப்பதென்றால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தித்தான் ஆக வேண்டும். இதை உடனடியாக இந்த ஆண்டு செய்வதற்கு நமது சர்க்கார் முன்வர வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். நான் எனது பேச்சை இப்பொழுதே முடித்தால், நான் நினைக்கிறேன் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு அது மகிழ்ச்சி தராது என்று. இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்ற விஷயத்தில் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள். அது குறித்து நான் பேச வேண்டுமென்றும் அவர்கள் வேண்டிக்கொண்டார்கள். இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைப்பது மிகச் சாதாரண விஷயம். அதற்கு ஒரு கிளர்ச்சியையோ அல்லது போராட்டத்தையோ இந்த அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடாது. சாதாரணமாக உழைப்பு இல்லாமல் எதைப் பெற்றாலும் அதற்கு அவ்வளவு மகத்துவம் இராது என்று சொல்வார்கள். ஆகவே, தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு ஒரு கிளர்ச்சி அல்லது போராட்டம் நடத்தி அப்புறம் வேண்டுமானால் பெயர் வைக்கலாம் என்று நமது சர்க்கார் எண்ணிக் கொண்டிருந்தால், நான் நினைக்கவில்லை அப்படி அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று, அப்படி எண்ணிக்கொண்டிருந்தால் அது நல்லதல்ல என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) என்ன அருமையான சந்தர்ப்பம் பாருங்கள். கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் யாரும் எதிர்பாராமல் இருந்த நேரத்தில் மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க இந்த ராஜ்ய சர்க்கார் இப்பொழுது தீர்மானித்து விட்டதென்று அறிவித்திருப்பார்களேயானால் அடேயப்பா எவ்வளவு பெரிய மகிழ்ச்சியை அது இந்த மாநில மக்கள் மத்தியில் உண்டாக்கியிருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை.





**Sri A. V. P. ASAITHAMBI** : "அடேயப்பா" என்ற வார்த்தை பார்லிமெண்டரியா ?

**Sri P. S. CHINNADURAI** : பழக்கத்தில் வருகிற மகிழ்ச்சியால் துளிர்கிற வார்த்தை என்றல்லாது இந்த சபையில் யாரையும் குறிப்பிடுவதல்ல அது. எவ்வளவு பெரிய மகிழ்ச்சியை அது மக்களிடையே உண்டாக்கியிருக்கும் ? அந்த சந்தர்ப்பத்தை கவர்னர் பெருமான் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை, ஏன் கவர்னர் பெருமான் அவர்கள் மூலம் இந்த ராஜ்ய சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது ஒரு புதிர். அதற்குள்ள விடையை சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் கொடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன். ஒருக்கால் வரயிருக்கிற, உத்தியோகப்பற்றற்ற ஒரு நாளில் எனது தீர்மானம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற அப்புறம் செய்யலாம் என்று நினைக்கிறார்களோ என்னவோ நான் அறியேன். தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யும் தீர்மானம் ஒன்று சட்டமன்றத்தின் முன்னால் இருக்கிறது. அதன் விவாதம் முடியவில்லை. அதை முடித்துக்கொண்டு அப்புறம் செய்யலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஒருக்கால் அப்படியிருந்தால் அதுவும் வரவேற்கத்தக்கதுதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கிலாந்து நாட்டு அரசியார் நமது நாட்டிற்கு வருவது, அதிலும் குறிப்பாக சென்னை நகருக்கு வருவது மிக மகிழ்ச்சி எல்லோருக்கும் தருவதாயிருக்கும். ஒரு வகையில் சாதாரண நிகழ்ச்சி என்றாலும் மகிழ்ச்சி ஏனென்றால் மழையால் பாதிக்கப்பட்ட பாதைகள் எல்லாம் சீர்படுகின்றன. வேறு நாட்களாகயிருந்தால் இவ்வளவு துரிதத்தில் இதற்குரிய நடவடிக்கைகள் கார்ப்பரேஷனால் எடுக்கப் பட்டிருக்

[Sri P. S. Chinnadurai] [20th January 1961

குமோ என்று தெரியாது. ஆனால் இப்பொழுது எடுக்கப்பட்டிருக் கின்றன அரசாங்கத்தின் உதவியோடுகூட. எனக்கு ஒரு அவா. அரசியார் அவர்கள் பெரிய தெருக்களில் மட்டும் பவனி வராமல் சிறிய சிறிய தெருக்களிலும் பவனி வருவதற்கு நாதர் அவர்கள் மனமுவந்து ஏற்பாடு செய்தால் நான் நம்புகிறேன் பெப்ரவரி 19-ம் தேதிக்கு முன்பாக எல்லாத் தெருக்களும் நல்ல முறையில் செப்பனிடப்பட்டு இந்த ராஜ்ய மக்கள் இங்கிலாந்து நாட்டு அரசி யாரின் வருகையைக் குறித்த நினைவு மனதிலிருந்து அகற்றப்படா மலிருப்பதற்குரிய ஒரு நிலையை உண்டுபண்ண முடியும் என்று எதிர்பார்க்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் வந்தால் ஒன்று சொல்லலாம் என்று நினைத்தேன். அவர்கள் வந்து விட்டார்கள். அதைச் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்கிறேன். இங்கிருந்து ஒரு அமைச்சரை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் நினைத்து, கனம் நிதியமைச்சர் அவர்கள் அங்கு போய் வீற்றிருக்க எண்ணுவார்களேயானால் நான் சொல்கிறேன், உண்மையில் அதை இந்த மாநிலம் வர வேற்கும், என் கட்சியும் வரவேற்கும். கட்சிகள் இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். தனி நபர் என்ற முறையில் எனக்கும் அவருக்கும் ஏதாவது வேறுபாடுகள் இருக்கக்கூடும். இருந்தாலும்கூட அவர்கள் மத்திய அரசில் வீற்றிருந்து இம் மாநிலத்திற்கு சேவை செய்ய அவர்கள் மனம் ஒப்பி முன் வருவார் களேயானால் அவர்களை அனுப்பி வைக்க முதல் அமைச்சர் அவர் களும் முன் வருவார்களேயானால் மகிழ்வோடு இம்மாநிலம் அதை வரவேற்கும். (குறுக்கீடு)

நான் அதைத்தான் ஆர்வமாக குறிப்பிட விரும்புகிறேன். நிதி யமைச்சர் அவர்கள் அங்கு செல்ல விரும்புவார்களேயானால் நாங்கள் அவர்களுக்கு இடம் அளிப்போம் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் அதற்கு முன் வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டு எனது வார்த்தையை இதோடு முடித்துக்கொள்கிறேன்.

Sri V. SANKARAN: **கனம் தலைவர் அவர்களே, கவர்னர்** பெருமான் அவர்களுடைய உரையை வரவேற்று ஒரு சில வார்த் தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நிவாரணம் எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அதற் காக பல பாராட்டத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்ப தாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் முக்கிய மாக பெரிய நகரங்களில் சமீபத்தில் வெள்ள ஆபத்துக்கள் ஏற் பட்டன. அதிலிருந்து நாம் முக்கியமான ஒரு படிப்பினையை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது முக்கியமாக பெரிய நகரங்களில் நதிகளினுடைய ஆற்றோரங்களிலும் தாழ்வான பிரதேசங்களிலும் ஏழை மக்கள் தாங்களாகவே வீடுகளை அமைத் துக்கொண்டு வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இதன் காரண மாக வெள்ளப்பெருக்கு வருகின்ற நேரத்தில் வருடா வருடம் ரெக்கரிங் செலவாக ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதோடு பலவிதமான நஷ்டங்



20th January 1961] [Sri V. Sankaran]

களும் ஏற்படுகின்றன. இதனால் அடிக்கடி சர்க்காருக்கும் சரி, தனிப்பட்டவர்களுக்கும் சரி பலவிதமான கஷ்டங்கள் ஏற்படு கின்றன. இதற்காக நான்-அபிஷியலாகவும் பணம் திரட்ட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சர்க்காரிலிருந்தும் வருடா வருடம் அதிகமான அளவில் செலவு செய்யவேண்டி நேரிடுகிறது. இதை போக்குவதற்காக நிரந்தரமாக ஒரு உபாயம் செய்ய வேண்டும். அதாவது தாழ்வான இடங்களிலும் நதி ஓரங்களிலும் இருக்கின்ற புறம்போக்கு இடங்களில் ஏழை மக்கள் வீடுகள் கட்டு கிறார்கள். இம்மாதிரி வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து வரும் ஏழை மக்களை அந்த இடத்திலிருந்து மாற்றி அவர்களுக்கு மாற்றிடம் கொடுக்கவேண்டும். அதல்லாமல் அங்கேயிருந்து உடனடியாக வெளியேற்றி நடுத்தெருவில் விட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. இதற்காக மாற்றிடங்கள் கொடுக்க ஸ்தல ஸ்தாபனங்கள் முன் வரவேண்டும். அது மட்டுமல்ல, சென்னை நகரத்தைப் பொறுத்தவரை காலனி ஸ்கீம் என்ற ஸ்கீம் ஏற் படுத்தி அதன் மூலம் ஒவ்வொரு நபருக்கும் பேஸ்மென்ட் கட்டிக் கொடுத்து இரண்டு சென்ட் நிலமும் வீடு கட்டுவதற்காக விட்டுக் கொடுப்பதாக கேள்விப்படுகிறேன். இதேபோன்று மற்ற நகரங் களில் இருக்கும் ஏழை மக்களுக்கும் கொடுத்துதவினால் மிகவும் நன்றாக இருக்கும். இதற்கு வேண்டிய புறம்போக்கு நிலங்களை தேர்ந்தெடுத்து அந்த இடங்களில் அவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டும். இப்போது அவர்கள் விலை மதிப் பேறிய (வால்யுபில் சைட்ஸ்) பல புறம்போக்கு இடங்களில் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்களை எல்லாம் காலி செய்ய வேண்டும். அதற்காக இப்போது அதிலிருக்கின்றவர் களுக்கு மாற்றிடம் கொடுக்கவேண்டும். அதற்காக ஐந்து மைல் அல்லது பத்து மைல் தள்ளி அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதில் பிரயோசனம் இல்லை. அவர்களது வேலைக்கு தகுந்தவாறு வசதியான இடங்களில் வசதி செய்து கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்தால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு போன்ற ஆபத்துகள் நேரிடாமல் இருக்கும். அதோடு சர்க்கா ருக்கும் விலையுயர்ந்த பல இடங்கள் கிடைக்கும். ஆகவே இதில் கவனம் செலுத்தி கொஞ்சம் நிதி செலவழிந்தாலும் பரவாயில்லை, இதற்கான வழிவகைகளை உடனடியாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்களது உரையில் பெரிய பாசனத் திட்டங்களைப்பற்றியும், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டு இதற்காக மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் இரண்டு மடங்கு தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் வர வேற்கக் கூடிய விஷயம். குறிப்பாக நெய்வேலியைப்பற்றி அவர் களது அறிக்கையில் இரண்டு மூன்று இடங்களில் குறிப்பிட்டிருக் கிறார்கள். முக்கியமாக ஏற்கனவே இதற்கு குறிப்பிட்டிருந்த அளவு 35 லட்சம் டன், அது இப்போது 45 லட்சம் டன் அளவுக்கு உயர்த்துவதற்கு திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்றும், அதோடு இதிலுள்ள இயந்திரங்களைக் கொண்டு 60

லட்சம் டன் அளவுக்கு உயர்த்தலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொரு இடத்தில் "இந்த நிலையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரியை மற்ற நிலக்கரிக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்று நிரூபிக்கப் பட்டவுடன் நமது உருக்கு ஆலைத் திட்டத்திற்கு அனுமதி கிடைத்து விடும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்" என்று ஏழாவது பாராவில் சொல்லிவிட்டு, அடுத்தபடியாக எட்டாவது பாராவில் "மின்சார நிலையம், உரத் தொழிற்சாலை, பிரிக்கட்டிங் தொழிற்சாலை, களிமண் சுத்திகரிப்பு தொழிற்சாலை போன்ற மற்ற திட்டங்களில் எல்லாம் வேலை திருப்திகரமாய் நடந்தேறி வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அங்கு சென்று பார்த்து வந்ததில் ஒரு குறிப்பான விஷயத்தை காண முடிந்தது. ஒரு கமிட்டியில் நாங்கள் பல அங்கத்தினர்கள் அங்கு போயிருந்தோம். அங்கு நடைபெறுகின்ற பல விஷயங்களைப்பற்றி விசாரித்ததில் ஒரு முக்கியமான விஷயத்தை அவர்கள் தெரிவித்தார்கள். முக்கியமாக நான் அதை இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது முக்கியமாக பிரிக்கட்டிங் தொழிற்சாலை, கார்பனைஸிங் தொழிற்சாலை இவைகளை ஆரம்பிப்பதற்கு இதுவரையிலும் மத்திய சர்க்காரிலிருந்து அனுமதி வரவில்லை, இதனால் இதற்கான வேலைகள் எல்லாம் தடைப்பட்டு நிற்கின்றன. ஒரே சமயத்தில் ஃபெர்டிலைசர், தெர்மல் ஸ்டேஷன், பிரிக்கட்டிங், கார்பனைஸிங் போன்ற எல்லா தொழில்களும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தால்தான் எல்லா வேலைகளும் நன்றாக நடைபெறும். அவ்விதம் எல்லா தொழிற்சாலையும் இயங்க ஆரம்பித்தால்தான் 1961 கடைசியிலோ அல்லது 1962 ஆரம்பத்திலோ நிலக்கரி எடுக்க முடியும் என்று தெரிவித்தார்கள். அதோடு நிலக்கரியை எடுத்து ஸ்டோர் பண்ண முடியாது. தோண்டி எடுத்தவுடன் அதை உபயோகப்படுத்த வேண்டும், தாமதப்படுத்தக்கூடாது என்றும் தெரிவித்தார், அதை தெரிவித்தவர் அங்கு பொறுப்பாக இருக்கின்ற ஒருவர் தான். கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து விட்டு இதற்கான அனுமதி மத்திய சர்க்காரிலிருந்து வராத காரணத்தினால் தாமதம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டது. இதற்கான அனுமதியை மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்தார்கள். இதுவரையிலும் அதற்கான அனுமதி வந்து சேர்ந்ததாக தெரியவில்லை. ஆகவே அதற்கான அனுமதியை நமது அரசாங்கம் உடனடியாக வாங்கவேண்டும். அப்போதுதான் திருப்திகரமாக வேலைகளை ஆரம்பிக்க முடியும், ஆகவே இதற்கான அனுமதியை பெற வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்வி சம்பந்தமாக 32 கோடி ரூபாய் செலவழிக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் சூசகமாக பல இடங்களில் குறிப்பிட்டிருப்பது போன்று 10-வது வரையிலும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த தொகை ஒதுக்கப்பட்



டிருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். அடுத்தபடியாக ஸ்காலர்ஷிப் சம்பந்தமாக ஒரு கொள்கையை ஏற்படுத்தப்போவதாக சொன்னார்கள். முக்கியமாக எந்த வகுப்பினர் என்று பார்க்காமல் ஏழ்மையாய் இருக்கின்ற முதல்தர மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்ற முறை வகுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இதைப் பற்றி பரிசீலனை செய்து வருகிறோம் என்றுதான் கடந்த ஓராண்டு காலமாக சொல்லப்பட்டு வருகிறது. அது இன்னும் அமல் செய்யப்பட்டதாக தெரியவில்லை. இன்னும் நம்முடைய பதவி காலம் (பீரியட்) தீர்வதற்கு ஒரு வருடம்தான் இருக்கிறது. அதுவரையிலும் இந்தத் திட்டம் வராமல் போய் விடுமோ என்று நான் அச்சப்படுகிறேன். ஆகவே திறமையாய் இருக்கின்ற மாணவர்களுக்கு, ஏழ்மையின் காரணமாக படிக்க முடியாத நிலையிருந்தால் அதற்கு நிவர்த்தி செய்கின்ற முறையில் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தை உடனடியாக கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வி சம்பந்தமாக சொல்லும்போது நம்முடைய ராஜ்யத்திற்கு இன்னொரு யூனிவர்ஸிட்டி தேவை என்பதை பல தடவை சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இதைப்பற்றி சொல்லும்போது நமது அமைச்சர் அவர்கள் பல தடவைகளிலும் இதை வெளிப்படையாகவே இந்த யூனிவர்ஸிட்டியை மதுரையில் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் சமீபத்தில் இதைப்பற்றி ஆலோசிப்பதற்காக தென் மாவட்டத்திலுள்ள எல்லா பிரின்ஸிபால்களும் ஸின்டிகேட் மெம்பர்களும் வைஸ்-சான்ஸிலர் தலைமையில் கூடியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் இப்போது நமது மாகாணத்திற்கு இன்னொரு யூனிவர்ஸிட்டி தேவையில்லை, அப்படியிருந்தாலும் டெக்னிக்கல் யூனிவர்ஸிட்டியை கோயம்புத்தூரில் ஆரம்பித்தால் போதும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதில் உண்மையாகவே என்போன்றவர்களுக்கு ஐயப்பாடு இருக்கிறது. இப்போது நமது மாகாணத்திற்கு ஒரு யூனிவர்ஸிட்டி தேவையில்லை என்று சொல்லும்படியான அளவுக்கு எந்தவிதமான காரணங்களும் இல்லை. ஏதோ இப்போது அந்தக் கூட்டத்தில் இருக்கின்றவர்கள் இப்போது அவர்களுக்கு இருக்கக்கூடிய ஆதிபத்தியம் எங்கே போய்விடுமோ என்று எண்ணித்தான் இம்மாதிரி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அவர்களுடைய ஆதிபத்தியம் எங்கே குறைந்து போய் விடுமோ என்று எண்ணித்தான், அந்த பயத்தினால்தான் இன்னொரு யூனிவர்ஸிட்டிக்கு தேவையில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாவது இன்னொரு பயம் இருக்கிறது. இன்னொரு யூனிவர்ஸிட்டி ஆரம்பித்தால், இப்போது தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அண்ணாமலை சர்வகலாசாலை மாதிரி இந்த சர்வகலாசாலையை ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது, ஆகவே அதை இப்போதே நிறுத்தி விட்டால் நல்லது

[Sri V. Sankaran] [20th January 1961

என்ற கருத்தோடு அவர்கள் செய்வதாக நான் நினைக்கிறேன். அவர்கள் சொல்வதை ஒத்துக்கொள்வது சரியாகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு டெக்னிகல் யூனிவர்ஸிட்டி என்று தனியாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இப்போதுள்ள சாதாரண யூனிவர்ஸிட்டி எஜுகேஷனிலேயே டெக்னலாஜிகல் ஸ்டடிக்கு அதிகமாக இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியாக அந்த மாதிரி ஒரு யூனிவர்ஸிட்டி தேவையில்லை. நான் ஏன் இதை வற்புறுத்துச் சொல்லுகிறேன் என்று சொன்னால் இதை ஒரு ஷீல்டாக அரசாங்கம் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது. சம்பந்தப் பட்டவர்களே சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது அதிகமாக தொழில்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் குவிந்திருக் கிறது. அவர்கள் வெளியே போயும் தொழில் நடத்த அனுமதி கொடுத்திருக்கும்போது இந்தக் கோரிக்கையை அவர்கள் கண்டிப் பாக விட்டுவிட வேண்டும். இதை கண்டிப்பாக மதுரைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடைசியில் காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாக ஆகிவிடக் கூடாது என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

காகிதத் தொழிற்சாலை சீக்கிரம் ஆரம்பிக்கப் போகிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்திற்கு காகிதத் தொழிற்சாலை மிகவும் அவசியம். அதை சீக்கிரத்தில் ஆரம்பிக்கவேண்டும். நம் முடைய ராஜ்யத்தில் அறிவாளிகள் அதிகமாக இருந்தும் காகிதத் தொழிற்சாலை இல்லாதது வருந்தத் தக்க விஷயம், அதை அவசியம் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஸேல்ஸ்-டாக்ஸ் சம்பந்தமாக அநேகமாக இப் போது வரக்கூடிய பட்ஜெட்டிலேதான் கன்ஸெஷன் கொடுக்கலாம். அதை மறுபடியும் பரிசீலனை செய்து முக்கியமாக ஒரு சில பொருள் களுக்கு விலக்குக் கொடுக்கவேண்டும். உதாரணமாக, நெல், பால், வறுகடலை, பட்டாணி போன்றவைகள் விஷயத்தில் விலக்கு கொடுக்கவேண்டியது அவசியம். ஏன் விலக்கு கொடுக்கவேண்டும் என்பதற்கு காரணங்களை மறுபடியும் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொரு வருஷமும் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். இந்த பட்ஜெட்டில் இவைகளுக்கு விலக்கு கொடுத்தால் ஒரு நல்ல "ஜெஸ்சர்" ஆக இருக்கும்.

அடுத்தபடியாக தோல் சாமான்கள் செய்வதிலே குடிசைத் தொழில் முறையில் மணிபர்ஸ், டாக்குமெண்டரி கேஸ்கள் போன்றவைகளை 10, 20 பேர்கள் செய்து வெளி நாடுகளுக்குக்கூட அனுப்புகிறார்கள். அவைகளுக்கு 5% வரி இருப்பதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதே மாதிரி சோப் தொழிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக அப்பளம். பாக் கெட்டெட் குட்ஸ் என்று ராப்பிங் இருக்கிறது என்று 6% வரி போட்டு விடுகிறார்கள். அதை 2% ஆகக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



20th January 1961] [Sri V. Sankaran]

அடுத்தபடியாக பல நல்ல சட்டங்கள் செய்யப்பட்டாலும் அதன் கீழுள்ள ரூல்ஸ் சீக்கிரமாகச் செய்யப்படுவதில்லை. நல்ல மாறுதல்கள் செய்தாலும் அதனுடைய பலன் மக்களுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக இப்போது சமீபத்தில் வீட்டு வாடகைச் சட்டம் நிறைவேறியிருந்தும் அதன் கீழ் ரூல்ஸ் செய் யப்படவில்லை. முக்கியமாக ரூல்ஸ் உடனடியாகக் கொண்டுவரப் படவேண்டும். இல்லாவிட்டால் மக்கள் நல்ல நல்ல மாறுதல்களை அனுபவிக்க முடியாது.

அடுத்தபடியாக ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் சம்பந்தப்பட்ட மட்டில் அங்கத்தினர்களுக்கு டிரான்ஸ்போர்ட் வசதி கொடுக்கப் படுகிறது. இந்த வண்டிகள் ஓடுவதில் டிரான்ஸ்போர்ட் டிபார்ட் மெண்டுக்கு நஷ்டம் ஆகிறது என்று ஒவ்வொரு ஸெஷன் ஆரம் பிக்கும்போதும் ஏதாவது தடங்கல் செய்வதாகத் தெரிகிறது. இது மிகவும் தவறான காரியம். பொது இண்டரஸ்டுக்காகச் செய்யும் போது இந்த மாதிரி மனப்பான்மை கொள்ளக்கூடாது. இம் மாதிரி மனப்பான்மை கொண்டுள்ள டைரெக்டர் அவர்களை குறிப் பாக இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் அவர்கள் சென்ஷூர் செய்ய வேண்டும். அதோடு ஒவ்வொரு தடவையும் அம்மாதிரி வேண்டு மென்று செய்யாமல் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக டூரிஸம் சம்பந்தமாக மதுரை முதலிய இடங்களில் நல்ல முறையில் வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. N. PALANISWAMI GOUNDER:** கனம் அவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் பெருமான் அவர்கள் பேசியதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் வருத்தம் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். நாம் 1961-ம் வருஷத்திலே ஜனவரி மாதத்தில் சந்தோஷமாகக் கூடியிருக்கிறோம். அந்த வகையில் பிரிட்டிஷ் ராணி நமது நாட்டுக்கு வருவதைப் பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கவேண்டும். பல ஆண்டுகளாக நம்மோடு இருந்துவிட்டுச் சென்றவர்கள் நாட்டுக்கு வருவதைப்பற்றி மகிழ்ச்சியடைய வேண்டும். நம்முடைய தமிழ் நாட்டினுடைய பண்பாடு வீட்டுக்கு யார் விருந்தாளி வந்தாலும் அவர்களை வர வேற்பதாகும். நம்மிடையே பல ஆண்டுகாலம் இருந்து பிரிந்த வர்களை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கவேண்டும். நம்முடைய பிரதமர் நேருஜி அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது நாம் பார்க்கிறோம். அங்கெல்லாம் அதை ஒரு பெரிய விழா வாகவே கொண்டாடுகிறார்கள். அப்படி இருக்கும்போது ராணி வருவதை ஒரு சிறிய நிகழ்ச்சியாகச் சொல்வது சரியாகாது.

சென்னை ராஜ்யத்தில் சென்ற ஆண்டில் நல்ல முறையில் பருவ மழை பெய்திருக்கிறது. சென்னை ராஜ்யம் இன்று பாரத நாட்டில் —மற்ற ராஜ்யங்களைப் பார்க்கும்போது, கேரளம், மைசூர், ஆந்திரம் முதலிய ராஜ்யங்களில் மந்திரி சபையிலும் சட்டசபை

யிலும் பாருபாடுகள் இருக்கின்றன—பூசல்கள் எதுமில்லாமல் நேருஜி போன்றவர்கள் பாராட்டக்கூடிய முறையில் முதல மைச்சர் காமராஜர் அவர்கள் தலைமையில் நல்ல முறையில் இருந்து வருகிறது. சட்டசபையை எடுத்துக்கொண்டாலும் சென்னை சட்டசபையானது பாரத நாட்டுக்கே வழிகாட்டியாக இருக்கிறது என்பதைப்பற்றி நாமெல்லோரும் பெருமை கொள்ள வேண்டும். நான் ஆரம்பத்திலேயே கூறியபடி சந்தோஷமாகக் கூடும்போது, வருத்தம் தெரிவிப்பது என்று சொன்னால், அவர்கள் எதிர்க்கட்சி என்ற பாணியில் பேசியிருப்பார்களே தவிர அந்த உள்ளத்தோடு பேசியிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் முக்கியமாக சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மின்சார அபிவிருத்திக்காக மூன்றாவது திட்டத்தில் 101 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குந்தாத் திட்டத்தில் இரண்டாவது ஸ்டேஜ் முடிந்து மூன்றாவது ஸ்டேஜும் ஆரம்பமாகிவிட்டது. நம்முடைய ராஜ்யமானது மற்ற ராஜ்யங்களைவிட மின்சாரம் சம்பந்தப்பட்ட மட்டில் மிகவும் முன்னேறியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். நம் ராஜ்யம் மற்ற ராஜ்யங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. நாட்டுக்கு விவசாயம் மட்டுமல்லாமல் கைத்தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் முக்கியமானது.

விவசாயத் தொழில் மக்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. விவசாயிகளுக்கு பலவகைகளில் சர்க்கார் உதவி செய்கிறது. விவசாயிகளுக்கு கிணறு வெட்ட, பம்ப் செட் வைத்துக்கொள்ள, உரம் வாங்கிக்கொள்ள பல வகைகளில் உதவிகள் அளிப்பதன் காரணமாக விவசாயம் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது. கவர்னர் அவர்களுடைய உரையில் பாம்பிக்குளத் திட்டத்தைப்

11-30 a.m. பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

பாம்பிக்குளத் திட்டம் ஒரு முக்கியமான திட்டம். அது கோயம்புத்தூர் ஜில்லாவிலே 9 தாலுக்காக்களுக்கு, குறிப்பாக 4 தாலுக்காக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பல்லடம், உடுமல்பேட்டை போன்ற தாலுக்காக்களுக்கு, நல்லதொரு பருவ மழை இல்லாத தாலுக்காக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தமிழ் நாட்டிலே இன்றைய தினம் தஞ்சாவூர் போன்ற இடங்களில் பெரு மழை பெய்து சேதத்தை விளைவித்து உள்ளது. ஆனால் பல்லடம், தாராபுரம் போன்ற தாலுக்காக்களிலே பருவ மழையே இல்லாது பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த பருவ மழை இல்லாத காரணத்தினால் 25 சதவிகிதம் கூட வெள்ளாமை கிடைக்காமல் இருக்கிறது. ஒருசில இடங்களில் பருவ மழை பெய்தும்கூட இன்றைய தினம் ஒன்றும் விளையாமல் இருக்கிறது. அதைப்பற்றி பல்லடம் தொகுதியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் ஒன்றும் குறிப்பிடாததைக் குறித்து வருத்தப்படுகிறேன். இன்றையதினம் இப்படிப்பட்ட ஒரு தருணத்தில், வாட்சியாக இருக்கும் ஒரு



பிரதேசத்திற்கு பரம்பிக்குளத் திட்டம் வருவதானது மிகவும் உதவியாக இருக்கும். அதை உற்சாகத்தோடு மக்கள வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். அது 2½ லட்சம் ஏக்கராவுக்கு பாசனத்திற்கு உபயோகப்பட இருக்கிறது. அப்படிப்பட்ட பாசனத்தை, முக்கியமாக பருவ மழை இல்லாத பல்லடம், தாராபுரம் போன்ற தாலுக்காக்களுக்கு அதிகமாக விட்டு உதவும்படியாக நமது நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் குந்தா மின்சாரத் திட்டம் என்னும் ஒரு பெரிய திட்டத்தை கனடா சர்க்கார் உதவியுடன் தொடங்கப்பட்டு, முதலாவது ஸ்டேஜ், இரண்டாவது ஸ்டேஜ் என்று வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. நம் நாட்டிற்கு இன்றைய தினம் மின்சாரம் மிகவும் தேவையாகயுள்ளது. பருவ மழை இல்லாத பிரதேசங்களுக்கு மின்சாரம் பலவகைகளிலும் உபயோகப்படுகின்றது. கைத்தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் மின்சாரம் பல வகைகளிலும் உபயோகப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதேபோல் இன்றைய தினம் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் நமது திட்டங்களுள் ஒரு பெரிய திட்டமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பல லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்குமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற திட்டங்கள் மக்களுக்கு பல வகைகளிலும் உதவியாக இருக்கும். இப்படி நாம் சுதந்திரம் பெற்ற 13 ஆண்டுகளுக்குள் பெரிய பெரிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

இப்போது சென்னையில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. அதைப்போல் ஒரு தொழிற்பேட்டையை கோயம்புத்தூர் ஜில்லாவிலும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதை இப்போது கோயம்புத்தூரிலே நிறுவ இருப்பதாக அறிகிறேன். அதைத் தவிர்த்து பொருளாதாரத் துறையிலும், விவசாயத் துறையிலும் பிற்போக்கடைந்துள்ள பல்லடம், தாராபுரம், உடுமல்பேட்டை போன்ற தாலுக்காக்களில் நிறுவினால் அங்கு மிகவும் பிற்போக்காக உள்ள மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதோடு இப்போது மண் அரிப்பைத் தடுப்பதற்காக பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். முக்கியமாக என்னுடைய தாலுக்காவைப் பொறுத்தவரையில் இந்த மண் அரிப்புத் திட்டத்தினால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதாகத் தெரியவில்லை. ஆகவே, இத்திட்டத்தை கைவிட்டு விட்டு, அந்தவகையிலே செலவிடுவதற்குப் பதிலாக குட்டை, குளம் போன்றவைகள் வெட்டி, நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்தால் நல்லதாய் இருக்குமென்று நம்புகிறேன்.

இன்றைய தினம் நமது ராஜ்யத்திலே ஆங்காங்கே சர்க்கார் விதைப்பண்ணைகள் பல ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த விதைப்பண்ணைகளினால் சர்க்காருக்குப் பல லட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டு, நஷ்டத்தில் வேலை செய்வதாகக் கூறப்படுகிறது.

இப்படி சர்க்கார் நடத்தும் விதைப்பண்ணைகளை, தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நல்லமுறையிலும் நடத்துவார்கள். சர்க்காருக்கும் எவ்விதமான நஷ்டமும் ஏற்படாது. விவசாயத்துறையிலே நல்ல அனுபவமுள்ள தனிப்பட்டவர்களிடம் இந்த விதைப் பண்ணைகளைக் கொடுத்தால், விவசாயிகளுக்கும் நல்ல விதைகள் தக்க சமயங்களிலே கிடைக்கும், சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படாது.

(Mr. Speaker in the Chair.)

இப்படியாக நமது சர்க்கார் சிறு சிறு திட்டங்களையும், பல பெரிய திட்டங்களையும் நிறைவேற்றி பல வகைகளிலும் நாம் முன்னேறி இருக்கிறோம். இந்த ராஜ்யத்திலே மின்சாரம், ரோடு போக்குவரத்து, கல்வி போன்ற துறைகளிலே நாம் மிகவும் முன்னேறியிருக்கிறோம். ஆனால் மக்களுக்கு மிகவும் முக்கியமான வைத்தியத் துறையிலே அவ்வளவாக பெருமளவுக்கு முன்னேறவில்லை. மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளுள் ஒன்று வைத்திய வசதியாகும். கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால், அங்குள்ள பெரிய ஆஸ்பத்திரியில் 750 படுக்கைகளே இன்றைய தினம் இருக்கிறது. இது இன்றுள்ள ஜனப் பெருக்கத்திற்குப் போதாது. குறைந்தது 2,000 படுக்கைகளாவது வேண்டும். திருப்பூர் தாலூக்காவுக்குள்ள ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியிலே தற்போது 32 படுக்கைகள்தான் இருக்கின்றன. இதுவும் போதாது. குறைந்தது 100 படுக்கைகளாவது வேண்டும். இன்றைய சுகாதார அமைப்பின்கீழ் இவைகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பணக்காரர்களுக்குப் பல தனிப்பட்ட வைத்தியர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஏழைகளுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரியைத் தவிர வேறு இடங்களுக்குப் போக வசதியில்லை. அந்த வகையிலே தாலுக்காக்களிலுள்ள ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கும் தவிர, மற்றும் கிராமங்களிலுள்ள சிறு சிறு ஆஸ்பத்திரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி வசதி செய்வது அவசியம். இதற்கான தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் விவசாயத்தை எடுத்துக்கொண்டால், விவசாயத்திற்கு அரசாங்கம் அதிகமாக செலவழிக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி செலவழிக்கும் தொகை மக்களுக்கு பயனுள்ள முறையில் செலவழிக்கப்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். விவசாயிகளுக்குத்தான் கடன் கொடுக்கப்படுகின்றதே என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு 1,000 ரூபாய் கடன் பெறுவதற்குள் 250 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதேபோல் இன்றைய தினம் கடன் கொடுக்கும் திட்டத்தைப் பார்த்தால் நான்கைந்து விதத்திலே கடன் கொடுக்கப்படுகின்றது. கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் கொடுக்கப்படுகிறது. சமுதாய அபிவிருத்தி இலாகா மூலம் கொடுக்கப்படுகிறது. இப்படியாக விவசாயிகளுக்கு நான்கைந்து



விதங்களிலே கடன் கொடுக்கப்படுவதால், அவர்கள் தேவையான அளவுக்குமேல் கடன்பட்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இன்றையதினம் நகரங்களிலே பாங்குகளின் மூலம் அவரவர்களின் சொத்துக்களின் மதிப்பைப் பொறுத்து கடன் கொடுப்பது போல், கிராமங்களிலும் ரூரல் பாங்குகளின் மூலம் விவசாயிகளின் சொத்துக்களை மதிப்பிட்டு கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவரவர்களின் சொத்துக்களை மதிப்பிட்டு அவரவர்களுக்கு இவ்வளவுதான் கடன் கொடுக்கலாம் என்பதை நிர்ணயிக்கவேண்டும். இதற்கான தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். அதேபோல் நான்கைந்து ஸ்தாபனங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதையும் தடுக்க வேண்டும்.

அடுத்து, இன்றையதினம் நம் ராஜ்யத்திலே சில அவசியமில்லாத இலாகாக்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று ஃபயர் சர்வீஸ் டிபார்ட்மெண்டு. யுத்த காலத்திலே ஏதோ இந்த ஃபயர் சர்வீஸ் டிபார்ட்மெண்டு இருந்தது. அது அப்படியே நிலைத்து விட்டது. இது இப்போது தேவையில்லாத அளவுக்கு எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களை எடுத்துக்கொண்டால், பம்பாய், கல்கத்தா போன்ற தலைநகரங்களில் மட்டும்தான் இந்த பயர் சர்வீஸ் டிபார்ட்மெண்டை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் தேவையில்லாத இடங்களில் எல்லாம் இதை வைத்துக்கொண்டு, லட்சக்கணக்கான ரூபாய் அனாவசியமாக செல்வழிக்கப்படுகிறது. லட்சக்கணக்கான மக்கள் வாழும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் மட்டும் இந்த ஃபயர் சர்வீசை வைத்துக்கொண்டால் போதுமானது என்று நினைக்கிறேன். திருப்பூரில் போலீஸ் பாதுகாப்புக்கு 40 பேரும், ஃபயர் சர்வீசுக்கு 45 பேரும் அனாவசியமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். திருப்பூர் நகருக்கு மட்டும் வருஷத்திற்கு லட்ச ரூபாய்க்குமேல் செலவாகிறது. இங்கு வருஷத்திற்கு ஒரு தரம் அல்லது இரண்டு தரம் ஃபயர் ஆக்சிடெண்ட் ஏற்படுவதே கஷ்டம். இதற்கு இவ்வளவு பணம் செலவழிக்கப்பட வேண்டுமா? அதேபோல் ஃபயர் இன்சூரன்ஸ் தனிப்பட்ட கம்பெனிகளிடம் இருந்தது. அதையும் சர்க்கார் எடுத்துக் கொண்டது அனாவசியமானது. இப்படி இன்னும் பல டிபார்ட்மெண்டுகள் நம் அரசாங்கத்திலே இருக்கின்றது.

இன்றையதினம் சில உத்தியோகங்களை எடுத்துக்கொண்டால், உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கக்கூடிய சிலர் நான்கைந்து நிமஷங்கள்கூட வேலை செய்யாது இருக்கிறார்கள். இன்றைய தினம் தாலுகா ஆபீசை எடுத்துக்கொண்டால், 5 டிபுடி தாசில்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த வேலை அங்கு கிடையாது. அலேபோல் ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் இரண்டு கலெக்டர்கள், அவர்கள் உதவிக்கு 5, 6 பி. ஏ-க்கள். இப்படி அவசியமில்லாத பல இலாகாக்களில் சில உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இதேபோல் பஞ்சாயத்திலும், சமுதாய அபிவிருத்தித் திட்ட இலாகாவிலும் கல்வி விஸ்தரிப்புக்கென்று இரண்டு பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதேபோல் ஒவ்வொரு துறைக்கும் ஒருவர் விதம் 15 பேர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு கல்வி விஸ்தரிப்பாளருக்கும் ரூபாய் 150-க்குமேல் சம்பளம். இவர்கள் எல்லாம் முழு நேரமும் வேலை செய்கிறார்களா என்று பார்த்தால், ஒரு நாளைக்கு 5 நிமிடம் வேலை செய்வதே கஷ்டம். இதுபோன்று அவசியமில்லாத இன்னும் கிராம சேவக்குகள் போன்ற வேலைகள் இருக்கின்றன. இப்படி அவசியமில்லாத வேலையிலுள்ளவர்களை யெல்லாம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களுக்கு நல்ல காரியங்கள் செய்துகொடுக்கவேண்டிய இடங்களில் உத்தியோகஸ்தர்கள் வேண்டும். அவசியம் இல்லாத இடங்களில் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆட்களுக்காக உத்யோகங்கள் ஏற்படுத்துவது என்பது கூடாது. அவசியம் இல்லாத இடங்களில் உள்ள உத்தியோகஸ்தர்களை நீக்கிவிட்டு, தேவையுள்ள இடங்களில் மாத்திரம் உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும்.

சில நகரசபைகளிலுள்ள மின்சார திட்டங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. 1948-ம் வருஷத்தில் திருப்பூரில் மின்சாரத் திட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டார்கள். நான் அப்பொழுது நகரசபைத் தலைவராக இருந்தேன். சர்க்கார் உத்திரவிற்குப் பணியவேண்டுமென்ற முறையில் அப்பொழுது நாங்கள் அதை ஒத்துக்கொண்டோம். மதுரை, கோயம்புத்தூர் நகரசபைகளில் அரசாங்கம் மின்சாரத் திட்டத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உயர் நீதி மன்றத்தில் 'ஸூட்' போட்டார்கள். எடுத்துக்கொள்வதாயிருந்தால், எல்லா நகரசபைகளிலுள்ள மின்சாரத் திட்டங்களை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டும். சில நகரசபைகள் சம்பந்தப்பட்டவரை சர்க்கார் மேற்கொண்டு மற்ற நகர சபைகளிலுள்ள திட்டங்களை மேற்கொள்ளாமல் இருக்கக்கூடாது.

நகரசபைகளுக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் சர்க்காரே நகரசபைகளுக்குப் போதிய உதவி செய்து, ரோடு பராமரிப்பு, தண்ணீர் திட்டங்கள் இவைகளை துரிதமாக நடத்தும்படி செய்யவேண்டும். 1955-ல் 27 நகர சபைகளுக்குத் தண்ணீர் திட்டங்கள் போடப்பட்டிருந்தாலும், அவைகளையெல்லாம் விரைவில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தக்க உதவி செய்து ஏற்பாடு செய்யவேண்டும். மக்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் சென்னைக்கு வரவேண்டியிருப்பதைத் தவிர்க்கவேண்டும். அதிகாரிகள் பரவலாக்கப்பட்டு ஜில்லா மாவட்டத்திலேயே மக்கள் எல்லா காரியங்களையும் செய்துகொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மக்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் சென்னை வருவதென்றால் அது மிகவும் தொல்லையாக இருக்கிறது. உதாரணமாக, சிறு தொழில்களுக்கு லைசென்ஸ் பெறுவது ஒரு பெரிய பி[illegible].



அம்மாதிரி லைசென்ஸ்கள் வழங்குவதற்கு கலெக்டர்களுக்கே அதிகாரம் வழங்கப்படவேண்டும். அதிகாரங்களை பரவலாக பகிர்ந்து கொடுக்கவேண்டும். ஒவ்வொரு காரியத்திற்கும் மக்கள் சென்னைக்கு வந்து குவியவேண்டிய நிர்ப்பந்தம் கூடாது.

ரயில்வே நிர்வாகம் மத்திய சர்க்காரிடம் இருந்தாலும்கூட, நான் இன்றையதினம் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், ரயில்களில் இடம் கிடைப்பதே இல்லை. திருப்பூருக்கும் கோவைக்கும் மத்தியில் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு ஓடிக்கொண்டிருந்த ரயில்கள்தான் இப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றன. சென்னை சர்க்கார் இதுவிஷயத்தில் தகுந்த சிபார்சு செய்து ரயில்களை அதிகமாக்கி மக்கள் போக்குவரத்திற்கு வேண்டிய வசதியை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்திருப்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. நம்முடைய ராஜ்யத்தை, எல்லா ராஜ்யங்களுக்கும் வழிகாட்டக்கூடிய நிலையில் நிர்வாகம் செய்துவரக்கூடிய கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் அவர்களுக்கும், மற்ற கனம் அங்கத்தினர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையைப் படித்துப் பார்க்கும் பொழுது சிலவற்றை மறைத்தும், சிலவற்றை மிகைப்படுத்தியும் குறிப்பிட்டிருப்பதால், அந்த உரையை வரவேற்கக்கூடிய முறையில் இல்லாமல் இருக்கிறது என்பது வருத்தப்படக்கூடிய ஒரு செய்தியாகும். கவர்னர் அவர்களுடைய உரையில் நவம்பர் மாதத்திலும், டிசம்பர் மாதத்திலும் பெய்த அடைமழையின் காரணமாக ஓரளவு ரோடுகள், வீடுகள், நீர்த்தேக்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறது. பெரிய அளவு பாதகம் ஏற்பட்டிருப்பதை ஓரளவு என்று குறிப்பிட்டிருப்பதைத்தான், சிலவற்றை மறைத்தார்கள் என்று நான் குறிப்பிட்டேன். அதேநேரத்தில் தக்க நிவாரண வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. மழையின் காரணமாக உற்பத்தியும் பெருகும் என்று சொல்லியிருப்பது மிகைப்படுத்திய விஷயம் என்று நான் இந்த நேரத்தில் தங்கள் மூலமாக அமைசர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மழையின் காரணமாக விவசாயிகளுக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு, அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழை, எளிய ஆதிதிராவிட மக்கள் தங்கள் குடிசைகளையும், கால்நடைகளையும் இழக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிற நேரத்தில், ஓரளவுதான் சேதம் என்று மறைத்துக்கூற வேண்டிய அவசியம் கிடையாது. பாதகம் ஏற்பட்டிருப்பதை உள்ளபடியே சொல்லி அதற்காக காலாகாலத்தில் எடுக்கப்பட்

டிருக்கக்கூடிய நடவடிக்கைகளை குறிப்பிட்டிருந்தால், நான் அரசாங்கத்தைப் பாராட்டி இருக்கமுடியும். தக்க நிவாரண வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருந்த போதிலும், சென்னை நகரத்திலும், சென்னைக்கு அருகாமையிலும் பாதிக்கப்பட்ட சாலைகள் ஏராளமாக இருக்கின்றன. சாலையின் நடுவே உள்ள பாலங்கள் உடைப்பினுல் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக பஸ் போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டிருக்கிறது. கடலூர்—விருத்தாசலம் மார்க்கத்தில் தம்பிப் பேட்டை என்ற இடத்திற்கு சமீபத்திலுள்ள பாலம் பழுதடைந்ததன் காரணமாக பஸ் விபத்து ஏற்பட்டு இரண்டு நபர்கள் இறந்தார்கள் என்ற செய்தியை பத்திரிகையின் மூலம் அறிந்திருக்கலாம். பல இடங்களில் பாலங்கள் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றன என்று 'காஷன் போர்டுகள்' மட்டும் போட்டுவிட்டு, அவற்றை செப்பனிடுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கம் வாளாயிருக்கிறுர்கள் என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்லாமல். இருக்க முடியவில்லை. அதேமாதிரி விழுப்புரம்—சென்னை மார்க்கத்தில் பஸ்கள் நேராகப் போகாமல், செஞ்சியை சுற்றி போகக்கூடிய நிலைமை இருந்தது. இப்பொழுது வீடூர் மார்க்கமாக பல கிராமங்களை சுற்றிக்கொண்டு பஸ்கள் போக வேண்டிய நிலைமை இருகிறக்து. பழுதடைந்த பாலங்களை செப்பனிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று குற்றச்சாட்டை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதேபோலத் தான் குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கும் தகுந்த நிவாரண உதவி அளிக்கப்படவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. வெள்ளையர் காலத்தில் விலைவாசிகள் மலிவாக இருந்த போதுகூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு ரூ. 30 நிவாரணம் அளிக்கப்பட்டது. விலைவாசிகள் ஏறியிருக்கிற இந்தக் காலத்திலும் உயர்த்திக்கொடுக்காமல் அதே ரூ. 30 தான் நிவாரணமாக அளிக்கப்படுகிறது. அந்த ரூ. 30-ம் எல்லா இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றுல் அதுவும் கிடையாது. சில இடங்களில் ரூ. 30 கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ரூ. 20, சில இடங்களில் ரூ. 10 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அதிகாரிகள் வந்து குறிப்பு மட்டும் எடுத்துக்கொண்டு போனபோதிலும், அந்த இடங்களில் நிவாரணம் அளிக்கப்படாமலே இருக்கிறது. இந்த நிலைமையை அரசாங்கம் கவனித்து தகுந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும்.

கவர்னர் அவர்களுடைய உரையில், பிரதம மந்திரி நேரு அவர்கள் மழை அடித்து வெள்ளம் வந்த நேரத்தில் நிவாரண வேலைகளுக்காக பண உதவி அளித்ததற்கு அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். அவர் தொகை கொடுத்ததற்காக நானும் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனுல், அவர் கொடுத்துள்ள தொகையை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், இந்த நெருக்கடியான நேரத்தில் அந்தத் தொகை மிகவும் குறைவுதான் என்று அபிப்பிராயப்பட வேண்டியிருக்கிறது. மொத்தம் ரூ. 25,000 கொடுத்திருக்கிறுர்கள் என்று நினைக்கிறேன்.



அதற்குமேல் கொடுத்திருந்தால் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். தமிழ்நாடு வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தொகை போதாது. மத்திய அரசாங்கம் இன்னும் நிறைய உதவித் தொகை கொடுத்திருக்க வேண்டும். வடநாட்டில் பூகம்பம், பஞ்சம், வெள்ளம் வந்தபொழுது தமிழகத்திலிருந்து உதவி செய்திருக்கிறேம். நம்முடைய தமிழ்நாடு பாதிக்கப்பட்ட நேரத்தில் போதுமான உதவி தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லாமல் இருக்க முடியாது.

சில சமயங்களில் கோட்டையில் ஒரு அமைச்சர்கூட இல்லாமல் சுற்றுப்பிரயாணம் செய்கிறுர்கள். ஆனுல் வெள்ளம் அடித்த நேரத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் சென்று பார்வையிடவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தெரியாமல் சொல்லுகிறுர்கள் என்று நினைக்கிறேன். மழை பெய்து வெள்ளம் வந்த நேரத்தில், உடனடியாக எங்கெல்லாம் பாதிக்கப்பட்டிருந்ததோ அங்கெல்லாம் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறேம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. GOVINDASAMY : கனம் அமைச்சர் அவர்கள் போய் வந்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல அமைச்சர்கள் வெள்ளம் வடிந்ததற்கு பிற்பாடுதான் போனுர்கள். வெள்ளம் வடிந்து போக்குவரத்துக்கு வசதி ஏற்பட்டபிறகு, ஜீப்பில் போகக்கூடிய வசதியெல்லாம் ஏற்பட்டபிறகுதான் சென்று பார்த்தார்கள். வெள்ளம் வந்து பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நேரத்தில், குடிசைகள் தண்ணீரில் மூழ்கியிருந்த காலத்தில் அமைச்சர்கள் செல்லவில்லை என்றுதான் சொல்லுகிறேன். கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் இந்தக் காரியத்தை செய்தது பற்றி நான் பாராட்டுகிறேன். ஆனுல் கனம் ராமய்யா அவர்கள் காலம் கடந்துதான் வந்தார்கள்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir, the statement of the hon. Member is not correct. It was only the Hon. the Chief Minister who went out of the City first to visit the affected areas and not the hon. Member.

MR. SPEAKER : It cannot be a point of order.

SRI A. GOVINDASAMY : வெள்ளம் வந்த நேரத்தில் சென்னையில் உள்ள பல கலைஞர்கள், புரட்சி நடிகர் ராமசந்திரன், லட்சிய நடிகர் ராஜேந்திரன், சிவாஜி கணேசன் ஆகியோர்கள் ஏழை எளியவர்களுக்கு உதவிசெய்ய முன்வந்தார்கள். உணவுப் பொட்டலங்களை சேரி சேரியாக கொண்டுபோய் கொடுத்தார்கள். அவர்களுடைய சேவையை பாராட்டியிருக்கவேண்டும். ஆனுல் அவர்களை பாராட்ட கவர்னர் அவர்கள் தவறியிருக்கிறுர்கள்.

[Sri A. Govindasamy] [20th January 1961

இந்தப் பாராட்டுதல்களின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்தி, மேலும் தொண்டு செய்வதற்கு ஊக்குவிக்க முடியும். அதைச் செய்யத் தவறி விட்டார்கள். கட்சிக் கண்ணோட்டத்தோடு, நமது முதலமைச்சர் அவர்கள், சிவாஜி கணேசன் அவர்கள் வீட்டிற்கு மட்டும் போய், அவரைப் பாராட்டி வந்ததாக ஒரு செய்தியைப் பார்த்தேன்.

**MR. SPEAKER:** இது எல்லாம் "பிரைவேட்" விஷயம். சபையில் சொல்லி என்ன பிரயோஜனம். முதல் அமைச்சர் அவர்கள் இந்த வீட்டுக்குப் போனார், அந்த வீட்டுக்குப் போனார் என்று சொன்னால், அதில் இச்சபைக்கு என்ன அக்கறை இருக்கிறது? (சிரிப்பு.) கவர்னர் அவர்கள் உரையைப் பற்றித்தான் இங்கு பேசலாம்.

**SRI A. GOVINDASAMY:** உதவி செய்தவர்களை எல்லாம் பாராட்டி இருந்தார்கள். ஆகவே, இவர்களையும் பாராட்ட வேண்டுமென்றுதான் சொன்னேன்.

**MR. SPEAKER:** நான்கூடத்தான் உதவி செய்திருக்கிறேன். என் பெயர் இல்லை. (சிரிப்பு.)

**SRI A. GOVINDASAMY:** கவர்னர் அவர்கள் பாராட்டாமல் இருந்தாலும், நான் உண்மையிலேயே உங்களுடைய சேவையைப் பாராட்டுகிறேன். இன்றையதினம் விலைவாசிகள் இறங்கிவிட்டதாக கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய நமது நிதி அமைச்சர் அவர்கள், நம்முடைய மாநிலத்திலே விலைவாசிகள் எப்படி இருக்கின்றன என்று பார்ப்பதற்காக, சென்னை நகரில் உள்ள விறகுக் கடைக்குப் போய்வந்ததாக செய்தியைப் பார்த்தேன். அவர்கள் சொந்த அனுபவமே அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கும். அரசாங்கம் தயாரித்திருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தாலே, அக்டோபர் மாதத்தில் ரூ. 56 ஆக இருந்தது, நவம்பர் மாதத்தில் 67 ரூபாயாகவும், டிசம்பர் மாதத்தில் 89 ரூபாயாகவும் ஏறிக்கொண்டே போயிருக்கிறது. இதைத் தடுக்க நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? விறகு கிடைக்காத காரணத்தால், ஏழை எளியவர்கள் சமையல் செய்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விலைவாசிகளை ஏற்றிய கடைக்காரர்கள் மீது நமது நிதி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? விலைவாசிகளைக் கட்டுப்படுத்த அமைச்சர்கள் என்ன வழி சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். "மக்களிடம் வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது, ஆகையால் விலைவாசிகள் ஏறினால் அதில் தவறு இல்லை" என்று கனம் அமைச்சர் வெங்கட்டராமன் பேசுகிறார்கள். "ஜனத்தொகை அதிகமாகி விட்டது, அதனாலே விலைவாசி ஏறியிருக்கிறது" என்று விவசாய அமைச்சர் சொல்லுகிறார். "திட்டம் போடப் போட விலைவாசிகள் ஏறத்தான் செய்யும்" என்று கனம் நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்தி, ஏழை



20th January 1961] [Sri A. Govindasamy]

எளியவர்களுக்கு மலிவான விலையில் முக்கியமான பொருள்கள் கிடைப்பதற்கு நமது அரசாங்கம் வழிவகை செய்யவில்லை என்று சொல்லுகிறேன்.

விவசாய விதைப் பண்ணைகளுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் விதைப் பண்ணைகளால் ஏற்கனவே அடைந்துள்ள நஷ்டத்தை நமது விவசாய அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நீர்ப்பாசன வசதியில்லாத நிலங்களை, வேண்டியவர்கள் நிலங்களை எல்லாம் அதிக விலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்ல விதைகள் கிடைக்கவில்லை. அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பண்ணைகளுக்கு மின்சார வசதி கிடையாது. அங்கே பணியாற்றும் ஆட்களுக்கு பண வசதி கிடையாது. சர்க்கார் விதைப்பண்ணைகள் சம்பந்தமாக எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சுகள் செய்திருக்கின்றன. அந்த சிபார்சுகளை எல்லாம் நிறைவேற்றக்கூட அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை.

அண்ணா அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் கேட்ட நேரத்தில், "பண்டாரம்" என்று கிண்டல் செய்தார்கள். அண்மையில் வேலூரில் நமது நிதி அமைச்சர் அவர்கள், ஆளும் கட்சிக்கு எல்லாம் உபதேசம் செய்வதைப் போல, எதிர்க் கட்சிக்கும் உபதேசம் செய்திருக்கிறார்கள். பண்பாட்டுடன் பேசவேண்டும் என்று அவர்கள் பேசின பேச்சும், அவர்களைத் தூண்டிவிட்ட முதல் அமைச்சர் அவர்களின் பேச்சும் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. மற்றவர்களுக்குத்தான் இந்த உபதேசம், தனக்கு இல்லை என்பதைத் பார்க்கும்போது வேதனைப்பட வேண்டியிருக்கிறது. தானே வழிகாட்டியாக நடந்துகொண்டால், அவர்களைப் பாராட்டியிருக்க முடியும். வழி தவறிப் பேசியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் தெரிவிக்கிறேன். அதேசமயத்தில், டாக்டர் லோகநாதன் அவர்கள் 15 ஆண்டு காலத்திற்கு, அதாவது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு 2,000 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அளவுக்காவது மத்திய அரசாங்கத்திடமிருந்து பண உதவி கேட்க நமது அரசாங்கத்திற்கு துணிவு இருந்ததா? நமது அமைச்சர் அவர்களுக்கு துணிவு இல்லையென்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ரூபாய் 390 கோடி செலவிடப்படவேண்டுமென்று தயாரித்த திட்டம் என்னவாயிற்று? 291 கோடி ரூபாயாக அது ஏன் குறைக்கப்பட்டது? அதற்கான காரணங்கள் சொல்லப்படவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தூத்துக்குடித் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை வரவேற்கிறோம். இத்திட்டத்தைப் பொறுத்தவரையில்கூட பூர்வாங்க வேலை இன்னும் துவங்கப்படவில்லை. அதற்காக நியமிக்கப்பட்ட காரியதரிசி, திட்டம் சேர்க்கப்பட்டதும் வேலை துவங்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்.

[Sri A. Govindasamy] [20th January 1961

நெய்வேலித் திட்டத்தைப் பற்றி பிரமாதமாகப் பேசப்படுகிறது. என்னுடைய மவாட்டத்தில் இருப்பதால், இதைப்பற்றி எனக்குந் தெரியும். இந்தத் திட்டம் ஆமை வேகத்தில்தான் நடந்து வருகிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட நஷ்ட ஈடு குறைவு என்று ஹைகோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. அதன்பேரில் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுப் போட்டிருக்கிறார்களே தவிர, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க முன்வரவில்லை. நெய்வேலித் திட்டம் வெற்றிகரமாக ஆவதற்கு அங்கேயுள்ள தொழிலாளிகள் பாடுபட்டு வருகிறார்கள். தினக் கூலிக்குத்தான் அவர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. அங்கே அமைக்கவிருக்கும் உரத் தொழிற்சாலை சம்பந்தமாக பூர்வாங்க வேலைகள் இன்னும் எடுக்கப்படவில்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர் அங்கு எப்பொழுது போயிருந்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**SRI A. GOVINDASAMY :** இரண்டு மாதங்களுக்கு முன்பு போயிருந்தேன். ஆமை வேகத்தில்தான் அங்கு வேலை நடைபெறுகிறது. மூன்றாவது திட்டகாலத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி கொடுக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. செய்து கொடுப்போம் என்ற உறுதிமொழி இல்லை. ஒரு கிராமத்திற்கு 25 பம்பு செட்டுகள் கொடுத்தால் கிராமத்தின் தேவை பூர்த்தியாகிவிட்டதாக மின்சார போர்டு கருதுகிறது. பம்பு செட்டுகள் போட்டால் நிலத்திற்குக் கெடுதி என்று நினைத்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம், இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் கூடுதலான பம்பு செட்டுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கோரிக்கையையும் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்திற்கு மின்சாரத் திட்டம் ஸாங்க்ஷன் ஆகி இருந்தது. வாக்கூர், பகண்டை, மாத்தூர் வழியாக குமளத்திற்கு ஒரு ஸ்கீம் சாங்க்ஷன் செய்யப்பட்டது. ஒரு அமைச்சர் பக்கத்து கிராமத்திற்கு வந்துபோன பிறகு, அரசியல் கண்ணோட்டத்தோடு, அதே குமளம் கிராமத்திற்கு கங்கராம்பாளையம் வழியாக திருப்பப்பட்டது. நீண்ட நாளாக அந்த கிராமங்களிலுள்ள மக்கள் மின்சார இணைப்பு வரும் என்று எதிர்ப்பார்த்தார்கள். நான் சொல்லுவது சரியா இல்லையா என்பதைப் பரிசீலித்து பதில் சொல்லட்டும்.

சிறிய பாசனத் திட்டங்களுக்காக 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நந்தன் கால்வாய்த் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும், அதனால் பல கிராமங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன். கனம் மராமத்து அமைச்சர் அவர்களும், கனம் முதலமைச்சர் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். பல வாய்க்கால்கள் தூர்ந்து போய் இருக்கின்றன. அவற்றை மராமத்து செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. விவசாயிகளுக்குப் 11-30 a.m. போதுமான வசதிகள் செய்து கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால், சிதம்பரம் தாலூக்காவில், புவனகிரி ப்ளாக்கிலே, அலமேலுமங்காபுரம், வலங்கிப்பட்டி, பெரிய தும்மட்டி, சிறிய தும்மட்டி, தச்சக்காடு முதலிய கிராமத்திலுள்ள விவசாயிகள் கஷ்டம் தீரவில்லை. அவர்கள் அமைச்சரவர்களைப் பார்க்க வேண்டும் என்று, அவர்கள் தங்கியிருந்த விடுதியில் சென்று கேட்டும்கூட, அமைச்சரவர்கள் அங்கெல்லாம் போகவில்லை.



20th January 1961] [Sri A. Govindasamy]

உர விநியோகத்தைப்பற்றியும் ஒரு சில வார்த்தைகள். நமக்குத் தேவையான உரத்தை நல்ல முறையிலே வழங்க மத்திய சர்க்கார் முன்வரவில்லை. நம் மாநில அமைச்சர்களும், அவர்களிடம் கண்டித்துக் கேட்க பயப்படுகிறார்கள். வற்புறுத்திச் சொல்ல இவர்களுக்குத் தைரியம் இல்லை என்ற குற்றச் சாட்டை சொல்ல வேண்டியிருக்கிறது. நியாயமான விலையில் கிடைப்பதற்குப் பதிலாக, ரூ. 35 க்குக் கிடைப்பதற்குப் பதிலாக, மூட்டை ஒன்றுக்கு ரூ. 60, 70 என்று கொடுக்க வேண்டியிருக்கிறது. சாப்பாட்டு உப்பை அதில் கலந்து விற்று விடுகிறார்கள். "எவ்வளவோ பொருள்களில் கலப்படம் இருக்கிறது ; அம்மாதிரி இதிலும் இருந்து விட்டுப் போகட்டுமே" என்ற முறையில் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இன்று காலையில், பதில் சொல்லும் போதுகூட உணவு அமைச்சர் எல்லாவற்றிலும் தான் கலப்படம் இருக்கிறது, இதிலுந்தான் இருந்து விட்டுப் போகட்டுமே என்று சொல்வதிலிருந்து, அப்படிக் கலப்படம் செய்கிறவர்கள் தெம்பாக இருக்கிறார்களே தவிர, அதைத் தவிர்க்க வேண்டும் என்ற உத்திரவாதம் கொடுக்கத் தயங்குகிறார்கள்.

ஒரு ப்ளாக்கில் 4, 5 சொஸைடிகள் மூலம் விநியோகிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், எல்லா கிராமங்களுக்கும் கிடைக்கும் நிலைமை இல்லை. ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் சொஸைடியும் விநியோகித்தால்தான் எல்லா கிராம மக்களுக்கு உரம் கிடைக்க உதவியாக இருக்கும். இப்பொழுது உரத்திற்கு அதிகக் கிராக்கி வந்திருக்கிறது. ஏற்கெனவே கடன் வேண்டுமானால் உரமாக கொடுக்கப்பட்டது. இப்பொழுதும், கடனாகவோ அல்லது மற்ற வழியிலோ உரம் வேண்டிய அளவு விநியோகிக்க ஆவன செய்யவேண்டும்.

சிதம்பரம் தாலூகாவில் கனம் ராமையா அவர்கள் சுற்றுப் பிராயணம் செய்தார்கள். அப்பொழுது அவர்களிடமும் சொல்லப்பட்டது. அங்கே, கண்டமங்கலம், நாட்டுமங்கலம் முதலிய கிராமங்கள், அந்த கிராமத்து மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த கிராம மக்களுக்குப் போதுமான உதவிகள் செய்து தரப்படவில்லை. தேவையான உரம் கொடுக்கப்படவில்லை ; ஓடைகளும் சீர்திருத்தப்படவில்லை.

[Sri A. Govindasamy] [20th January 1961

அணு மின்சார உலை ஏற்படுத்துவது பற்றி நிர்மானமாக ஒன்றும் தெரிவிக்கவில்லை. பம்பாயில் ஏற்படுத்தியது போல், மத்திய சர்க்காரை வற்புறுத்தி ஏன் நம் மாகாணத்தில் ஏற்படுத்த தயக்கம் காட்டுகிறார்கள். ஊருக்கு உலை வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே அது பாராட்டப்படவேண்டிய விஷயம். அது நெய்வேலியில் இருக்கும் என்று முதல் அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (கனம் ஸ்ரீ. சி. சுப்பிரமணியம்: இன்னும் நிர்மானமாகவில்லை.) முடிவு எடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அது நிபுணர்கள் செய்ய வேண்டிய விஷயம் என்று சொல்லுகிறார்கள். அது நெய்வேலியில் வந்தாலும் சரி, சேலத்தில் வந்தாலும் சரி, அது உடனடியாக இந்த மாநிலத்தில் நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலி திட்டம் பற்றிப் பேசும்போது, கடலூர் துறை முகத்தை, ஆழ்கடல் துறைமுகமாக விஸ்தரித்தால் நல்லது; அதைப் பரிசீலனை செய்து கைவிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri V. SUBBIAH:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கனம் கவர்னர் பெருமான் உரையின் மீது பேசும்போது, பல முக்கியமான விஷயங்களை கவர்னர் பெருமான் தங்கள் உரையில் விட்டு விட்டார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. முக்கியமாக, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கவனிக்கப்படவேண்டியது கைத்தறி, கைத்தறி போர்டைச் சேர்ந்த ஸ்ரீ சோமப்பா அவர்களும், அகதிகளுக்கு அடுத்தபடியாகக் கவனிக்கப்படவேண்டியவர்கள் கைத்தறியாளர்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெரும் தொழில் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கவர்னர் பெருமான் தன் உரையிலே எந்தவிதமான அறிவிப்பும் இல்லை என்பதையும் சிந்தனை பண்ணவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. போக்கு வரத்துத் துறையிலும், தூத்துக்குடி துறைமுகம் வருவது வரவேற்கத்தக்கது என்றாலும், அதைச் சேர்ந்த மிக முக்கியமான சேது சமுத்திரத் திட்டம் பற்றி கவர்னர் பெருமான் தன் உரையில் குறிப்பிடாமல் இருப்பது, வருந்த வேண்டிய விஷயம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

விவசாயத்துறையில்கூட என்ன? ரூ. 80 கோடி என்று போட்டிருக்கிறார்கள் இந்த திட்டத்திலே. அந்தப் பணத்தில் மக்களுக்கு எந்த அளவுக்கு உண்மையாகப் பயன் ஏற்படுகிறது என்று பார்த்தால், செலவழித்த ரூபாயின் ஒரு சிறு பங்குதான் மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதைக்காண வருத்தமாக இருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களிலும் பார்த்திருக்கிறோம். மதிப்பிற்குரிய அங்கத்தினரவர்கள் சொன்னது போல, விவசாயிகளுக்கு ஏதாவது ரசாயண உரம் வேண்டுமென்றால், வேண்டிய அளவு கண்ட்ரோலில் கிடைப்பதில்லை;



20th January 1961] [Sri V. Subbiah]

ரூ. 55-க்கு விற்க வேண்டிய மூட்டை உரத்தை, இன்றைக்கு ரூ. 82 என்று கொடுத்து வாங்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. இப்படியிருந்தால் விவசாயப் பொருள்கள் உற்பத்தியாவது எப்படி, அதன் தரம்தான் எப்படி உயர முடியும்? பல்வேறு விவசாயக் கோட்டாக்களையும் வாங்குகிறவர்கள் ரூ. 400, 500 என்று மாற்றி, விவசாயிகளுக்குப் பயன் இல்லாமல் செய்து விடுகிறார்கள். ஆகவே, விவசாயத்திற்காக என்று ஒதுக்கியிருக்கும் பணம் விவசாயிகளுக்குப் பூராவாகப் போய்ச் சேருவதில்லை. இடையில் உள்ளவர்கள்தான் லாபம் அடைகிறார்கள். ஆகவே இப்படிப் பல கோடி ரூபாய்களை ஒதுக்கினால் மட்டும் பிரயோசனம் இல்லை என்பதை நேரிடை அனுபவத்தினால் நாம் காண முடிகிறது.

மின்சாரம் பற்றிப் பேசும்போது, வருத்தத்துடன் சொல்லுகிறேன், இந்த மன்றத்திலே திரும்பத் திரும்பச் சொன்ன விஷயத்தை. குந்தா போன்ற பெரிய திட்டங்கள் வந்தாலும்கூட, தொழில் துறையில் இருப்பவர்களைத் தவிர, விவசாயி அனுபவிக்கும் மின்சார வெட்டு, க்ரூப் சிஸ்டம், இவைகள் மிகப் பெரிய குறைகள்; இதைவிடப் பெரிய கஷ்டமும் நஷ்டமும் விவசாயிக்கு இருக்க முடியாது. மேலும், தொழில் துறையில் இருப்பவர்கள் ஆயிரம் யூனிட்டுக்கு அரையணா விதம் கட்டுகிறார்கள்; ஆனால், விவசாயத்திற்கோ, ஒன்பது பைசா என்கிறோம், ஆனால் அது உண்மையில் 11 அல்லது 14 பைசா அளவுக்கு வந்து விடுகிறது, மினிமம் சார்ஜ், மீட்டர் சார்ஜ் இன்னும் என்ன என்னவோ சார்ஜ் கணக்கில் லாமல். எந்த அளவில் கொடுத்தாலும், ஆன்யுவல் மினிமம் சார்ஜ் இருக்கிறது. சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல், விவசாயி லயன்கள் கேட்டால், அவன் பல காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஒரு மில் முதலாளியோ, அல்லது ஒரு ஸ்பின்னிங்ஸ் மில்லுக்கோ, வீவிங் மில்லுக்கோ என்று கேட்டால், மில் கட்டடம் கட்டி, அங்கு இயந்திரங்கள் எரெக்ட் செய்வதற்கு முன்னாலேயே, போஸ்டுகள் வந்து விடுகின்றன. விவசாயத் துறையில் என்றால் கால தாமதம் தான் ஆகிறது. அதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. அந்த நிலைமை இந்த நாட்டில் இருக்கக்கூடாது. அப்படியிருக்கும் நிலையில் விவசாயிகள் எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும்?

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்யும் 'மணி க்ராப்ஸ்' என்று சொல்லக்கூடிய வெங்காயம், மிளகாய் வத்தல், புகையிலை, கரும்பு இவைகளை ஏற்றுமதி செய்வதற்கான லைசென்ஸ் விவசாயிகளைக்கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுக்காமல் தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதினால் விவசாயிகள் நேரடியாக லாபத்தை அனுபவிக்க முடியாமல் போகிறது. கவர்னருடைய உரையில், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குப் பாதுகாப்பு, விலை நிர்ணயம் இவைகள் குறிப்பிடப்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது.

அணைக்கட்டுத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய ஜில்லாவில் பெரிய திட்டங்கள் முடிந்துவிட்டன. எங்கள் ஜில்லாவிற்கு உதவக்கூடிய திட்டங்களைப்பற்றி, ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் இந்த நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி பொறுப்பில் இருந்த காலத்திலேகூட, சிரியார், பம்பையார் திட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலே ஓடிக்கொண்டிருக்கிற அந்த நதிகளின் குறுக்கே அணை கட்டவேண்டும் என்பதைக் குறித்து எத்தனையோ இன்ஜினீயர்கள் பார்த்துப் பார்த்து அவை கைவிடப்பட்டுக்கொண்டே வருகின்றன. மூன்றாவது திட்டத்தில்கூட அவை இடம் பெறுமா என்று தெரியவில்லை. இந்த நிலையை நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். பெரிய திட்டங்களைப் பொறுத்தவரையில் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டார்கள் அவர்கள். அதைப்போல, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய வரண்ட பிரதேசங்களிலும் அவர்களுக்கு அந்தக் கண்ணோட்டம் இருக்கவேண்டும். அவர்கள் அதில் கொஞ்சம் அக்கறை காட்டி எதிர்காலத்திலே வரும் திட்டங்களிலாவது அவைகளைச் சேர்த்து, நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். எங்கள் பகுதியில் இருக்கும் மக்கள் தலைமுறை தலைமுறையாக வரண்ட பிரதேசத்தில் வாழ்கின்றார்கள். மழை பெய்தால் வாழ்க்கை; இல்லையென்றால் வாழ்க்கையில்லை யென்ற நிலை இருக்கிறது. மழை பெய்து என்ன ஆயிற்று? மழை எங்களுடைய பிரதேசத்தில் அளவோடு பெய்தால்தான் எங்களுக்கு விளைச்சல் உண்டு. அதிக மழை காரணமாக சம்பம்புல் என்ற மகசூல் அடியோடு போய்விட்டது. ஏக்கராவுக்கு ஐந்து கோட்டை விளைவாகிக் கொண்டிருந்தது, இப்பொழுது ஒரு கலம் விளையுமா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு விளைச்சல் குறைந்துவிட்டது. பருத்தியைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. இந்த நாட்டிலே உயர்ந்த ரகப் பருத்தியாகிய கருங்கண்ணிப் பருத்தி அங்கே உற்பத்தியாகிறது. இந்த வருஷத்திலே பெய்த மழையினால் பருத்திச் செடியும் களையும் ஒன்றாக வந்து, ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 300 வரையில் செலவழித்திருக்கிறோம்—என்றால், அவர்களுடைய நிலையை என்னவென்று சொல்வது? சமீபத்தில் பெய்த பெரு மழையினால் எல்லா இடங்களும் வெள்ளக் காடாகிவிட்டதால், ஒரு புஞ்சையில் இருக்கும் மண் இன்னொரு புஞ்சைக்குக் கொண்டுபோகப்பட்டு விட்டது. கிராமப் பாதைகளும் சேதப்பட்டு, சமீபத்தில் சீர்திருத்த முடியாத நிலையில் இருக்கின்றன. இம்மாதிரி பல கஷ்டங்களை கிராமங்களில் உள்ள விவசாயிகள் அடைகிறார்கள்.

கால்நடைகளைப்பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றும் குறிப்பிடாமல் விட்டு விட்டார்கள். கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஏற்படுத்தவேண்டும். கால்நடைகளுக்கு அடிக்கடி நோய் வந்து நஷ்டம் ஏற்படுகிறது. ஒரு ஜோடி மாடு ஆயிரம் ரூபாய் இல்லாமல் வாங்க முடியாது. ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய மாடுகள் ஒரு மணி, அரை மணி நேரத்திலே நோயினால் சாகின்றன என்றால், இந்த அரசாங்கம் அவைகளைக் காப்பாற்ற முடியவில்லை.





இந்த நிலையில் விவசாயி எப்படி விவசாயம் செய்ய முடியும்? அவன் எவ்வளவு நஷ்டம் அடைகிறான் என்பதைச் சிந்திக்க வேண்டும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி ஆகிய ஜில்லாக்களுக்கு கேந்திரமாக விளங்கும் மதுரைமாநகரத்தில் சென்னை வேப்பேரியில் உள்ள வெட்டரினரி ஆஸ்பத்திரி போன்று ஒன்று இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளைக் காப்பாற்ற முடியும்.

சர்வகலாசாலை எங்கள் பகுதிக்கு வருகிறது என்ற சந்தோஷத்தோடு இருக்கின்றோம். அதை அரசாங்கம் முக்கியமாக மதுரை நகரத்திற்குத்தான் கொடுக்கவேண்டும். எங்கள் பகுதியில் வசதியற்ற நிலைமையில் இருக்கின்றோம். அந்த வசதிகளையெல்லாம் உண்டாக்கவேண்டும். அத்துடன், மதுரையில் ஒரு சர்வகலாசாலை வைக்கவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கின்றேன்.

**(Deputy Speaker in the Chair)**

கவர்னர் பெருமான் மிக முக்கியமாக உள்ள பல திட்டங்களைக் குறிப்பிடவில்லை. தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் ஏதோ வருகிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு அதிருஷ்டம் என்று தான் சொல்லவேண்டும். திருநெல்வேலி முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது. இம்மாதிரி நகரங்களில் பெரிய தொழிற்சாலைகள் வேண்டும். கச்சாப் பொருள்கள் எங்கெங்கே கிடைக்கின்றனவோ, அங்கே தான் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமே தவிர பரவலாக ஆரம்பிக்கின்றோம் என்ற எண்ணத்தில் எங்கெங்கேயோ ஆரம்பிக்கிறார்கள். சேலத்தில் இரும்பு கிடைக்கிறதென்றால், அதை விட்டுவிட்டு திருநெல்வேலியில் இரும்புத் தொழிற்சாலை வைக்க முடியுமா? முடியாது. அது மாதிரி, எங்கள் பகுதியில் நீண்ட இழைப் பருத்தி கிடைக்கின்றது. அந்த இடத்தில்தான் ஸ்பின்னிங் மில்ஸ் இருக்க வேண்டும். அங்கே இருந்தால்தான் உற்பத்தி ஆகக்கூடிய பொருள் நல்லமுறையிலே அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கும். அப்படியில்லாமல் 100 மைல்களுக்கு அப்பால் வைக்கின்றோம் என்றால், அதில் பயன் இல்லை. கூட்டுறவு மில்கள் எல்லாம் எங்கள் பகுதிக்குக் கொடுக்கவேண்டும். சாத்தூர் போன்ற இடங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். விவசாயக் கூலிகளுக்கு வேலை இல்லாத நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் நீக்க அரசாங்கம் உடனடியாகத் திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். கவர்னர் பெருமான் உரையிலே முக்கியமான பல அம்சங்கள் குறிப்பிடப்படாததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**SRI J. MATHA GOWDER:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு தொடர் கூட்டத்திலே கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்தியிருக்கும் உரையை முழு மனதோடு ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த

[Sri J. Matha Gowder] [20th January 1961

மாநிலம் எவ்வளவு சாதிக்கவேண்டுமென்று சொன்னதோ அதைவிட உயர்வாகச் சாதிப்பதற்கு முடியும் என்ற தோரணையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் துறையில் எடுத்தாலும், சர்க்கார் போட்ட திட்டத்தைவிட அதிகமாக திட்டத்தை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, என்று அவர் சொல்வது எதைக் குறிக்கிறது என்றால், நம்முடைய அமைச்சரவையின் சாமார்த்தியத்தைக் காண்பிக்கிறது. நம்முடைய அமைச்சரவைக்கு, சொல்லாமலே வேலை செய்யக்கூடிய திறன் இருக்கிறது. வெளியிலே நாங்கள் செய்கிறோம் என்று பெருமை அடித்துக்கொள்ளாமல், செய்யக்கூடிய காரியத்தை அவர்கள் நமக்குச் சொல்வதற்குப் பதிலாக சொல்லாமலேயே எவ்வளவோ காரியங்களை அதிகமாகச் செய்திருக்கிறார்கள் என்றால் உண்மையை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த மாதம் இங்கிலாந்து தேசத்தினுடைய இராணியார் நம்முடைய நாட்டுக்கு குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யப்போகிறார் என்பதைப் பெருமையோடு அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். அந்தப் பெருமை எதைக் குறிக்கிறது என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய பண்பாட்டைக் குறிக்கிறது. இந்த நாட்டு மக்களையும், இந்த நாட்டையும் அடிமைப்படுத்தியிருந்தாலும்கூட, அடிமைப்படுத்தியவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளிச் சென்ற பிறகு, நம்முடைய சகோதரர்களாக, நம்முடைய நண்பர்களாக அவர்களைப் பாவிக்கவேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு நாம் அவர்களை வரவேற்கிறோம். வரவேற்கும்போது நாம் அவரை மிகச் சிறப்புடன் வரவேற்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அவர் குறிப்பிட்டிருக்கும் இந்தக் குறிப்பிலே, நெய்வேலித் திட்டத்துடன் இணைந்துள்ள மின்சார நிலையம், உரத் தொழிற்சாலை, பிரிக்கெட்டிங் தொழிற்சாலை, களி மண் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆகிய திட்டங்களில் எல்லாம் வேலை திருப்திகரமாய் நடந்தேறி வருகிறது என்று சொல்லியிருக்கிறார். குறிப்பாக, உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஏற்படப்போவது சம்பந்தமாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அந்தத் தொழிற்சாலையை நீலகிரி ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டும் என்பதைப்பற்றிச் சர்க்காரும் சொல்லிக்கொண்டு இருந்தது. நாங்களும் சொல்லியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக, அதற்கான நிலத்தில், “சைட் பார் பிலிம் பாக்டரி” என்று போர்டு போடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வேலை துரிதமாக நடைபெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் திட்டமாகச் சொல்லவேண்டும். அந்தத் தொழிற்சாலையை அங்கு உடனடியாக ஏற்படுத்திவிடவேண்டும். வேறு எந்தத் தொழிற்சாலையையும் அமைப்பதற்கு நீலகிரி ஜில்லாவின் சீதோஷ்ண ஸ்திதி அமையாததால், அங்கிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமானால், இதைப்போன்ற தொழில்கள்தான் அங்கு இருக்கும் வேலை



20th January 1961] [Sri J. Matha Gowder]

வாய்ப்புக்களை ஏற்படுத்தமுடியும் என்று சொல்லிக்கொள்கின்றேன். அதை அங்கு ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அரவங்காட்டில் இருக்கும் தொழிற்சாலையில் நீலகிரி ஜில்லா வாசிகளுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்காமல், இதர ஜில்லா, இதர ராஜ்யங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் அதிகமாக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், மத்திய சர்க்கார் அதை நிர்வகிக்கும் காரணத்தால் அங்குள்ள அதிகாரிகளைச் சரியானபடி அணுக முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைச் சர்க்கார் ஆலோசித்து, கச்சா பிலிம் தொழிற்சாலையில் நீலகிரி ஜில்லா மக்களுக்கு அதிகமான விகிதாசாரத்தில் வேலை கொடுக்கும்படியாக சர்க்கார் திட்டவட்டமாக முடிவுக்கு வரவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அங்கு இருக்கக்கூடிய மக்கள் வேறு துறையில் எந்தத் தொழிற்சாலையையும் ஏற்படுத்துவதற்கு முடியாமல் இருக்கிற காரணத்தினால் இப்படிச் சொல்கிறேனே தவிர வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வரக்கூடாது. வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை. நிச்சயமாக அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு இருக்கக்கூடிய மக்கள் பெரும்பாலும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மாநிலம் முழுவதற்குமாக ஒரு திட்டம் வகுக்கவேண்டும். அவர்களை முற்போக்குக்குக் கொண்டுவருவதற்கு என்ன என்ன செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். அதை இதுவரையில் எல்லா மாநில அளவிலும் செய்தார்களா என்பதைப் பார்க்கும்போது அவ்வளவாகச் செய்யவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட சமூகம் முன்னேறவேண்டும். இன்றைக்கு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் பார்க்கும்போது இனி அடுத்த ஆண்டில் இருந்து ஏழை பணக்காரன் என்ற அடிப்படையில் ஏழை மாணவர்களுக்கு மாத்திரம் இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யப்படும், சாதி அடிப்படையில் இருக்காது என்றார்கள். சாதி ஒழியவேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் கல்வியிலே பின் தங்கியிருக்கிற மக்களுக்குக் கொடுத்திருக்கக் கூடிய சலுகைகளைப் பறித்துவிடாமல் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்துகிறேன். பின்தங்கிய சமூகத்தினரைப் பொறுத்தவரையில்—சாதி அடிப்படையிலோ அல்லது ஜில்லா அடிப்படையிலோ அல்லது தாலுக்கா அடிப்படையிலோ இந்தச் சலுகை இருந்துகொண்டிருக்கவேண்டும். அப்படியின்றி பிற்பட்ட சமூகத்தினரையும் இதர சமூகத்தினரைப்போலவே ஒன்றாக வைத்து ஏழை பணக்காரன் என்ற அடிப்படையில் பார்ப்பது என்றால் இதனால் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இன்றைக்கு பிற்பட்ட சமூகத்தினருக்கு

நாம் கொடுத்து வருகிற சலுகைகள் எந்தவகையிலும் பாதிக்கப் படாமல் இவ்விஷயம் கவனிக்கப்படவேண்டுமென்று பணிவன்புடன் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில்—மாநிலம் மாத்திரம் அல்ல—அகில இந்தியாவிலேயே சிறிய தேயிலை உற்பத்தி செய்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு பலவிதமான வரியினால் சொல்லமுடியாத கஷ்டம் உண்டாகிறது. அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் ஒன்று, வருமான வரி இரண்டு, கலால் வரி மூன்று, விற்பனை வரி நான்கு என்று பல வரியினால் அவர்கள் கஷ்டம் அடைகிறார்கள். இன்றைக்குக் கேள்வி நேரத்தின்போதுகூட நான் கேட்டிருந்தேன். தேயிலைக்குக் கலால் வரியைச் சேர்ந்துவிடவேண்டுமென்று கேட்டோம். அஸ்ஸாம் மாகாணத்தவர்கள் எதிர்க்கிறார்கள் என்று மத்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்றார்கள். இந்த மாநிலத்தின் பணம் எல்லாம் இந்த மாநிலத்திற்கு வராமல் வெளியே போகிறது. பெரிய தேயிலைத் தோட்டக்காரர்கள் இங்கே விற்பது இல்லை. இங்கே விற்பனை வரியும் அவர்கள் கொடுப்பது இல்லை, சிறிய தேயிலை உற்பத்தி செய்கின்றவர்கள் தான் இந்த மாநிலத்தின் விற்பனை வரி கட்டுகிறார்கள். கலால் வரியோடு இணைத்துவிட்டோமானால் ஒரு பைசா என்றால்கூட பல கோடிக் கணக்கான ரூபாய் வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதேசமயத்தில் சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ஏகப்பட்ட கணக்கு வைத்துக்கொள்ளவேண்டிய தொல்லை இல்லாமல் போகும். ஆகவே இதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. நீலகிரியை எடுத்துக்கொண்டால் ரோடுகள் எல்லாம் மோசமாக இருக்கிறது. இந்த ரோடுகளைப் பற்றி சட்டமன்றத்திற்கு நான் வந்த நாள் முதற்கொண்டு சொல்லி வருகிறேன். நீலகிரி ஜில்லா ரோடுகளுக்கும், சமவெளிப் பிரதேச ரோடுகளுக்கும் அதிகமான வித்தியாசம் உண்டு. இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் இருந்தால் சமவெளிப் பிரதேசத்தில் ஒரு மைல் ரோடு போடலாம். ஆனால் நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஒரு பர்லாங்குகூடப் போட முடியாது. அப்படி இருக்க ஜனத்தொகை அடிப்படையில்—பர்காபிடா முறையில் நீலகிரி ஜில்லா ரோடுகளுக்காக மற்ற மாகாணங்களோடு சேர்த்து வைத்து பணம் ஒதுக்கினால் அங்கே எந்த ரோடும் போட முடியாது. இதனால் அந்த ரோடுகள் எந்தக் காலத்தில் முன்னேறும் என்றே எனக்குத் தெரியவில்லை. இதை அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறேன். எந்த நிலையை எடுத்துக் கொண்டாலும் பர்காபிடா முறைப்படி நீலகிரி ஜில்லாவுக்கு ஒதுக்குவது என்றால் அந்த ஜில்லா எந்தக்காலத்தும் அபிவிருத்தி அடைய முடியாது. சாதாரணமாக சமவெளிப் பிரதேசத்தில் மண் ரோடோ, கப்பி ரோடோ போட்டுவிட்டால் அது நிற்கும் என்று நினைக்கிறேன். ஆனால் நீலகிரி ஜில்லாவில் போட்ட மறுநாளோ ஒரு மழை அடித்தால் போதும். ரோடு



இருக்கிற இடம் தெரியாமல் அடித்துக்கொண்டு போய்விடும். மக்களுடைய பணமும் நஷ்டம். சர்க்காருடைய பணமும் நஷ்டம். ஆகவே தகுந்தமுறையில் நீலகிரி ஜில்லா ரோடுகளைப் போடுவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும், பர்காபிடா முறையை அந்த ஜில்லாவைப் பொறுத்தவரையில் கையாளக் கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தனியாகவே திட்டம் போடவேண்டும். ஒவ்வொரு தாலுக்கா வாரியாக எடுத்து, பிர்க்கா வாரியாக எடுத்து, பஞ்சாயத்து யுனியன் மூலமாகத் தார் ரோடு போடவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தி எல்லா ரோடுகளுக்கும் தார் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூலதனப் பொருள்கள் அங்கே இருக்கின்றன. நீலகிரியில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது மிகவும் நியாயமாகும். அதுதான் தர்மம் என்று சொல்லிக்கொண்டு அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு—தனியார் துறையிலோ—சர்க்கார் துறையிலோ—முயற்சி செய்யவேண்டும்.

மேலும் களிமண் உற்பத்தி பற்றி பேசப்பட்டது. அதற்காக சில கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சுத்திகரிக்கப்படுகிற களிமண் சமவெளி பிரதேசத்திற்குக் கொண்டுவரப்பட்டு—இங்கே தொழிற்சாலையை நிறுவ ஏற்பாடு செய்வார்களோ என்ற ஐயம் இருக்கிறது. அதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்வதாக இருந்தால் அதைக் கைவிட வேண்டும். முக்கியமாக அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க அங்கேயே தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக காதி போர்டு ஏற்படுத்தி அதன் காரணமாக வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் ஆபீசர்கள் என்று இருந்தவர்களை நீக்கிவிட்டார்கள். அதன் காரணமாக இன்றைக்கு நீலகிரி ஜில்லாவில் கிராம சிறுதொழில் அதிகாரிகள் நீக்கப்பட்டார்கள். அதேசமயம் காதி போர்டு அதிகாரி யாரும் தனியாக அந்த ஜில்லாவுக்குக் கிடையாது. நீலகிரி ஜில்லாவை கோவை மாவட்டத்தோடு சேர்த்து, கோவையில் தலைமைக் காரியாலயம் என்றும் அங்கிருந்து அதிகாரி நீலகிரி மாவட்டத்திற்கு வந்து கவனித்துக்கொள்ளவேண்டும் என்றும் செய்திருக்கிறார்கள். இது அவ்வளவு நியாயமான ஏற்பாடா என்று தெரியவில்லை. நீலகிரி ஜில்லா பலவகையிலும் பிற்போக்காக இருக்கிறது. இப்போதுதான் அங்கே என்ன என்ன சிறு தொழில்களை ஏற்படுத்தலாம் என்று யோசிக்கப்பட்டு வருகிறது. அது ஒரு சிறிய ஜில்லாவாக இருக்கலாம் என்றாலும் அது ஒரு ஜில்லா என்ற கண்ணோட்டத்தோடு எதையும் பார்க்கவேண்டும். "நீலகிரி ஜில்லாதானே, கோவை ஜில்லாவில் ஒரு தாலுக்கா போன்றது" என்கிற மனப்பான்மை கூடாது. அது ஒரு சிறிய தாலுக்கா மாதிரியாக இருந்தாலும் இந்த மாநிலத்திலேயே புகழ்பெற்ற சுகவாசஸ்தலம் என்ற புகழை நமக்கு அளித்து வருகிறது. ஆகையால் அந்த ஜில்லாவையும் மற்ற ஜில்லாக்களைப்போல சம அந்தஸ்துடன்

கவனித்து—ஜில்லா அதிகாரிகள் நியமனத்திலிருந்து மற்ற எல்லா விஷயங்களிலும் ஒரேமாதிரியாக நடத்தவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

12 noon. கடைசியாக, அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு "ஹில்" அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இதற்கு முன்பெல்லாம் எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால் உபாத்தியாயர்களின் அடிப்படைச் சம்பளத்தில் பாதியை மலைவாச அலவன்ஸ் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று திருத்தியமைக்கப்பட்ட சம்பள அடிப்படையில் அவர்களுக்கு எந்த அடிப்படையில் ஹில் அலவன்ஸ் நீங்கள் கொடுக்கப்போகிறீர்கள் என்று புரியாமல் திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதத்தில் ஹில் அலவன்ஸ் அவர்களுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், சர்க்கார் முடிவு எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அடிப்படைச் சம்பளத்தை ஏன் அதிகரித்தோம் என்றால் சம்பளம் குறைவாக இருக்கிறது என்று அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிலையில் அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் பாதியை மலைவாச அலவன்சாக கொடுக்கவேண்டுமென்றும், அதற்கான உத்தரவுகளை உடனடியாக போடவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு நான் எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*** Sri V. K. KOTHANDARAMAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமக்கு முன்னால் இருக்கக்கூடிய கவர்னர் அவர்கள் உரை மீது வழக்கம் போல் வந்திருக்கக்கூடிய உரை மீது நாங்களும் வழக்கம் போல் பதில் சொல்லக்கூடிய ஒரு நிலைக்கு வருந்துகிறேன். இந்த உரையில் பல அம்சங்கள் நல்லது என்று இருந்த போதிலும்கூட உண்மையில் இன்று பொது மக்கள் பல ஆண்டு காலமாக, வாழ்க்கைத் தரத்தையொட்டி விலைவாசி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வரக்கூடிய இந்த நிலையில், நாங்கள் ஏதோ விலைவாசி நிர்ணயம் செய்யப் போகிறோம் என்பதுபற்றி இந்த ஆண்டு ஏற்றுக் கொண்டிருப்பதைப் பற்றியாவது நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் விலைவாசி நிர்ணயம் செய்ய வேண்டுமென்பது பற்றி இதுவரை எதிர்க்கட்சியினர் சொல்கிறார்களேயொழிய, ஆனால் இதுவரையில் திட்டவட்டமான சரியான ஒரு திட்டத்தை கொடுக்கவில்லை என்று சொல்லி கவர்னர் அவர்கள் உரையை ஆதரித்துப் பேசிய கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் எடுத்துக்கூறினார்கள். நான் அவருக்கு தங்கள் மூலமாக சொல்ல ஆசைப்படுகிறேன், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பலமுறை திட்டங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன, அதை அமைச்சர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் அல்லது அதிகாரிகளிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அதேபோல் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் விலைவாசிகளை கட்டுப்படுத்தவேண்டுமென்பது பற்றி ஒரு ஆண்டு காலத்திற்கு முன்னால் நடத்திய கிளர்ச்சியின் போதுகூட அதற்கான திட்டங்கள் கொடுக்கப்பட்டது என்பதை நான் இங்கு சொல்லிக்



கொள்ள ஆசைப்படுகிறேன். இதுவரை கனம் அமைச்சர் அவர்கள், விலைவாசி சம்பளத்தை விரட்டுகிறது, சம்பள உயர்வு விலைவாசியை விரட்டுகிறது என்று எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்று அதை ஏற்றுக் கொள்ள முடியாது நிலையில் இருந்து இப்போதாவது விலைவாசிகளை கட்டுப்படுத்த வேண்டும் என்கிற அளவிற்கு வந்திருக்கிறார்கள். பத்து வருட காலத்திற்குப் பிறகு இந்த அளவிற்கு ஒரு முடிவிற்கு வந்திருந்தாலும் விலைவாசிகளை கட்டுப்படுத்துவதற்கு இன்னும் எத்தனை வருடங்கள் பிடிக்கும் என்பதாவது திட்டவட்டமாக தெரிய வேண்டும். இதைச் சொல்லி விட்டால் விலைவாசி குறைந்து விடுமென்று சொல்லிவிட முடியாது. குறிப்பாக இன்று நம்மிடம் கொடுத்திருக்கக்கூடிய விலைவாசிகளின் ஒரு லிஸ்ட்டில், சென்னை நகரத்தில் எந்தளவு இருக்கிறது என்றால், அதைப் பார்த்தால் தெரியும். ஜனவரி 1960-ல் 441 புள்ளியாக இருந்தது, டிசம்பரில் 488 புள்ளியாக மாறியிருக்கிறது. அதேபோன்று ரீட்டேல் ப்ரைசஸ்-யை எடுத்துக்கொண்டால் விறகு முதற்கொண்டு உணவுப் பண்டங்கள் வரை அளவு கடந்து விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. மாதத்திற்கு மாதம், வருடத்திற்கு வருடம் விலைவாசி உயர்ந்து கொண்டே போகக்கூடிய இந்த நேரத்தில், திட்டவட்டமாக இத்தனை மாதங்களுக்குள் நாங்கள் செய்யப் போகிறோம், அதற்கு வேண்டி ஒரு கமிட்டி அமைக்கப் போகிறோம் என்பதுபற்றி நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்று தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அது எங்கள் கையில் இல்லை என்று. அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது என்று சொல்லி காலம் கடத்துவதற்காகக்கூட சொல்லலாம் என்று நினைக்கிறேன். விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகுமானால், மனிதனின் வாழ்க்கை எந்தளவு பாதிக்கப்படும் என்பதை சிந்தித்துப் பார்த்து தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோன்றுதான் இன்று பத்தாவது வரையில் இலவசமாக சம்பளம் இல்லாமல் படிக்க வைக்கப்போகிறோம் அதற்காக சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்று வேலூரில் காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது முதலமைச்சர் அவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆனால் அது பற்றி இந்த உரையில் ஒன்றுமே கிடையாது. ஆனால் தேர்தல் சமீபத்தில் ஒரு வேளை வெளியிட்டாலும் வெளியிடலாம் என்று நினைக்கிறேன். அதேபோன்று இன்று கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர், வீணாகப் போகக்கூடிய தண்ணீரை பாலாற்றில் கொண்டு வருவதற்காக வேண்டி வருடக்கணக்கில் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டேயிருக்கிறது. வருடக்கணக்கில் பதில் சொல்லக்கூடிய நிலையில் அதை நமக்கு நம் உபயோகத்திற்குக் கொண்டுவர என்ன தீவிரமான முயற்சி எடுக்கப்பட்டது? அது பற்றிய பேச்சே கிடையாது. பின், இந்த ராஜ்யத்திற்கு தமிழ் நாடு ராஜ்யம் என்று வைக்க வேண்டுமென்று கேட்டால், சென்னை என்பதற்கு எவ்வளவு மதிப்புடையதாக இருக்கிறது, மெட்ராஸ்

என்ற பெயரை எடுத்து விடலாமா என்று சொல்லக்கூடிய ஒரு வாதம் இருக்கிறது. இன்று பம்பாயைவிட சென்னைக்கு மதிப்பா, கல்கத்தாவைவிட சென்னைக்கு மதிப்பா, எல்லாவற்றிற்கும் மதிப்பு இருக்கிறது. அப்படியிருந்தும், கல்கத்தா ராஜ்யம் என்று அங்கே பெயர் வைக்கவில்லை, பம்பாய் ராஜ்யம் என்று வைக்கவில்லை. ஆகவே, சென்னை ராஜ்யம் என்பதை மாற்றி தமிழர்கள் வசிக்கக்கூடிய இந்த ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்குப் பதிலாக இன்று காலம் கடத்தி ஒருவேளை தேர்தலுக்கு முன்னால் வைப்பதாக இருந்தாலும் சொல்லிவிட்டால் போதுமானது. கட்டிடத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடிய அளவிற்கு அமைச்சர்கள் மனம் செலுத்தக்கூடிய இந்நேரத்தில் இந்த ராஜ்யத்திற்கு ஏன் அப்படி பெயர் வைக்கக்கூடாது? சென்னை என்பதை மாற்றி விடு என்று கேட்கவில்லை. சென்னை ராஜ்யம் என்று பெயரைத்தான் மாற்றும்படி மக்கள் கேட்கிறார்களே தவிர சென்னை என்ற பெயரை மாற்றிவிடவேண்டுமென்று யாரும் கோரவில்லை. அதேபோல் அரசியல் கைதிகள், 1948-லேயே கைது செய்யப்பட்டு இன்று பத்து, பனிரெண்டு ஆண்டுகளாக அவர்கள் ஜெயிலில் இருந்து வருகிறார்கள். அந்த கைதிகளுக்கு பிறகு தண்டனை அடைந்தவர்களையெல்லாம் சமீபத்தில் பெப்ரவரி அல்லது மார்ச்சில் விடுதலை செய்யக்கூடிய அளவு உத்தரவு பிறப்பித்திருக்கக்கூடிய சர்க்கார் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஏன் தயங்குகிறார்கள் என்பது நமக்கு புரியவில்லை. பக்கத்திலுள்ள ஆந்திர ராஜ்யம், மற்ற ராஜ்யங்களில் ஜன்ம தண்டனை அடைந்த அரசியல் கைதிகள் உட்பட மற்ற கைதிகளை விடுதலை செய்யும் அளவு நிலை இருக்கும்போது இங்கு அவர்களை விடுதலை செய்யத் தயங்குகிறார்கள் என்று சொன்னால் அரசியல் நோக்கத்தோடு இன்று எதிர்க் கட்சிகளை நசுக்க வேண்டும் அவர்களை பழி வாங்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடுதான் விடுதலை செய்வதற்கு பின் வாங்குகிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, குடியரசு தினமாகிய 26-ம் தேதியிலாவது அவர்களை விடுதலை செய்யவேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்பது பற்றி இதில் ஒன்றுமேயில்லையே என்று அறிய வருத்தப்படுகிறேன். அடுத்தபடியாக, உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வரவேற்கிறோம். அதற்காக, நவீனக் கருவிகளை அதிகப்படியாக நாம் கொடுத்து உதவி செய்யவேண்டும். அதிகப்படியாக உரம் கொடுத்து உதவி செய்யவேண்டும். இன்று விநியோகம் செய்யக்கூடிய அரைகுறை உரம்கூட, 39, 40 ரூபாய் என்று கண்ட்ரோல் ரேட் இருந்தபோதிலும் கள்ள மார்க்கட் ரேட்டிலேயே இன்று வாங்கும் நிலையிருக்கிறது. கள்ள மார்க்கட்டில் விற்பனை செய்யக்கூடிய அளவு கலப்படம் செய்து விற்பதற்குரிய நிலையிருக்கிறது. இதில் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா? இதைக் கேட்டால் காலையில் உணவு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது எல்லாவற்றிலும் கல்ப்படம் செய்வது போல் இதிலும் கலப்படம் செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். உணவில் கலப்படம்



செய்து சிலர் இறந்து விட்டார்கள் என்பதற்காக அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கும்போது மக்களை கொலை செய்யக்கூடிய அளவு உற்பத்தி செய்ய முடியாது களறு பூமியாக செய்யக்கூடியது போன்ற மோசமான போக்கை கண்டித்து இதைத் தடுக்க ஏதாவது சட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் ஏதோ ஐந்து அல்லது பத்து ரூபாய் அபராதம் விதிக்க முடியுமே தவிர ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் கம்பி எண்ணக் கூடிய அளவிற்கு அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவு ஒன்றுமே கிடையாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எந்தெந்த ஜில்லாவில், யார் யார் பேரில் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவே முடியாது. ஆகவே தான் இதைப் பற்றி கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தான் நமது ராஜ்யத்தில் ஆற்றங்கரையோரமாக ஆராய்ச்சி செய்ததாகவும், அதில் எண்ணெய் வளம் அதிகமாக நிறைந்திருப்பதாகவும் சொல்லப்பட்டது. இதற்கான நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப் போகிறார்கள், இந்தத் திட்டத்தின் விவரம் என்ன என்பதைப்பற்றி ஒன்றும் இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதே போன்று தான் கிராமத்திற்கு கிராமம் ரோடுகளின் நிலைமை எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்போமேயானால், மிகவும் மோசமான நிலைமையில் இருந்து வருவதைத்தான் நாம் பார்க்க முடியும். ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிற குறுகிய ரோடுகளில் நீளமானதும் அகலம் கூடியதுமான பஸ்கள் போய்க்கொண்டிருப்பதின் காரணமாகத் தான் பலவிதமான ஆக்ஸிடன்ட்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். அதோடு ரோடு வசதி செய்து கொடுப்பதில் சர்க்கார் அதிகாரிகள் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கின்ற நிலைமையையும் நாம் பார்க்கின்றோம். உதாரணமாக குடியாத்தம் தாலுகாவில் ஒரு கிராமத்தில் அங்குள்ள விவசாயிகள் தங்களுக்கு ரோடு போட வேண்டும், அதற்கான பணம் கொடுக்கிறோம் என்று முன் வந்தும் கூட அதற்கான இடத்தை அக்கெவயர் பண்ணுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாக தெரியவில்லை. காரணம் நூற்றுக் கணக்கில் நிலங்களை வைத்துக்கொண்டிருக்கின்ற பெரிய நிலப் பிரபுகள் காங்கிரஸ்காரர்களுடைய உதவியைப் பெற்று நிலங்களை கொடுப்பதற்கு காலங்கடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையைத்தான் நம்மால் பார்க்க முடிகிறது. குறிப்பாக மாச்சம்பட்டி என்ற கிராமத்திற்கு ரோடு வசதி செய்து தர வேண்டும் என்று கோரி 10, 15 வருடங்கள் ஆகின்றன. அதே போன்றுதான் அரவட்லா என்ற கிராமம் மலைப்பிரதேசத்தில் இருக்கிறது. விறகுகளை கொண்டு போவதற்கு மட்டும் லாரி போவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மற்றுமுள்ள துணிமணிகள் இவைகளை எல்லாம் கொண்டு போவதற்கு

ரோடு வசதி கிடையாது. அவர்களுக்கு தேவையானப் பொருட்களை எல்லாம் கழுதை மீது ஏற்றிக்கொண்டு போகக்கூடிய நிலைமைதான் இப்போதும் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். ஆகவே அந்த கிராமத்திற்கு தேவையான ரோட்டை உடனடியாக போட்டுக்கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, தொழிற்சாலைகள் ஏற்படுத்துகின்ற விஷயத்தில், ஒரு பக்கத்தில் என்னென்ன தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம் பார்த்தீர்களா என்றெல்லாம் சொல்லக்கூடிய நேரத்தில், மற்றொரு பக்கத்தில் எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன, அதை திறந்து வைப்பதற்கு எந்த விதமான சட்டத்தையும் கொண்டு வராமல் இருக்கிறார்கள். திறந்து இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடாமல் பார்த்துக்கொள்வதற்கு என்ன திட்டங்கள் இதுவரையில் போடப்பட்டிருக்கிறது? இதை இந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களுடைய ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதைப்போன்று அரிஜனங்களுடைய வீட்டை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு சிறிய வீட்டிலும் எழெட்டு குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வீடுகட்டி கொடுப்பதில், மனைக்கட்டுகள் கொடுப்பதில் வருஷக் கணக்கில் காலதாமதம் ஆகிறது, என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில இடங்களில் இதற்காக 10, 15 வருடங்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், சில இடங்களில் இதற்கான பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் கூட விரைவான நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக தெரியவில்லை. அதே போன்று தான் விவசாயிகளுக்கென்றும், பீடித் தொழிலாளர்களுக்கென்றும் பலவிதமான சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்கிறோம். அதே சமயத்தில் இந்தச் சட்டங்கள் எல்லாம் எந்த நிலையில் அமல் நடத்தப்படுகிறது என்பதைப்பார்த்தால், மிகவும் மோசமான நிலையில் தான் இருந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆகவே தான் இம்மாதிரிப்பட்ட சட்டங்களை எல்லாம் நல்ல முறையில் அமல் படுத்தக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புன்றேன். அதே போன்று கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் பேசக்கூடிய நேரத்தில், தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி தேர்தல் நேரேத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் சூதாட்டக் காயாக பயன்படுத்துகிறார்கள் என்று கூறி அதற்காக ஒரு கதையையும் சொன்னார்கள். சாவித்திரி தன்னுடைய கணவன் இறந்து போனபோது, கணவனை திரும்ப பெறுவதற்கு யமதர்மராஜாவை ஏமாற்றி பிள்ளைவரம் வாங்கியதாகவும், அதன் மூலம் தன்னுடைய் கணவனை திரும்ப அடைந்ததாகவும் தெரிவித்தார்கள். அதே போன்று தூத்துக்குடி துறைமுகத்தை இந்த அமைச்சர்களால் கேட்டுப்பார்த்தும் கிடைக்காத காரணத்தினால், இதைப்பற்றி மத்திய அரசாங்கத்தினிடத்தில்,





தேர்தல் வருகின்ற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களின் பிரச்சாரத்தை எல்லாம் எடுத்துச் சொல்லி யமதர்ம ராஜாவை இருக்கக்கூடிய பிரதம மந்திரி நேருஜியிடம் போய் இப்போது தூத்துக்குடி துறைமுகத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் அதை ஒப்பிட்டு இந்த கதையைச் சொல்வதாகவும் தெரிவித்தார்கள். உண்மையாகவே எதிர்கட்சியினர் இதற்காக நடத்தின தீவிரமான பிரச்சாரத்தின் மூலமாகவும் எதிர்கட்சியினர் நடத்திய கிளர்ச்சியின் காரணமாகவும் இப்போது இந்தத் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் கொண்டு வரப்பட்டதே தவிர மற்றபடி இவர்களாகவே கொண்டு வந்துவிடவில்லை. அதல்லாமல் தேர்தல் நேரத்திற்கு என்று சூதாட்டக் காயாக இதைப் பயன்படுத்துகிறார்கள் எதிர்கட்சிக்காரர்கள் என்று சொல்வது எல்லாம் தங்களைத்தானே ஏமாற்றிக்கொள்வதாகத்தான் இருக்கும் என்பதை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இதில் பாகுபாடு இல்லாமல் ஆளும்கட்சி, எதிர்கட்சி என்று பார்க்காமல், எந்தெந்த ஜில்லாக்களுக்கு, எந்தெந்த தாலூக்காக்களுக்கு உடனடியாக என்னென்ன செய்யவேண்டும் என்பதை ஆலோசித்துப் பார்த்து அதில் தீவிரமான முறையில் கவனம் செலுத்தி திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். அதல்லாமல், இந்தக் காரியத்தை நீங்கள் செய்யவில்லை, நாங்கள்தான் செய்தோம், என்றெல்லாம் சொல்லி அதற்காக கதைகளையும் சொல்லிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான நன்மையும் இல்லை. அவ்விதம் கதை சொல்வது என்றால் எங்களுக்கும் எவ்வளவோ கதைகளை சொல்லிக்கொண்டிருக்கலாம், என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, பல ஆசுபத்திரிகள் திறக்கப்படுகின்றன. பல ஆசுபத்திரிகள் அபிவிருத்திச் செய்யப்படுகின்றன. அதைப்பார்த்து நாங்கள் பெருமைப்படுகிறோம். ஆனால் நாம் முக்கியமாக ஆசுபத்திரிகளை பெருக்குவதின் நோக்கம் நமது நாட்டில் வாழ்கின்ற மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதுதான். அதே சமயத்தில் நாம் நல்ல முறையில் சுகாதாரத்தை பாதுகாத்துக்கொண்டால் ஆசுபத்திரிகளை அதிகப்படுத்த வேண்டிய அவசியமே இராது. ஆகவே இன்றைக்கு ஒவ்வொரு நகரசபையிலும் ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டுகளிலும் நல்ல முறையில் சுகாதாரத்தைப் பாதுகாக்கக்கூடிய அளவில் சாக்கடைத் திட்டங்களை தீட்டவும், குடிதண்ணீர் வசதிகளை பெருக்குவதற்குரிய வழிவகைகளை செய்யவும் வேண்டும். அவ்விதம் ஏற்படுத்தினால் அதிகப்படியான அளவில் ஆசுபத்திரிகளை திறக்கவேண்டிய அவசியமேற்படாது. அதே நரேத்தில் இந்த ராஜ்யத்தில் பல இடங்களிலும் டி. பி. வியாதியும், குஷ்ட ரோகமும் பரவிக்கொண்டிருக்கிறது. டி. பி. நோயை எடுத்துக்கொண்டால் இதன் மூலம் 50 லட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளிவிவரங்கள் கொடுக்கிறார்கள். அதே போன்று குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களும் 5 லட்சம் முதல் 10 லட்சம் பேர் வரை இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதை தடுக்கவேண்டுமானால் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டு

வருகிறது. இதைப்பற்றி நமது மெடிகல் மினிஸ்டர் அவர்கள் ஆயிரம் பேருக்கு ஐந்து பேர்கள் வரை அறுவை சிகிச்சை செய்து கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். சீப் செக்ரட்டரி அவர்கள் இதன் மூலம் மொத்தமாக ஒரு லட்சம் பேர்கள் தான் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் சொல்லுகின்ற யோசனை என்னவென்றால், இலவசமாக கட்டாய அறுவை சிகிச்சை முறை கொண்டுவர வேண்டும். அப்போது பணம் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை, அதன் மூலமாக பெருவாரியான அளவில் மக்கள் பயனடைவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே இதற்கு தகுந்த முறையில் ஒரு திட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, வெகுவிரைவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும், உயர்ந்து கொண்டே போகும் விலைவாசிகளை கட்டுப்படுத்த வேண்டும், இந்த ராஜ்யத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயரிட வேண்டும், பீடித் தொழிலாளர்கள் சட்டத்தை உடனடியாக நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டும், இப்படிப்பட்ட காரியங்களில் எல்லாம் தகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI T. KARIA GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நேற்று நிகழ்த்திய உரையை உத்தேசித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஆரம்பத்திலே, எலிஸபெத் ராணி அவர்கள் இந்த நாட்டுக்கு விஜயம் செய்யப்போகிறார்கள், அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டை நம்மிடம் ஒப்புவித்துவிட்டுப் போன அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது அவசியம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் பலர் நிதி அமைச்சர் அவர்களை இங்கேயிருந்து டில்லிக்கு அனுப்பிவிட வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்—அம்மாதிரிப் பேசப்பட்டது. நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாகாணத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவில்லை என்ற காரணத்தையொட்டி ஏதாவது சொன்னார்களா, அல்லது அங்கே சென்று நமக்குப் பெறவேண்டிய பங்கைச் சரிவரப் பெறுவதற்காக அம்மாதிரிச் சொன்னார்களா என்று தெரியவில்லை. ஏதோ சந்தேகத்தோடு பேசினார்கள் என்று நினைக்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் சொல்லும்போது, நமது மாநிலத்திற்குப் பெறவேண்டிய பங்கைப் பெற்றார்களா இல்லையா என்பதை விளக்கமாகச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை அமைச்சர்கள் பார்க்கவில்லை என்று கூட குற்றம் சாட்டப்பட்டது. நாம் பத்திரிக்கையில் பார்த்தோம்—சென்ற ஒரு வாரத்தில் மழையால் பாதிக்கப்



பட்ட பகுதிகளை உள் நாட்டு அமைச்சர் அவர்கள் சென்று பார்த்திருக்கிறார்கள். எல்லா மந்திரிகளும் தீவிரமாகச் செய்தாலும், எல்லாப் பகுதிகளிலும் அமைச்சர்கள் ஒரே தடவையில் ஒன்றும் செய்துவிட முடியாது. முன்பு மழை பெய்யாதபோது, காங்கிரஸ் அரசாங்கம் வந்தது, மழை பெய்யவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. இப்போது மழை அதிகம் பெய்தபோதும் காங்கிரஸ் அரசாங்கம், மழை அதிகம் பெய்து பாழ் செய்கிறது என்று சொல்லுகிறார்கள். நமது சர்க்காரிலே என்ஜினீயர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் பழுது பார்க்க பல நாட்கள் ஆகும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு ரோடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் ஒன்றிரண்டு நாட்களில் பழுதுபார்த்துவிட முடியாது. பல நாட்கள் ஆகும் என்று தெரிந்திருந்தாலும் நண்பர்கள் குற்றம் சாட்டுகிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உர விநியோகத்தைப் பற்றிச் சொல்லப்பட்டது. இன்றைக்கு எங்கள் ஜில்லாவிலே ஒழுங்காக விநியோகிக்கப்படுகிறது என்பதை சந்தோஷத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். தனியார்கள் உர விநியோகம் செய்துகொண்டிருந்தபோது குற்றம் குறைகள் இருந்தன. அதைப் பற்றி நான் கூட இதே மன்றத்தில் பேசியது உண்டு. ஆனால் கூட்டுறவு முறையில் விவசாய இலாகாவினால் தற்போது சரிவர விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உரத்தில் கலப்படம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இங்கே பேசுவதைப் போலவே பேச்சு சுதந்திரம் இருக்கும் மேடைகளில் விநியோகம் செய்யக் கூடிய மக்கள் இம்மாதிரி கலப்படம் செய்யக் கூடாது என்று நண்பர்கள் அங்கேயும் கூடப் பேச வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உரத்தில் மட்டுமல்ல உணவில்கூட கலப்படம் செய்கிறார்கள். சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் அவர்கள் பேசுகின்றபோது பொது மேடைகளில் இந்த மாதிரியான தவறான பழக்கத்தை பொது மக்கள் கைவிடவேண்டுமென்று சொல்லுமாறு அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது திட்ட காலத்தில் உணவு உற்பத்தி பற்றி கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு 80 கோடி ரூபாய் செலவு செய்யப்போகிறார்கள். இப்படி 80 கோடி ரூபாய் செலவு செய்கிற முறையில் விவசாயத் துறையிலும் மற்ற துறைகளிலும் கூட சர்க்கார் தயங்காமல் மக்களுக்கு நன்மை செய்யும் துறையிலும் மற்ற துறைகளிலும் கூட சர்க்கார் தயங்காமல் மக்களுக்கு நன்மை செய்யும் முறையில் திட்டம் வகுத்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். மேலும், 3-வது திட்ட காலத்தில் திட்டக் குழுவும்கூட விவசாயத்திற்கு முதலிடம் அளித்திருக்கிறது. அந்த முறையில் 80 கோடி ரூபாய் ஒதுக்கி சரிவரப் பகிர்ந்து கொடுப்பதில் சர்க்கார் எவ்வளவு கவனம் செலுத்தவேண்டுமோ அவ்வளவு கவனம் செலுத்தியிருப்பதை

[Sri T. Karia Gounder] [20th January 1961

போலவே மக்களும் செலுத்தினால்தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பாசனத் திட்டங்களில் பரம்பிக்குளத் திட்டம் நிதி அமைச்சரைச் சேர்ந்தது. அவர்கள் ஊரில் செய்துவிட்டார்கள் என்றும் சொல்லுகிறார்கள். எனக்குக்கூட அதில் கொஞ்சம் குறை இருக்கிறது. இவ்வளவு தூரம் அதிகமாக ஆறுகளில் தண்ணீர் வந்து சேதம் ஏற்பட்டபோதிலும் எங்கள் பகுதியில் அதிர்ஷ்டவசமாக அதிகத் தண்ணீர் இல்லை. எங்களுடைய ஆற்றில்—பாலாற்றில்—தண்ணீர் வரவில்லை. செங்கல்பட்டு பகுதியில் மட்டிலும் 6 அடி வெள்ளம் போனதாகப் பார்த்தோம். எங்கள் பகுதியில் 3 அடித் தண்ணீர் தான் போனது. ஆகையால் வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை. சென்ற வருஷம் பாலாறு பேசின் திட்டத்தை சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்ததையொட்டி மூன்றாவது திட்டத்திலாவது பாலாற்றுக்கு விமோசனம் தேடவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையிலே பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்தத் திட்டங்களிலே பாலாறுத் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்திலே இன்னொரு கஷ்டம் இருக்கிறது. ஆங்கிலேயர் நாட்டை ஆண்ட காலத்தில்—1892-ல்—அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு திட்டம் தயார் செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் அந்தக் காலத்திலேயே கைவிடப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன் நீர்ப்பாசன இலாகா மீண்டும் நிறைவேற்றப் பார்த்தார்கள். ஆனால் வசதியில்லையென்று மீண்டும் கைவிடப்பட்டிருக்கிறது. திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தும் பாலாறு பேசின் ரூல்ஸ்—அதாவது கரையோரம் கிணறு வெட்டக் கூடாது, மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று—போட்டிருக்கிறார்கள். எங்களுக்கு மின்சாரம் 20 வருஷங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. மின்சாரத்தை விஸ்தரிப்பதில் சட்டம் குறுக்கே இருந்து தடை செய்துகொண்டிருக்கிறது. அது விஷயமாக கனம் மராமத்து இலாகா உயர் அதிகாரி பாலாறு பகுதிக்கு வந்து பார்த்து முடிவை சர்க்காருக்குச் சொல்லியிருக்கிறார்கள். கனம் மராமத்து அமைச்சர் அவர்கள் அதில் கவனம் செலுத்தி உத்தரவை மாறுதல் செய்தால் பல பகுதிகளில் மின்சாரத்தை உபயோகப்படுத்திக் கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கூட இந்த மின்சாரத் திட்டத்திலே சர்க்கார் அதிக கவனம் செலுத்தவில்லை என்று சொல்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எங்கள் பகுதியில் ஏறக்குறைய எங்கள் இரண்டு ஜில்லாக்களுக்கும்—வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கும் சேர்ந்து—மூன்று கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. வரப்போகும் திட்டத்திலே வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவார்கள் என்று நினைக்கின்றேன்.



20th January 1961] [Sri T. Karia Gounder]

நமக்குக் கிடைத்துள்ள 291 கோடி ரூபாயிலே ஏறக்குறைய 10 கோடி ரூபாய் எங்கள் பகுதிக்கு சர்க்கார் கொடுப்பார்களேயானால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே, அதாவது எங்கள் பகுதியில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்ய முடியுமென்பதைத் தைரியமாக சொல்ல முடியும். ஏறக்குறைய எங்கள் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் ஏற்கனவேயே கொடுத்தாகி விட்டது. சில கிராமங்களிலே போதிய சாமான்கள் இல்லாமல், போதிய உபகரணங்கள் கிடைக்காத காரணத்தினால் மின்சார சப்ளை தடைப்பட்டிருக்கின்றதே ஒழிய, மின்சாரம் கிடைக்காது என்ற நிலையில் இல்லை. மின்சார இலாகாவினருக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். 12.30 p.m.

பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் சிறிய பாசனத் திட்டங்களுக்காக சர்க்கார் ஒதுக்கியுள்ள பகுதியிலே, அப்பகுதியில் உள்ள உத்தியோகஸ்தர்கள் தீவிரமான கவனம் செலுத்துவார்களேயானால் நிச்சயமாக நாம் வெற்றி காணலாம் என்பதில் சந்தேகமில்லை. சில சமயங்களிலே ஒவ்வொரு அதிகாரியும் பார்த்துப் பார்த்து பேப்பர் வருவதற்கான பல ஆண்டுகள் தடைப்பட்டு விடுகின்றன. அதற்காக வேண்டி தீவிர நடவடிக்கைகள் எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரைத் தொழிலைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மூன்றாவது திட்டக் காலத்திலே 8 சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த அரசாங்கம் வகை செய்திருக்கிறார்கள். அதன்படி ஆம்பூரிலே கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது பொருளாதாரத் துறையில் நன்கு உயர, அங்குள்ள குடியானவர்களுக்கு நல்ல வசதி செய்து தர வேண்டும். அப்போதுதான் திட்டம் கைகூடும். இரண்டாவது திட்ட காலத்திலே 3 சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன. அப்படி ஆரம்பிக்கப்பட்டிருந்தும், சர்க்கரை விநியோகத்தில் தடை இருப்பதாக பேசப்படுகிறது. இப்போது அவ்விதத் தடை ஒன்றுமில்லை. காரணம் என்னவென்றால், நம் நாட்டிலேயிருந்து 3 திட்டக் காலத்திலே 15 லட்சம் டன் சர்க்கரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டக் காலத்திலே திருவண்ணாமலைப் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை ஏற்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் தாலுகாக்களாகிய திருப்பத்தூர், குடியாத்தம், வேலூர் ஆகிய பகுதிகளுக்கு ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டால், அதற்குத் தேவையான 6 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலம் தேவைப்படுகிறது என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். இப்போது இந்த ஆண்டிலே மட்டும் 22 ஆயிரம் ஏக்கர் நிலம் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டு, வெளிநாட்டுச் செலாவணி அதிகரிப்பு பயன்

[Sri T. Karia Gounder] [20th January 1961

அளிக்கும் என்பதை கருத்தில் கொண்டு, எங்கள் திருப்பத்தூர், குடியாத்தம், வேலூர் ஆகிய பகுதிக்கு ஒரு ஆலையை நிறுவனம் செய்வார்கள் என்று என் தாலூகாவில் மட்டும் 10 ஆயிரம் ஏக்கர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளை கவனத்தில் கொண்டு மீண்டும் பல சர்க்கரை தொழிற்சாலைகளை இந்த நாட்டிலே ஆரம்பித்துவைக்கத் தீவிர கவனம் செலுத்துமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றி சொல்லப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றியும் பேசப்படுகிறது. நாங்கள் எல்லாம் சேர்ந்து கூச்சல் போட்டால்தான், இந்த அமைச்சரவை பயந்து டெல்லிக்குப் போய் இவைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்தார்களென்று பேசப்படுகிறது. அதைத்தவிர, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கூச்சல் போடப்படுகிறது. தமிழ்நாடு என்று பெயர் வைப்பதிலே சர்க்காருக்கு எவ்விதக் கஷ்டமோ, நஷ்டமோ இல்லை. அவர்கள் கேட்காமல் சும்மா இருந்தால் போதும். தானே தமிழ்நாடு என்று பெயர் வைத்து விடுவார்கள். கேட்க கேட்க, நாம் அவர்கள் கேட்டு கொடுப்பதா என்ற பிரஸ்டிஜ் குறுக்கே நிற்கிறது. உபத்திரவம் கொடுக்காமல் இருந்தாலே போதும். இதை ஒரு தேர்தல் பிரச்னையாக வைத்துக்கொள்ள வேண்டாம். அப்படி வைத்துக் கொள்வதில் அர்த்தமே இல்லை. தமிழ்நாடு என்ற பெயர் தானாகவே வந்துவிடும். இது எனது சொந்த அபிப்பிராயம் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலியிலே 175 அடி ஆழத்திற்கு கீழேதான் கரி எடுக்க வேண்டும். இது மனுஷன் செய்யக்கூடிய காரியமல்ல. மெஷின் செய்கிறது. நேரிலே போய்ப் பார்த்தால் இத்திட்டம் ஆமை வேகத்தில் போகிறது என்று மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர் இங்கு சொன்னதை சொல்லியிருக்க மாட்டார். ஆமை வேகத்தில் போக வில்லை. ரொம்ப வேகமாய் போய் 175 அடி ஆழத்திலிருந்து மண்ணை எடுத்துக்கொண்டு வந்து வெளியே தள்ளுகிறது. அதைத் தவிர அவ்வாறு ஆழத்திலிருந்து எடுக்கப்படும் பக்குவம் அடை யாத கரியை குறைச்சலான கனி சக்தியுள்ள இரும்பை எப்படிக் காய்ச்சுவது என்று நம் நாட்டிலே தெரிந்து கொள்ளாவிட்டாலும், வெளிநாட்டினர் உதவியுடன் ஆராய்ச்சி செய்து வருவது நன்கு தெரிந்த விஷயம். மத்திய சர்க்கார் இந்த ஆண்டிலே 15 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டுமென்று சொன்னால், 15 கோடிக்கு மேலேயும் நமது சர்க்கார் செலவு செய்கிறார்கள். இதிலே சந்தேகப் படத் தேவையில்லை. நூறு கோடி ரூபாய் செலவிட்டு மத்திய சர்க்கார் அங்கு எடுக்கப்படும் கரியை டெல்லிக்குக் கொண்டு போகப் போவதில்லை. போகவும் முடியாது. அந்த கரி சென்னை யிலேதான் உபயோகப்படப் போகிறது. இதிலே சிறிதும் சந்தேகப் பட வேண்டியதில்லை. அதைக்கொண்டு சேலத்திலே ஆரம்பிக்கப் போகின்ற இரும்பு தொழிற்சாலை வெற்றிகரமாக நடைபெறும் என்பதிலும் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. தாமதமாக நடைபெறுகின்றது என்று சொன்னால், 175 அடி ஆழத்தில் இருந்து



20th January 1961] [Sri T. Karia Gounder]

கரி தோண்டி எடுக்கப்படுகின்றது என்பதை கவனித்தில் கொள்ள வேண்டும். அப்படித் தோண்டியெடுப்பதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. இடையிலே தண்ணீர் வரும். அதை பம்ப் மூலம் வெளியேற்ற வேண்டியிருக்கிறது. இதைத்தவிர இவ்வளவு ஆழத் திலே பூரா இடத்தில் இருந்தும் கரி எடுக்க சுரங்கப் பாதையை எப்படி அமைப்பது என்று திட்டமிடுவது என்பது அவ்வளவு எளிதல்ல. ஏதோ சாதாரண மெஷின் என்று நினைக்க வேண்டாம். கரி தோண்டி எடுக்கும் மெஷினின் விலை என்னவென்று கேட்டால், 50 லட்சம் என்று சொல்கிறார்கள். அந்த யந்திரத்திற்கு முன்னால் போகும் பெல்ட் விலை என்னவென்று கேட்டால் அதுவும் 50 லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். இந்த பெல்ட் உதவியால் கரி பல மைல் தூரத்திற்கு வெளியே எடுத்துக்கொண்டு வந்து தள்ளப் படுகிறது. இப்படிப்பட்ட மெஷின் வேலை செய்கிறது என்று சொன்னால், கிடைத்தற்கரிய பெரிய சாதனம் தென்னாட்டிற்கு கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதைவிட்டு, ஆமை வேகத்தில் போகிறது என்றும், தமிழ் நாட்டிற்கு டெல்லி உதவி செய்யவில்லை என்றும் சொல்வது சரியல்ல என்பதை இதுசமயத் திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி நாங்கள் சட்டசபையிலே பேசினோம், பொது மேடைகளிலே சொன்னோம், என்றெல்லாம் பேசப்பட்டது. இப்போது அது பயனளிக்காமல் போகவே, கடலூர் துறைமுகத்திற்கு இப்போது வந்திருக்கிறார்கள். தூத்துக் குடி துறைமுகம் விஷயம் நிச்சயமானதற்கு நாங்கள்தான் காரணம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது தவறு. யாரால் வந்தாலும் அதை யார் ஆளப் போகிறார்கள். நாங்கள் தான் ஆளப் போகிறோமா, அல்லது அவர்கள்தான், நாங்கள் ஆளப்போகிறோம் என்றுதான் சொல்ல முடியுமா, முடியாது. தூத்துக்குடித் துறைமுகத்தைப் பற்றியும், பாம்பிக்குளத் திட்டத்தைப் பற்றியும் எல்லோரும் படித்துப் பார்த்திருக்கிறோம். அனாவசியமாக மக்கள் மனதை கண்டபடி பேசி குழப்ப வேண்டாம். அவர்களுக்கு இருக்கிற அக்கறையைவிட சர்க்கா ருக்கு அதிக அக்கறை உண்டு என்பதை இதுசமயம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டிலே ஏற்படுத்தியிருக்கும் கல்வித் திட்டத்தைக் கண்டு உலகமே வியக்கிறது. உலகப் பிரதிநிதிகள் என்று சொல்லக் கூடிய எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் அதாவது எல்லா நாட்டு அம்பாசிடர்களும், சென்ற ஆண்டிலே வேலூரில் நடை பெற்ற கல்வி மகாநாட்டிலே, நம் மதிப்பிற்குரிய இந்நாட்டின் தலை வரான கனம் ராஜேந்திர பிரசாத் அவர்கள் கலந்துகொண்ட கல்வி மகாநாட்டிலே, கலந்துகொண்டார்கள். பகல் சாப்பாடு, துணி இல்லாத பிள்ளைகளுக்கு துணி, எல்லா பிள்ளைகளுக்கும் இலவசப் படிப்பு என்பதையெல்லாம் பார்த்து, இந்தமாதிரித் திட்டம் ஒன்று உலகத்திலே இருக்கிறதா என்று பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். இப்போது 5 லட்சம் பிள்ளைகளுக்குச் சாப்பாடு

போட்டுக் கொண்டு வருகிறோம். மொத்தமும் சர்க்கார் செலவில் அல்ல. பொதுமக்களுடைய உதவியைக் கொண்டும், சர்க்காரின் மான்யம் பெற்றும் நடைபெற்று வருகிறது. அடுத்த ஆண்டு காலத்திலே 17 லட்சம் குழந்தைகளுக்குச் சாப்பாடு போடப் போகிறோம். இந்தத் திட்டம் வரவேற்கப்பட வேண்டிய திட்டம் என்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை. இந்த நேரத்திலே, அடுத்த ஆண்டு முதல் சர்க்கார் எல்லோருக்கும் 10-வது வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுக்க இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கார் இதுமாதிரியான திட்டங்களில் எல்லாம் தீவிரமாக கவனம் செலுத்தி வருவது வரவேற்கத் தகுந்தது.

சாதாரணமாக கவர்னர் உரை சிறிது நீளமாக இருக்கும். 10, 15 பக்கம் இருக்கும். இம்முறை சுருக்கமாக உள்ளது. ஆகவே கவர்னர் உரையில் ஒன்றுமில்லை என்று சொல்லப்படுகிறது. சென்ற ஆகஸ்ட் மாதம்தான் கவர்னர் பெருமான் உரை நிகழ்த்தினர். ஆகவே அவர் சுருக்கமாகத்தான் சொல்ல முடியும். நிதி அமைச்சர் 1½ மணி நேரம் பேசுவார்கள். இரண்டு மணி நேரம் வேண்டுமானாலும்கூட பேசுவார்கள். ஆகவே இதற்கு முழு விளக்கமும் கொடுக்கும்படி நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri M. P. PERIASAMI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். அந்த உரையில் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் நமது தமிழ் நாட்டில் நிறைவேற்றவேண்டிய திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் தலைமையில் மற்ற மந்திரிகளும் கூட்டாகச் சேர்ந்து நல்ல முறையில் பல திட்டங்களை அமைத்து, அந்தத் திட்டங்களை கவர்னர் பெருமான் வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் ரூ. 291 கோடி செலவிட மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் வெள்ளையர் ஆட்சி காலத்தில் நமது தமிழ் நாட்டிற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு, இப்பொழுது எவ்வளவு பணம் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை பார்க்கும்பொழுது, நாம் எந்தக் கட்சியில் இருந்தபோதிலும், எந்த அளவுக்கு அரசாங்கத்தை குறை கூறக்கூடிய அளவுக்கு இருந்தபோதிலும், மனதானது குறை கூறுவதற்கு இடம் தராது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அப்படி குறை கூறவேண்டுமென்றால், மனச்சாட்சிக்கு விரோதமாக வெளிப்படையாக பேச்சு அளவிற்கு குறை கூறிக்கொண்டிருக்கலாமே ஒழிய, சரியான முறையில் குறைகூற முடியாது. வடநாடு, தென்னாடு என்று பேசுவதற்கே இடமில்லை. இன்றைக்கு நமது ராஜ்யத்திற்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது மூன்றாவது திட்டத்திற்காக. இன்னும்கூட அதிகமாக பல கோடி ரூபாய்கள் கேட்டு செலவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஏழை பணக்காரர்கள்





என்ற வித்தியாசம் இல்லாமல், ஜாதிமத வித்தியாசமில்லாமல், தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்ற வித்தியாசம் இல்லாமல் முதல் அமைச்சர் கனம் காமராஜ், சம்பந்தப்பட்ட மற்ற அமைச்சர்கள், மற்றும் எங்களைப்போன்ற அங்கத்தினர்கள் நல்ல எண்ணத்தோடு திட்டங்கள் தீட்டும்போது, குறை கூறுவதற்கு எந்தவிதமான இடமும் இல்லை. அந்த நிலையில் பார்த்தால், அரசாங்கம் வகுத்துக்கொண்டிருக்கிற திட்டங்களை கவனித்தால் எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கிக் கூறியபடி நெய்வேலி போன்ற திட்டங்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்கு முன்னால் நெய்வேலி திட்டம் வராது என்று சில பேர்கள் எதிர்பார்த்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் அம்மாதிரி திட்டங்கள் வராது என்று பேசி மக்களை மயக்கிவிடலாம் என்று நினைத்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் வந்துவிட்டது. இப்படி ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் குறை கூறிக்கொண்டிருந்தால், அது 'பைல்' ஆகும், 'பைல்' ஆனால் அதை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லுவதற்கு இடம் இருக்கும் என்று நினைத்தார்கள். அதற்கு இடம் இல்லை. இம்மாதிரி பல விஷயங்களிலே நமது அரசாங்கம் முன்னேறிக் கொண்டு வருகிறது.

நமது சென்னை மாகாணத்தில் ஓடிக்கொண்டிருக்கிற பெரிய நதிகள் எல்லாவற்றிலும் அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சிறு சிறு ஓடைகள் தான் பாக்கி இருக்கின்றன. வரண்ட ஆறுகளில் கூட தண்ணீரை தேக்குவதற்கு வசதியாக அணைகள் கட்டப்பட்டு விட்டன. இனிமேல் அணைகள் கட்டுவதற்கு இடமே இல்லை. அம்மாதிரி ஆறுகள் இருந்தாலும் இன்னும் பல கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு இடம் இருக்கும். அம்மாதிரி நாம் இன்னும் பல கோடி ரூபாய் கேட்பதற்கு நாம் தகுந்த முறையில் திட்டங்கள் தயாரித்துக் கொடுத்தால்தான், செலவிற்கு இத்தனை கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்பதற்கு முடியும். சில இடங்களில் கிராம மக்கள் மத்தியில், பல கோடி ரூபாய் வாங்கி திட்டத்திற்காக செலவு செய்ய திறமை இல்லாதவர்கள் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் கவர்னர் அவர்களுடைய உரையை பார்க்கும்பொழுது, எவ்வளவோ அதிகமாக தொகையை வாங்கி நம் அரசாங்கம் செலவு செய்ய தயாராக இருக்கிறது என்பது தெரியவரும். பல கோடி ரூபாய் செலவில் வாங்க வேண்டும். செலவு செய்யக்கூடாத காரியங்களுக்கு செலவு போட இடத்தை வைத்துக்கொண்டுதான் பல கோடி ரூபாய் திட்டங்கள் தயாரிக்கவேண்டுமானால், நமது மாகாணத்தில் அம்மாதிரி திட்டங்கள் போடுவதற்கு இடம் இருக்கவேண்டும். திட்டம் போட இடத்தை வைத்துக்கொண்டுதான் பல கோடி ரூபாய் வாங்கவேண்டும். செலவு செய்யக்கூடாத காரியங்களுக்கு செலவு செய்ய முடியுமா என்பதைத்தான் மற்றவர்கள் யோசிக்க வேண்டும். செலவிற்கு தகுந்தாற்போன்று அணை முதலியவைகளைக் கட்டுவதற்கு திட்டங்கள் இருக்கவேண்டும். ஆனால் நம் ராஜ்யத்தில் சிறிய ஓடைகள்தான் இருக்கின்றன. அம்மாதிரி

[Sri M. P. Periasami] [20th January 1961

சிறிய ஓடைகளிலும் பயன் அளிக்கக்கூடிய திட்டங்கள் இருந்தால், அரசாங்கம் அதற்காக செலவு செய்வதற்கு தயாராக இருக்கிறது. இம்மாதிரி திட்டங்களை போட்டதற்காக அரசாங்கத்தைப் போற்றுகிறோம்.

ஹரிஜன மக்களுக்கு பல கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. 1937-ம் வருஷம் வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் 4 மாகாணங்கள் இருந்த காலத்திலும்கூட, ஹரிஜனங்களுக்காக சுமார் ரூ. 3, 4 லட்சம்தான் செலவழிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது 3 மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பிறகுகூட, தமிழ் நாடு தனியாக இருக்கும் சமயத்தில் 2 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இதனால் பல வழிகளில் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைவதற்கு ரொம்பவும் வசதியாக இருக்கிறது. அதற்கு முன்னால் பெரிய உத்தியோகங்களை எடுத்துக்கொண்டால், ஹரிஜன மக்களுக்கு அதிகமாக அந்த உத்தியோகங்கள் கிடைக்காது. இப்பொழுது பெரிய உத்தியோகங்களில், டெபுடட் ஆபிசர்களாகவும், செக்ரடரிகளாகவும் ஹரிஜனங்களாகப் பிறந்தவர்கள் இருக்கிறார்கள். எம்.ஏ. பி.ஏ., ஐ.ஏ.எஸ். பாஸ் செய்யக்கூடிய அளவிற்கு ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் உதவி செய்கிறார்கள். இந்த உதவியினால் பல ஹரிஜனங்கள் முன்னேறி வருகிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல சட்டங்களை போட்டிருக்கிறார்கள். தீண்டாமை சட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்த சமூகம் எத்தனையோ வழிகளில் முன்னேற்றமடைய அரசாங்கம் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டு என்று தனியாக ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி, கலெக்டர் மூலமாகவும் இன்னும் பல வழிகளிலும் ஹரிஜனங்களுக்கு உதவி செய்துகொண்டு வருகிறார்கள். இதற்காக அரசாங்கத்தை நாங்கள் போற்றவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இருந்தபோதிலும், இன்னும் தீண்டாமை சட்டம் சில கிராமங்களில் சரிவர அமுல் நடத்தப்படாமல் இருக்கிறது. அதையும் அரசாங்கம் நிவாரணம் செய்யவேண்டும்.

மழை பெய்து, புயல் அடித்து வீடுகள், கால் நடைகள் இவைகளை அடித்துக்கொண்டு போகக்கூடிய அளவுக்கு வெள்ளம் வந்திருந்தாலும், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு தாலுகாக்களில் கிணறுகளில் அடிவெட்டு வெட்டுவது ஆச்சரியமாக இருக்கும். கனம் மின்சார அமைச்சர் அவர்களை நேராக கிணறு வெட்டப்படும்பொழுது அழைத்துக்கொண்டு போய் காண்பித்திருக்கிறோம். அங்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு கனம் அமைச்சர் ராமய்யா அவர்கள் வேண்டிய உதவி செய்து கொண்டு வருகிறார்கள். மேற்கண்ட இடங்களில் ஸ்பெஷலாக மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்பேற்பட்ட இடங்களில் கிணறுகளெல்லாம் அடிவெட்டு வெட்ட வேண்டிய அளவுக்கு இருக்கிறது. இன்னும் ஹரிஜனங்களுக்கு குடிதண்ணீர் வசதி எல்லா இடங்களிலும் வழங்கப்படவேண்டும். பல பணிகளுக்காக செலவு செய்யக்கூடிய தொகையை ஜில்லா வாரியாக ஒதுக்காமல், எந்தப் பகுதிகளிலே குடிதண்ணீர்



20th January 1961] [Sri M. P. Periasami]

கஷ்டம் அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளுக்கு அதிகமாக பணத்தைக் கொடுத்து, ஆவன செய்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. IRUSAPPAN :** கனம் உதவி சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைமீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் உரையில், மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்து, அவர்களுடைய குறைகளைப் போக்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். வழக்கம்போல் கண் துடைப்பு வேலைதான் செய்யப்பட்டதே ஒழிய பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான நிவாரணம் அளிக்கப்படவில்லை. தீயினால் பாதிக்கப்பட்டாலும், மழையினால் பாதிக்கப்பட்டாலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டாலும், 30 ரூபாய்தான் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் நிர்ணயித்துள்ளனர். அதைத்தான் இப்பொழுதும் கொடுத்திருக்கிறார்கள். அதிகப்படியாக ஒன்றும் கொடுத்துவிடவில்லை. இம்மாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ. 300 ஆவது கொடுக்கவேண்டும். ஏழை எளிய மக்களும், இந்த நாட்டிலே பிறந்த பழங்குடி மக்களாகிய ஆதித் திராவிட சமுதாயமும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 300 ரூபாய் கொடுத்தால் ஆதி திராவிட மக்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி ஏற்படும். ஆகவே சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நமது நாட்டிலே பெரும் அளவில் நடப்பது கைத்தறித் தொழில். கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அப்படியிருக்கின்ற நேரத்திலே, இன்றைய தினம் விசைத் தறிகளைப் புகுத்தி, மில்களின் மூலம் துணிகளை உற்பத்தி செய்வதுபோல விசைத் தறிகளின் மூலம் உற்பத்தி செய்வதால், கைத்தறியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விசைத் தறியினால் எந்த அளவுக்கு அவர்களுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

விவசாயத்தில் அதிகப்படியான ஊக்கமும், ஆக்கமும் காட்டப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயம் செய்பவர்களுக்கு தேவையானபொழுது கடன்கள் கிடைப்பதில்லை என்பதை ஆளும் கட்சியிலுள்ளவர்களும், எதிர்க்கட்சியிலுள்ளவர்களும் பரவலாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான உர வகைகளும் தகுந்த காலத்தில் கிடைப்பதில்லை என்ற அவல நிலைமையும் ஏற்பட்டுள்ளது. சர்க்கார் நிர்ணயித்திருக்கும் நியாயமான விலைக்கு விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பதில்லை. கள்ள மார்க்கெட்டில்தான் உரம் கிடைக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு நீண்டகாலமாக சொல்லப்பட்டு வருகிறது. தக்காவிக் கடன்களும் ஏழை விவசாயிகளுக்கு அந்தந்தக் காலத்தில் அவர்கள் மனுச் செய்துகொள்ளும்பொழுது கிடைக்கச் செய்வது சர்க்காரின் கடமை.

[Sri T. Irusappan] [20th January 1961

மின் வேகத்திலே மின்சாரம் நம்முடைய தமிழகத்திலே பரவி வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்பாக ஒப்பந்தம் செய்துகொண்டு, பம்பு செட்டுகளை அமைத்தும் இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு இன்னும் தண்ணீர் இறைப்பதற்கு கொடுக்கப்படவில்லை. மோட்டார் வாங்கிவிட்டால் உடனே தண்ணீர் இறைப்பதற்கு அனுமதி கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். மோட்டார் வாங்கிய விவசாயிகளுக்கும் அனுமதி கொடுப்பதில்லை. இதற்கு உண்மையான காரணம் என்ன என்று தெரியவில்லை.

ஆதித் திராவிட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக என்னென்ன செய்யப்போகிறார்கள் என்று சொல்லப்படவில்லை. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர், ஆதித் திராவிட சமுதாயத்திற்கு சர்க்கார் பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆதித் திராவிட சமுதாயத்திற்கு நன்மைகளைச் செய்யத் தவறிய காரணத்தினால்தான், குற்றம் குறைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின்சார விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படுமென்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆத்தூர் வட்டாரத்தில், ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் போட்டும்கூட, பல சேரிகளிலே இன்னும் விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இதைப் பரிசிலனை செய்து எந்தச் சேரிகளிலே விளக்குகள் போடவில்லையோ, அந்தச் சேரிகளுக்கு மின்சார விளக்குகள் அமைத்துக் கொடுக்க வேண்டியது சர்க்கார் கடமை.

அடுத்தபடியாக, ஆதித் திராவிடர்கள் குடியிருப்பதற்கு இடம் இல்லை என்ற அவல நிலை இருக்கிறது. உழுவதற்கு நிலம் இல்லாவிட்டாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற பகுதிகளிலே, அவர்களுக்கு மனைகளைச் சொந்தப்படுத்திக் கொடுப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் எப்பொழுதும் வழக்கமாகச் சொல்வது போல்தான் இந்த உரையும் அமைந்திருக்கிறது, மக்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்கக்கூடிய அளவிலே இந்த உரை அமையவில்லை என்று சொல்லிக்கொண்டு, மேலே நான் சொல்லியிருக்கும் குறைகளை சர்க்கார் உடனே கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. MARIAPPAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையைப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்தையும், நமது மாகாணத்திற்கு இரும்புத் தொழிற்சாலையையும் சேர்த்து இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய மாகாணத்திலே கைத்தறி நெசவாளர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறிய அளவிலாவது உதவி செய்வது சர்க்கார் கடமை. இரண்டாவது திட்டத்தில்



20th January 1961] [Sri A. Mariappan]

31 கோடி ரூபாய் வரையிலும் செலவழித்திருக்கிறார்கள். மூன்றுவது திட்டத்திலே 35 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். மாகாண சர்க்கார் தலையிட்டு, கைத்தறியாளர்களின் நிவாரணத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நியமித்த "ஸ்டடி குரூப்" 140 கோடி ரூபாய் செலவழிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது. ஆகவே மத்திய சர்க்காரை மாகாண சர்க்கார் வற்புறுத்தி கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 150 கோடி ஒதுக்கவேண்டும். நம்முடைய மாகாணத்தை பொறுத்தவரையில், கைத்தறி நெசவாளர்களுக்காக மூன்றுவது திட்டத்தில் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே நிர்ணயித்த திட்டத்திலே எந்த ஒரு பகுதியையும் குறைக்காமல், அப்படியே அந்தத் திட்டத்தைச் சேர்க்கவேண்டுமென்று நம்முடைய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சேலம் நகரத்திற்கு குடி தண்ணீர் மிகவும் இன்றியமையாதது. அந்த நகரத்திற்கு குடி தண்ணீர் திட்டத்திற்காக மூன்றுவது திட்டத்திலே பி-பிரிவின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை ஏ-பிரிவுக்கு மாற்றினால்தான் சேலத்தைப் பொறுத்தவரையில் குடி தண்ணீர் வசதி பெற முடியும். அதே மாதிரி, மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்யவிருக்கும் ரீஜனல் என்ஜினியரிங் காலேஜையும், சேலம் ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டும் என்று மாகாண சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சேலம்-பங்களூர் ரயில்வே லைன் முக்கியமானது. நெய்வேலி 1-00 p.m.
பழுப்பு நிலக்கரியை மைசூர் போன்ற பகுதிகளுக்கு அனுப்பவும் இந்த சேலம்-பங்களூர் ரயில்வே லைன் மிக அவசியமானது. ஆகவே, அதற்கு முதல் பிரையாரிடி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக சர்க்காரைப் பாராட்டுவதோடு, அதைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சேலம் நகரத்தைப் பொறுத்தவரையில், அங்கு ரயில்வே க்ராஸிங் அதாவது மேம்பாலம் கிடையாது. பல இடங்களில் ரெயில்வே க்ராஸிங்கள் இருந்தாலும், சேலம் நகரத்தில் அம்மாகிரி பாலம் இல்லாததால், மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, சேலம் நகரத்தில் மேம்பாலம் கட்டித்தர முதல் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

தவிரவும் சேலம் ஜில்லாவில் அதிகமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள், அதனால் அதிகமாகக். கதிரிகள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு இருந்தோம். அங்கே ஒரு கோவாபெரேடிவ் கைத்தறி நூற்பாலை வரும் என்றிருக்கிறார்கள். ஒரு ஆலை போதாது. சேலம் ஜில்லாவிற்கு குறைந்தது ஒரு லட்சம் கதிர்கள் மூன்றுவது திட்டத்திலேயே ஒதுக்க வேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், மாகாண

[Sri A. Mariappan] [20th January 1961

சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். சேலம் ஜில்லா, மாகாணத்திலேயே அதிகமான கைத்தரியாளர்களைக் கொண்டது. அங்கே சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் கைத்தரியையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். நம் மாகாணத்தில் மூன்றில் ஒரு பங்கு சேலம் ஜில்லாவில் இருக்கிறார்கள். ஆகவே, சேலம் ஜில்லாவிற்கு அதிகப்படியான கதிர்களை ஒதுக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாகாண சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். அதற்கான முயற்சிகளை மாகாணச் சர்க்கார் செய்ய வேண்டும்.

சென்னை நகரத்தில், நகர சபைக்கு, ரோடு வசதிக்காக, சர்க்கார் பண உதவி செய்திருக்கிறார்கள். அதே மாதிரி, சேலம் நகரத்து ரோடுகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அந்த நகர சபைக்கும், ரோடுகளைச் செப்பனிடுவதற்கு, நம் மாகாண சர்க்கார், கடனாகவும், மானியமாகவும், குறைந்த பட்சம் ஒரு லட்ச ரூபாயாவது கொடுத்து, அந்த நகரத்து ரோடுகளை நல்ல முறையிலே வைக்க சர்க்கார் உதவியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

சேலத்தில் சிறுமணி முத்தார் என்று ஒரு நதி ஓடுகிறது. அது வெறும் சாக்கடையாக ஓடுகிறது. அப்படி அந்த நதி சாக்கடையாக ஓடுவதால், அது சுகாதாரத்திற்குக் கேடாக இருக்கிறது. ஆகவே, அங்கு தேங்கி யிருக்கும் சுகாதாரக் கேடாக இருக்கும் ஜலத்தை வெளியில் போகச்செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆகவே, இந்த விஷயத்தில் மாகாண சர்க்கார் வழிவகை செய்து, இந்த சிறுமணி முத்தார் நதிக்கு ஒரு திட்டம் போட்டாக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

சேலம் ஜில்லா மாகாணத்திலேயே பெரிய ஜில்லாவாக இருந்தும், அங்கு ஒரு தலைமை ஆஸ்பத்திரி நல்லதாகக் கிடையாது. தாலுக்காவிலிருக்கும் ஆஸ்பத்திரியே தான் அங்கு நடக்கிறது. மற்றய ஜில்லாக்களை எடுத்துக் கொண்டால், நல்ல முறையிலே நடக்கும் தலைமை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதற்காக மாகாண சர்க்காரைப் பாராட்டுகிறோம். அதே நேரத்திலே, சேலத்திலும், ஒரு பெரிய தலைமை ஆஸ்பத்திரியை, சிறந்த முறையிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், ரூ. 75 லட்சம் செலவில் பூர்வாங்க வேலைகள் நடக்கின்றன. அதற்காக ஒரு ஸ்பெஷல் அதிகாரியையும் நியமித்து அந்த வேலைகளைச் செய்து வருவதற்கு மாகாண சர்க்காரைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், இன்னும் அந்த வேலையைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

பருவ மழையைப் பொறுத்த வரை, மற்றப் பகுதிகளில் அதிக மழையினால் கெடுதல்கள் கூட விளைந்திருக்கும் போது, எங்கள் சேலம் ஜில்லாவில், ஒரே ஒரு தாலுக்காவைத் தவிர, இந்த ஐப்பசி, கார்த்திகை மாதத்தில் கூட குடி தண்ணீரும் இல்லாமல் மக்கள்



20th January 1961] [Sri A. Mariappan]

கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, அங்கு வேண்டிய பாசன வசதி, குடி தண்ணீர் வசதி இவைகளைப் பெருக்கியமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருப்பதற்கு சர்க்காரைப் பாராட்டுகிறேன். சேலம் நகரத்தில் 22 கடைகளை திறந்திருப்பதற்காகவும் சர்க்காரைப் பாராட்டுகிறேன். ஆனால் இவை சேலம் ஜில்லாவிற்குப் போதாது. சேலம் நகரத்தில் மட்டும் குறைந்தது 40 கடைகளாவது திறந்தால் தான், கைத்தறி நெசவாளர்களும், மற்றவர்களும், குறைந்த விலையில் உணவுப் பொருள்களை வாங்க வசதியாக இருக்கும். அப்படி அதிகப்படியான நியாய விலைக் கடைகளை திறக்க ஏற்ற நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

மின்சார உற்பத்திக்காக ரூ. 100 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன். ஆனால், எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், ஒரு மின்சார சப்ளை சேலம்-ஈரோடு எலெக்ட்ரிக் சப்ளை கம்பெனியிடம் இருக்கிறது. ஆகவே, விஸ்தரிப்பதில் குறைகள் இருக்கின்றன. குறிப்பாக சேலம் நகரத்தில், அவர்கள் இருப்பதால், அவர்கள் மின்சாரத்தை விஸ்தரிப்பதில்லை. மின்சார வசதிகளைப் பெருக்க வேண்டும் என்றால், அவர்கள் தங்களுக்கு பணம் வேண்டும் என்கிறார்கள். ஆனால், சர்க்காரைக் கேட்டால் பணம் கொடுத்தாலும், அவர்கள் விஸ்தரிக்கத் தயாராக இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, சீக்கிரமாகவே எங்களுக்கு மின்சார வசதி யளிக்க மாகாண சர்க்கார் முற்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இது சம்பந்தமாக சேலம் ஜில்லாவில் சுற்று[illegible] [illegible] செய்த முதல் அமைச்சரவர்களிடமும், மின்சார அமைச்சரவர்களிடமும் முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே, பின் தங்கிய ஜில்லாவாக இருக்கும், எங்கள் ஜில்லாவிற்கு மின்சார வசதி நல்ல முறையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாகாண சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதோடு கூட, குழந்தைகள் படிப்புக்காக, 6 வயது முதல் 11 வயது வரை இலவசப் படிப்புக்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சர்க்காரைப் பாராட்டுகிறோம். மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருப்பதற்காகவும் பாராட்டுகிறோம். இதோடு கூட, நெய்வேலியில், 35 லட்சம் டன்னிலிருந்து, 45 லட்சம் டன் வரை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்திருப்பதையும் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் பின் தங்கிய வகுப்பினர்களுக்கு ஸ்காலர் ஷிப் வசதிகளை அதிகப் படுத்தித் தரவேண்டும். இப்பொழுது ஒதுக்கி யிருப்பது போதாது. இப்பொழுதுதான் பின்தங்கிய ஏழை மக்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க அதிகப் பணத்தை ஒதுக்கி, உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

[Sri A. Mariappan] [20th January 1961

கைத்தறியாளர்களுக்கு, கச்சாப் பொருள்கள் வாங்குவதிலும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். நார் பட்டு போன்ற கச்சாப் பொருள்கள், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிக் குறைவாக இருப்பதால், ரூ. 5-க்கு வாங்க வேண்டிய நார் பட்டுப் பொருளை, ரூ. 11-க்கும் அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு உதவிகள் செய்தாலும், இன்னொரு புறம், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் அவதிப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நார் பட்டைப் பொறுத்த வரையில், இன்னும் அதிகமாக இறக்குமதி செய்ய மாகாண சர்க்கார், மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறோம்.

சேலம் ஜில்லா ஏனைய ஜில்லாக்களைவிட, பின் தங்கிய பிராந்தியம். அங்கு ஒரே ஒரு கல்லூரியும், ஒரே ஒரு பாலிடெக்னிக்கும் தான் இருக்கின்றன, அதுவும் தனியார் முயற்சியால். ஆகவே, அந்த மக்கள் மற்ற இடங்களுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்ப வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஜில்லாவில், மேற்கொண்டு ஒரு கல்லூரியையும், இன்னொரு பாலிடெக்னிக்கையும் நிறுவ வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். அதற்கு முதல் பிரையாரிடி கொடுத்து உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

ஆகவே, இந்தக் காரியங்களில், நம் மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரோடு அதிகமாகச் சொல்லி, நமக்கு வேண்டிய திட்டங்களை பெற்றிருப்பதுபோல், அதற்காக மாகாண சர்க்காரைப் பாராட்டுகிறோம், மற்ற திட்டங்களையும் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். நெய்வேலி முதலிய திட்டங்களை நமக்கு வாங்கிக் கொண்டதற்காக மாகாண சர்க்காரைப் பாராட்டி என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI K. R. VISWANATHAN : **கனம் உதவி** அவைத் தலைவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் இந்த ஆண்டு ஆற்றிய உரை மிகவும் சுருக்கமாக, எல்லாப் பொருள்களும் பொதிந்ததாக இருப்பது பற்றி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கவர்னர் ஆற்றிய உரையில் மிக முக்கியமாக எடுத்துக்காட்டப்படுவது ஐந்தாண்டுத் திட்ட நடைமுறையாகும். அதிலே விவசாயத்தைப்பற்றியும், கைத்தொழிலைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் இம்மாதிரி பல முக்கிய பொருள்களைப் பற்றியெல்லாம் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்க, சில கனம் உறுப்பினர்கள், கவர்னர் பெருமான் உரையானது மிகவும் ஏமாற்றத்தைத் தருவதாகக் குறை கூறுகிறார்கள். என்றால், அவர்கள் எதை எதிர்பார்த்திருந்தார்கள், எப்படி ஏமாற்றத்தை இந்த உரை தருகிறது என்பது



20th January 1961] [Sri K. R. Viswanathan]

எனக்கு விளங்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததையெல்லாம் எழுதிக்கொண்டே போவதானால், கவர்னர் பெருமான் உரைக்கு இடமே இருக்க முடியாது. எல்லாவற்றையும் எழுதினாலுங்கூட, கடைசியில் குறை இருந்துகொண்டே இருக்கும் என்பதை எடுத்துக்காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது.

அது நிற்க, இங்கு நான் எடுத்துக் கூற முற்படுவது விவசாயம் ஆகும். நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடாகிய 291 கோடி ரூபாயில் 80 கோடி ரூபாய் வரைக்கும் விவசாயத்திலே தான் செலவிடவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் எல்லா ஆறுகளும், எல்லா ஓடைகளும் பெரும்பாலும் கட்டப்பட்டுவிட்டன, இனிமேல் நீர்ப்பாசனத் திட்டங்களே வேண்டியதில்லை என்ற நிலைமையை உண்டாக்கவேண்டும். அம்மாதிரி ஓரளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொண்டாலுங்கூட, பெரிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 27 கோடி ரூபாயும், சிறிய பாசனத் திட்டத்திற்காக 8 கோடி ரூபாயும், மற்ற சிறு ஏரிகளைக் கட்ட சில கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்ததாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடானது முன்பு 399 கோடி ரூபாய் என்று சொல்லி, இப்பொழுது 291 கோடி ரூபாய் வரைக்கும் நாம் செலவிடலாம் என்று திட்டக் கமிஷன் நமக்கு அனுமதி அளித்துள்ளது. அம்மாதிரி முதலீட்டைக் குறைத்த சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்ப் பிரசாரம் செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்கள். "சென்னை அரசாங்கம் காவடி எடுத்துச் சென்றார்கள், முதலீட்டை அவர்கள் குறைத்து விட்டார்கள், மத்திய அரசாங்கத்தினுடைய உதவி மிகவும் குறைந்துவிடப் போகிறது, நம்முடைய திட்டங்களெல்லாம் நிறைவேறுவதற்கு வழி இல்லை" என்ற முறையிலே ஒரு எதிர்ப் பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். அதற்குத் தக்க பதில் நம்முடைய கவர்னர் பெருமான் உரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 150 கோடி என்று திட்டமிட்டிருந்தாலும், எப்படி 182 வரைக்கும் நாம் செலவிட முடிந்ததோ, அதே போல், இப்பொழுது 291 கோடி முதலீடாக இருந்தாலும், அதை 350 முதல் 400 கோடி வரைக்கும் உயர்த்திச் செலவிடக் கூடிய சக்தியும் வாய்ப்பும் கிடைக்க இடம் இருக்கிறது என்று கூறியிருப்பது பற்றி நாம் எல்லாம் மகிழ்ச்சி அடையவேண்டியிருக்கிறது.

நீர்ப்பாசனத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், பரம்பிக்குளம் திட்டம் நம்முடைய மாகாணத்திற்கு மிகவும் இன்றியமையாதது என்ற முறையில் அதற்கு முதல் இடம் கொடுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அது முக்கியமாக முடிக்கப்படும் என்ற நிச்சயத்தை, உறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக, நடுத்தரத் திட்டங்களாக நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு வேண்டுகோளை

மட்டும் அரசாங்கத்திற்கு நான் விடுத்துக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதித்தபோது, முக்கியமாக மூன்று நடுத்தரத் திட்டங்கள் முதல் இடம் பெறும் என்று சொல்லியிருந்தார்கள். மருதையாறு திட்டம், நொய்யல் திட்டம், கொடவனாறு திட்டம் ஆகிய மூன்றில், மருதையாறு திட்டம் பற்றிக் குறிப்பிடுகின்றேன். திருச்சி மாவட்டத்திலே உடையார்பாளையம் வட்டம் மிகவும் வரண்ட பிரதேசமாக உள்ளது. கொள்ளிடத்தில் வரும் வெள்ள நீரை, இரண்டு இடங்களில் தடுத்து, பெரிய ஏரிகளாகக் கட்டினால், அதன் மூலம் முப்பதாயிரம் ஏக்கராக்கள் பாசன வசதி அளிக்கக்கூடிய திட்டம்தான் மருதையாறு திட்டம் என்பது. அந்தத் திட்டம் சர்க்காருடைய கையில் முதல் இடம் பெறவேண்டும். 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே வேலைகள் துவங்கவேண்டுமென்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு குறைக்கப்பட்ட காரணத்தால், இந்தத் திட்டம் கைவிடப்படுமோ என்ற சந்தேகம் எங்களிடத்தில் இருக்கிறது என்பதைத் தான் நான் அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரண்ட பிரதேசத்திற்கு இது ஒரு வரப்பிரசாதமாகும், முப்பதாயிரம் ஏக்கராக்கள், மானாவாரி நிலம், நஞ்சை நிலமாகிப் பயன்படும்படியான இந்தத் திட்டத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்று எப்படி முன்பு முடிவு செய்தார்களோ, அதை மாற்றாமல், மறுபடியும் அந்தத் திட்டம் முதலிடம் பெற்று, 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னும் பல ஏரித் திட்டங்கள் நிறைவேற வேண்டிய அவசியம் இருக்கிறது. நான் இந்த சட்டசபை உறுப்பினராக வந்து, இன்றைக்கு ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. இதற்குள் இரண்டு மூன்று திட்டங்களைப்பற்றி அடிக்கடி வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். அந்தத் திட்டங்கள் இன்னும் நிறைவேறியபாடில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். நான் பல முறை சொல்லிவந்தது போல், அரசாங்கத்தில் காலதாமதம்தான் இதற்குக் காரணம் ஆகும். திட்டம் பற்றிய விவரம் சர்க்காருக்கு வரும். அதைத் தலைமைப் பொறியருக்கு அனுப்புவார்கள். அதை அவர்கள் கலெக்டருக்கு அனுப்பி விடுவார்கள். கலெக்டர் அதைத் தலைமைப் பொறியருக்கு அனுப்பாமல் சர்க்காருக்கே அனுப்பி விடுவார்கள். சர்க்கார் அதைத் தலைமைப் பொறியார் வாயிலாகத்தான் வரவேண்டுமென்று திருப்பி அனுப்பிவிடுவார்கள். இம்மாதிரி ஏழெட்டு ஆண்டுகளாகத் திட்டங்கள் தாமதமாகிக் கொண்டு வருகின்றன. இன்னும் அந்தத் திட்டங்கள் நிறைவேறியபாடில்லை. முக்கியமாக நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறபடியினால், அவருக்குக் குறிப்பாக எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். குழுமூர் ஏரித் திட்டத்தினால் 350,400 ஏக்கராக்களுக்கும் அதிகமாகப் பாசன



வசதி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய ஏரித் திட்டத்தைப்பற்றி ஏழெட்டு ஆண்டுகளாக நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கின்றேன். அடுத்தார்போல் செங்கால் ஓடைத் திட்டம். அதன் மூலம் 350 ஏக்கராக்கள் நஞ்சை சாகுபடிக்கு வர ஏது இருக்கிறது. இத்தகைய ஏரித் திட்டங்களையெல்லாம் மிக விரைவில் கொண்டு வந்தால் வரண்ட பிரதேசங்களுக்கு அவை பயன்தரத் தக்கதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, இம்மாதிரி வரண்ட பிரதேசங்களில் இருக்கும் ஏரிகள், சிறு ஓடைகள் இவைகளைக் கட்டிய பிறகு, தண்ணீர் கிடைக்காத மற்ற பகுதியிலே பூமிக்கு அடியில் தண்ணீர் இருக்கிறதா என்பதைப் பார்த்து நாம் முயலவேண்டிய அவசியம் இருக்கிறது. அம்மாதிரி உடையார்பாளையம் தாலூகாவில் இரண்டு இடங்களில் தன்னூற்றுக் கிணறுகள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு மேற்கொண்டு 50 கிணறுகள் தோண்ட அதற்காகப் பத்து லட்ச ரூபாய் அரசாங்கத்தார் அனுமதித்திருக்கிறார்கள். ஆழக் குழாய்கள் போட்டுப் பார்க்கவேண்டும் என்ற உத்தரவு வந்து ஆறு மாதங்கள் ஆகியும் இன்னும் திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. தோண்டுவதற்கு வேண்டிய 'பவர் ட்ரில்கள்' நம்முடைய அரசாங்கத்திலே இல்லை என்ற குறைதான். ஏதோ ஒன்றிரண்டு இருப்பதைத் தென்னாற்காடு மாவட்டத்தில் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும், திருச்சி மாவட்டத்தில் தன்னூற்றுக் கிணறுகள் தோண்ட, அன்னியச் செலாவணி தடையாக இருந்தாலும் அதை மீறி அன்னிய நாட்டிலிருந்து 'பவர் ட்ரில்களை' வரவழைத்து, உபயோகப்படுத்தி வரண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆகையால் உடனடியாக அந்நியச் செலாவணி அதிகமாகப் பெற்று பவர் ட்ரில்கள் எல்லாம் அதிகமாக வரவழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, விவசாய முன்னேற்றத்திலே முக்கியமாக விவசாயிகளுடைய நிலைமையைக் கவனிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பாகும். அதாவது விவசாயிகளுக்கு அரசாங்கத்தார் பல கடன் உதவிகளை அளித்தார்கள். எரு, விதை வாங்கக் கடன், மாடு வாங்கக் கடன், வண்டி வாங்கக் கடன் என்று பல வகையில் கடன் கொடுத்து உதவுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் கிணறு வெட்டக் கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுப்பது மாத்திரம் அல்லாமல் கிணறு வெட்ட மானியம் 49-50-ம் வருஷத்தில் கொடுத்தார்கள். அத்தகைய உதவியைப் பெற்று அநேக விவசாயிகள் கிணறு வெட்டினார்கள். சிலர் கிணறு வெட்டியபோதிலும் நீர் வராமல் இருந்திருக்கிறது. சிலர் முழுக்க வெட்டாமலும் இருந்திருக்கிறார்கள். இதை அதிகாரிகள் கடைசியில் போய்ப் பார்க்காமலேயே விட்டுவிட்டார்கள். சரியாகக் கிணறு வெட்டப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்து வெட்டப்பட்டிருக்கிறது

[Sri K. R. Viswanathan] [20th January 1961

என்று ஒத்துக்கொள்ளப்பட்ட கிணறுகளுக்குக் கொடுத்த மானியம் திருப்பித் தரவேண்டாம். ஆனால் வெட்டப்படவில்லை என்று தெரிந்தால் அந்த மானியம் திருப்பி கடனைப்போல வசூல் செய்ய வேண்டியிருந்தது. அதிகாரிகளோ அப்போது பார்த்து சரியான முறையில் முடிவு தெரிவிக்காமல் விட்டுவிட்டார்கள். இப்போது எப்படி ஆகிறது? ஏழெட்டு வருஷங்கள் ஆகிவிட்டது. இப்போது பத்து வருஷக் கடன் என்ற பெயரில் திடீரென்று 500 ரூபாய் பணத்திற்கு 800, 900 ரூபாய் பாக்கி என்று விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதில் தவறு அதிகாரிகள் பேரிலும் இருக்கலாம், குடியானவர்கள் பேரிலும் இருக்கலாம். ஆனால் திடீரென்று இப்படி நோட்டீஸ் கொடுத்து அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்யப் போவது என்பது சரியல்ல. குடியானவர்கள் மிகவும் வருந்தி பயப்படுகிறார்கள். இதற்கு நான் தெரிவிக்கிற யோசனை என்னவென்றால் அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை பத்துத் தவணை, இருபது தவணை என்பதாகப் பிரித்து பல தவணைகளில் அவர்கள் திருப்பித் தர வேண்டும் என்று உத்தரவு போட்டால் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பித் தந்துவிடுவார்கள். இந்த மாதிரி உத்தரவிட்டால் குடியானவர்களுடைய வாழ்வு மலரும். விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு நாம் பல காரியங்களைச் செய்து வருகின்றபோது இப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு உதவினவர்களாக ஆகமாட்டோம். ஆகவே இதையும் அவசரமாகக் கவனித்து சர்க்கார் குடியானவர்களுக்கு உதவ முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய அரசாங்கம் பிற்பட்ட வகுப்பார்களுக்கு நல்ல உதவி செய்ய முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். பிற்பட்ட வகுப்பார்களுக்கு சென்ற ஆண்டு 27 லட்சம் ரூபாய் உதவினார்கள். இந்த ஆண்டு அதிகப்படியாக 12 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். ஆக 39 லட்சம் ரூபாய் அவர்களுக்காகச் செலவிட்டிருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் இன்னொரு விஷயம். அடுத்த ஆண்டு மீண்டும் 17 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கி பாக்கியை அடிஷனல் அலாட்மெண்டு என்று அதிகாரிகள் கோரிப் பெறவேண்டும் என்று செய்யக்கூடாது. இதனால் காலதாமதம் ஆகிறது. அடுத்த வருஷ பட்ஜெட்டிலேயே 39 லட்சம் என்று ஆரம்பத்திலேயே ஒதுக்கிவிட்டால் 'ஸ்காலர்ஷிப்' பெறுவதில் காலதாமதம் இருக்காது. மாணவர்களுக்கும் சிரமம் இராது. எப்படியோ அதிகாரிகள் இவ்வாண்டு புகார்கள் வருவதற்கு இடமின்றி, எவ்வித குற்றமும் இன்றி உதவித் தொகை வழங்கியிருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கப் பணம் வந்து சேருவதற்குக் காலதாமதமானால் அதற்கு ஏற்றபடி பணம் கொடுப்பதிலும் காலதாமதம் ஆகிவிடுகிறது. ஆகவே இந்த ஆண்டிலே எவ்வளவு செலவிட்டிருக்கிறோமோ அந்தத் தொகையை ஆரம்பத்திலேயே வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிவிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் மாணவர்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இராது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



20th January 1961] [Sri K. R. Viswanathan]

அதற்கு அடுத்தபடியாக கல்வியைப்பற்றி அரசாங்கம் செய்து வருகின்ற கடமைகள் பல. அவற்றை நாம் பாராட்டத்தான் வேண்டும். நாட்டில் இன்று இருக்கிற நிலைமையையும் நான் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் தமிழைப்பற்றி பிரமாதமாகப் பேசுகின்றோம். தமிழ் படிக்கின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு மூன்று தமிழ் வித்வான்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்றைய தினம் தமிழ் வித்வான் படித்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளைத் தவிர வேறு இடங்களில் அவர்களை நியமிக்க வசதி இல்லை. அதே போல் 'ட்ரில் மாஸ்டர்கள்' என்று சொல்லப்படுகிறவர்களும் நிறைய பயிற்சிபெற்று இருக்கிறார்கள். இவர்களுக்கும் வேலை வாய்ப்பு குறைவாக இருக்கிறது. அதனால் தமிழ் வித்வான்களோடு இவர்களும் வேலை இல்லாமல் தவிக்கிறார்கள். உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளிலும் கூட இவர்களை நியமிக்க வசதி செய்தால் இவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. அத்தகைய முடிவு எடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் பெருமான் உரை பலவகையிலும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது. அத்தகைய பெருமைவாய்ந்த உரையை நிகழ்த்திய அப்பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, அதுபற்றி பேசவும், சிந்திக்கவும் வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUES.

### A. Statutory Rules and Orders.

* 1. *Amendments to the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Rules, 1959, issued in G.O. Ms. No. 2847, Revenue, dated 13th July 1960. [Laid on the table of the House under Section 13 (2) of the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Act, 1958 (Madras Act XXXVI of 1958).]*

* 2. *Notification issued with G.O. Ms. No. 3423, Industries, Labour and Co-operation, dated 13th July 1960, under the Madras Money-lenders Act, 1957. [Laid on the table of the House under Section 22 of the Madras Money-lenders Act, 1957 (Madras Act XXVI of1957).]*

* 3. *Notification issued with G.O. No. 1273, Local Administration, dated 27th July 1960, declaring each of the local areas forming a Development Block in East Ramanathapuram Development*

[20th January 1961

*District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 4. *Notification issued with G.O. No.* 1274, *Local Administration, dated* 27*th July* 1960, *declaring each of the local areas forming a Development Block in East Ramanathapuram Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development, to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 5. *Amendments to notifications issued in G.O. No.* 1274, *Local Administration, dated* 27*th July* 1960, *regarding the declaration of each of the local areas forming Development Blocks in East and West Ramanathapuram Development Districts, for the purposes of the National Extension Service Scheme of Community Development, to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 6. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *declaring Madurabhashinipuram village in Pattukottai taluk (Thanjavur) as inam estate issued with G.O. Ms. No.* 2628, *Revenue, dated* 15*th June* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 7. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *declaring Kallamaduiyandal village in Arantangi taluk (Thanjavur) as inam estate, issued with G.O. Ms. No.* 2635, *Revenue, dated* 16*th June* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 8. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *declaring Nayinankulam village in Pattukottai taluk (Thanjavur) as an inam estate, issued with G.O. Ms. No.* 2636, *Revenue, dated* 16*th June* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]



20th January 1961]

* 9. *Notification issued with G.O. Ms. No.* 661, *Revenue, dated* 5*th February* 1960, *under the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959. [*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).]

* 10. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *declaring Marukovil village in Arantangi taluk (Thanjavur) as an inam estate, issued with G.O. Ms. No.* 2629, *Revenue, dated* 15*th June* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 11. *Amendment to rules framed under section* 67 *read with section* 15 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *issued in G.O. No.* 2427, *Revenue, dated* 30*th May* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

† 12. *Amendment to rule* 26 *of the Madras Industrial Disputes Rules*, 1958, *issued in G.O. Ms. Nos.* 3684 *and* 3685, *Industries, Labour and Co-operation (Labour), dated* 26*th July* 1960. [*Laid on the table of the House under section* 38 *of the Madras Industrial Disputes Act*, 1947 (*Central Act XIV of* 1947).]

**Sri A. VEDARATHNAM :** அண்ணாமலை பல்கலைக் கழகம் தமிழில் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றதே அவைகளை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றதா ? இல்லையானால் பயன்படுத்த முன் வருமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அதிலும் தகுந்த புத்தகங்கள் இருந்தால் கட்டாயம் பயன்படுத்தத்தான் செய்வோம்.

[a] Printed as Appendix V on pages 238–244 infra.

[21st January 1961

*Explosives to break rocks*

* 64 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கிணறுகளில் பாறையை உடைக்கும் வெடி மருந்து விற்பனை லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(இ) எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன ?

(உ) இல்லை என்றால், இனிமேலாவது வழங்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes;

(*b*)—

| *Serial number.* | *Year.* | *Number of licences granted.* |
|---|---|---|
| 1 | 1958 | 192 |
| 2 | 1959 | 131 |
| 3 | 1960 (up to 1—9—1960) | 168 |

(*c*) does not arise.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஸார், நமது ராஜ்யத்திலே பல மாவட்டங்களிலே பத்தாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டும்போது பாறைகள் வரக் கூடிய நேரத்தில் சட்ட ரீதியாக வெடி மருந்து வாங்கி வெடி வைத்துப் பெயர்ப்பதற்கு சென்னையிலுள்ள கலெக்டருக்கும், டி.எஸ்.பி-க்கும் எழுதி அனுமதி வாங்கி பக்கத்தில் இருக்கும் மைசூரில் போய் வெடி மருந்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகின்றது. இதைத் தவிர்க்க ஒவ்வொரு தாலூகாவிலும் வெடி மருந்து கிடைப்பதற்கு வெடி மருந்து விற்பனை செய்ய உடனடியாக லைசென்ஸ் வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : ஆண்டுதோறும் எவ்வளவு லைசென்ஸ் வழங்கப்பட்டது என்று சொன்னேன். அதிகமாக, பரிசீலனை செய்யாமல் வழங்குவது நல்லதல்ல. அது ஆபத்திற்குரியது என்பதும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஸார் . . . . .

**MR. SPEAKER** : The Hon. Member has already taken up the time required for three questions.



21st January 1961]

*Block Advisory Committees*

* 65 *Q.*—**SRI P. G. MANICKAM** : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடத்தில் நிறுவப்படும் வட்டார வளர்ச்சி அட்வைசரி கமிட்டிகளில் (Block Development Advisory Committee) சட்டசபை அங்கத்தினர்கள் எக்ஸ்-அபிசியோ (ex-officio) அங்கத்தினர்களாக நியமிக்கப்படாததிற்கு காரணமென்ன ?

(இ) 1960-ம் வருடத்தில் எத்தனை வட்டார வளர்ச்சி அட்வைசரி கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) When orders were issued in G.O. Ms. No. 281, Rural Development, dated 27th November 1959 for the constitution of Block Advisory Committees on an *ad hoc* basis inadvertently the position regarding Members of the Legislative Assembly in the Committees to be constituted with effect from 1st January 1960 was not fully clarified. The unfortunate omission has since been rectified. Orders have also been issued appointing Members of the Legislative Assembly as ex-officio members of the Block Advisory Committees in their constituencies.

(*b*) The information is not readily available. It will be collected and placed on the table of the House, in due course.

* 66 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the local Member of the Legislature is a Member of the Block Advisory Committee; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Does not arise.

**SRI K. SATTANATHA KARAYALAR** : ஸார், 1960-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதிக்கு முன்புள்ள பிளாக் அட்வைஸரி கமிட்டியிலும் தொகுதி எம்.எல்.ஏ. விடப்பட்டிருக்கிறதே, அதன் காரணம் என்ன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்போது அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து உத்திரவு அனுப்பப்பட்டிருக்கின்றது. இப்போது எந்த விதமான சங்கடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

**SRI T. S. RAMASWAMI** : செங்கோட்டை பிளாக்கில் கனம் அங்கத்தினர் அங்கத்தினராக இல்லை. அதன் காரணம் என்ன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : புதிதாக மறுபடியும் உத்திரவு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த உத்திரவு பிரகாரம் எல்லா அசெம்ப்ளி மெம்பர்களும் மெம்பராக இருப்பதற்கு இடம் இருக்கின்றது. இனிமேல் இந்தக் குறை ஏற்பட இடமில்லை.

[21st January 1961

*Memorial to V.O. Chidambaram*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 67 is not in his seat, the question and answer will be printed in the proceedings[a].

*Anicut across Sendurai odai*

* 68 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூகா குருமூர் கிராம ஏரிக்குத் தண்ணீர் கொடுக்க செந்துறை ஓடையில் மொட்டணை கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், எவ்வளவு செலவில் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The anicut will be across Kulumur Odai, below the confluence of Sendurai and Nakkambadi Odais.

(*b*) Rs. 79,000.

SRI S. LAZAR : May I know, Sir, whether is has been included in the Third Five-Year Plan ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of being included in the Third Plan. If the scrutiny is finalised, it will be taken up presently.

*Memorial to V. O. Chidambaram—Q. No. 67 continued*

SRI K. VINAYAKAM : Sir, I would request the Chair to go back to Question No. 67 as it is of paramount importance to the House.

MR. SPEAKER : The hon. Member is not alert. If, however, the House desires to allow the question to be put and answered, I have no objection.

SRI N. R. THIAGARAJAN : ஸார், 67-வது கேள்வி சிதம்பரனார் சம்பந்தமானது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

SRI N. R. THIAGARAJAN : ஸார், தயவு செய்து இக் கேள்வியை எடுத்துக் கொள்ளுங்கள்.

MR. SPEAKER : சரி, யார் இந்தக் கேள்வியைக் கேட்கப் போகிறார்கள் ?

* 67 *Q.*—SRI N. R. THIAGARAJAN (on behalf of Sri K. R. NALLASIVAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவை மத்திய சிறையில் செக்கிழுத்த சிதம்பரனாருக்கு ஞாபகச் சின்னம் எழுப்பும் உத்தேசம் உண்டா ?

[a] Answered subsequently.



21st January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்குக் கோவை சிறையில் நினைவுச் சின்னம் நிறுவும் யோசனை இல்லை. அவர்கள் பிறப்பிடமாகிய ஓட்டப்பிடாரத்தில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

*S.S.L.C. Examination*

* 69 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the nature of encouragement given by the Government to the High Schools which produced cent per cent results in the S.S.L.C. Examination for the past two years?

THE HON. SRI C. SUBRAMANIAN : None of the High schools in this State produced cent per cent results in the S.S.L.C. Public Examinations held during the last two years. The schools that produced 75 per cent and more of passes were commended.

SRI A. VEDARATHNAM : நூற்றுக்கு நூறு மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் தேறிய பள்ளிகளுக்கு அரசாங்கம் என்ன ஊக்கம் கொடுக்க முன்வரும் ? இதுவரை என்ன செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாராட்டுதல் தெரிவிக்கப் படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறும் அல்லது அதைவிட 5, 10, 20 சதவிகிதம் குறைந்து தேறும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் தூண்டுவிக்கப்படுகிறதா ? அல்லது ரொம்ப குறைந்த பாஸ் செய்யும் உயர்நிலைப் பள்ளிகளையும் தூண்டுவிக்கப் படுகிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டையும் தூண்டு விக்கப்படுவது உண்டு. ரொம்ப குறைவாக தேறும் பள்ளிகளை இன்னும் நன்றாக போதிக்க வேண்டுமென்று தூண்டுவிக்கப்படு கிறது. அதே மாதிரி நிறைய மாணவர்கள் தேறும் பள்ளிகளுக்கு பாராட்டுதல் தெரிவிக்கப்படுகின்றது.

SRI A. A. RASHEED : Is it a fact that there was a large percentage of failures in the recent S.S.L.C. Examination and if so, may I know the reasons for failures?

(No answer)

SRI A. VEDARATHNAM : நன்றாக நடத்தப்படுகின்ற பள்ளி களுக்குப் பரிசுத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதேபோல் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறுகின்ற பள்ளிகளுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுமா ?

[21st January 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்தப் பரிசைக் குறிப்பிடுகின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அப்படி நூற்றுக்கு நூறு தேறும் பள்ளிகளுக்குப் பரிசு கொடுக்கும் திட்டம் இருந்தால், அவர்களுக்கு அந்தப் பரிசு கொடுக்கப்படும்.

*Cases of dog bite*

* 70 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any increase in the number of cases of dog bite reported in Government Hospitals in the Madras City; and

(*b*) if so, the steps taken to remove stray dogs in the City?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir. The number of dog bite cases treated in the City State Hospitals (except the specialist institutions) has increased during the current year as compared to the previous years.

(*b*) Intensive action has been and are being taken by the Corporation of Madras to abate the nuisance of stray and unlicensed dogs by arranging for frequent raids by dog vans in all parts of the City to round up and remove such dogs to the Corporation Lethal Chamber at Basin Bridge for destruction.

SRI A.A. RASHEED: Is the Hon. Minister aware that stray dogs will continue to roam in big numbers in the Madras City and if so, will the Government come forward to aid the Corporation for the purchase of additional vans to catch these stray dogs?

THE HON. SRI M. A. MANICKAVELU: It is primarily the responsibility of the Corporation of Madras and now they have increased their activities. Probably, as has been stated with regard to a question about schools just a few minutes ago, a little more 'thoonduthal' will be done here also.

SRI S. NAGARAJA MONIGAR: இந்த நாய்க் கடிகளெல்லாம் லைசென்ஸ் பெறாமல் தெருவிலே திரிகின்ற நாய்களால் ஏற்படுகின்றனவா? அல்லது லைசென்ஸ் பெற்று சொந்தக்காரர்களால் வளர்க்கப்படுகின்ற வீட்டு நாய்களால் ஏற்படுகின்றனவா? அப்படியானால் அதற்கான கணக்குகள் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: வீட்டிலே உள்ள நாய்கள் கட்டிப்போட்டு இருப்பதால் அவைகள் கடிக்காது. தெருவிலே உள்ள நாய்கள்தான் கடிக்கும்.

*Cement*

* 71 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government of India have made any suggestion to this Government for abolishing the Cement Licensing System?



21st January 1961]

THE HON. SRI P. KAKKAN: Yes, Sir. The Government of India requested this Government to consider the question of doing away with the system of licensing of Cement Stockists.

The question has been examined by this Government and they have decided that the present system of licensing of cement stockists should continue.

SRI A. A. RASHEED: Since the Government of India have recommended and also in view of the larger production of cement in our State; will the Government be pleased to abolish this licensing system?

THE HON. SRI P. KAKKAN: Not now.

*Elementary Schools*

* 72 *Q*.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை ஆரம்பப் பள்ளிகள் உயர் ஆரம்பப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன—தாலூகா வாரியாக?

(இ) தஞ்சை ஜில்லாவில் எத்தனை ஆரம்பப் பள்ளிகளை உயர் ஆரம்பப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென வந்த விண்ணப்பங்கள் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன—தாலூகா வாரியாக?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) A statement[*] is laid on the table of the House.

SRI A. VEDARATHNAM: மேஜை மீது வைத்திருக்கும் பேபரில் மொத்தம் 77 பள்ளிகள் விண்ணப்பித்திருந்ததாகவும், அவற்றில் 35 பள்ளிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எல்லாம் எந்த காரணத்திற்காக, எந்த கொள்கையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: பக்கத்திலே போதுமான பள்ளிக்கூடங்கள் இருந்தால் அப்போது புதிய உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி மறுக்கப்படும். அல்லது போதுமான இடவசதி இல்லாவிட்டாலும் அனுமதி மறுக்கப்படும். இந்த மாதிரியான அடிப்படைகளை வைத்துக் கொண்டுதான் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

SRI A. VEDARATHNAM: ஒரே ஊரில் தனியார் நடத்தும் பள்ளியும், போர்டு பள்ளியும் அங்கீகாரம் வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டால், எதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கும்? எதை நிராகரிக்கும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடக்கிறதோ அதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

[*] Printed as Appendix VI on page 245 infra.

[21st January 1961

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: பக்கத்திலே ஒரு உயர்தர பள்ளிக்கூடம் இருந்தும், சில இடங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: அந்த மாதிரி இருக்கக் கூடிய கேஸ்களைக் குறித்துக் கொடுத்தால், கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

**SRI A. VEDARATHNAM**: திருத்துறைப்பூண்டி தாலூகாவில் 10 பள்ளிக்கூடங்கள் அப்-கிரேட் செய்வதற்காக விண்ணப்பித்திருந்தும், 10 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அது எந்த காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்று கூற முடியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: நான் சொன்ன காரணத்தினால்தான். நாகப்பட்டிணத்தில் 5 பள்ளிகளுக்கு 5 பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் கவனிக்க வேண்டும். ஆகவே, ஆங்காங்கே இருக்கக்கூடிய அத்தியாவசியத்தை அனுசரித்தே, போதுமான பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

*Teachers Training Colleges*

* 73 Q.—**SRI A. VEDARATHNAM**: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் இம்மாநிலத்திலுள்ள பி.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒவ்வொன்றிலும் எத்தனை பயிற்சியாளர்களுக்கு இடமிருக்கின்றது ?

(இ) அவை ஒவ்வொன்றிலும் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை பயிற்சியாளர்கள் (விஞ்ஞானம், கணிதம், சமூகம் போன்ற சப்ஜக்ட் வாரியாக) சேர்ந்திருக்கிறார்கள் ?

(உ) இம்மாநிலத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க இந்த எண்ணிக்கை போதுமானதா ?

(எ) இல்லையானால் இந்தப் பற்றாக்குறையைப் போக்க என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: (a) & (b) A statement [a] is laid the table of the House.

(c) Yes, Sir.

(d) Does not arise.

**SRI A. VEDARATHNAM**: இப்போது இந்த ஆண்டு அனுபவத்திலிருந்து நம்முடைய மாகாணத்திற்குப் போதுமான பட்டதாரி ஆசிரியர்களை இப்போதுள்ள கல்லூரிகளிலேயே தயார் செய்து விட முடியுமென்று நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி இல்லையானால், இன்னும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக்கான கல்லூரிகள் தேவைப்படுமா ? அப்படித் தேவைப்பட்டால், அப்படிப்பட்ட கல்லூரிகளில் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான யோசனை அரசாங்கத்திடம் உள்ளதா ?

[a] Printed as Appendix VII on page 246 infra.



21st January 1961]

**THE HON. SRI C. SUBRAMANIAM**: சென்ற ஆண்டுவரையிலும் இப்போது இருக்கக்கூடிய கல்லூரிகளிலேயே போதுமான அளவு மாணவர்கள் வந்து சேரவில்லை. ஆனால், இந்த ஆண்டு கொஞ்சம் நிலைமை சீரடைந்து உள்ளது. ஆண்களுக்கு இருக்கக் கூடிய இடம் 965. ஆனால் 942 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். இருபத்திமூன்று இடம் பாக்கியிருக்கிறது. அதுபோல் பெண்களுக்கு இருக்கக்கூடிய இடம் 400. அதில் 376 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் 24 இடம் பாக்கியிருக்கிறது. இப்போது சம்பள உயர்வு கொஞ்சம் அதிகம் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டு அதிகம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய எல்லா இடங்களுக்கும், வருஷா வருஷம் சேர்ந்து விடுவார்களேயானால், நிலைமை சீரடைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*Kattalai Pullambadi canals*

* 74 Q.—**SRI V. K. KOTHANDARAMAN**: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கட்டளை, புள்ளம்பாடி கால்வாய்கள் கட்டும் வேலை முடிந்து விட்டதா ?

(இ) இதுவரை அவ்வேலையில் அமர்த்தியிருந்த வேலையாள்களை மற்றத் திட்டங்களிலும் அமர்த்தும் உத்தேசம் உண்டா ?

**THE HON. SRI P. KAKKAN**: (a) The work is nearing completion.

(b) The workers employed by the contractors have been taken away by them to other projects under execution or disbanded, if not required. Action is being taken to absorb the maistries and operators employed departmentally in other projects to the extent feasible.

*University (Coimbatore)*

* 75 Q.—**SRI N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to start a University in the Coimbatore district?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: No final decision has been taken regarding the starting of new Universities.

**SRI N. K. PALANISAMI**: கோயம்புத்தூரிலே, 2, 3 என்ஜினீயரிங் கல்லூரிகளும், கலாசாலைகளும், இன்னும் மருத்துவ கல்லூரி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே பல்கலைக் கழகம் ஒன்றைத் துவங்க சர்க்கார் முன்வருவார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இப்போதே கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் தன் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே இனி போட்டி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்துவது என்றால், யூனிவர்சிடி

கிராண்ட்ஸ் கமிஷனைக் கலந்து, எங்கெங்கே அவசியமோ அங்கெல்லாம் ஏற்படுத்துவது என்ற அடிப்படையை வைத்துக் கொண்டு, அந்தந்த இடங்களில் போதிய சர்வகலாசாலைகளை அமைக்க வேண்டுமென்று சர்க்கார் முயற்சி செய்யும்.

SRI V. SANKARAN : ஏற்கனவே பல வருஷங்களாக கேட்டுக் கொண்டு வருகிற ஒரு மாவட்டத்தினுடைய கோரிக்கையையும், அதோடு ஏற்கனவே சில அமைச்சர்கள் பல இடங்களில் சூசகமாகவும், வெளிப்படையாகவும் மதுரையில் ஒரு சர்வகலாசாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று சொல்லிய பேச்சுக்களையும் கௌரவிக்க மதுரையில் சர்வகலாசாலை அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சர்வகலாசாலை அமைக்கக்கூடிய விஷயம். மந்திரிகளுடைய கருத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இது அமைப்பது அல்ல. இது சர்வகலாசாலையின் சிபார்சையும் பொறுத்திருக்கிறது. நான் முன்பு சொன்னது போல யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சையும் பொறுத்திருக்கிறது. இதையெல்லாம் வைத்துக்கொண்டு முடிவு எடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகையினாலே அநேக ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு வருகிறோம் என்ற அடிப்படையில் முடிவு செய்ய முடியாது. மந்திரிகள் விரும்புகிறார்கள் என்ற அடிப்படையிலும் முடிவு செய்ய முடியாது.

SRI N. R. THIAGARAJAN : ஏற்கனவே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் மதுரையில் இருந்திருக்கின்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் மதுரையில் தோன்றியது. இதை யெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சங்கம் வளர்த்த மதுரையில் சர்வகலாசாலை ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை அடிக்கடி வலியுறுத்தவேண்டாம் என்று ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், மதுரையில் அக்கரை இருந்தால். ஏனென்றால் மதுரையில் மூன்று சங்கங்கள் இருந்து அழிந்து விட்டன, மறுபடியும் அங்கு ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டு அழிந்து விடக்கூடாது என்று மக்கள் நினைத்துவிடக்கூடாது. (சிரிப்பு).

SRI S. LAZAR : மாவட்டங்களிலே அதிகப்படியான கல்லூரிகள் இருக்கிற காரணத்தினால் அங்கே யுனிவர்ஸிடி வேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், மேலும் ஏற்படுத்தக்கூடிய கல்லூரிகளை கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுமாதிரி தான் இப்பொழுது கல்லூரிகள் அமைத்துக்கொண்டு வரப்படுகிறது. ஆனால் இப்பொழுது சாதாரணமாக பட்டப் படிப்பு கல்லூரிகள்



இருக்கக்கூடிய இடங்களில் இன்னும் போதுமான மாணவர்கள் சேரவில்லை. ஆகையினால் அங்கெல்லாம் புதியதாக கல்லூரிகள் ஏற்படுத்துவது என்பது பற்றி கொஞ்சம் நிதானமாக யோசித்துத் தான் முடிவு செய்யப்படுகிறது.

SRI V. SANKARAN : ஏற்கனவே உள்ள சென்னை சர்வகலாசாலை தன்னைப்போன்று இன்னொரு சர்வகலாசாலை இந்த ராஜ்யத்தில் சில மாவட்டங்களைக் கொண்டு வைத்தால் தன்னுடைய ஆதிக்கம் ஓரளவு குறைந்துவிடும் என்ற காரணத்தை வைத்து அதற்கு மாறாக அபிப்பிராயம் கொடுத்தால், அதையெல்லாம் மனதில் கொண்டு பரிசீலிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : செனட்டில் இருக்கக்கூடியவர்கள் சென்னையிலும், சென்னைக்கு பக்கத்திலும் மட்டும் இருக்கக்கூடியவர்கள் அல்ல. நமது ராஜ்யம் முழுவதிலும் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்திருக்கக்கூடியவர்கள் செனட்டில் இருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளின் அவசியத்தையும் மனதில் வைத்து அவர்கள் முடிவு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலும் சர்வகலாசாலையில் இருக்கக்கூடிய அறிஞர்கள் இதுபோன்று போட்டி வந்துவிடும் என்ற அடிப்படையில் நினைக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் இன்னொரு சர்வகலாசாலை தொடங்குவது பற்றி சென்னை சர்வகலாசாலைக்கும், யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷனுக்கும் என்ன யோசனைகள் அனுப்பியிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதுரையில் இன்னொரு சர்வகலாசாலை ஏற்படுத்தலாமா, அதுபற்றி கருத்து என்ன என்று யுனிவர்ஸிடியைக் கேட்டிருக்கிறோம்.

*Nakkambadi Village Lake*

* 76 Q.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN (on behalf of SRI S. RAMALINGA PADAYACHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகா நக்கம்பாடி கிராம ஏரியை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியாயின், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The matter is under consideration of the Chief Engineer (Irrigation).

[21st January 1961

*Advocate-General*

* 77 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to a resolution passed by the Madras Advocates' Association expressing want of confidence in the Advocate-General; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) No action is called for by the Government on this resolution.

* 78 *Q.*—Sri A. A. RASHEED : }
Sri T. S. RAMASWAMY : } Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Advocate-General has offered to resign his post;

(*b*) whether his resignation has been accepted; and

(*c*) if not, why?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) No.

(*c*) Government was of the view that the resignation was not warranted.

Sri A. A. RASHEED : Is it not essential that the Advocate-General should carry with him the goodwill and confidence of the Bar as well as the Advocates' Association?

The Hon. Sri C. SUBRAMANIAM : I think the Advocate-General was the Advocate-General for the Government. The Government should have confidence in his capacity and ability to conduct cases and to advise the Government. The other matters do not arise at all as far as Government are concerned.

**Sri N. R. THIAGARAJAN :** சென்னையில் உள்ள வழக்கறிஞர் மன்றத்தில் அட்வகேட் ஜெனரல் நியமனம் பற்றி சம்பந்தம் இல்லாத தீர்மானங்களைப் போடுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

* * * * *

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இப்படி தீர்மானம் போடுவதற்கு அவர்கள் அதிகாரம் இருந்து தீர்மானம் போட வேண்டும் என்று அவசியம் கிடையாது. சட்ட சபையில் அது மாதிரி தீர்மானம் வந்தால் அது சட்டத்திற்கு உள்பட்டதா என்பது பற்றி கனம் ஸ்பீக்கர் அவர்கள் ஆலோசனை செய்து சட்டத்திற்கு உள்படாத தீர்மானத்தை நிராகரித்து விடுகிறார்கள். அதுமாதிரி சங்கங்கள் தீர்மானங்கள் போடுவதற்கு நாம் எந்த விதமான விதியும் செய்ய முடியாது.

* **Expunged as ordered by the chair.**



21st January 1961]

**Mr. SPEAKER :** *கனம் அங்கத்தினர்கள் சட்ட சபையில் பேசும்பொழுது மரியாதையான, நாணயமான வார்த்தைகளை உபயோகப்படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு கோபம் வரும்படியான வார்த்தைகளை உபயோகப்படுத்தக்கூடாது.*

Sri K. VINAYAKAM : Are the Government aware of the fact that the concerned Madras Advocates' Association is fast contemplating to rescind that resolution and to pass a resolution expressing their confidence in the Advocate-General?

The Hon. Sri C. SUBRAMANIAM : Anyhow I am not interested in the matter. It is for the Advocates' Association either to pass the resolution or rescind the resolution. Government are not interested in that matter.

Sri T. S. RAMASWAMY : May I know whether Government are aware of the reasons behind the no-confidence resolution passed by the Bar Association? May I know whether it has been communicated to Government and if so, when?

The Hon. Sri C. SUBRAMANIAM : I thought the hon. Member would have read the resolution when he put the question. The resolution passed should contain the reasons.

*Publication of Text-books*

* 79 *Q.*—**Sri A. VEDARATHNAM :** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 16 தேதியில் 201-வது எண் கேள்விக்களித்த பதிலையொட்டி இ.எஸ்.எல்.சி. வகுப்புகளுக்குப் பாடப் புத்தகங்கள் அரசாங்கம் வெளியிடுகின்றதா? அப்படியானால் என்ன என்ன புத்தகங்கள்?*

*(இ) இவை காலதாமதமாய் வெளிவருவதால் இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?*

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. Two books are published by Government for E.S.L.C., viz., English Text Book and Tamil Text Book.

(*b*) There has been no delay in the publication of these books.

**Sri A. VEDARATHNAM :** *அரசாங்கம் வெளியிடுகிற அந்த புத்தகங்கள் உரிய காலத்தில் அச்சிடப்பட்டும், தேவையான அளவு அச்சிடப்படாத காரணத்தினால், வெகு விரைவிலே அவைகள் தீர்ந்துபோய், பின்னால் வருகிற பள்ளிகளுக்கு புத்தகங்கள் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. எனவே, தேவையை அறிந்து அதற்கு காலம் தாழ்த்தாமல் உரிய காலத்தில் புத்தகங்கள் பள்ளிகளுக்கு கிடைக்கும்படிச் செய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையிலும் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று யாரிடத்திலிருந்தும் புகார் வரவில்லை என்று எனக்கு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அத்துடன் இன்னும் அதிகமான பிரதிகள் அச்சடித்து பிரஸ்ஸில் வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகையினாலே எந்தக் காலத்திலும் புத்தகங்கள் இல்லை என்று சொல்லுவதற்கு இல்லை.

*Compulsory National Service by Students*

* 80 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டெல்லியில் 1960-ம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் 19-ம் தேதியில் நடந்த கல்வி இலாகா காரியதரிசிகள் மகாநாட்டில், மெட்ரிகுலேஷனுக்குப் பிறகோ, அல்லது மேல் செகண்டரி கட்டத்திற்குப் பின்போ, மாணவர்களுக்குக் கட்டாய தேசிய சேவை திட்டத்தை அமல் நடத்துவது பற்றிய முடிவென்ன ?

(இ) இதில் நம் மாநிலத்தின் சார்பில் சென்றது யார் ? நம் மாநிலத்தின் சார்பாக இதுபற்றி தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The matter was discussed at the Conference. No decision was taken.

(*b*) Secretary to Government, Education and Public Health Department attended the conference on behalf of this State. The principles underlying the scheme were welcomed. But various practical difficulties in giving effect to it were pointed out and it was suggested that the scheme should be suitably integrated with the academic courses in the Higher Secondary and University stages.

SRI A. VEDARATHNAM : ஹையர் செகண்டரி முடித்தபின் இந்த சேவையில் அவர்களை ஈடுபடுத்துவதைக் காட்டிலும், அவர்கள் பள்ளிப் படிப்பில் இம்மாதிரி சேவை மனப்பான்மையையும், சேவையில் ஈடுபடுகிற வாய்ப்பையும், அவர்களுடைய பாடத்திட்டங்களில் இணைப்பது நன்ருக இருக்கும் அல்லவா ? அதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் என்னுடைய விடையில் சொன்னேன். அதுமாதிரி இந்த சர்க்கார் அங்கு சிபார்சு செய்திருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.



[*Note.*—**An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in the Legislative Assembly of "The Madras General Sales Tax (Amendment) Bill, 1961".

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Amendment) Bill, 1961.

MR. SPEAKER : There is one small mistake. I do not know whether it has been brought to the notice of the Hon. Minister. This is the eleventh year of the Republic. It is printed in the Bill as the twelfth year of the Republic. I hope it would be corrected.

THE HON. SRI R. VENKATARAMAN : It will be corrected as eleventh year when the Bill is taken up for consideration.

MR. SPEAKER : All right.

The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1961".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS ESTATES LAND (REDUCTION OF RENT) (AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Estates Land (Reduction of Rent) (Amendment) Bill, 1961. 9-30 a.m.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Estates Land (Reduction of Rent) (Amendment) Bill, 1961".

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

Necessary amendment for changing the year will be brought when the Bill is taken up for consideration.

MR. SPEAKER : The Bill is introduced.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : It was agreed that one leader would speak every day. But I am told that no leader is speaking to-day and two leaders will be speaking on Monday. I have no objection. Then to-day more hon. Members will get a chance to speak. Now hon. Members will move their amendments to the motion of thanks

[21st January 1961

[Mr. Speaker]

to the Governor's Address. I shall call the number of the amendment and the hon. Member who has given notice of it will move it.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I move the following amendments—

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made about the steps taken to bring down the high prices of foodstuffs and other essential articles."

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no steps have been taken by this Government to impress on the Centre the urgent need to construct more railway lines in this State which are essential for the prosperity of this State."

The amendments were duly seconded.

MR. SPEAKER: There is one difficulty about the amendment given notice of by the hon. Member, Sri P. S. Chinnadurai. The hon. Member has given notice of a resolution on the same subject. So he has to choose either the resolution or this amendment. If, by any chance, the amendment given notice of by him is defeated, the resolution given notice of by him will be ruled out.

SRI P. S. CHINNADURAI: I am not moving the amendment standing in my name.

MR. SPEAKER: I take it that Sri P. S. Chinnadurai, Sri A. Govindaswamy, Sri M. Selvaraj and Sri S. M. Annamalai are not moving this amendment.

SRI P. S. CHINNADURAI: Sir, I move the following amendments:—

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to providing free education up to S.S.L.C. to the pupils of the State."

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to desilting of all irrigation tanks in the State."

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to installation of a heavy Electrical Equipment Factory in the State."

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to establishing an oil refinery in the State."

The amendments were duly seconded.

SRI M. SELVARAJ: Sir, I move the following amendments:—

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to compensation to be paid to land owners in Neyveli area."



21st January 1961] [Sri M. Selvaraj]

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to the improvement to the Cuddalore Port."

The amendments were duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move the following amendments:—

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to the plight of Handloom weavers in this State."

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no mention has been made in regard to the steps proposed to be taken to increase the per-capita income of the agricultural labourers."

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move the following amendments:—

'*Add* at the end the following:

" . . . but regrets to note that no reference has been made about the crisis of the handloom industry in the State, particularly arising out of fall of export of handloom cloth like 'Bleeding Madras."

'*Add* at the end the following:

" . . . but regrets to point out that the Government have failed to release the long term political prisoners in the State."

'*Add* at the end the following:

" . . . but regrets to point out that the allotment for the Third Plan for the State is far from adequate to meet the essential needs of the State, particularly with regard to Irrigation Schemes, Industry and Agriculture."

'*Add* at the end the following:

" . . . but regrets to point out the failure of the Government to issue Rules in time and ensure the supply of books and forms to the newly constituted Panchayats and Panchayat Union Councils, resulting in ineffective functioning of those bodies."

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I second the amendments.

MR. SPEAKER: The motion and the amendments are now before the House for discussion. We shall now proceed with the discussion. I will allow fifteen minutes for each speaker. If more speakers come forward, I will have to reduce the time limit to ten minutes.

* SRI S. NAGARAJA MONIGAR: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு வந்தனம் செலுத்தும் முறையிலே, திரு. செல்வராஜ் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள்

[Sri S. Nagaraja Monigar] [21st January 1961

பேச விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் சொல்லத் தேவையில்லை. இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து, அதை எப்படி அமுல் நடத்துவது என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இதனுடைய அர்த்தம் என்னவென்றால், மிக்க தாழ்ந்த நிலையில் இருந்த ஒரு அடிமை நாடு சுதந்திரம் அடைந்த பின்பு எந்தவிதமான தொல்லைகளும், இடுக்கண்களும், வேலை நிறுத்தங்களும் குழப்பங்களும் இல்லாமல் முன்னேறிக் கொண்டு வருகிறது என்பதுதான். ஏனென்றால் நம்முடன் சுய ஆட்சி பெற்ற பல நாடுகளில் இன்று இருக்கிற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். எவ்வளவோ வசதிகள் குறைவாக இருந்தாலும்கூட, மிக்க உயரிய காரியங்களை நாம் சாதித்திருக்கிறோம். நமக்கென்று ஒரு அரசியல் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன்படி பெரிய அளவில் பொதுத் தேர்தல்களையும் நல்ல முறையில் நடத்தி வந்திருக்கிறோம். இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களை விட நமது சென்னை மாகாணம் மிகச் சிறந்த முறையில் முன்னேறி வருகிறது என்பதை இங்கேயுள்ள ஒவ்வொருவரும், மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் ஒப்புக்கொள்ளவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், உலக மக்கள்கூட இந்தியாவின் சிநேகத்தையும், ஒத்துழைப்பையும் நாடுகிற ரீதியிலே நாம் இருந்து வருகிறோம். வருஷா வருஷம் அநேக தடவைகளில் நாம் இங்கே கூடுவதும், உயரிய முறையில் கவர்னர் பெருமான் அவர்கள் நம் நாட்டிற்குச் செய்தவைகளையும், செய்ய வேண்டியவைகளையும் வழிவகுத்து, இரண்டு சபைகளையும் கூட்டி நிகழ்த்தும் உரைகள் எல்லாம் நமக்கு மகிழ்ச்சியைத் தராமல் வேறு எதைக் கொடுக்க முடியுமென்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உள்ளதைக் கொண்டு மனத்தைச் சந்தோஷப்படுத்தி, சாந்தப்படுத்திக் கொண்டால்தான், நாம் மேலும் பெறவேண்டியவைகளை அடைந்து முன்னேற முடியும். இதற்காக பாடுபட்டவர்கள் திருப்தி அடைந்து, சந்துஷ்டியுடன் வேலை செய்தால், குறிப்பாக நமது ஊழியர்களும், மற்றவர்களும் வேலை செய்தால், அந்த அளவுக்கு நாம் முன்னேற முடியும். அப்படியிருக்கையில், ஒன்றும் இல்லாதவர்களுக்கு இவ்வளவு கொடுத்துவிட்ட நேரத்தில், இன்னும் எவ்வளவு கொடுத்தாலும் போதாது என்று அதிகமாக ஆசைப்படுவது நல்லதல்ல. இதுவரை நடந்தவைகளுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நமது நாட்டில் எத்தனையோ புலவர்களும், அறிஞர்களும் தோன்றியிருக்கிறார்கள். ஆனாலும் வள்ளுவரைத்தான் நாம் அதிகமாகப் புகழவேண்டிய நிலையிலிருக்கிறோம். வள்ளுவர் அவர்களைப் புகழவில்லையானால், நாம் நன்றிகெட்டவர்களாக இருப்போம். "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இந்த மாதிரி சட்டசபை கூடுகிற நேரங்களிலெல்லாம், நமது நாட்டிலே எத்தனையோ சிக்கல்கள், கலகங்கள், குழப்பங்கள், வேலைநிறுத்



21st January 1961] [Sri S. Nagaraja Monigar]

தங்கள் இருந்துகொண்டிருந்திருக்கின்றன. நம்முடைய மாகாணத்திலே அப்படியெல்லாம் காண்பதற்கில்லை. அமைதியாகவே இருந்துகொண்டிருக்கிறோம் என்பது அவரவருடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொண்டால் தெரியும்.

இன்று நாம் பார்த்தால், கல்வி வசதி, நீர்ப்பாசன வசதி, ரோடுகள் வசதி, உணவு அபிவிருத்தி ஆகிய வகைகளில் நாம் முன்னேறிக் கொண்டுதான் வருகிறோம். முன்னேற்றத்தின் அறிகுறிக்கு உதாரணமாக, சமீபத்தில் நடந்த பொங்கலின்பொழுது பொங்கல் வாழ்த்துச் செய்திகள் எவ்வளவு அதிகமாக அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்கவேண்டும். எந்தக் கடைக்குப் போனாலும் விதவிதமான வாழ்த்துச் செய்திகளும், அவற்றை அனுப்புவதற்கு விதவிதமான உறைகளும் விற்பதைப் பார்த்தோம். இது ஒரு நல்ல அடையாளம். ஆகவே இந்த உரைக்கு வந்தனம் செலுத்தும் தீர்மானத்தை மிக்க மரியாதையோடு நான் ஆமோதிக்கிறேன். அத்துடன் கவர்னர் அவர்களுக்கும், நமது அரசாங்கத்திற்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமையல்காரனைப் பிடிக்காது, அவனைக் கண்டால் ஆகாது. ஆனால் அவன் செய்யும் பாயாசம், சாம்பார், ரசம் எல்லாம் நான் விடமாட்டேன் என்று கூறுபவன் நான் அல்ல.

பிரிட்டிஷ் ராணி அவர்கள் நமது ராஜ்யத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள். காந்தி மகான் வகுத்த கொள்கையைக் கடைப்பிடித்து உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக நாம் இருந்து வருகிறோம். நம்மை அடக்கி ஆண்டவர்களின் சம்பந்தம் அறுபட்டுப் போய் 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்படியிருந்தும் அந்த நாட்டுடனும், மற்ற நாடுகளோடும் சகோதரத் தன்மையுடனும், நட்புடனும் நாம் வாழ்ந்து வருகிறோம். ராணி அவர்கள் இங்கே வரும்பொழுது நமது கார்ப்பொரேஷன் மேயர் அவர்களும் கூட வரவேற்பார்கள் என்று பத்திரிகையில் படித்தேன். மிக்க சந்தோஷம். "இந்த நாட்டான், அந்த நாட்டான்" என்று சமீபத்திலே இருக்கிற வட நாட்டானை வெறுத்தாலும், 6,000 மைல்களுக்கு அப்பாலே இருந்து வருகிற ராணி அம்மையாரை அந்தக் காலத்தில் தங்களுக்கு ரொம்ப வேண்டியவர்களாக இருந்து, உங்களை நாங்கள் என்றும் விட்டுப் பிரியமாட்டோம் என்று சொல்லிவந்தவர்கள்—அழைப்பதுபற்றி மிக்க சந்தோஷம். இதை நான் சொல்லுகின்ற பொழுது கடமைக்குக் கட்டுப்பட்டவர்கள் குறுக்கு வழியில் போகமாட்டார்கள், விட்டு விடமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அதே சமயத்திலே, இன்னும் முன்னேற வேண்டியிருப்பதன் அவசியத்தையும், மூன்றாவது திட்டம் பற்றியும், குறிப்பாக என்னுடைய தொகுதி பற்றியும் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதிகாரத்தில் பரவல் முறை கையாளப்படுகிறது. அது மிகவும் வரவேற்கத் தக்கது. நீர்ப்பாசனம், மின்சாரம் முதலிய பல துறைகளிலும், பரவல் முறை கையாளப்படவேண்டும் என்று நீண்ட நெடுநாட்களாகக் கேட்டு வந்திருக்

இருேம். சாதாரண கடிதப் போக்கு வரத்துக்கும் பல மாதங்கள், சில வருடங்கள்கூட காத்திருக்க வேண்டிய நிலைமைதான் இருந்து வந்திருக்கிறது. இந்த பஞ்சாயத்துக் கவுன்சில்கள் ஏற்படுத்தி, அதிலேயும் இந்தப் பரவல் முறை கையாளப்படுவது, மிக மிக முன்னேற்றகரமானது. சிறிய சிறிய சுயராஜ்யங்கள் ஏற்படும்; வோட்டர்கள் வோட்டுப் போட்டு, பிரதிநிதிகளை அனுப்பி விட்டு சும்மா இருந்து விடுவார்கள்; அவர்களுக்கும், தங்கள், தங்கள் பிராந்தியங்களிலே, பொறுப்பும், பெருமையும் உள்ள காரியங்களைத் தாங்களே செய்ய வாய்ப்பு கொடுக்கப் படுகிறது. அவர்கள் பிறர் மீது மட்டும் குறை சொல்லிக் கொண்டு இருந்து விடாமல், தாங்களே தங்கள் பகுதிகளில் சிற்சில காரியங் களைச் செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும். மந்திரிகள் செய்யவில்லை, ஜில்லா போர்டு தலைவர் செய்யவில்லை என்றெல்லாம் குறை சொல்லிக் கொண்டிராமல், தாங்களே காரியங்களைச் செய்ய வாய்ப்பு அளித்திருப்பது, மிகுந்த அனுகூலமானது என்பதில் சந்தேகம் இல்லை. அது எதிர்காலத்தில் பக்குவமான பிரஜை களாகப் போவதில், குறைகளை நீக்கி காரியங்களைச் செய்வதில், நாட்டை முன்னுக்குக் கொண்டு வர பணிசெய்வதில் மக்களை ஊக்குவிக்கும் பயிலுவிக்கும் இந்த பஞ்சாயத்து கவுன்சில் ஸ்தாபனங்கள். ஆகவே இவை மிகவும் வரவேற்கத் தக்கவை யாகும். அடுத்த ஏப்ரல் மாதத்திற்குள்ளாக இது எல்லாவிடங் களிலும் அமைந்து நல்ல செயலாற்ற எல்லோரும் ஒத்துழைத்து நாட்டை முன்னுக்குக் கொண்டுவர பணி புரியவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஹரிஜனங்களைத் தனியாகவே பாவிப்பது நல்லதல்ல. அப்படி பிரித்துப் பேசவேண்டிய காலம் முடிந்து விட்டது. அவர் களுக்கு நாம் பொருளாதாரத் துறையில் எவ்வளவோ நன்மை களைச் செய்து வருகிறோம். ஆனால், சமூகத் துறையில் அவர்கள் நன்கு முன்னேற நாம் செய்யும் காரியங்கள் காந்திஜி இருந்த போது நடந்துவந்த அளவுக்கு இப்பொழுது நடக்கவில்லை. சட்ட ரீதியில், தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு முதலிய துறைகளில் பல ஆண்டுகளுக்கு முன்பே நல்ல பணியாற்றியிருக்கிறோம். ஆனால், ஹரிஜனங்களை ஒன்றுபடுத்தி, சமூகத்துறையில் அவர்கள் முன்னேறச் செய்ய வேண்டிய வேலைகள் சரிவரச் செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட வேலைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரம் பொறுத்த மட்டில், இந்த சபை கூடுவதற்கு ஒரு தினம் முன்னால், குந்தா மின்சார திட்டம் இரண்டாவது அங்கம் வேலை முடிந்திருக்கிறது.

(Sri A. Vedarathnam in the Chair.)

அவைகளெல்லாம் நல்ல நன்மையைக் கொடுக்கக் கூடியது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த மினிமம் சார்ஜ் ஒரு குதிரை வேகத்திற்கு ரூ. 50 என்றிருந்ததைக் குறைக்க வேண்டும் என்று எல்லோரும் பல நாட்களாகப் பேசி வந்திருக்கிறோம்.





இப்பொழுது மிகப் பிற்போக்கான பகுதிகளுக்கு ரூ. 35 என்றும், மற்ற பகுதிகளுக்கு ரூ. 45 என்றும் போட்டிருப்பதானது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால், சேலம் ஜில்லாவைப் பொறுத்த மட்டில், சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்த ஜில்லா 36 லட்சம் ஜனத்தொகை கொண்டது; இன்றுள்ள எல்லா ஜில்லாக்களையும் விட பெரிது. ஆனால் அங்கு பெரிய கல்வி வசதி ஒன்றுமே கிடையாது. அந்த ஜில்லா கல்வியில் மிகவும் பின் தங்கியிருக்கும் ஒரு ஜில்லா. அங்கு முனிசிபாலிடியார் முயற்சி யால், மிகக் கஷ்டத்தோடு ஒரு காலேஜ் நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், அங்கு ஒரு கல்லூரி போதாது. கனம் கல்வி அமைச்சர வர்கள், போதிய மாணவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஒன்றிரண்டு வருஷங்களுக்கு அப்படி இருந்திருக்கலாம். ஆனால், இப்பொழுது நிலைமை வேறு. அங்கு இடம் இல்லாமல், மற்ற இடங்களுக்கு மாணவர்களை அனுப்ப வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, வட பகுதி சேலத்தில் மற்றொரு கல்லூரியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு எஞ்சினியரிங் காலேஜ் ஒன்று மத்திய சர்க்கார் கொடுக்கப் போவதாகத் தெரிகிறது. நிச்சயமாக அதை சேலம் ஜில்லாவில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஜில்லா வாரியாகப் பார்த்தால், சில ஜில்லாக்களில் அதிகமாகக் கல்லூரி கள் ஏற்படுகின்றன. ஏற்படட்டும்; சந்தோஷம். ஆனால், அதே போல, சேலத்திலும், மிகப் பின் தங்கியிருக்கும் அந்த ஜில்லாவி லும் ஒன்று அமைக்க வற்புறுத்தவேண்டும்.

இந்தியா பூராவிலுமே, எடுபட்ட ரயில் பாதைகளில் ஐந்தில் ஒரு பங்கு சேலத்தில் எடுபட்டுவிட்டது. சுமார் 100 மைல் அளவுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் வட சேலம் பகுதி யில் ரயில் போடுவதாக வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு, மேலே நடை பெறவில்லை. நம் சர்க்கார் அதை இந்த மூன்றாவது திட்டத்தி லேயே சேர்த்து வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

இத்தனை நாட்களாக சேலம் இரும்பு, சேலம் இரும்பு என்று சொல்லிக் கொண்டு இருந்து விட்டு, நெய்வேலிக் கரி எடுத்தால் அங்கு தொழிற்சாலை வரும் என்றெல்லாம் சொல்லி விட்டு, இப்பொழுது அதை நெய்வேலியில் வைப்பதா, சேலத்தில் வைப்பதா என்றெல்லாம் சர்ச்சை நடக்கிறது. நெய்வேலியில் வைப்பதானாலும் பரவாயில்லை. ஆனால், 100 கோடி ரூபாய் அளவில் அங்கு பெரியதொரு திட்டம் இருக்கும்போது, இத்தனை நாளாகச் சொல்லிவந்ததற்கு மாறாக, நிபுணர்கள் படும் கஷ்டங்களுக்காக, நாட்டில் ஒரு பகுதியின் கஷ்டத்தை அடியோடு மறக்கக் கூடாது என்று தான் சொல்லுவேன். ஆகவே, அந்த தொழிற்சாலையை சேலத்திலேயே வைக்க, முடிந்த அளவு பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயம். இது மத்திய சர்க்கார் சம்மந்தப்பட்ட காரியமோ என்னவோ; சூலமங்கலத்திலிருந்து ஜோலார்பேட்டை வழி செல்லும் நான்கு மெயில் வண்டிகளில் ஒன்று கூட இந்த 72

மைல் தூரத்திலும் அங்கு நிற்பதில்லை. இதனால் தபால் முதலிய காரியங்களில் பல தாமதங்களும் கஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஆகவே இதிலும் ஆவன செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கம் செய்யும் காரியங்களுக்கு போதிய பப்ளிசிடி, விளம்பரம் இருக்க வேண்டும். இப்பொழுது விளம்பரம் போதாது. ஜில்லாவுக்கு ஒரு அதிகாரி என்று போட்டு இருப்பதாகத் தெரிகிறது. ஒரு அதிகாரி இருந்து என்ன உபயோகம் என்று தெரியவில்லை. அது சரியாகப் படவில்லை. ஆகவே, ப்ளாக்குகளில் இருக்கும் ப்ளாக்கு அதிகாரிகளிடமே இந்த விளம்பர வேலையையும் ஒப்படைத்து, நல்ல பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல நன்மைகளையும் செய்யும் நம் சர்க்காருடன் அங்கத்தினர்கள் ஒத்துழைத்து, இந்த திட்டங்களையெல்லாம் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கவர்னர் பெருமான் அவர்களுக்கு வந்தனம் கூறும் தீர்மானத்தை ஆமோதித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **SRI G. G. GURUMURTHI :** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு வந்தனம் கூறும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் தன் உரையில் விவசாய உற்பத்தி பற்றியும், மற்ற தொழில்கள் பற்றியும், ஏனைய முன்னேற்றகரமான காரியங்கள் பற்றியும் கூறி, குறிப்பாக விவசாய வளர்ச்சிபற்றிச் சொல்லும்போது, நம் மாகாணம் 15½ லட்சம் டன் உற்பத்தி பெருக்கு, பெரிய நீர்பாசன திட்டங்கள், சிறிய நீர்பாசன திட்டங்கள் நடுத்தர நீர்பாசன திட்டங்கள் இவைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், உர வினியோகம் பற்றியும், உரத் தொழிற்சாலை பற்றியும் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல நல்ல திட்டங்களையும் நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த திட்டங்களெல்லாம், காலாகாலங்களில் நிறைவேற்றப்பட்டால்தான் விவசாயிகளுக்கு மிகுந்த சௌகரியமாக இருக்கும். இந்த திட்டங்களால் உணவு உற்பத்தி பெருகும் என்பதில் சந்தேகமில்லை. சிறிய நீர்பாசனத் திட்டங்களுக்காக, நம் சர்க்கார் சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் விட, இப்பொழுது நாலு கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். நடைமுறையில், சிறிய நீர்பாசனத் திட்டங்கள் செய்வது திருப்தியாக இல்லை. குறிப்பாக பழைய ஏரிகளையும், கண்மாய்களையும் சரி செய்து, மராமத்து செய்து, தண்ணீர் பிடிப்புக்கு ஏற்றவைகளாகச் செய்தால்தான் சௌகரியமாக இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக தெரியவில்லை. நீண்ட கால தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, புதிய சில கண்மாய்கள், ஏரிகள் ஏற்படுத்தப் பல திட்டங்கள் போடப்பட்டிருந்தாலும் நடைமுறையில் வேலை





துவங்கியதாகக் காணோம். குறிப்பாக, கோவை, சேலம் ஜில்லாக் களில் இந்தத் திட்டங்களையெல்லாம் பரிசிலனை செய்வதற்காக ஒரு தனி நீர்ப்பாசன டிவிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்றரை ஆண்டு ஆகியும் இன்னும் எந்த விதமான திட்டத்தை யும் எடுத்து நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு தடவையும் எஸ்டிமேட் தொகை அதிகமாக இருக்கிறதென்று காரணம் காட்டித் திருப்பி அனுப்புவதுமாகிய நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், ஏக்கரா ஒன்றுக்கு ஒரு டன் உற்பத்தி ஆவதற்கு குறிப்பிட்ட தொகைதான் செலவு செய்ய வேண்டும் என்ற அரசாங்கத் திட்டத்தின் அடிப்படையிலே நடைபெற்று வருவதால் எஸ்டிமேட் அதிகமாக ஆகிறது என்ற காலதாமதம் ஏற்படுகிறது. இதுபோன்ற சிறிய பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்ளும்போது, நேரடியாகப் பாசனத்திற்கு வரக் கூடிய ஏக்கராக்களை மட்டும் கணக்கிடுவது சரியானதல்ல. மறைமுகமாகப் பல நன்மைகள் ஏற்படுவதையும் கவனிக்கவேண்டும். குறிப்பாக, பாசனத்திற்கு வரும் நிலங்களைத் தவிர, ஒரு மைல், இரண்டு மைல் சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் 'லெவல்' அதிகமாகிறது. அதனால், நீர்ப்பாசன வசதியும், உணவு உற்பத்தியும் பெருகுகிறது. அதைக் கவனிப்பதே இல்லை. அதை விட முக்கியமானது என்னவென்றால், மற்ற ஜில்லாக்களில் இருக்கிறபடி, ஏரி மண்ணை அரசாங்கமே செலவு செய்து எடுத்துக் கொட்டவேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. சேலம், கோவை ஜில்லாக்களில் ஏரிகளில் இருக்கும் மண்ணை எடுக்க, விவசாயிகளிடமிருந்து வண்டிக்கு இவ்வளவு பணம் தரவேண்டு மென்று சொன்னால், அவர்கள் தங்கள் நிலங்களுக்கு எடுத்துக் கொண்டுபோக நல்ல வாய்ப்பு இருக்கிறது; ஏரி மண் நல்ல எருவாகும். கீழ் பவானிப் பிரதேசங்களிலேகூட, இதை எடுக்கப் பலர் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அனுமதிப்ப தில்லை. நேரடியாக வரும் பலன்களைத் தவிர, மறைமுகமாக ஏற்படக்கூடிய பல நன்மைகளும் இருக்கின்றன. இதையெல்லாம் கவனிக்காமல், திட்டத்திற்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி விடுவதால் மட்டும் பிரயோஜனமில்லை. அதை நடை முறையில் கொண்டுவர, ஒரு ஏக்கராவுக்கு இவ்வளவு செலவு செய்யவேண்டுமென்ற வரையறையை அதிகப்படுத்தி, இந்த வேலைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும். சில காலங் களில் மாத்திரம் அதிகமாக மழை பெய்து மண் அரிப்புச் செலவு ஏற்படுவதைத் தடுக்க இந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் பரிசீலனை செய்யப் பட்டிருக்கின்றன. அவைகளை எடுத்துக்கொள்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக, பவானி தாலூகாவில், மணியாச்சித் திட்டத்தை எடுத்துக்கொண்டால் ஐயாயிரம் ஏக்கரா பாசன வசதி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கும் எஸ்டிமேட் தயார்

[G. G. Gurumurthi] [21st January 1961

செய்து, திட்டத்தை எடுத்துக்கொள்ள சாங்ஷன் செய்து அனுப்புவதிலே நீண்ட காலதாமதம் இருப்பதாகத் தெரிகிறது. அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எடுத்துக் கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக இருக்கும் பழைய நீர்ப்பாசனத் திட்டங்களிலும், புதிதாக நிறைவேற்றப்பட்டிருக்கும் நீர்ப்பாசனத் திட்டங்களிலும்கூட, சில பகுதிகள், கிழக் கோடியிலே இருக்கும் பிரதேசங்களெல்லாம் அபிவிருத்தி அடையாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம் 'பீல்டு போதீஸ்' எல்லாம் அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க வசதி இல்லாததுதான். இதற்காக பழைய வாய்க்கால்களை மராமத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அரக்கன்கோட்டை, பெருமுகை அத்தாணி வாய்க்கால்கள் 1,800 ஏக்கரா சாகுபடிக்காக வெட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், ஆயிரம் ஏக்கராவுக்குத்தான் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இன்னும் எண்ணூறு ஏக்கராவுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படாமல் இருக்கிறது. இதற்கு அரசாங்கமே பொறுப்பேற்று, தேவையானால் விவசாயிகளிடமிருந்து 25 சத விகிதம் தொகையை வசூல் செய்து, அந்த வேலையை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

போக்குவரத்து வசதியைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ரயில்வேக்கள்பற்றியும், துறைமுகங்கள்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், கிராம ரஸ்தாக்களைப்பற்றியும், இப்பொழுது கிராமங்களுக்கு போடப்பட்டிருக்கும் ரஸ்தா அபிவிருத்தியைப் பற்றியும் எந்த விதமான குறிப்பும் இல்லை. கிராமப் போக்குவரத்துக்கான ரோடுகளை எடுத்துக்கொள்ளும்போது, திட்டங்களில் சேர்க்கப்படுவதைத்தான் எடுத்துக் கொள்ளுகிறார்கள். திட்டங்களில் சேர்க்கப்படவில்லையென்றால், எந்த விதமான அபிவிருத்திக்கும் வாய்ப்பு கிடையாது. தார் ரோடு போடுவது, தார் ரோடை கான்க்ரீட் ரோடாகப் போடுவது போன்ற பல திட்டங்களுக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கித் தருகிறார்களே தவிர, சாதாரணமாக கிராம ரஸ்தாக்கள், பெரிய நகரங்களையும் கிராமங்களையும் இணைக்கக்கூடிய ரஸ்தாக்கள் இவைகளைப்பற்றிய அபிவிருத்தித் திட்டங்கள் ஒன்றும் இல்லை. பஞ்சாயத்து யூனியன் வந்து விட்டதனால் இனிமேல் அவை செய்யலாம் என்று விடப்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டு செயல்பட்ட காலத்திலே வருவாய் போதாமல் கடன்பட்ட நிலைமையில் இருந்து ரோடு வேலையைச் செய்ய முடியவில்லையென்றால், புதிதாக வரும் பஞ்சாயத்து யூனியன்கள் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்று கிராம ரஸ்தாக்களை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும் என்று தோன்றவில்லை. ஆகவே, கிராம ரஸ்தா அபிவிருத்திபற்றிய திட்டங்களை அவசியம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



21st January 1961] [G. G. Gurumurthi]

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் இருக்கிறோம். இருந்தாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொண்ட பல வேலைகள் இன்னும் நடைபெறாமல் இருக்கின்றன. அவைகளுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் இடம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளில் இருக்கும் கஷ்டம் என்னவென்றால், அப்பொழுது எஸ்டிமேட் தயாரிக்கும்போது—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயார் செய்யும்போது—அதிலே தோராயமாக ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது பார்க்கும்போது விலைவாசி ஏற்றத்தினால், அப்பொழுது ஒதுக்கிய தொகையைவிட இரண்டு பங்கு அதிகமாகத் தேவையாக இருக்கிறது. அதைக் காரணம் காட்டி, அப்பொழுது என்ன தொகை ஒதுக்கியிருந்தார்களோ அந்தத் தொகைக்குள்ளேயே இந்த வேலை செய்யப்படவேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறது. இந்த மிகக் குறைந்த தொகையிலே, ரஸ்தாக்கள் அபிவிருத்தி செய்வது போன்ற எந்த விதமான அபிவிருத்தி வேலைகளையும் செய்வதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. அதன்படி என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இரண்டு வேலைகள் இருக்கின்றன. கொள்ளேகாலத்தை இணைக்கும் செல்லம்பாளையம்—கொள்ளேகாலம் ரஸ்தா வேலை இந்த விதமாக நிறைவேற்றப்படாமலிருக்கிறது. அது இன்னும் எடுத்துக் கொள்ளும் நிலைமை இல்லாமல் இருக்கிறது. அதுபோன்று பவானி நதிக்குத் பெருந்தலையூர்—ஆப்பக்கூடலை இணைக்கும் பாலம் சம்பந்தமான வேலையும் அதே நிலைமையில் இருக்கிறது. அதையும் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மலைப் பிரதேசமாக இருக்கும் பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தி, போக்குவரத்து வசதி, குடி தண்ணீர் வசதி, ஆரம்பப் பாடசாலை வசதி போன்ற பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கு பல வசதிகள் இல்லாத நிலைமையைப் பார்க்கின்றோம்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் மின்சாரத்தைப்பற்றிக் கூறும்போது, எல்லாக் கிராமங்களுக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சப்ளை கொடுத்துவிடுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். புதிதாக மின்சார விஸ்தரிப்பு ஏற்படும்போது, ஏற்கெனவே மின்சார சப்ளை பெற்றிருக்கும் கிராமங்களிலுள்ள விவசாயிகளின் கஷ்டங்களையும் கொஞ்சம் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேலும் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கும் காரணத்தால், ஏற்கெனவே சப்ளை உள்ள கிராமங்களில் மின்சார பம்ப் செட் சரியாக ஓடக்கூடிய நிலைமையில் இல்லை. அதனால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆறு வயது முதல் 11 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் கட்டாய ஆரம்பக் கல்வி கொடுக்கவேண்டுமென்று நாம் திட்டம் செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் பிரகாரம்

[G. G. Gurumurthi] [21st January 1961

கிராமங்களில் இப்பொழுது இருக்கும் பாடசாலைகளுக்குப் போதிய கட்டிட வசதியும், ஆசிரியர்களுக்கு வீட்டு வசதியும் இல்லாத நிலைமையும் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் ஓராசிரியர் பள்ளிகளில் பல போதிய கட்டிட வசதி இல்லாமல் சாலையிலும், மாட்டுக் கொட்டகையிலும் நடக்கின்றன. கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலுக்கு வருமானால், இப்பொழுதுள்ள இடவசதி போன்று இரண்டு பங்கு இடவசதி கிராமங்களில் செய்து கொடுக்க வேண்டும். இதை எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. கிராம மக்கள் தாங்களாக வந்து இந்த உதவிகளைச் செய்யக்கூடிய ஆற்றலும், சௌகரியமும் அவர்களுக்கு இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்த வசதிகளை அரசாங்கமே செய்து கொடுத்தால்தான் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் நல்ல வகையிலே பயன்படும். அப்பொழுதுதான் மக்கள் அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். இல்லையென்றால், ஏதோ திட்ட அளவிலே சொல்லிக் கொண்டிருக்கலாமே தவிர, உண்மையிலேயே மாணவர்கள் வந்து கல்வி வசதி பெற வாய்ப்புக் கிடைக்காது என்று நான் சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன்.

10-00 a.m. **SRI M. SELVARAJ:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும் அளவுக்கு சர்க்கார் நிவாரண வேலை செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே முக்கியமாக எங்களுடைய மாவட்டத்திலே போன ஆண்டு அடித்த பெரும் மழையின் காரணமாக பல பாதைகளும், ஏகப்பட்ட பாலங்களும் ரிப்பேராயிற்று. அவைகளை உடனே கவனித்து மராமத்து செய்யாத காரணத்தினால் இன்றையதினம் மோட்டார் வாகனங்கள், மாட்டு வண்டிகள் முதலிய போக்குவரத்து எதுவும் நடைபெறமுடியாமல் பெரும் தடையாக இருக்கிறது. உடனடியாக அவற்றைக் கவனித்து ரிப்பேர் செய்யவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டால் எங்களுக்குப் போதுமான நிதி வசதி செய்து தரவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அங்கே எவ்வித வேலையும் நடைபெறாமல் கிடக்கின்றது. ஆனால் இங்கே கவர்னர் தம் உரையில் நிவாரண வேலைகள் எல்லாம் பெரும் அளவுக்கு நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் போன ஆண்டு வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஏரிகளும், குளங்களும் மராமத்து இலாகாவினால் இன்னமும் எவ்விதமான ரிப்பேரும் செய்யப்படாமல் கிடக்கின்றன. எங்கள் வட்டத்தில் மேமாத்தூர் அணை இருக்கிறது. அதன் மூலமாக ஏழாயிரம் ஏக்கரா நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்து வந்தது. விவசாயிகள் அதைக்கொண்டு நல்ல முறையில் சாகுபடி செய்து வந்தார்கள். போன ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அந்த அணை அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. ஆகவே இவ்வாண்டு வருகிற தண்ணீரைத் தேக்கி வைக்க



21st January 1961] [Sri M. Selvaraj]

முடியாமல் ஆற்றில் வீணாகத் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் அங்குள்ள விவசாயிகள் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அணையை உடனடியாகச் சரிப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் கவர்னர் தம்முடைய உரையில் சமீபத்தில் ஏற்பட்ட நல்ல மழையின் காரணமாக இவ்வாண்டு விவசாய உற்பத்தி அதிக அளவுக்கு எதிர்பார்க்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் தஞ்சை மாவட்ட சுற்றுப்பிரயாணத்தின்போது பயிர்கள் எல்லாம் சுமார் 2 லட்சம் ஏக்கராவுக்கு மேல் நீருக்குள் மூழ்கிக் கிடந்ததைக்கண்டு இதனால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று செய்தி நிருபர்களுக்கு பேட்டி அளித்திருக்கிறார்கள். அப்படி இருக்க இப்போது பெரும் அளவுக்கு உற்பத்தி அதிகமாகும் என்று கவர்னர் எவ்வாறு எதிர்பார்க்கிறார்? இதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்டவரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 27 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தாலும், எங்களுடைய மாவட்டத்தில் சுமார் பத்து வருட காலமாக அங்குள்ள பகுதி மக்களுக்கு—வெல்லிங்டன் நீர்த் தேக்கத்திற்கு வேண்டிய அளவுக்கு தண்ணீர் வருவது கிடையாது. அதன் மூலமாகப் பாசனம் செய்யப்படுகின்ற நிலங்களுக்கு ஆயக்கட்டுகள் செய்யப்படாமல் இருக்கின்றன. சப்ளை உறுதி செய்யப்படவில்லை. வெள்ள காலத்தில் காவேரி நீர் அதிகமாகக் கடலில் போய்ச் சேருகிறது. அதிக அளவுக்கு காவேரி நீரை மைசூர் சர்க்கார் தடுத்துவிடுகிறார்கள் என்று சொன்னாலும், வெள்ள காலத்தில் அங்கு தண்ணீர் தேவை இல்லை. ஆகவே அதைச் சரியான முறையில் கொண்டு வந்து இங்கே தேக்கிக் கொள்வதற்கு யாருக்கும் எந்த விதமான தடையும் ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் வெல்லிங்டன் நீர்த் தேக்கத்தில் இருந்து வருகிற வாய்க்கால்களை அகலப்படுத்தி ஒழுங்கு செய்ய பணம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது மதுரை மாவட்டத்தில் வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து வருகிற வாய்க்கால்களை சிமெண்டு பூசி—தண்ணீரை வீணாக்காமல் செய்திருக்கிற ஏற்பாட்டை பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் மத்திய சர்க்காரை 398 கோடி ரூபாய் கேட்டு இருந்ததற்கு மத்திய சர்க்கார் நமக்கு ஒதுக்கியிருக்கிற தொகை 291 கோடிதான். இதிலே வெட்டு விழுந்துள்ள 107 கோடி ரூபாயை மாநில சர்க்கார் ஈடுசெய்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த அளவில் நமது மாநில சர்க்கார் அந்தத் தொகை இந்த ஐந்தாண்டு

[Sri M. Selvaraj] [21st January 1961

காலத்திற்குள் ஈடு செய்யப் போகிறார்கள்? வரி விதிப்பின் மூலம் ஈடு செய்யப்போகிறார்களா? கடன் மூலமாக ஈடு செய்யப் போகிறார்களா என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை உருவாக்குகிற நேரத்தில் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார்கள், 32 லட்சம் டன் எடுக்க வேண்டும் என்று. இப்போது மத்திய சர்க்கார் 45 லட்சம் டன்னாக உயர்த்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நமது கவர்னர் உரையில் 60 லட்சம் டன்னாக உற்பத்தியாக முடியும் என்று எவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதையும் விளக்க வேண்டும். மேலும் இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட பத்தாயிரம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். ஆனால், அவர்களை தினசரி கூலியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய இரண்டு, மூன்று ஆண்டு காலமாக தொடர்ந்து வேலை செய்து வந்திருக்கிற போதிலும் அவர்கள் நிலைமை காயப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே அவர்களை பர்மனென்ட்டாக செய்வதற்கு வேண்டிய வசதிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மத்திய சர்க்காரின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது என்று சொன்னாலும், இதில் தலையிட மாநில சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது என்று சொன்னாலும் அங்குள்ள தொழிலாளர்கள் நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், திட்டம் நம் மாநிலத்தில் இருப்பது, ஆகவே அதில் எவ்வித குறைபாடுகளுக்கும் இடமின்றி நடப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனால்தான் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் டைரெக்டராக நமது மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் நிர்வாகம் பெற்றிருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது சர்க்கார் பிரதிநிதி அங்கு ஒருவரும் இல்லாத காரணத்தினால் அங்குள்ள குறைகளை எடுத்துச் சொல்கிற போது அவர்கள் தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே நமது அமைச்சர் அவையில் இருந்து யாரையாவது ஒருவரை டைரெக்டராகவும் போடுவதற்கு முயலவேண்டும்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** திட்டம் ஆரம்பித்ததில் இருந்து நமது நிதி இலாகா காரியதரிசியும், தொழில் இலாகா காரியதரிசியும் டைரெக்டராக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

**SRI M. SELVARAJ:** அதைத் தெரிவித்ததற்கு சந்தோஷம் அடைகிறேன். ஆகவே இந்தக் குறைகளை எல்லாம் உங்கள் காரியதரிசியிடம் தெரிவித்து இவற்றை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயலவேண்டும். அதற்கு வேண்டிய நிவாரண வேலைகளை செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நம்முடைய மாநிலத்தில் ரயில் பாதை போடுவதுபற்றி கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ரயில்பாதைத் திட்டம் கொடுக்கப்படவேண்டும் என்று



21st January 1961] [Sri M. Selvaraj]

கோரியதன்பேரில்—நமது கவர்னர் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தென் பிராந்தியத்தில் புதிய இருப்புப் பாதைகள் போடும் திட்டம் பற்றி, ரெயில்வே அமைச்சருக்கு இந்த அரசாங்கம் செய்துகொண்ட வலுவான முறையீட்டின் பயனாகத் தக்க பயன் கிடைக்கலாம் என்று எதிர் பார்க்கிறோம்" என்றுதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அதை வற்புறுத்தி பத்திரிகையில் குறிப்பிட்ட நான்கு பாதைகளைத் தவிர வடாற்காடு, தென்னாற்காடு இவற்றை இணைக்கிற சின்னச்சேலம், திருவண்ணாமலை ரயில்பாதையை மூன்றாவது திட்டத்தில் கொண்டுவரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக தென்னாற்காடு மாவட்டம், திருச்சியிலே ஒரு பகுதி —அதுவும் மிகவும் பிற்பட்ட சமூகத்தினர் வாழ்கிற பகுதிகள் குடி தண்ணீர் வசதி என்பதே கிடைப்பது அரிதாக இருக்கிறது. திருச்சி, ஜயங்கொண்டான் முதலிய இடங்களில் குடிதண்ணீர் தேவை என்று தேசிய குடி-தண்ணீர் சப்ளை விநியோகத் திட்டத்தின்கீழ் குழாய்க் கிணறுகள் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதே போன்று சிதம்பரம் பகுதியிலே கிராமங்களில் இவ்வசதி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் சென்ற ஆண்டு வரையில் எடுத்துக்கொண்ட திட்டங்களைத் தான் நடத்த வேண்டும், இனிமேல் புதுத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்லியிருப்பதாக நம் சர்க்காரிடம் இருந்து உத்தரவு வந்திருப்பதாகக் கலெக்டர் அவர்கள்—இவ்வாண்டு அந்தத் திட்டத்தை எங்கள் பகுதிக்கு கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது சொல்கிறார்கள். அப்படியின்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் தொடர்ச்சியாக இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வழி வகைகளை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பாதை விஸ்தரிக்கும்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊமங்கலம் பிர்க்காவில் காட்டுக்கூடலூர் பகுதியில் கிளைப்பாதைகள் தேவையென்று கலெக்டருக்கும் சர்க்காருக்கும் விண்ணப்பம் செய்திருந்தும் இதுவரை சேர்க்கப் படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பகுதியை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தென் ஆற்காடு மாவட்டத்தில் விருதாசலம், கள்ளக்குறிச்சி மிகவும் பிற்பட்ட சமுதாயத்தினர் வாழும் பகுதி. மின்சாரத்தை விஸ்தரிக்கச் செய்யும்போது ஸ்கீம் ரெமுனரேடிவ் ஆக இல்லை என்று ஓரளவுக்கு பல கிராமங்களை விட்டுவிட்டுச் செல்கிறார்கள். ஆகவே பெண்ணாடம் பகுதியில் ஒருசில கிராமங்களுக்கு மின்சார வசதி செய்திருக்கிறார்கள். தொழில் அமைச்சர் அங்கு வந்து பெண்ணாடம் மின்சார திட்டத்தை துவக்கி வைத்தார். அப்போது அதற்கு அருகாமையில் இருக்கும் இளியமங்கலம், அகரம், வடகரை

போன்ற கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று சொன்னோம். சர்க்கார் கிட்டதட்ட இரண்டு லட்சம் ரூபாய் இதற்காக செலவழிக்கப்படும், சர்க்காருடைய சாங்ஷன்தான் தாமதம் ஆகிறது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு சர்க்கார் கொண்டுவந்த சம்பள கமிஷன் அறிக்கையில் ஊராட்சி மன்றங்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கும், நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் சம்பளம் உயர்வாக தெரிவித்திருந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்த தாக்கீது சர்க்காரிடத்தில் இருந்து வந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இங்கே மேஜர் பஞ்சாயத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கும், நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு உடனடியாக தருவதற்கு சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்துத் தேறியவர்கள்—அன்-டிரெயின்ட் டீச்சர்ஸ் இப்பொழுது ஆசிரியர் பள்ளியிலே அமர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு டிரெயினிங் வசதிகளை ஏற்பாடு செய்து, மறுபடியும் தொடர்ச்சியாக அதே பள்ளியில் அமர்த்த வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று என்னுடைய கருத்துரைகளை கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR: Sir, while supporting the motion of thanks to the Governor for his gracious Address, I shall make a few observations in connection therewith.

His Excellency's Address has begun with a pleasant happy refrence to the visit of Her Majesty Queen Elizabeth II of Britain to this country and to our City also. She is visiting us not as overlord of Indian Dominion, not as the Imperial Head of an Empire as her grandfather did about half a century ago. She is coming as the Head of the Commonwealth of Free Nations, of which our country is a member of its own free choice.

His Excellency has rightly described her visit as an event of great significance, a significance which marks the historic change in the relation of our country to Britain. She is regarded as a voluntary symbol of voluntary and free union of independent nations leagued together each for its own good and for the good of all and therefore it is by itself a justification for our jubilance and expectancy as His Excellency remarked. But that is not all. Her humane qualities and her graciousness apart, we are extending our traditional hospitality to her for the reason that our country owes a good deal to our connection with Britain. If our country





is one of the free test democracies in the Asian Continent. if we are building the traditions of popular Governments, and if our outlook and thought are progressively liberal and democratic, it is all due to two centuries of Indo-British connection and the English language further has played a great part in this regard. Our great leaders, like Gopal Krishna Gokhale, Tilak, Mahatma Gandhi, Rabindranath Tagore, Sarojini Devi, Sastry, Satyamuthy, the great Motilal and his greater son, they are all masters of that great language and it is through that language that they led us through a bloodless revolution culminating in our independence. Therefore, it is only proper, to accord a hearty welcome to the royal visitor.

His Excellency's Address is ringing with optimism beginning with a special reference to the improvement of agricultural production in our country and in our State in particular, and glowing upto the end with an account of various projects under the Third Plan. The Address also indicates that though our State is keen on developing its industrial potentiality to its optimum, it has not forgotten, that our economy is mainly agricultural, and therefore our State has set itself to special efforts to increase agricultural production from 52 lakhs of tons to 67½ lakhs of tons.

The growth of agriculture pre-supposes the development of irrigation projects both minor and major and we are told and we are encouraged thereby that under the Third Plan 35 crores of rupees have been set apart for the improvement.

A pride of place has been given to the development of power and our State has become the premier State in this regard. With an allocation of Rs. 101 crores and with the completion of the schemes like Mettur Tunnel Scheme and the Kundah Scheme electrification of the entire State will soon become an accomplished fact. After exhausting the power resources of the State, we are looking forward to the establishment of an Atomic Power Plant for our State. The outstanding feature of the spread of electric power in our State has been its extension to the rural areas. In this respect our State has beaten the record of Bombay and Mysore. Even our sister State of Andhra has not been able to keep pace with us so far as rural electrification is concerned. When we talk of electricity we feel bound to express our sense of gratitude to the great service which the Electricity Department has done for us, at whose head we have a person of the stature of our Chief Engineer, whose dynamism, drive and initiative have been unparallelled.

His Excellency the Governor's address disclosed several great projects each of which is great by itself. Some of them are in the course of implementation. Some are in the course of investigation. But the State is very anxious to bring about the completion of all the projects before the end of the Third Plan period. If we take an overall view of these projects and the effects they would produce, there is no doubt that our State will rank very high as an industrial-*cum*-agricultural State. But the address is

[Sri S. Ranganatha Mudaliar] [21st January 1961

unfortunately silent about the concomitant evil of high industrialisation, viz., rapid growth of slums. The slum problem is becoming more and more acute and with the large-scale spread of industrialisation this concomitant evil will grow in equal proportion. Even the Third Plan does not seem to have bestowed that attention to this problem as it deserves. I think the Government would be pleased to take up this question, the tackling of this problem, at Plan level. Piecemeal attempts to solve this problem will not carry us further.

The greatest achievement of this Government has been that it has been able to pursuade the Government of India to include the Tuticorin Harbour Scheme in the Central sector of the Third Plan. If our Government has not taken a strong line of action with the Centre and if the public had not carried on an almost State-wide agitation, probably Tuticorin Harbour Scheme would have been taken up only sometime in the future. We are glad that Tuticorin Harbour will come to function at least before the end of the Third Plan. Discontent has been expressed by some section of the House that development of other ports has not been taken up. All ports cannot be taken up simultaneously. The hon. Member Sri Selvarajan referred to the story of Satyavan and Savithri and how Savithri through the grace of Yama produced hundred children all at once. We do not know how 100 children could be produced all at once. It will be a great problem for the Revenue Minister if such a thing were to happen and hundred children are born to a woman all at once. Just as it is difficult to produce 100 children all at once, so also it would be difficult to take up the development of all ports all at one and the same time. In the wake of the development of Tuticorin harbour, we are sure that the development of other ports, viz., Sethusamudram, Cuddalore and Pulicat (which was once famous as the shipping centre in the days of Dutch East India Company) would also be taken up in future. We are thankful to the Government for what they have done towards the development of Tuticorin harbour. We have no doubt that the Government will talk up seriously the question of development of the harbours at Sethusamudram and Cuddalore. We can afford to wait for some time to find out whether Government would take up the above schemes also.

Another thing for which we are grateful to Government is the question of compulsory education. We are told that Rs. 32 crores have been set apart for the purpose of compulsory elementary education in the age-group 6 to 11. This has been an age long dream and the dream is coming true. Therefore we can look forward to a period of all-round progress in the State during the next Plan period.

Another important thing which I want to impress upon Government is the need for extension of electrification to all railways in our State. It will be a great day when the railways running in our State are completely electrified. Now there has been great dis-content in our State in regard to the extension of the railway system. Each district wants to have some railway link



21st January 1961] [Sri S. Ranganatha Mudaliar]

with Madras or Bangalore or other important places. It will be difficult for Government to make the choice and to do the thing. It has become a problem. With the increase of power and with the availability of electrical energy and its availability in larger degree, it is possible for the State of Madras to impress upon the Centre and to compel them to electrify the entire railway system in our State.

With these words, I thank you, Sir, and close my speech.

* **Sri P. G. MANICKAM**: மதிப்பிற்குரிய தாற்காலிக தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரையை ஆதரித்து இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் தெரிவிக்க விரும்புகிறேன். மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது பற்றி நாம் பாராட்ட வேண்டியவர்களாகயிருக்கிறோம். கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் 52 லட்சம் டன் அளவில்தான் விவசாய உற்பத்திப் பொருள் பெருகியிருக்கிறது. மேலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 15½ லட்சம் டன் உணவு உற்பத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருக்கிறது. நாட்டிற்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது, குறிப்பாக வறுமை மிகுந்த நம் நாட்டிற்கு முக்கியமாக தேவைப்படுவது உணவுதான். ஆகவே உணவு பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக வேண்டிய அளவு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொகை ஒதுக்கியிருப்பதோடுகூட, உயர்ந்த அளவு கிடைப்பதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக் கொண்டால் மட்டுமே இதை சாதிக்க முடியும் என்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை மக்கள் உணர வேண்டும். அதோடுகூட ஆங்காங்கு விவசாயிகளிடையே அதிகப்படியான உற்சாகமும் இருக்க வேண்டும். அதிகாரிகளுக்கும் இதில் உற்சாகம் இருக்க வேண்டும். இதற்காக, நெய்வேலியில் ரசாயன உரத் தொழிற்சாலை, புதுத் தொழிற்சாலைகள் இவைகள் எல்லாம் தொடங்கப்படும், தேவையான உர வகை கிடைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும். ஆனால், தற்போது உரவகைகள் குடியானவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் தகுந்த சமயத்தில் அவர்களுக்கு இந்த உர வகைகள் போய் கிடைப்பதில்லை. இந்திய அரசாங்கத்திலிருந்து நமது அரசாங்கத்திற்கு வரப்படுகிற உர வகைகளை மாதந்தோறும் ஆங்காங்கு பிரித்துக் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஆனால் அவை விவசாயிகளுக்கு போய் சேருகிறதா என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும். உர வகைகளைப் பிரித்து அந்தந்த தாலுக்காக்களுக்கு அனுப்பும்போது அந்த தாலுக்காக்களில் அந்த உரவகைகள் எந்த முறையில் செலவழிக்கப்படுகிறது என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும். விவசாயிகளுக்கு அவர்கள் எதிர்பார்க்கக் 10-30 a.m.
கூடிய நேரத்தில் விதைகள் உரங்கள் கிடைக்கவேண்டும். சர்க்காரால் கொடுக்கப்படும் உரங்கள் 12 மாதங்களிலும் அவர்களுக்கு தேவையில்லை. அவர்கள் வாங்குகின்ற உரத்தை சேமித்து வைக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்போதுதான் அவர்கள்

[Sri P. G. Manickam] [21st January 1961

கள்ள மார்க்கட்டில் விற்க ஆரம்பிக்கிறார்கள். இதுதான் கள்ள மார்க்கட்டுக்கு முக்கியமான ஒரு இடமாக இருக்கிறது. விவசாயிகள் தங்களுக்கு எப்போது உரம் தேவைப்படுகிறதோ அப்போதுதான் தங்களுக்கு கிடைக்கின்ற உரத்தை உபயோகிக்கிறார்கள். அதல்லாமல் மற்ற நேரங்களில் கிடைக்கும் உரத்தை கள்ளமார்க்கட்டில் விற்க முன் வருகிறார்கள். கள்ளமார்க்கட் பெருகுவதற்கு காரணம் இதுதான் என்பதை சர்க்காருக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சர்க்காரானது இதில் முக்கிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது சர்க்காரால் கடன் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இம்மாதிரிப் பட்ட கடன் வசதி செய்து கொடுக்கவில்லையென்றாலும் மொத்தமாக கிடைக்கின்ற உரத்தை சேமித்து வைப்பதற்கு எல்லா சொஸைட்டிகளிலும் கிடங்குகள் வசதி இருக்கவேண்டும். பன்னிரண்டு மாதங்களுக்கு சேர்த்து கிடைக்கின்ற கோட்டாவை சேமித்து வைத்து அதற்குரிய நேரத்தில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக சொஸைட்டிகளுக்கு கடன் வழங்கினாலும் பரவாயில்லை என்று நினைக்கிறேன். இவ்விதம் கிடைக்கின்ற கோட்டாவை சேமித்து தக்க சமயத்தில் விவசாயிகளுக்கு கொடுத்துக் கொண்டிருந்தால் உர வகைகளில் நடந்து கொண்டிருக்கும் கள்ளமார்க்கட் குறையும் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப்பற்றி கவர்னர்பெருமான் அவர்கள் தன்னுடைய உரையில் முக்கியமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்ட இறுதிக்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கொடுக்கப்படும் என்று தெரிவித்திருப்பதைப்பற்றி நாம் சர்க்காரை பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் குறிப்பாக எல்லா கிராமங்களுக்கும் என்று சொல்லும்போது ஹரிஜன சேரிகளை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கடந்த முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் ஹரிஜன சேரிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்காக ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்தும்கூட எல்லா ஹரிஜன கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இன்னும் எத்தனையோ கிராமங்கள் இன்னும் மின்சார வசதி பெறாமல் இருக்கின்றன. காரணம் ஒதுக்கப்பட்ட தொகை போதவில்லை என்று தெரிய வந்தது. ஆகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் குறிப்பாக அரிஜன மக்கள் வாழும் எல்லா இடங்களுக்கும் மின்சாரம் போட்டு கொடுப்பதற்காக எவ்வளவு தொகை வேண்டும் என்று பார்த்து அவ்வளவு தொகையும் ஒதுக்கவேண்டும் என்று தாழ்மையாக சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஹரிஜன சேரிகளுக்கு விளக்குகள் போட ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. மேலும் எல்லாக்



21st January 1961] [Sri P. G. Manickam]

கிராமங்களிலுமுள்ள ஹரிஜன சேரிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கவேண்டும் என்பதை கணக்கிட்டு மின்சார போர்டு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது. அதன் மூலம் எவ்வளவு ரூபாய் தேவைப்படும் என்பதைக் கணக்கிட்டு அதற்கு போதுமான அளவு தொகை ஒதுக்க வேண்டும் என்று சர்க்காரை நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப்பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறு வயது முதல் பதினொன்று வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும், அதற்கான முறைகளை கொண்டு வரவேண்டும், என்று திட்டமிடப்பட்டிருப்பதானது மிகவும் போற்றுதற்குரியது. இதன் மூலம் சுமார் 30 லட்சம் குழந்தைகள் கல்வி பெற வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். முன்னால் 100-க்கு 10 பேர் அல்லது 12 பேர் என்றிருந்த காலம் மாறி 100-க்கு 100 பேர் படித்தவர்கள் இந்தியர்கள் என்று பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய முறையில் பல திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்வதற்காக வகுத்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கக் கூடியதும் பாராட்டக் கூடியதுமான திட்டம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் குறிப்பாக வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் சர்க்கார் சில முக்கியமான யோசனைகளை கருத்தில் கொள்ளவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக 6 வயது முதல் 11 வயது வரையிலுள்ள சிறுவர்களில் படிக்காதவர்கள் யார் என்பதை சர்க்கார் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். இன்றைக்கு எல்லா இனத்தவர்களும் நன்றாக படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் முக்கியமாக யார் குறைவான படிப்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால் ஹரிஜன வகுப்பில் உள்ளவர்கள்தான் படிப்பு குறைவாகவுள்ளவர்களாக இருக்கிறார்கள். படிக்காத குழந்தைகளை எல்லாம் சேர்த்து கணக்கெடுத்துப் பார்த்தால், 100-க்கு 70 சதவிகிதம் ஹரிஜன குழந்தைகள்தான் இருக்கும். அதோடு நமது சென்னை சர்க்கார் நடத்தி வரும் மத்தியான உணவுத் திட்டத்தைப் பார்த்து மற்ற ராஜ்யங்களிலுள்ள சர்க்கார்கள் எல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை கட்டாயக் கல்வித் திட்டத்தோடு சேர்த்து ஏழை குழந்தைகள் எல்லாருக்கும் இலவச உணவு கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும், அதற்கான தொகையும் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக போதிய தொகையை நம்மால் ஒதுக்க முடியவில்லையென்றால், மத்திய சர்க்காரிடமிருந்தும் தொகையை பெறுவதற்கு நமது ராஜ்ய சர்க்கார் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன குழந்தைகளுக்கு இலவசமாக உடைகள் வழங்குவதற்கான திட்டமானது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று இதற்கு முன்னால்

[Sri P. G. Manickam] [21st January 1961

சட்டசபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதையும் சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஹரிஜன மக்களுக்கு மிகவும் தேவையாக இருப்பது, உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை. இவைகள் எல்லா மக்களுக்கும் தேவைதான். பகல் 12 மணி நேரம் உழைத்துவிட்டு இரவு 12 மணி நேரம் களைப்பாற வேண்டுமானால் அவர்களுக்கு என்று தனியாக குடியிருக்க ஒரு இடம் தேவை என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்வோம். ஒவ்வொரு ஹரிஜன குடும்பத்திற்கும் ஒவ்வொரு மனைக்கட்டு கொடுப்பதற்கு நமது ராஜ்ய சர்க்கார் முயற்சிக்க வேண்டும். இதற்காக இப்போது வருஷந்தோறும் ஒதுக்கப்படும் தொகை போதாமல் இருக்கிறது. இப்போது வருஷந்தோறும் 5 லட்சம் ரூபாய் நமது பட்ஜெட்டில் ஒதுக்கிக்கொண்டிருக்கிறோம். இது போதாது என்பதை சர்க்கார் கவனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் தங்களுக்கு வீட்டுமனை வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் ஹரிஜனங்களுடைய விண்ணப்பங்கள் ஒவ்வொரு கலெக்டர் ஆபீசிலும் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. சர்க்கார் இதைக் கணக்கெடுத்துப் பார்த்தால் மொத்தமாக எத்தனை மனைக்கட்டுகள் தேவை என்பது தெரியவரும். அந்தக் கணக்கை எடுத்துப்பார்த்து, அதற்கு தேவையான பணத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான தொகை போதவில்லை என்றால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி கூடுதலான பணத்தைப் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்கு முக்கியமாக தேவையானது விவசாய நிலம். நமது ராஜ்யத்தில் அரிஜனங்களுக்கு என்று தனியாக நிலங்கள் ஒதுக்கப்பட்டு தனியாக ஜாபிதா ஒன்று எல்லா ஜில்லாக் கலெக்டர் ஆபீஸ்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏறக்குறைய 50 ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவில் மட்டும் 3,000 ஏக்கர்கள் இருக்கின்றன. எல்லா ஜில்லாக்களிலும் இம்மாதிரி ஹரிஜனங்களுக்கு என்று தரிசு நிலங்கள் (reserved only for Harijans) ஒதுக்கி அதற்காக தனியாக உத்தரவிட்ட ஜி.ஓ.-வும் இருக்கிறது. ஆனால் அந்த நிலங்களை சரியான முறையில் இன்னும் பல இடங்களில் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படவில்லை. என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரை குறைந்தது 2,000 ஏக்கர் வரை இன்னும் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான பட்டாக்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை. ஆகவே இதில் சர்க்கார் தீவிரமாக கவனம் செலுத்தி பல ஆயிரக்கணக்கான ஹரிஜன குடும்பங்களுக்கு தேவைப்படுகிற நிலங்களை பிரித்துக் கொடுத்து, அதற்கான பட்டாக்களையும் வழங்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே ஹரிஜனங்களான வெட்டியான்கள், தலையாரிகள் இவர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்திருப்பதற்காக ஹரிஜனங்கள் சார்பாக



21st January 1961] [Sri P. G. Manickam]

நான் சர்க்காரைப் பாராட்டுகின்றேன். இன்றைய தினம் அவர்கள் தான் மிக மிகக் குறைவான சம்பளம் வாங்குகின்றார்கள். அவர்கள் பார்ட் டைம் ஊழியர்கள் என்று சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பார்ட் டைம் ஊழியர்களே இல்லை. அவர்கள் சில மணி நேரம் சர்க்கார் வேலை செய்து விட்டு பாக்கி நேரத்தில் தங்களுடைய வேலையைச் செய்து கொள்ளலாம் என்று சர்க்கார் நினைக்கின்றார்கள். அவர்கள் அல்லும் பகலும் வேலை செய்ய வேண்டிய ஊழியர்களாக இருக்கின்றார்கள். எந்த அதிகாரி போனாலும், என்ன தேவையானாலும், நேரம் காலம் இல்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதோடு இன்று பஞ்சாயத்து யூனியன்கள் வந்து விட்டன. அதிலும் அவர்கள் முக்கிய பங்கு கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டியவர்கள். இப்போது சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் மிகமிகக் குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களான வெட்டியான்களும் தலையாரிகளும்தான். இப்போது அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். அதோடு அவர்களும் வீடுகளின்றி கஷ்டப்படுகிறார்கள். இதற்கு ஒரு திட்டம் வகுத்து வீடு கட்டிக் கொள்வதற்கும், மனைக்கட்டு வாங்கிக்கொள்வதற்கும் உரிய தொகையை ஒதுக்கி அவர்களுக்கு உதவி செய்வதற்கு பிரயாசை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் அளித்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

*SRI S. RAMASAMI THEVAR: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் இதுவரையிலும் நமது சர்க்கார் சாதித்தவற்றையும் இனிமேல் சாதிக்கப் போவதைப் பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனாலும் நாட்டிலே நிலைமை எப்படி இருக்கின்றது, நிர்வாகம் எப்படி நடக்கின்றது, சரியான முறையில் உள்ளனவா என்பன போன்ற விஷயங்கள் குறிப்பிடப்படவில்லை. அப்படி எடுத்துக்கொண்டு பார்க்கும் போது இன்று சாதாரண விவசாயி, நடுத்தர விவசாயி, ஏழை விவசாயித் தொழிலாளி போன்றவர்களின் நிலை எப்படி இருக்கின்றது, சென்ற 10 ஆண்டுகளாக அவர்களுடைய நிலை உயர்ந்திருக்கின்றதா, அவர்கள் சுபிட்சம் கண்டிருக்கிறார்களா என்பதை நாம் சற்று கவனிக்கவேண்டும். இன்று எங்கு பார்த்தாலும் வரி பாக்கி நிறைந்திருக்கின்றது. கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு வரி கட்ட முடியாமல் பாக்கி இருந்து வருகின்றது. கடன் படாத விவசாயியே கிடையாது. கடன் பளுவைத் தாங்க முடியாது இன்று விவசாயிகள் அவதிப்படுகின்றார்கள்.

(MR. Speaker in the Chair.)

[Sri S. Ramasami Thevar] [21st January 1961

அது போதாதற்கு நாட்டிலே வரி வசூல் கொடுமை இன்று ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. நாட்டிலே வரியானது நல்ல முறையில் வசூலிக்கப்படவில்லை. இன்று வரி வேட்டையாடுகின்றார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இன்று மக்கள் மிருகங்களைப் போல் வேட்டையாடப்படுகின்றார்கள். இதற்கு உதாரணமாக எனது அறந்தாங்கி பகுதியிலேயும், பட்டுக்கோட்டை பகுதியிலேயும் உள்ள நிலைமையைப் பற்றி சொல்ல விரும்புகின்றேன். இரு பகுதிகளிலேயும் கிட்டத்தட்ட 100-க்கு 90 பங்கு இனாம் ஜமீன் கிராமங்களாக இருந்தன. இந்தக் கிராமங்கள் 1961-ம் பசலியிலிருந்து சர்க்கார் வசப்பட்ட பின் அங்கு சரியான முறையில் வரி வசூலிக்கப்படவில்லை. கணக்கு வழக்கு இல்லை. கிராமங்கள் சர்க்கார் வசப்படுத்தப்பட்ட பின் ஜில்லாவில் உயர்ந்த பட்ச வரி, தாலுக்காவில் உயர்ந்த பட்ச வரி என்று வரிகள் விதிக்கப்பட்டன. இதைக் கண்டு மக்கள் அஞ்சி உயர் நீதிமன்றத்திற்கு ரிட் செய்தார்கள். தீர்ப்பிலே அடுத்த பக்கத்து கிராமத்தில் என்ன வரி வசூலிக்கப்படுகின்றதோ அதே சமமான வரிதான் விதிக்கப்பட வேண்டும் என்று கொடுக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பு உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. நாங்கள் உயர்ந்த பட்சம் வாங்கி விட்டோம், அதே தான் வாங்குவோம் என்று சொல்லப்பட்டது. பின் இந்த மாதிரி கொடுமைகளினாலும், மக்களுடைய எதிர்ப்பினாலும் சில ஆண்டுகளிலே வரி வசூலிக்காமலேயோ வரி வசூல் தடைப்பட்டது. பின்பு 1952-ம் ஆண்டிலே புயல் அடித்தது. 1955-ம் ஆண்டிலே வேறு ஒரு கோரப் புயல் வீசியது. இதன் காரணமாக இந்த இரண்டு ஆண்டுகளிலேயும் வரி வசூலிப்பதிலே தடை ஏற்பட்டது. 1956-ம் ஆண்டில் தேர்தலுக்காக அந்த ஆண்டில் வரி வசூலிப்பதில் சர்க்கார் கவனம் செலுத்தவில்லை. பிறகு செட்டில்மெண்ட் ஆவதற்கு பல ஆண்டுகள் ஆயிற்று. இரண்டாவது கணக்கு வழக்கு இல்லை. எவ்வளவு தான் வரி வசூலிப்பது என்று தெரியாது பல காரணங்களினால் வரி வசூல் தடைப்பட்டது. சிலரிடம் அதிக வரியும் வாங்கியிருக்கின்றார்கள். சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக பஞ்சம் ஏற்பட்டதினாலே மக்கள் சரியானபடி வரி கொடுக்க முடியவில்லை. சர்க்காரும் இது பற்றி கவனிக்கவில்லை. 10 ஆண்டுகளாக அவர்களும் நித்திரையில் இருந்து விட்டார்கள். இப்போது பார்க்கும் போது கோடிக்கணக்கான ரூபாய் பாக்கி நிற்கின்றது. உடனடியாக வசூலிக்கும்படி உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது. ரெவின்யு போர்ட் உடனே கீழேயுள்ள அதிகாரிகளுக்கு உத்திரவு போடுகின்றது. கீழேயுள்ள அதிகாரிகள் ஏனைய சில்லரை அதிகாரிகளைத் தூண்டி மக்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள். இதைப்பற்றி நான் சென்ற கூட்டத்திலேயே கூட முறையிட்டேன். எனது தொகுதி மக்கள் வரி கட்டாது இருக்க விரும்பவில்லை. கஷ்டம் தாங்க முடியவில்லை, வரியை தவணை தவணையாகக் கட்டுவோம் என்று கேட்டார்களேயொழிய வரியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. சர்க்காருடைய கடமையைக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி இருந்தும் கூட அங்கு நடந்திருக்கக்கூடிய கொடுமைகளில் சிலவற்றை



21st January 1961] [Sri S. Ramasami Thevar]

எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். ஒரே ஒரு வட்டத்தில் சென்ற 3 ஆண்டுகளுக்குள்ளாக இதுவரையில் 17,000 ரூபாய் வரையில் கையாடல் செய்யப்பட்டிருக்கின்றது. அதுவும் ரசீதுகளைக் கொண்டு வந்து பரிசீலனை செய்த பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் பல ரசீதுகளை மக்கள் கொண்டு வந்து காட்டும் போது, சில ரூபாய்களை வரியாக வசூலிக்கலாம் என்று, ரசீதை பரிசீலனை செய்ய வேண்டுமானால் ஐந்து அல்லது பத்து ரூபாய்கள் வரி கட்டுங்கள் என்று அதிகாரிகள் கேட்டதனால் இன்னும் சிலர் கட்டாமல் இருக்கின்றார்கள். இன்னும் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்தால் 20,000 அல்லது 30,000 ரூபாய் வரையில் கையாடல் செய்திருப்பதாகக் காணலாம். ஒரே வட்டத்தில் மூன்று ஆண்டுகளில் இவ்வளவு கையாடல் நடந்திருக்கிறது என்றால் இதைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. 100-க்கு 60 வட்டங்களில் இம்மாதிரி கையாடல் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறை யாரைச் சார்ந்தது. இந்த சர்க்காரையும் இந்த மன்றத்தையும் சார்ந்தது என்று கூற விரும்புகின்றேன். எத்தனை லட்சக்கணக்கான ரூபாய்கள் விவசாய மக்களிடமிருந்து ஏமாற்றப்பட்டுள்ளது. ரசீது இருந்தும்கூட வரி வசூலிக்கப்படுகின்றது. மக்கள் கொடுமை படுத்தப்படுகின்றார்கள். கணக்கு வழக்கு கிடையாது.

கணக்கு வழக்கு என்பதே கிடையாது. நாங்கள் வரியைக் கொடுக்கிறோம். எங்களுக்கு கணக்கு வேண்டுமென்று கேட்டால் ரெவின்யு இன்ஸ்பெக்டரைக் கேளுங்கள் என்பார்கள். அவரைக் கேட்டால் தாசில்தாரைக் கேளுங்கள் என்பார். தாசில்தாரைக் கேட்டால் கணக்குப் பிள்ளையைக் கேளுங்கள் என்று கூறுவார். வரி செலுத்தும் ஒரு விவசாயி எந்த நேரத்திலே கணக்கு கேட்டாலும், உடனடியாக காட்டுவதுதான் தர்மமாக இருக்க வேண்டும். மக்களை ஏமாற்றி, கசக்கிப் பிழிந்து, மிருகம்போல் பார்க்கப்படுகிறார்கள். இந்தக் கொடுமையைப் போக்க வேண்டுமென்று இந்த மந்திரி சபையை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இது மாத்திரமல்ல. இதுபோன்று ஒவ்வொரு இடங்களிலும் காணப்படுகிறது. இது 10 வருஷமாக சேர்ந்து அடித்த கூட்டுக்கொள்ளை என்றே நான் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகள் சரியாக நடந்திருந்தால், எந்தவிதமான கையாடலும் வந்திருக்காது. இன்று ரசீது புத்தகங்களிலே அடிகட்டுத்தான் இருக்கிறது. ஒவ்வொரு ரசீது புத்தகமும் முடிந்த பிற்பாடும், அந்த ரசீது புத்தகத்தைப் பார்த்து பரிசீலனை செய்திருந்தால் இந்தக் கையாடல் வந்திருக்காது. கஜானாவில் கணக்குகளை சரிவர சோதித்துப் பார்ப்பார்களேயானால், எங்கும் இந்தக் கையாடல் நேர்ந்திருக்காது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்று அதுவும் இல்லை. என்னுடைய பகுதியிலே ஒருவர் ஒரு ரசீது வைத்திருக்கிறார். அதாவது லோன் பாக்கி எதுவும் இல்லாமல் பூராத் தொகையும் கட்டி தீர்த்து விட்டதாக அதிலே குறிப்பிட்டு இருக்கிறது. அப்படியிருந்தும் அதே ரசீது

எண்ணைக் குறிப்பிட்டு லோன் பாக்கி என்று அவருடைய ஆடு, மாடுகளை ஜப்தி செய்தார்கள். அதேபோல் ஒரே ஒரு ஜோடி உழவு மாடு வைத்திருந்தவருடைய உழவு மாட்டையும் ஜப்தி செய்தார்கள். என்னுடைய பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் அதிகமாக புஞ்சை சாகுபடி செய்யக்கூடிய மக்கள். இந்த சமயத்தில் மிளகாய் மற்றும் இதர சாகுபடிக்கு தண்ணீர் பாய்ச்ச உதவ மாடுகள் மிகவும் அவசியம் இந்த மாதிரி சமயங்களில் மாடுகளை ஜப்தி செய்து மக்களை கஷ்டப்படுத்துகிறார்கள். இது பற்றி மேல் அதிகாரிகளிடம் தெரிவித்தால், அந்தச் சமயத்தில் சலுகை காட்டுவதுபோல சொல்கிறார்கள். ஆனால் மறுதினம் ஏவி மக்களை இம்சை செய்கிறார்கள். கிராம அதிகாரி கையாடல் செய்து இருப்பது தெரிந்தும்கூட, கண்டுப்பது கிடையாது. அவர்களை ஒன்றும் செய்வது கிடையாது. ஏதோ மயிலே, மயிலே இறகு போடு என்று கேட்பது போல், கையாடல் செய்த பணத்தை கொடுத்து விடுங்கள், மீண்டும் வேலைக்கு உங்களை எடுத்துக்கொள்கிறோம் என்று கூறுகிறார்களே ஒழிய, ஒருவித கண்டிப்பும் கிடையாது. ஆகவே இதையெல்லாம் ஆராய்ந்து, இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு விசாரணை கமிட்டியை அனுப்பி, மக்களுடைய கஷ்டத்தை போக்க வேண்டும் என்று நான் மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு சில இடங்களையும், அதிகாரிகளையும் குறிப்பிட்டு சொன்னால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**SRI S. RAMASAMI THEVAR** : பல தடவை முயற்சி செய்தும், நான் மாத்திரம் அல்ல, பல விவசாயிகளும் . . . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்போதே சில குறிப்பிட்ட இடங்களையும், பெயர்களையும் எழுதிக் கொடுத்தால் உடனடியாக கவனிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் வசதியாக இருக்கும்.

**SRI S. RAMASAMI THEVAR** : இதுபற்றி பெரிதும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இன்னொரு இடத்திலே ஒரு மதிக்கத் தக்க விவசாயி. அவரிடம் வரி வசூலிப்பதற்காக கணக்குகளைத் தாறுமாறாகக் காட்டிக் கேட்டார்கள். அவர் உடனே நகலை எடுத்துக் கணக்குப் பார்க்கும்போது அதிகமாக அவரே ரூ. 100-க்கு மேல் கொடுத்திருக்கிறார். அப்படியிருந்தும் அவரிடம் ஜப்தி மூலம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான கொடுமைகள் இனி நேராதபடி, தக்க நடவடிக்கை எடுக்கும்படியாக நான் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

பழைய பாக்கிகள் இன்னும் நிறைய வசூலிக்கப்படாமல் இருக்கின்றன. சிலர் அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். அப்படி அதிகமாக கொடுத்துள்ளவர்களுக்கு குறைத்தும், நடப்பு பசலிக்கு உள்ளதை மட்டும் வசூல் செய்து கொண்டு, பாக்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு பிற்பாடு தவணை தவணையாக வசூலிக்கவும் ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முன்னர் வி. எஸ். ஆர்-ல் சேர்ந்த சில வசதியான நிலங்களில் சிலவற்றை புறம்போக்கு என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு வரி செலுத்தப்பட்டிருக்கிறது. பிறகு புறம்போக்கு ஆக்கியபின் முன் செலுத்திய வரி கழிக்கப்படவில்லை. முன் கூட்டிய தொகையை கணக்கில் வைப்பதில்லை. கணக்கு வைத்து கழித்து பாக்கியைக் கேட்பதும் இல்லை. இவைகளையெல்லாம் நன்கு கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





விவசாயம் அதிகம் பெருக வேண்டுமென்றும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் நாம் கவலை கொண்டிருக்கக்கூடிய நேரத்தில்,. அதற்காக பிரசாரம் அதிகம் நடந்து கொண்டு வரும் இக்காலத்தில், அறந்தாங்கி தாலுக்கா உர விநியோகத்தில் மிகவும் கவனிக்கப்படவில்லை. ஏதோ மாமாங்கத்திற்கு ஒரு தரம், நல்ல மழையை நாம் காண்போம். இந்த வருஷத்திலே முன் மழை பெய்யாவிட்டாலும்கூட, பிற்பகுதியில் நல்ல மழை பெய்திருக்கிறது. அப்படி பெய்திருந்தும், வேண்டிய உரங்கள் காலா காலத்தில் வருவது கிடையாது. இந்த வகையில் அறந்தாங்கி புறக்கணிக்கப்பட்டது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே சிறிய நீர்ப்பாசன வசதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதவே போதாது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் நாட்டிலே இப்போது எல்லா நீர் நிலைகளுக்கும் ஜீவ நதிகளுக்கும் அணைக்கட்டு கட்டியாகிவிட்டது. இனிமேல் ஒன்றுமில்லை என்று சொல்லப்பட்டு வருகிறது. அப்படியிருந்தும், சிறிய நீர்ப்பாசன வசதிக்கு அதிகத் தொகைகள் ஒதுக்கப்படவில்லை. இனி சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினால் அன்றி, நாம் விவசாயத்தை முன்னுக்கு கொண்டுவர முடியாது. கடலிலே போய் வீணாகக் கலக்கும் காட்டாறுகளைத் தடுத்து அணைகட்டி விவசாயத்தைப் பெருக்க முடியுமென்று நான் பலமுறை சொல்லி வந்தேன். அறந்தாங்கி தாலுக்காவிலே அப்படிப்பட்ட அணைகள் பல கட்ட முடியுமென்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதுவரையிலே பல ஆண்டுகளாக சொல்லி வந்ததின் பேரில், இப்போது ஒரே ஒரு அணை கட்டி, அது முடிவடைய இருக்கிறது. இன்னும் இதுபோல் பல அணைக்கட்டுகளைக் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதிலேகூட இப்போது கட்டப்படும் அணைக்கு கருங்காட்டு அணை என்று பெயர். அந்த அணையின் பெயரை மாற்றுவதற்கு பலர் முயன்று வந்தார்கள். அப்படி முயற்சி செய்து, அதை புவனூர் அணை என்று மாற்றியிருக்கிறார்கள். அதோடுகூட அங்குள்ள மக்களிடையே கருங்காட்டு அணையிலிருந்து, கருங்காட்டு ஏரிக்குத் தண்ணீர் பாயாது என்ற பீதியையும் கிளப்பி இருக்கிறார்கள்.

[21st January 1961

THE HON. SRI P. KAKKAN : அணைக்கு நானே நேரில் போய் வந்திருக்கிறேன். பெயர் மாற்றம் ஒன்றும் செய்யப்படவில்லை. சும்மா யார் சொல்வதையோ, அங்கத்தினர் கேட்டு, சொல்வதாக நினைக்கிறேன்.

SRI S. RAMASAMI THEVAR : பெயர் கருங்காட்டு அணை என்று இருந்தாலும்கூட, அங்குள்ள அஸ்திவாரக் கல்லிலேயே புவளூர் அணை என்று பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்களுக்கு சொல்வதோடு, கருங்காட்டு அணையிலிருந்து கருங்காட்டு ஏரிக்கு தண்ணீர் வராது என்ற பீதி மக்களுக்கு ஏற்படாதபடி கனம் அமைச்சர் அவர்கள் நேரில் வந்து அங்குள்ள மக்களுக்கு உறுதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அணைக்கட்டிலிருந்து ஏரிக்குத் தண்ணீர் வரும் என்று இப்போதே நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. RAMASAMI THEVAR : அதுபற்றி பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்; திருப்தி அடைகிறேன். இதுபற்றி மந்திரி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11.00 a.m. அடுத்தபடியாக, மின்சாரத்தைப்பற்றி பெரிதும் பேசப்படுகிறது. நமது மாநிலத்தில் மின்சாரம் அதிகமான கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், எனது அறந்தாங்கி தாலுக்காவில் கிராமப் பகுதியில் இன்னும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆவுடையார் கோவில், சுப்பிரமணியபுரம், அரசர்குளம், ஆயங்குடி ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டால், அங்குள்ள விவசாயம் வளர்ச்சி அடைந்து, உணவு உற்பத்தி பெருகும் என்று நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

பல தொழில்கள் நாட்டில் ஏற்படுத்தப்போவதாக நாம் அறிகிறோம். இருந்தும்கூட, இந்த நாட்டிலே என்ன நடக்கிறது என்றால், மழை பெய்து எங்கு வளம் பொருந்தியிருக்கிறதோ, எங்கு வசதிகள் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகிறதே ஒழிய, பிற்போக்கான இடங்களில் அமைக்கப்படுவதில்லை. பிற்போக்கான இடங்களில் வேலையில்லாமல் மக்கள் தவிக்கும் பகுதிகளிலே, விவசாயத்திற்காக வருடத்திலே 4, 5 மாதங்கள் வேலை செய்து, பின்னால் சும்மா இருக்கக்கூடிய வரண்ட பிரதேசங்களிலே, பெரிய தொழிற்சாலைகளை அமைத்தால், அங்குள்ள மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும், வருவாயும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, எனது பகுதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த சர்க்கார் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



21st January 1961] [Sri S. Ramasami Thevar]

சர்க்காரில் நடந்து வரும் கொடுமையைக் கண்டு, சர்க்காரிடம் இனி கடன் வாங்கக்கூடாது என்ற நிலைமை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேட்டூர் அணை ஆரம்பித்த காலத்தில் தஞ்சாவூருக்கு நிறைய தண்ணீர் விடுவது என்று ஒரு ஒப்பந்தம் இருந்தது. அந்த வாய்க்காலும் புதுக்கோட்டை வழியாக வந்து அறந்தாங்கி வழியாகத் தான் செல்ல வேண்டும். இருந்தும் அந்த சமயத்தில் புதுக்கோட்டை குறுக்கே நின்ற காரணத்தினால் எனது பகுதிக்கு தண்ணீர் வராமல் தடுக்கப்பட்டு விட்டது. இதுபற்றி கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும், மற்றவர்களிடமும் பல தடவைகள் நாங்கள் சொல்லியிருந்தும்கூட, இன்னும் அந்த விஷயம் கவனிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேட்டூர் அணையிலிருந்து மற்ற பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு போகப்படுவதை நாங்கள் தடுக்கவில்லை. அப்படியிருந்தாலும்கூட எங்கள் பகுதிக்கு வரவேண்டிய தண்ணீர் அவசியம் தரப்படவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் கவர்னர் பெருமான் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, விடுதலை அடைந்த நாட்டிற்கு இந்த நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த அதே நாட்டினுடைய ராணியார் நம் விருந்தினராக வருவதை கவர்னர் பெருமான் வரவேற்றிருப்பதை பாராட்டுகிறேன்.

சமீபத்தில் பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட தஞ்சை ஜில்லா மிகவும் அலங்கோலமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மழையின் காரணமாக ஏராளமான வீடுகள் இடிந்து நாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டாம் போகம் தாளடி, முதல் போகம் சம்பா சாகுபடி இவை அனைத்தும் வெள்ளத்தினால் அடித்துக் கொண்டு போகப்பட்டன. நிவாரண வேலைகள் துவங்கி விரை முதலியவைகள் கிடைத்தும், லோன்கள் கொடுக்கப்பட்டிருந்தும், அதிலிருந்து உழவர்கள் எதிர்பார்த்தபடி பூரண பலன் கிடைக்குமா என்றால், நிச்சயமாக எதிர்பார்ப்பதற்கு மாறாக மூன்றில் ஒரு பங்குதான் பலன் கிடைக்கும் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. முதல் போகம் சம்பா சாகுபடியில் புகையான் என்ற ஒருவித பூச்சி அடித்து, பயிர் கதிருக்கு வெளியிலே வரும் சமயத்தில் நாசப்படுத்தப்பட்டுவிட்டது. அந்த வைக்கோலைக்கூட உழவர்கள் உபயோகப்படுத்தக்கூடாது என்று விவசாய அதிகாரிகள் தெரிவிக்கும் நிலையில் சாகுபடி அத்தனையும் நாசப்படுத்தப்பட்டு, உழவர்கள் நிலை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது. உழவர்கள் வீடுவாசல்கள், மாடு கன்றுகள் எல்லாவற்றையும் அநேகம் பேர்கள் இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்

பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது என்று கவர்னர் அவர்களின் உரையில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், நிவாரணம் என்பது ஒரு சில பகுதிகளுக்கு மட்டும், மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் அளிக்கப்படுகிறது என்ற நிலை இருக்கிறது. நிவாரணம் அளிப்பதென்றால் பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு இழந்தவர்கள் பற்றி கிராம அதிகாரிகள் லிஸ்டுகள் எடுத்துக்கொண்டு போனார்கள். ஆனால், நிவாரணம் கொடுக்கும்போது, ஒரு சிலருக்கு கொடுத்து, மற்றும் சிலருக்கு இல்லை என்றால், சர்க்கார் கொடுப்பார்கள் என்று மற்றவர்களும் உதவி செய்வதை நிறுத்திவிடுகிறார்கள், பாதிக்கப் பட்டவர்களும் முயற்சி எடுத்து செய்து கொள்ளுவதற்கு முன் வருவதில்லை. இம்மாதிரி ஒரு சங்கடமான நிலைமை ஏற்படுத்தப் படுகிறது. கொடுப்பது குறைவாக இருந்தாலும், நிரந்தரமாக எல்லோருக்கும் நிவாரணம் கிடைக்கும்படி கொடுப்பது நலம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அம்மாதிரி கொடுக்கும் பட்சத்தில் பெருமளவு மக்கள் வேதனை அடைந்திருப்பதை காண வருந்துகிறேன்.

என்னுடைய ஜில்லா நிலச்சுவான்தார்கள், பண்டார சன்னதிகள், தேவஸ்தானங்கள் சூழப்பட்ட ஜில்லா. இம்மாதிரி உழவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமையில், சர்க்கார் மூலம், கூட்டுறவு சொஸைடிகளின் மூலம் கடன் வாங்கி, வெளியிலும் கடன் வாங்கி, விதை முதலியவைகளையும் கடன் வாங்கி, இவ்வளவு கடன் வாங்கி சாகுபடி செய்தும், சாகுபடி செய்த பலன் கைக்கு எட்டாத நிலைமையில் போய்விட்டது. வாங்கிய கடனை இந்த ஆண்டு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு பொறுப்பு ஒருபுறம் இருக்க, நிலச் சுவான்தார்கள், மடாதிபதிகள், தேவஸ்தானங்கள் தங்கள் குத்தகையை உடனடியாக அளக்கவேண்டும், வாரத்தை உடனடியாக பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யக்கூடிய தொல்லை யான நிலைமை இருக்கிறது. விவசாயிக்கு தனக்கு கிடைக்கக்கூடிய பலன் கிடைக்காவிட்டாலும், வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற சங்கடமான நிலையில் தவிக்கும்பொழுது, நிலச் சுவான்தாரர்கள் அவர்களுடைய குத்தகையை அளக்கவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். அதன்காரணமாக விவசாயி நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிற நிலைமை ஏற்பட்டு, கடனை திருப்பிக்கொடுக்க முடியாததோடு மேலும் கடன் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறான். இதனால் ரிமிஷன் கோரி கோர்ட்டுக்குப் போய் பரிகாரம் தேடவேண்டும். ஒரு ஏக்கர் விவசாயம் செய்யும் விவசாயி ரெமிஷனுக்காக கோர்ட்டுக்குப் போவது என்றால், அதற்கு வக்கீல் வைக்கவேண்டியிருக்கிறது. முன்போல் இல்லாமல் இந்தக் காலத்தில் வக்கீல் பீஸ் அதிகமாக கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி அதிகமாக வக்கீல் பீஸ் கொடுத்து வக்கீலை அமர்த்தி கோர்ட்டில் நிவாரணம் கிடைப்ப தென்றால், அதற்கு பல 'யீரங்கிகள்' ஆகின்றன. நிவாரணம் கிடைப்பதற்கு ஏறக்குறைய [illegible]பது மாதங்கள் ஆகிவிடுகிறது.





இதனால் அவன் எதிர்பார்க்கும் சலுகையைவிட மூன்று மடங்கு செலவு அதிகமாகிறது. இந்த நிலையில் விவசாயி உழைத்த உழைப் பிற்கு பலன் கிட்டுமா என்பது நிச்சயம் இல்லை. தனக்கு நிவாரணம் ஒன்றும் கிடைக்கவேண்டாம், ஆளை விட்டால் போதும் என்ற நிலை இருக்கும்பொழுது, கோர்ட்டில் பரிகாரம் தேடுவது முடியாத காரியம். ஆகவே கோர்ட்டு மூலமாக பரிகாரம் தேடுவதற்கு பதிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் அங்கு இருக்கக் கூடிய ஸ்தல அதிகாரிகள், டெப்யூடி தாசில்தார், தாசில்தார், பிளாக் டெவலப்மெண்டு அதிகாரிகள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று, சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்டு, அங்கு இருக்கக்கூடிய நிலைமையை நேரில் அறிந்து, என்ன நிவாரணம் எந்த முறையில் அளித்தால் சௌகரியமாக இருக்கும் என்பதை உணர்ந்து உழவர்களுக்கு கஷ்டமில்லாமலும், நஷ்டமில்லாமலும் உடனடியாக செய்யவேண்டும். அங்குள்ள நிலச்சுவான்தார்கள், தேவஸ்தானங்கள் ஆகியோர்களிடம் சிக்கிக்கொண்டு உழவர்கள் அவதிப்படாமல் உழவர்களைக் காப்பாற்ற முதல் நடவடிக்கையாக சர்க்கார் இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்றும் அவர் கட்கு சர்க்கார் ஸொஸைட்டி மூலமும், பிளாக் மூலமும் கொடுத் திருக்கும் கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தீவிர உணவு உற்பத்தி திட்டம் எங்கள் ஜில்லாவில் அமுல் நடத்தப்படுகிறது. உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும் என்பதையும், 52 லட்சம் டன்னிலிருந்து மேலும் 15-½ லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் என்ற நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறது என்பதையும் கவர்னர் பெருமான் உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தீவிர உணவு உற்பத்தி திட்டம் அமுலாகிற பகுதி எங்கள் பகுதி. கிராமாந்திரப் பகுதிகளில் கிராம கூட்டுறவு சங்கங்களை அமைத்து, அந்த கூட்டுறவு சங்கங்களின் மூலம்தான் விவசாயிகளுக்கு உரம், மற்றைய பணம், விதை இதர வசதிகள் அனைத்தையும் நாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. விவசாயிகள் தங்களுக்கு லோன் வேண்டும் என்று போகும்பொழுது, கூட்டுறவு சங்கத்தின் அங்கத் தினர் பங்குத் தொகையை செலுத்தி அங்கத்தினர்களாக சேர்ந்து விடுகிறார்கள் என்றாலும், ஜமீன்தார் பக்கத்திலேயே வேண்டியிருக் கிறது. இதில் ஏராள சிக்கல் இருக்கின்றது. சொஸைட்டியில் பணம் வாங்குவதைவிட வெளியில் அநியாய வட்டிக்கு பணம் வாங்குவது மேல் என்று உழவர்கள் கருதுகிற அளவுக்கு அங்குள்ள கூட்டுறவு மத்திய பேங்கும் அதன் நிர்வாகஸ்தர்களும் இருக்கிறார்கள். காரணம் ஒருவர் 100 ரூபாய் கடன் வாங்குகிறார் என்றால், அந்தத் தொகைக்கு ஜாமீன் போடுகிறவருக்காக 100 ரூபாய்க்குள்ள பங்குத் தொகையைக் கடன் வாங்குபவர் கொடுத் தால்தான் கடன் கொடுக்கப்படுமென்ற நிலைமை கூட்டுறவு மத்திய பாங்கியில் இருந்து வருகிறது. சாகுபடி செய்வதில் அதிகக் கஷ்டம் இருக்கிறது என்ற காரணத்தால் ஒரு விவசாயி வெளியில்

[Sri T. R. Ramamirtha Thondaman] [21st January 1961

கடன் வாங்கும்பொழுது, 100 ரூபாய்க்கு ஒரு வட்டி விகிதம் வாங்கவேண்டிய நிலையைத் தவிர்க்க, 100-க்கு 6¼ வட்டிக்குக் கடன் கொடுக்கும் கிராம கூட்டுறவு சொசைடி மூலம் கடன் வாங்கி நல்ல முறையில் சாகுபடி செய்யலாமென்று நினைத்துச் செல்லுகிற பொழுது, அவனுடைய பங்குத் தொகையைச் செலுத்துவது, அவனுடைய ஜமீன்தாரருடைய பங்குத்தொகையைச் செலுத்துவது, மத்திய பாங்குக்கு பல தடவைகள் சொஸைட்டி தலைவர் சென்று அலைவது போன்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே, கூடுமானவரையில் உழவர்களை அதிகம் பழி வாங்காமல், எல்லா செலவுகளும் உட்பட 100-க்கு மூன்றால் வட்டிக்கு மேற்படாமல் மட்டுப்படுத்தி, இந்த சொசைடிகளிலிருந்து லோன் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு மத்திய பாங்கியிலிருந்து கிராம கூட்டுறவு நாணய சங்கங்களுக்கும், கூட்டுறவு கிராம இதர சங்கங்களுக்கும் லோன் கொடுப்பதற்குப் பதிலாக, ரிசர்வ் பாங்கியிலிருந்து சர்க்கார் கஜானா மூலமாக நேரடியாக கிராம கூட்டுறவு சங்கங்களுக்கு பணம் அனுப்பிவிடுமேயானால், விவசாயிகள் அலைவதைத் தடுத்து சீக்கிரமாகவும், சுலபமாகவும் கடன் பெறமுடியும். இதை ரிஸர்வ் பேங் கவர்னர் அவர்களிடம் நானும், கிராம தலைவர்களும் தெரிவித்திருக்கிறோம், காரணம் கூட்டுறவு மத்திய பாங்கியில் இருப்பவர்கள் அத்தனை பேரும் பெரிய நிலச்சுவான்தார்கள். ஆனால் கூட்டுறவு கிராம சங்கங்களை வைத்து அதிலிருந்து பயனடைய வேண்டுமென்று நினைப்பவர்கள் ஏழை உழவர்கள். அந்த மத்திய பேங்கிலிருந்து உதவி பெற்று, தங்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், உற்சாகமாக உழைப்பதாலும், அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று அவர்கள் நினைக்கும் காலத்தில் அதற்கு மாறாக உழவர்கள் வாழ்வதில் அதிர்ப்தி உடைய மத்திய பேங்கு நிர்வாகத்தில் மாறான எண்ணங்கள் ஏற்படுகின்றன. அதன் காரணமாகவே நாம் போட்ட திட்டங்கள் வெற்றி பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. உணவு உற்பத்தி குறைகிறது, உழவர்கள் உழைப்பு வீணாகிறது. அந்த தாமதத்தைப் போக்கவேண்டுமென்றுதான் நான் சர்க்காரிடம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தீவிர உணவு உற்பத்தி திட்டம் சம்பந்தமாக, என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில் இன்னொரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி நான் பல தடவைகள் இந்த சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக மண்ணியாறு பாசனத்தைப் பற்றிக் கடுமையாக தெரிவித்திருக்கிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய வாய்க்கால்கள், அந்த வாய்க்கால் தலைப்பிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய சிறிய வடிக்கால்கள் இருக்கின்றன. பல கிராமங்களுக்கு அதுவும் பல கோணல் மாணலாக பல வளைவுகளுடன் ஒரு வாய்க்கால் தலைப்பு இருக்கிறது. இந்த வாய்க்கால் கண் வெட்டுவது, வாய்க்கால் மராமத்து செய்வது குடிமராமத்து திட்டத்தின்கீழ் ஆற்றில் வாய்க்கால் தலைப்பிலிருந்து செய்யவேண்டிய எல்லா மராமத்து



21st January 1961] [Sri T. R. Ramamirtha Thondaman]

சம்பந்தமான வாய்க்கால் வடிக்கால் கரை மோடு வாய்க்கால் வெட்டு வேலைகளையும் ஒவ்வொரு கிராமத்தாரும் செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது. இதை நில சுவான்தார்கள் செலவில் செய்து வந்தார்கள். ஆனால் சமீபத்தில் நிறைவேற்றப் பட்ட பாதுகாப்புச் சட்டம், நியாயவாரச் சட்டம் இவைகளில் இருக்கக்கூடிய அமைப்புப்படி, நிலசுவான்தார்தான் அந்த வாய்க்கால் மராமத்து வேலையைச் செய்யவேண்டுமென்று இருந்தும் கூட, உழவர்களுடைய நிலம் விளையாமல் இருப்பதற்கு வாய்க்கால்களைத் தூர்ப்பதுதான் நல்லது என்ற ஒரு கருத்து நில முதலாளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. சட்டப்படி நிலச்சுவான்தார்தான் வெட்ட வேண்டியது என்று உழவர்கள் ஒதுங்கி விடுகிறார்கள். நமக்கு ஏற்பட்ட குத்தகைப்படி வந்தால் போதும், அதிகம் விளைந்தால் நமக்கு என்ன, இந்த வாய்க்காலை நாம் ஏன் வெட்டவேண்டுமென்று நிலச்சுவான்தார் ஒதுங்கிவிடுகிறார். இதனால் வாய்க்கால்கள் தூர்ந்து மேடிட்டு, பாசன வடிகால் வசதிகள் சரியில்லாமல் போய்விட்டது. குடிமராமத்துச் சட்டத்தின் பெயரில் இருக்கக்கூடிய கிராம வாய்க்கால்களை தீவிர உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் மராமத்துக்களை சர்க்கார் செலவில் கொண்டுவரவேண்டும். நிறைய எருக்களைப் போட்டு நிலத்திலிருந்து அதிக கண்டு முதலை எதிர்பார்க்கும் நேரத்தில், பாசன வடிக்கால் வசதியில்லாவிடில் பயனில்லை. ஆகவே இரண்டாம் நம்பர் வாய்க்கால் என்று சொல்லக்கூடிய (பெரிய) வாய்க்கால்களை நீர்ப்பாசன இலாகா எடுத்துக்கொண்டு மராமத்து செய்வது போல, அந்தந்த கிராமப் பகுதிகளிலுள்ள கிராம வாய்கால்களையும் நீர்ப்பாசன இலாகா முதலில் எடுத்து செப்பனிட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கு தனி வாய்கால் பாசனம் செய்து புதிய தலைப்புகள் ஏற்படுத்த வேண்டும். அதற்காக ஒரு ஸ்பெஷல் திட்டம் போட்டு, ஸ்பெஷல் கிராண்டு ஒதுக்கி சிறிய நீர்ப்பாசனச் திட்டங்களைச் செய்யலரம். (இந்த பாசன வடிக்கால் வேலையை) முதலில் நீர்ப்பாசன இலாகா வேலை செய்த பிறகு, அந்தந்த ஆண்டு செப்பனிட வேண்டிய வருஷ மராமத்து பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கான தொகையை ஒதுக்கி இதை உடனடியாக செய்தால்தான் உற்பத்தி அதிகரிக்க முடியும். தீவிர உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் உழவர்களுக்கு நாம் கொடுத்திருக்கிற பல வசதிகளையும் செய்து கொடுப்பதோடு, பாசன வடிகால் வசதிகளையும் செய்து விட்டால் நாம் எதிர்பார்க்கக்கூடிய 15½ லட்சம் டன்னுக்கு மேலாக உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒரு ஸ்பெஷல் திட்டத்தைத் தயாரித்து, முதலில் நீர்ப்பாசன இலாகா மராமத்து வேலையைச் செய்து முடித்த பிறகு, பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் அதற்குப் பிறகு செப்பனிடும் வேலையைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு உழவர்கட்கு நிலத்தில் நிரந்தர உரிமையும் அளிக்கப்பட வேண்டும்.

[Sri T. R. Ramamirtha Thondaman] [21st January 1961

அடுத்தபடியாக, ஜில்லாக்களில் ரோடுகளைப் பராமரிப்பது, பள்ளிக்கூடம் கட்டுவது, ஆஸ்பத்திரிகள் கட்டுவது போன்ற ஸ்தல அபிவிருத்தி வேலைகளை ஜில்லா போர்டுகளிலிருந்து கால் பங்கு பெற்றும், பஞ்சாயத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் கால் பங்கு பெற்றும், வேலைகளைச் செய்து வந்தோம். சென்ற பத்தாண்டு காலமாக ஜில்லா போர்டுகள் எந்த ரோடுகளையும் சரிவர வேலை செய்யவில்லை, ஸ்தல அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படுவதில்லை. கிராம ரோடுகள் பராமரிப்புக்காக 100, 200 ரூ. என்று தொகை ஒதுக்குவது, அது எங்கேயோ போவது என்ற நிலையில்தான் ரோடுகள் காட்சி அளிக்கின்றன. இப்பொழுது பெய்த பெரு மழையின் காரணமாக பல இடங்களில் எல்லா ரோடுகளிலும் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்ட நிலையைக் காண்கிறோம். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், இப்பொழுது இருக்கக்கூடிய நிதி நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து நிதி, பள்ளிக்கூட ஆசிரியர்கள் சம்பளம், டாக்டர்களுடைய சம்பளம், ஆஸ்பத்திரிகள் மருந்து மற்றும் ஸ்தல அபிவிருத்தி வேலைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளின் சம்பளத்திற்கே போதுமா, போதாதா என்ற நிலையிலிருக்கிறது. இந்த நிதியை வைத்துக்கொண்டு பெரிய ரோடுகளையும், மற்ற வேலைகளையும் செய்வது அசாத்தியமான காரியம். ஆகவே, ஸ்பெஷலாக சர்க்கார் நிதி ஒதுக்கி, ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்யவேண்டும். ஜில்லா போர்டு தன்னுடைய பங்கு தொகையை நிறுத்தி விட்டதால், சர்க்காரே அந்தப் பங்கு தொகையை பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுத்து, ஸ்தல அபிவிருத்தி வேலைகள் நடப்பதற்கான ஒரு சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தி கிராம ரோடுகள், பள்ளிகள், இதர பொது வேலைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்க வேண்டும். மயானமும் களமும்தான் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது.

என் பகுதியில் எங்கே பார்த்தாலும் தேவஸ்தானங்களும், மடாலயங்களும் இருக்கின்றன. என் தொகுதியில் ஹைஸ்கூல்கள் ஆரம்பித்து, மற்றும் காலேஜ் ஒன்று ஆரம்பிப்பது போன்ற முயற்சிகள் எங்கள் பகுதியில் பல வருஷ காலமாகவே இருந்து வருகிறது. கனம் விவசாய அமைச்சர் அவர்கள் வந்திருந்த போதுகூட ஆடுதுறையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபொழுது, விவசாயக் கல்லூரிக்குப் பொருத்தமான இடம் இது. இதில் இருந்து விவசாயத்திற்கு பல முன்னேற்றமான காரியங்களைச் செய்து கொள்ள முடிகிறது என்று அமைச்சர்கள் மட்டுமல்ல, அந்நிய நாட்டுப் பார்வையாளர்களும்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காரணம் ஆடுதுறையில் விவசாய பண்ணை நல்ல முறையில் நடப்பதுதான். விவசாயக் கல்லூரி அங்கு ஆரம்பிப்பதற்கு 80 அல்லது 100 ஏக்கரா நிலம் வேண்டும், 5 லட்சம் அல்லது 10 லட்சம் ரூபாய் சர்க்கார் சொன்னால், அதைக் கொடுக்கக் கூடியவர்கள் யார்? வேண்டும், இவைகளைக் கொடுத்தால் ஆரம்பிப்போம் என்று



21st January 1961] [Sri T. R. Ramamirtha Thondaman]

நிலம் பூராவும், மடம், கோவில் நிலங்கள், பணமும் அவர்களிடம் தான் இருக்கிறது. மடாலயங்களில் அடிமைகளாக இருக்கும் குடிகள் நிலம் தொகை கொடுப்பதற்குப் போதிய வசதியுள்ளவர்களாக இல்லை. ஆகவே மடாலய கோவில்தான் இவைகளை கொடுக்க வேண்டும். பாதுக்காக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்திற்கு 25 சதவிகிதம் பங்கு தொகையை மேஜர் பஞ்சாயத்துக்கள் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் கேட்கிறது. ஆடுதுரை, திருவிடைமருதூர் பஞ்சாயத்துக்களுக்கு பங்கு தொகை கொடுப்பதற்குப் பணம் இல்லை. அங்கேயுள்ள மக்களுக்கும் கொடுக்க சக்தியில்லை. இதனால் இது கிராமங்களிலே தண்ணீர் திட்டம் நிறைவேறியும் இங்கு நடக்கவில்லை. குறிப்பாக பண்டைய காலத்தில் சோழ மன்னனுக்குப் பைத்தியம் பிடித்து, திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி தேவஸ்தானத்துக்கு வந்தவுடன் பைத்தியம் தெளிந்துவிட்டது என்ற காரணத்தால் மேற்படி மன்னனால் கட்டப்பட்ட கோவிலுக்கு ஏராளமான ஜனங்களும், நூற்றுக்கணக்கான பைத்தியங்களும் இக்கோவிலின் பிரகாரத்தைச் சுற்றினால் பைத்தியம் தெளிந்து விடும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கக்கூடிய தேவஸ்தானம் இருக்கிற இடத்தில் குடிதண்ணீர் வசதியில்லை. அங்கு குடி தண்ணீர் வசதிக்காக பஞ்சாயத்துத் தீர்மானம் மோசமாயும், திட்டத்திற்குரிய பங்குத் தொகை கொடுப்பதற்கு அங்கே ஆட்கள் இல்லை. பஞ்சாயத்திலும் பணம் இல்லை. அங்குள்ள பண்டார சன்னதிகள் சாதாரணமாக கொடுக்க மாட்டார்கள். தப்பித்தவறி சிறு தொகை கொடுப்பது என்று ஒப்புக் கொண்டால், நமது இந்துமத போர்டு எல்லா ஜனங்களுக்கும் குடிப்பதற்கான ஒரு தண்ணீர் திட்டத்திற்கு வேண்டிய பங்கு தொகையைக் கொடுக்க தேவஸ்தான போர்டார் மறுத்து விடுகிறார்கள். காரணம் இந்து மத போர்டு விதிகளில் காட்டியிருப்பதாக சொல்லுகிறார்கள். இதுபோன்ற திட்டங்களுக்கு எந்தவிதமான தடையும் சொல்லாமல், அபிவிருத்தி வேலைகள் நடப்பதற்கு அதாவது, ஹைஸ்கூல், காலேஜ், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி போன்றவைகளுக்கு அதற்குரிய பங்கு தொகையை தேவஸ்தானங்களும், மடாலயங்களும் கொடுக்க வேண்டுமென்ற ஒரு சூழ் நிலையை ஏற்படுத்தவேண்டுமென்றும் அதற்குரிய முறையில் இந்துமத சட்டத்தை மாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன், காரணம் திருவிடைமருதூர் வாசிகள் கேட்டதற்கிணங்க திருவிடைமருதூர் பண்டார சன்னதி அவர்கள் திருவிடமருதூர் தண்ணீர் திட்டத்திற்காக பத்தாயிரம் ரூபாய் கொடுக்க சம்மதம் சொல்லியும், அப்படி கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்த (பத்தாயிரம்) பணத்தை எண்டோமெண்ட் போர்டில், கோவில் பணத்தைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். சாமிக்குக் காணாமல் சாமி பட்டினிக் கிடக்கும்போது பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை சாமிக்கு கண்டது போக, தாராளமாய் செலவிட்டது போக, மீதியிருக்கும் பணத்திலிருந்து ரிசர்வ் நிதியிலிருந்து 3, 4 அல்லது 5 லட்சம் என்றிருக்கிறதே அதிலிருந்து

கொடுக்கச் சொல்லுகிறோம். அப்படியிருந்தும் கொடுக்கவில்லை. அதை உடனே கொடுக்கச் செய்யவேண்டும். ஆடுதுறையில் ஒரு காலேஜ் வைக்க ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தி சுவாமிகள் மானிய நிதி கொடுத்துதவ முன்வந்திருக்கிறார்கள். திருப்பனந்தாளில் ஹைஸ்கூல் ஏற்படுத்த மானிய நிதியும் இதர உதவியும் செய்து இருக்கிறார்கள். 5 லட்சம் அளித்திருக்கும் திருப்பனந்தாள் சந்நிதானத்தைப் பாராட்டுகிறேன், அப்படி பள்ளியும், காலேஜும் ஆரம்பிக்க உடனடியாக சர்க்கார் அங்கீகாரம் கொடுத்து, அதற்குரிய மற்ற வசதிகள் மற்றைய மடங்களால் கிடைக்கும்படி செய்து மேலும் தரும ஆதீனம் திருப்பனந்தாள் ஹைஸ்கூலுக்கு தரும ஆதீனம் கொடுக்கும் வசதிகளையும் அங்கீகரித்து அவற்றை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். என் பகுதியில் தேவஸ்தானங்களால் கிடைப்பதை உடன் அங்கீகரிக்கவும் அமைச்சர் உத்தரவிட கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் பந்தநல்லூர், சோழபுரம் இவைகளில் ஹைஸ்கூலுக்கு போடப்பட்ட மனுப்படி இந்த ஆண்டு ஹைஸ்கூல்கள் ஏற்படுத்த கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**Sri T. M. NALLASAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையை வரவேற்றுப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படி வரவேற்றுப்பேசும்போது, என் கருத்துக்களையும் சொல்ல ஆவல் உள்ளவனாக இருக்கின்றேன். கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரை பெரும்பாலும், பிளானிங் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி, அதில் உள்ள முக்கிய அம்சங்களை எடுத்துச் சொல்லும் முறையில் அமைந்திருக்கிறது. அந்த நாட்டிலே சிறிய, பெரிய தொழில்களை வளர்க்கும் நோக்கத்தோடு, பெரிய அளவில் தொகைகள் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. இருந்தாலும், நீர்ப்பாசன சம்மந்தமாக பெரிய அளவு வெட்டு இருப்பதாக உணர்த்தப்படுகிறது.

இன்றைக்கு விவசாயம்தான் நாட்டின் முதுகெலும்பு என்று பாரதப் பிரதமர் முதல் எல்லோரும் கூறுகிறார்கள், விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால் நீர்ப்பாசனம்தான் விவசாயத்திற்கு இன்றியமையாதது. அதைக் கருத்தில் கொண்டுதான் எங்கு பார்த்தாலும் நீர் நீர் என்றும்,

> " நீரின்றி அமையாது உலகெனின் யார் யாருக்கு
> வானின்றி அமையாது ஒழுக்கு "

என்ற அடிப்படையில் நாட்டுக்கு நாடு பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், தண்ணீர் சம்மந்தமாக தகராறு இருந்து, தீர்ந்ததைச் செய்தி



தாள்களில் படித்துக்கொண்டு இருந்தோம். இன்றைக்கு, மைசூருக்கும் அண்டை மாகாணத்திற்கும் தகராறு பற்றிப் பத்திரிகையில் பார்க்கிறோம். இப்படி நீர்பாசனத்திற்கு அவசியம் இருக்கும் காரணத்தினால்தான், உள்நாட்டிலுள்ள வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்தோடு, சென்னை சர்க்கார் ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் ப்ரோக்ராம் என்று ஒரு தனி இலாகாவையே ஏற்படுத்தி நாட்டிலுள்ள வாய்க்கால்களை, சிறிய, பெரிய ஓடைகளை, ஏரிகளை, நதிகளைப் பயன் படுத்திக்கொள்ள திட்டமிட்டார்கள். நதிகள் என்று சொல்லும்போது, காவேரி நீங்கலாக இதர நதிகள். இவற்றை ஆராய்ச்சி செய்து சிறந்த திட்டங்களைத் தயாரித்து, மூன்றாவது திட்ட நகலில் சேர்த்தார்கள். பல திட்டங்கள் திட்ட கமிஷனால் அங்கீகரிக்கப்படாமல், அது குறைவு பட்டு இருக்கிறது. அப்படிப் பல திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு, ப்ளான்கள், எஸ்டிமேட்டுகள் கூட, தயாரித்து மூன்றாவது திட்ட நகலில் சேர்த்தார்கள். சர்க்கார் விளம்பரங்களிலெல்லாம் அம்மாதிரித் திட்டங்கள் எல்லாம் வரும் என்று சொல்லப்பட்டது. சில மாதங்களுக்கு முன்னால்கூட நினைவிருக்கிறது, கனம் பி. ஜி. மாணிக்கம் ஒரு கேள்வி கேட்டார்கள், ஜில்லா வாரியாக மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி. கனம் மராமத்து மந்திரியவர்கள் ஒரு தாளை அச்சிட்டு சமர்ப்பித்தார்கள். அதில் இன்னின்ன திட்டம், இன்னின்ன திட்டத்திற்கு இன்னின்ன தொகை என்றெல்லாம் விளக்கப்பட்டிருந்தது. நிபுணர்கள் தீவிரமாக பரிசீலனை செய்த காலத்திலும், அங்கத்தினர்கள்—நகரப் பகுதி அங்கத்தினர்கள் தவிர, மற்ற அங்கத்தினர்கள்—எல்லோரும் இந்தத் திட்டங்களெல்லாம் நிச்சயமாக நிறைவேறும் என்று நம்பினார்கள். ஆனால், இன்று அந்தத் திட்டங்களில் பல கைவிடப்படவேண்டிய நிலை இருக்கிறது; தொகையும் குறைந்திருக்கிறது. சுமார் ரூ. 27 கோடி நீர்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் திட்டத்திற்கே ரூ. 25 கோடி வரை பிடிக்கும். ஆகவே, மற்றெல்லாத் திட்டங்களும் கைவிடப்படலாம் என்றுதான் ஊகிக்கிறோம். பரம்பிக்குளம் திட்டம் நிறைவேற வேண்டும்தான், அதில் மின்சார திட்டமும் இருப்பதால் அது நாட்டுக்கு மிகவும் நல்லதாக இருக்கும். ஆனால் இந்த மத்தியதரத் திட்டங்கள் நிறைவேறவில்லை என்பது வருத்தத்தைக் கொடுக்கும் விஷயமாக இருக்கிறது. ஆனால், கவர்னர் அவர்களின் உரையில், நம் ப்ளானில் "கட்" இருந்தாலும்,

"Going by our experience of the Second Plan, we may yet hope to restore some of these cuts as we proceed on with the implementation." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த சந்தர்ப்பத்திலே இந்த திட்டங்களும் நிறைவேற்றப் படவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். இம்மாதிரி திட்ட கமிஷனின் அங்கீகாரம் இல்லாமல், திட்டங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று தெரிந்தவுடனேயே, முதல் அமைச்சர், விவசாய அமைச்சர், நிதி மந்திரி, மராமத்து மந்திரி இவர்களை நானும், இன்னும்

என்னைப் போல ஆவல் உள்ள பல அங்கத்தினர்களும் கேட்டோம். அவர்களும், நேஷனல் டெவெலப்மெண்ட் கவுன்சிலில் பெரிய அளவு வற்புறுத்தியிருக்கிறார்கள்; அதன் பேரில் திட்ட கமிஷனின் சம்பந்தத்தின் மேல் ஒரு அட் ஹாக் கமிட்டியை போட்டிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட திட்டங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதே அந்த கமிட்டியின் நோக்கம். நம் நிதி அமைச்சரும் அதில் அங்கத்தினராக இடம் பெற்று இருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். நிதியமைச்சர் இல்லாமல், மற்ற அமைச்சர் இருந்திருந்தால் மகிழ்ச்சி இல்லையா என்றால், பாம்பிக்குளம் திட்டம், அவர்கள் பகுதியில் இருக்கிறது, அதனால், அவர்கள் தொகுதி வளப்படும். ஆகவே, அந்த திட்டம் வருவதில் அவர்களுக்கு எப்படி சந்தோஷமும், மகிழ்ச்சியும் இருக்குமோ, அப்படியே தான் மற்ற திட்டங்கள் வந்தால், அந்த அந்த தொகுதி அங்கத்தினர்களுக்கும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் என்று அவர்கள் நன்றாக உணர்வார்கள் என்ற காரணத்தினால் நான் அப்படிச் சொன்னேன். ஆகவே, அவர்களே இந்த கைவிடுவதாக உள்ள திட்டங்களின் அவசியத்தைப் பற்றி என்.டி.சி. இல் வற்புறுத்திச் சொல்ல அங்கத்தினர்கள் குறைகளை மனதில் கொண்டு, எடுத்துச் சொல்ல வசதியாக
11-30 a.m. இருக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மற்ற இலாகாக்களிலே எதாவது கஷ்டம் இருக்குமானால்கூடப் பாதகம் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிலே நாம் கேட்டிருப்பது 40 கோடி ரூபாய் அல்லது ஒன்றிரண்டு கோடி அதிகமிருக்கும் என்று நினைக்கிறேன். அதில் 13 அல்லது 14 கோடி ரூபாய் குறைத்திருக்கிறார்கள். நீர்ப்பாசனத் திட்டங்களை பொறுத்தவரையில் வெட்டு இல்லாமல் வேறு எந்த இலாகாவில் வெட்டு இருந்தாலும் பரவாயில்லை. எப்படியிருந்தாலும் திட்டமிட்டபடி நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றிவிட வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும். நான் என் பகுதியைப் பொறுத்து மட்டும் இதைச் சொல்லவில்லை. எனக்காகவும், மற்ற பிரதிநிதிகளுக்காகவும் தான் இதைச் சொல்கிறேன். திட்டங்கள் வரும் வரும் என்று ஆவலாக இருக்கும் பொது மக்களின் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டங்கள் ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் ப்ரோக்ராமில் போடப்பட்டு, ஓரளவு மேலெழுந்த வாரியாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஸ்பெஷல் டிவிஷன் ஏற்படுத்தி தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கின்றன. நொய்யல் நதித் திட்டத்திற்காக ஸ்பெஷல் டிவிஷன் ஒன்று ஏற்படுத்தினார்கள். ஒரு அசிஸ்டெண்ட் இன்ஜினீரும், பல செக்ஷன் ஆபீசர்களைப் போட்டு, அணை இன்ன உயரம் இருக்கும், தண்ணீர் தேங்கும் விஸ்தீரணம் எவ்வளவு, இத்தனை ஆயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் பாயும், இந்த இந்த இடத்தில் வாய்க்கால் செல்லும் என்றெல்லாம் திட்டமிடப்பட்டது அங்குள்ள மக்களெல்லோருக்கும் தெரியும். சென்ற ஒரு மாதத்திற்கு முன்புவரை என்னிடம் ஏராளமான 'விசிடர்கள்' வந்து, "எங்கள் பகுதிக்கு வாய்க்கால் வரவில்லை, தெற்கே வருகிறது, மேற்கே வரவில்லை" என்ற வகையில் சொல்லிக்கொண்டு



இருந்தார்கள் என்றால் எவ்வளவு தூரம் மக்கள் ஆவலாக இருக்கிறார்கள் என்பதைக் கவனித்து உணர வேண்டும். இவ்வளவு ஆவலாக மக்கள் இருக்கும்போது 'இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படாது' என்று சொல்லும்போது அங்கே ஒரே அதிர்ச்சியும் குழப்பமும் வருத்தமும் இருக்கிறது என்பதை அந்தப் பகுதியின் பிரதிநிதி என்ற முறையில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அப்படிச் சொல்லும்போது, என் பகுதியில் இருக்கும் திட்டத்தைப்பற்றி மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இது மாதிரியான குறைபாடு ராஜ்யத்தில் மற்ற பகுதிகளிலும் இருக்கும். எல்லோருக்கும் சேர்த்துத்தான் இதைச் சொல்கிறேன். அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாவற்றுக்கும் முதல் இடம் கொடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ரோடு போடுவதைப்பற்றிப் பேசப்படுகிறது. விவசாய அமைச்சர் அவர்கள் ரஷ்யாவுக்குப் போய்விட்டு வந்தபின், அவரிடம் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது அவர், "போக்கு வரத்துப் பாதைகள் மிகவும் மோசமாக இருந்ததைக் குறிப்பிட்டு, ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அவர்கள், எங்களுக்கு ட்ராக்டர் போகக்கூடிய அளவு பாதை இருந்தால் போதும், பாதைகளுக்கு அதிகமாகச் செலவிட்டு, மற்ற அவசியமான இலாகாக்களுக்குப் பணம் இல்லாத நிலைமை ஏற்படுத்த விரும்பவில்லை என்று பதில் அளித்தார்கள்" என்று சொன்னார்கள். மற்ற இலாகாக்களில் ஏதாவது விட்டிருந்தாலும், நீர்ப்பர்சனம் சம்பந்தமாக விட்டிருக்கக்கூடாது என்று நான் இந்த மன்றத்தில் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரை மிகவும் பாராட்டத்தக்கதாகும். நமக்குப் புதிய உணர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகவும் அமைந்திருக்கிறது. மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் பெரிய அளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. 571 மெகா வாட்டுகளிலிருந்து 1,441 மெகா வாட்டாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிலே உயரும் என்னும்போது, இப்படிப்பட்ட பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுவது பெருமைப்படக் கூடியதாக இருக்கிறது என்று தெரிவித்து, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றியறிதலைத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*Sri P. S. SANTHANAM : துணைத்தலைவர் அவர்களே, இன்று கவர்னர் ஆற்றிய உரையினையொட்டி என் கருத்தினைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். இப்பொழுது கவர்னர் பெருமான் ஆற்றிய உரையிலே, 'சென்ற ஆண்டு இயற்கை சதி செய்தது, இந்த ஆண்டு நல்ல முறையிலே மழை பெய்து, மக்கள் சுபீட்சம்

அடைந்திருக்கிறார்கள்' என்ற வார்த்தையினைச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் குறித்து உண்மையிலேயே ஒரு விதத்தில் சந்தோஷப்பட்டாலும், இந்த ஆண்டு இயற்கையின் வினைவால் அவதிக்கு உள்ளாகிய மக்கள் அத்தனை பேரும்—குடிசையில் வாழக்கூடியவர்கள்—ஏழை விவசாயிகள் என்பதைப்பற்றி இந்த மாமன்றத்தில் குறிப்பிடுகிறேன். அத்தகைய ஏழை, பாமர மக்கள் பாதிக்கப்பட்ட நிலையை கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டு, அவர்களுக்கு ஏதோ நிவாரணம் அளிப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அவதிப்பட்ட மக்களுடைய நிலையை நாம் ஆழ்ந்து பார்ப்போமானால், அவர்களுடைய உள்ளக் குமுறலையும், எரிச்சலையும் உணர்ந்துகொள்ள முடியும். அப்படிப் பட்டவர்களுக்கு எந்த வகையிலே நிவாரணம் சர்க்கார் அளித்தார்கள் என்று கேட்கும்போது, குடிசை இழந்தவர்களும், கால் நடை இழந்தவர்களும் இப்படிப்பட்டவர்களுக்குத் தலைக்கு முப்பது ரூபாய் வீதம் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதைக் கேட்டு உண்மையிலேயே வருத்தப்படக் கூடியவர்களாக இருக்கிறோம். சென்னையில் சாதாரணமாக ஒரு குடிசை போட வேண்டுமென்றால், 100 ரூபாய்க்குமேல் செலவு ஆகிறது. அப்படியிருக்கும்போது முப்பது ரூபாய் வீதம் சர்க்கார் நிவாரணம் அளித்தார்கள் என்றால், அந்த நிவாரணம் அளிக்கப்பட்ட தொகைக்கு அன்றையதினமே அவர்கள் கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டார்கள். உண்மையிலேயே அவர்கள் குடிசைக் கட்டிக்கொள்ளவில்லை. ஆனால், அமைச்சர்களும், கவர்னரும் அந்தச் சேதமடைந்த பகுதிகளைப் பார்த்திருந்தால், ஓரளவுக்கு அதிகமான அளவுக்கு நிவாரணம் அளித்திருப்பார்கள். தேவையான அளவு நிவாரணம் அளித்திருந்தால், கவர்னருடைய உரையை வரவேற்கலாம். ஆனால், நிவாரணம் அளிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நாமெல்லோரும் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். பெரும்பாலும் சில நாடகக் காரர்களும், சில செல்வந்தர்களும் நிவாரணம் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பிலும், ஏழைகளின் சார்பிலும் வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

இந்த நாட்டில் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி வாழக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும், நமது சர்க்கார் விவசாயத்திற்கு என்று சென்ற ஆண்டைவிட அதிகப்படியாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை வரவேற்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

கவர்னர் உரையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால், நடைமுறைத் திட்டத்தில் இதற்கு நான்கு கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரண முறையில் இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் வைத்துள்ளவர்கள் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வாழக்கூடியவர்கள் அல்ல; சிறிய ஏரியின்கீழ் இரண்டு,





மூன்று ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு பாசனம் செய்கிறவர்கள் ஏழைகள்தான். உதாரணமாக எடுத்துக்கொண்டால், வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து விவசாயம் செய்யக்கூடியவர்கள் அல்ல. சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டமாகிய ஏரிகளிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் சர்க்கார் நல்ல முறையில் விவசாயிகளுக்கு உரம் அளிக்கிறார்கள். ஆனால், வடாற்காடு மாவட்டமானது, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்த படியாக நெல் விளைச்சல் செய்வதில் பின்வாங்காமல் இருப்பதாக சர்க்கார்த் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. வடாற்காடு ஜில்லாவிலே உள்ளவர்கள் பெரிய அணைக்கட்டுத் திட்டத்தால் நன்மை பெறுவதில்லை. பெரும்பாலும் ஏரிப் பாசனத்தைக் கொண்டு விவசாயம் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய மாவட்டத்திற்குத் தகுந்த சாதனங்கள், உரங்கள், விவசாயக் கருவிகள் கொடுக்கப்படவேண்டும். ஆனால், ஹைவேஸ் இலாகாவினரைக் கேட்டால், உணவு இலாகாவைக் கேட்கச் சொல்கிறார்கள். அவர்கள் மற்றவரிடம் போகச் சொல்கிறார்கள். எங்களுக்குச் சம்பந்தமில்லை, யூனியன் கவுன்சிலைக் கேளுங்கள் என்று சொல்லக்கூடிய வகையிலே நடைபெறுகிறது. அதனால் அங்குள்ள பெரிய கால்வாய்கள் செப்பனிடப்படாத காரணத்தால் பெய்யும் மழைத் தண்ணீர் பாழாய்விடுகிறது. சர்க்கார் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு எட்டுகோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை, பெரிய நீர்ப்பாசன வசதி இல்லாத சேலம், தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் செலவு செய்தால், அந்த மாவட்டங்கள் நன்மை அடைவதோடு விவசாய உற்பத்தி செய்யவும் ஏதுவாக இருக்கும்.

சிறிய கைத்தொழில்களைப்பற்றி நாம் வரவேற்கக் கூடியவர்களாய் இருக்கிறோம். அதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்ற வகையில், செங்கல் அறுப்பது, தோல் பதனிடுவது, தையல் மிஷின் வைப்பது, விவசாயக் கருவிகள் செய்வது, எண்ணெய் உற்பத்தி செய்வது, என்பவைகளுக்கு ஏராளமாக சர்க்கார் பணம் கொடுக்கிறார்கள். ஆனால், கொடுப்பதன் நோக்கமென்ன? சாமான்கள் ஏராளமாகச் செய்யப்பட்டால் அங்குள்ள விவசாயிகளுக்கு நல்ல முறையில் கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் சர்க்கார் திட்டமிடுகிறது. ஆனால், திட்டத்தை நல்ல முறையில் நடத்துகிறார்களா என்று கவனிப்பதற்கு சர்க்கார் ஏனோ கவனக் குறைவாக இருப்பதைக் கண்டு நான் வேதனைப்படுகிறேன். விவசாயத்திற்கு வேண்டிய மண்வெட்டி, கடப்பாரை, களைவெட்டி, கார் போன்ற சாமான்கள் உற்பத்தி செய்ய ஐயாயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று சர்க்கார் கொடுக்கிறார்கள். ஆனால், அந்தத் தொழில்களை நல்ல முறையில் நடத்துகிறார்களா என்றால், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்வேன், கிடையவே கிடையாது என்று. சாதாரணமான முறையில் யார் செங்கல்

[Sri P. S. Santhanam] [21st January 1961

அறுக்கிறார்களோ, யார் கொல்லப்பட்டறை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு இந்தப் பணம் உதவி செய்யப்படுவது கிடையாது. சிறு தொழில் வளர்ச்சி என்ற அடிப்படையில் ஐயாயிரம், பத்தாயிரம் என்று பணக்காரர்களுக்குத்தான் இந்தப் பணம் போய்ச் சேருகிறது. அந்த அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு உண்மையில் கிடையாது. இந்த அவல நிலையைப் போக்குவதற்கு சர்க்கார் முயற்சி செய்யவேண்டும். ஆண்டு தோறும் பணம் ஒதுக்கிவிட்டால் போதாது. தாராளமாக விநியோகம் செய்கிறோம் என்று—பணக்காரர்களிடத்திலேயே விநியோகித்துவிட்டால் போதாது. இன்றைக்கு ஒரு அருந்ததியார் வீட்டில் சென்று கார் கொடு என்றால் கிடையாது. கருமார் விட்டில் தொண்டான் கொடு என்றால் கிடையாது. இந்த நிலை போகவேண்டும். எவன் தொழில் செய்கிறானோ அவனுக்கு சொத்து இல்லாவிட்டாலும், ஜாமீன் பேரில் கொடுத்து உண்மையிலேயே சிறு தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகிற பணம் தொழில் அபிவிருத்திக்காகவே செலவிடப்படுவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதைச் செய்வதற்கு என்னவோ இந்தச் சர்க்கார் தவறி விட்டது என்று இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர்பெருமான் தம்முடைய உரையில் சென்ற ஆண்டைவிட அதிகமாக அதாவது கல்விக்காக 32 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். ஆறு வயதில் இருந்து 11 வயது வரைக்கும் கட்டாயக் கல்வி என்ற திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆதித்திராவிட மக்கள், பிற்பட்ட சமூகத்தினர் இவர்களுக்கு தொடர்ந்து கல்விச் சலுகை அதிகமாக அளித்து வரவேண்டும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் "ஆதித்திராவிட மக்களுக்கு நல்ல சலுகை அளித்து வருகிறோம். தீண்டாமை ஒழிப்புக் கொண்டு வந்தோம். இதனால் முன்னேறிவிட்டார்கள்" என்று சொன்னார்கள். உண்மையில் நான் வருந்துகிறேன். காரணம் இப்படிப்பட்ட ஒரு அபிப்பிராயம்—ஆதித்திராவிட மக்கள் எல்லாம் நல்ல முன்னேற்றம் அடைந்து விட்டார்கள் என்ற எண்ணம் தவறாகப் பரவி வருகிறது. இதனால் சிலருக்குப் பொறாமை கூட வளர்ந்துவிட்டது. இன்றையதினம் 3¾ கோடி மக்கள் இருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் 6-ல் ஒரு பங்கு நல்ல உழப்பாளிகள். ஆனால் உழைப்பின் பலனைக் கூடப் பெறமுடியாத வகையில் பலவகையிலும் வஞ்சிக்கப்படுகிறவர்கள். அந்தச் சமூகத்தினர் முன்னேற வேண்டும் என்று சர்க்கார் பல காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதற்காகப் பாராட்டவேண்டும். ஆனால் எத்தனை பேர்கள் முன்னேறியிருக்கிறார்கள்? ஸ்காலர்ஷிப் என்றால் ஒரு பையனுக்கு 1¼ ரூபாயில் இருந்து 3½ ரூபாய் வரை கொடுக்கிறார்கள். அவ்வளவுதான். அதுவும் நூற்றுக்கு 25 பேர்களுக்குக்கூட இந்த உதவி கிடைக்கவில்லை. எனக்குத் தெரியும். கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு பேர்களுக்கு நான் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறேன். நூற்று



21st January 1961] [Sri P. S. Santhanam]

இருபது பேர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்கிறது. அதை வாங்கிவிட்டால் ஹரிஜனப் பிள்ளைகள் முன்னேறி விடுவார்களா? முன்னேறிவிட்டார்களா? ஆகவே ஹரிஜனங்கள் முன்னேறி விட்டார்கள் என்று சொல்வது தவறு.

ஹரிஜனப் பிள்ளைகளுக்கும், பிற்பட்ட வகுப்பு பிள்ளைகளுக்கும் மத்தியான உணவு போடுகிறோம். இதற்காக மாணவன் ஒன்றுக்கு 6 நையா பைசா ஒதுக்குகிறோம். ஆறு நயா பைசாவை வைத்துக்கொண்டு பகல் உணவு போடுகிறோம் என்றால் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. ஒரு படி அரிசி ஒரு ரூபாய். ஆசிரியர்களைக் கேட்டால் "இந்த ஆறு நையா பைசாவுக்கு வீசம் படி அரிசி தானே கிடைக்கும். அப்புறம் உப்பு மிளகாய், புளி வாங்க வேண்டாமா? விறகு வேண்டுமே" என்கிறார்கள். கஞ்சி காச்சி விட்டால் · · என்று புராணம் கூறுகிறதே, அதுபோல ஒரு கொட்டாங்கச்சி கஞ்சியாவது வார்க்கலாம். அதுவும் 17 லட்சம் மக்களுக்கு வார்க்கிறோம் கஞ்சி என்றால் பாருங்கள். ஆகவே நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன், தலைக்கு 6 நையா பைசா என்று இருப்பதை 9 நையா பைசா என்றாவது உயர்த்திக் கொடுக்கவேண்டும். அதுபற்றிய அபிப்பிராயம் ஒன்றும் கவர்னர் உரையில் கூறப்படவில்லை.

தொழில் உற்பத்தியில் இரண்டு லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் பாராட்டுகிறேன். ஆனால், இலவுகாத்த கிளியாக நாங்கள் ஆகிவிட்டோம். திருவண்ணாமலையை நினைத்துக்கொள்ளவேண்டும். ரெங்கசாமி ரெட்டியார் என்று ஒருவர் இருந்தார். சர்க்கரை ஆலையை திருவண்ணாமலையில் வைக்கவேண்டும் என்று அன்றைக்கே அவர் லைசென்சு பெற்று வந்தார். அவர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் ஆதலால் அவருடன் ஒத்துழைக்கமாட்டோம் என ஆளும் கட்சியினர் முரண்பாடு பண்ணியதன் காரணமாக லைசென்சு ரத்து செய்யப்பட்டது. "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்ற பெரியவரின் சொல்லுக்கிணங்க, யாருக்கு லைசென்சு கொடுத்தாலும் நாடு சுபிட்சம் அடையவேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். இப்போதாவது உங்கள் சார்பில் கொண்டுவாருங்கள், நாங்கள் ஒத்துழைக்கிறோம் என்று அன்றைக்கே சொன்னோம். இன்றும் சொல்கிறோம். சர்க்காருடைய குறிப்பிலே நான்கு ஆலைகள் இந்த மாகாணத்திற்கு வரும் என்று இருக்கிறதே தவிர எந்த எந்த ஜில்லாவில் என்பது குறிப்பிடப்படவில்லை. நிச்சயமாக திருவண்ணாமலையில் கூட்டுறவு சொஸைடியின் மூலமாகவாவது ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கு முன் வந்தால் ஏறக்குறைய நான்கு லட்சம் மக்களுக்கு சுபிட்சத்தை ஏற்படுத்தும். சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஏக்கராவுக்கு சாகுபடி செய்ய நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நிச்சயமாக ஒரு சர்க்கரை ஆலையை அங்கே கொண்டுவரவேண்டும் என்று தொழிலாளி, பாமர மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஆண்டு பெய்த பேய்மழையின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள், ஏழைகள் குடிசைகளை இழந்துவிட்டார்கள். அதோடுகூட, இந்தப் பேய்மழையின் காரணமாக வடாற்காடு மாவட்டத்தில் ஒரு கொடிய வியாதி பரவி வருகிறது. அதுதான் வயிற்றுப்போக்கு, பேதி வியாதி. சாதாரணமாக 150 பவுண்டு இருந்த ஒருவன் பதினைந்து நாட்களுக்குள் 80 பவுண்டாகக் காட்சி அளிக்கிறான். இதுபற்றி சென்ற வாரத்திலே ப்ளானிங் கமிட்டிக் கூட்டத்திலே மருத்துவ அதிகாரியிடத்தில் சொன்னேன். போதுமான மருந்து வசதி கிடையாது என்று அவர் சொன்னார். உடனடியாக நடமாடும் ஆஸ்பத்திரிகளின் மூலமாகவாவது இந்தக் கொடிய வியாதியைத் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் ஒரே சமயத்தில் நாற்பது பேர்கள் காலமாகி விட்டார்கள். அந்த வியாதிக்கு தகுந்த நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், நல்ல மழை பெய்திருக்கிறது. விவசாயம் செழிப்படைந்து விட்டது, விலைவாசிகள் குறைந்துவிட்டன, சுபிட்சம் வந்து விடும் என்று. (மணியடிக்கப்பட்டது) சுபிட்சம் அடைவதற்குள்ளாக, இன்பம் அனுபவிப்பதற்குள்ளாக மரணத்தை எதிர்நோக்கும் நிலைதான் இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.) ஆகவே, இந்த வியாதியை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***SRI A. PERUMAL :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கவர்னர் பெருமான் அவர்கள் உரையின்மீது நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்துள்ளேன். நமது ராஜ்யத்தின் விவசாயத்தை பெருக்கவேண்டும், விவசாயத்தைப் பெருக்கி அதன்மூலம் நம்நாடு சுபிட்சம் அடைய வேண்டும். அதனால் மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டுமென்றும் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் கூறப்பட்டிருக்கிறது. அதன்மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய நன்மைகள் காலாகாலத்தில் கிடைக்கிறதா என்று பார்த்தால் அப்படி தக்க சமயத்தில் கிடைப்பது தவிர்க்கப்பட்டு விடுகிறது. ஏனெனில், சர்க்கார் சிப்பந்திகளின் குறைகளினால்தான் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவில்லை என்பது என் கருத்து. விதை விதைக்கும் காலத்தில் விதைக்காக சர்க்கார் அதிகாரிகளைப்போய் கேட்கும்போது அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விதை இன்னும் வரவில்லை, வருவதற்கு ஒரு மாதகாலம் ஆகும், ஆகவே ஒரு மாதம் கழிந்து வாருங்கள் விதை தருகிறோம் என்று சொல்கிறார்கள். மழை பெய்து எப்பொழுது விதைக்கவேண்டுமோ, அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து விதைத்தால் விவசாயத்தைப் பெருக்க முடியுமா என்று இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்தபடியாக, விவசாயிகள் கடன் வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் போய் கேட்டால், அதற்கு மனு செய்யும்படி சொல்லி மனுவை பரிசீலனை





செய்ய மூன்று நான்கு மாதங்கள் ஆகின்றன. அதற்குப் பிறகும் நான்கு மாதங்கள் கழித்துத்தான் கடன் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இப்படிப்பட்ட குறைகள் இருக்கக் கூடாது. சர்க்கார் நல்ல திட்டங்களை வகுத்து ஆங்காங்குள்ள சர்க்கார் சிப்பந்திகளிடம் கொடுத்து அவர்கள் அதை கெடுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களை சர்க்கார் உடனடியாக கண்டிக்க வேண்டும். ஆகவே, சர்க்கார் சிப்பந்திகள் விவசாய மக்களுக்கு வேண்டிய உதவிகளை அவர்களுக்கு நல்லமுறையில் காலாகாலத்தில் செய்ய வேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பிக்குமாறு சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எங்கள் முதுகுளத்தூர் தொகுதியில் கிருதமால் நதி என்று ஒரு நதி இருக்கிறது. அதுபற்றி இந்த சபையில் பலமுறை சொல்லியிருக்கிறோம். சமீபகாலத்தில்கூட முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்து ஒரு காங்கிரஸ் மகாநாடுகூட ஏற்படுத்தி அதன்மூலம் பொது மக்களுக்கு ஒரு இன்பமான வார்த்தையை சொல்லிவிட்டு வந்துவிட்டார்கள். கிருதமால் நதியை நன்கு செப்பனிட்டுக் கொடுத்தால் நல்ல முறையில் விவசாயத்தை பெருக்குவதற்கும், அங்குள்ள மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கும் வழியிருக்கும் என்று இந்த மன்றத்தில் நான்கு வருடங்களாக சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த கிருதமால் நதித் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு அமைச்சர் அவர்கள் அங்குள்ள மக்களுக்கு நல்லதொரு வழிவகை செய்யவேண்டும். அப்படி நல்லதொரு வகை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்கள் முன்னிலையில் கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ரோடு வசதி. அதிர்ஷ்டவசமாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக எங்கள் பகுதியில் கலவரம் நடந்ததை முன்னிட்டு சிற்சில இடங்களில் மண்ணை வெட்டி ரோடு போட்டு விட்டார்கள். அந்த ரோடு போடுவதற்கு முன்பு அங்கு ஜனங்கள் பிரயாணம் செய்ய வசதியாகயிருந்தது. இப்பொழுது, மண்ணை வெட்டி போட்டதால் மழையில் முட்டுக்கு இறங்குகிறது சகதி. பாதையாகயிருந்தால் மக்கள் பிரயாணம் செய்ய முடியும். ஆகவே, அங்கு சரளைகள் பரவி நல்ல வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN :** செக்யூரிட்டி மெஷர்ஸ்-க்கு போடும் ரோடுகளை நல்ல முறையில் வைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. பெரிய மழை பெய்ததால் சகதி வந்திருக்கலாம். நல்ல முறையில் மெட்டல் பரப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**SRI A. PERUMAL :** அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலை முன்னிட்டு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, மின்சார வசதி என் தொகுதியில் ஒரு சில கிராமங்களில்தான் மின்சார வசதியிருக்கிறது. மற்ற கிராமங்களில் மின்சார வசதி இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரம் இல்லாத கிராமங்களே இருக்காது என்று சொல்லப்பட்டிருக்

[Sri A. Perumal] [21st January 1961

கிறது. அதை வரவேற்கிறேன் முதுகுளத்தூர் தொகுதியில் நீர்ப்பாசன வசதி இல்லாததினால், மின்சார வசதியை முன்னிட்டு சில ஊற்றுக் கிணறுகளை தோண்டி அதனால் விவசாயத்தைப் பெருக்க உதவியாகயிருக்கும். எங்கள் தாலுகா மிகவும் பிற்போக்கான தாலுகா. முதுகுளத்தூர் தாலுகாவில் எந்த வித தொழிற்சாலையும் கிடையாது. தொழில் வளம் உள்ள இடங்களில் தான் அதிக செழிப்பான ஜில்லாக்களில் எல்லாத் தொழிற்சாலைகளும் இருக்கின்றன, மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொண்டும் வரப்படுகிறது. எங்கள் முதுகுளத்தூர் தொகுதியில் ஒரு தொழிற்சாலையும் கிடையாது.

ஆகையினால் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் என்னுடைய
12-00 noon. தொகுதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கவர்னர் பெருமான் அவர்களது உரையில் சுமார் 17 லட்சம் மாணவர்களுக்கு மதியஉணவு கொடுத்துக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் அது வரவேற்க வேண்டியதுதான். இந்தத் திட்டத்தின்மூலம் பல மாணவர்கள் கல்வி பயில வசதி ஏற்படுகிறது என்பது உண்மைதான், அதற்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் என்னுடைய தொகுதியில் இரண்டு மாதங்களாக சில கிராமங்களில் இந்த மதிய உணவு கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான அதிகாரிகளிடத்தில் இதற்கு காரணம் என்ன என்று கேட்டபோது, அவர்கள் இதற்கென்று (அலாட்மெண்டு) ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் செலவாகிப் போய்விட்டது, இப்போது ரூபாய் இல்லை, ரூபாய் வந்ததின் பின்னால் திரும்பவும் போடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் பக்கத்திலுள்ள வேறு பல கிராமங்களுக்கு தொடர்ச்சியாக போட்டுக்கொண்டிருக்கிறார்கள். பின்னால் இதைப்பற்றி ஜில்லாக் கலக்டர் அவர்களிடத்தில் போய் கேட்டதற்கு மானேஜ்மெண்ட் ஸ்கூல்களுக்கு மதியஉணவு போடுவதை நிறுத்திவிடும்படி உத்தரவு வந்திருக்கிறது என்றும், அதிலும் இந்து அரிஜன பிள்ளைகளுக்குத்தான் இந்த மதிய உணவு போடப்படும் என்றும், கிருஸ்தவ பிள்ளைகளுக்கு போட இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது. என்னுடைய தொகுதியைப்பொறுத்த வரையில் அதிகமாக அரிஜன கிருஸ்தவர்கள்தான் இருக்கிறார்கள். கிருஸ்தவ ஜாதி என்றால் உயர்வான ஜாதி என்று பலர் நினைக்கிறார்கள். ஏழை, பணக்காரர் என்ற இரண்டே ஜாதிதான் இருக்கிறதே தவிர கிருஸ்தவர்கள் உயர்வான ஜாதி என்றோ, மற்றவர்கள் தாழ்வான ஜாதிக்காரர்கள் என்றோ சொல்வது மிகவும் கடினமான வார்த்தையாகும்.

**THE HON. SRI P. KAKKAN :** நீங்கள் இப்படிச் சொல்வதுதான் கடினமான வார்த்தையாக இருக்கிறது.

*** SRI A. PERUMAL :** சர்க்காரிலிருந்து இந்த வித்தியாசம் காட்டவில்லையென்றால் இது கடினமானது என்று சொல்லமாட்டேன். ஆகவே எந்தவிதமான வித்தியாசமும் காண்பிக்காமல் ஏழையாய் இருக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் மதியஉணவு அளிக்க கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.



21st January 1961] [Sri A. Perumal]

* SRI G. VAGHEESAM PILLAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உரையில் முதலில் நம்முடைய பிரிட்டிஷ் ராணி, காமன்வெல்த் தலைவி இங்கு வருவதைப்பற்றி குறிப்பிட்டு அவர்களை வரவேற்றிருக்கிறார்கள். நாமும் உண்மையிலேயே அவர்களை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் சென்ற மாதங்களில் பெய்த மழையைக் குறிப்பிட்டு அதனால் ஏற்பட்ட நன்மை, தீமைகளைப்பற்றி பொதுவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் பல இடங்கள், அதே போன்று தென்னாற்காடு ஜில்லாவில் பல இடங்கள் மழையினால் சேதம் அடைந்தன. பயிர்களுக்கும் அதிகமான அளவில் சேதம் ஏற்பட்டது. இவைகளை எல்லாம் குறிப்பிட்டுத்தான் கவர்னர் அவர்கள் பொதுவாக அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய சென்னை ராஜ்யம் கழிந்த 15 வருடங்களாக காணாத வகையில் மழை பெய்தது. தண்ணீரே நிரம்பாத குளம், குட்டைகள் எல்லாம் தண்ணீர் நிரம்பியது. இதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள் கவர்னர் அவர்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் குடிசைவாழ் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கின்ற முறையில் சுமார் 2 லட்சம் ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் 30 ரூபாய் வீதம் உடனடியாக நிவாரணத்திற்காக கொடுக்கப்பட்டது. சில வீடுகளுக்குத்தான் 30 ரூபாய் கொடுக்கப்பட்டது. சிலருக்கு குறைவாகத்தான் கொடுக்கப்பட்டது என்றும் இதில் பாகுபாடு காண்பிக்கப்பட்டது என்றும் சிலர் குறிப்பிட்டார்கள். இவ்விதம் பாகுபாடு ஒன்றும் உண்மையில் காண்பிக்கவில்லை. பூரா வீடும் இடிந்துபோனால் அதற்கு 30 ரூபாய் என்றும், ஒரு சுவர் மட்டும் தான் இடிந்து போனால் 10 ரூபாய் என்றும், 15 ரூபாய் என்றும் கொடுக்கப்பட்டது. ஆகவே இதில் பாகுபாடு ஒன்றும் காண்பிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மழையினால் பாதிக்கப்பட்ட இரண்டு அரிஜன காலனிகளிலும் நாட்டார் மங்கலம், வீராநல்லூரில் ஏற்பட்ட சேதத்தைப் பார்த்து அதை திருத்தி அமைப்பதற்காக ஒன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு பக்கத்திலுள்ள ஏரிகள் எல்லாம (தூர் வாருவதற்காக) மராமத்து செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு விவசாயத்திற்கு வேண்டிய ஜலம் எல்லா ஏரிகளிலும் வந்து விட்டது. அதிலும் முக்கியமாக சிதம்பரம், தஞ்சாவூர் போன்ற இடங்களில் இரண்டாம் போகம் நிலங்கள் எல்லாம் சுமார் லட்சம் ஏக்கர்களுக்குமேல் கெட்டுப்போய்விட்டது. சிதம்பரம் தாலுகாவில் மட்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நஷ்டம் அடைந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் இருந்தும்கூட பொதுவாக மழையினால்

தன்மை ஏற்பட்டிருக்கிறது என்று கவர்னர் பெருமான் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் பாதிக்கப் பட்ட நிலங்களில் மீண்டும் பயிர் செய்வதற்காக விதைகள், உரங்கள் எல்லாம் விவசாய இலாகாவினால் கொடுக்கப்பட்டன. இதில் உரங்களை வரவழைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் கிடைக்கவில்லை. அதிலும் இப்போது எல்லா விவசாயிகளும் அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் முதலிய உரங்களை அதிகமான அளவில் உபயோகிக்க ஆரம்பித்து விட்டதால் அதை (இம்போர்ட்) இறக்குமதி செய்வதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. அந்நிய செலாவணி கஷ்டம் இருந்தாலும்கூட இம்மாதிரிப்பட்ட உரங்களை இறக்குமதி செய்வதில் அரசாங்கம் அக்கரையோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு உரங்களை இறக்குமதி செய்வதில் பிரையாரிட்டி கொடுத்து அதிகமான அளவு இறக்குமதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கவர்னர் அவர்களது உரையில் நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கிற இந்த நேரத்தில், திட்டங்களில் சேர்க்கப் பட்டிருக்கும் வேலைகளைப்பற்றியெல்லாம் விளக்கமாக குறிப்பிட் டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில ராஜ்யங்களில் ஒதுக்கின தொகையைக்கூட செலவு செய்யாமல் விட்டிருக்கிறார்கள், நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை அப்படியில்லாமல் நல்லமுறையில் அதிகமாகவே செலவு செய்திருக் கிறார்கள். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்காக 291 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டிருக் கிறது. விவசாயத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 14½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது 27 கோடி ரூபாய் இந்தத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் கூட போதாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. நடுத்தர விவசாயிகளுக்கு அதிகமான அளவில் பணம் கொடுக்க வேண்டும். ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் போன்றவைகளுக்கு அதிகமான அளவில் செலவு செய்யத்தான் வேண்டும். கூடுதலாக செலவு செய் தாலும்கூட அதை ஈடு செய்து கொள்ளலாம் என்று கவர்னர் அவர் கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே எல்லா மைனர் இர்ரிகேஷன் திட்டங்களையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு பரம்பிக்குளத் திட்டத்தைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக நாம் சர்க்காரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். இதன் மூலம் மின்சார உற்பத்தி அதிகமாக கிடைக்கும், அதோடு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றும் தெரிகிறது. அதோடு கிருஷ்ணா-கோதாவரி தண்ணீரை பங்கிடுவதில் மைசூர் ராஜ்யத்திற்கும் பம்பாய் ராஜ்யத்திற்கும் தகராறு இருந்து கொண்டிருக்கிறது. அந்த ராஜ்யங்களுக்கு கொடுத்தது போக பாக்கி ஜலத்தை நாம் உபயோகித்துக் கொள்ளலாம். இதற்காக ஒரு சப்-டிவிஷன் அமைத்து சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு போன்ற இடங்களில் எல்லாம்





எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதற்கு ப்ளூ பிரிண்ட் எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அண்டை ராஜ்யங்களோடு கலந்து ஆலோசித்து எப்படியாவது கொண்டு வரவேண்டும். இந்தத் திட்டம் வந்துவிட்டால் சென்னை நகரத் திற்கு சுலபமாக தண்ணீர் சப்ளை செய்ய முடியும். ஆகவே அண்டை ராஜ்யங்களில் ஆட்சேபணை இருந்தாலும் நம்முடைய ராஜ்யம் அடிக்கடி வற்புறுத்தி வந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் இரண்டு மூன்று ஜில்லாக்களுக்கு தண்ணீர் வசதி ஏற்பட்டு அதனால் விவசாயம் பெருக முடியும்; அதோடு சென்னை நகருக்கும் குடி தண்ணீர் வசதி ஏற்படும். அதையும் கைவிட்டு விடாமல் அவசியம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

சிறிய நீர்ப்பாசனத்திற்கு 4 கோடி ரூபாயிலிருந்து 8 கோடி ரூபாய் வரை ஒதுக்கியிருக்கின்றார்கள். இன்னும் நமது ராஜ்யத்தி லுள்ள டெல்டாப் பிரதேசத்திலும், மற்ற பிரதேசங்களிலும், எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள், நல்ல முறையில் வாய்க்கால் வெட்டு செய்ய வேண்டும். பாய்ச்சல் ஆதாரம், வடிகால் ஆதாரம் இரண்டும் விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது. 1,000 அல்லது 2,000 ஏக்கர் ஆயக்கட்டு ஏரியா இருந்தால் சர்க்கார் செலவில் வெட்டிக்கொடுக்கலாம் என்று உத்திரவு இருக்கின்றது. குடிமராமத்து ஆக்ட்படி எந்தெந்த ஊரில் வாய்க்கால் வெட்டவில்லையோ, அங்கெல்லாம் ஆக்டை "என்போர்ஸ்" செய்து எந்தெந்த கிராமத்தில் வெட்ட வேண்டு மென்று விரும்புகின்றார்களோ அவர்களுக்கு வெட்டிக் கொடுக்க வேண்டும். அதோடு கூட வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டும். தஞ்சை ஜில்லா போன்ற ஜில்லாவிற்கு சிறிய சிறிய நீர்ப்பாசனத்திற்காக, வாய்க்கால், வடிகால்கள் வெட்டுவதற்காக தனி ஸப்-டிவிஷன் ஏற்படுத்தினால் நல்லது. எங்களுடைய மாவட்டத்திலே ஒரு செக்ஷன் ஏற்படுத்தலாம். இதனால் விவசாயிகள் நல்ல ஒரு பலனை அடைந்திருக்கின்றார்கள். சென்ற 5 அல்லது 6 வருஷங்களில் அரசாங்கத்தின் உதவியால் கிலட் கிளியரன்ஸ் செய்யப்பட்டதில் 10,000 அல்லது 15,000 ஏக்கர் இருபோக சாகுபடியாக இருந்தது 45,000 ஏக்கராக உயர்ந்திருக் கின்றது. இதற்கு கொஞ்சம் பணம்தான் செலவாகும். விவசாயி களிடம் வசூல் செய்து கொள்ளலாம். அவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள். அதற்கு தனியாக ஒரு ஸப்-டிவிஷன் ஏற்படுத்தினால் நல்ல முறையில் கவனம் செலுத்த முடியும். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது பெருவாரியான நதிகளிலெல்லாம் அணைக்கட்டுகள் கட்டியது போக கீழே அடி நீர் ஊற்றுகள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் ஆர்ட்டீஷியன் ஊற்றுக்கள் சுமார் 100 ஊற்றுகள் தோண்டப்பட்டு, இன்னும் 100 ஊற்றுகளுக்கான வேலைகளைச் செய்து நிறைவேற்றி வருகின்றார்கள். [illegible] நல்ல பலன் இருக்கின்றது. இதை இன்னும் [illegible] வேண்டும். இந்த அடி நீர் ஊற்றுத் திட்ட[illegible]

[Sri G. Vagheesam Pillai] [21st January 1961

ஒரு டெபுடி டைரக்டர் இருக்கிறார்கள். ஜாயின்ட் டைரக்டர் போன்றவரை நியமித்து நல்ல வசதி செய்து கொடுக்கவேண்டும். இதற்காக அந்நிய நாட்டிலிருந்து ரோட்டரி டிரில்ஸ் போன்றவைகளை வரவழைக்கவேண்டும். டிரில்ஸ் பற்றாக்குறையினால் தீவிரமாகச் செய்ய முடியவில்லை. எங்கள் மாவட்டத்தில் ஸப் ஆர்ட்டிஷியன் ஸ்கீம் ஸப்ஸிடி முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதை இன்னும் பரவலாக விஸ்தரிக்க வேண்டும். இது கடன் கொடுப்பது, சப்ஸிடி கொடுப்பது ஆகிய இரண்டும் சேர்ந்தது. இதனால் குறைந்தது 10 ஏக்கர் இருப்பவர்கள்தான் பலன் அடைய முடியும். நான் அரசாங்கத்திற்கு ஒன்று எழுதி அனுப்பியிருக்கின்றேன். அதை மந்திரியும் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றார்கள். "நோ பிராபிட் நோ லாஸ்" ஸ்கீம் போட்டு அனுப்பியிருக்கின்றேன். ஏழை விவசாயிகள், 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்துக் கொண்டுள்ள விவசாயிகள் தனியாக பணம் கொடுத்து ஆர்ட்டிஷியன் கிணறு போடுவது, மற்றும் மின்சார வசதி பெற முடியாதபோது இதையெல்லாம் செய்து கொடுக்க ஏக்கருக்கு இவ்வளவு என்று சர்க்கார் வசூலித்துக்கொள்ளலாம். இதிலே பல விவசாயிகள் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கின்றார்கள். உதாரணமாக, பள்ளிபுரம் என்றவிடத்தில் இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கின்றது. இதேமாதிரி மாவட்டத்தில் எல்லாவிடங்களிலும் செய்யலாம். மற்ற மாவட்டங்களிலும் எங்கெல்லாம் கீழே நீர் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

மின்சார விஸ்தரிப்பில் பிற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யம் முன்னேறி வந்திருக்கின்றது. 1,441 மெகவாட்டுகளாய் மூன்றாவது திட்டத்தில் உயரும் என்று சொல்லியிருக்கின்றார்கள். தொழில்கள் அதிகமாகப் போகும்போது மின்சார உற்பத்தி அதிகமாகியும் தேவை அதிகமாகும் காரணத்தினால் இன்னும் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. இன்னும் அதிகப் படுத்துவதற்கு எடுக்கவேண்டிய முயற்சியைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

மின்சாரம் கொடுப்பதில், முன்பு சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் மினிமம் காரண்டி 45 ரூபாயாக இருந்ததை சில இடங்களிலே 35 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள் என்று. இது ஒரு நல்ல அம்சம். எல்லா இடங்களிலுமே 35 ரூபாயாக மாற்றினால் நலமாக இருக்கும்.

விதைப் பண்ணைகளுக்கு 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கிடைக்க வேண்டியது மிகவும் முக்கியம். விதைப்பண்ணைகளில் நல்ல விதைகளாக உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் விவசாய உற்பத்தி பெருகும். இப்போது 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதையும் நல்ல முறையில் செலவு செய்து விவசாயிகள் பயனடையச் செய்யவேண்டும்.

இன்னும் நெய்வேலித் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். பிளான்படி எல்லா வேலைகளும் நடந்து வருகின்றன.



21st January 1961] [Sri G. Vagheesam Pillai]

நெய்வேலியில் நான்கு திட்டங்கள் நிறைவேறி வருகின்றன. மின்சார உற்பத்தி, உரத் தொழிற்சாலை, பிரிக்கெட் செய்வது, களிமண் சுத்திகரிப்பு, லிக்னைட் எடுப்பது என்ற தொழில்களெல்லாம் அடங்கியது இந்த நெய்வேலித் திட்டம். இந்தியாவிலேயே இரண்டொரு இடங்களில்தான் பல திட்டங்களை இணைத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் அந்தந்த வேலைதான் நடைபெற்று வருகின்றது. ஒரு இடத்தில் நிலக்கரி எடுப்பது மாத்திரம் இருக்கும். ஒரு இடத்தில் இரும்பு உருக்குவது மாத்திரம் இருக்கும். அப்படிக்கில்லாமல் இங்கே பல தொழில்களை ஆரம்பித்திருக்கின்றார்கள். எல்லாம் நல்ல முறையில் உரிய காலத்தில் திட்டமிட்டபடி நடந்து வருகின்றன. சேலம் உருக்குக்கு நம் சர்க்கார் இப்போது 75 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதற்காக தனியாக ஒரு ஆபீசரை நியமித்திருக்கின்றார்கள். அதற்காகத்தான் சீக்கிரத்தில் லிக்னைட் வேண்டுமென்று இப்போது எடுக்க முயற்சித்து வருகின்றார்கள். இந்தத் திட்டத்தையும் நல்ல முறையில் உருவாக்கினால் நம் ராஜ்யத்திற்கு நல்லது. அதையும் கவனிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 100-க்கு 80 பேர்கள் விவசாயத்தை நம்பி இருந்ததை மாற்றி இரண்டாவது திட்டத்திற்குள்ளாக அதை 70 ஆகக் குறைத்திருக்கின்றார்கள். இன்னும் 50 பேர்கள் விவசாயத்தையும், 50 பேர்கள் மற்ற தொழிலையும் நம்பி இருப்பவர்களாக இருந்தால்தான் எக்கனாமிக் கண்டிஷனில் முன்னேறலாம், தொழில் துறையில் முன்னேறலாம். இதற்கு மூன்றாவது திட்டத்தில் பல வழிகள் செய்திருக்கின்றார்கள். நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்குப் பல கன ரகத் தொழில்கள் இருக்கவேண்டுமென்று உணர்ந்து அரசாங்கத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கியிருக்கும்போது 100-க்கு 70 பேர்கள் விவசாயத்தை நம்பி இருப்பது மாறி இன்னும் 20 பேர்கள் மற்ற தொழில்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலை ஏற்பட்டால்தான் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். விவசாயிகளும் நல்ல பலனை அடைவார்கள். மற்றவர்களும் நல்ல பலனை அடைவார்கள்.

தூத்துக்குடி திட்டம், திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றது. அதையும் நான் வரவேற்கின்றேன். மற்ற மாவட்டங்களில் சிறு சிறு துறைமுகங்கள், உதாரணமாக எங்கள் மாவட்டத்தில் கடலூர், போர்டோ நோவோ போன்றவைகள் இருக்கின்றன. அதிகச் செலவில்லாமல் கொஞ்சம் கொஞ்சம் செலவு செய்து அவைகளையும் நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

தொழில் கல்வி சம்பந்தமாக நம் ராஜ்யத்திலே எல்லாத் தொழில்களிலும் பல ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டு நடந்துகொண்டு வருகின்றன. எங்கள் மாவட்டத்தில் தொழில் கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் விவசாயக் கல்லூரி அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்திருக்கின்றார்கள். அதை இன்னும் விரிவுபடு[illegible]

[Sri G. Vagheesam Pillai] [21st January 1961

இப்போது 42 பிள்ளைகளுக்குத்தான் இடம் இருக்கின்றது. அதை இரட்டிக்கலாம். அங்கு ஒரு வெட்டனரி காலேஜ் ஏற்படுத்தலாம். அதற்கு அதிகச் செலவு ஆகாது. பல்கலைக்கழகத்தினரே ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

நாட்டிலே கட்டாயக் கல்வி முறையை அமுல் செய்வது நல்லது. கான்ஸ்டிட்யூஷனிலேயே சில வருஷங்களில் கட்டாயக் கல்வி ஏற்படுத்தவேண்டுமென்று போடப்பட்டிருக்கின்றது. அதையொட்டி நம் அரசாங்கத்திலே இப்போது 6 வயதுக்கு மேல் 11 வயதுக்குள்ளான பிள்ளைகள் யாவரும் படிப்பதற்கு வாய்ப்பை அளித்திருக்கின்றார்கள். அதை நான் பாராட்டுகின்றேன். கிராமங்களில் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு கட்டிட வசதி செய்து கொடுக்க வேண்டும். ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த திட்டங்களை எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்று சொன்னார்கள். மறுபடியும் எடுத்துக்கொள்வதாகச் சொல்லி மார்ச்சுக்குள் முடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

நிரந்தரமான ஒரு கொள்கையை அனுசரிக்க வேண்டும். அப்போது ஸ்தல அபிவிருத்தித் திட்டம் நீடிக்கப்பட வேண்டும். பிளாக்கு எல்லா இடங்களிலும் இருந்தாலும்கூட, ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் மூலம் செய்தால்தான் சுலபமாகவும் சீக்கிரமாகவும் செய்ய முடியும். அதை இப்போதே அரசாங்கம் யோசனை செய்து இன்னும் சில காலத்திற்கு, எல்லா வேலைகளும் காலதாமதமில்லாமல் நடைபெறுவதற்கு, குறைந்தது இரண்டு வருஷங்களுக்காவது ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தை நிரந்தரமாகச் செய்து, சில முக்கிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் உடனடித் தேவைகளான பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்றவைகளை சீக்கிரம் கட்டி முடிக்க முடியும். இல்லாவிட்டால் பல ஊர்களில் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கும். இவைகளையெல்லாம் உடனடியாக பூர்த்தி செய்வது முக்கியம். பிளாக்குகளிலே இப்போது பி.டபிள்யூ.டி., ஆர்.டி., என்று ரோடு இல்லாத கிராமங்களுக்கெல்லாம் உடனடியாக ரோடு வசதி செய்து கொடுக்க ரோடு டெவலப்மெண்ட் ஸ்கீம் இந்த இரண்டின் மூலமாக செய்ய திட்டமுள்ளது. இந்த இரண்டு திட்டங்களை பிளாக்கு எடுத்துக் கொள்ளாமல், ஹைவேஸ் டிபார்ட்மெண்டே எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது எனது விருப்பமாகும். பிளாக்குகள்தான் இதைச் செய்ய வேண்டுமென்று இருந்த போதிலும்கூட, இந்த வேலைகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொண்டால், உடனடியாக ரோடு இல்லாத எல்லா கிராமங்களுக்கும் விரைவில் ரோடு வசதி ஏற்படும். அப்படிச் செயல்படத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, ஹரிஜன இலாகாவிலிருந்து பல பலன்தரக் கூடிய, நல்ல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஊரிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாத்திரம் 200, 300



21st January 1961] [Sri G. Vagheesam Pillai]

அரிஜன பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அரசாங்கம், அரிஜன இலாகா மூலம் பல நன்மைகளைச் செய்து கொண்டு வருகிறது.

அதேபோல் மனைக்கட்டு வேலை துரிதமாக நடந்து கொண்டு வந்த போதிலுங்கூட, சிதம்பரம் தாலுகாவைப் பொறுத்தவரையில் நஞ்சை பூமியாக இருப்பதால் இக்காரியத்தை துரிதமாகச் செய்ய முடியவில்லை. நிலங்கள் கிடைப்பதில்லை. அப்படி நிலங்கள் கிடைத்தால், பட்டா வந்து சேருவதில்லை. இப்படி பல் பிரச்னைகள் இருப்பதினாலே, விரைவாக செயலாற்ற முடியவில்லை. அதிலும் ஏற்கனவே இரண்டு தாசில்தார்கள் சிதம்பரம் தாலுக்காவைப் பொறுத்த வரையில் வேலை செய்து கொண்டு வந்தார்கள். இப்போது ஒரு தாசில்தார் மட்டும்தான் அந்த வேலைகளை கவனித்துக்கொண்டு வருகிறார். அதனால் சற்று வேலை தாமதப் படுகிறது. ஆகவே எங்கள் தாலுக்காவுக்கு மட்டும், முன்பு இருந்தது போலவே இன்னொரு தாசில்தாரை போட்டு வேலை செய்தால், 300 கிராமங்களுக்கு மேல் சீக்கிரம் பயனடையும். இல்லாவிட்டால் 30, 40 கிராமங்களில் மட்டுமே இவ்வேலையை அமுலுக்கு கொண்டு வரமுடியும். ஆகவே உடனடியாக ஒரு தாசில்தாரை நியமித்தால், இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri P. R. SRINIVASA PADAYACHI :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமானின் உரையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச இருக்கின்றேன். எங்களுடைய தென் ஆற்காடு ஜில்லாவிலே கோமுகி, மணிமுத்தாறு என்ற இரண்டு திட்டத்தை இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே பூர்த்தி செய்ய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடலூர் துறைமுகம் 1,200 டன் கரி இறக்குமதி செய்யும் துறைமுகமாக இன்றுள்ளது. இப்போது அதனருகில் நெய்வேலியும் சேர்ந்திருப்பதால், அந்த துறைமுகத்தை இன்னும் அதிகமாக விருத்தி செய்ய வேண்டியது அவசியம். ஆகவே அதை விருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் ஜில்லாவிலுள்ள பின்தங்கிய வகுப்பினர்களுக்காக கொடுக்கப் பட்ட தொகை ஒரு லட்ச ரூபாய். இந்த ஒரு லட்ச ரூபாய் போதாது என்று, இன்னும் ஒரு லட்ச ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பின்தங்கிய வகுப்பு லீக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது ரோடுகள் எல்லாம் பெரும்பாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால், சவுக்கு விலை ஏறியிருப்பதாகச் சொல்லப் பட்டது. மதராசிலே ஒரு டன் விறகு 100 ரூபாய் விற்றது என்று சில மெம்பர்கள் புகார்கள் சொன்னார்கள். இதற்கு முக்கிய காரணம், ரயில்கள் தாமதமாக வந்ததும், ரோடுகள் பழுதடைந்திருந்ததால் லாரிகள் தாமதமாக வந்ததுமே ஆகும். அதனுடன்

[Sri P. R. Srinivasa Padayachi] [21st January 1961

விறகு விலை ஏற்றம் அடைந்து விட்டது. இந்த விறகைப் பயிரிட 7, 8 வருஷங்கள் ஆகிறது. இந்தப் பயிரை மழை இல்லாத காலங்களில் தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு இவைகளை வளர்ப்பதால், அவர்களுக்கு நஷ்டம் வராமல் தடுக்க கண்ட்ரோல் அல்லது வேறு எவ்விதமான உபத்திரவமும் செய்யாமல் இருக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது மதராசில் விறகு டன் 60 ரூபாய்க்கு விற்கிறது. ஆதலால் ரோடு வசதி செய்து கொடுத்து, பாதகமாக உள்ள ரோடுகளை செப்பனிட்டு, விவசாயிகளுக்கு எவ்வித பாதகமும் இல்லாமல் நல்ல முறையில் வியாபாரம் செய்ய உதவும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்களுடைய தென் ஆற்காடு ஜில்லாவிலே மின்சார மந்திரி கனம் ராமையா அவர்கள் இரண்டு நாள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். பலர் தங்கள் தங்கள் பகுதிக்கு வரவில்லை என்று புகார் சொன்னார்கள். ஆனால் அவர் சுற்றுப்பிரயாணம் செய்த அந்த இரண்டு நாட்களிலே பல கிராமங்களைச் சுற்றிப் பார்த்தார்கள் அப்போது அவரிடத்திலே சில குறைபாடுகள் சொல்லப்பட்டது. சிலர் விதைகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். உடனடியாக விதைகள் கொடுக்க வேண்டுமென்று கலெக்டர், இன்னும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறி, ஆங்காங்குள்ள விதைப் பண்ணைகளுக்கு உத்தரவிட்டு, ஆங்காங்குள்ள விவசாயிகளுக்கு பாதி விலையில் விதைகள் கிடைக்க ஏற்பாடு செய்தார். அதோடு பூச்சி மருந்தையும் விவசாயிகளுக்கு பாதி விலையில் கிடைக்கச் செய்தார். ஆனால், இப்போது கதிர் வரக்கூடிய நிலைமையில் உள்ள பயிர்களுக்கு சில பூச்சிகளின் தொந்தரவு ஏற்பட்டுள்ளது. அப்படியிருந்தும் அந்தந்த தாலுக்காக்களிலுள்ள ஆபீசர்கள் அவைகளை கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் ஒருவிதமான பாதகமும் இல்லை.

கடலூரிலே உள்ள முனிசிபாலிடி வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டது. இந்த முனிசிபாலிடியானது கடிலம் என்ற நதிக்கும், வெண்ணை ஆற்றுக்கும் மத்தியில் இருப்பதினால் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறுகளுக்கு அணையும், டவுனுக்கு ஒரு பெரிய பாதையும் போடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்காக இப்போது வரக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு அணைபோட்டு வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்து, கூடிய சீக்கிரத்திலே இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை மாகாணத்திலே மின்சார வசதியானது அதிகமாகப் பரவிக் கொண்டு வருகின்றது ஆனால் தென் ஆற்காடு ஜில்லாவிலே இவ்வசதியானது மிகவும் சொற்பமாக இருக்கிறது. இது கம்பெனியாரிடம் இருந்தபோது அதிகமாக விருத்தி செய்ய முடியாத நிலைமையில் இருந்தது. ஆனால் இப்போது இதை அரசாங்கமே எடுத்து நடத்திக் கொண்டு வருவதால், எல்லா வேலைகளும் துரிதமாக நடந்து கொண்டு வருகிறது. ஆனால், இன்னும் பல கிராமங்களுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் சரியான



21st January 1961] [Sri P. R. Srinivasa Padayachi]

படி மின்சாரம் சம்பந்தப்பட்ட வசதிகள் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதே போல் சில நகரங்களுக்குக்கூட மின்சாரம் போடவில்லை என்று சொல்லப்படுகிறது. அவைகளையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டு மென்று மின்சார 12-30 p.m.
இலாகாவை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் ஜில்லாவிலே 3 பெரிய பாலங்களை அமைத்திருக்கிறார்கள். பி.டபிள்யூ. டிபார்ட்மெண்டார் பெரிய சாதனை செய்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் போற்றவேண்டும். பெண்ணையாற்றிலே, திருக்கோவிலூர், அரகூர் ஆகிய இடங்களிலே இரண்டு பாலங்களையும் கொள்ளிடத்தில் ஒரு பெரிய பாலத்தையும் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். தஞ்சையையும் தென் ஆற்காட்டையும் இணைக்கும் வகையில் ஒரு பாலத்தை அமைத்திருக்கிறார்கள். ஹைவேஸ் டிபார்ட்மெண்டாரும் பெரிய சாதனை செய்திருக்கிறார்கள். அவர்களையும் நாங்கள் பாராட்டவேண்டும். பெரிய பெரிய, 7 டன், 8 டன் எடையுள்ள லாரிகள் எல்லாம் ஆங்காங்குள்ள சிறிய பாலங்களில் செல்வதினால் அவைகள் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. அந்தப் பாலங்களையும் சரிப்படுத்த வேண்டும். பெரிய லாரிகள் ரோடுகள் மூலமாக சாமான்களை எடுத்துச் சென்றால் விரைவிலே அந்தந்த முனிசிபாலிடிகளுக்கோ, பெரிய நகரங்களுக்கோ சாமான்கள் செல்ல முடிகிறது. ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் செய்த சாதனைகளினால்தான், அப்பேர்ப்பட்ட வசதிகளையெல்லாம் இந்த 10 ஆண்டிற்குள் செய்து முடித்தார்கள். இன்னும் அதிகமாக இந்த வசதிகளை விருத்தி செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவிலே ஊற்றுக் கிணறுகள் அதிகமாக உள்ளன. நானூறு, ஐனூறு அடிகள் போகவேண்டியிருக்கிறது. இரண்டு வருஷத்தில் 200 ஊற்றுக் கிணறுகளை அமைத்திருக்கிறார்கள். இம்மாதிரி ஊற்றுக் கிணறுகளை அதிகப்படுத்துவதற்கு அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்தி, இன்னும் ஊற்றுக் கிணறுகளை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடலூர் தாலூகாவிலே சுமார் 80, 85 அடி ஆழத்திலே சப்-ஆர்டிஷன் வருகிறது. சாதாரணமாக ஒரு தினத்திற்கு ஒரு காணி அல்லது 1½ காணி தானாகவே பாயக்கூடிய ஒரு சக்தி வாய்ந்த ஊற்றுக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இம்மாதிரி 85 அடி ஆழத்திலே ஊற்றுக் கிணறுகளை அதிகமாக விருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தென் ஆற்காடு ஜில்லாவில் ஏழைகளுக்கு அது பெரிதும் பிரயோசனப்படும். ஆகவே, ஊற்றுக் கிணறுகளை விருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடலூர் முனிசிபாலிடியில் ஒரு பெண்கள் [illegible] டிரையினிங் ஸ்கூலும் இருக்கிறது. அதை பெண்கள் காலேஜாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri P. R. Srinivasa Padayachi] [21st January 1961

இவ்வளவு நேரம் எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த தற்காக நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்

* **Sri A. SENAPATHI GOUNDER**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கக் கூடிய முறையிலே ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். நமது நாடு விவசாயிகள் நிறைந்த நாடு. விவசாயிகளுக்கு வேண்டியது மழையும், நீர்ப்பாசனத் திட்டங்களும. நிறைய மழை பெய்த இந்த வருஷத்திலேகூட என்னுடைய பகுதியிலே ஒரு சில இடங்களிலே குடி நீருக்குககூட கஷ்டமான நிலை இருக்கிறது என்பதை நான் இங்குள்ள நண்பர்கள் மத்தியிலே ஆச்சரியத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிறைய மழை பெய்து, வெள்ளப் பெருக்கினால் சேதம் அடைந்ததாக பல நண்பர்கள் சொல்லியிருக்கும் வேளையில், ஒரு சில பகுதிகளுக்கு குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் இருக்கிறது, அந்தப் பகுதிகளை துரதிருஷ்டமான வரண்ட பிரதேசம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. நமது சர்க்கார் பரம்பிக்குளத் திட்டத்தின் மூலம் இந்த வரண்ட பிரதேசத்திற்கு உதவி செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் நிறைந்த கிராமங்களிலே இன்று சொல்லிக்கொடுக்கக்கூடிய கல்வியானது 10-வது வரைக்கும் படித்துவிட்டு ஒரு சிறிய பண்ணையத்தைக் கூட பார்ப்பதற்கு லாயக்கு இல்லாத ஒரு நிலையிலே போதிக்கப்படுகிறது. குமாஸ்தா வேலையை தேடி நகரத்தை நாடிச் சென்று அங்கும் வேலை கிடைக்காமல், கிராமத்திலுள்ள சொந்த நிலத்தையும் பார்த்துக்கொள்ளக் கூடிய நிலையில இல்லை. அம்மாதிரி நிலையில்தான இப்பொழுது போதிக்கப்படுகிற கல்வி அமைந்திருக்கிறது என்பதை நான் சொல்ல வருத்தப்படுகிறேன். ஆதாரக் கல்வி, அடிப்படைக் கல்வி என்றெல்லாம் சொன்ன போதிலும், ஆதாரப் பயிற்சி பள்ளியில் பழைய முறையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. விவசாயத்திலே ஒரு அக்கறை, தொழிலிலே ஒரு அக்கறை காட்டக் கூடிய அளவிலே கிராமங்களில் இன்னும் கல்வி முறை பரவலாக ஏற்படவில்லை என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.

சிறு பையன்கள் பள்ளிகளுக்கு செல்லும்பொழுது தன்னுடைய குடும்பத்தின் நிலையை உணர்ந்து, தான் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன், அதிலிருந்து முன்னேற்றம் காண வேண்டும் என்ற அக்கரை வரவேண்டும். பத்தாவது வரை படித்து விட்டு மேலே காலேஜ் சென்றால் வேலை கிடைக்கும், சிரமமில்லாமல் சௌகரியமாக இருக்கலாம் என்று அவர்கள நினைக்கிறார்கள். இந்த நிலையிலே 40 வயதிற்கு உட்பட்ட வயதுள்ளவர்கள் கிராமத்திலே விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பதை நாம் காணமுடியவில்லை. ஆகவே, இந்தப் பெரியவர்களெல்லாம சென்ற பிறகு, கிராமம் எப்படி இருக்கும் என்பதுபற்றி நாம் யோசித்து, கல்வி முறையிலேயே அதைப் புகுத்தி, கல்வி கற்கும்பொழுதே



21st January 1961] [Sri A. Senapathi Gounder]

மாணவர்கள் விவசாயத் தொழிலில் அக்கறை காட்டும்படி செய்ய வேண்டும். அம்மாதிரி அவசியத்தை வற்புறுத்தும் வகையில கல்வி போதிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருக்கும் ஆதாரப் பயிற்சி பள்ளிகளில்கூட, ஆதாரப் பயிற்சி பள்ளி என்று பெயர் மட்டும்தான் இருக்கிறது. ஆதாரப் பயிற்சி பள்ளி என்ற அளவிலே விவசாயத் துறையிலோ அல்லது தொழில் துறையிலோ அங்குள்ள வாத்தியார்களுக்குக்கூட அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. வாத்தியார்களுக்கே அதுபற்றி தெரியாது என்றால், அவர்களிடத்தில் கல்வி கற்கக்கூடிய குழந்தைகளுக்கு எவ்வாறு விவசாயத் தொழிலிலோ அல்லது வேறு தொழிலிலோ அக்கறை உண்டாகும் என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஆதாரப் பயிற்சி பள்ளிகளின் மூலம் மாணவர்களுக்கு சிறந்த முறையில் விவசாயப் பெருக்கத்திலும், மற்ற சிறு தொழில்களிலும் அக்கறை ஏற்படும்படி செய்யவேண்டும். ஆதாரப் பயிற்சி பள்ளிகளில் படிக்கக் கூடிய பிள்ளைகள் தொழிலில் அக்கறை கொண்டு, தொழிலில் ஊதியம் பெறுவதற்கு வழிவகை காணக்கூடிய முறையில் ஆதாரப் பயிற்சி பள்ளிகள் கிராமாந்திரங்களில் பரவலாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய பல்லடம் தாலுகா, தாராபுரம் தாலுகா பஞ்சப் பகுதி என்ற முறையிலே ஏற்பாடு செய்யப்பட்டு பல சிறிய நீர்ப்பாசன திட்டங்களெல்லாம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. பல்லடம் தாலுகாவில் பல சிறிய திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்த போதிலும், தாராபுரம் தாலுகாவிற்கு ஒரு லட்ச ரூபாய்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. பஞ்ச நிவாரண வேலை என்று சொன்னால், விவசாயப் பெருக்கத் திட்டமும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களும் அதிலேயே சேர்ந்துவிடுகிறது. ஆகவே, பஞ்ச நிவாரணத்திற்காக இன்னும் நிறைய பணம் ஒதுக்கினால், பல வேலைகளை எடுத்துச் செய்யலாம், சிறிய நீர்ப்பாசன திட்ட வேலைகளை பஞ்ச நிவாரண வேலைகளிலேயே சேர்த்து செய்து முடித்து விடலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மேலும் என்னுடைய பகுதியிலே விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு சில மாதங்கள்தான் வேலை செய்ய முடிகிறது. மற்ற மாதங்களில் வேலையில்லாமல் சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வறண்ட பிரதேசத்தில் பல தொழில்கள் வரவேண்டும். அதிலே துரதிருஷ்டவசமான நிலை என்னவென்றால், கோவை ஜில்லா தொழில் வளம் மிகுந்த ஜில்லா. அந்த ஜில்லாவில் தாராபுரம் தாலுகா ஒரு வறண்ட பிரதேசம். நிரந்தரமாக விவசாயம் செய்ய முடியாது. நிரந்தரமாக ஒரு தொழிலும் கிடையாது. மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். மழை இல்லாமல் போனால், விவசாயமும் செய்ய முடியாமல், வேறு தொழிலிலும் ஈடுபடமுடியாமல் இருக்கிறார்கள். தொழிலில் முதலீடு செய்வதற்கு முன்வரக்கூடியவர்கள் கோவை, ஈரோடு சுற்றுப்புறங்களில்தான் முதலீடு செய்கிறார்கள். தாராபுரம்

பக்கத்தில் ஒரு மில்கூட ஏற்படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலாவது பிற்போக்கான பகுதி என்ற முறையிலே இந்தப் பகுதியில் ஒரு மில் ஏற்படுத்தவேண்டும். கோவை ஜில்லாவை நினைத்தால் இங்கு தொழில் ஏற்பாடாகப் போய் விடலாம். மதுரை ஜில்லா பார்டர், புறக்கணிக்கப்பட்ட பஞ்சப் பிரதேசம், வறண்ட பிரதேசம் என்ற முறையிலாவது இங்கு ஒரு மில்லை ஏற்படுத்தவேண்டும். (குறுக்கீடு). கோவை ஜில்லா தொழில் வளம் மிகுந்த ஜில்லா என்று கருதி அங்கே ஸ்பின்னிங் மில்ஸுக்கு லைசென்ஸ் கொடுக்கக்கூடிய நிலையில் கஷ்டம் ஏற்பட்டால், மதுரை ஜில்லாவைச் சேர்ந்தது சொல்லி, மதுரை ஜில்லா பார்டர் என்று சொல்லி இந்தப் பகுதியில் ஒரு மில்லுக்கு லைசென்ஸ் வாங்கினாலும் சரி. பெயர் என்னவாக இருந்தாலும் பரவாயில்லை. இன்று காலையில் சர்வகலாசாலையைப் பற்றி கேள்வி கேட்டார்கள். மதுரையில் ஒரு யுனிவர்சிட்டி ஏற்படுத்தினாலும், கோவையில் ஒரு வெட்டரினரி கல்லூரி ஏற்படுத்தினால் போதுமென்றுதான் நான் சொல்லுகிறேன். தமிழகத்தின் தாயகமாக இருக்கக்கூடிய நகரின் பெயர் மட்டும் இருந்தால் அதனால் ஒன்றுமில்லை. நாங்கள் அண்ணாமலை சர்வகலாசாலையில் படிக்கிறோம்; சென்னை சர்வகலா சாலையில் படிக்கிறோம்; மதுரை யுனிவர்சிட்டியிலும் படிப்போம். எங்கள் ஜில்லாவில் கால்நடைகள் ஏராளமாக இருக்கின்றன. எங்கள் ஜில்லாவிலிருந்து கால்நடைகளை மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு அனுப்பிவருகிறோம். கால்நடையின் அவசி யத்தை முன்னிட்டு, மிருக வைத்தியக் கல்லூரியை கோவையில் வைத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில் நல்லதொரு சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. வீட்டை மட்டும் புதிய வீடாகக் கட்டிவிடுகிறார்கள். ஆனால், பெருச்சாளி, எலி வெளி யேறினதாகத் தெரியவில்லை. (சிரிப்பு). பஞ்சாயத்துக்களில் நிர் வாக ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. அதனால் பஞ்சாயத்துக்கள் சரிவர நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அந்த ஊழல்களை ஒழித்தால்தான் பஞ்சாயத்துத் திட்டம் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய ஒரு திட்டமாக இருக்கும். பஞ்சாயத்து களைப்பற்றி பேப்பரில் அடிக்கடி புகார்கள் வருகின்றன. பஞ்சா யத்தில் ஒரு முடிவுக்கு வந்து நடவடிக்கை எடுப்பதற்குக் காலம் வருவதற்கு முன்னமேயே, அந்தப் பஞ்சாயத்துத் தலைவரின் காலம் முடிந்துவிடுகிறது. அடுத்த தலைவரும் வந்துவிடுகிறார். ஆகவே நிர்வாகத்தை சீர்ப்படுத்தி, பஞ்சாயத்துக்கள் சரிவர நடைபெறுமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பிரதேசத்திலிருந்து ஒரு மனு அனுப்பித்தால் அதற்குப் பதில் வருவதற்கு ரொம்ப நாட்களாகிறது. ஒரு பள்ளிக்கூடம் அமைக்க இரண்டரை வருஷ காலமாக முயற்சி பண்ணுகிறோம். கலெக்டர் அனுமதி கொடுத்து விட்டார். ஆனால் ரெவின்யூ போர்டுக்குச் சென்று ஒருவர் "ஸ்டே" வாங்கி வந்து விட்டார். அங்கே இரண்டு ரூபாய் கொடுத்தால் "ஸ்டே" வாங்க





முடியுமென்று சொல்லப்படுகிறது. அந்த ஸ்டேயை நீக்கு வதற்கு மந்திரிகளால்கூட முடியவில்லை. (சிரிப்பு). பள்ளிக் கூடத்திற்காக 6½ ஏக்கர் நிலம் கொடுத்தார்கள். புறம்போக்கு நிலம் என்று சொல்லி ஒருவர் போய் ஸ்டே வாங்கிவிட்டார். இரண்டரை வருஷமாகியும் பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட வில்லை. பிளாக்கிலிருந்து பணம் ஒதுக்கியிருந்தார்கள். பள்ளிக் கூடம் கட்டி முடியாததால், பணத்தை வேறு ஊருக்குக் கொடுத்து விடவேண்டுமென்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் கொடுத்த விண்ணப்பத்திற்கும் பதில் இல்லை. மந்திரிகளைப் பார்ப்பதைவிட ஒரு சின்ன குமாஸ்தாவைப் போய் பார்த்து விட்டால் காரியம் நடந்துவிடுகிறது (சிரிப்பு). இந்த மாதிரியான நிலைமையைத் தவிர்ப்பதற்கு அமைச்சர்கள் தகுந்த பரிகாரம் தேடவேண்டும். சட்டசபை அங்கத்தினர்களுக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது. ஆனால் ஒரு அதிகாரமும் இல்லை. வோட்டு வாங்கவேண்டுமென்றால் சுமார் ஒரு லட்சம் பேரைக் கெஞ்சி வோட்டு வாங்கவேண்டும். தேர்தலில் ஜெயித்துவிட்டால், பிற்பாடு ஐந்து வருஷங்களுக்கு மந்திரிகளையும், குமாஸ்தாக்களையும், கெஞ்சவேண்டும். தொகுதிக்குச் சென்றால் "நீங்கள் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை. ஒரு சட்டசபை மெம்பருக்கு இதைக்கூடச் செய்வதற்கு யோக்கியதை இல்லையா" என்று கேட்கிறார்கள். "உங்களிடம் கெஞ்சுகிறோம், அங்கே போயும் கெஞ்சுகிறோம்" என்று அவர்களிடம் சொல்லவேண்டி யிருக்கிறது (சிரிப்பு). இந்த கெஞ்சவேண்டிய நிலைமையை மாற்றி, எங்களுடைய தொகுதிகளில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று எங்களைக் கூப்பிட்டு, காரியதரிசிகளையும் கூப்பிட்டு, எங்களுக்குப் பதில் சொன்னால், அலுவலகங்களின் படி ஏறி சலித்துப் போகும் நிலைமை மாறி, நிர்வாகம் திறம்பட நடக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்த தேர்தல் வருகிறது. மக்களிடம் போய் ஆகவேண்டும். ஆகவே இந்த மாதிரிக் குறைபாடுகளை வைத்துக்கொண்டால் நல்லதல்ல என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தாராபுரம் தொகுதியில் மழையில்லாத காரணத்தினாலும், வேறு நீர்ப்பாசன வசதிகள் இல்லாத காரணத்தினாலும் குடி தண்ணீருக்குக் கஷ்டப்படக்கூடிய பகுதிகள் இருக்கின்றன. ஆகவே பஞ்ச நிவாரண வேலைகளுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். பரம்பிக்குளம் திட்டம் வந்தால் இங்கேயுள்ள பிற்பட்ட பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும். வேலை யில்லாதவர்களுக்கு வேலை அளிக்க, தாராபுரம் பகுதியில் ஒரு நூல் ஆலையை ஏற்படுத்த லைசென்சு கொடுக்கவேண்டும். மேலும் ஒரு தொழில் பேட்டையையும் வைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI N. K. PALANISAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கம் மிகவும் சுருக்கமாக இருந்தது. அதிலே அடங்கியிருக்கக்கூடிய விஷயங்களும் சுருக்கமாக இருந்தன. இந்த மாதிரி ஒரு பிரசங்கம் இந்த சபையில் இதுவரையில் நடைபெறவில்லை.

[Sri N. K. Palanisami] [21st January 1961

நமது தேசத்திற்கு பல தலைவர்கள் வருகிறார்கள். இந்தியப் பண்பாட்டிற்குத் தகுந்த மாதிரி நாம் அவர்களை நன்றாக உபசரிக்கிறோம். பிரிட்டிஷ் ராணி அவர்கள் நமது தேசத்தின் விருந்தாளியாக வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைபபற்றி ஆட்சேபனை சொல்ல நான் தயாராய் இல்லை. நாமே விரும்பித் தொடர்பு கொண்டுள்ள காமன்வெல்த் நாடுகளின் தலைவி என்ற முறையில் வருகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. காமன்வெல்த்தைப்பற்றி நமக்கு நன்கு தெரியும். நிற வெறியும், ஏகாதிபத்திய காலனி வெறியும் கொண்டது காமன்வெல்த். நம்முடைய தேசத்தின் கொள்கைக்கு எதிராக ஒரு கொள்கையை வைத்திருக்கும் தேசத்தின் தலைவி என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

சமீபத்தில் மழை ஏராளமாகப் பெய்தது. தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல இடங்களில் விவசாயம் நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை. காங்கிரஸ் பஞ்சாயத்தாக இருந்தால் மட்டும்தான் உதவி அளிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு உதவி மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக சென்னை நகர கார்ப்பரேஷனை எடுத்துக்கொள்ளலாம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்க்கார் துறையிலே தனியாக நிவாரணம் அளிக்கிறோம, நீஙகள வேண்டுமானால் தனியாகச் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள். இந்த மாதிரி விஷயங்களில் கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்ப்பது சரியல்ல. இன்றைய தினம் அதிகமான மழையினால் விவசாயிகள் கஷ்டப்பட்டும்கூட, நல்ல விளைச்சல் என்று கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயமும் இம்மாதிரித்தான் சொல்லப்படுகிறது. அதிகப்படியாக உற்பத்தியான போதிலும் என் விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது? கனம் நிதி அமைச்சர் அவர்கள் மார்ச்சு மாதத்திலே பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்பொழுது விலைவாசிகள் குறைய வேண்டுமென்று குறிப்பிட்டார். இன்றையத் தினம் புள்ளி விவரம் என்ன? சென்னையில் லிவிங் இன்டெக்ஸ் 448 ஆனால் அதே சமயத்தில், கடலூரில் 494, திருச்சியில் 444, மதுரையில் 483, கோயம்புத்தூரில் 509, நாகர்கோயிலில் 504 என்று இருக்கிறது. சென்னைக்கு மட்டும் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதியமைச்சர் அவர்கள் விலைவாசி குறையும் என்று சொன்னதற்கும்மேல் கிட்டதட்ட 40 புள்ளி அதிகமாக உயர்ந்திருக்கிறது. ஒரு தரம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்கிறோம் என்கிறார்கள், மறுபுறம் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம் என்கிறார்கள், நல்ல அறுவடை இருக்கிறது என்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் எந்த அளவுக்கு விலைவாசிகள் குறைந்திருக்கின்றன என்று பார்த்தால், உண்மை வெளியாகிறது.

பல திட்டங்களையும் போடும்போது, டாக்டர் லோகநாதன் சொல்கிறார் "The success of the Third Five-Year Plan should be judged not so much by the fulfilment of the targets but by the extent to which it would effectively check further rise in prices."



21st January 1961] [Sri N. K. Palanisami]

ஆகவே, ஒரு திட்டம் நிறைவேற வேண்டுமென்றால், விலை கட்டுப்பாடு இருக்கவேண்டும். நிதியமைச்சரவர்களும், ப்ரெஸ் கான்பரன்ஸில் சொல்லியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு முதலீடு அதிகப்படுகிறதோ, அந்த அளவுக்கு விலை அதிகப்படும் என்று விலைவாசி அதிகரிப்பினால், பிக்சட் இன்கம் க்ரூப்பில் உள்ளவர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் கஷ்டம் அதிகரிக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பர் காபிடா இன்கம் மூன்று பர்சென்ட் அதிகரித்திருக்கிறது என்றும், இரண்டாவது திட்ட காலத்தில் நான்கு பர்சென்ட் அதிகம் என்றும் சொல்கிறோம். ஆனால். மக்களுக்கு அதிக லாபம் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, விலைவாசி கட்டுப்பாடுதான் அவர்களுக்கு அவசியம். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள், எடுக்கப் போகிறார்களா, இல்லையா என்று தெரிவிக்கவேண்டும். விலைவாசி கட்டுப்பாடு இல்லாவிட்டால், நம் திட்டத்தையும் குறைக்க வேண்டிய அவசியம் வரும். விலைவாசி ஏற்றத்தினால் இரண்டாவது திட்டத்தில் அம்மாதிரி நிலைமை வந்தது நமக்குத் தெரியும்.

துணி விலையை எடுத்துக் கொண்டால், 1959-ல் சர்க்கார் தலையீட்டுக்குப் பிறகு மில் முதலாளிகள் விலையைக் குறைத்தார்கள்; ஆனால், அது மறுபடியும் ஏறிவிட்டது. மத்திய சர்க்காரின் நடவடிக்கையின் பயனாக, மில் முதலாளிகள் குறைத்து விடுகிறோம் என்று சொல்லி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 1959-ல் என்ன விலைக்கு விற்றதோ அதில் 20 சதவிகிதம் கூட்டி விற்கலாம் என்று ஏற்பட்டது. அதில் வேடிக்கை என்னவென்றால், மூன்று மில் முதலாளிகள், சென்னையில் உள்ளவர்கள், சர்க்காருடைய உத்தரவை ஒத்துக்கொள்ள மறுத்திருக்கிறார்கள். அவர்கள் யார் என்று தெரியும். ஆகவே, என்ன நிலைமை? ஐந்து பர்சென்டுகூட விலை குறையவில்லை. சாதாரண மக்களும், கைத்தறி நெசவாளர்களும், சகலரும் கஷ்டப்படுகிறார்கள். ஏன் சர்க்கார் கன்ட்ரோல் நடவடிக்கை எடுக்கக்கூடாது? சரியான முறையில் மக்களுக்கு மலிவாகக் கிடைக்க வேண்டுமென்றால், சர்க்கார் தங்கள் கொள்கையை மாற்றியாகவேண்டும்.

ப்ளானிங் கமிஷன் ஸ்டேட் ட்ரேடிங் பண்ணலாம் என்று சொல்கிறது; ஆனால், மத்திய உணவு மந்திரி அது வேண்டாம் என்று சொல்கிறார். அங்கேயே முரண்பாடு. ஆகவே, எந்த விதத்தில் இந்த விலைவாசி ஏற்றம் தடுக்கப்படும், குறைக்கப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

நாம் ஐந்தாண்டுத் திட்டத்தை ஏகமனதாக தீர்மானித்து, நிறைவேற்றினோம். இருந்தும், 100 கோடி வரை கிடைக்காமல், வெட்டு ஏற்பட்டிருக்கிறது. நம் மாகாணத்திற்கு ஒரு அதிகாரமும் கிடையாது. அதிகாரம் இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. எல்லா மாகாணங்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், நம் மாகாண நன்மைகளை விட்டுக் கொடுத்து, ஒத்துழைப்பு கொடுக்கக் கூடாது. ஆகவே, நம் திட்டங்கள் குறைக்கப்பட்டு இருக்கின்றன.

விவசாயம் நல்ல முறையிலே நடக்கவேண்டுமானால், அது சம்பந்தமான திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ. 40 கோடியிலிருந்து 27 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால், பாம்பிக்குளம் திட்டத்திற்கு 22 கோடி. போக பாக்கி இருப்பதில்தான் பாசன வசதிகளைச் செய்துகொள்ளவேண்டும். அதிகம் செய்ய முடியாது. ஆகவே, நல்ல விவசாய அபிவிருத்தி ஏற்படும் என்று சொல்ல முடியாது. அம்மோனியம் சல்பேட் பற்றி பல அங்கத்தினர்களும் சொன்னார்கள். பாரின் எக்ஸ்சேஞ்ச் கஷ்டம் இருந்தாலும் அந்த உரத்தை அதிகமாக இறக்குமதி செய்து, விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும். லோன் முறையில், லோன் கொடுத்தவர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள். அது சாதாரண விவசாயிகளுக்குப் பயன் படாது. பணக்காரர்கள்தான் பயனடைவார்கள். மேலும் கிராமங்களில், பலர் கர்ணத்திடம் சீட்டுகள் வாங்கிக்கொண்டு ஒருவரே 10 மூட்டைகள் வரை வாங்கி கொண்டு போய்விடுகிறார்கள். அதனாலெல்லாம் அதிருப்திதான் ஏற்படுகிறது.

தொழில் துறையிலும் ரூ. 15 கோடி குறைவாகக் கிடைத்திருக்கிறது. எந்தத் தொழில் பாதிக்கப்படும் என்று சொல்ல முடியாது. நெய்வேலியில் கிட்டத் தட்ட 35 லட்சம் டன்னுக்குப் பதிலாக, 40 லட்சம் டன் வரை நிலக்கரி தோண்டி எடுக்கப் போவதாகத் தெரிகிறது. தெர்மல் ஸ்டேஷனிலும், 400 மெக வாட்டிலிருந்து, 490 வரை விஸ்தரிக்க முடியும். ஆகவே, 40 லட்சம் டன்னுக்கும் மேலாக தேவையிருக்கிறது. உருக்கு தொழிற்சாலை சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். கார்பனைசிங் பாக்டரி ஏற்படுத்துவதாக இருந்தது. அந்தத் திட்டம் ஏற்படுத்தப் போகிறார்களா என்று திட்டவட்டமாக சொல்ல வேண்டும். நெய்வேலியைப்பற்றி சொல்லும்போது கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள், இரண்டு செக்ரடரிகள் அதில் டைரக்டர்களாக இருக்கிறார்கள் என்று. அது போதாது. அதில் நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஓரளவுக்கு நமக்கும் அதில் அதிகாரம் வேண்டும்.

ரா பிலிம் பாக்டரி சம்பந்தமாக, பல அபிப்பிராயங்கள் வெளி வருகின்றன. பிரசாரம் செய்யப்படுகிறது. பிரிட்டிஷ் எக்ஸ்பர்ட், இந்த கம்பெனி உற்பத்தி செய்யும் பிலிம்களுக்கு சரியான விற்பனை இருக்காது, இதற்கு பிரான்சில் கிராக்கி இல்லை என்று சொன்னதாக பத்திரிகையில் பார்த்தோம். ஓரளவுக்கு இது போட்டி காரணமாக இருக்கலாம். இங்கே உற்பத்தியாக இருப்பது கருப்பும், வெள்ளையும்தான்; கலர் பிலிம்களும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.



அணு சக்தி ஆலையை இந்த மாகாணத்தில் ஏற்படுத்த முயற்சி செய்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, எந்த இடத்தில், எப்பொழுது என்று திட்டவட்டமாக சொல்லவில்லை. இதைச் சர்க்கார் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். நல்ல நகல் திட்டத்தைக் கொடுத்திருந்தாலும், அதில் 100 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இந்த அளவுக்குக் குறைந்திருக்கிறதென்றால், 1.00 p.m.
இது சாதாரண விஷயம் அல்ல. ஏன் குறைந்திருக்கிறது? எதற்கெடுத்தாலும் 'லாக் ஆப் ரிஸோர்ஸஸ்' என்று காரணம் சொல்லப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தியபோதும் 'லாக் ஆப் ரிஸோர்ஸஸ்' என்றுதான் சொல்லப்படுகிறது. நகல் திட்டம் போட்டும் அதை மாற்றியமைக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கெல்லாம் காரணம் என்ன? வெளிநாட்டை நம்பி இருப்பது, தனிப்பட்ட முதலாளியை நம்பியிருப்பது என்ற கொள்கையை இந்த அரசாங்கம் வைத்துக்கொண்டிருப்பதால் 'லாக் ஆப் ரிஸோர்ஸஸ்' என்ற காரணத்தையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. தேசத்திலே அபிவிருத்தி வேலை, தொழிற்சாலை ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமென்று சொன்னால், அதற்கெல்லாம் இடைஞ்சலாக 'பணம் இல்லை' என்றே சொல்லப்படுகிறது. பணம் இருந்தால் எல்லாம் நடக்கும். நாட்டில் பணம் இல்லையா என்று நான் கேட்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). தயவுசெய்து இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுக்கவேண்டும்.

**DEPUTY SPEAKER**: ஒரே நிமிஷம்.

**SRI N. K. PALANISAMI**: ஆகவே, பாங்குகளை தேசியமயமாக்குவது, சர்க்காரே வியாபாரம் செய்வது, தனிப்பட்ட முதலாளிகளுடைய லாபத்தைக் கட்டுப்படுத்துவது போன்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்தாவிட்டால், இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாலும் நமக்குப் போதுமான பணம் இருக்காது, எப்போதும் வெளிநாட்டு உதவியை நம்பித்தான் இருக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து உதவி செய்யக் கூடியவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'பொதுத் துறைக்குப் பணம் கொடுக்க முடியாது, ரோட் ட்ரான்ஸ்போர்டுக்கும், பவர் இம்ப்ரூவ்மெண்டுக்கும்தான் பணம் கொடுக்க முடியும்' என்று சொல்கிறார்கள். பப்ளிக் செக்டாரில் தொழில்களை அதிகப்படுத்த வேண்டும். அதன் மூலமாக சர்க்காருக்கு அதிக வருமானம் வரவேண்டும். அதன் மூலமாக சாதாரண ஜனங்கள் மீது அவ்வப்போது போடக்கூடிய வரி இல்லாமல் செய்யவேண்டும். இதற்குப் பப்ளிக் செக்டாரில் தொழில்கள் வளருவது மிகத் தேவையானது.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet 1-10 y.m.
again at 8-30 a.m. on Monday, the 23rd January 1961.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Rules and Orders.*

139. *Notification regarding the powers delegated to the Regional Inspector of Municipal Councils and Local Boards in Pattukottai taluk (Thanjavur district). [Laid on the Table of the House under Section 113 (4) of the Madras Village Panchayats Act,* 1950 *(Madras Act X of* 1950).

140. *Notification issued with G.O. Ms. No.* 3944, *Home, dated 1st December* 1960 *exempting Willys Jeep Station Wagon MSX* 9113 *belonging to Co-operative for American Relief Everywhere, Inc., Madras from the payment of tax. [Laid on the Table of the House under Section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 *(Madras Act III of* 1931).]

141. *Notification issued with G.O. Ms. No.* 3950, *Home, dated 2nd December* 1960 *under the Madras Motor Vehicles Taxation Act,* 1931 *(Laid on the Table of the House under Section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 *(Madras Act III of* 1931).

142. *Amendment to the Madras General Sales Tax Rules,* 1959 *issued in G.O. No.* 3813, *Revenue, dated 22nd September* 1960. *[Laid on the Table of the House under Section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 *(Madras Act I of* 1959).]

### *B.—Report notifications and other papers.*

* 32. *Speech of Hon. Minister for Finance, presenting the Second Supplementary Estimates for* 1960–61 *to the Madras Legislative Assembly on the 20th January* 1961.

* 33. *Notice of Demands for Grants for further expenditure in the year* 1960–61.

*34. *Demands for grants for further expenditure and Detailed Supplementary Estimates thereof for the year* 1960–61 *as presented to the Legislature on 20th January* 1961.

35. *Notification issued with G.O. Ms. No.* 3535, *Revenue, dated 7th September* 1960 *extending the Madras City Tenants Protection Act,* 1921 *(as amended by the Madras City Tenants Protection (Amendment) Act,* 1960 *(Madras Act* 13 *of* 1960) *to the Municipal town of Srivilliputhur in the Ramanathapuram district under the Madras City Tenants Protection Act,* 1921 *(Madras Act III of* 1922).



## APPENDIX I.

[Vide answer to starred question No. 48 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 143 supra).

*Statement showing the reasons for the introduction of the Madras Liberalized Pension Rules,* 1960 *and the details thereof.*

The pension system under the Civil Service Regulations does not provide anything for the family in the event of Government servant's death in harness or immediately after retirement. To remedy this defect the Madras Contributory Provident Fund Pension Insurance Rules, 1950 were introduced with effect from 1st April 1950. These rules provided for (1) a compulsory provident fund to which the Government made a contribution at the rate of 5 naye Paise in the rupee of the pay of the Government servants, (2) Compulsory Insurance ranging from Rs. 500 to Rs. 5,000 according to the pay drawn by the Government servants from time to time and (3) Pension at half the scale laid down in the Civil Service Regulations. The Madras Pay Commission which reviewed the working of the Contributory Provident Fund Pension Insurance Rules, 1950, observed that the original objects of the scheme had not been realised in full as there were many instances in which the policies had been allowed to lapse and as the employees subscriptions to the Fund were also withdrawn on some pretext or other which in turn seriously reduced the balance at the credit of the subscribers. The Commission also observed that the establishment charges for the maintenance of the Central Provident Fund were high when compared with the Government contribution credited to the accounts of the subscribers, that the working of the scheme during the last few years had also disclosed serious defects in the maintenance of the accounts and that the scheme was not satisfactory from the point of view of the employees. The Commission therefore recommended that the existing pension system under the Civil Service Regulations and the Madras Contributory Provident Fund Pension Insurance Rules, 1950 should be replaced by the Liberalised Pension Scheme of the Government of India with the modification that there should be no minimum limit to the family pension payable under certain circumstances in the Liberalised Pension Rules. The Government accepted this recommendation of the Pay Commission and have accordingly introduced the Madras Liberalised Pension Rules, 1960 with effect from 1st July 1960. The salient features of the Liberalised Pension Scheme are :—

(i) The maximum pension will be reduced from 30/60th of the 'average emoluments' for twenty-five years of qualifying service to 30/80th of the average emoluments' for thirty years of qualifying service.

(ii) The maximum pension is fixed at Rs. 8,100 per annum as against the various limits ranging from Rs. 5,000 to Rs. 9,500 per annum inclusive of special additional pensions under the Civil Service Regulations and Superior Civil Service Rules.

(iii) On the completion of five years' qualifying service, a Government servant becomes eligible for a gratuity at the rate of one-fourth of the 'emoluments' for each completed six monthly period of qualifying service, subject to a maximum of fifteen months' 'emoluments'. The gratuity is payable to a Government servant at the time of his retirement from service. In the event of his death while in service gratuity subject to a minimum of twelve times the emoluments will be paid to his nominees or heirs. The maximum gratuity is Rs. 24,000

(iv) There is provision for pension for families of Government servants who die after putting in twenty years of qualifying service. The family pension is payable for a period of ten years at the rate of one-half of pension which would have been admissible to him if he had retired on the date following his death and is subject to the condition that the payment of pension should not extend beyond a period of five years from the date on which the deceased Government servant would have retired in the normal course. This pension is subject to a maximum of Rs. 150 per mensem.

(v) Under these rules, Last Grade Servants are also eligible for pension after putting in a qualifying service of ten years, as in the case of superior servants. There are also no distinctions between Last Grade Servants and Government servants in superior service in regard to scale of pension and gratuity.

(vi) Facilities for commuting pension in accordance with the Madras Civil Pensions (Commutation) Rules, 1944 continues but the maximum amount of pension which may be commuted is restricted to one-third of pension as a lump sum is paid as Death-cum-Retirement Gratuity at the time of retirement.

It will be observed from the above that the main advantages of the Liberalised Pension Rules are that they provide for a lump sum payment as gratuity without undergoing medical examination and they also provide for family pension and gratuity to the families of Government servants who die while in service or immediately after retirement from service.

The Pay Commission also recommended that computation of pension should be liberalised in the following manner :—

(i) Continuous temporary or officiating service rendered in a regular capacity under the Government of Madras, followed without interruption, by confirmation in the same or in any other post should count in full as qualifying service.

(Previously continuous temporary and officiating service in excess of five years alone were counted for pension).

(ii) In the calculation of average emoluments officiating or temporary pay, i.e., the difference between the substantive pay and the pay actually drawn in a higher officiating or temporary appointment in a regular capacity should be counted to the extent of one-half in every case.

(Previously emoluments drawn in an officiating capacity were counted for pension subject to certain conditions.)

(iii) Fractions of a year equal to six months and above should be treated as a completed six monthly period for the purpose of calculation of any pension.



(Previously completed years alone were taken into account for purposes of pension) :

The Government accepted these recommendations also and have accordingly issued amendments to the provisions in the Civil Service Regulations.

APPENDIX II.

[Vide answer to the starred question No. 51 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 145 supra.]

The Government have received assistance from the UNICEF and WHO for the improvement of Public Health till November 1960 as detailed below.

UNICEF.

1. *Aid for Maternity and Child Welfare Centres.*—Supply of drugs, diet supplements, skim milk powder for distribution among children, expectant and nursing mothers in 99 centres, sewing machines, midwifery kits and bicycles for the use of Health Visitors in the centres.

2. Vehicles and equipments for Mass BCG Vaccination campaign. Thayis kits, teaching equipment, bicycles, stipends, etc., for Training of Thayis under the Second Five-Year Plan. Stipends, honoraria to lecturers and transport vehicles for the Public Health Nursing Course and Short Public Health Orientation Course.

About 7½ lakh pounds of skim milk powder for Maternal and Child Health feedings out of the total quantity of 15 lakh lb allocated by them for the year 1960–61.

3. Supplying of pencillin tablets, drugs and skin milk powder to the Pædiatric department.

4. Equipment to the values shown below to the following Government hospitals :—

| | Amount. RS. NP. |
|---|---|
| (a) Government hospital, Nanguneri ... | 14,857 61 |
| (b) Government hospital, Karur ... ... | 15,438 81 |
| (c) Government hospital, Kumbakonam ... | 15,000 14 |
| (d) Government hospital, Wallajapet ... ... | 12,190 92 |
| (e) Government hospital, Tindivanam ... ... | 14,287 62 |
| (f) Government hospital, Gudiyatham ... | 12,550 20 |
| (g) Government hospital, Attur ... ... | 12,803 88 |
| Total ... | 97,129 18 |

5. *Aid for development of Rural Health Services*—

(i) *Primary Health Centres.*—Equipments drugs and supplies for 113 centres and equipments for 339 sub-centres, 132 vehicles and 115 bicyles.

(1) Vehicles—19.

(2) Main centre, equipments—14 sets.

[21st January 1961

(3) Drugs—14 sets.
(4) Sub-centre equipments—42 sets.
(5) Public Health Nursing Kits—11.

(ii) *Referral hospital.*—Essential technical items of imported equipment for 12 hospitals and smaller set of laboratory equipment.

(iii) *District Laboratories.*—Essential Technical items of imported equipment for 6 laboratories.

(iv) *Sanitation in schools and sub-centres.*—Pumps, pipes casing and other fittings for use in 452 schools and in approximately 113 sub-centres.

(v) *District Demonstration Project.*—Equipments and one vehicle for the Project at Madurai.

(vi) *Health Unit, Poonamallee.*—Supply of one universal jeep and Primary Health Centres equipments and drugs.

Various items of drugs and diet supplements worth about Rs. 37,610–74 nP. for distribution to Primary Health Centres and Maternal and Child Health Centres in the districts.

Materials, equipment and universal jeep complete with accessories for Health Education and Publicity work of the Health Education Bureau cost of stores supplied is Rs. 26,261–34 nP.

*Women Health Officer*

1. *For Tuberculosis chemotherapy centre.*—Personal, equipment supplies and transport.

2. *For training course for the Integration of Public Health Nursing in General Sick Nursing.*—One station wagon.

3. *Fellowship.*— For (1) Public Health Nursing Certificate Course at Calcutta and (2) short term Refresher course in Nursing at New Delhi and Vizagapatnam .

4. *Aid for Pædiatric Project, Madras.*—Services of of Public Health trained visiting Professor of Child Health, Pædiatric Nurse and technical advice and guidance of the Regional Director World Health Organization, New Delhi and his advisers.

5. *Aid for veneral diseases programme*—

(i) Services of one Medical Consultant, one Public Health Nurse in Veneral Diseases Control, one Medical Social Worker.

(ii) Forty-nine items of Educational and 12 boxes of laboratory equipment 41 books and 10 journals.

(iii) One Chevrolet Sedan Car for Epidemological filed work.

(iv) Travel fellowships for the Senior Specialist and Lady Medical Officer of the Institute of Venerology, Government General Hospital, Madras.

(v) *Nursing.*—One Nursing Adviser to give expert opinion for two years. A car has also been provided to the Nursing Adviser.



21st January 1961]

APPENDIX III.

[Vide answer to the starred question No. 54 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 147 supra.]

(*a*) Geology is taught in the following colleges in this State :—

(1) College of Engineering, Guindy ;
(2) The Government College of Technology, Coimbatore ,
(3) The Presidency College, Madras and
(4) The Alagappa Chettiar College, Karaikudi.

2. Mining Engineering was taught in the College of Engineering, Guindy, up to 1960–61, but it has since been suspended as no candidate has come forward to take up this course But it is being taught at Diploma level in the Central Polytechnic, Madras. Mining is also taught as part of Geology in B.Sc. and M.Sc. courses. Atomic Science is taught as part of Physics in B.Sc. and M.Sc. courses. But these subjects are not taught as separate major subjects.

(*b*) The question does not arise in view of the answer to clause (*a*) above.

APPENDIX IV.

(Vide answer to the starred question No. 62 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 154 supra.]

(அ) The teacher-candidates should have successfully completed the III Form of a Secondary School or VIII Standard of an Elementary School for admission to teachers' training course of the Elementary Grade in Montessori methods for admission to teachers' training courses of the Secondary Grade in Montessori methods. They must possess S.S.L.C., with eligibility for admission to college courses of studies or a completed S.S.L.C., with the minimum number of marks prescribed for admission to public service.

(ஆ) The training course is for two years.

(இ) Yes, Sir.

(ஈ) For Standards I and II of an Elementary School.

(உ) The age group is from 2 to 7 years.

(ஊ) There are no fixed standards. The children are grouped according to age and attainments—generally in the groups, one for the ages 2 to 5 and another for the ages 5 to 7. Pupils passing out of the schools are generally admitted to Standard III of an Elementary School.

## APPENDIX V.

[Vide answer to the starred question No. 63 asked by Sri A. Vedarathnam, and Sri T. S. Ramaswamy at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 155 supra.]

[SUBJECT.—*Report about the publication of Text-books Tamil medium Courses in Humanities subjects of B.A. Degree.*]

### COLLEGE TAMIL COMMITTEE.

*List of Technical-term books published.*

*Name of the subject.*

1 Politics
2 Economics
3 Physics
4 Chemistry
5 Statistics
6 Biology
7 Astronomy
8 European Philosophy
9 Psychology
10 Commerce
11 History— European History
12 History— Indian History
13 History— History of England
14 Geography

(Items 1–14:) **Available at the Government Press, Sales Section, Mount Road, Madras.**

*List of Text-books in Tamil taken up for publication by the College Tamil Committee—subjectwar—Total number: 52.*

| | Number of books. |
|---|---|
| 1 History | 8 |
| 2 Economics | 14 |
| 3 Politics | 4 |
| 4 Psychology | 9 |
| 5 Geography | 8 |
| 6 Philosophy | 2 |
| 7 Social Sciences | 2 |
| 8 Minor Subjects | 5 |
| Total .. | 52 |



LIST OF TEXT-BOOKS ON *HISTORY* TAKEN UP FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

| *Serial number and detailed heading of the subject on which a book has to be written up.* | *Whether a book as required in column (1) has been written up or is being written.* | *Name of the author commissioned to write the book.* | *Name of publisher where books can be had.* | *Remarks* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 History of Europe (1500 A.D. to 1815 A.D., Part I). | Already published.. | Dr. M. Arokiaswami, M.A., PH.D., Reader in History, University of Madras, Madras-5. | Messrs. Amudha Nilayam, Private, Limited, Teynampet, Madras-18. | .. |
| 2 Political and Constitutional History of England up to 1903 A.D. | Do. | Dr. K. K. Pillai, M.A., D. LITT., D. Phil. (Oxon), Professor of Indian History and Archaelogy, University of Madras, Madras-5. | Messrs. Tirunelveli South India Saiva Siddhantha Publishing Works, Limited, 1/140, Broadway, Madras-1. | .. |
| 3 Indian History (up to 1200 A.D., Vol. I) | Do. | Sri R. Sathianatha Iyer, M.A., Professor in History, Annamalai University, Annamalainagar, South Arcot district. | The Registrar, Annamalai University, Annamalainagar, South Arcot district. | .. |
| 4 Indian History (from 1200 A.D. to 1707 A.D., Vol. II). | Do. | Do. | Do. | .. |
| 5 History of Europe (1815 A.D., Part II). | Being written .. | Dr. M. Arokiaswami, M.A., PH.D., Reader in History, University of Madras, Madras-5. | Messrs. Amundha Nilayam, Private, Limited, Teynampet, Madras-18. | .. |
| 6 Political History of England (from 1604 A.D.) | Do. | Dr. K. K. Pillai, M.A., D. LITT., D. Phil. (Oxon), Professer of Indian History and Archaelogy, University of Madras, Madras-5. | Tirunelveli South India Siva Siddhantha Publishing Works, Limited, 1/140, Broadway, Madras-1. | .. |
| 7 Indian History (from 1707 up to date, Vol. III). | Do. | Sri R. Sathianatha Iyer, M.A., Professor in History, Annamalai University, Annamalainagar, South Arcot district. | The Registrar, Annamalai University, Annamalainagar, South Arcot district. | .. |

LIST OF TEXT-BOOKS ON *HISTORY* TAKEN UP FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE—*cont.*

| *Serial number and detailed heading of the subject on which a book has to be written up.* | *Whether a book as required in column (1) has been written up or is being written.* | *Name of the author commissioned to write the book.* | *Name of publisher where books can be had.* | *Remarks.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 8 Constitutional History of England (Parts I and II). | Under print .. | .. Sri P. Surianarayanan, M.A. (His.), M.A. (Pol.), Professor of Politics, Alagappa College, Karaikudi. | Messrs. Palaniappa Bros., 4, Venkatesa Naicken Street, Triplicane, Madras-5. | .. |

LIST OF TEXT-BOOKS IN TAMIL ON *ECONOMICS* UNDERTAKEN FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Modern Economic Developments of the United Kingdom, Volume-I. | Already published | .. Sri A. Muthiah, M.A., Professor in Economics, Pachaiyappa's College, Madras. | Messrs. Pari Nilayam, 59, Broadway, Madras-1. | .. |
| 2 Principles of Commerce, Volume-I. .. | Do. | Sri O. R. Krishnaswami, M.A., M.COM., F.R.E.S.(Lond.), Assistant Editor, Tamil Encyclopaedia, University Buildings, Madras-5. | Messrs. Seshachalam and Company, 7, Sunkurama Chetty Street, Madras-1. | .. |
| 3 Principles of Economics, Volume-I .. | Do. | Sri S. Velayudham, M.A., B.COM. (Hons.) (Lond), Chief Professor of Economics, Presidency College, Madras-5. | Kalaikathir Achagam, 2/256-B, Avinashi Road, Coimbatore-1. | .. |
| 4 Principles of Economics, Volume-II .. | Being written | .. Do. | Do. | .. |
| 5 Principles of Commerce, Volume-II (Fundamentals of Business Organization). | Do. | Sri O. R. Krishnaswami, M.A., M.COM., F.R.E.S.(Lond), Assistant Editor, Tamil Encyclopaedia, University Buildings, Madras-5. | Messrs. Seshachalam and Company, 7, Sunkurama Chetty Street, Madras-1. | .. |
| 6 Modern Economic Development of the United Kingdom, Volume-II. | Do. | Sri A. Muthiah, M.A., Professor in Economics, Pachaiappa's College, Madras. | Messrs. Pari Nilayam, 59, Broadway, Madras-1. | .. |
| 7 Indian Economic Problems .. .. | Do. | Sri Ramadoss, M.A., Professor of Economics P.S.G. Arts College, Peelamedu, Coimbatore-4. | .. | .. |
| 8 Modern Economic Developments in United States of America. | Do. | Sri K. A. Joseph, B.A.(Hons.), L.T., Department of Economics and Commerce, Christ College, Irinjilakuda P.O. (Kerala State). | .. | .. |
| 9 Introduction to Economics .. .. | Do. | .. Sri T. C. Mohan, M.A., Assistant Professor in Economics, Presidency College, Madras-5. | .. | .. |
| 10 Development of Economic Thought. | Already written | .. Sri K. S. Sonachalam, M.A., Head of Department of Economics, Dean of the Faculty of Arts, Annamalai University, Annamalainagar, South Arcot district. | .. | Pending approval. |
| 11 Public Finance .. .. .. | Do. | .. Sri R. Seshachalam, M.A., Professor of Economics, The Raja Serfoji College, Thanjavur. | .. | Do. |
| 12 Indian Banking and Currency .. | Do. | .. Srimathi Suriya Augustus, B.A. (Hons.), Lecturer in Economics, Sri Avinashilingam Home Science College, Coimbatore. | .. | Do. |
| 13 Public Finance .. .. .. | Do. | .. Sri D. Velappan, M.A., Lecturer in Economics, S.T. Hindu College, Nagercoil. | .. | Do. |
| 14 Development of Economic Thought. | Do. | .. Sri G. M. Muthuswami Pillai, I.A.S. (Retired), Retired Collector, 59, North Avani Moola Street, Madurai. | .. | Do. |

LIST OF TAMIL TEXT-BOOKS IN *POLITICS* UNDERTAKEN FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE FOR B.A. DEGREE COURSES.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Modern Governments—European Governments only. | Already published | .. Sri P. R. Pakrisankar, M.A., B.L., District Munsif, Kovilpatti. | Messrs. Central Arts Press, Acton Lodge, 11, McNichol Road, Chetput, Madras-31. | .. |
| 2 Political Theory .. .. .. | Under print .. | .. Sri R. Baskaran, M.A., Professor in Politics, University of Madras, Madras-5. | Do. | .. |
| 3 Modern Governments (other than European Governments—Japan, Canada and U.S.A.). | Already written | .. Sri P. Natarajan, M.A. (Econ.), M.A. (His), M.A. (Pol.), F.R.E.S. (London), Lecturer in History and Politics, Sir Theagaraja College, Madras-21. | .. | Pending approval. |
| 4 Elements of Public Administration .. | Do. | .. Sri P. Natarajan, M.A. (Econ.), M.A. (His), M.A. (Pol.), F.R.E.S. (London), Lecturer in History and Politics, Sir Theagaraja College, Madras-21. | .. | Do. |

## LIST OF TAMIL BOOKS ON *PSYCHOLOGY* TAKEN UP FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

| *Serial number and detailed heading of the subject on which a book has to be written up.* | *Whether a book as required in coloumn (1) has been written up or is being written.* | *Name of the author commissioned to write the book.* | *Name of publisher where books can be had.* | *Remarks.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 Experimental Psychology .. .. | Already published .. | Dr. G. D. Boaz, M.A., D. PHIL. (Oxon.), Professor in Psychology, University of Madras Examination Hall, Madras-5. | Messrs. Amudha Nilayam Private, Limited, Teynampet, Madras-18. | .. |
| 2 General Psychology (Part I) .. | Do. | Dr. T. E. Shanmugham, M.A., M.LIT., PH.D., Reader in Psychology, University of Madras. | Tirunelveli South India Saiva Siddhantha Publishing Works, Limited, 1/140, Broadway, Madras-1. | .. |
| 3 Outlines of European Philosophy .. | Do. | Sri T. M. P. Mahadevan, M.A., PH. D., Professor in Philosophy, University of Madras. | The Books (India) Private, Limited, 135, Coral Merchant Street, Madras-1. | .. |
| 4 General Psychology (Part II) .. | Being written .. | Dr. T. E. Shanmugham, M.A., M.LIT. PH.D., Reader in Psychology, University of Madras. | Tirunelveli South India Saiva Siddhantha Publishing Works, Limited, 1/140, Broadway, Madras-1. | .. |
| 5 Adolescent Psychology .. .. | Do. | Dr. Aram, Principal, Rural Institute of Higher Education, Perianaickenpalayam, Coimbatore. | .. | .. |
| 6 European Logic .. .. .. | Do. | Sri K. R. Appalachari, M.A., L.T., Member, College Tamil Committee, 90, Habibulla Road, Madras-17. | .. | .. |
| 7 Child Psychology .. .. .. | Do. | Dr. M. D. Paul, ED.D., (Columbia), M.A., M. SC. LT., Deputy Director of Public Instruction, Madras-6. | .. | .. |
| 8 Abnormal Psychology .. .. | Do. | Dr. A. Theagarajan, M.A., M.B.B.S., Civil Assistant Surgen, Government Stanley Hospital Madras. | .. | .. |
| 9 Social Psychology .. .. .. | Already written .. | Sri A. Besant Creeper Raj, M.A. (Phil), (Psychology), Assistant Lecturer in Psychology, Government Arts College, Coimbatore. | .. | Pending approval. |

## LIST OF TAMIL TEXT-BOOKS ON *GEOGRAPHY* TAKEN UP FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Physical basis of Geography (Paper II—Land Forms—First part). | Already published .. | Sri N. Ananthapadmanabhan, B.SC. (Hons.), Professor in Geography, Presidency College, Madras-5. | Messrs. Higginbothams Private, Limited, Mount Road, Madras-2. | .. |
| 2 Physical basis of Geography (Paper II—Land Forms—Second Part). | Being written .. | Do. | Do. | .. |
| 3 Climatology .. .. .. .. | Under print .. | Mrs. R. Radha, M.A., Lecturer in Geography, Queen Mary's College, Madras-4. | Messrs. Palaniappa Brothers, 4, Venkatesa Naicken Street, Madras-5. | .. |
| 4 Regional Geography—Southern Continents (1st book on Australia). | Being written .. | Mrs. N. Newman, M.A., Diploma in Anthropology, Geography Department, Queen Mary's College, Madras-4. | .. | .. |
| 5 Geography of India .. .. | Do. | Sri S. Manickam, M.A., B.T., Diploma in Geography, Lecturer in Geography, New College, Madras-14. | .. | .. |
| 6 Geography of Europe .. .. | Do. | Do. | .. | .. |
| 7 Human Geography .. .. | Do. | Sri V. S. Anantapadmanabhan, Assistant Professor in Geography, Presidency College, Madras-5. | .. | .. |
| 8 Practical Geography .. .. | Do. | Sri S. Jayachandran, Assistant Professor of Geography, Presidency College, Madras-5. | .. | .. |

## LIST OF TAMIL TEXT-BOOKS ON *PHILOSOPHY* AND *SOCIOLOGY* UNDERTAKEN FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

PHILOSOPHY.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Outlines of Indian Philosophy .. | Being written .. | Sri V. A. Devasenapathi, M.A., PH.D., Reader in Philosophy, University of Madras, Madras. | .. | .. |
| 2 Outlines of Indian Philosophy .. | Already written .. | Sri K. Lakshmanan, Royal College, Colombo, No. 463, Narahenpeta Road, Colombo-5. | Messrs. Palaniappa Brothers, No. 4, Venkatesa Naicken Street, Madras-5. | Pending approval. |

LIST OF TAMIL TEXT-BOOKS ON *PHILOSOPHY* AND *SOCIOLOGY* UNDERTAKEN FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE—*cont.*

| *Serial number and detailed heading of the subject on which a book has to be written up.* (1) | *Whether a book as required in column (1) has been written up or is being written.* (2) | *Name of the author commissioned to write the book.* (3) | *Name of publisher where books can be had.* (4) | *Remarks.* (5) |
|---|---|---|---|---|
| | | SOCIOLOGY. | | |
| 1 Sociology, Paper I .. .. | Being written .. | Dr. (Miss) M. Cornelius, M.A., M.SC., ED.D. (Mich).. Professor and Head of Department of Sociology, Annamalai University, Annamalainagar P.O., South Arcot district. | .. | .. |
| 2 Sociology, Paper II .. .. | Do. | Sri Gopalakrishnan. M.A., M. LIT., Lecturer-in-charge of Department of Anthropology. University of Madras, Madras-5. | .. | .. |

## B.A. MINOR SUBJECTS.

LIST OF TAMIL TEXT-BOOKS IN TAMIL FOR THE B.A. DEGREE COURSES, UNDERTAKEN FOR PUBLICATION BY THE COLLEGE TAMIL COMMITTEE.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Biology .. .. .. .. .. .. | Already published .. | Sri V. S. Ramaswami, M.A., Lecturer in Biology, P.S.G. Arts College, Peelamedu, Coimbatore. | Kalaikadir Achagam, 2/256-B, Avinashi Road, Coimbatore-1. | .. |
| 2 Physics .. .. .. .. .. .. | Do. | Sri P. Savarimuthu, M.A., Professor in Physics, St. Joseph's College, Tiruchirappalli. | Messrs. Higginbothams Private, Limited, Mount Road, Madras-2. | .. |
| 3 Astronomy .. .. .. .. .. | Do. | Sri R. Mahadevan, M.A., Lecturer, Engineering College, Guindy (now Lecturer in Mathematics, Government Arts College, Coimbatore). | Messrs. Sakthi Kariyalayam, 3/111, Mount Road, Madras-6. | .. |
| 4 Chemistry .. .. .. .. .. | Do. | Sri K. Kannapiran, M.A., B.SC. (Hons.), Lecturer in Chemistry, P.S.G. Arts College, Peelamedu, Coimbatore. | Kalaikathir Achagam, 2/256-B, Avinashi Road, Coimbatore. | .. |
| 5 Statistics .. .. .. .. .. | Under print .. .. | Sri V. Venkatesan, Lecturer in Mathematics, St. Joseph's College, Tiruchirappalli (now I.A.S. probationer). | Cine Kadir Press, Mylapore, Madras-4. | .. |



## APPENDIX VI.

[*Vide* answer to the starred question No. 72 asked by Sri A. Vedarathinam at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 161 *supra*.]

| Name of taluk (in Thanjavur district). (1) | Number of elementary schools upgraded into higher elementary schools during the current school year (1960-61). (2) | Number of applications received for upgrading elementary schools which have been rejected or deferred. (3) |
|---|---|---|
| Nagapattinam .. .. | 5 | .. |
| Tiruturaipundi .. .. | 10 | 10 |
| Mannargudi .. .. .. | 5 | 2 |
| Mayuram .. .. .. | 2 | .. |
| Nannilam .. .. .. | 5 | 1 |
| Sirkali .. .. .. | 1 | 1 |
| Thanjavur .. .. .. | 10 | .. |
| Papanasam .. .. .. | 6 | 8 |
| Kumbakonam .. .. | 3 | .. |
| Orathanad .. .. .. | 13 | 4 |
| Pattukkottai.. .. .. | 14 | 5 |
| Arantangi .. .. .. | 3 | 4 |
| Total .. | 77 | 35 |

## APPENDIX VII.

[Vide answer to the starred question No. 73 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 21st January 1961, page 162 supra.]

| Name of the college. | Strength fixed. | | Number of candidates actully admitted. | | | Total candidates actually admitted subjectwar. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Men. | Women. | Men. | Women. | Total. | In Mathematics. | In Science. | Other subjects. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 Teachers' College, Saidapet | 150 | .. | 150 | .. | 150 | 32 | 39 | 79 |
| 2 Meston Training College, Royapetta | 65 | .. | 63 | .. | 63 | 10 | 20 | 33 |
| 3 B. Ed. Section, Annamalai University | 85 | 15 | 79 | 15 | 94 | 10 | 14 | 70 |
| 4 Thiagarajar College of Proceptors, Madurai | 100 (60) | 40 | 61 | 39 | 100 | 42 | 36 | 22 |
| 5 Dr. A. C. Training College, Karaikudi | 100 (70) | 30 | 71 | 29 | 100 | 20 | 19 | 61 |
| 6 St Xavier's Training College, Palayamkottai | 100 (60) | .. | 60 | .. | 60 | 15 | 22 | 23 |
| 7 V.O.C. Training College, Tuticorin | 80 | .. | 78 | .. | 78 | 20 | 12 | 46 |
| 8 Government Training College, Vellore | 75 | .. | 75 | .. | 75 | 18 | 8 | 49 |
| 9 Government Training College, Pudukkottai | 75 | .. | 74 | .. | 74 | 19 | 12 | 43 |
| 10 Government Training College, Komarapalayam | 75 | .. | 74 | .. | 74 | 32 | 18 | 24 |
| 11 Vivekananda Training College, Tiruvalathurai | 70 | .. | 70 | .. | 70 | 21 | 14 | 35 |
| 12 Sri R.K.M.V. Teachers' Training College, Periyanaickenpalayam. | 75 | .. | 62 | .. | 62 | 18 | 11 | 33 |
| 13 Government Basic Training College, Orathanad | 25 | .. | 25 | .. | 25 | .. | 8 | 17 |
| 14 Lady Willingdon Training College, Madras | .. | 110 | .. | 101 | 101 | 13 | 28 | 60 |
| 15 St. Christopher Training College, Vepery | .. | 70 | .. | 70 | 70 | 10 | 30 | 30 |
| 16 St. Ignatius Training College, Palayamkottai | .. | 60 | .. | 53 | 53 | 15 | 18 | 20 |
| 17 Government Training College for Women, Coimbatore. | .. | 75 | .. | 69 | 69 | 9 | 24 | 36 |
| | 965 | 400 | 942 | 376 | 1,318 | 304 | 333 | 681 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, 23rd January 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, MR. SPEAKER (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### *Loans*

* 81 *Q.*—**SRI S. M. ANNAMALAI**: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல், வடாற்காடு மாவட்டம், கலசபாக்கம், போளூர் சமுதாய நலத் திட்டங்களில் எத்தனை (1) மாடு வாங்க, (2) கிணறு வெட்டக் கடன் மனுக்கள் வந்தன ?

(இ) எத்தனை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன ?

(உ) கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

| | *Kalasapakkam.* | *Polur.* |
|---|---|---|
| (a) (1) .. .. | 256 | 786 |
| (2) .. .. | 154 | 326 |
| (b) .. .. | 256 | 634 |
| (c) .. .. | 47 | 132 |

**SRI S. M. ANNAMALAI**: விவசாயக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருந்தால் சமுதாய நலத் திட்டப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு கடன் தரக்கூடாதென்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகளுக்கு கடன் தர முடியாமல் இருப்பதனால் அந்த ஜி.ஓ-வை திருத்தவேண்டிய முயற்சி எடுப்பார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கடன் என்று சொல்லும் போது விவசாயிகள் பல இடங்களிலே கடன் வாங்குகிறார்கள். ஒன்றுக்கொன்று தாக்கீது இல்லாமல் போய்விடுகிறது. இனிமேல் விவசாயிகள் கடன் பெற வேண்டுமென்றால் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் கடன் பெறவேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை. கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகள் அங்கத்தினராக இருக்கும் இடங்களிலே வேறுவிதமான கடன் கொடுக்கமுடியாது. அதுவும் குறுகியகால தவணை கடன் கொடுப்பது என்பது முடியாது.

[23rd January 1961

*Finance Minister's Foreign Tour*

* 82 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிதி மந்திரி அவர்கள் திடீரென்று வெளிநாடுகளுக்குப் போனதற்குக் காரணமென்ன ?

(இ) மத்திய சர்க்காரின் வற்புறுத்தலின் காரணமாகவே போனார் என்பது உண்மையா ?

(உ) விவரம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Sri C. Subramaniam, Minister for Finance, proceeded abroad in order to study Social Services in Britain and to visit certain Atomic Research Stations in the United Kingdom and certain industrial and other installations of economic importance on the Continent.

(*b*) The Minister did not undertake the above tour on the invitation of the Central Government.

(*c*) Does not arise.

Sri A. A. RASHEED : Sir, may I know whether the Hon. the Minister has submitted any report to the Government, and if so, will a copy of the same be placed on the table of the House?

The Hon. Sri C. SUBRAMANIAM : I have not submitted any report.

**Sri M. KALYANASUNDARAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று வந்ததை நான் வரவேற்கிறேன். அங்கு அவர் பெற்ற அனுபவத்தை எப்படி இங்கு பயன்படுத்தப்போகிறார் என்பதை சொல்ல முடியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய அனுபவம் என்னுடைய நிர்வாகத்தில் கொஞ்சமாவது பயன்படும் என்று நம்புகிறேன்.

*Banning of strikes*

* 83 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state the stand taken by the Government during the Chief Ministers' Conference held in September 1960 at Delhi regarding the banning of strikes in the essential services?

The Hon. Sri C. SUBRAMANIAM : The meeting of Chief Ministers and representatives of States with the Union Home Minister held in New Delhi in September 1960, was only an informal one and the discussions were confidential.



23rd January 1961]

**Sri N. K. PALANISAMI :** இந்த மாநாட்டிலே நம்முடைய சர்க்கார் எடுத்துக்கொண்ட ஸ்டாண்ட் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இதன் விவரத்தைப் பற்றிய விவரங்களை சொல்லாமல் இருக்கும்போது நாங்கள் எடுத்துக்கொண்ட ஸ்டாண்ட் என்ன என்று கேட்பது விநோதமாக இருக்கிறது.

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் விவரம் தெரிந்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்கிறார். ஆனால் மந்திரி அவர்கள் அதற்கு பதில் சொல்லாமல் இருப்பதனால் தப்பு ஒன்றும் இல்லை.

**Sri M. KALYANASUNDARAM :** நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. அந்த மாநாட்டின் நிகழ்ச்சி குறிப்பு என்ன என்றாவது சொல்லமுடியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** சொல்ல முடியாது.

Mr. SPEAKER : We shall take up question No. 84 a little later.

*Film Units*

* 85 *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் எத்தனை "**film units**" இருக்கின்றன ?

(இ) எல்லா சமுதாய நலத் திட்டப் பகுதிகளிலும் " **film units**" இருக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) 54.

(*b*) The Government are examining the question as to whether a film unit is necessary for each Block or whether one film unit cannot serve more than one Block.

**Sri S. M. ANNAMALAI :** கிராமப் பகுதியிலே இருப்பவர்களுக்கு பிலிம் யூனிட் மூலமாக காண்பித்தால் அவர்கள் சீக்கிரத்தில் புரிந்துகொள்ள முடிகிறது. இதனால் ஒவ்வொரு சமுதாயநலத் திட்டப் பகுதிகளிலும் ஒரு யூனிட் தேவைப்படும் என்று அங்குள்ள அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகையால் சமுதாயநலத் திட்ட ஒவ்வொரு பகுதியிலும் சீக்கிரத்தில் ஒரு பிலிம் யூனிட்டை ஏற்படுத்தமுடியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** யோசனையில் இருப்பதாக முன்பே பதில் சொன்னேன்.

[23rd January 1961

SRI A. VEDARATHNAM : இந்தப் படங்களை வசதியுள்ள பள்ளிகளிலே அரசாங்கம் காண்பிக்க முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பள்ளிகளிலே காட்டுவதற்கு வேறு திட்டங்கள் இருக்கின்றன. இதிலே நல்ல படங்களை தேர்ந்தெடுத்து ஸ்கூல் பிலிம் லைப்ரரியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

*Pay of teachers*

* 86 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is a fact that the Union Government would bear 50 per cent of the cost of increased pay of the teachers as a result of the acceptance of the Pay Commission's recommendations?

THE HON. SRI C. SUBRAMANIAM : We addressed the Government of India to extend assistance towards at least 50 per cent of the additional cost to the Madras Government consequent on the implementation of the proposals of the Madras Pay Commission for the revision of salaries of elementary and secondary school teachers. The Government of India have regretted their inability to give any extra assistance beyond what is already available during the Second Plan period in the Plan Scheme for the revision of salaries of teachers.

SRI A. A. RASHEED : Sir, May I know the amount of assistance given by the Union Government towards this during the Second Five-Year Plan and whether the Government will reconsider and appeal to the Government of India once again at least to bear 25 per cent of the cost?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question arises only for this year and the next year. After that, it would form the committed expenditure and the Finance Commission would look into it and allot sufficient resources for the expenditure. This is only for a temporary period.

SRI N. MARUDACHALAM : இந்த சம்பள கமிஷன் சிபார்சுப்படி கிராமங்களிலுள்ள பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகளுக்கு இன்னும் சம்பள உயர்வு கொடுக்காததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வேறு சமாசாரம், அது வேறு சமாசாரம்.

* 87 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have passed orders implementing the recommendations of the Pay Commission in respect of teachers working in aided schools in the Kanyakumari district; and

(*b*) if not, the reasons for the delay?



23rd January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Proposals have been called for from the Director of Public Instruction.

*Political prisoners*

* 88 *Q.*—SRI M. KALYANASUNDARAM : will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many persons belonging to the Communist Party are undergoing imprisonment; and

(*b*) whether a statement showing the details of such prisoners, their sentences, the period of sentence already undergone, etc., will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One in Central Jail, Coimbatore, and twelve in Central Jail, Madurai.

(*b*) The hon. Member is referred to the statement [a] placed on the table of the House furnishing the details of the prisoners, their sentences, etc.

SRI M. KALYANASUNDARAM : பெரும்பாலான கைதிகள் 12 வருஷங்களுக்கு மேலாக சிறையில் இருப்பதால் அவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுடைய தண்டனை காலத்திற்கு முன்பு விடுதலை செய்யும் விஷயத்தைப் பற்றி அப்போதைக்கப்போது அரசாங்கம் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : சிறையில் இருக்கும் கைதிகளில் எத்தனை பேர்கள் கொலை, கொள்ளை செய்தவர்கள் இருக்கிறார்கள் ? அப்படி கொலை, கொள்ளை செய்யாத கைதிகளை அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்களை மன்னித்துவிட ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு 'கிரேவ் கிரைம்ஸ்' செய்தவர்களையெல்லாம் தண்டித்து சிறையில் வைத்திருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையின் விவரம் என்னிடம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : மற்ற கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய 'ரெமிஷன்' இவர்களுக்கு கொடுக்கமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரெமிஷன் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI : அவர்கள் சிறைக்கு போவதற்கு முன் இருந்த நிலைமையும் இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையும் வேறு விதமாக இருப்பதனால், இப்பொழுது இருக்கும் அரசியல்

[a] Printed as Appendix I on page 351 infra.

[23rd January 1961

சூழ்நிலைக்குத் தக்கவாறு அந்த விஷயத்தை பரிசீலனை செய்து அவர்களை மன்னித்து விடுதலை செய்ய முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மன்னிப்பது என்பது வேறு விஷயம். அதை நான் மறுக்கவில்லை. அவர்கள் முன்பு இருந்த நிலைமையைச் சொல்லும்போது அவர்களுடைய மனோ பாவம் இப்பொழுது எவ்வாறு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

SRI M. KALYANASUNDARAM : அவர்களின் மனோபாவத்தில் இப்பொழுது எப்படி மாறுதல் இல்லை என்று சொல்ல முடியும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பெரிய குற்றங்கள், சிறிய குற்றங்கள் செய்தவர்களை வித்தியாசம் காட்டாமல் எல்லாவற்றையும் மன்னித்து அவர்களுடைய தண்டனைகாலம் முடிவதற்கு முன் விடுதலை செய்வதற்கு திட்டம் ஒன்றும் கிடையாது.

SRI K. R. NALLASIVAM : அரசியல் கைதிகள் அல்லாதவர்களுக்கு நடவடிக்கையை அனுசரித்து கொடுக்கப்படும் ரெமிஷன் இவர்களுக்கும் கொடுக்கப்படுவதுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி ரெமிஷன் எல்லாம் இவர்களுக்கும் கொடுக்கப்படும்.

SRI A. A. RASHEED : May I know whether these prisoners are given any special class in jails?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : They are treated either as 'B' class or 'C' class prisoners according to their status.

SRI V. K. KOTHANDARAMAN : ஆந்திராவிலிருந்து இது போன்று கன்விக்ஷன் கொடுக்கப்பட்ட கைதிகள் எல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதே போல் நம் ராஜ்யத்திலும் விடுதலை செய்ய ஏன் தயங்க வேண்டும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆந்திரா சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. மேலும் இன்னொரு ராஜ்ய சர்க்கார் என்ன செய்கிறது என்பதை பார்த்து செய்யவேண்டியதில்லை. இந்த அரசாங்கத்திற்கும் கொள்கை, நடவடிக்கை, திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன.

SRI M. KALYANASUNDARAM : அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சமீபத்தில் எப்போது பரிசீலனை செய்யப்பட்டது ? எத்தனை பேர்கள் அவர்கள் விடுதலையாகும் காலத்திற்கு முன்னால் விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள் ?



23rd January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பரிசீலனை செய்யப் படுவதற்கு ஒரு சட்டம் இருப்பதாக, இந்த சமயத்தில்தான் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லவில்லை. அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து, எப்போது அரசாங்கம் முன்னதாக விடுதலை செய்ய வேண்டுமென்று முடிவு செய்கிறார்களோ அப்போது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும் என்றுதான் சொன்னேன். ஆகவே, தவறான கருத்து கொள்ளவோ அல்லது தவறான கருத்து தெரிவிப்பதோ சரியல்ல.

*Tamil medium in Colleges*

MR. SPEAKER : அடுத்த கேள்வி "தமிழ் போதனமொழி" என்பது பற்றியது. அதற்கு அடுத்த மூன்று கேள்விகளும் அதைப்பற்றித்தான். ஆகவே இந்த நான்கு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

SRI K. VINAYAKAM : Sir, the questions may be on the same subject but they are on different aspects of the subject. If all the questions are answered together, there would not be many opportunities for those who have put questions to put supplementary questions on different aspects. So, please take them individually.

MR. SPEAKER : I have no objection.

* 89 *Q*.—SRI K. R. NALLASIVAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வருடம் எத்தனை கல்லூரிகளில் தமிழ் போதனமொழி ஆக்கப்பட்டுள்ளது ?

(இ) இக்கல்லூரிகளில் படிப்போரின் தொகை என்ன ?

(உ) இன்னும் எத்தனை வருடங்களில் ராஜ்யத்திலுள்ள எல்லா கல்லூரிகளிலும் தமிழ் போதனமொழியாகும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Tamil has been made the medium of instruction only in the first year of the B.A. decree course in the Government Arts College, Coimbatore.

(*b*) Nine hundred and sixteen of whom 100 are receiving instruction in the Tamil medium.

(*c*) Tamil is to be made the medium of instruction in the three year B.A. degree courses in all the colleges in the State from 1963-64 according to the present programme.

SRI A. VEDARATHNAM : தமிழை போதனமொழியாக்க வேண்டுமென்று எத்தனை கல்லூரிகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ? அவற்றில் எவை எவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : அதுதான் சொன்னேன், நான்கு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாமென்று. இது மூன்றாவது கேள்வியில் வருகிறது. இதில் வரவில்லை.

[23rd January 1961

SRI K. VINAYAKAM: May I know what the experience of this Government is after the introduction of Tamil as the medium of instruction in that college? Is the standard maintained properly or is it deteriorating?

THE HON. SRI C. SUBRAMANIAM: This is being implemented only from this year and only two terms have expired. The general experience is quite encouraging.

**SRI V. K. KRISHNAMURTHY:** தலைவர் அவர்களே, தமிழ் நூல்கள் இல்லை என்ற காரணத்தால் காலம்தள்ளி இருந்தது போய் தகுதியான நூல்கள் அத்தனையும் விளங்குகிறபோது ஏன் அண்மையில் இந்த ஆண்டிலேயே எல்லா கல்லூரிகளிலும் தமிழை போதனமொழியாக வைக்கக் கூடாது ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்பொழுது முதல் ஆண்டுக்கு வேண்டிய எல்லா புத்தகங்களும் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளே புத்தகங்கள் தயாரிக்கவேண்டும். முதலில் இவை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு ஒரு கல்லூரியில் முதலில் செய்ய ஆரம்பித்து பின்னால் மற்ற கல்லூரிகளில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று அந்த முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் செய்து கொண்டு வருகிறோம். இன்னும் சில கல்லூரிகளில் அடுத்த வருடத்திலிருந்து தமிழில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்கிற ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED: Will the Government await the results of this experiment before introducing it in other colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM: As far as this Government are concerned, it is not introducing Tamil medium in any other college but it cannot stand in the way of private-managed colleges coming forward to introduce Tamil.

* 90 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether any application has been received from private colleges for funds for the introduction of Tamil Medium?

THE HON. SRI C. SUBRAMANIAM: No private college has applied to Government for the assistance for the introduction of Tamil medium. However, the College Tamil Committee has made representations to Government requesting financial assistance to private colleges which come forward to introduce Tamil medium. This is under the consideration of Government.

**SRI A. VEDARATHNAM:** தமிழை போதனமொழியாக்குவதற்கு கல்லூரிகளுக்கு ஏதாவது தனி சலுகை இருக்கிறதா? அப்படியானால் ஆண்டுதோறும் அதற்கு என்ன செலவாகிறது? அதற்கு அரசாங்கம் எவ்வளவு உதவி கொடுக்கமுடியும்?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இதை விட அதிகமாக செலவாகக் கூடியதில்லை. ஆனால் அதில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு சில சலுகைகள் கோவை கல்லூரியில் கொடுக்கப்



23rd January 1961]

பட்டிருக்கிறது. அதே சலுகைகளை மாணவர்கள் கேட்டால் மற்ற கல்லூரிகளிலும் கொடுக்க வேண்டுமென்று ஒரு சிபார்சு வந்திருக்கிறது. அது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: Is it a fact that the students taking to this kind of course are being offered extra incentives in the form of financial assistance so as to give them a bait to take to this kind of course when compared to other students studying in the English medium?

THE HON. SRI C. SUBRAMANIAM: This was introduced only in one college. So, the persons residing in other districts if they desire to go to the Coimbatore district, have to incur additional expenditure and because of that, special assistance has been offered to them.

**SRI N. K. PALANISAMI:** தமிழ்க் கல்லூரிகளில் படித்துவிட்டு தொழில் கல்லூரியில் சேரக்கூடிய மாணவர்களுக்கும், ஆங்கிலக் கல்லூரியில் படித்துவிட்டு தொழில் கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கும் தரத்தில் வித்தியாசம் இருக்கிற காரணத்தால் தமிழ் கல்லூரியில் படித்து தொழில் கல்லூரியில் சேரக்கூடிய மாணவர்களுக்கு வேண்டிய சலுகை கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இது பி.ஏ.-க்கு. பி.ஏ. வகுப்பில் ஹிஸ்டரி, ஜாக்ரபி இதுபோன்ற பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இவர்கள் என்ஜினியரிங் காலேஜில் சேர முடியாது.

**SRI A. VEDARATHNAM:** தமிழ் போதன மொழியாக உள்ள கல்லூரிகளில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிற மாணவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்பதை தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அதுதான் சொன்னேன், வெளி ஜில்லாக்களிலிருந்து கோவை வந்து சேருகிறவர்களுக்கு ஹாஸ்டல் செலவிற்காக சில வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. ஸ்காலர்ஷிப் சில மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

SRI A. A. RASHEED: What is the amount spent on each student in this college?

THE HON. SRI C. SUBRAMANIAM: It does not arise out of the main question and I do not have the figures.

SRI K. VINAYAKAM: What is the scope of employment for graduates who took Tamil medium and will they not be deprived of employment outside this State after their graduation?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think that is the correct intrepretation. After all, they maintain the standard

[23rd January 1961

of English also and I am told that there is absolutely no deterioration in the standard of English particularly because of the Special steps that have been taken for the purpose of keeping up the standard of English.

SRI K. R. NALLASIVAM : தமிழ் மீடியம் எடுத்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் விசேஷ பயிற்சி கொடுப்பதற்கு அட்டவணையில் நேரம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழில் வேறு பாடங்கள் படிக்கும்போது ஆங்கிலத்தில் படிப்பதைவிட சுலபமாக அதைக் கற்றுக்கொள்ள முடிகிறது. ஆகவே ஆங்கிலத்திற்கு கொஞ்சம் அதிகமான நேரம் ஒதுக்கப்பட்டு ஆசிரியர் எண்ணிக்கையில் ஓரளவு அதிகம் கொடுத்து அவர்களுக்கு ஆங்கிலத்தில் போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* 91 Q.--SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the names of Colleges which have offered to shift to Tamil Medium; and

(b) whether they have written to the Government on the subject and if so, when and on what conditions?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) P.S.G. Arts College, Coimbatore; Nallamuthu Gounder Mahalingam College, Pollachi A.V.C. College, Mayuram; Sarah Tucker College, Palayamkottai, and Sri Avinashilingam Home Science College, Coimbatore, have offered to shift to Tamil medium in respect of certain courses in humanities of B.A. Degree. They have asked the Government to extend certain concessions in regard to fee remission, stipends, library grant, teaching grant, etc. The question of granting financial assistance in this respect is under consideration.

SRI K. VINAYAKAM : May I know whether they are all private colleges? Is it not a fact that Government have said that they will not give grants to some colleges if they did not switch on to Tamil medium after a time-limit?

THE HON. SRI C. SUBRAMANIAM : These are all private colleges. The question is with reference to 1962–63. That question does not arise out of this.

SRI A. VEDARATHNAM : தமிழ் மீடியம் வேண்டுமென்று வேறு ஏதாவது கல்லூரிகள் கோரிக்கை தந்தனவா அல்லது இந்த கல்லூரிகள் மட்டும்தான் கோரிக்கைகள் தந்தனவா என்பதை தயவுசெய்து அறிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த கல்லூரிகள் மட்டும்தான் விண்ணப்பித்துக் கொண்டன.



23rd January 1961]

* 92 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received a copy of the resolution passed by the Madras State Education Conference held recently at Madurai that the results of the pilot project of introducing Tamil as medium of instruction in Colleges should be carefully reviewed before it is extended to other colleges and to other subjects; and

(b) if so, the decision taken thereon by the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The Government have taken decisions already after careful consideration of the matter in all its aspects. The views expressed in the Resolution have, however, been noted.

SRI A. A. RASHEED : May I know whether the Hon. Finance Minister has given any assurance to this Conference that he would abide by the decision of this Conference? If so, will the Government reconsider the matter and act according to the Resolution?

THE HON. SRI C. SUBRAMANIAM : They have said that this should be carefully reviewed. That will have to be carefully reviewed. I also agree.

MR. SPEAKER : The Hon. Minister for Industries is present now. So we may now take up question No. 84 which we passed over.

### *Labour disputes*

* 84 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to refer all the labour disputes either in the public sector or in private sector to arbitration compulsorily; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

### *National Highways*

* 93 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have any proposal to take over the National Highways within the limits of the Madras City from the control of the Corporation of Madras?

THE HON. SRI P. KAKKAN : No, Sir. The State Government have, however, addressed the Government of India to include the National Highway road links within Madras City in the list of such road links within the municipal limits in Madras State for the development and maintenance of which the Government of India will be accepting financial liability.

SRI A. A. RASHEED: May I know the total aid given to the Corporation of Madras for maintenance of these national highways in Madras City?

THE HON. SRI P. KAKKAN: We are giving Rs. 32,000 per year for maintaining Mount Road and Poonamallee High Road.

**SRI K. VINAYAKAM:** மௌண்ட் ரோட், பூந்தமல்லி ஹை ரோட் போன்ற ரோடுகளில் போக்குவரத்து இருப்பது போலவே கோடம்பாக்கம் ரோட்டிலும் அதாவது ஆற்காடு ரோட்டிலும் போக்குவரத்து அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த ரோடும் பூந்தமல்லி ஹைரோட்டில்தான் வந்து சேருகிறது. ஆகவே அதையும் அரசாங்கம் ஏன் ஹைவேஸ் ரோட்டின் கீழ் எடுத்துக்கொள்ளவில்லை?

**THE HON. SRI P. KAKKAN:** இருபதினாயிரம் ஜனத்தொகைக்கு குறைவாக இருக்கின்ற இடத்திலுள்ள ரோடுகளை சாதாரணமாக National ஹைவேஸ்-இல் எடுத்துக்கொள்வதில்லை. சென்னை நகரத்தைப் பொறுத்தவரை இன்னும் சில ரோடுகளை ஹைவேஸில் எடுத்துக்கொள்வதற்காக இந்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that these roads are so badly damaged that they cannot be repaired with an aid of Rs. 32,000? As such will the Government consider the matter, take over these roads, repair them and then hand them over to the Corporation of Madras?

THE HON. SRI P. KAKKAN: For that, this year also we have given lakhs of rupees for repairing these roads. Ex-gratia and ad hoc grants are also given to the municipalities.

SRI K. VINAYAKAM: Is it not a fact that the Queen of England is contemplating to visit the studios in Kodambakam . .

MR. SPEAKER: How does that question arise out of this?

SRI K. VINAYAKAM: I am linking it up.

MR. SPEAKER: No, anybody may pass. This Assembly is not concerned with that. The question is out of order.

**SRI S. M. ANNAMALAI:** ரோடு வேலைகளுக்காக அதிகமான அளவில் பணம் ஒதுக்கவேண்டுமென்று கார்ப்பரேஷனிடமிருந்து சர்க்காருக்கு விண்ணப்பம் வந்ததா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: I do not have the information. The hon. Member may put a separate question.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** முதலில் கொடுத்த பணத்தையே உபயோகிக்கவில்லையே, அதற்கு முன்பாகவே கூடுதலாக பணம் வேண்டுமென்று கேட்பது தவறானது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



**SRI V. SUBBIAH:** பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள் இவைகளுக்கு மூன்று மைல்களுக்கு உட்பட்ட ரோடுகள்தான் வேலைக்காக கொடுக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக பல மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோடுகளோடு அதர் டிஸ்ட்ரிக்ட் ரோடுகளையும் (ஓ.டி.ஆர்.) ஹைவேஸைச் சேர்க்கவேண்டும் என்று பிளானிங் போர்டு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது . . . . . . அதன் பேரில் . . . . . . . . .

**MR. SPEAKER:** இந்தக் கேள்வி சென்னை நகரத்திலுள்ள ரோடுகளைப்பற்றி. நீங்கள் கேட்கும் விபரங்களுக்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

**SRI M. KALYANASUNDARAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, சென்னை கார்ப்பரேஷனுக்கு முதலில் கொடுத்த பணத்தையே இன்னும் உபயோகப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதற்கான பணம் எப்போது ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கப்பட்ட பணத்தை சரியான சமயத்தில் ஏன் செலவு செய்யமுடியவில்லை என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா, அதன் விவரங்கள் என்ன?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** சர்க்கார் ஆராய்ந்தது, இந்த விவரங்களையெல்லாம் சொல்லவேண்டுமானால் தனிக்கேள்வி போட வேண்டும்.

**SRI S. M. ANNAMALAI:** ஸார், கனம் நிதி அமைச்சர் அவர்கள், கார்ப்பரேஷனுக்கு கொடுத்த பணத்தை சரியானபடி உபயோகிக்கவில்லை என்று . . . . . . (கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம்: சரியானபடி என்றல்ல) தெரிவித்தார்கள். இந்தப் பணத்தைக் கொடுக்க என்னென்ன கண்டிஷன்கள் கொடுத்தார்கள், சீப்-என்ஜினியரிடமிருந்து அனுமதி கிடைத்த பின்னால்தான் பணம் ஒதுக்க முடியும் என்றெல்லாம் உத்தரவு இருக்கிறதே, இவற்றையெல்லாம் நீக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இது இப்போது புதிதாக போடப்பட்டிருக்கும் உத்தரவு அல்ல. எல்லா இடங்களிலுமே வேலை செய்ததன் பின்னால்தான் கிராண்ட் கொடுக்கப்படும். அதற்கு முன்பாகவே வேஸ் அண்ட் மீன்ஸ் வகையில் உதவி செய்ய வேண்டுமென்றால் அதற்கும் உதவி செய்வதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதல்லாமல் வேலை செய்வதற்கு முன்னாலேயே கிராண்ட் கொடுக்கவேண்டுமென்று சொல்வது முடியாத காரியம்.

*Sattur Block*

***94 *Q.*—SRI N. R. THIAGARAJAN:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் ஜில்லா, சாத்தூர் பிளாக் ஆபீசை மத்தியப் பகுதியான ஏழாயிரம் பண்ணைக்கு மாற்ற உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Elayirampannai village lies in the Vembakottai Block, which has been newly brought into existence. The question does not, therefore, arise.

*Block Development*

* 95 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— நமது ராஜ்யத்தில் உள்ள எல்லா பிளாக்குகளிலும் 1959 எப்ரல் 1-ம் தேதி முதல் 1960 மார்ச் முடிய செலவான தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total expenditure was—

| | | RS. |
|---|---|---|
| Non-Loan | ... ... ... ... ... | 2,59,06,810 |
| Loan | ... ... ... ... ... | 1,21,84,488 |
| Total | ... | 3,80,91,298 |

SRI N. R. THIAGARAJAN : பிளாக்குகளில் பணம் செலவு ஆனதில் சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறதே இதற்கு காரணம் என்ன? சில பிளாக்குகளில் ஒதுக்கப்பட்ட பணத்திற்குமேல் செலவாகியிருக்கிறது, சில பிளாக்குகளில் ஒதுக்கப்பட்ட பணத்தில் குறைவாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக எங்கள் ஆண்டிவட்டம் பிளாக்கில் 12 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தும் 2 லட்சம் ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள். இவ்விதம் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பொதுவான ஒரு கேள்வி. தனிப்பட்ட ஒவ்வொரு இடத்தைப்பற்றியும் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

*Discourses on Ramayana and Mahabaratha*

* 96 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத்திட்டப் பகுதிகளில் இராமாயணத்திலும், மகா பாரதத்திலும் நன்றாக உபந்நியாசம் செய்பவர்களுக்கு உதவி செய்யும்படி சமஸ்கிருத கமிஷன் சிபார்சு செய்துள்ளதா?

(இ) அப்படியானல், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) and (இ) The Sanskrit Commission had recommended the employment of the exponents of Ramayana, Mahabaratha, etc., in the Blocks with a view to inculcate among the masses, the proper ideals of conduct and character. Reports on the recommendation have been called for from the Collectors of the districts and they are awaited.



SRI S. M. ANNAMALAI : ஸார், ஜாதி மத பேதமற்ற சர்க்கார் என்று சொல்லப்படும் ஒரு சர்க்கார், ஒரு மதத்திற்கு என்று மட்டும் இருக்கின்ற இம்மாதிரிப்பட்ட காரியங்களுக்கு உதவி செய்வதற்கு முன் வரலாமா? அப்படியானல் இதே போன்று மற்ற எல்லா மதத்தினருக்கும் உதவி செய்ய சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகள்பற்றி சொல்வது மதத்தை போதிப்பதற்காக அல்ல, ஒழுக்கத்தைப்பற்றியுள்ள எண்ணத்தைப் பரப்புவதற்குத்தான்.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, தமிழர்களுடைய நாகரீமும், மறுமலர்ச்சியும் கம்பராமாயணத்தில்தான் இருக்கின்ற காரணத்தினல், இது போன்ற உபந்நியாசங்களை நடத்த வலியுறுத்தவேண்டும் என்பதோடு மட்டுமல்ல, பெரிய புராணத்தையும் இதில் சேர்க்கவேண்டும் என்று சர்க்கார் ஆலோசனை கூறுமா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அண்ணுமலை நீங்கள் பதில் சொல்லுகிறீர்களா?

*Office of the Inspector-General of Prisons*

* 97 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the rent per month paid to the Krishna Vilas, Vepery, Madras, wherein the office of the Inspector-General of Prisons is located; and

(b) the basis on which the rent was fixed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Rs. 1,125;

(b) The fair rent was fixed by the Third Assistant Judge of the City Civil Court in accordance with the provisions of section 4 of Madras Buildings (Lease and Rent Control) Act (Act XXV of 1949).

SRI M. KALYANASUNDARAM : ஸார், இதற்கு முன்பு இந்த அலுவலகம் எந்த இடத்தில் இருந்தது? இப்போது இந்தப் புதிய கட்டிடத்திற்கு மாற்றவேண்டிய காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பு ஃபஸ்ட் லைன் பீச்சிலுள்ள கட்டிடத்தில் நம்பர் 2 நார்த் பீச் போலீஸ் ஸ்டேஷனும், ஃபஸ்ட் ஃப்ளோரில் இந்த அலுவலகமும் இருந்தது. அதில் ஒன்பது பேர் (ப்ரொபேஷனர்ஸ்) இருந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. அவர்களுக்கு அங்கு இட வசதி குறைவாக இருந்ததினல், அவர்கள் தனித் தனி வீடுகளில் தங்கள் அலுவலகத்தை வைத்துக்கொள்ளவேண்டியிருந்தது. இதற்காக வாடகை வகையில் 1,620 ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. அதோடு சரியான முறையில் வேலை செய்வதற்கும் வசதியில்லாமல் இருந்தது. மேலும் ரயில் டிராபிக் போன்ற நெருக்கடியிலும்

[23rd January 1961

பல கஷ்டங்கள் இருந்தன. ஆகவே இன்ஸ்பெக்டர் ஜெனரல் பத்தாயிரம் சதுர அடி இடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பின்னால் இதை எடுத்துக்கொண்டோம்.

9-00 a.m. **Sri M. KALYANASUNDARAM** : இந்த இடத்தில் பட்டிப் புல்ல அலுவலகம் போதாமல் இருப்பது. மவுண்ட்ரோடு போன்ற பெரிய இடம் இருக்கிறது. அதற்குத் தனியாக வாடகை கொடுக்கப் பட்டு வருகிறது என்று அறிகிறேன். மலபார், ஆந்திரா எல்லாம் சேர்ந்து இருந்த காலத்தில் இவ்விடத்திலேயே ஆபீஸ் நடந்திருக் கிறது. ராஜமகேந்திரம், கன்னனூர் முதலிய இடம் எல்லாம் பிரிந்த பிறகும் போதவில்லை என்று சொல்வதற்குக் காரணம் என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்த ராஜ்யம் பிரிந்த பிறகு இருந்த நிலைமையைத்தான் விளக்கினேன். ஒன்பது ப்ரொபேஷனர் ஆபீசர்கள் தங்க இடம் இல்லாமல் தங்கள் தங்கள் விடுகளிலேயே காரியாலயத்தை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது, இடம் போதவில்லை என்ற காரணத்திற் காகத்தான் மாற்றவேண்டியிருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, will the Government consider the question of having their own building to locate this office?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That would depend on the finance available for incurring the necessary expenditure.

*"Katcha Theevu"*

*98 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have received any report from the Fisheries Department, regarding the Ceylon Police threatening the inhabitants of 'Katcha Theevu' near Rameswaram; and

(*b*) if so, whether the Government will place the report on the table of the House.

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) a statement[a] is laid on the table of the House.

(*b*) The Government do not consider it necessary to place the reports received by them on the table of the House.

**Sri N. K. PALANISAMI** ; சிலோன் போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைபற்றி இந்திய சர்க்கார் மூலமாக நம் சர்க்கார் ஏதாவது குறிப்பு அனுப்பினார்களா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? மீனவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் மறுபடியும் ஏற்படாதிருக்க என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதற்கான நடவடிக்கைகள் மத்திய சர்க்கார் மூலமாகவே எடுக்கப்படுகிறது. இதிலே கச்சா தீவு யாருக்குச் சொந்தம் என்பதில் சிறிது சந்தேகம் ஏற்பட்டு

a Printed as Appendix II on pages 351-352 infra.



23rd January 1961]

தகராறு வந்ததாகத் தெரிகிறது. இது மத்திய சர்க்காருக்கும், சிலோன் சர்க்காருக்கும் உள்ள தொடர்பைப் பற்றியது. இதைப் பற்றி மற்றபடி விரிவாகச் சொல்வதற்கு இல்லை.

**Sri M. KALYANASUNDARAM** : கச்சா தீவு யாருக்குச் சொந்தம் என்பது இப்போதாவது தெளிவுப்படுத்தப்பட்டதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நமக்குத்தான் சொந்தம் என்று நினைக்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : இப்போது சிலோனிலே, இந்தியாவுக்கும் சிலோனுக்கும் உள்ள நல்லுறவை வளர்க்க வேண்டும் என்று விரும்புகிற சர்க்கார் அமைந்திருக்கிற காரணத் தினால் இந்தப் பிரச்சனையை சுமுகமாகத் தீர்க்க மத்திய சர்க்கார் மூலம் நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எல்லாப் பிரச்சனைகளையும் சுமுகமாகத் தீர்க்கப் போவதாக இலங்கைப் பிரதமர் சொன்னதாக பத்திரிகையில் பார்த்தேன். முக்கியப் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்படும்போது இந்தச் சிறு பிரச்சனையும் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.

*Overhead tank (Nariyambattu)*

*99 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for the delay in constructing an overhead tank at Nariyambattu Panchayat, North Arcot?

The Hon. Sri C. SUBRAMANIAM : The work could not be commenced immediately after the inclusion of the work in the Local Development Works Programme as there was no suitable source of water-supply. The construction of a new well was therefore taken up and completed by March 1960. The estimate for the construction of the overhead tank is under scrutiny by the Sanitary Engineer, Madras. The construction of the overhead tank will be taken up after technical sanction to the estimates is accorded by the Sanitary Engineer.

Sri A. A. RASHEED : Sir, is the Hon. the Minister aware that the foundation stone was laid by the Hon. the Chief Minister in January 1960 and now the technical sanction also has been granted? Will the Government expedite the construction of the overhead tank?

The Hon. Sri C. SUBRAMANIAM : That is what I said. The technical sanction of the Sanitary Engineer is awaited. As soon as the technical sanction is given, the work will be taken up.

*Roads (Thanjavur)*

*100 Q.—Sri R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the extent of each taluk in Thanjavur district and the population of each taluk;

[23rd January 1961

(b) the length separately of Central Roads (National Highways) State Highways, Major District Board Roads, other District Board Roads in each taluk; and

(c) how many miles of roads have been newly laid during the Second Five-Year Plan and how many miles of these roads have been (i) metalled with white concur or screened gravel, (ii) metalled with granite metal, (iii) blacktopped newly during the Second Plan period so far in each taluk?

THE HON. SRI P. KAKKAN : The information [a] is laid on the table of the House.

SRI N. R. THIAGARAJAN : ஸார், சில தாலூக்காக்களில் விஸ்தீரணம் அதிகமாக இருக்கிறது. ரோடுகள் குறைவாக இருக்கிறது. சில தாலூக்காக்களில் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. ரோடுகள் குறைவாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டும் அல்லாமல் நம் ராஜ்யத்திலே விஸ்தீரணம் அதிகமாகவும், ரோடுகள் குறைவாகவும் உள்ள இடங்களில் மட்டும் புதிதாக ரோடுகள் போடவேண்டுமென்று திட்டவட்டமாக உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தஞ்சை ஜில்லாவில் ரோடு போடுவது என்றால் பல கஷ்டம். எல்லாம் விளைவு நிலங்கள் ஒரு நிலத்தை எடுப்பது என்றால் ஆயிரம் தகராறு. ஆகவே எவ்வளவு தூரம் சாத்தியமோ அவ்வளவு தூரம் ரோடுகள் அமைக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்கிறது. மற்ற விஷயங்களிலும் அக்கறை எடுத்துக்கொள்ளும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் ஸ்ரீ என். ஆர். தியாகராஜனுக்கு ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா கிராமங்களையும் முக்கிய ரோட்டோடு கொண்டுவந்து சேர்க்கக்கூடிய ரோடுகளை தாலூக்கா வாரியாக எல்லா இடங்களிலும் செய்யவேண்டியது அவசியம். அது கவனிக்கப்படுகிறது. மற்ற ரோடுகளை தாலூக்கா வாரியாக எல்லா இடங்களிலும் அவசியம் இல்லை. எங்கு அவசியமோ அங்கு பெரிய ரோடு போடவேண்டுமென்பதுதான் சர்க்காரின் யோசனை.

SRI A. VEDARATHNAM : இந்த ஜில்லாவில் ஒரு தேசீய நெடுஞ்சாலை கூடக் கிடையாது. பம்பாயில் இருந்து கன்யாகுமரி வரையில் செல்கிற நெடுஞ்சாலை இருக்கிறது. அதுபோல கல்கத்தாவில் இருந்து கன்னியாகுமரி வரையில் செல்கிற நெடுஞ்சாலையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு வற்புறுத்துவார்களா ? அப்படியானால் எப்போது எடுத்துக் கொள்ளப் படும் ? இப்போது இருக்கிற அந்தச் சாலை சிலவிடங்களில் இன்னும் கப்பி போடப்படாமல், சில பாலங்கள் கூடக் கட்டப்படாமல் இருக்கிறது. அவற்றை எல்லாம் நம் மாநில சர்க்கார் எப்போது செப்பனிடுவதற்கு எடுத்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[a] Printed as Appendix III on page 352-353 infra.



23rd January 1961]

THE HON. SRI P. KAKKAN : தேசீயப் பெருஞ்சாலை உண்டாக்க வேண்டுமானால் 100 அடி அகலம் வேண்டும். நடுவில் 50 அடி, இரு ஓரங்களிலும் 25, 25 அடி வேண்டும். அதற்கு லாயக்காக இருக்கிற ரோடுகளை தேசீயப் பெருஞ்சாலையாக ஆக்க இந்தச் சர்க்கார் முன்வரும். கனம் அங்கத்தினர் சொன்ன பிரச்சனையும் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, even though the District Boards have made representations to the Government to take up the roads on which buses are running, still the Government have not come forward to take them up. May I know what is the reason for it?

THE HON. SRI P. KAKKAN : After considering all facts, the Government are going to take one by one as State Highways Roads.

SRI M. K. SOMASUNDARAM : சர்க்கார் முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டிய ரோடுகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட லோகல் டெவலப்மெண்டு திட்டப்படி போடப்பட்ட ரோடுகள் அழியக்கூடிய முறையில் இருக்கின்றன. அதையாவது முதலில் எடுத்துக்கொள்ள முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே லோகல் டெவலப்மெண்டு, கிராம அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் முதலியவற்றின் மூலம் போடப்பட்ட ரோடுகளை சரி செய்வதற்காக 10 லட்சம் ரூபாய் இந்த வருஷம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

*Subramania Siva*

* 101 Q.—SRI A. VEDARATHNAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப்பட்டியில் காலம் சென்ற தேசபக்தர் சுப்ரமணிய சிவா அவர்களின் ஞாபகச் சின்னம் ஏற்படுத்தவேண்டுமென்று அவ்வூர் வாசிகள் கோரிக்கை அனுப்பி இருக்கிறார்களா ?

(இ) அப்படியானால், அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) சுப்ரமணிய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் நிறுவுவது குறித்துப் பாப்பாரப்பட்டிப் பகுதி மக்களிடமிருந்து, அண்மையில் கோரிக்கை ஏதும் வரவில்லை.

(இ) 1957-ம் ஆண்டில், சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டி, சிவாவுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசாங்கம் உத்தேசித்திருந்தது. பாப்பாரப்பட்டியில் புதிதாகத்

திறக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளி சிவாவின் ஞாபகார்த்தமாகப் பெயரிடப்பட்டது. அதன் பேரில் வேறு நினைவுச் சின்னம் அமைக்கும் யோசனை மேற்கொள்ளப்படவில்லை.

**SRI T. L. SASIVARNA THEVAR**: ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. திருப்பூர் குமரன் இவர்களுடைய ஞாபகார்த்தமான கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது?

**MR. SPEAKER**: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**SRI A. VEDARATHNAM**: பாப்பாரப்பட்டியில் அவர் பேரால் நிறுவ இருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தில் அவருடைய ஞாபகச் சின்னமாக உருவச் சிலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா? அதைப்பற்றி யோசிக்குமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: அரசாங்கம் ஒன்றும் அது மாதிரி செய்வதாக இல்லை. தனிப்பட்டவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் அதற்கு என்ன உதவி அளிப்பது என்பது பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

MR. SPEAKER: Questions Nos. 102 and 103 may be taken up together as they relate to the same subject.

### *Talavadi firka*

* 102 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state whether this Government have received any communication from the Chairman, Zonal Council, regarding the merger of the Talavadi firka of Madras State with the Mysore State?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

* 103 *Q.*—**SRI S. M. ANNAMALAI**: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தளவாடிப் பிர்க்காவை மைசூர் மாநிலத்துடன் சேர்க்கக் கோரி மகசர் வந்ததா?

(இ) அப்படியாயின், அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government did not consider it necessary to take any action in the matter.

**SRI N. K. PALANISAMI**: அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மைசூர் ராஜ்யத்துடன் சேரவேண்டும் என்று வரி கொடா இயக்கம் நடத்துவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி



அவர்களுக்கு மைசூர் ராஜ்யத்துடன் சேரவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? நமது சர்க்கார் அங்கே போதுமான அபிவிருத்தி வேலைகளைச் செய்யத் தவறி விட்டார்கள் என்ற காரணத்தினாலா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: எதனாலே கிளர்ச்சி ஏற்படுகிறது என்றால் சிலர் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிடுவதையே தொழிலாக வைத்துக்கொள்கிறார்கள். கிளர்ச்சியை உண்டு பண்ணி அதனால் தாங்கள் வருவாய் பெறமுடியும் என்று நினைக்கிறார்கள். வேறு விதமான சில குறைகளும் இருக்கலாம். குறைகள் எல்லா இடத்திலும்தான் இருக்கின்றன. ஆனால் அது மலைப்பகுதியாக இருக்கிற காரணத்தினால் முக்கியமாக உள்ள குறைகளைத் தீர்ப்பதற்கு சர்க்கார் திட்டம் தீட்டி பல வேலைகள் அங்கே இப்போது நடக்கின்றன.

**SRI M. KALYANASUNDARAM**: இந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய பெரும்பாலான மக்கள் என்ன மொழி பேசுகின்றார்கள்? அவர்களை கிளர்ச்சி செய்யும்படி யாரோ தூண்டிவிடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கிளர்ச்சிக்காரர்களின் வலையில் அவர்கள் சிக்காமல் இருப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கிளர்ச்சிக்காரர்களின் வலையில் இருந்து மக்களை சர்க்கார் மீட்கவேண்டும் என்பதே இல்லை. கிளர்ச்சிக்காரர்களின் ஏமாற்றத்தை அவர்களே உணர்ந்து கொண்டார்கள் என்றால் தானே விலகி விடுவார்கள். சர்க்காரைப் பொறுத்த வரையில் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்துவது போல இங்கும் ஏற்படுத்தும். அதற்கு மேலே செய்ய முடியாது. நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் நம்முடைய மாநிலத்திலே எந்த எல்லையை மாற்றி அமைக்கவேண்டும் என்ற பிரச்சனையையும் இந்தத் தலைமுறையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது இந்தச் சர்க்காரின் கருத்து. பின்னாலே என்ன ஏற்படும் என்று சொல்ல முடியாது.

**SRI P. G. MANICKAM**: சில மாதங்களுக்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் தளவாடி பிர்க்காவிற்கு நேரில் விஜயம் செய்து மக்கள் குறைகளை அறிந்துகொண்டதால் இப்போது நல்ல காரியங்கள் நடைபெறுவதால், இப்போது 100-க்கு 80 பேர்கள் சர்க்கார் மீது நம்பிக்கைக் கொண்டு மைசூர் ராஜ்யத்தோடு சேர வேண்டாமென்று சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்களே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: எந்தக் கிளர்ச்சிக்கும் 100 அல்லது 200 பேர்கள் இருந்தால்போதும். அதை ஒரு பெரிய கிளர்ச்சியாகக் காண்பித்து விடலாம். இந்தக் கிளர்ச்சியை மக்கள் கிளர்ச்சியாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

[23rd January 1961

MR. SPEAKER: The Hon. Minister for Revenue is not here now and so question No. 104 will be taken up later.

*Teaching grants*

* 105 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government are aware of the fact that teaching grant bills for the aided schools in North Arcot district are being sent only in the third week of the next month instead of the first week?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

The grants due for a month is payable on or before the 15th of the succeeding month. There was a short delay of seven days in the office of the District Educational Officer, Vellore, in sending the grant due for July 1960 and it was due to the fact that the offices of the department were pre-occupied in connection with the school improvement conference held at Vellore in August 1960. In respect of Tiruvannamalai Education district there was no such delay.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that the teaching grant for December 1960 has not yet been received in Ambur, Vaniyambadi and other towns and municipalities and so, will the Government take action for its quick disbursement?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think that it is still pending payment. As a matter of fact, I have passed orders just now that the amount should be paid by the first of every month and that is being implemented in all the districts.

SRI K. VINAYAKAM: Is the Hon. Minister aware that recently the Department have issued instructions to the schools concerned that the monthly returns should be submitted by 20th of this month itself and they should be finalised by the 25th instant and the amount paid to the institutions on the 1st of next month itself?

THE HON. SRI C. SUBRAMANIAM: That is what I have just informed the House. Hereafter grants will be paid by the first of every month.

MR. SPEAKER: Now the Hon. Minister for Revenue has come and I shall take up question No. 104.

*Integration of Ambur and Vaniyambadi*

* 104 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any proposals from the Collector, North Arcot, for the integration of Ambur with Vaniyambadi to form a separate taluk; and

(*b*) if so, the reason therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.



23rd January 1961]

SRI A. A. RASHEED: May I know whether there is any proposal with the Government for integration?

THE HON. SRI M. A. MANICKAVELU: There is no proposal for integration of Ambur and Vaniyambadi but there is a proposal to bifurcate the Tiruppattur taluk having five firkas as the Tiruppattur taluk and three or four firkas of the Vaniyambadi taluk. This has nothing to do with Ambur.

*Prize bonds*

* 106 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have recommended to the Union Government to announce the list of winners of prize bonds in the newspapers?

THE HON. SRI C. SUBRAMANIAM: This Government have recommended to the Government of India that arrangements might be made to publish the full results of the draw in important national dailies.

SRI A. A. RASHEED: May I know whether the Government have any information regarding the money still uncollected by the winners of Prize Bonds?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have no information.

SRI S. M. ANNAMALAI: ஸார், இந்த பரிசு கொடுப்பது மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று இருந்தது இப்போது ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று மாற்றி அமைத்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைப்பற்றி இந்த சர்க்கார் மாற்ற வேண்டாமென்று மத்திய சர்க்காருக்குச் சொல்லியிருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

SRI K. VINAYAKAM: Sir, are our Government aware of the rumours that are afloat in the State that when prizes are drawn, the bonds for which tickets have not been sold have been included in the draw and there are no claims because those bonds have not been sold. So will the Government take steps to alleviate that fear in the minds of the public?

THE HON. SRI C. SUBRAMANIAM: This is an exclusive matter concerning the Central Government. I am sure they are aware of these rumours and they are competent to take necessary steps in the matter.

*Poems of Bharathi*

* 107 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to popularise the poems of Bharathi?

THE HON. SRI C. SUBRAMANIAM: In 1950, the Government constituted a Committee to advise on editing, printing, publishing and selling poet Bharathi's works. On the recommendation made

by the Committee, the Government ordered in 1952 the printing of the poetical works of Bharathi in two editions, one containing all songs for the use of libraries and another split up into four separate parts. This was meant to serve as a standardised version of the poetical works of Bharathi. In 1955, the Government released to the public the entire copyright of the poems of the late poet so that the private publishers could produce cheap editions adhering to the authorised version.

SRI A. A. RASHEED : May I know whether the Government have taken any steps for the translation of Bharathi's works into other Indian languages?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have not taken any steps but there have been some translations into English and I am sure these poems have been translated into other languages also. I do not have more information about it but the Government have no part in the translation.

SRI A. A. RASHEED : May I know whether the Government have received any letter from an individual in Tiruchirappalli offering to translate these works into Urdu and if so, whether the Government will give any aid to that individual?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have any such information with me just now.

**SRI M. K. SOMASUNDARAM :** ஸார், இந்தக் கமிட்டியில் மொத்தம் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் பெயர்கள் என்ன? அவர்கள் இதுவரையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இதைப்பற்றி முன்பு ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது நான் பெயர்களைக் கொடுத்திருக்கிறேன். எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் என்னவென்றால், பரிசீலனைசெய்து ஒவ்வொரு பாடலிலும் எது சரியான பாடல் என்று கூறி அந்தப் பாடல்களை வெளியாக்கியிருக்கிறார்கள்.

**SRI A. VEDARATHNAM :** பாரதி நூல்களை நம் மாநிலத்திலுள்ள எல்லா பள்ளி நூல் நிலையங்களிலும் வைக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** பாரதி நூல்களுக்கெல்லாம் கூட அரசாங்கம் முயற்சியெடுத்து நூல் நிலையங்களில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னால் தமிழ் மக்களுக்கு பாரதியின் பேரில் உள்ள அக்கறை அவ்வளவுதான் என்று ஏற்படும். சர்க்கார் முயற்சியில்லாமலேயே ஒவ்வொரு நூல் நிலையத்திலும் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.





*Bonuses to the employees*

* 108 *Q.*—SRI A. A. RASHEED : } Will the Hon. the
SRI A. VEDARATHNAM : } Minister for Industries be pleased to state whether there is any proposal to bring in a legislation requiring employers to pay bonuses to the employees in the form of cash and in the shape of National Savings Certificates?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI A. A. RASHEED : May I know the reasons for bringing in such legislation and whether the Government have received any protest from employees?

THE HON. SRI R. VENKATARAMAN : It is in the interest of the working class itself. This matter was discussed at the State Labour Advisory Committee and there was a general opinion in favour of such a proposal.

**SRI J. MATHA GOWDER :** தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கும்போது பாதித் தொகையை ரொக்கமாகவும், பாதித் தொகையை சேமிப்புப் பத்திரமாகவும் கொடுப்பதல்லாமல், அவர்கள் தொழிலில் பங்கு எடுத்துக்கொள்ள முன்வந்தால் அவர்களுக்கு பங்கு கொடுக்கவேண்டுமென்று சட்டம் இயற்ற சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a new suggestion.

*Government Advertisements*

*** 109 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜனசக்தி பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்க சென்னை சர்க்கார் மறுப்பதற்கான காரணமென்ன?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** பத்திரிகைகளில் அரசாங்க விளம்பரங்களைத் தருவதற்கு அப்பத்திரிகையின் தரம், அவற்றில் பிரசுரமாகும் விஷயங்களின் தன்மை, அதன் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை முதலியவை மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. மேற்கூறியவைகளில் பிரதிகளின் விற்பனை எண்ணிக்கை மட்டும் அதிகமாயிருந்து, மற்ற தரங்கள் இல்லாமலிருந்தால் அப்பத்திரிகைகளுக்கு அரசாங்கம் தமது விளம்பரங்களைக் கொடுப்பதில்லை. ஆகவே ஒரு பத்திரிகைக்கு அரசாங்க விளம்பரம் கொடுக்கப்பட வேண்டுமானால், அதன் தரம், பிரசுரிக்கப்படும் விஷயங்களின் தன்மை இவைகளேதான் முக்கியமே தவிர, விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை மட்டும் அதிகமாயிருந்தால் போதாது.

[23rd January 1961

மேலும் கட்சியின் சார்பில் நடத்தப்படும் பத்திரிகைகள் கட்சிக்காரர்களுக்குத்தான் பயன்படுமே தவிர, பொது மக்கள் எல்லோருக்கும் பயன்படாது.

அரசாங்கம், பத்திரிகைகளுக்குத் தமது விளம்பரங்களைக் கொடுப்பதற்கு எவ்விதமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றது என்பது சட்டசபையில் ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கின்றது.

மேற்கூறிய அடிப்படையில் பார்த்தால் ஜனசக்தி பத்திரிகைக்கு அரசாங்கம் ஏன் தமது விளம்பரங்களைக் கொடுக்கவில்லை என்பது நன்கு விளங்கும்.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், காங்கிரஸுக்குச் சொந்தமான, நேற்று ஆரம்பிக்கப்பட்ட நவ சக்தி பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்போது, ஜன சக்தி பத்திரிகை கட்சி சார்பில் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லி, காங்கிரஸ் கட்சி பத்திரிகைக்கு மாத்திரம் கொடுக்கலாமா? எத்தனை பத்திரிகைகளுக்குக் கொடுப்பது என்று வரம்பு கட்டப்பட்டிருக்கின்றதா? எவ்வளவு?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நவ சக்தி காங்கிரஸ் கமிட்டியால் நடத்தப்படும் பத்திரிகை இல்லை. தனிப்பட்டவர்களால்தான் நடத்தப்படுகின்றது. ஆனால், காங்கிரஸ் கொள்கையை ஆதரிப்பதாக இருக்கலாம். அதே நேரத்தில் ஜன சக்தி கம்யூனிஸ்ட் கட்சியினால் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையைப் பரப்புவதற்கே நடத்தப்படுகிறது. ஆகையால்தான் ஜன சக்திக்குக் கொடுக்கப்படவில்லை என்று முன்பே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM :** ஸார், எதிர்க்கட்சிகளால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்க முடியாது என்று தெளிவாக அமைச்சர் அவர்கள் கூறியதை நான் வரவேற்கிறேன். அந்த அளவுக்கு அந்தக் கேள்வி உபயோகப்பட்டதே என்று நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் ஒன்று. விளம்பரங்கள் கொடுப்பதிலே சர்க்காருடைய கொள்கை, அவர்களை ஆதரிக்கும் கட்சிக்கும், ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கும் மட்டும்தான் கொடுப்பதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இன்றைக்கு இருக்கக்கூடிய பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், பல பத்திரிகைகள் அரசாங்கத்தை எதிர்க்கக்கூடிய பத்திரிகைகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கெல்லாம் நாங்கள் கொடுக்காமல் விட்டுவிடவில்லை. தனிப்பட்ட ஒரு கட்சியால் நடத்தக்கூடிய ஒரு பத்திரிகைக்குத்தான் விளம்பரங்கள் கொடுப்பதில்லை என்று சொன்னேனே ஒழிய, சர்க்காரை எதிர்க்கின்ற பத்திரிகைகளுக்கெல்லாம் கொடுக்காமல் விட்டு விடவில்லை என்பதை அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.



23rd January 1961]

**Sri M. KALYANASUNDARAM :** இதற்கு முன்பு இரண்டு முறை சபையிலே வைக்கப்பட்டிருந்த அறிக்கையைப் பார்த்ததிலிருந்து, சர்க்காரை எதிர்க்கின்ற எந்தப் பத்திரிகைக்கும் விளம்பரங்கள் கொடுத்ததாகத் தெரியவில்லை. அது போகட்டும். சர்க்கார் செய்யக்கூடிய சாதனங்களையெல்லாம், அவர்களை ஆதரிக்கின்றவர்கள் மட்டும் தெரிந்து கொண்டால் போதுமா? எதிர்க்கின்ற எதிர்க் கட்சிப் பத்திரிக்கைகளுக்கும் கொடுத்து, அவற்றைப் படிக்கின்றவர்களும் தெரிந்து கொள்ளக் கூடாது என்பது சர்க்காருடைய கொள்கையா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்து, ஒரு பக்கத்திலே விளம்பரத்தையும், இன்னொரு பக்கத்திலே அவ்விளம்பரத்தைக் கண்டிக்கின்ற வகையிலே தலையங்கமும் எழுதினால், அப்போது விளம்பரம் கொடுத்தும் பிரயோஜனம் இல்லாமல் போகும். அது வீணாகத்தான் ஆகும்.

**Sri N. R. THIAGARAJAN :** இந்தியாவின் எல்லையில் 12 ஆயிரம் சதுர மைல் விஸ்தீரணத்தை அபகரித்துக் கொண்ட சீனாவை ஆதரிக்கின்ற "ஜனசக்தி" யைப் பொது மக்கள் யாரும் படிப்பதில்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(பதில் இல்லை.)

**Sri T. L. SASIVARNA THEVAR :** தரத்தைக் கவனித்துத்தான் விளம்பரம் கொடுக்க வேண்டுமென்றால், தரம் என்பது என்ன? எதை வைத்து தரத்தை அளவிடுகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** பத்திரிக்கைகளின் தரம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதை எதை வைத்து அளவிடுகிறோம் என்பதை விளக்க இப்போது கேள்வி நேரத்திலே ஒரு பிரசங்கம் செய்து கொண்டிருக்க முடியாது.

**Sri V. K. KOTHANDARAMAN :** எதிர்க்கட்சிப் பத்திரிக்கைகளுக்கு விளம்பரங்கள் கொடுப்பதில்லை என்று சொல்லக்கூடிய கனம் அமைச்சர் அவர்கள், அதே போன்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் என்ன சலுகை கேட்டாலும் இதுபோன்று கொடுக்க முடியாது என்று அறிவிப்பதுதான் சர்க்காருடைய நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அவ்வாறு இருந்தால் "ஜன சக்தி" பத்திரிகையே வெளி வர முடியாதே. ஜனநாயகத்தின்படி எல்லாப் பத்திரிகைகளுக்கும் பரிபூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டு, சட்டத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு பாது காப்பளிக்கப்பட்டு வருகிறது.

**SRI M. KALYANASUNDARAM :** அமைச்சர் அவர்களின் தயவினால் தான் "ஜன சக்தி" பத்திரிகை வெளிவருகிறது போன்ற தோரணையில் பதிலளித்தார்கள். இப்படி நடக்குமென்று எதிர்பார்த்திருந்தால், இந்தக் கேள்வியையே கேட்க வேண்டாமென்று சொல்லியிருப்பேன். அது இருக்கட்டும். இம்மாதிரி விளம்பரங்களையும் பிரசுரித்து, அதைக் கண்டித்து தலையங்கமும் எழுதினால், அது சங்கடமாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்படி எழுதுவதால், தங்கள் சாதனைகள் எல்லாம் உண்மையல்ல என்பது வெளிப்படும் என்று அந்த அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்து என்ன பயன் என்று கொடுக்காமல் இருக்கின்றார்களா என்று கேட்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** எதையும் திரித்துக் கூறும் வன்மையுள்ளவர்கள் எதிர்க் கட்சியினர் என்பது எனக்குத் தெரியும். உண்மையை மறைத்து, பொய்யை மெய்யெனப்போல் சொல்வர். அதிலும் அந்த வன்மை கம்யூனிஸ்டுகளுக்கு அதிகம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

*Readership in Tamil*

* 110 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any amount has been allocated for instituting a Readership in Tamil in the Delhi University for improvements of its library and a Lectureship in Tamil in the Allahabad University?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : What is the amount given?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** டெல்லிக்கு ரூ. 10,000 கொடுத்திருக்கிறார்கள். அலகாபாத்திற்கு ரூ. 4,000 கொடுக்கப் பட்டு இருக்கிறது. இவ்வாறு ஐந்து வருஷத்திற்கு கொடுப்பதாக இருக்கிறது.

***Loans***

*** 111 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN (on behalf of SRI S. RAMALINGA PADAYACHI):** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட்டார அபிவிருத்திப் பகுதிகளில் லோன் கொடுப்பதற்கு லோன் ஆர்.ஐ. சிபார்சு செய்வதற்குப் பதிலாக, கிராம சேவக்குகள் சிபார்சு செய்யலாமென உத்திரவிட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. Orders have already been issued to this effect.





*Manimuthar Dam*

*** 112 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிங்கம்பட்டியில் மணிமுத்தாறு அணைக்கட்டுக்காக நில ஆர்ஜிதம் செய்ததால் பாதிக்கப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று முறையிட்டுக் கொண்டுள்ளார்களா?

(ஆ) அப்படியானால், நஷ்டஈடு ஏதேனும் கொடுக்கப் பட்டதா?

(இ) என்ன விதப்படி நஷ்டஈடு கொடுக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) No.

(*c*) Does not arise.

*Educational concessions*

* 113 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the steps taken to extend full fee concession to the children of last grade servants up to sixth form in aided schools; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) &(*b*) The proposal to extend full fee concession to the children of last grade servants employed in aided schools was considered recently and deferred.

**SRI N. K. PALANISAMI :** ஸார்; என்ன காரணத்தினால் 'டெபர்' செய்யப்பட்டு இருக்கிறது?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இப்போது அவசியமில்லை என்பதினாலே, அதை அப்படியே வைத்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : As the Hon Member who gave notice of question No. 114 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

**SRI N. R. THIAGARAJAN :** நான் கேட்கிறேன்.

MR SPEAKER : It is now too late. Next question.

* 114 *Q.*—SRI T. S. RAMASAMI : Will the Hon Minister for Finance be pleased to state—

(*a*) whether any Government Order was passed in the month of June 1960 granting educational concession to the children of political sufferers;

[23rd January 1961

(b) if so, the details thereof; and

(c) the number of children granted scholarships till now?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Educational concessions by way of full fee remission in all educational institutions including institutions for collegiate and technical education are granted to the children, adopted children and grand children by predeceased sons of political sufferers, provided that the total annual income of the political sufferer does not exceed Rs. 3,600 per annum.

(c) Particulars are not readily available.

*Educational cess*

* 115 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to levy educational cess on all parents whose annual income is over Rs. 2,500 to give compulsory free education to all children up to the age of fourteen?

THE HON. SRI C. SUBRAMANIAM : No. Sir.

*Scholarships*

*** 116 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பணத்தை வாங்கவேண்டுமானால் மாத வருமானம் ரூ. 100-க்கு உட்பட்டவர்களுக்கு என்று இருப்பதை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM :No, Sir.

*Country bombs*

*** 117 *Q*.—SRI P. G. MANICKAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் சென்னை ராஜ்யத்திலே நாட்டு வெடிகுண்டுகளை உற்பத்தி செய்ததிற்காகவும், வைத்துக்கொண்டிருந்ததிற்காகவும், அல்லது உபயோகித்ததிற்காகவும் எத்தனை பேர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Fifteen persons.

*Complaint against a Lecturer*

* 118 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to clause (c) of question No. 447 on 17th March 1960 the present stage of enquiry against the Professor in the Government Arts College, Ooty, involved in the seduction case?

THE HON. SRI C. SUBRAMANIAM : The departmental enquiries in the matter have since been completed. The Report of enquiry is under the examination of the Director of Public **Instruction.**



23rd January 1961]

SRI A. A. RASHEED : Is it a fact that the Director of Public Instruction has written to the Principal that all action should be dropped against this lecturer?

THE HON. SRI C. SUBRAMANIAM : My information here is that the report is under examination by the Director of Public Instruction.

*Posts excluded from the purview of M.P.S.C.*

* 119 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state the number of posts excluded from the purview of the Madras Public Service Commission in the year 1959-60 and the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

*Names of Officers*

* 120 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government of India have advised the Government not to use appellations like I.C.S., I.A.S., I.F.S. and I.P.S. after the names of officers concerned in official correspondence and orders; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No. The Government of India have only communicated, for the information of the State Government their decision in regard to officers working under their control."

(b) It is under the consideration of Government.

SRI A. A. RASHEED : May I know what is the reaction of the officers themselves to this?

THE HON. SRI C. SUBRAMANIAM : Apart from the reaction of the officers and Government's reaction, I think this is not necessary.

**SRI M. KALYANASUNDARAM :** மத்திய அரசாங்கம் என்ன காரணத்தை முன்னிட்டு, இந்த யோசனையைக் கூறியிருக்கிறார்கள்?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இம்மாதிரி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., என்று போட்டுக் கொள்வது அவசியமில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு நினைப்பதாலோ அல்லது போட்டுக் கொள்வதிலோ எந்தவிதமான தவறும் இல்லை. அவர்கள் சொல்வதிலிருந்து இப்படித்தான் இருக்குமென்று கருத வேண்டியிருக்கிறது.

---

[a] Printed as Appendix IV page on 354 infra.

[23rd January 1961

*Free Education*

* 120—அ.Q.—Sri S. M. ANNAMALAI :
Sri V. K. KOTHANDARAMAN :
Sri T. S. RAMASWAMI :
} கல்வி மந்திரி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பத்தாவது வகுப்புவரை இலவசமாக படிக்க வசதி செய்து தர சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : All poor pupils, the gross annual income of whose parents or guardian does not exceed Rs. 1,200 per annum, are exempted from the payment of school fees in elementary schools and in secondary schools up to and inclusive of Form III. The question of extending this general concession up to VI Form is under consideration in connection with the III Five-Year Plan.

Sri S. M. ANNAMALAI : ஸார், 10-வது வரையிலே அடுத்த ஆண்டிலிருந்து இலவசமாக கல்வி சொல்லிக் கொடுக்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைக் குறித்து இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்ட பின், அது அமுல் நடத்தப்படும்.

Sri K. VINAYAKAM : At the proper time when relevant decision is taken, will the Government consider the possibility of including the XI standard also ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது இந்த 11-வது ஸ்டாண்டர்டு இல்லை. அதைப்பற்றி பின்னால் யோசனை செய்யலாம்.

Sri V. K. KOTHANDARAMAN : சார், சர்க்கார் முடிவு செய்யாமல் இருக்கும்போது, வெளியிலே நடைபெற்ற மகா நாட்டிலும், மற்றும் பல கூட்டங்களிலும் முதன் மந்திரி அவர்கள் இதைப்பற்றி பேசினரே ? அப்படி ஏன் பேசினர் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : யோசனையில் இருப்பதாகத் தான் அவர் சொன்னர். அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. அது மிகவும் சரியே.

Sri S. M. ANNAMALAI : ஸார், முதல் மந்திரி அவர்கள் பொதுக் கூட்டங்களில் அடுத்த ஆண்டிலிருந்து கட்டாயம் 10-வது வரை இலவசமாகக் கல்வி சொல்லிக் கொடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறர். நிதி மந்திரி அவர்களோ, அதற்கு அதிகம் செலவாகும் என்று சொல்கிறர். அப்படியானல், அவர்களுக்கும் சர்க்காருக்கும் ஏதாவது மன வேறுபாடு உண்டா ?



23rd January 1961]

The Hon. Sri C. SUBRAMANIAM : எதிர்க் கட்சிகளுக்கு இந்த விதத்திலாவது சந்தோஷம் ஏற்படாதா என்றுதான். எதிர்க் கட்சிகளுக்கும், எதிர்க் கட்சிப் பத்திரிகைகளுக்கும் இவ்வகையிலே அது உதவுமானல், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

Mr SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the member.]

II—ANNOUNCEMENT.

Mr. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendations for the introduction in the Legislative Assembly of the following Bills :— 9-20 p.m.

(1) The Travancore-Cochin Agricultural Income-tax (Madras Amendment) Bill, 1961.

(2) The Madras Inams (Assessment) Amendment Bill, 1961.

III—GOVERNMENT BILLS.

(1) THE TRAVANCORE-COCHIN AGRICULTURAL INCOME-TAX (MADRAS AMENDMENT) BILL, 1961.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Travancore-Cochin Agricultural Income-tax (Madras Amendment) Bill, 1961.

Mr. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Travancore-Cochin, Agricultural Income-tax (Madras Amendment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS INAMS (ASSESSMENT) AMENDMENT BILL, 1961.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Inams (Assessment) Amendment Bill, 1961.

Mr. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Inams (Assessment) Amendment Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

IV—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER: The hon. Member, Sri N. K. Palanisami spoke for five minutes only on the previous day. He will resume his speech now.

SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் சர்க்கார் 4 மில்லியங்களைத்தான் எடுத்துக்கொள்ள முடிந்தது. 'ஓவர் பிரிட்ஜ்' 'ஸப்-வேஸ்' போன்றவைகளெல்லாம் பல வருஷங்களாக கட்டப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக, ஹைகோர்ட்டுப் பக்கத்தில் ஓவர் பிரிட்ஜ் கட்டுவதுபற்றி 8 வருஷங்களாக இந்தச் சபையிலே பேசிக்கொண்டிருக்கிறோம். அது இன்னும் பரிசீலனையில்தான் இருக்கிறது. எல்லா ராஜ்ய சர்க்கார்களும் அந்தந்த ராஜ்யங்களில் எந்தெந்த இடங்களில் ஓவர் பிரிட்ஜ் வேண்டும், எந்தெந்த இடங்களில் 'ஸப்-வேஸ்' வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் லிஸ்டு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நம் சர்க்கார் எவ்வளவோ திறமையான சர்க்கார் என்று சொல்லப்பட்ட போதிலும், மந்திரிகள் திறமைசாலிகளாக இருந்தபோதிலும் அம்மாதிரி ஒரு லிஸ்டு மத்திய சர்க்காருக்கு இன்னும் கொடுக்கவில்லை. அம்மாதிரி கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

எல்லா மாகாணங்களையும் விட நம் மாகாணம் திட்டங்களை நிறைவேற்றுவதிலே முதன்மையாக இருக்கிறது என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் பொதுத் துறையில் மட்டும் எல்லா மாகாணங்களையும் விட நாம் பிற்போக்கான நிலையில் இருக்கிறோம். பொதுத் துறையில் எடுத்துக்கொண்டால், மைசூரில் பத்ராவதி ஸ்டீல் வொர்க்ஸ் இருக்கிறது, ஹிந்துஸ்தான் டூல்ஸ் இருக்கிறது. இன்னும் பாம்பேயை எடுத்துக்கொண்டால் டெக்ஸ்டைல் மில் இருக்கிறது. அங்கு ஒரு டெக்ஸ்டைல் மில்லை மாகாண சர்க்காரே நடத்திவருகிறார்கள். இன்னும் அஸ்ஸாமை எடுத்துக் கொண்டால் எண்ணெய் சுத்திகரிப்பு சாலை அங்கே இருக்கிறது. நாமும் அம்மாதிரி ஒரு திட்டம் வேண்டும் என்று சொன்னோம். ஆனால் நடைமுறையிலே வரவில்லை. பாக்கி இருக்கக்கூடிய மாகாணங்களில் பொதுத் துறையில் பல தொழில்கள் நடக்கும் பொழுது, நம் சர்க்கார் அடிப்படையாக இருக்கக்கூடிய தொழில்களைக்கூட தனிப்பட்டோர் கையில் விடுவதற்குக் காரணம் என்ன? நம் சர்க்கார் தொழில் மந்திரி அவர்கள் இன்னும் 2½ கோடி ரூபாய் கையில் இருந்தால் எவ்வளவோ தொழில்களை ஏற்படுத்த முடியும் என்று சொன்னார்கள். ஆனால் பணம் இல்லை என்று சொன்னார்கள். இம்மாதிரி தொழில்கள் தனிப்பட்டோர் கையில் போவதால்தான் ஒரு நெருக்கடி வருகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: இன்னும் ரூ. 5 கோடி அதிகமாக இருந்தால் தனியார் துறையிலே இண்டஸ்டிரீஸ் வைக்க முடியும் என்றுதான் சொன்னேன்.





SRI N. K. PALANISAMI: இன்று அலுமினியம் 'பேஸிக் இண்டஸ்டிரி' தனிப்பட்டோர் கையில் விடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. 'கோக் ஓவன் பிளாண்டு' கூட தனியார் துறையிலே போகப்போகிறது என்று சொல்லப்படுகிறது. இது 1957-வது வருஷத்திய இந்திய சர்க்கார் கொள்கைக்கு நேர் விரோதம் அல்லவா? பொதுத் துறையை எடுத்துக்கொண்டால், இன்று நெய்வேலித் திட்டமும், 'இன்டக்ரல் கோச் பாக்டரியும்' தான் இருக்கிறது. இது முடிந்த பிறகு பொதுத்துறை ஒரு பூஜ்யம் ஆகிவிடும். பொதுத் துறை மிகவும் அவசியம். இதன் காரணமாக சர்க்காருக்கு ஒரு 'காரன்ட் காபிடல் இன்கம்' ஏற்படுகிறது. இன்றையதினம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 'இண்டர்னல் ரிஸோர்ஸஸ்' எப்படி சேகரிப்பது என்ற முறையிலே யோசனை செய்கிறார்கள். இன்னும் பாசன வசதி பெறக் கூடிய நிலங்களுக்கு அதிகப்படியான வரி போடுவது என்ற ஒரு யோசனையை பத்திரிகையிலே பார்த்தோம். ஏற்கெனவே விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கஷ்டம் ஒரு பக்கம் இருக்கிறது. ஏற்கனவே அவர்களுக்கு தாங்கமுடியாத வரிச்சுமை இருக்கும் பொழுது மறுபடியும் 'இண்டர்னல் ரிஸோர்ஸஸ்' சேகரிப்பதற்காக விவசாயிகளிடம் வரி போட்டு வாங்குவது என்றால் கண்டிப்பாக இந்த மாகாணத்திலுள்ள விவசாயிகள் அம்மாதிரி போடக்கூடிய வரியை எதிர்ப்பார்கள். இம்மாதிரி வரி போடுவதற்கு அவசியமே இல்லை. சர்க்காருக்கு நிரந்தர வருமானம் வருகிறதென்றால் அதை வைத்துக்கொண்டு எவ்வளவோ செய்ய முடியும். இன்னும் மதராஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. தனிப்பட்டவர் தொழில்களுக்கெல்லாம் உதவி கொடுத்து, தொழில்களை வளரச் செய்கிறது. மதராஸ் 'இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கார்ப்பரேஷன்' என்பதற்கு பதிலாக, தனியார் கார்ப்பரேஷன் என்றே சொல்லி விடலாம். பொது மக்களுடைய வரிப் பணத்தையெல்லாம் கொடுத்து ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தி தனியார்களுக்கு உதவி செய்து தொழில்களை வளர்ப்பதால் யாருக்கு ஏராள லாபம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: வரிப் பணத்திலிருந்து மதராஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கார்ப்பரேஷனுக்கு ஒரு பைசா கூட கொடுப்பது இல்லை.

SRI N. K. PALANISAMI: இப்படி தனியார் தொழில்களை நடத்தும்படி விடுவது ஒரு ஆபத்தான விஷயம். சிந்திரி பெர்டிலைஸர்ஸ், பிலாய், ரூர்கேலா போன்ற உருக்குத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்பொழுது பிற்போக்கு வாதிகளின் கிளர்ச்சியின் காரணமாக மத்திய பார்லிமெண்டு எஸ்டிமேட் கமிட்டி 1958, 1959-ம் வருஷங்களில் இம்மாதிரி சர்க்கார் நடத்தக்கூடிய துறைகளில் 20 சதவிகிதம் பங்குகளை பொது மக்களுக்கு விட வேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறது. அதே சமயத்தில் திட்டக் கமிஷனும் அந்தச் சிபார்சை ஏற்றுக்கொண்டிருக்கிறது. சர்க்கார் பொதுத் துறையிலே செலவிடும்பொழுது சர்க்காருக்கு

[Sri N. K. Palanisami] [23rd January 1961

ஏராளமான கஷ்டம் ஏற்படுகிறது. இப்பொழுதுதான் முந்திரா ஊழல்களெல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டு ஓரளவுக்கு லாபம் வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. அப்படியிருக்கும் பொழுது 20 சதவிகிதம் பங்குகளை 'பப்ளிக்குக்கு' விடுவதற்கு என்ன காரணம்? அப்படி 20 சதவிகிதம் பங்குகளை 'பப்ளிக்குக்கு' விட்டால், டாடா, பிர்லா போன்ற முதலாளிகள் அந்த ஷேர்களை வாங்கிவிடுவார்கள். 'நாஷனலைஸ்டு ஸெக்டரை' 'டி-நாஷனலைஸ்' பண்ணவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைத் திட்டக் கமிஷனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமயத்தில், நம் சர்க்கார் ஏன் அதை வன்மையாகக் கண்டிக்கவில்லை. 'ஹெவி இண்டஸ்ட்ரீஸ்' தனிப்பட்டவர்கள் கையில் இருப்பதன் காரணமாக, சர்க்கார் அவர்களுக்கு அதிகமாக ஆதரவு தருவதின் காரணமாக நாட்டில் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக மூன்று தொழில்களுக்கு வேண்டிய நிலக்கரி கிடைக்காததன் காரணம் என்ன? இந்த நிலக்கரித் தொழில் தனிப்பட்டோர் கையில் இருப்பதால் அவர்கள் இஷ்டம்போல் நடக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள் அந்த முதலாளிகள். ஆகவே, அவர்கள் உற்பத்தியை குறைத்துவிட்டார்கள். இந்தியாவிலுள்ள பாங்குகளெல்லாம் ஆட்டம் கண்டு போயிருக்கிறது. நம் மாகாணத்திலுள்ள பாங்குகளும் இதற்கு விதி விலக்கு அல்ல.

• • • •

• • • •

நாம் எவ்வளவோ திட்டங்கள் போட்டிருக்கிறோம். இருந்த போதிலும் இம்மாதிரியான ஒரு நிலைமை ஏற்படுவதற்கு காரணம் பொதுத் துறையை ஆதரிக்காததுதான். ஆகவே இம்மாதிரி ஆபத்தான நிலைமைக்கு போகக்கூடாது என்று சொல்லி, அதை வன்மையாக கண்டிக்கிறேன். நாம் பெற்றுள்ள ஜனநாயக உரிமை எப்படி நம்மை பாதித்து வருகிறது என்பதற்கு பல உதாரணங்கள் சொல்லலாம். பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்வதிலிருந்து பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினர்கள் நியமிக்கும் விதத்தைப் பார்த்தால், இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்தால்தான் எல்லாம் கிடைக்கும் என்ற மனோபாவம் பரவி வருகிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனை எடுத்துக் கொண்டால், இன்றைய தினம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஏதாவது உத்யோகம் வேண்டுமென்றால், காங்கிரஸ் மூலமாக வேண்டியதைச் செய்துகொள்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு காங்கிரஸ்காரருக்கு பஸ் பெர்மிட் கொடுக்க கலெக்டர் மறுத்ததற்காக அவரை அந்த ஜில்லாவைவிட்டு மாற்ற வேண்டுமென்று ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். என் தொகுதியில் ஒரு காங்கிரஸ்காரர் அல்லாதவருக்கு அங்கேயுள்ள தாசில்தார் ஸ்தல அபிவிருத்தி திட்ட வேலைக்காக ஒரு காண்டிராக்ட் கொடுத்ததற்காக, அவர் மேல் "என்குயரி" செய்யவேண்டுமென்று சொல்லி அவரை மாற்றிவிட்டார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு 80 கிணறுகளும்,

* Expunged as ordered by the Chair.



23rd January 1961] [Sri N. K. Palanisami]

காங்கிரஸ்காரர் அல்லாதவர்களுக்கு 40 கிணறுகளும் கொடுத்தும் கூட அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அவரை மாற்றிவிட்டார்கள். ஈரோட்டில் ஒரு காங்கிரஸ் கண்டிராக்டர் பழைய கிணற்றைப் புதுக்கிணறு என்று சொல்லி பணம் வாங்கிவிட்டார். இதை அங்கேயுள்ள ஆர். டி. ஓ. கண்டுபிடித்துவிட்டார். அதற்காக அவரை அங்கிருந்து மாற்றிவிட்டார்கள். இதனால் ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri S. PAKKIRISAMI PILLAI**: தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின்மீது நடக்கும் இந்த விவாதத்தில் சில வார்த்தைகள் சொல்லுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் பிரிட்டிஷ் ராணியின் வருகையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராணி நம் நாட்டிற்கு வருவதுபற்றி நாம் பெருமைப்படவேண்டிய விஷயம். நம் நாட்டிலுள்ளவர்கள் அத்தனைபேரும் மகிழ்ச்சியடையும்படியான நிலையில் இருந்து வருகிறோம். நம் நாட்டிற்கு விஜயம் செய்யும் ராணியைப் பார்ப்பதற்கு நம் நாட்டு மக்கள் ஆவலுடன் இருந்த போதிலும், நேரில் அவர்களைப் பார்ப்பதற்கு முடியாத நிலையில் தான் இருக்கிறார்கள். ஆனால் நமது ராஜ்யத்திற்கு ராணி அவர்கள் வரும்பொழுது, அவர்களுக்கு வரவேற்பு கோலாகலத்துடன் நடக்கும்படியான நிலையில், நல்ல ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் நம் நாடு இணைந்திருக்கும் காமன்வெல்தின் தலைவி என்ற முறையிலே வரவேற்பு அளித்தாலும்கூட, பெண் குலத்திற்கே பெருமை அளிக்கும் வகையில் அவர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பதற்காகத்தான்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில், நம் நாட்டிலே சமீபத்தில் எல்லா ஜில்லாக்களிலும் நல்ல மழை பெய்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். உண்மைதான். சென்னை நகரிலே பலத்த மழை ஏற்பட்டு சேதம் விளைந்திருக்கிறது. அத்துடன் புயல் காற்று வீசியது. அதன் விளைவாக 20,000 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோரும் ஏழைகள் தான். அவர்களுடைய நிர்க்கதியான நிலையிலே, பல சங்கங்கள் முன்வந்து உதவி அளித்துள்ளன. குஜராத்தி மண்டல், மார்வாரி சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், நடிகர்கள் சங்கம், இன்னும் பல சங்கங்கள், அவரவர்களுடைய சக்திக்கேற்றவாறு உதவி செய்திருக்கிறார்கள். உணவு அளித்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே பண உதவியும் அளித்திருக்கிறார்கள். நமது பிரதமர்கூட கொஞ்சம் பணம் அனுப்பியிருந்தார்கள். அந்தப் பணத்தை எல்லாம் அரசாங்கத்தார் ஒரு சிறந்த முறையிலே விநியோகிக்காமல், இதர ஸ்தாபனங்களுடன் ஒத்துழைத்து ஒருமுகமாக விநியோகம் செய்யாமல் தனிப்பட்ட முறையிலே விநியோகிக்க ஆரம்பித்தார்கள். பாதிக்கப்பட்டவர்

[Sri S. Pakkirisami Pillai] [23rd January 1961

களுக்கு நிவாரணம் அளிக்கும் விஷயத்தில்கூட பாருபாடுகள் காண்பிக்கப்பட்டன என்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. 10 ரூபாய், 20 ரூபாய், 30 ரூபாய் என்று பாருபாடு செய்து கொடுத்திருக்கிறார்கள். சிலருக்கு 30 ரூபாய்க்குப் பதிலாக 10 அல்லது 20 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். தவிர, ரூபாய் 50-க்கு மேல் வருமானம் இருந்தால் கொடுக்கமுடியாது என்றும் சொல்லிவிட்டார்கள். சென்னை நகரிலே வாழவேண்டுமென்றால், குறைந்தது 50 ரூபாய்க்குமேல் வருமானம் இருந்தால்தான் முடியும். இல்லாவிட்டால் ஒரு குடிசையை சொந்தமாக வைத்திருக்கும் நிலைமையிருக்காது. இம்மாதிரி நிபந்தனைகள் ஏற்படுத்தியவருக்குக் கொடுக்க முடியாது என்று சொன்னதினால் யாருக்குத்தான் கொடுத்திருப்பார்கள் என்ற வினா எழுகிறது. அதே சமயத்தில் அரசாங்கத்தின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிற குடிசை சொந்தக்காரனுக்குகூட கொடுக்க முடியாது என்ற கட்டுப்பாட்டையும் விதித்தார்கள். சுமார் 20,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 4,000 பேர்களுக்குமேல் கொடுத்திருக்க மாட்டார்கள் என்று தெரியவருகிறது. ஏன் இம்மாதிரியான நிபந்தனைகளை ஏற்படுத்தவேண்டுமென்று தெரியவில்லை. அப்படி ஆக்கிரமிப்பு செய்த ஏழைகளுக்கு 10 ரூபாய் கூட கொடுக்க மறுத்துவிட்டது அவர்களுக்கு ஒரு தண்டனையா என்பது புரியவில்லை. இம்மாதிரியான ரீதியில் அரசாங்கத்தார் வெள்ள நிவாரண வேலையைச் செய்திருக்கிறார்கள் . இந்த கட்டுப்பாடுகள் இனிமேல் அவசியமில்லை என்று தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதைத் தவிர, சென்னை கார்ப்பரேஷன் அதிகாரிகள், "மேயர் வெள்ள நிவாரணக் குழு"வை நியமித்து, அதன் மூலமாக வசூல் செய்து, கைத்தறித் துணிகளையும் வாங்கி, ஏழைக் குடும்பங்களுக்கு விநியோகம் செய்து வருகிறார்கள். இம்மாதிரி வெவ்வேறு வழிகளில் இல்லாமல், ஒரேமுகமாக நிவாரண வேலையைச் செய்திருந்தால், நிறையக் குடும்பங்கள் பயனடைந்திருப்பார்கள். வாங்கினவர்களே வாங்கும்படியான நிலையிலே இருந்திருக்காது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பிரிட்டிஷ் ராணி அவர்களின் வருகையை முன்னிட்டு, சென்னை நகரில் சமீபத்தில் ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்ட ரோடுகளை சர்க்கார் சீர்படுத்த முன்வந்திருக்கிறார்கள். இம்மாதிரியான ரோடுகள் சுமார் 10 அல்லது 15 வருஷ காலத்திற்கு நீடிக்கும்படியான நிலையில் போடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் இப்படிச் சீர்கேடான முறையில் இருக்கும் ரோடுகளைப் பற்றி கவர்னர் அவர்கள் தன் பிரசங்கத்தில் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், அந்த ரோடுகள் எவ்வளவு கேவலமான நிலையில் விட்டுவிட்டு இருந்தார்கள் என்பதைத்தான் அது சுட்டிக் காண்பிக்கிறது என்றுதான் சொல்லுவேன். அவ்வளவு சீர்கேடான நிலையில் ரோடுகளை இத்தனை காலமாக சீர்படுத்தாமல் விட்டிருந்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது சீர்செய்த பிறகாவது, அந்தப் பழைய நிலைக்கு அந்த ரோடுகள் போய்விடாமல் சர்க்கார்



23rd January 1961] [Sri S. Pakkirisami Pillai]

பராமரிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன். முக்கியமாக பெரிய ரோடுகளையும், முக்கியப் பகுதிகளில் இருக்கும் ரோடுகளையும், சர்க்கார் அவர்களே சீர்படுத்தி பராமரித்துவர தங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வாழ்க்கைக்கு உரிய அத்யாவசியப் பொருள்கள் சமீபத்தில் அதிக விலைக்கு உயர்ந்து போய் இருக்கின்றன. முக்கியமாக அரிசி, கட்டை போன்ற வஸ்துக்கள் விலை உயர்ந்து போய் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? அறுவடைக்கு முன்னால் அப்படித்தான் இருக்கும், பின்னால் சரியாகப் போய் விடும் என்றும் சொல்லப்படுகிறது. அம்மாதிரி அதிக விலை ஏற்றத்தை தடுக்க சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கிறார்கள்? திடீர், திடீர் என்று விலையேற்றம் ஏற்படுவதால், ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் வாழ்க்கை நடத்த முடியாமல் தவிக்கிறார்கள். இதற்குச் சமாதானமாக 300, 400 நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. இம்மாதிரி உயர்வதற்குக் காரணங்கள் என்ன என்று ஆராய்ந்து, மக்களுக்கு தக்க காலத்தில் தீவிரமாக உதவி செய்ய வேண்டும். திடீரென்று ஒரு பொருளின் விலை ஏறுமானால், பண்டங்களை வாங்க முடியாத நிலைமை ஏற்படுகிறது; ஏழைகள் தவிக்கிறார்கள். உதாரணமாக, இப்பொழுது விறகு விலை ஒரு குண்டு ரூ. 2¾ அல்லது ரூ. 3 என்று ஏறியிருக்கும்போது, வாங்க முடியாமல் ஏழைகள் தவிக்கிறார்கள். அந்த மாதிரிப் பரிதாபகரமான நிலை ஏன் ஏற்படுகிறது? அதை ஆராய்ந்து, அம்மாதிரி நிலைக்குப் போகவிடாமல், அரசாங்கம் நல்ல ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, உதவி செய்யவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி கவர்னர் அவர்கள் தங்கள் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைப் பாராட்டி, சிலாகித்துப் பேசும்படியாக பொதுவாகயிருந்தாலும், எதிர்த்துப் பேசும் நிலையிலும் இருக்கிறோம். நம் நாடு வளம் பெறவேண்டும் என்று அதற்குண்டான பல திட்டங்களை தயாரித்து, பல்வேறு வழிகளில் பல கோடி ரூபாய்களை செலவழித்து, வெவ்வேறு திட்டங்களையும் ஆரம்பித்து, முதல் இரண்டு திட்டங்களின்போதும் செலவழித்திருக்கிறோம். ஆனால், இந்த திட்ட லட்சியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று நாம் யோசனை பண்ணிப்பார்த்தால், பல திட்டங்கள் கைவிடப் பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும். திட்ட லக்ஷியங்களை அடைய தவறி விட்டிருக்கின்றன. விவசாய விஷயத்தில், விளை பொருள்கள் உற்பத்திச் செலவுக்குத் தக்க அளவு உணவு தானியங்கள் விலை பெருக இல்லை என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் நன்றாகத் தெரியும். நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். அதற்குக் காரணம் என்ன? ஏழை விவசாயிகள் குடும்ப பாரத்தை சரிகட்ட முடியாமல், தங்களுக்கு இருந்த சிறுசிறு நிலப் பரப்பையும், நிலபுலன்களையும் விற்றுவிட்டு, மற்றவர்கள்போல் வேலை

[Sri S. **Pakkirisami Pillai**] [**23rd** January 1961

தேடிக்கொண்டு நிற்கும் நிலையில் மாறிவிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த விவசாயக் கூலிகள் வேலை செய்து போதுமான கூலி பெற முடியாத நிலையிலும் இருக்கிறார்கள். அவர்களும் பட்டணம் வந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கிறார்கள். இதனாலேயே பட்டணத்திலும் அதிக ஜனப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் ஜனங்கள் எண்ணிக்கையில் குறைந்துகொண்டே வருகிறார்கள். கிராமங்களிலும், ஜில்லாக்களிலும் நல்ல மாதிரியான விவசாயம் செய்து அவர்கள் போதுமான ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

விவசாய உபரி வருமானம், இந்த இரண்டு திட்ட காலத்திலும், திட்ட லக்ஷியப்படி மக்கள் அடையவில்லையென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக விவசாயப் பகுதியில் ஐந்து சதவிகிதம் வருமானம் உயர்ந்திருக்கிறது என்று கணக்கில் காண்பிக்கப்படுகிறது. அந்த ஐந்து சதவிகித வருமானமும் பெருகியிருக்கிறது என்றால், ஜனத்தொகை வளர்ச்சியையும், மக்கள் எண்ணிக்கை 1½ அல்லது 2 சதவிகிதம் ஜனத்தொகையில் பெருகியிருக்கிறார்கள் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு அதோடு கூட, முதலீடும் அதிகமாகப் போட்டிருக்கிறதை கணக்குப் போட்டுப் பார்த்தால், இந்த ஐந்து சதவிகித உயர்வும் நமக்குக் கிடைக்காது; ஒரு சதவிகிதமோ என்னவோதான் கிடைக்கும். அந்த ஒரு சதவிகிதமும் பரவலாக ஏழை மக்களுக்குக் கிடைக்காது. அங்கேயிருக்கின்ற ஒரு சில பணக்காரர்கள் இடத்தில்தான் சிக்குண்டு இருக்கும். இந்த நிலையில்தான் பொருளாதார திட்ட லக்ஷியங்கள் நிறைவேறியிருக்கின்றன நம் நாட்டில். ஆகவே இந்த விஷயத்தில் அரசாங்கம் தீவிரமான முயற்சிகள் எடுக்கவில்லை என்று இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏழைகள் இன்னும் மிகமிக ஏழைகளாக மாறும் பொருளாதாரத் திட்டமாகத்தான் இருக்கிறது.

வாழ்க்கைச் செலவு புள்ளி விவரத்தை எடுத்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால், விவசாய ரீதியில், குடும்ப வருமானம், 1951-லிருந்து 1957 வரையில், ரூ. 477-லிருந்து 437-க்குக் குறைந்திருக்கிறது; இது வருஷக் குடும்ப வருமானம். அதே சமயத்தில், குடும்பத்தின் வாழ்க்கைச் செலவைப் பார்த்தால், ரூ. 467-லிருந்து, ரூ. 617-க்கு உயர்ந்திருக்கிறது. 1957-க்குப் பின்னால் விலைவாசிகள் மிகப் பயங்கரமாக உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் ஏழைகள், முக்கியமாக நடுத்தர மக்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், யாரும் சந்தோஷப் படும் நிலையில் இல்லை என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மோசமான நிலையில்தான் மக்கள் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இந்த வேயில்லாத் திண்டாட்டம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் திட்டம், ஏதோ, நாய், தன் வாலைப் பார்த்துச் சுற்றி சுற்றி வருவதுபோல், "The dog running after its tail" என்கிறார்களே அதுபோல்



23rd January 1961] [Sri S. Pakkirisami Pillai]

தான் இருக்கிறது. ஆனால், கணக்கு மாத்திரம் காட்டுகிறார்கள். ஆனாலும், எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது, உண்மையிலேயே எல்லோருக்கும் வேலை கிடைத்ததா என்ற உண்மை விவரங்களையெல்லாம் கொடுக்கச் சர்க்கார் தவறியிருக்கிறது என்பதற்கு யாருக்கும் விளக்கம் தேவையில்லை. ஆகவே, இப்பொழுது இரண்டு 10-00 a.m. ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து விட்டது. இந்த நிலைதான் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் மக்கள் எண்ணிக்கை ஒன்று என்று வைத்துக்கொண்டால், மூன்றாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் அது ஒன்னரை மடங்கு ஆக உயரும் என்று சொல்லுகிறார்கள். அப்படி விட்டுக்கொண்டு போனால், அது நாட்டின் சுபீட்சத்திற்கு வழியாகாது என்பதைத்தான் நான் சொல்ல முடியும்.

தொழிலாளர்கள் விஷயத்தில் அரசாங்கத்தார் தம்முடைய கடமையைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டிலே, தொழிலாளர்கள் சார்பிலும், முதலாளிகள் சார்பிலும், அரசாங்கத்தார் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்தாலோசித்துப் போட்ட திட்டங்களை அரசாங்கத்தார் ஒருவாறு ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், அதை இங்கே நடைமுறையில் நிறைவேற்றத் தவறியிருக்கிறார்கள்.

உதாரணமாக **(Need based minimum wages)** அவசியமான குறைந்தபட்சச் சம்பளத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தாகவேண்டும் என்ற நிலையில் சமீபத்தில் 'வேஜ் போர்டு கமிஷன்' நியமிக்கப்பட்டு, அவர்கள் வழியாக சிபார்சுகள் கிடைத்தன. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கென்று சிபார்சு ஒன்றும் வெளி வந்தது. அதை அரசாங்கமும் முதலாளிகளும் கலந்து ஆலோசித்து, எவ்வளவு உயர்ந்தபட்சம் போக முடியுமோ அந்த அளவுக்கு ஒத்துக்கொண்டார்கள். அந்த அளவுக்கு ஒத்துக் கொள்ளும்படிச் செய்தார்கள். அப்படி ஒத்துக்கொண்ட ஒப்பந்தத்தைக் கூட அனேக முதலாளிகள் இதுவரை அமுல் செய்யவில்லை. முக்கியமாக, ஒரு பிரிட்டிஷ் முதலாளி, பெருத்த முதலாளி, அந்தப் பணத்தைக் கொடுக்க மறுத்திருக்கிறார். வேறு எதையோ காண்பித்து, கோர்ட்டிலே வழக்குத் தொடுத்து அவர்கள் தோற்றுவிட்டாலும், இந்தப் பிரச்சினை மீது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். இப்படித் தொழிலாளர் விஷயத்தில் முதலாளிகள் மேலும் மேலும் போய்க்கொண்டிருந்தால், அவர்களைக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்யும்படியான நிலையில் அரசாங்கத்தார் இல்லையென்றால், ஏழைத் தொழிலாளர்கள் எந்த வழியிலே முன்னேற முடியும்? 'வேஜ் போர்டு கமிஷன்' ரிப்போர்ட்டெல்லாம் எதற்காக ஏற்படுத்தப்பட்டன? முதலாளிகள் கஜானாவில் போகும் பணத்தில் ஒரு அளவை மடக்கி ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும், முதலாளிகள் மாத்திரம் அதிகமான லாபத்தை அடையக் கூடாது, அதைத் தொழிலாளர்களும் அடையும்படியான நிலையில் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு

[Sri S. Pakkirisami Pillai] [23rd January 1961

தான் ஏற்படுத்தினார்கள். இம்மாதிரி ரிபோர்ட்டை அரசாங்கம் ஒத்துக்கொண்டிருந்தாலும், அதை அமுல் செய்யும்போது அதை நிறைவேற்றும் வகையில் ஒன்றும் செய்யவில்லை, அந்த முதலாளிகளைக் கண்டிக்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இது தவிர, பதினைந்தாவது தொழிலாளர் மாநாட்டிலே நிறைவேற்றிய தீர்மானங்கள் காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கின்றன. முதலிலே செய்த தீர்மானங்களெல்லாம், அவைகளின் உறுதி, கட்டுப்பாடுகள் எல்லாம் இப்பொழுது நழுவ விடப்பட்டு வருகின்றன. அமைச்சர்களே அந்தத் தீர்மானத்திலிருந்து நழுவிக்கொண்டு போகிறார்களே தவிர, நிறைவேற்றத் தைரியம் இல்லை. காரணம், ஒன்று முதலாளிகளுக்குப் பயப்பட்டுக் கொண்டு இருக்கலாம்; அல்லது தொழிலாளர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற அக்கறை இல்லாத மனப்பான்மை கொண்டிருக்கலாம். ஆகையால், இம்மாதிரியான நிலையில் மந்திரிமார்கள், அரசாங்கத்தார் இம்மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், நம் நாடு எப்பொழுது முன்னேறும் என்பதைச் சொல்ல முடியாமலிருக்கிறது. தொழில் உறவு முறை என்று வைத்திருந்தார்கள். 'கோட் ஆப் டிஸிப்ளின்' என்று எல்லாத் தொழிற்சாலைகளிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன. 'கோட் ஆப் டிஸிப்ளின்' என்பதை தொழிலாளிகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லி, முதலாளிகள் இதைப் பயன்படுத்தி, தொழிலாளர்களுடைய வேலைப் பளுவை அதிகமாக்கி, அதற்கேற்ற சம்பள உயர்வு கொடுக்காமல் ஏமாற்றிவிட்டிருக்கிறார்கள். கோட் ஆப் டிஸிப்ளினிலிருந்து முதலாளிகள் தான் தவறியிருக்கிறார்கள். ஆனால், தொழிலாளர்கள் அம்மாதிரி இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையிலே முழுதும் முதலாளித்துவ மனப்பான்மையில் தான் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாகக் கூற முடியும்.

THE HON. SRI R. VENKATARAMAN : முதலாளிகளும் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

SRI S. PAKKIRISAMI PILLAI : நகரத்திலே பொதுக்கூட்டம் போட வேண்டுமென்றால் போலீசார் பெரிய கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். காரணம் பல இருக்கலாம். பொதுக்கூட்டம் போடவேண்டுமென்றால், பணத்தைச் செலவழித்து, அப்ளிகேஷன் போட்டு, கலெக்டரிடமோ சொந்தக் காரரிடமோ அனுமதி வாங்கி அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால், இப்பொழுது போலீஸ் கமிஷனர் ஒரு விதி போட்டிருக்கிறார். அந்த விதியின் பிரகாரம், ஒரு போலீஸ் டிவிஷனில் ஒரு கூட்டத்திற்கு மேலே அனுமதி கிடையாது என்ற நிலைமை இருக்கிறது. ஒரு போலீஸ் டிவிஷனிலே ஒரு கூட்டமென்றால், இருபது முனிசிபல் டிவிஷன்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்குமேல் கூட்டம் போட



23rd January 1961] [Sri S. Pakkirisami Pillai]

முடியாது. இது மிகவும் தொழிற் சங்கக் கூட்டத்தைப் பாதிக்கிறது. தொழிற் சங்கக் கூட்டம் அடிக்கடி போடும்படியான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. தொழிற்சங்கக் கூட்டத்திற்கு அனுமதி இல்லையென்றால், ஏதாவது ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாவிதப் பிரச்சினைகளையும் எடுத்துச் சொல்லும்படியான நிலையிலே இல்லை. போலீஸ் உத்தரவு வந்த பிறகு தான் பொதுக்கூட்டம் போடும் நிலையில் இருக்கிறோம். கட்சிக்குக் கட்சி சண்டை போடுகிறது என்ற நிலையில் அந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தார்கள் என்றாலும்கூட இது தொழிலாளர்களை மிகவும் பாதிக்கிறது. தொழிற் சங்கங்களின் அன்றாட பிரச்சினைகளை அவரவர்களுக்கு எடுத்துச்சொல்லி நல்ல கட்டுப்பாட்டை, ஒழுங்கு முறையைத் தொழிலாளர் மத்தியிலே ஏற்படுத்துவதற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், ஈ, கொசு உபத்திரவம் பெரிதாகப் போய்விட்டது. முக்கியமாக அய்யனாவரம், பெரம்பூர் பகுதியிலே இந்த உபத்திரவம் பெரிதாக இருக்கிறது. அய்யனாவரத்தில் ஒரு பால் பண்ணை நெடு நாளாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ட்ரெயினேஜ் திட்டம் சரிவர இல்லாததால் அங்கே வடிகால் மூலமாகப் போய் தேங்கும்படியான கழிவு பால் காரணமாக கொசுக்களும், ஈயும் பெருகிவிட்டன. பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடியவர்கள் அந்தப் பகுதியில் வசிக்கிறார்கள். இரவு, பகல் ஷிப்டுகளில் வேலை செய்கிறார்கள். பகலிலே தூங்கினால் ஈ உபத்திரவம். இரவிலே தூங்கினால் கொசு உபத்திரவம். இதை ஒழிக்க கார்ப்பரேஷனும் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை. அரசாங்கமும் எடுக்கவில்லை. இந்த நிலையில் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

கடைசியாக, குடியிருக்க வீடு கிடைக்க வசதியில்லாத உபத்திரவத்தை அங்கே மக்கள் அனுபவிக்கின்றார்கள். வீடுகள் கட்டுவதற்குப் போதுமான வசதி கிடையாது. நிலம் கிடையாது. அரசாங்கமும் அங்கே முன்வந்து தொழிலாளர்களுக்கு வீடு கட்டும்படியான திட்டத்தின்கீழ் இன்னும் அதிகமான வீடுகள் கட்டவில்லை. இப்பொழுது கட்டியிருக்கும் 900 வீடுகள் போதாது. வடக்கிலுள்ள மாகாணங்களில் தொழிலாளர்களுக்காக அதிகமான வீடுகள் கட்டியிருப்பதைப் பார்க்கிறோம். நம் ராஜ்யத்தில் கொஞ்சமான வீடுகள்தான் கட்டியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் வீடுகள் கட்ட ஏன் திட்டங்கள் நம் ராஜ்யத்தில் இல்லை என்பதைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : இப்பொழுது ஸ்ரீ எம். வில்லியம் அவர்கள் பேசலாம். கனம் அங்கத்தினர் பதினைந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ளலாம். அதிகமான அங்கத்தினர்கள் பேசுவார்கள் என்று

நினைத்து ஒரு அங்கத்தினருக்கு பத்து நிமிடங்கள் வீதம் அனுமதித்தேன். அதிகம் பேர்கள் பேச முன்வராததால் கனம் அங்கத்தினர் திரு. வில்லியம் அவர்கள் பதினைந்து நிமிடங்கள் பேசலாம்.

(Sri V. Subbiah in the Chair.)

* SRI M. WILLIAM : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையைப்பற்றி விவாதிக்கின்ற வேளையில் என்னுடைய கருத்துக்களை இங்கு சொல்லலாம் என்று நினைக்கிறேன். நாம் அனைவரும் அறிந்தது, கவர்னர் பெருமான் உரையில் மதிப்பிற்குரிய பிரிட்டிஷ் ராணி அம்மையார் சென்னைக்கு வர விருப்பதை குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோலவே சில மாதங்களுக்கு முன் பேய் மழையினால் பெரும் துன்பத்திற்கு ஆளான மக்களுக்கு நமது அரசாங்கமானது உடனுக்குடன் தகுந்தவாறு நிவாரண வேலைகளை நடத்தினார்கள், என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வண்ணமாக நடைபெற்றிருக்கிற வேலைகளிலும் குறை சொல்லப்படுகிறது.

எல்லாவற்றிக்கும் மேலாக அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள முக்கியமான அம்சங்கள் பற்றி தம் உரையில் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதன்முதலாக ஆகாரப் பொருள்களின் உற்பத்திக்கு அதிக கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதற்காகப் பல வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்போது நடத்தப்படும் திட்டத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேஜர் இர்ரிகேஷனுக்காக ரூ. 27 கோடியும், மைனர் இர்ரிகேஷனுக்காக ரூ. 8 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கியதைவிட இரண்டு மடங்கு என்று காண்கிறோம். அதுபோலவே மண் அரிப்புத் திட்டத்திற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரம் அல்ல. ரசாயன உரத்தைப் பெருக்குவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வண்ணமாக சுமார் 80 கோடி ரூபாய்—மூன்றில் ஒரு பங்கு தொகைக்கு மேல்—ஆகாரப் பொருள்களின் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று பார்க்கும்போது சந்தோஷம். நமது பிரதேசத்தில் நமது மக்கள் சுபிட்சமாக வாழவேண்டுமானால் விவசாயமானது நல்லமுறையில் நடத்தப்படவேண்டும். ஆகாரப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும் என்று கண்டுகொள்கிறோம். இவ்வண்ணமாக பலவிதமான நீர்ப்பாசனத் திட்டங்களை நடைமுறையில் கொண்டு வந்து ஆகாரப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நமது சர்க்கார் அக்கறை எடுத்துக்கொண்டு திட்டங்களை வகுத்திருக்கும்போது அந்தத் திட்டங்கள் நல்லமுறையில் நடக்கிறதா என்று பார்ப்பதிலும் சற்று ஆலோசிக்க வேண்டும்.



ரசாயன உரத்தைப் பொறுத்தவரையில் பலவிதமான குறைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகள் விவசாயிகளுக்குத் தக்க சமயங்களில் கிடைக்கவில்லை என்றும், அவர்கள் உரம் வாங்கவேண்டுமானால் வில்லேஜ் ஆபீசர்களிடம் சென்று சர்டிபிகேட் பெற்று, கூட்டுறவு சங்கங்களில் சென்று வாங்க வேண்டியிருக்கிறது. அவ்வண்ணமாக வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்போது இருக்கிற ஏற்பாட்டை நிறுத்தி விட்டு பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இந்த ரசாயன உரத்தை விநியோகம் செய்தால் அவர்களுக்கு ஏற்ற வகையில் கஷ்டம் இல்லாமல் உரத்தைப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படும் என்று நினைக்கிறேன். ஆகவே அந்த விஷயத்தைப்பற்றியும் சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி பேசுகையில் குமரி மாவட்டத்தில் உள்ள ஒன்றிரண்டு முக்கியமான் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 20 வருஷங்களாகவே அங்குள்ளவர்கள் பட்டணங்கால் திட்டத்தையும், சிற்றார் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கோரி வந்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவை சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் இந்தப் பிராந்தியம் சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்துவிட்ட காரணமாக திருவிதாங்கூர்-கொச்சி சர்க்கார் இவ்விரு திட்டங்களையும் நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். இப்போது நம்முடைய சர்க்கார் இந்த பட்டணங்கால், சிற்றார் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருந்தார்கள். ஆனால் அவ்வண்ணமே நாம் நம்முடைய திட்டங்களுக்காகக் கோரியிருந்த மொத்தத் தொகையில் இப்போது வெட்டு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் எந்த எந்தத் திட்டங்களைக் கைவிடப்போகிறார்கள் என்று தெரியவில்லை. எந்தக் காரணத்தினாலும் இந்தப் பட்டணங்கால், சிற்றார் நீர்ப்பாசனத் திட்டத்தைக் கைவிடக்கூடாது என்று நான் இந்தச் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டங்களினால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மேல் சாகுபடிக்குக் கொண்டுவரலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே அத்திட்டங்களை நடைமுறையில் கொண்டு வரும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப்பற்றி தகுந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறை இருந்து கொண்டிருக்கிறது. கேரளா பிரதேசம், மெட்ராஸ் பிரதேசம் இரண்டையும் ஒரு ரோடுதான் பிரிக்கிறது. ரோடுக்கு அப்புறம் ஒட்டி உள்ள கேரளா பிரதேசத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரோடுக்கு இப்புறம் மெட்ராஸ் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. கூடிய சீக்கிரம் இந்த எல்லா கிராமங்களுக்கும்கூட விஸ்தரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. கோதையார் திட்டத்தால் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று சொல்கிறார்கள். 30 ஆயிரம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி பண்ணலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பைக்காரா திட்டத்தைவிட சிறப்பான ஒரு திட்டமாகவும் இது இருக்கக்கூடும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்த கோதையார் மின்சாரத் திட்டத்தையும் எடுத்து நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அநேக கைத்தொழில்கள் இங்கு நிறுவ உத்தேசித்திருக்கிறார்கள். அது மிகவும் சந்தோஷமான காரியம். அதேசமயத்தில் குமரி மாவட்டத்தில் ஏதாவது ஒரு முக்கியமான கைத்தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய வாய்ப்பு இங்கே இருக்கிறது. அதிகமான ரப்பர் தோட்டங்கள் அங்கே இருக்கின்றன. சுமார் பதினைந்து ரப்பர் எஸ்டேட்ஸ் இருக்கிறது. இதுவன்னியில் சிறு சிறு தோட்டங்கள் இருக்கின்றன. இவைகளில் இருந்து உற்பத்தியாகும் ரப்பர் ஏராளம் கிடைக்கிறது. அந்த ரப்பரைக் கொண்டு பலவிதமான சாமான்கள் செய்யலாம் என்று சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும். இது அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் உதவி செய்யக்கூடும். ஆகவே அந்த மாவட்டத்தில் ஒரு பெரிய ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி சம்பந்தமாக ஷிப்ட் சிஸ்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறோம். மேலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால் 200 பள்ளிக்கூடங்களை அப்படியே வைத்திருக்கிறார்கள். அதுபற்றி தீர்மானம் ஒன்று போட்டு அனுப்பியிருக்கிறோம். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கிற வரையில், பயிற்சி பெறாதவர்களைப் போடுவதற்கு முன்வரலாம்.

கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களில் 25 உயர்தர பள்ளிகள் இருக்கின்றன. இந்த 25 உயர்தர பள்ளிகளிலிருந்து வெளிவரும் பிள்ளைகள் மிகவும் சௌகரியமாக மேல் படிப்புப் படிக்க இரண்டு தாலூகாக்களுக்கும் பொதுவாக ஒரு கல்லூரியை ஆரம்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

தூத்துக்குடி பெரிய துறைமுகமாக வரும் என்பது சந்தோஷமான காரியம். அதேசமயத்தில் திருநெல்வேலியையும் கன்யாகுமரியையும் இணைக்கும் ரயில் பாதை வேலையை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ரயில் பாதை போடுவதற்கு சர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்படாது என்று நான் நிச்சயமாக நினைக்கிறேன். ஏனென்றால் நிரப்பான பரி [illegible]



பாலங்கள் கட்டவேண்டிய அவசியம் இல்லை. குறைந்த செலவில் வேலையை முடித்துவிடலாம். இந்த விஷயத்தில் நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரைச் சீக்கிரம் எடுத்துக்கொள்வதற்கு வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** SRI A. VEDARATHNAM :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ராஜ்ய பாலகர் அவர்களுடைய உரையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்கள் உரையில் மாட்சிமை தங்கிய நம்முடைய பிரிட்டிஷ் ராணியார் அவர்களுடைய வருகையைப்பற்றி வரவேற்று கூறியிருப்பதை எதிர்க்கட்சியில் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கோவை பிரதிநிதி அவர்கள் காமன்வெல்த் நாடுகளின் தலைவரின் வருகைக்காக இவ்வளவு பிரமாதப்படுத்தவேண்டியதில்லை என்று கேலியாக நேற்று பேசினார்கள். இன்று அவர்கள் அதைப் பேசவில்லை. காமன்வெல்த் மகாநாட்டிற்கு நம்முடைய பிரதம மந்திரி அவர்களுக்கு அழைப்பு எப்பொழுது வந்ததோ, என்று அவர்கள் பிரயாணத்தை ஆரம்பித்தார்களோ, அதிலிருந்து அதைத் தொடர்ந்து விடாது அக்கட்சியினர் பேசி வருகிறார்கள். இதைப் பற்றி அவர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். காமன்வெல்த் நாடுகள் பிரதம மந்திரிகளுக்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரி அழைப்பு அனுப்பினார்கள். எல்லா பிரதம மந்திரிகளும் அங்கு சென்றிருந்தார்கள். நாம் விடுதலை பெற்ற அதே நேரத்திலே, விடுதலை பெற்ற பாகிஸ்தானுடைய பிரதமரும், நியூசிலாந்து பிரதமரும், ஆப்பிரிகா, ஆஸ்திரேலியா போன்ற நாட்டு பிரதமர்கள் அத்தனை பேரும் அங்கு நடந்த முதல் கூட்டத்திற்கு சென்றிருந்தார்கள். அப்பொழுது அந்த காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்களுடைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பிரிட்டிஷ் பிரதம மந்திரி பேச ஆரம்பிப்பதற்கு முன்பு மதிப்பிற்குரிய நம்முடைய பிரதம மந்திரி பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆற்றிய உரை, ஒரு முக்கியமான செயல் ஆகும். அதை அமானுஷ்யம் என்று சொன்னால்கூட பொருந்தும் என்று கூற விரும்புகிறேன். அதைக் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது காமன்வெல்த் மாநாட்டிற்கு பிரதமரை அழைக்கின்ற நேரத்தில், அதற்கு ‘பிரிட்டிஷ் காமன்வெல்த் மாநாடு’ என்று பெயர் இருந்ததை மறந்திருக்க மாட்டார்கள். அவர்கள் சென்று உட்கார்ந்ததும் நம்முடைய பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் என்ன சொன்னார் என்றால் “இந்த மாநாட்டிற்கு ‘பிரிட்டிஷ் காமன்வெல்த் மாநாடு’ என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இது தவறு, இதில் இருக்கும் ‘பிரிட்டிஷ்’ என்ற வார்த்தையை நீக்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் நான் இதில் பங்கு எடுத்துக்கொள்ள முடியுமே அல்லாது, பிரிட்டிஷ் காமன்வெல்த் என்றிருந்தால் இதில் பங்கு எடுத்துக்கொள்ள இயலாது” என்று கூறியதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" **I am not here to liquidate the British Empire** " என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் அவர்கள் சொன்னார்கள், அவர் அந்த நாட்டின் பிரதிநிதியாக அப்பொழுது இருந்திருக்கிறார். அவர் கூறிய வார்த்தைகளை நினைவுப்படுத்துகிறேன். நீங்கள் வேண்டுமானால் இந்த மாநாட்டில் பங்கு எடுத்துக்கொள்ளாமல் போகலாம். இந்த "பிரிட்டிஷ்" என்ற வார்த்தையை எடுக்க முடியாது என்று கூறியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிக்கூறத் துணியவில்லை. அதற்குப் பதிலாக அவர் என்ன செய்தார் என்றால், உடனே அவர் பேனாவை எடுத்து 'பிரிட்டிஷ் காமன்வெல்த் மாநாடு' என்றிருந்ததில் "பிரிட்டிஷ்" என்ற வார்த்தையை நீக்கி விட்டு வெறும் 'காமன்வெல்த் மாநாடு' என்று மாத்திரம் அதற்கு மகுடம் சூட்டினார். அன்றிலிருந்து இன்னும் அது காமன்வெல்த் கூட்டமாக இருக்கிறதேயல்லாமல் பிரிட்டிஷ் காமன்வெல்த்தாக இல்லை என்பதை அந்த அன்பருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

'சிங்கத்தினுடைய குகையில் சென்று அதனுடைய பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தது மாதிரி' என்று காலம் சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் சொல்வது வழக்கம். அந்தச் செயலுக்கு இது ஒப்பாக இருக்கிறது. பிரிட்டனிலே அந்த வெஸ்ட் மினிஸ்டர் அபே கட்டிடத்தில் போய், அவர்களுடைய நாட்டிலே இருந்துகொண்டு, அவர்கள் கூட்டத்தில், நம்முடைய தலைவர் பிரிட்டிஷ் காமன்வெல்த் என்பதிலுள்ள "பிரிட்டிஷ்" என்ற பதத்தை நீக்கவேண்டுமென்று சொன்னபோது அது நீக்கப்பட்டு இன்றைக்கு "**Commonwealth for all the Nations which are there**" என்ற முறையில் அங்கு இருக்கும் மற்ற எல்லா நாடுகளுக்கும் சேர்ந்து காமன்வெல்த் அல்லாமல், பிரிட்டனுக்கு காமன்வெல்த் அல்ல என்ற புகழுக்கு இலக்காகிய பெருமை இந்த உலகத்தில் யாருக்கு உண்டென்றால் அது நம்முடைய பாரத நாட்டிற்கும், நம்முடைய பாரத நாட்டுப் பிரதமருக்கும்தான் உரியதே யல்லாமல் வேறு யாருக்கும் அல்ல என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. அப்படி சிறப்பு வாய்ந்து புகழோடு நாம் அங்கம் வகிக்கும் அந்த காமன்வெல்த் நாட்டின் தலைவர் நம் நாட்டிற்கு வந்திருக்கும்போது ஏன் அவர்களை வரவேற்க வேண்டுமென்று கேட்கலாமா? நம்முடைய இந்தியாவை அவர்கள் புறக்கணித்திருக்கலாம். ஆனால் பெயரை மாற்றிக் கொள்ள முடியாது என்ற சர்ச்சில் வார்த்தைகளை அவர்கள் நிறைவேற்றத் தயாராய் இல்லை. நாம் கட்டாயம் அந்த மாநாட்டில் பங்கு கொள்ளவேண்டுமென்று அவர்கள் விரும்பி, அவர்களுடைய பெயரை இதிலிருந்து நீக்கிவிட முன்வந்தார்கள் என்றால், நாம் அந்த இடத்தில் இருக்க வேண்டுமென்று அவர்கள் எவ்வளவு பிரியமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு வேறு பல சான்றுகள் வேண்டியதில்லை.

இருந்தாலும் இன்னொரு சான்று கனம் அங்கத்தினருக்குக் கூற விரும்புகிறேன். சூயஸ் கனால் விஷயமாக நடந்தவைகளை நான் கூறத் தேவையில்லை. இந்த அறிஞர் அவையில் அதை நன்றாக அறிந்தே இருப்பார்கள். அந்த சமயத்தில் பிரிட்டன்



இதில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைப்பற்றி நம்முடைய பிரதமர் பண்டிட் நேரு அவர்கள் எவ்வளவு பலமாக ஆட்சேபித்தார் என்றால், காமன்வெல்த் நாட்டின் உறுப்பினர் இம்மாதிரி ஒரு நடவடிக்கையை எதிர்க்கலாமா என்று கொஞ்சம் கூட யோசிக்காமல் பலமாக, தன் கண்டனக் குறிப்பை உலகம் எல்லாம் கேட்கும்படி செய்தார். இதுமாத்திரம் அல்லாமல் இம் மாதிரி நடவடிக்கையில் இனி ஈடுபட்டால் இந்த காமன்வெல்தி லிருந்து இந்தியா விலகக்கூடும் என்ற விஷயத்தை அறிவித்ததை இந்தச் சபைக்கும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் களுக்கும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். என்ன செய்தார். "நீங்கள் வேண்டுமானால் காமன்வெல்திலிருந்து விலகிப்போய் விடலாம். அதற்காக எங்களுக்கு முக்கியமான சூயஸ் கால்வாயை தேசியமயம் ஆக்குவதற்கு நாங்கள் உடன்படமுடியாது" என்று அவர்கள் சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்தார்களா? இல்லை. என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

அதற்காக அந்த பிரிட்டிஷ் பிரதம மந்திரியை அந்த 10-30 a.m.
ஸ்தானத்திலிருந்து வெளியே அனுப்பினார்களேயல்லாது இந்தியா காமன்வெல்திலிருந்து விலகி விடலாம், நாங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை கைவிட முடியாது என்று அவர்கள் கூறவில்லை. அதைத்தான் என் தோழர்கள் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, காமன்வெல்த்தில் நாம் இருக்கவேண்டுமென்று அவர்கள் பிரதம மந்திரி ஆந்தனி ஈடனைப் போன்ற பெரிய அறிஞர்கள் அந்த சேவையிலிருந்து நீக்கப் பட்டாலும் படலாம் காமன்வெல்திலிருந்து நாம் விலகக்கூடாது என்ற அந்த உயர்ந்த கருத்தைக் கொண்ட அந்த நாட்டின் தலைவி இங்கு வருகிற காலத்தில் நாம் அவர்களுக்கு எப்படி வரவேற்பு அளிக்க வேண்டுமென்ற விஷயத்தில் இது சாதாரண சிறிய விஷயம் அல்ல. உலகமே பிரமிக்கத் தக்கது. அமானுஷியம் என்று நான் கூறியது தவறல்ல. நன்கு யோசித்து அதன் பொருளை கூர்ந்து கவனித்துத்தான் அதைச் சொன்னேன். பல நூற்றாண்டு காலமாக சுதந்திரம் பெற்று காமன்வெல்த்தில் இருக் கிற நாடுகளின் தலைவர்களுக்கு எட்டாத ஒரு யோசனையை நமது பிரதம மந்திரி அங்கு கூறியிருக்கிறார்கள். அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தலை வணங்கி நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நாம் அந்தயிடத்தில் இருக்க வேண்டுமென்று அவர்கள் ஒப்புக் கொண்டிருப்பார்களேயானால் அந்த நாட்டின் தலைவி இந்த நாட்டிற்கு வரும்போது, நாம் ஆடம்பரமாக வரவேற்பதற்கு, 150 ஆண்டுகள் அவர்கள் ஆளுகையிலிருந்து இன்று நமக்கு அவர்கள் மனமாற சுதந்திரம் அளித்து, அந்த சுதந்திர நாட்டை நாம் ஆண்டு வருகிற காலத்தில் அவர்களுக்கு வரவேற்பு அளிப் பதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கிறேன்? அவர்கள் ஆதிக்கத்தின்கீழ் அநேக டொமினியன்களை, பல நாடுகளை வைத்து இருக்கிறார்கள் என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டுகிறேன்.

நமக்கு தெரியும், கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தின்கீழ் இருக்கின்ற நாடுகள் எப்படி நடத்தப்படுகின்றன என்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ் எப்படி நாடுகள் இருக்கின்றன? காலனி ஆட்சி என்று சொன்னால் வைசிராய் ஒருவர் இருக்கிறாரே தவிர, கனடா, ஆஸ்ட்ரேலியா, நியுசிலாந்து—தென் ஆப்பிரிக்கா ஒரு இடத்தைத் தவிர மற்றயிடங்களில் அவர்கள் நிர்வாகத்தில் எதிலும் தலையிடுவது கிடையாது. எப்படி நம் ஜனாதிபதி நமது நிர்வாகத்தில் தலையிடுவதில்லையோ, எப்படி பிரிட்டிஷ் ஆட்சியில் ராணி தலையிடுவதில்லையோ அந்த முறையில்தான் இருக்கிறார்கள். இதை ஆட்சேபிக்கிறார்களே, அவர்கள் ஆட்சியின்கீழ் இருக்கிற நாடுகளை, அவர்கள் காலனிகளை அவர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்பதை அவர்கள் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு நாம் கப்பல் ஏறி பல தூரம் போக வேண்டியதில்லை. நமது எல்லையில் உள்ள அவர்கள் ஆதிக்கத்தின்கீழ் இருக்கிற திபேத்தை எடுத்துப் பார்த்தால் தெரியும். அங்கிருந்த தலைவர் நம்மிடம் இப்பொழுது அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். திபேத் நாட்டின் தலாய் லாமா இன்று எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். திபேத் நாட்டின் தலாய் லர்மா ஒரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, மதத் தலைவரும்கூட. அவர்களுக்கு என்ன மரியாதை காட்டப்படுகிறது? கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தின்கீழ் உள்ள நாட்டிற்கு என்ன மரியாதை கொடுத்திருக்கிறார்கள் என்ற விஷயத்தை கொஞ்சம் அறிந்த அவர்களுக்கு நான் அதிகமாகக் கூறத் தேவையில்லை. திபேத் நாட்டு மக்கள் இன்று சூ-என்-லாய்க்கு இந்தமாதிரி வரவேற்பு அளித்து, வா என்று அழைக்கிற நிலையில் அவர்கள் இருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இதை ஆட்சேபிப்பவர்களை. அவர்கள்தான் அங்கு இதேபோன்ற ராஜ உபசாரத்தில் வர முடியுமா? அல்லது இந்தத் தலைவர்கள்தான் அங்கு போவதற்குள்ள ஒரு நிலையிருக்கிறதா? இதுபற்றி நாம் அதிகமாக கூறத்தேவையில்லை. இதற்காக மாட்சிமை தங்கிய அரசியாருக்கு வரவேற்பு அளிப்பது பற்றி கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருப்பது குறித்து அவர்கள் கிண்டலாக பேசியிருக்க வேண்டாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளம் வந்ததைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் ஒரு சந்தோஷப்படத் தகுந்த விஷயம் வெள்ளம் அடித்துக்கொண்டிருக்கிறபோதே அது முடிவதற்கு முன்னதாக கனம் அமைச்சர்கள் இரண்டு பேர்கள் அந்த பகுதிகளுக்கெல்லாம் வந்து பார்த்து அவர்களுக்கு ஆறுதல்கூறி, உடனே வெள்ளம் வடிவதற்கான முயற்சிகள் எடுத்து, சேதம் அடைந்த பகுதிகளுக்கு உடனடியாக மறுவிவசாயம் செய்ய விதை, உரம் அதற்கு வேண்டிய நிதி அத்தனையும் கொடுத்து, அந்தப் பகுதிகளிலுள்ள நிலங்கள் அனைத்தும் உடனே விவசாயம் செய்கிற நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததை அந்தப் பகுதி மக்கள் மறக்கவே மாட்டார்கள். துன்பத்தில் நட்பை என்றும் மறக்கக்கூடாது என்பதற்கிணங்க, அதாவது வள்ளுவர் கூறியிருப்பதைப் போன்று,





"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு."

என்று வள்ளுவர் கூறியிருப்பதை அவர்கள் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயம் சம்பந்தமான இரண்டொரு விஷயங்களைக் கூற விரும்புகிறேன். உணவு விஷயம் நமக்கு முக்கியமான விஷயமாகிவிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை கடந்து விட்டதாக நினைத்து இரண்டு லட்சம் டன் வெளிநாட்டிற்குகூட ஏற்றுமதி செய்தோம், ஆறு அவுன்ஸ்க்கு தாளம் போட்டுக் கொண்டிருந்த நாம், பிரஜா உற்பத்தியின் வேகம் உணவு உற்பத்தியின் வேகத்தைத் தாண்டி வந்துவிட்டதால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக்கூட மாற்றியமைக்கும்படியாக நேர்ந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டிய ஒரு நிலையும் வந்து இருக்கிறது. இப்படியிருக்கிற நிலையில் தஞ்சை ஜில்லா என்று சொன்னால் அது முழுவதும் அப்படியே பாசன வசதி நிறைந்த ஒரு சோழநாடு என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்களே தவிர ராமநாதபுரம் பகுதியை போன்ற பகுதிகள் அங்கு இருக்கின்றன என்ற விஷயத்தை மறந்து விடுகிறார்கள். தஞ்சை ஜில்லாக்காரன் ஏதாவது வசதி வேண்டுமென்று கேட்டால் தஞ்சைக்காரன் இப்படிக் கேட்கிறானே என்று நகைக்கிறார்கள். தஞ்சைக்கு பருத்தி ஆலை ஏதாவது உண்டா என்று நான் கேள்வி நேரத்தில் ஒரு கேள்வி கேட்டபோது இங்குள்ள அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் சிரித்தார்கள். அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு நூற்பு ஆலை வருகிறது என்று சொன்னவுடன் அதைவிட அதிகமாக சிரித்தார்கள். தஞ்சை ஜில்லா என்று சொன்னால் நெல்லைத் தவிர வேறு ஒன்றுக்கும் லாயக்கில்லை, எல்லாயிடங்களிலும் அது பூர்ணமாகயிருக்கிறது என்ற எண்ணத்தைத்தான், அமைச்சர்கள்கூட கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பகுதிகள் போன்று அங்கும் வறண்ட பகுதிகள் இருக்கின்றன. நாகலோகம் வரை போய் கேணிக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை, கடலில் வீணாகப் போகும் தண்ணீர் நாலு அடி உயரமாகயிருப்பதால் லிப்ட் இரிகேஷன் மூலம் பாசனவசதி கொடுக்க வேண்டுமென்று கோரி அகிலயிந்தியாவில் முதன் முதலாக அங்குதான், அந்தப் பகுதியில்தான் லிப்ட் இரிகேஷன் சர்க்கார் லெவலில், தங்கள் சொந்த தோட்டங்களுக்காக அநேகர் பம்ப் செட்ஸ் வைத்திருக்கலாம், ஆனால் சர்க்கார் துறையில் பாசன வசதி அளிக்கிற முதல் பரிட்சை அங்குதான் நடந்தது. அது நன்கு சிறந்த பலனை அளித்து வருகிறது என்ற விஷயத்தை அமைச்சர்கள் ஒவ்வொருவரும் வந்து பார்த்திருப்பார்கள். 40 கிராமங்களுக்கு கிட்டத்தட்ட 45,000 ஏக்கருக்கு பாசனம் கொடுக்க வேண்டியது பாக்கியாக இருக்கிறது. அதற்கான திட்டங்களை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இதில் ஒரு சிரமம் இருக்கிறதென்று சொன்னால், அரசாங்கம் எங்கள் குறைகளை உணரும்படி சொல்வது தவறல்ல. அதை ஒரு குற்றச்சாட்டு என்று யாரும் கருதமாட்டார்கள். வேலைகளை

எடுத்துச் செய்யும்போது, வேலை நடக்கும் இடத்தில் இது விரைவாக நடக்கமாட்டேன் என்கிறது. இதற்கு ஒரு வழி கண்டுபிடித்து வழி செய்யவேண்டுமென்று சொல்கிறேனே தவிர முயற்சியில் குறையிருப்பதாக சொல்லவில்லை.

"நெடுநீர் மறவி மழுதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். மறவியில்லை, மடியில்லை, இதெல்லாம் இல்லை. நெடுநீர், காலம் நீட்டி, ஒரு வருடத்தில் முடிக்க வேண்டிய திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டுகிற விஷயம் இருக்கிறதே அதை நீக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்தத் திட்டத்தை செய்யவேண்டுமென்று கேட்டால் அரசாங்கம் உடனே உத்தரவிட்டு விடுகிறார்கள். ஆனால் அவை நிறைவேற பல ஆண்டுகள் நீண்டுகொண்டே போகிறது.

இந்த மாதிரி நிர்வாகத்தை நடத்துகின்ற மெஷினரி மெதுவாக போகாமல், ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்றால் அதையும் செய்து துரிதமாக வேலை நடப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குறைபாட்டை நீக்கினால் குறைந்தது ஒன்றரை லட்சம் டண் அளவு தான்யம் அதிகமாக கிடைக்கும். 10 லட்சம் ரூபாய் செலவு செய்தால் 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அதிலும் பழைய நஞ்சை நிலங்கள் பாசனத்திற்கு வரும். அதிலும் இந்த நிலங்கள் நல்ல நிலங்கள் பழைய டெல்டா நிலங்களைப்போன்றே இருப்பதால், இதை யுத்தகால நடவடிக்கையாக கருதிக்கூட நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுவதுகூட தவறு அல்ல என்று நினைக்கிறேன். ஆகவே இதில் முக்கியமாக உடனடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் சம்பந்தமாக, நமது மாகாணம் மிகவும் முன்னேறியிருக்கிறது. நமது மாகாணம் இந்தியாவில் மூன்றாவது இடத்தில் இருந்தது, இப்போது இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறது. இன்னும் குந்தாத் திட்டம் முழுவதிலும் உற்பத்தி ஆரம்பித்து விட்டால் நமது மாகாணம் முதல் ஸ்தானத்தை அடைந்து விடும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வளவு வேகமாக அகில இந்தியாவிலேயே நமது மாகாணம் முன்னேறிக் கொண்டு வருகிறது. இதைப்பார்த்து நாம் எல்லோரும் சந்தோஷமடைகிறோம். ஆனால் இதில் தஞ்சை ஜில்லா மட்டும் நீங்கலாக என்றுதான் ஒரு பகுதியை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. நம் மாகாணத்தில் எங்கள் ஜில்லா தாயில்லாப் பிள்ளையாகத்தான் கருதப்பட்டு வருகிறது. இதை முதல் அமைச்சர் அவர்களே ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரை மின்சார அபிவிருத்தி குறைவாகத்தான் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்கிற விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்.



அகில இந்தியாவிலே நல்ல முறையில் முன்னேறிக் கொண்டு வரும்போது, தஞ்சை ஜில்லாவிற்கு மட்டும், அதிலும் இந்த மாகாணத்திற்கே பூரா உணவையும் அளிக்கிற தஞ்சை ஜில்லாவுக்கு, அங்கு இருட்டில் இருக்கக்கூடிய மக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், ஆகவே இந்த விஷயத்தில் தஞ்சை ஜில்லாவிற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பெரிய தொழில்களை எடுத்துக்கொண்டால், நம்முடைய அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான கடன்களை வாங்கி கனரகத்தொழில்களை ஏற்படுத்துகிறார்கள் என்றும், இம்மாதிரி கடன் வாங்குகின்ற கொள்கையைப் பற்றி கண்டிக்கிற முறையில் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசி வருவதை நாம் பத்திரிகைகளில் பார்க்கின்றோம், இதற்கு நான் ஒரு சிறிய விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இப்போதுதான் நமது நாட்டில் இரண்டு மூன்று உருக்குத் தொழிற்சாலை ஆரம்பித்து வேலை நடந்து கொண்டிருக்கிறது. இப்படியிருக்கின்ற நிலையில் இவ்விதம் ஆரம்பித்து ஓராண்டு காலத்திற்குள்ளாகவே அந்நிய நாட்டு செலாவணியில் 100 கோடி ரூபாய் மிச்சப்படுத்தியிருக்கிறோம் . அப்படியானால் நாம் கடன் வாங்குவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். குறிப்பாக இதைப்பற்றி குறை சொல்லுகின்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்ற தொழில்களை எல்லாம் விட்டு விடலாம், இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த மூன்று உருக்காலைகளை மட்டும் எடுத்துக்கொண்டாலே கழிந்த ஓராண்டு காலத்திற்குள் 100 கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதே மாதிரி இன்னும் பல தொழில்களை நாமே எந்த நாட்டிலிருந்தாவது கடன் வாங்கி நடத்த ஆரம்பித்து விட்டால் நாம் வெளிநாட்டு செலாவணியையே எதிர்பார்க்கவேண்டிய நிலை ஏற்படாது. ஆகவே நமது சக்திக்குத் தகுந்தவாறு இம்மாதிரி வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்தக்கூடிய வகையில் தொழில்களை ஆரம்பிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து கடன்களை வாங்குவதில் என்ன தவறு இருக்கிறது என்ற விஷயத்தை நான் கேட்க விரும்புகிறேன். இதிலும் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு ஏராளமாக உப்பளம் இருக்கிறது. சுமார் 150 சதுர மைல் உப்பளம் இருக்கிறது. இந்தியா முழுவதிற்கும் உப்பு வழங்கப் போதிய உப்பு அங்கு இருக்கிறது. இன்னும் ஜப்பான், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு உப்பு ஏற்றுமதி செய்வதற்கு ஒரு தம்பிடிகூட செலவில்லாமல் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட இடத்தில் ஒரு கனரகத் தொழிற்சாலை ஏற்படுத்தலாம், இதற்காக ஒரு கோடி ரூபாய் சர்க்கார் கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் அதை எடுத்து தனியார் துறையில்தான் ஒரு தொழிற்சாலையை நடத்த வேண்டும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட இடத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த

வேண்டுமென்றால் சுமார் 2 கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டும் என்று தெரிகிறது. ஆகவே இதை அரசாங்கத் துறையி லிருந்தோ அல்லது கூட்டுறவு முறையிலோ இந்த தொழிலை நடத்த முன் வந்தால், ஜிப்சம், மாங்னீசம், அயோடின் புரோ-மெயின் போன்ற விலையுயர்ந்த பல பொருட்களை உற்பத்தி செய் வதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. தங்கத்தைவிட விலை யுயர்ந்த பல பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வசதியிருக்கின்ற காரணத்தினால் நிச்சயமாக இதை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் சொல்வதற்கு பல விஷயங்கள் இருக்கின்றன, மணியடிக்கப்பட்டு விட்டது. ஆகை யினால் சுருக்கமாகச் சொல்லுகிறேன். வாட்டர் வேஸ் கமிஷன் நம் நாட்டிலுள்ள வசதிகளை ஆராய்ந்து பார்த்து படகு போக்கு வரத்துக்காக பல ஆறுகளை சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த சிபாரிசு அரசாங்கத்திற்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். பக்கிங்காம் கனலை சீர்படுத்தி, காக்கிநாடாவிலிருந்து கோடிக் கரை வரை இணைத்து விட்டால் போக்குவரத்துக்கு மிகவும் வசதி யாக இருக்கும். போக்குவரத்து சாதனங்களில் தண்ணீர் மூல மாக போக்குவரத்தை நடத்துவதுதான் மலிவானது என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தக் கட்டணத்தில் வேறு வாகனத் தில் பொருட்களை ஏற்றிச்செல்ல முடியாது. ஆகவே இந்த போக்குவரத்தை சீர்படுத்த வேண்டுமானால் அந்த 'கனலிலுள்ள' சில்ட் எடுக்கவேண்டும். இதற்காக "டிரெட்ஜர்" என்கிற இயந் திரத்தை வாங்கி கொடுக்கவேண்டும். ஆகவே வருகின்ற திட்டத் தில் இதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, தூத்துக்குடி துறைமுக விஷயம் பெரிய சமாச்சாரமாக இருந்துகொண்டிருக்கிறது. இம்மாதிரி பெரிய விஷயத்தை எடுத்து நடத்துகிற நேரத்தில் நான் முன்னால் குறிப் பிட்ட திட்டத்தை சிறிய விஷயமாக கருதி விட்டுவிடக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன். மைனர் போர்ட்களை எல்லாம் சரி யான முறையில் போக்குவரத்துக்கு பயன்படும்படியான முறை யில் சீர்திருத்த வேண்டும். இவ்விதம் எல்லா மைனர் போர்ட்டு களையும் சீர்திருத்தி ஒரு கோஸ்டல் ட்ராபிக்கை நேர் பாதை யாக ஏற்படுத்த வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு இத்தனை நேரம் பேசுவதற்கு அவகாசம் அளித்த தலைவர் அவர் களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI S. M. ANNAMALAI:** கனம் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்னால் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரை மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று காலை நடந்த கேள்வி நேரத்தின்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கார்ப்பரேஷனுக்கு பணம் கொடுத்திருக்கிறோம், அதை இன்னும் வாங்கவில்லை என்றும்,





வாங்கின பணத்தை இன்னும் உபயோகிக்கவில்லை என்றும் சொன் ஞர்கள். நான் தயவுசெய்து நிதி அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன், கார்ப்பரேஷனுக்கு சர்க்கார் இந்தத் தொகையை எப்போது சாங்ஷன் செய்தார்கள்? அந்த விபரம் கார்ப்பரேஷனுக்கு எப்போது தெரிவிக்கப்பட்டது? சர்க்கார் இதற்கு சாங்ஷன் செய்து கார்ப்பரேஷனுக்கு தெரிவிப்பதற்கு மூன்று மாதங்களாகியது. இது யாருடைய பிழை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று மாதங்கள் கழித்து கார்ப்பரேஷ னுக்கு தெரியப்படுத்திவிட்டு, இப்போது கார்ப்பரேஷன் சரியாக பணத்தை வாங்கவில்லை என்று எப்படி கார்ப்பரேஷனை குறை சொல்ல முடியும்? அதைப்போலவே இதற்கு முன்னால் கார்ப்ப ரேஷனில் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக் காரர்கள் 17 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஃபிஷர் என்கிற ஓர் இயந் திரத்தை வாங்கினார்கள். அந்த இயந்திரம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்டது. அதை எப்படி எப்படி உபயோகப் படுத்தவேண்டும் என்று தெரிந்துகொள்ளாமல் 10 ஆண்டுகளாக அப்படியே விட்டு விட்டதின் காரணமாக இப்போது அதை இரவு நேரங்களில் உபயோகப்படுத்துவதற்கு முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குமேல், இப்போது கார்ப்பரேஷனுக்கு கடன் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதின் பின்னால், உடனடியாக இந்த வேலையை நடத்தி முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில், கார்ப்பரேஷன் ஏற்று நடத்தினால் உடனடியாக முடிக்க முடியாது என்று கருதி கான்ட்ராக்ட் மூலம் இரவு பகலாக வேலை நடத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் வேலை நடந்து கொண்டு வருகிறது. கார்ப்பரேஷனுக்கு 15 லட்சம் ரூபாய் கடனுக கொடுப்பதாக சொல்லுகிறார்கள் [illegible] கிராண்ட் கொடுப்பதாகவும் சொல்லுகிறார்கள். [illegible] டுமானுல் சீப் இன்ஜினியரின் அனுமதி கிடை[illegible] பின்னால் [illegible]கலாம், ஆனால் கடனை முன்னால் கொடுக்[illegible] அல்லவா, அதுவும்[illegible]மல் பாதையை செப்பனிட்ட பின்னா[illegible]ன் பணம் தருவோம் [illegible] கண்டிஷனையும் போட்டுவிட்டு, [illegible]ர்ப்பரேஷன் பணத்தை [illegible] வில்லை என்று, அதை உபயோ[illegible]த்துக்கொள்ளவில்லை [illegible] பொறுப்புள்ள ஒரு அமைச்சர், [illegible]லும் அரசாங்கத்தின் [illegible]க்கிய பொறுப்பில் இருக்கின்ற ஒரு நிதி அமைச்சர் [illegible]கிறார் என்றால், உண்மையிலேயே அது [illegible] விஷய மாகத்தான் இருக்கிறது. ஆகையால், [illegible] தெரியும், சர்க்கார் ஒரு திட்டத்தை எடுத்துச் செய்யும்போது எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்று. ஒரு கிணறு வெட்டவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டால், அந்த அதிகாரி பார்க்கவேண்டும், இந்த அதிகாரி பார்க்கவேண்டும் என்று ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆகக்கூடிய நிலையில் நிர்வாகத்தில் எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்று ரெக்கார்ட் மூலமாக என்னால் நிரூபிக்க முடியும். கார்ப்பொரேஷன் உடனடியாக எடுத்துச் செய்யவில்லை, அந்தப் பணத்தை வாங்கவில்லை என்று அவர்களைப் பற்றிக் குறை கூறுவது என்று சொன்னால், நாற்றுக் கட்சிக்காரர்கள் கார்ப்

பொரேஷனில் இடம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் பேரில் எப்படியாவது குறை சொல்லவேண்டுமென்ற ஒரே நோக்கம் தவிர வேறு என்ன இருக்க முடியும்? வேண்டுமானால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் அளிக்கட்டும். எந்தக் காலத்தில் கார்ப்பொரேஷனுக்கு பணம் ஸாங்ஷன் செய்தோம், கார்ப்பொரேஷனுக்கு எப்போது அது தெரிவிக்கப்பட்டது, ஏன் சீப் என்ஜினீயர் பார்த்துத்தான் கொடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள் என்று விளக்கம் கொடுக்கட்டும். கார்ப்பொரேஷனுக்கு வேண்டிய யந்திரங்கள் வாங்கப்படாததற்கு யார் காரணம்? இன்றையதினம் ஒரு 400 டன் மிக்ஸர் யந்திரம் வாங்குவதற்கு அந்நியச் செலாவணி தேவையாயிருக்கிறது. அதற்கு இடம் கிடைக்கவில்லை. யந்திரங்கள் வாங்குவதற்கு கார்ப்பொரேஷனுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதால், அந்த யந்திரங்கள் இருந்தால்தான் இரவு பகலாக வேலை செய்ய முடியும் என்று கார்ப்பொரேஷனுக்குத் தெரிந்ததன் காரணமாக, நாமாகச் செய்வதை விட காண்டிராக்ட்டுக்கு விட்டுச் செய்யலாம், முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் யந்திரங்களை வாங்கத் தவறி விட்டார்கள், ஆகையால் கார்ப்பொரேஷனால் செய்ய முடியாது, எவ்வளவு சீக்கிரத்தில் செப்பனிட முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செப்பனிட்டாகவேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்து, காண்டிராக்ட்டுக்கு விட்டால்தான் இரவும் பகலுமாகச் செய்ய முடியும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை விட்டு கார்ப்பொரேஷனில் மாற்றுக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்த்தால் அதை மக்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக கவர்னருடைய உரையிலே உணவுப்பொருள்களின் விலைவாசியானது குறைந்திருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். எப்படிக் குறைந்திருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்போதுகூடப் பார்த்தால் சென்ற ஆண்டு இதேகாலத்தில் சம்பா அறுவடைக்குப் பிறகு 25-26 ரூபாய்க்கு கிச்சலிச் சம்பா விற்றுக்கொண்டிருந்தது. இந்த ஆண்டு 31-32 ரூபாய்க்கு விற்கிறது. அப்படி இருக்கும்போது கவர்னர் உரையில் விலைவாசி குறைந்துகொண்டு வருகின்றது என்று சொல்வது அவ்வளவு உண்மையல்ல என்பதை நான் இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்றுக்கூட உள்துறை அமைச்சர் அவர்கள் விலைவாசி உயர்ந்து கொண்டு போகிறது, அதுவும் பொருளாதார ரீதியில் உயர்ந்து கொண்டு போகின்றது என்று நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம், இதைப்பற்றி ஒரு முடிவிற்கு வந்த பிறகு இதை எப்படி கட்டுப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வருவோம் என்று சொன்னார்களேயொழிய, உணவுப்பொருள்களின் விலை குறைந்துகொண்டு வருகிறது என்று அவரால் தைரியமாகச் சொல்ல முடியவில்லை. அப்படியிருக்கும்போது கவர்னர் அவர்கள் குறைந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக, சேலம் இரும்பு. இதைக் குறித்து நெய்வேலி நிலக்கரி பயன்படுமா என்பதை ஆராய்ச்சி செய்து முடிவிற்கு வந்தபிறகுதான் சொல்லமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேயே கிழக்கு ஜெர்மனிக்காரர்கள் ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு இரும்பு நன்றாக இருக்கிறது, இதற்கு நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம், சர்க்கார் ஆரம்பிக்க ஒப்புக் கொண்டால் வேண்டிய உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** சொல்லுவதை நன்றாகப் படித்துப் பார்த்துச் சொன்னால் நல்லது. அவர்கள் சொல்லியிருப்பது, பூர்வாங்கமாகப் பார்த்ததில் செய்ய முடியும். இதற்கு மேலும் பரிசீலனை செய்ய 2,000 டன் அந்த நிலக்கரி அவர்களுக்குக் கிடைக்குமானால் இன்னும் பெருமளவுக்கு ஆராய்ச்சி செய்து திட்டவட்டமாகக் கூற முடியும் என்பதுதான்.

**SRI S. M. ANNAMALAI :** நான் பத்திரிகையில் பார்த்த பிறகு தான் சொல்லுகின்றேன். அதே சமயத்தில் பொஹாரோ என்ற இடத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க பிற நாட்டவர்கள் முன் வரவில்லை. அதிகச் செலவிட்டுச் செய்யவேண்டியிருப்பதன் காரணமாக மத்திய சர்க்கார் பகுதி பகுதியாக, பிற நாட்டு உதவி கிடைக்காவிட்டாலும் கூட உடனடியாக ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது, சேலம் இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று எத்தனை ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் இந்தச் சட்ட மன்றத்தில்" ஆகவே துரிதப்படுத்தி உடனடியாக ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே 190 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் தரப்போகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 190 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் தருவதாக இருக்கலாம். அதேசமயத்தில் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், நமது மாநிலத்திற்குரிய பங்கு கிடைத்து விட்டது என்று. அவர்கள் மிகவும் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் மூலமாக ஒரு புள்ளிவிவரம் வந்திருக்கிறது. மாநில வாரியாக எவ்வளவு கேட்டார்கள், அதிலே எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது நம் மாநிலத்திற்குரிய பங்கைத் தந்து விட்டார்கள் என்று சொல்ல முடியும். ஆனால் ஒன்று கேட்கிறேன். மத்திய சர்க்கார் மூலமாக பிற மாநிலங்களில் எத்தனை தொழிற்சாலைகள் எவ்வளவு கோடி ரூபாயில் ஆரம்பித்திருக்கிறார்கள்? மத்திய சர்க்கார் ஆரம்பித்திருக்கக் கூடிய தொழிற்சாலைகளில் நம் மாநிலத்தில் உள்ளது எவ்வளவு? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எத்தனை பெரும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறார்கள்? அதிலே மற்ற மாநிலங்களில் எத்தனை தொழிற்சாலைகள்

ஆரம்பிக்கப் போகிறார்கள்? இந்த மாநிலத்தில் எத்தனை ஆரம்பிக்கப்போகிறார்கள்? இந்தப் புள்ளிவிவரங்களை தயவு செய்து சட்ட மன்றத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமானால் பெருமையோடு சொல்லிக்கொள்ளுங்கள், நாங்கள் கேட்டது இவ்வளவு, நமக்குக் கிடைத்தது இவ்வளவு; பிற மாநிலங்கள் கேட்டது இவ்வளவு; அவர்களுக்குக் கிடைத்தது இவ்வளவுதான்; நம்முடைய பங்கு சரியாக வந்து விட்டது, ஆதலால் பெருமையடைகிறோம் என்று சொல்லிக்கொள்ளலாம். பிற மாநிலங்களில் மத்திய சர்க்கார் எத்தனை கோடி ரூபாயில் எத்தனை பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போகிறார்கள், இந்த மாநிலத்தில் எத்தனை கோடி ரூபாயில் எத்தனை பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று தயவு செய்து சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன்.

அதைப் போலவேதான் 10,200 கோடி ரூபாயில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்ட நேரத்தில் 398 கோடி ரூபாய் நம் மாநிலம் கேட்டும், தருகிறேன் என்று சொன்னது 190 கோடி ரூபாய். இப்போது பிளானிங் கமிஷன் 12,000 கோடி ரூபாயில் மூன்றாவது திட்டத்தைப் போடப்போகிறோம் என்று தொகையை அதிகமாக்கியிருப்பதன் காரணமாக நமது மாநிலத்திற்கு என்ன கிடைக்கவிருக்கிறது? 12,000 கோடியாக அதிகரித்திருப்பதை முன்னிட்டு வீதாசாரப்படி என்ன கேட்டிருக்கிறது என்ன கிடைக்க இருக்கிறது என்று தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் திட்டம் 398 கோடி என்று போட்டு, மத்திய சர்க்கார் 190 கோடி கொடுக்கும்போது பாக்கி ரூபாயை நாம் செலவழிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்களே, மறைமுகமான வரி ஏதாவது விதிக்க இருக்கிறீர்களா, என்ன வரி விதிக்க இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். அப்படி ஏதாவது வரி விதிக்க முற்பட்டால் பெரும் புரட்சி ஏற்படப் போகிறது, மக்கள் அதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுடைய "பர் காபிடா இன்கம்" என்ன என்று ஆராய்ந்திருக்கிறார்கள். 1950-51-ம் ஆண்டில் பர் காபிடா இன்கம் 104-ஆக இருந்தது. 1958-59-ல் 99 ரூபாயாகக் குறைந்து போயிருக்கிறது. இது உண்மையில் வருந்தத் தக்க விஷயமல்லவா என்று சிந்திக்க வேண்டாமா? அதுவும் தவிர, பல ஆயிரம் கோடி ரூபாய்கள் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்து விட்டு, பல ஆயிரம் கோடி ரூபாய்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்துவிட்டு, 12,000 கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செலவு செய்யவிருக்கிறோம். அதே சமயத்தில் மறைமுகமான வரிகளை விதிக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னால், இதுவரையில் செலவழித்த பணம் எங்கே போயிற்று? சாதாரண விவசாயத் தொழிலாளியுடைய பர் காபிடா இன்கம் 104 ரூபாயிலிருந்து 99 ரூபாய்க்குக் குறைந்து விட்டது. இவ்வளவு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும்கூட பர் காபிடா இன்கம்



அதிகமாகவில்லை. 1950-51-ஆண்டில் 4½ அணாவாக இருந்தது. இப்பாது 4 அணாவாகக் குறைந்திருக்கிறது. ஆக, நாட்டிலே ஒரு பெரும் புரட்சி ஏற்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

* SRI K. B. S. MANI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த சபையில் கவர்னர் பெருமான் ஆற்றிய உரையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் அவர்களின் உரை மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இருந்தது. ஆனால் இந்த நாட்டில் ஏற்படக்கூடிய பெரிய முன்னேற்ற பாதை ஒன்றை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. இந்த நாட்டினுடைய தொழில் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் சிறந்தோங்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன செய்யப்படுகிறது என்பதைப் பற்றி வெகு அழகாக கூறியிருக்கிறார். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால், அந்த நாட்டில் உடைய பொருளாதாரமும் தொழிலும் வளர்ந்தால்தான் முன்னேறமுடியும் என்பது பலப் பெரிய நிபுணர்களின் கருத்து. மற்ற நாடுகளிலிருந்து தெரிந்துக் கொண்ட உண்மையும் கூட. இதை அனுசரித்துத் தான் இந்த நாட்டு அரசியலாரும், மத்திய அரசியலாரும் ஆக வேண்டியவைகளை செய்து வருகிறார்கள். எனினும் மற்றைய நாடுகளோடு நம்முடைய நாட்டை ஒத்திட்டுப் பார்க்கும்போது நம் நாட்டினுடைய தொழில் முன்னேற்றம் பெருகுவதற்கு போதுமான தொழில் நுட்ப நிபுணர்களும் அதற்காக மூலதனமும் தேவைப்படுகிறது. மூலதனத்திற்கு பல கோடி ரூபாய் கடன் வாங்கினால் போதும். அதை நிறைவேற்றி விடலாம். ஆனால் அதே நேரத்திலே நாட்டில் மற்றைய வளர்ச்சிகளை பார்க்கும்போது, விவசாயிகளுக்கு விவசாயத்தை வளர்ப்பதற்கு வேண்டிய, அதற்கு போதுமான எருக்களை, அதற்குப் போதுமான நல்ல விஷயங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதற்கு நிபுணர்களும், அறிஞர்களும் தேவைப்படும். அதேபோல் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களையெல்லாம் பல அந்நிய நாடுகளிலிருந்து கொண்டு வந்து விவசாயத்தையும் தொழிலையும் வளர்த்துவிட முடியும். ஆனால் இந்த நாட்டிலே பெரும் குறையாக இருக்கக்கூடியது, மிக பயங்கரமாக இருந்து வருவது தீண்டாமையாகும். இந்த நாட்டிலே தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமானால் வெளி நாடுகளிலிருந்து இயந்திரமோ அல்லது நிபுணர்களோ கொண்டு வந்தால் முடியாது. பல கோடி ரூபாய் செலவழித்தாலும் முடியாது. அதற்கான திட்டங்களை நமது அரசியலார் சட்டத்தின் மூலம் மட்டும் செய்யாமல், அதை நடைமுறையிலும் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். 11.06 a.m.

[Sri K. B. S. Mani] [23rd January 1961

உதாரணமாக பல விஷயங்களை கூற முடியும். இந்த அரசாங்கம் முறையாக பல பெரிய நன்மைகளை பொதுமக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்து வருகிறது. கடந்த பேய் மழையின் போது அரசாங்கம் தஞ்சை ஜில்லாவில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உபகாரம் செய்தார்கள். இந்த பேய் மழையின் காரணமாக தஞ்சை ஜில்லா மிகமிக பயங்கரமாக பாதிக்கப்பட்டது. அதிலும் அதிகப்படியாக சீர்காழி தாலூகா பாதிக்கப்பட்டது. இந்த தாலூக்காவை பொறுத்தவரையிலே அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்த போதும்கூட பல அபாயங்களை கண்டார்கள். கண்டு பெரிதும் வேதனைப்பட்டார்கள். உடனே அந்த மாவட்ட பெரிய அதிகாரிகளை கூப்பிட்டு நேரடியாகவும், உடனடியாகவும் நிவாரணம் அளிப்பதற்காக 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டது. ஆனால் அப்படி கொடுக்கப்பட்ட ரூபாய் முழுவதும் செலவழிக்கப்பட்டதா என்று பார்க்கும்போது அந்த ரூபாயிலே பாதிக்குமேல் செலவழிக்கப்படாமல் சர்க்காருக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. என் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் ஏழைகளுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனத்தோடு பணத்தைக் கொடுத்தாலும் அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள் மக்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலே இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த சபைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மக்களுடைய அரசாங்கம் மக்களுடைய நலனுக்காக, மக்களிடமிருந்து பல வகையிலும் பணத்தை வசூல் செய்து அதை ஏழை மக்களுக்கு உதவ முன் வரும்போது அதிகாரிகள் அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பதுதான் இதற்கு காரணம். ஒரு அதிகாரி கடந்த வருஷம் செப்டம்பர் மாதம் என்று நினைக்கிறேன், மாயவரத்தில் நடந்த ஒரு ஆபீஸர்கள் கூட்டத்திலே, நாட்டிலே சர்க்கார் கொடுத்தால் அதனை கொடுக்க வேண்டும் என்று ஏதாவது நிபந்தனை இருக்கிறதா, இதெல்லாம் எலக்ஷன் காரர்கள் செய்யவேண்டியது என்றுகூட கூறியதாக கேள்விப்பட்டேன். இதை பார்க்கும்போது உண்மையிலேயே அதிகாரிகள் எவ்வளவு கல் நெஞ்சம் படைத்தவர்களாக ஈவு இரக்கம் அற்றவர்களாக அரசாங்கத்தின் போக்கை உணர்ந்து நடக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது மிக வேதனைப்படக்கூடிய நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் அதிகாரிகள் சரியாக செய்கின்றார்களா என்று பார்க்க வேண்டியது மிக முக்கியம். அந்த வகையிலே அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபாயில், 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரூபாய் ஏன் அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது, திருப்பி கொடுக்கப்பட வேண்டிய அளவுக்கு அங்குள்ள மக்கள் சேதமடையவில்லையா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். இந்த மாதிரி நிலைமையை நோக்கி பார்க்கும்போது உண்மையிலே அங்கு பாதிக்கப்பட்ட மக்களில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்தான் அதிகம். ஆகவே



23rd January 1961] [Sri K. B. S. Mani]

இந்த மக்களுக்கு உதவி செய்ய முடியாத நிலைமைதான் அங்கு இருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு கடந்த ஆண்டு கவர்னர் பெருமான் செய்த உரையில் கூட பிற்பட்ட வகுப்பு மக்களைப் பற்றியோ அல்லது தீண்டாமை ஒழிப்பைப் பற்றியோ ஒரு சொல் கூட கூறவில்லை என்பதை மிக கஷ்டத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த நாட்டிலே தீண்டாமையை உடனடியாக தீர்த்துவிட முடியாது. அது அவ்வளவு சுலபமான காரியமும் அல்ல. தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று பல காரியங்களை அரசாங்கம் மேற்கொண்ட போதிலுங்கூட, இன்னும் பல இடங்களிலே பழைய சட்டதிட்டங்கள் இருந்து வருகின்றதாலே அவைகளை திருத்தி அமைக்கவேண்டும். இப்போது வருகின்ற சட்டசபை கூட்டத்திலே கூட, நடை முறையிலே இருந்து வரும் சிட்பண்டு சட்டத்தை திருத்தப் போவதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் அவைகளை காட்டிலும் மிக முக்கியமானது, இந்த பழைய வெள்ளைக்கார ரெவின்யூ ஆக்ட்டை திருத்த வேண்டியது மிக அத்தியாவசியமாகும்.

வீடுகள் கட்டிக்கொள்வதற்கும், மனைகள் கொடுப்பதற்கும் சௌகரியமாக செய்யக்கூடிய சட்டங்கள் பழைய ரெவின்யூ ஆக்ட்டிலே இல்லை. சாதாரணமாக ஒரு மனைக்கட்டை ஆர்ஜிதம் செய்யவேண்டி இருந்தால் ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிறது. 4 (1) கிளாஸ் போட்ட பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் ஆகியவர்களிடம் சென்று பார்த்து எழுதிக் கொடுத்து விட்டு வந்தால், உடனடியாக மனைக்கட்டுகள் கிடைப்பது இல்லை. எந்த மனைக்கட்டை கேட்கிறோமோ அதை நமக்கு கொடுப்பதற்குள் அந்த இடத்திலே வேறு யாராவது வாழை இன்னும் ஏதாவது தோட்ட வகைகள் பயிர்ச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவே அப்படி நமக்கு மனைக்கட்டு கிடைக்கும்போது அதிலே வீடு கட்டி கொள்வதற்கு முடியாத ஒரு நிலைதான் ஏற்படுகிறது. பின்னர் அப்படியே விட்டு விடுவதால் பல இடங்களில் நிலங்கள் தரிசு ஆகவும், புறம்போக்காகவும் இருக்கிறது. இதை அரசாங்கத்தின் கணக்கில் எடுத்துப் பார்த்தால் தெரியும். ரெவின்யூ டிபார்ட்மெண்டாரால் நிலம் அளிக்கப்படும், ஏழைகள் வசிக்க இடம் கொடுக்கப்பட்டும் ஏன் அவர்கள் வீடு கட்டிக் கொள்ளவில்லை, என்றால் அதற்கு இதுதான் காரணம். ஆகவே இந்த ரீதியில் இல்லாமல் பழைய சட்ட திட்டங்களை மாற்றியமைத்து, ஜில்லா வெல்பர் ஆபீசருக்கும், கலெக்டருக்கும் போதுமான அதிகாரத்தை கொடுத்து இந்த நாட்டில் உள்ள பின் அடைந்த ஏழை மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சென்னை நகரை பொறுத்த வரையில் சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் நகரம் பூராவிலும் பல காலனிகள் கட்டியிருந்தும் ஒரு ஹரிஜனங்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கவில்லை. அதற்கு யாராவது ஒருவர் மனு செய்து கொண்டு இருக்கிறார்களா என்று கேட்டால் பல பேர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

[Sri K. B. S. Mani] [23rd January 1961

ஆனால் யாருக்கும் கிடைக்கவில்லை. இப்பேர்ப்பட்ட ஒரு நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். சி.ஐ.டி. யாரால் கட்டப்படும் ஒவ்வொரு காலனியிலும் இத்தனை சதவீதம் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருக்க வேண்கும். அப்படி இல்லையென்றால் எந்த காலனியிலும் கலப்பு முறையில் வாழக்கூடிய, பிற்பட்ட மக்களை உயர்த்தக்கூடிய முறையில் காலனியை அமைக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே ஒவ்வொரு காலனியிலும் எல்லோரும் சேர்ந்து வாழும் பழக்கத்தை உண்டாக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் அவர்களுக்கு என்று ஒதுக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான் நாளடைவில் தீண்டாமையை தீர்க்க முடியுமே யொழிய மற்றவற்றால் முடியாது.

எந்த துறை எடுத்துக் கொண்டாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒதுக்கப்பட்டு இருப்பதை காணலாம். பஸ் பெர்மிட்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தாழ்த்தப் பட்டவன் பஸ் பெர்மிட்டுக்கு மனு செய்தால், அது அவனுக்கு கிடைப்பது குதிரைக் கொம்பாக தான் இருக்கிறது. அப்படியே அவனுக்கு கிடைப்பதாக இருந்தாலும் மேலேயுள்ள பெரிய கம்பெனிக்காரர்கள் மேல் கோர்ட்டுக்கு போகிறார்கள். ஆகவே இதிலும் ஹரிஜனங்களுக்கு கட்டாயமாக இவ்வளவு சதவீதம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடும் ரீதியிலே சட்ட திட்டங்களை திருத்துவது மிகவும் அத்தியாவசியமாகும்.

கிணறு வெட்டுவது போன்ற சாதாரண விஷயங்களை எடுத்துக் கொண்டாலும் கூட அந்த நிலம் மடங்களுக்கோ, கோவில்களுக்கோ சொந்தமாக இருக்குமானால் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டு அங்கே கிணறுகள் வெட்ட முடியவில்லை. கிணறுகள் வெட்டுவதற்கு புறம்போக்கு நிலம் இல்லை என்றால், அந்த நிலம் கோவில்களுக்கோ, மடாதிபதிகளுக்கோ அல்லது தனிப்பட்டவர்களுக்கோ சொந்தமாக இருந்தால், அவர்கள் அந்த இடத்தில் கிணறு வெட்ட இடம் கொடுக்க மறுத்தால், ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டார் நில ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்குள் 2, 3 வருஷங்கள் ஆகிவிடும். அதற்குள் கிணறு வெட்டுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்த அந்த இடம் நஞ்சையாகி விடும். இம்மாதிரியான நிலைமை வளர்ந்து கொண்டுதான் போகிறது. இம்மாதிரி நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், அதற்கெல்லாம் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தில் இருக்கக்கூடிய பிடிப்புகளை தளர்த்தி ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டு இது விஷயத்தில் உபயோககரமான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கும்படி செய்ய வேண்டும். நாடு எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும் சரி, நாட்டிலுள்ள வீடுகளெல்லாம் ஆலைகளானாலும் சரி, நாட்டிலுள்ள ஏழை எளியவர்களெல்லாம் குபேரர்களாக ஆனாலும் சரி, மன்னாதி மன்னர்களானாலும் சரி, பாரதியார் சொன்னதுபோல் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக ஆகிவிட்டாலும் சரி; இந்த நாடு மற்ற



23rd January 1961] [Sri K. B. S. Mani]

நாடுகளுக்கு கீழேதான், தலை பணியவேண்டிய நிலைமையில் தான் இருக்கும் தீண்டாமை ஒழிக்கப்படாவிட்டால். நாட்டிலுள்ள மக்கள் நாகரீகமாக வாழ்கிறார்கள், இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு ஹரிஜனங்களுக்கு எவ்வளவோ செய்ய வில்லையா, இப்படி குறை பாடுகள் இருக்கிறது என்று சொல்கிறார்களே என்று கேட்கலாம். இந்தச் சபையிலுள்ள 30, 35 ஹரிஜன எம்.எல்.ஏ.-க்களில் கண்ணோட்டத்தைக் கொண்டு பார்ப்பது மிகவும் தவறு. 1,000 இடங்களில் காண்பிக்கலாம். பஞ்சாயத்து போர்டுகள் அமைந்த இடங்களில் கூட பஞ்சாயத்து மெம்பர்கள் ஹரிஜனங்கள், பஞ்சாயத்துக் கோர்ட்டில் உட்காரக் கூடாது என்று சொன்ன இடங்களை மந்திரிகளுக்கு காண்பித்திருக்கிறோம். அவர்களும் பார்த்திருக்கிறார்கள். இம்மாதிரி கேவலமான நிலைமையை களைந்தெரிய வேண்டும். மற்ற எவ்வளவோ காரியங்களில் கவனம் செலுத்தினாலும், தீண்டாமை ஒழிப்பில் இன்னும் துரித மாக, வேகமாக கவனம் செலுத்தவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.

அதோடுகூட, சர்க்கார் சில ஒழுங்கு முறைகளை கையாண்டால் தான், உண்மையாகவே இம்மாதிரியான நிலைமையை போக்க முடியும். அயல் நாடுகளில் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவந்திருக்கிறார்கள். நம்முடைய எம்.எல்.ஏ-க்கள் சிலரும் அயல் நாடுகளுக்கு சென்று வந்திருக்கிறார்கள். அயல் நாடுகளில் எந்தக் காரியங்களை எடுத்துக்கொண்டாலும் ஒழுங்கு இருக்கிறது. எந்தத் துறை பணியாளர்களாக இருந்தாலும், ஒரு யுனிபாரம் இருக்கிறது. அந்த யுனிபாரம் முறையை நம்முடைய நாட்டில் அமுல் நடத்தினால் தான், ஒவ்வொரு துறையிலும் ஒரு ஒழுங்கு முறை ஏற்படும். ஆசிரியர்களை எடுத்துக்கொண்டாலும் சரி, இன்னும் அமைச்சர்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது எம்.எல்.ஏ-க்கள், எம்.பி-க்கள் ஆகியோர்களை எடுத்துக்கொண்டாலும் சரி, ஒவ்வொரு துறை பணியாளர்களுக்கு ஒரு யுனிபாரம் ஏற்படுமேயானால், ஒவ்வொரு துறையிலும் ஒழுங்கு முறை ஏற்பட்டு அவர்களுடைய கடமைகளை நேர்மையாகவும், ஒழுங்காகவும் நிறைவேற்ற முடியும். அப்படி ஒரு ஒழுங்கு முறையை கையாளும்பொழுது நான் தாடி வைத்திருக்கிறேனே என்று ஒரு மெம்பர் கேட்கலாம். அப்படி ஒழுங்கு முறை ஏற்படும்பொழுது அவசியப்பட்டால் நான் தாடியைக் கூட எடுத்துவிடுவதற்கு தயாராக இருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒழுங்கு முறையினால்தான் போலீஸ் இலாகாவில் கட்டுப்பாடு இருக்கிறது. மிலிடரியில் கட்டுப்பாடு இருக்கிறது. நேவியில் கட்டுப்பாடு இருக்கிறது. காரணம் அவர்களுக்கு ஒரு யூனிபாரம் இருக்கிறது. "Do or die" என்று சொல்வது போல, அவர்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் யூனிபாரம்தான். அந்த Uniform Method-ஐ நம் நாட்டில் கொண்டுவருவது மிகவும் அவசியமாக இருப்பதோடு, அதுதான் சர்க்காரின் முதல் வேலையும், கடமையுமாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நம் குழந்தை

[Sri K. B. S. Mani] [23rd January 1961

களையாவது நல்ல ஒழுங்கு முறைக்குக் கொண்டு வர முடியும். உண்மையில் நாகரீகத்தின் பெயரால் பல சீர்கேடான காரியங்கள் இந்த நாட்டில் நடந்துவருகின்றன. நாகரீகத்தின் பெயரால் சீர்கேடான நிலைமை வளர்ந்துவிடாமல் தடுக்கவேண்டுமென்றால் 'யூனிபாரம் மெதர்டு' அவசியம் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் அடிப்படையை திருத்த முடியும். அடிப்படையில் நாகரீகத்தின் பெயரால் ஏற்பட்டுள்ள கேவலமான நிலைமையை திருத்த முடியும். தீண்டாமையை ஒழித்தால்தான், நாடு உண்மையிலேயே முன்னேற்றம் அடைந்ததாகக் கருதப்படும் என்று கூறி, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு வணக்கம் கூறி, முடிக்கிறேன்.

* SRIMATHI KAMALAMBUJA AMMAL: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் தன்னுடைய உரையிலே பெரு மழையின் காரணமாக சில இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டாலும் கூட, அந்த இடங்களுக்கெல்லாம் வேண்டிய நிவாரணங்கள் அவ்வப்பொழுது கொடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். அது பெரிய மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும். ஒரு முறை கஷ்டப்பட்டு நல்ல விவசாயத்தை தொடங்கி, பயிர்களெல்லாம் நன்றாக வளர்ந்து வந்த பிறகு, பெருமழையின் காரணமாக சேதம் ஏற்பட்டதினால், மறுபடியும் அதற்கு வேண்டிய பொருளைப் போட்டு விவசாயத்தை தொடங்குவது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கும் என்ற காரணத்தினால், அவர்களுக்கு விதைகளையும் கொடுத்து உரத்திற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து, நல்ல வகையிலே விவசாய மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து மறுபடியும் உணவு உற்பத்தி பாதிக்காத வகையிலே, விளைச்சல் நல்ல முறையிலே ஏற்படக்கூடிய வகையில் நிவாரண உதவி அளிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில இடங்கள் மழையினால் பாதிக்கப்பட்டாலும் கூட, வறண்ட பிரதேசங்களில் இருந்த பயிர்களெல்லாம் மழையின் காரணமாக நன்றாக செழுமையாக வளர்ந்து, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நல்ல மகசூலைக் கொடுக்கக்கூடிய வகையில், நஷ்டத்தையும் ஈடுகட்டி அதற்கு மேலும் மகசூல் காணக்கூடிய முறையில் இந்த மழை நமக்கு உதவி இருக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனாலும், நிவாரணம் அளிக்கும் விஷயத்தில் சற்று துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக பொன்னேரி தாலுகாவில் கீழ் பகுதியிலே ஆற்றங்கரை ஓரங்களில் உள்ள வயல்களெல்லாம், ஆற்றில் வெள்ளப் பெருக்கு எடுத்ததினால், உடைப்பு ஏற்பட்டு மணல் மேடு ஆகிவிட்டது. பயிர்களெல்லாம் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது. பொது மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் நானும் அந்தப் பகுதிகளுக்கு சென்று பார்த்தோம். உண்மையிலே அந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது என்ன சொல்வது என்று தெரியாமல் பிரமிக்கக்கூடிய அளவுக்கு அந்த வயல்கள் 4, 5 அடி [illegible] பார்த்திருந்தன. அந்த வயல்களிலுள்ள [illegible]



23rd January 1961] [Srimathi Kamalambuja Ammal]

தாங்களாகவே விவசாயிகள் அப்புறப்படுத்தவேண்டுமென்று சொன்னால், ஓரிரண்டு வருஷங்களில் ஆகக்கூடிய காரியம் இல்லை. அமைச்சர் அவர்கள் அந்த இடங்களுக்கு 'புல் டோசர்கள்' கொடுத்து உதவி செய்ய முடியுமானால் விவசாயிகளுக்கு கொடுத்து உதவி செய்யலாம் என்று யோசனை கூறினார்கள். உடனடியாக அந்த வேலையைச் செய்வதற்கு, அந்த மணலை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மிகவும் துரிதமாக எடுக்கவேண்டும். இல்லை என்று சொன்னால், நிவாரணம் கொடுத்தால் பயிர் செய்யக்கூடிய ஒரு சில இடங்களிலும், மணல் மேட்டுப் பகுதிகள் 2, 3 ஆண்டுகளுக்கு பயிர் செய்யப்படாமல் அப்படியே விடப்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் இருந்து வருகிறது. ஆகவே, இந்த மணல் மேடுகளை அப்புறப்படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலையை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்கொண்டு நடத்தப்போகிறோம் என்று குறிப்பிட்டிருப்பது பெரிய மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னால், வர இருக்கிற பொதுத் தேர்தலில் இதை ஒரு பிரச்னையாக எடுத்துக் கொண்டு, மாநில அரசாங்கத்திற்கு ஒன்றும் யோக்கியதை இல்லை, இதைக் கூட மத்திய சர்க்காரிடம் கேட்டு வாங்கக்கூடிய நிலைமை இல்லை என்று சொல்லி இதை ஒரு பெரிய தேர்தல் பிரசாரமாக எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையில் எதிர்க்கட்சிகள் இல்லையே என்ற மனக்கவலை அவர்களுக்கு இருக்கும்பொழுது, காலாகாலத்தில் திட்டங்களை வகுத்து மக்கள் நல்ல சுபிட்சமான வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு அது ஒரு பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. நல்ல காரியங்கள் செய்யும்பொழுது ஒரு சாராருக்கு மகிழ்ச்சி, மற்றொரு சாராருக்கு மனக்கிலேசம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னால், சுயநலம் தான் அங்கு தாண்டவமாடுகிறது, மக்களுடைய நலன் அல்ல என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் கவர்னர் பெருமான் உரையில் இடம் பெறவில்லை என்று சொன்னால், இந்நேரம் எத்தனையோ மேடைகளிலே, இத்திட்டத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு யோக்கியதை இல்லை என்று சொல்லுவதற்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும். ஆகவே இன்றைய தினம் வாய் அடங்கிப் போகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் பல துறைமுகங்கள் நம் நாட்டிலே சீர்படுத்த வேண்டிய நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக, பழவேற்காட்டை எடுத்துக்கொள்வோமேயானால், டச்சுக்காரர்கள் இருந்த காலத்தில் அது நல்ல வியாபார ஸ்தலமாக இருந்ததால் அங்கேயுள்ள மக்கள்

[Srimathi Kamalambuja Ammal] [23rd January 1961

நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது டச்சுக்காரர்கள் போய்விட்ட பிறகு, துறைமுகம் இல்லாத காரணத்தால், அங்கேயுள்ள மக்கள் வாழ வழியில்லாமல், வீடுகளையும், வீட்டின் உத்திரங்களையும் விற்று, பிழைப்புக்கு வழியில்லாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு படகு கட்டும் தொழிற்சாலையாவது அமைத்தால் நலமாக இருக்குமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தூத்துக்குடித் துறைமுக விஷயத்திலே அரசினர் எவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டார்களோ, அதே அக்கரையை பழவேற்காடு துறைமுக விஷயத்திலும் எடுத்துக்கொண்டு, அங்கே ஒரு படகு கட்டும் தொழிற்சாலையையாவது ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கும்மிடிபூண்டியில் ஏற்கெனவே ஒரு "அம்மியூனிஷன் டெப்போ" இருந்தது. அங்கே ஏராளமான மக்கள் வேலை செய்து வந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அதை எடுத்துவிட்டார்கள். அதன் காரணமாக இப்பொழுது பலர் வேலை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த டெப்போ இருந்த இடத்திலே ஒரு கனரக எலெக்ட்ரிக் தொழிற்சாலை ஏற்படுத்துவதாக ஒரு ஆலோசனை இருக்கிறது என்று பத்திரிகைகளில் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். அந்தப் பிரதேசம் ஒரு வரண்ட பிரதேசம், விவசாயம் செய்வதற்கு தண்ணீர் வசதியில்லாத பிரதேசம். ஆகவே, அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தப் போகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பிராந்திய மக்கள், ஒரு முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷம் அடைவானோ, அதுபோல் இருந்தார்கள். அங்குள்ள மக்கள் வளமாக வாழவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தபொழுது, அடுத்த நாளே அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது என்ற செய்தி வெளிவந்தது. இன்றைக்கு நமது மாகாணத்திலே 26 தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது. ஆகவே ஒரு ஜில்லாவுக்கு இரண்டு தொழிற்பேட்டைகளாவது நிறுவப்படும். ஒரு பெரிய தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், ஒரு தொழில் பேட்டையையாவது அங்கே நிறுவவேண்டும். நமது தொழில் அமைச்சர் அவர்கள்கூட அந்த டெப்போ இருந்த இடத்தை பார்வையிட்டார்கள். எட்டு சதுர மைல் விஸ்தீரணம் இருக்கிறது. தொழில் பேட்டை ஆரம்பிப்பதற்கு இடம் வசதியாக இருக்கிறது. நமது நாட்டின் வட கோடியிலே இருக்கும் இந்த கிராமத்தைப் புறக்கணிக்காத வகையிலே, இங்கே ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்துவதற்கு வசதி இருக்குமா என்பதை கவனித்து, அப்படி வசதியிருக்குமேயானால், கட்டாயமாக ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மன்றத்திலே கவர்னர் பெருமான் உரையின் மீது பேசும்பொழுது, இந்த மாகாணத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கு ஏன் தவறிவிட்டார்கள், தமிழ் நாடு என்று



23rd January 1961] [Srimathi Kamalambuja Ammal]

பெயர் வைப்போம் என்று ஏன் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாடு என்று பெயர் வைப்பதிலே தயக்கம் ஒன்றும் இல்லை. தமிழ் நாடு என்று பெயர் வைப்பதினாலே, இன்றுவரை சென்னை மாகாணம் கண்டிராத முன்னேற்றத்தை நாம் காணமுடியுமென்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் விளக்கிக் கூறுவார்களேயானால், இந்த நிமிஷத்திலே வைத்துக்கொள்வதற்குத் தயாராயிருக்கிறோம். தமிழ் நாடு என்று பெயர் வைத்த உடனேயே, தமிழ் நாட்டிலுள்ள பசிப்பிணி ஒழிந்துவிடும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடும், மற்றும் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என்று சொல்வார்களேயானால், ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். அப்படிப் பெயர் வைப்பதன் மூலமாக எல்லாப் பிரச்னைகளும் ஒழிந்துவிடும், மக்கள் சுபிட்சமாக வாழமுடியுமென்ற நம்பிக்கை இருக்கிறது என்று எல்லோருக்கும் தெளிவுபட விளக்குவார்களேயானால், அதை ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபம் இருக்காது. தமிழ் நாடு என்று பெயர் வைத்தாலும், யார் யார் எந்தத் தொழிலைச் செய்ய முன்வர வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும். பெயரை மாத்திரம் மாற்றி வைத்துவிடுவதினாலே, எந்தவிதமான முன்னேற்றத்தையும் கண்டு விட முடியாது. அப்படியென்றால், ஏன் இத்தனை கஷ்டங்கள், ஏன் பல திட்டங்களைப் போட்டு நாம் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறோம்? தமிழ் நாடு என்று பெயர் வைக்கும் ஒரு பிரச்னை தீர்ந்துவிட்டால், அத்துடன் மற்ற எல்லா பிரச்னைகளுமே தீர்ந்து விடுமேயானால், அதை ஏற்றுக்கொள்வதற்கு ஆட்சேபம் இருக்காது. சென்னை என்று சொன்னால், உலகத்திலே எல்லாக் கண்டங்களிலும் பிரபல்யமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக அந்தப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறோம். பிரிந்து போனபிறகு, ஆந்திரம் என்று வைத்துக்கொண்டார்கள், கேரளம் என்று வைத்துக்கொண்டார்கள். சென்னை ராஜ்யம் எப்பொழுதும் போல் இருந்துகொண்டிருக்கிறது. சென்னைக்கு தமிழ் நாடு என்று பெயர் வைத்தால்தான் தமிழ் நாடு ஆகும், இல்லாவிட்டால் தெலுங்கு நாடு ஆகிவிடுமோ என்ற சந்தேகம் நமக்கு வேண்டியதில்லை. ஆகவே தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள் என்று சொன்னால் அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லி தேர்தலிலே போட்டியிடுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்குமென்ற காரணத்திற்காக, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்தப் பிரச்னையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். மக்களும் இதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். சென்ற 10 அல்லது 12 ஆண்டுகளிலே நமது மக்கள் எல்லோரும் தெளிவு பெற்று, யார் சொல்லுவது நன்மை, யார் சொல்லுவது தீமை என்று என்று கண்டுபிடிக்கும் சக்திபெற்ற மக்களாக இருக்கிறார்கள். வேண்டுமானால், கூட்டங்களிலே கை தட்டுகிறார்களே என்று சொல்லலாம். யார் எதைச் சொன்னாலும் கைதட்ட வேண்டுமென்ற மனப்பான்மை இருக்கிறது என்ற காரணத்தினாலே கைத்தட்டுகிறார்களேயொழிய, ஏதோ நல்லதைச் சொல்லிவிட்டார்கள், அதற்காக கை தட்டுகிறார்கள் என்று

[Srimathi Kamalambuja Ammal] [23rd January 1961

நினைத்து ஏமாறக் கூடாது. இது போன்ற பிரச்னைகள் தேர்தல் சமயங்களிலே பிரசாரம் செய்வதற்குத்தான் உதவும். அந்த வகையிலும் மக்கள் நன்றாக— புரிந்துகொள்வார்கள்.

மற்றும் எல்லாத் துறைகளிலேயும் நாம் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இன்னும் அதிகப்படியான ரெயில்வே பாதைகள் நிறுவப்படுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். படுக்கையிலே படுத்திருந்தவன் உடனே நின்று எழுந்துவிட முடியாது. அதைப்போல் ஒவ்வொரு திட்டமாக வகுத்து அதிலே முன்னேற்றம் காணவேண்டுமேயொழிய, எடுத்த எடுப்பிலே அடிக்கடக்காலிலிருந்து நேராக மேல் மாடிக்குப் போக முடியாது. படிப்படியாக ஏறித்தான் போகவேண்டும். கவர்னர் பெருமான் உரையிலே சொல்லப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்றும் காலத்திலே துரிதமான முறையிலே அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI D. S. AUTHIMOOLAM:** சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையிலே முக்கியமான விஷயங்கள் சொல்லப்படவில்லை. சென்ற வருஷம் கவர்னர் உரையில், குறைந்த வருமானக்காரர்களைப் பொறுத்தவரையில் விலைவாசிகள் பயங்கரமாக இருக்கின்றன என்றும், அரசாங்கம் கவலைப்படுவதாகவும், நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு எழுதியிருக்கிறோம் என்றெல்லாம் விளக்கமாக இருந்தது. இந்த வருஷம் அதைப்பற்றி பேச்சு மூச்சே இல்லை. கவர்னர் பெருமான் பெயரில் இந்த அறிக்கை இருந்தாலும், அதைத் தயார் செய்வது நமது நிதி மந்திரி அவர்கள் என்றே நினைக்கிறேன். சாமர்த்தியமாக இந்த விஷயங்களை எல்லாம் நழுவ விட்டிருக்கிறார்கள்.

இந்த தேசத்தில் அரசாங்கம் யார் வேண்டுமானாலும் நடத்தலாம். ஆனால், திறமையாக நடத்த வேண்டும் என்பதுதான் முக்கியமானது. மக்கள் வாங்கும் சக்திக்கு உட்பட்டு, நாட்டில் சாமான்களின் விலைகள் இருக்க வேண்டும், அது ஆடம்பரப்
11-30 a m பொருளானாலும் சரி, அல்லது சாதாரணப் பொருளானாலும் சரி. எல்லாம் ஒரே விலை யேற்றம். ஜீனி விலை ரூ. 1–10–0 ஒரு வீசைக்கு. ஜீனியைப் பற்றிச் சொன்னால், பாயாசம் சாப்பிடுகிறவர்களுக்கு அந்தக் கவலை, எங்களுக்குக் கவலையில்லை யென்பார்கள். நாங்கள் சோஷலிஸத்தில் மூழ்கி விட்டோம் என்று நீங்கள் எங்களுக்குப் பதில் சொல்லி விடுவீர்கள். அதை விட்டு விடுகிறேன். சாதாரண உப்பை எடுத்துக் கொள்வோம். படி 1¾ அணா என்று நினைக்கிறேன். சில தினங்களாக அதிக மழை காரணமாக, படிக்குக் காலணா அதிகரித்திருக்கலாம். ஆகவே, உப்பு, படி ஒரு பைசா விற்றது, இன்று 1½ அல்லது 1¾ அணா. அந்தக் காலம் போய் விட்டது. நீங்கள் என்னவோ பெரிய ஸைஸ் ஐந்தாண்டுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று சொல்லிக்கொண்டு, ஐந்து வருஷத்திற்கு ஒரேயடியாகப் பட்ஜட்டைப் போட்டுவிடுகிறீர்கள். அதையெல்லாம் பற்றி அதிகமாகப் பேச, நமக்கெல்லாம் அதிகமாகப் புரியாது. ஐந்தாண்டுத்



23rd January 1961] [Sri D. S. Authimoolam]

திட்டங்கள் நம் நாட்டின் பொருளாதார சக்தியைப் பொருத்தோ, நமக்கிருக்கும் (Resource) ரிஸோர்ஸைப் பொருத்தோ இருக்கவில்லை. நீங்கள் பாட்டுக்கு 8,000 கோடி யென்றும், நம் திட்டம், இவ்வளவு கோடி, அவ்வளவு கோடி யென்று சொல்கிறீர்கள். இங்கே இருக்கும் நண்பர்களில், அநேகருக்கு அதைச் சரியாக எழுதிப் பார்க்கக் கூடத் தெரியாது, குறைந்தது 180 பேருக்கு அதை ஒழுங்காக எழுதக்கூட, முடியாது. அப்படிச் சொல்லி விட்டு, வருஷத்திற்கு இவ்வளவு பற்றாகுறை என்று சொல்லி, நோட்டுகளை 400, 500 கோடி யென்று அடிக்கிறீர்கள். இதனுலெல்லாம், இந்த நாட்டில் அதிகமாக ப்ளாக் மார்கெட்டு ஆக்கி விடுகிறீர்கள். இந்த நாட்டில் நீங்கள் வேறொன்றும் செய்ய வேண்டாம். பெரிய திட்டங்கள் என்று சொல்லி, அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று செய்ய வேண்டாம். திட்டம் போடாத காலத்தில் பி அண்டு ஸி மில் ஏற்பட வில்லையா? அங்கே மதுரையில் ஹார்வி மில் ஏற்படவில்லையா? பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட வில்லையா? ஏதோ திட்டம் போட்டதினால் தான், அம்பத்தூரில் ஒரு ஸைகிள் பாக்டரி வந்தது. மௌண்ட் ரோடில் பல பாக்டரிகள் வந்தது என்று சொல்வதெல்லாம், ஒரு பிரசாரம். பெரிய பெரிய திட்டங்கள் போடுவதால் எங்கு பார்த்தாலும் ப்ளாக் மார்க்கெட் ஆக்கி விடுகிறார்கள். இப்பொழுது எடுத்துக் கொள்ளுவோம். புதிது புதிதாக பத்திரிகைகள் ஆரம்பிக்கிறார்கள்; உங்கள் கதர் ஜிப்பாவைப் போட்டுக் கொண்டு, டெல்லிக்குப் போய், பத்திரிகைக் கோட்டா வாங்குகிறார்கள். 200 ரீம் தேவையானால், 400 ரீமுக்கு கோட்டா வாங்குகிறார்கள்; இறக்குமதி செய்கிறார்கள்; ப்ளாக் மார்க்கெட்டில் விற்று பணம் சேர்க்கிறார்கள். கோல்ட் ப்ளேக் சிகரெட் 50 கொண்ட டின்னைக் கையில் வைத்துக்கொண்டு, ப்ளிமத் காரில் சவாரி செய்கிறார்கள். காம்பர், சூடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு கேஸ் இறக்குமதி செய்து விற்றால், ரூ. 200-க்கு கிடைக்கும். லைசென்சை வாங்கி, இறக்குமதி செய்து ப்ளாக் மார்க்கெட்டில் ரூ. 2,400-க்கு விற்கிறார்கள். இந்த தேசம் பூராவும் ப்ளாக் மார்கெட். இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏழை எளிய மக்களையெல்லாம் நசுக்கிக்கொண்டிருக்கிறது. பெரிய திட்டம் போட்டிருக்கிறோம் என்கிறீர்கள். சிலர் 300 கோடி கிடைத்திருக்கிறது, ஒரிஜினலாக 400 கோடிக்கு மூன்றாவது திட்டத்தில் ப்ரபோசல்ஸ் போட்டோம் 290 கோடி தான் வாங்கி வந்திருக்கிறார்கள் என்கிறார்கள். பல கோடிகள் வாங்க வேண்டாம். நரிவலம் போனால் தேவலையா, இடம் போனால் தேவலையா என்று ஒரு கதை உண்டு. மேலே விழாமல் போனால் தேவலை என்ற முறையில், பெரிய திட்டங்களைப் போட்டு, நோட்டுகளை அடிக்காமல் இருந்தால் சரி. அப்படிச் செய்தால் Low income, fixed income groups களுக்கு கஷ்டம் கொடுக்க வேண்டாம், அவர்களை நசுக்க வேண்டாம், நாசம் பண்ண வேண்டாம். விறகு கிடைக்கவில்லை. எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் ஏழைகளுக்கு. இவைகளை தயவு செய்து சிந்தனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri D. S. Authimoolam] [23rd January 1961

ஒரு சின்னத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றாலும், எங்கு பார்த்தாலும் ஒரே ப்ளாக் மார்க்கெட் தான். சின்னத் தொழில் என்றாலும், மதராஸிற்கு வந்து, இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் ஒரு சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும். பிறகு லைசென்ஸ் வாங்க வேண்டும். பின்னால், அது, இது என்று எவ்வளவோ தொல்லை. பல நிர்ப்பந்தங்கள். பெரிய திட்டங்கள் என்று சொல்கிறார்களே தவிர, சாமான்கள் போக்குவரத்து சரியாக இல்லை. உரம் கிடைப்பதில்லை. எங்கே போய் விட்டது எல்லாம்? நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். விவசாயம் ஒன்றுக்கு சரியாக உதவினாலும் போதும். விவசாயத்திற்கு முக்கியமானது நீர்ப்பாசனம், **fertilizer** பர்டிலைசர்கள், பர்டிலைசர்களை அன்னிய நாட்டிலிருந்து ஏன் வரவழைக்கக் கூடாது? செமண்ட் பாக்டரிக்கு லைசென்ஸ் என்றால் உங்கள் ஆளுக்குக் கொடுக்கிறீர்கள். தொழிலாளிகளுக்குப் பிழைப்புக் கொடுக்கிறோம் என்கிறீர்கள். விவசாயிகளின் ஒரிஜினல் தொழில், கிராமங்களில் விவசாயம். அப்படி அவர்கள் கிராமங்களில் நல்ல முறையில் விவசாயம் செய்ய வசதிகள் செய்துக் கொடுத்தால், இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து போகும். நம் தேசம் விவசாயதேசம். ஆகவே, இங்கே விவசாயத்திற்கு டாப் ப்ராயாரிடி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். ரூ. 40 கோடி வரை புதுப் புது திட்டங்கள் போட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்; பல கோடி ரூபாய்களை ஒதுக்கப் போகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், கடைசியில் பார்த்தால், ரூ. 27 கோடிக்குக் குறைந்து விட்டது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இப்படியென்றால், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 4 கோடி ஆக, 31 கோடி. இதில், தூத்துக்குடித் துறைமுகம் என்று சொல்லி, வோட்டு வாங்கும் நிலையில் செய்திருக்கிறார்கள். எதிர் கட்சிக்காரர்கள் பல ஆயிரம் வோட்டுக்களை வாங்கி விடுகிறார்கள், அதனால், குறைந்த 2,000 வோட்டு மார்ஜினில் வந்து விடுகிறது. ஆகவே, அதற்கு, அந்த துறைமுகத்திற்கு முதல் இடம் கொடுக்கிறோம் என்கிறார்கள் என்று நான் தைரியமாகச் சொல்ல முடியும். ஆகவே, இப்பொழுது விவசாயத்திற்கு உண்டான ரூபாயைக் குறைத்திருக்கிறார்கள். மொத்தம் 22 திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். மொத்தம் ரூ. 31 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். நாற்பது கோடி என்பது 31 கோடியாகக் குறைந்திருக்கிறது. அதில் பாம்பிக்குளத்திற்கே, 22 கோடியைச் சாப்பிட்டாகி விடும். அது தான் நம் பைனான்ஸ் மினிஸ்டரின் ட்ரம்ப் கார்ட் (துருப்புச் சீட்டு). அந்தத் திட்டத்தை ஐந்து வருஷத்தில் நிச்சயமாக முடித்துவிடுவார். பின்னால் செண்டருக்கு போகவேண்டும் என்று ப்ளான் இருக்கும். ஆகவே, மற்ற திட்டங்கள் என்ன கதியாகும்? ஆகவே, இந்த நாட்டில் விவசாயம் ஒன்றை மாத்திரம் நல்லபடியாக அமல் நடத்துங்கள் என்று சொல்லுகிறேன். தொழில்கள் தானாக ஏற்படும். இதற்கு முன் ஏற்படவில்லையா என்ன. விவசாயிகள் தங்கள் மிச்சத்தை பாங்கிகளில் போடுவார்கள். பாங்கிகாரர்களும் மற்றவர்களுக்குக் கடன் வழங்கி, அவர்கள் தொழில்களை ஆரம்பிக்கலாம். பொருளாதாரம் இவைகளைப் பற்றி ரொம்ப



23rd January 1961] [Sri D. S. Authimoolam]

நேரம் பேச முடியாது, பேசவும் தெரியாது. அதோடு மணியடித்து விடவும் கூடாது. ஆகவே, நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தப்பட்டவரை, ஒரிஜினல் தொகைக்கே அவற்றை நிறைவேற்றவேண்டும்.

மேலும், நிர்வாக விஷயங்களில் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடக் கூடாது. அந்த முறையில் இல்லாத நிலையில், திருநெல்வேலி ஜில்லா கலெக்டரை மாற்றியிருக்கிறீர்கள். அவர் அங்கே வந்து ஒன்றரை வருடத்திற்குள் அவரை நீங்கள் ஏதோ அவர் பேரில் காங்கிரஸ் கமிட்டிக்காரர்கள் புகார் சொன்னார்கள் என்று, உடனே அவரை மாற்றியிருக்கிறீர்கள். எதற்காக மாற்றியிருக்கிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். இப்பொழுது எலெக்ஷன் Fever வந்தாச்சு. ஆகவே, என்ன செய்கிறீர்கள் செய்கிறீர்கள் என்றால், "ஜாக்கிரதை, மாகாணத்திலுள்ள உத்யோகஸ்தர்கள் எங்கள் கட்சிக்கு வளைந்து, நுழைந்து போக வேண்டும்; பக்கத்தில் ஒருவரை, ஒரு ஜில்லா கலெக்டரை மாற்றி விட்டோம்" என்று மாகாணத்திலுள்ள அதிகாரிகளுக்கு ஒரு எச்சரிக்கை நோட்டீஸ் விட்டிருக்கிறீர்கள். நீதி, நிர்வாகத்தில் இம்மாதிரி தலையிடாதீர்கள். காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரஸ் விவசாய சங்கங்களும் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறது; கம்யூனிஸ்ட் சங்கங்களும் இருக்கின்றன. இந்த காங்கிரஸ் சங்கங்களை வைத்துக் கொண்டே ஆங்காங்குள்ள விவசாயிகளை நடத்துகிறீர்கள். 60 : 40 சட்டத்தை மீறி விவசாயிகள் நடக்க இந்த சங்கங்கள் உதவி. ஆனால், காங்கிரஸ் விவசாய சங்கம் என்பது ரொம்ப அநீதியாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஏனென்று கேட்டால், அங்கே அவர்கள் நிலச் சுவாந்தார்கள் விஷயமாக, அதிலும் சிறு நிலச் சுவாந்தார்கள் விஷயமாக, சட்டத்திற்கு உட்பட்டு நியாயமான விகிதாசாரத்தில் தானியங்களைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். அதுபற்றி சம்பந்தப்பட்ட இலாகாவுக்கும், போலீஸ் இலாகாவுக்கும் மனுச் செய்துகொண்டாலும் பரிகாரம் கிடைப்பதில்லை. அக்கிரமங்களைப் போலீசாரிடம் தெரிவித்தாலும், மனுக்கொடுத்தாலும், காங்கிரஸ் விவசாயச் சங்கம் சார்பாக அங்கங்கே உள்ள காங்கிரஸ் கமிட்டி ஆட்கள் தலையிடுவதால் போலீஸ் இலாகாவின் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போய் நிற்கிறது. மாகாணம் பூராவும் இதே நிலைதான். வேண்டுமானால் நீங்கள் ரிக்கார்டுகளைக் கொஞ்சம் பரிசீலனை செய்யுங்கள். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொள்ளுங்கள். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொள்ளுங்கள் அங்கே உங்கள் போலீஸ் டிபார்ட்மெண்ட் எப்படி நிர்வாகம் செய்கிறது என்று பாருங்கள். காங்கிரஸ் விவசாயச் சங்கம் என்று சொன்னால் எப்படி இருக்கிறது என்பதற்கு நான் ஒரு சிறு உதாரணம் சொல்கிறேன். கேளுங்கள்.

மேலப்பாளையத்தில் ஒரு முஸ்லீம் பெரியார் இருந்தார். அவருக்கு ஒரு எஸ்டேட் இருக்கிறது. திருநெல்வேலி தாலூகாவில் வேளாளர்குளம் எஸ்டேட் என்று சொல்லப்படுகிற எஸ்டேட் அது. அந்த எஸ்டேட்டின் மதிப்பு மூன்றரை லட்ச ரூபாய்

ஆகும். அந்த எஸ்டேட்டிலே 70 விவசாயிகள் இருக்கிறார்கள். நாற்பது, ஐம்பது பேர்கள் ஹரிஜனங்கள்; 20 பேர்கள் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்; நாடார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 70 பேர்களும் சரியானபடி, ஒழுங்காக 20 ஏக்கராக்கள் கூட நல்ல உரம், நல்ல விதை, நல்ல உழவு வைத்து விவசாயம் செய்ய முடியாத வகையில் 60 கோட்டை விதைப் பாடுள்ள நஞ்சையைப் பூராவும் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள், காங்கிரஸ் விவசாயச் சங்கம் என்ற பெயரால். அவர்கள் மரங்களை வெட்ட விடுவதில்லை. வெட்டிவிட்டாலுங்கூட, அதை யாருக்கும் விற்க விடுவதில்லை. இப்படி ஏகப்பட்ட இடைஞ்சலை அந்தப் பெரியாருக்குக் கொடுக்கிறார்கள். அந்தப் பெரியாருடைய வயது 78. அவர் மூன்று வருஷ காலமாக அந்தக் கிராமத்திற்கு போகமுடியவில்லை. அவர் ஒரு நாள் தன்னுடைய வேலை ஆளைக் கூப்பிட்டு வண்டி பூட்டச் சொன்னாராம். 'வண்டி எங்கள் கிராமத்திற்கு வரக்கூடாது' என்று மறித்தார்களாம் காங்கிரஸ் விவசாய சங்கத்தவர்கள். உடனே போலீசில் மனுக் கொடுத்தாராம். இரண்டு வருஷங்களாக விசாரணை இல்லை. அந்தக் கிராமத்திற்கு அவர் போக முடியவில்லை. காங்கிரஸ் விவசாயச் சங்கம் என்ற பெயரில் அங்கங்கே சங்கங்களை வைத்துக்கொண்டு இப்படிச் செய்கிறீர்கள். உங்கள் போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுக்கு 'ஸீக்ரட் ஸர்க்குலர்' அனுப்பியிருக்கிறீர்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். டெபுடி சூபரின்டென்டென்டானாலும் சரி, சூபரின்டென்டென்டானாலும் சரி, அவர்களிடம் போய் 'கம்ப்ளெயிண்ட்' செய்தால், அவர்கள் ஒன்றுமே நடவடிக்கை எடுப்பதில்லை. இரண்டு வருஷங்களாக மூன்று லட்சம் மதிப்புள்ள சொத்தை உடைய மனிதன் பட்டினிப் பசியாய் கிடந்து இறந்தார். அவர் பணக்காரர்; விட்டுத் தள்ளுங்கள். நடுத்தர விவசாயிகளுடைய நிலைமை என்ன? நீங்கள் இந்த நாட்டில் வோட்டுப் பிடிக்கும் மோகத்தில் சட்டத்தைப் பூராவும் சீர்குலைத்து என்ன என்னவோ செய்கிறீர்கள். நீங்கள் இம்மாதிரி செய்தால் இந்த நாடு நாளாவட்டத்தில் என்ன ஆகும்? நீங்கள் ஒரே காயத்தை மனதில் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஹரிஜனங்களுடைய வோட்டை நூற்றுக்கு நூறு பிடித்துவிடுவோம். ஆகவே எந்த கலெக்டரையும் மாற்றலாம், எதையும் செய்யலாம் என்பதாக நினைத்து கொண்டிருக்கிறீர்கள். வோட்டுப் பிடிக்கும் நோக்கத்தோடு இந்த தேசத்தை நடத்தாதீர்கள். கிரிமினிலாக இருந்தவர்களுக்குச் சலுகை காட்டுகிறீர்கள். இரண்டு வாரங்களுக்கு முன்னால்கூட, போலீஸ் இலாகா மந்திரி அவர்கள், ஒரு கொலைக் கேசிலே சம்பந்தப்பட்டு விடுதலை ஆனவரோடு பட்டணப் பிரவேசம் வந்திருக்கிறார் என்றால், சட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கும்? கொலைக் கேஸிலே ஈடுபட்டு, பிறகு விடுபடுகிறார்கள் என்றாலும், விடுபட்ட்வுடனே காங்கிரசிலே நாலணா மெம்பராக ஆக்கிக் கொள்கிறீர்கள். அவரோடு போலீஸ் மந்திரி ஊர்வலம் வருகிறார். முந்தாநாள் கொலையாளியாக இருந்து, சட்டத்திலுள்ள டெக்னிகல் பாயிண்ட் அனுகூலமாக இருந்து வெளியே வருகிறார் என்றால், அவரையும் சேர்த்துக்





கொள்கிறீர்கள். இப்படிச் செய்வதற்குக் காரணம் வோட்டுப் பிடிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கமாகத்தான் இருக்க முடியும். நீங்கள் சட்டத்திற்கு மரியாதையற்ற நிலைமையிலே வோட்டுப் பிடிக்கும் நோக்கத்தை வைத்திருப்பதால் தான் சட்டத்திற்கு மதிப்பு கிடைக்காமல் இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: 'அக்விட்' ஆனவரையே குற்றவாளி என்று சொல்லி அவரே சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்காமலிருக்கிறார்.

SRI D. S. AUTHIMOOLAM: 'ஆனரபிள் அக்விட்டல்' என்று ஜட்ஜ்மென்டில்லே எழுதினாலும், கொலை செய்தவனுக்கு, தப்பு செய்தவனுக்கு, போலீஸ் ரிகார்டுபடி எக்ஸ்-கான்விக்டுக்கு மரியாதை செய்தால், நாட்டில் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஏற்பட்டுவிடாதா? வோட்டுக்காக எது வேண்டுமானாலும் செய்துவிடுவதா? இம்மாதிரி செய்தா இந்நாட்டுக்குச் சுயராஜ்யம் வந்தது? இல்லை. சுயராஜ்யம் எப்படி வந்தது? நியாயம் என்ற ஒரு அடிப்படையில்தான் சுயராஜ்யம் வந்தது. மகாத்மா காந்தியினுடைய நீதியான தன்மையின் காரணமாகத்தான் சுயராஜ்யம் கிடைத்தது. ஆகஸ்ட் தியாகிகள் ஜெயிலுக்குப் போனதால் சுயராஜ்யம் வந்துவிடவில்லை. நீதிதான் என்றும் இந்த தேசத்தைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் ஜனங்களைக் காப்பாற்றும். நீதி தவறி நீங்கள் நடக்க ஆரம்பித்துவிட்டீர்கள். ஏதேதோ காரணத்திற்காக திருநெல்வேலி ஜில்லா கலெக்டரை மாற்றினீர்கள். எலெக்ஷனுக்கு முன்னால் இப்படிப்பட்ட காரியங்களிலெல்லாம் இறங்காதீர்கள் என்று உங்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

SRIMATHI KAMALAMBUJA AMMAL: On a point of order Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, அதிகாரிகளுக்கெல்லாம் அரசினர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்களே, அதன் பிரதியைச் சபை முன்னால் வைக்க முடியுமா என்று கேட்கின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஊகித்தார். அவ்வளவு தான்.

* SRI S. SAMIKANNU PADAYACHI: சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரையை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சமீபத்தில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட சில ஜில்லாக்களுக்கு அமைச்சர்கள் நேரில் சென்று பார்த்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபத்தை தெரிவித்து, அவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளையும் செய்ததைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். மக்களுக்கும் அது ஒரு திருப்தியாக இருக்கக்கூடிய காரியம் என்பதைக்கருதி அதை நான் ஆதரிக்கிறேன்.

[Sri S. Samikannu Padayachi] [23rd January 1961

கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரையை நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் தான் பூர்த்தி செய்திருப்பார் என்று நான் எண்ணுகிறேன். அதில் முக்கியமானது தூத்துக்குடித் துறைமுகத் திட்டம். அடுத்தபடியாக, இரண்டொரு ரயில் பாதைகள். இவைகளை மூன்றாவது திட்டத்தில் முடித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது.

**(Deputy Speaker in the Chair.)**

இப்பெரிய திட்டங்களை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்திற்கு மிகவும் வற்புறுத்த ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஒருபுறமிருக்க, சிறிய பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கும் தொகை மிகக்குறைவானது. அந்தத் தொகையை இன்னும் உயர்த்தவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சிறிய பாசனத் திட்டங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து, விவசாயிகளுக்கு வேண்டிய விதை, உரம் முதலியன கொடுத்தால் அதிகப் படியாக எதிர்பார்க்கும் 15½ லட்சம் டன் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்வதற்கு அனுகூலமாக இருக்கும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் முக்கியமானது கிருஷ்ணா-கோதாவரி நதி திட்டம். அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டால், சென்னை நகரத்தின் மக்கள் குடி ஜலத்திற்கும், செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களின் பாசன வசதிக்கும் மிக உபயோகமாக இருக்கும். இந்த மூன்று ஜில்லாக்களினுடைய பாசனம் மிகவும் முக்கியமானது. பெரும்பாலும் புஞ்சை நிலமாகவே இருப்பதால், அவைகள் நஞ்சை சாகுபடி செய்ய இத் திட்டங்கள் உதவும். அதனால் உணவுப் பற்றாக்குறை நீங்கும். இந்த திட்டத்தை மூன்றாவது திட்டத்தில் எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

மின்சார விஸ்தரிப்பைப்பற்றி உரையில் சொல்லியிருப்பது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். மூன்றாவது திட்டத்திற்குள் மின்சாரம் இல்லாத கிராமங்களே இருக்காது என்று சொல்வது பாராட்டத்தகுந்தது. அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகின்றேன்.

சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்படவேண்டுமென்றால் நான்கைந்து மைல் நீளமுள்ள சாலைகளை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்துவிடலாம். அவ்வளவுதான் அவர்கள் பார்க்க முடியும். அதைத்தவிர ஜில்லா போர்டு ரோடுகளோ, சர்க்கார் ரோடுகளோ எல்லாவற்றையும் அரசாங்கமே தங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொண்டு நடத்தி வந்தால்தான் பொது ஜனங்களுக்கு எவ்வித கஷ்டமும் இன்றி சௌகர்யமாக இருக்கும்.



23rd January 1961] [Sri S. Samikannu Padayachi]

வட்டார அபிவிருத்தி பற்றி எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்து யூனியன்கள் எவ்வாறு செயல்படுகிறது என்று பார்க்க வேண்டும். இப்போது பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும், கமிஷனருக்கும் நெருங்கிய தொடர்பும், ஒத்துழைப்பும் இல்லாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்திருக்கும். நான் பார்த்த பத்துப் பன்னிரண்டு இடங்களில் திருப்திகரமாக நடக்கவில்லை. ஒருவருக்கு ஒருவர் போட்டி. அவர்களுக்குள் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால் வேலை தடைபடுகிறது. ஆகவே சேர்மெனும், கமிஷனரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்ற உத்தரவு போடவேண்டும். அல்லது சில அதிகாரங்களை சேர்மெனுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். ஒரு ஊரில் இருக்கும் ஆசிரியரை அதே கிராமத்தில் இருக்கும் சேர்மெனுக்குத் தெரியாமல் திடீரென்று கமிஷனர் மாற்றுகிறார் என்றால் எப்படி அவர்களுக்குள் ஒற்றுமை இருக்க முடியும். ஆகவே அரசாங்கம் இதைக் கவனித்து அவர்களுக்குள் ஒற்றுமை உண்டாகக் கூடிய வகையில் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இப்போது விவசாயிகளுக்குச் செய்து வரும் பல நன்மைகளைப் பாராட்டுகிறேன். காலாகாலத்தில் கூடுமான வரையில் அவர்களுக்கு விதை, உரம் முதலியன கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்போது விவசாயிகளிடத்திலேயே ஒரு ஆர்வம் உண்டாகியிருக்கிறது. அரசாங்க உதவி கிடைக்கிறதோ இல்லையோ, நாற்பது கலம் விளைந்த பூமியில் 60 கலம் விளைவிக்க வேண்டும் என்று பாடுபடுகிறார்கள். விவசாயப்பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்கிற ஆர்வம்தான். ஆகவே நாம் அவர்களுக்கு காலாகாலத்தில் விதை, உரம் முதலியன கிடைக்கும்படி செய்தாலேயே நாட்டில் பற்றாக்குறை இல்லாதவாறு செய்துவிடலாம். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலும் கவனம் செலுத்தி, ஆங்காங்குள்ள வாய்க்கால், ஏரி, குளம் எல்லாவற்றையும் மராமத்து செய்து கொடுத்தால் பற்றாக்குறையே இல்லாதபடி செய்துவிடலாம் என்று அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்துகிறேன்.

நெய்வேலி சுரங்கத்தில் இருந்து கிடைக்கும் நிலக்கரியை எடுத்துக் கொண்டு போய் சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை வைக்கலாம் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இங்கிருந்து கரியை அங்கே கொண்டுபோய், அங்கு தொழிற்சாலை ஆரம்பிப்பதைவிட அங்கு கிடைக்கும் இரும்பு கனியை இங்கு கொண்டு வந்து இங்கேயே ஒரு தொழிற்சாலையை அமைக்க வசதி இருக்கிறது என்று மத்திய அரசாங்கத்திற்கு நம் சர்க்கார் யோசனை கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பல வருடங்களாகவே குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு நம் சர்க்கார் ஆங்காங்கே பல திட்டங்களை வகுத்து வருகிறார்கள். திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்கா மிகவும் வறண்ட பிரதேசம். அங்கே குடிதண்ணீர்

[Sri S. Samikannu Padayachi] [23rd January 1961

மிகவும் கஷ்டம். நானே ஒரு சமயம் பார்த்தேன். மாடு குளுப்பாட்டமுடியாத கலங்கிய நீரை ஒருவர் மொண்டு சென்ற போது "எதற்காக?" என்றேன். இதைக் கொண்டுபோய் தேத்தாங் கொட்டை போட்டு தெளியவைத்து குடிப்பதற்காகத்தான்" என்றார். குடிதண்ணிருக்கு அத்தனை கஷ்டமாக அந்தப் பகுதிகளில் இருந்து வருகிறது. நமது அரசாங்கம் பதவியேற்று திட்டத்திட்ட பத்து வருஷங்களுக்கு மேலாகிறது. அந்தப் பிரதேச மக்களுடைய குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு முயற்சி செய்யக்கூடாதா? எத்தனையோ மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறோம். கொள்ளிடத்தில் இருந்து குழாய் மூலமாக இங்கே குடிதண்ணீர் சப்ளை செய்து, இங்குள்ள மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழ்வதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரம் தாலுக்காவில் 5½ பிர்க்காதான் டெல்டா பாசனம் உடையது. பாக்கியுள்ள 3 பிர்க்கா மானாவாரிதான். அங்கே பாசன வசதி கிடையாது. ஏற்கனவே அங்கே குழாய்க் கிணறுகள் வைக்க நம் சர்க்கார் அனுமதி அளித்ததன் காரணமாக குழாய்க் கிணறுகள் வைக்கப்பட்ட இடங்களில் நல்ல விவசாயம் செய்யப்படுகிறது. ஆகவே எங்கெங்கே தண்ணீர் கிடைக்கும் என்று கருதுகிறார்களோ அந்த இடங்களில் மட்டுமாவது இன்னும் ஒரு 100 குழாய்க் கிணறுகள் வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கெடிலம், வெள்ளாறு, மணிமுத்தாறு இவைகளில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் மழை வைகாசி, ஆனி மாத முதல் தை மாதம் வரை காலத்தில் மழையினால் ஜலம் சரிவர கிடைத்து, விவசாயமும் நல்லமுறையில் செய்யப் பட்டு, நல்ல சாகுபடியும் கிடைத்து வந்தன. ஆனால் இப்பொழுது அந்த ஆற்றில் ஒன்றில் கூட இருபது ஆண்டுகளாக காலத்தில் தண்ணீரே வருவதில்லை. வெள்ளாரில் தொழுவூர் அணைக்கு மேல் கொரைக்காவடி எல்லையில் ஒரு நீர்த்தேக்கம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றினால் தென் ஆற்காடு ஜில்லாவில், சிதம்பரம், விருத்தாசலம் போன்ற தாலுக்காக்களில் 50,000, 60,000 எக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்கும். சின்னாறு ஜலம் வந்து கொண்டு இருந்தது. அதை மறித்துக்கொண்டதால் அதனால் சில சௌகரியங்கள் எங்களுக்கு கிடைத்தது. பின்னர் அங்குள்ள மக்கள் கேட்டு, அமைச்சர் அவர்கள் கூட வந்து பார்த்து அங்கு ஒரு நீர்தேக்கம் போட்டு ஜலத்தை மறித்துவிட்டதால் அந்தத் தண்ணீர் எங்களுக்கு கிடைக்காமல் போய் விட்டது. நாங்களும் ஆர்டீசியன் வெல்ஸ் வைத்து உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் நான் மேற்குறிப்பிட்ட திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நல்ல முறையில் மக்களுக்கு உதவி செய்யவேண்டியது அவர்கள் பொறுப்பு என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



23rd January 1961]

**DEPUTY SPEAKER :** டைமாகி விட்டது.

**SRI S. SAMIKANNU PADAYACHI:** மணியடித்து விட்டார்கள், என் வாக்கை முடித்துக் கொள்கிறேன்.

***SRI G. NARAYANASWAMI NAIDU :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர்பிரான் அவர்கள் உரை பிரேரனை செய்யப்பட்டு, அதை ஆமோதிக்கும் முகத்தான் நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ராணி அவர்களை வரவேற்பது, நெய்வேலித் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்திட்டம் இவைகள் செயல்பற்றி கவர்னர் உரையில் பாராட்டியிருக்கிறார்கள். இதில் பல நண்பர்கள் பேசியாகி விட்டது. ஒரு சிலருக்கு இந்தத் திட்டங்கள் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். இவைகள் என்ன திட்டங்கள், இந்த சர்க்கார் வருவதற்கு முன்பே இந்த ஊரிலே திட்டமொன்றுமில்லாமல் பக்கிங்காம் கர்னாடிக் மில் வரவில்லையா, காங்கிரஸ் ஆட்சி வந்ததினால்தான் இவையெல்லாம் வந்திருக்கிறதா, விவசாயிகளுக்கு இந்த காங்கிரஸ் மிகுந்த தொந்தரவு கொடுத்து விட்டது என்று ஒரு சில நபர்கள் கோபப்படலாம். இன்னும் கொஞ்சம் முன்கூட்டியே போவது கொஞ்சம் கூட நன்றாயிருக்கும். ஐயாயிரம், ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சர்க்கார் என்று ஒன்றுமில்லை, யாரும் யாரையும் சுரண்டவில்லை. அந்தக் காலத்தில் மனிதனுக்கு ஒரு தேவையும் கிடையாது, அப்பொழுது வாழ்க்கைப் பிரச்னை என்பதோ அல்லது விலைவாசி கூடுதல், குறைவு என்ற பிரச்னையோ இருந்ததில்லை. ஆகவே பழைய காலம் போல், நண்பர்கள் காட்டைப் பார்க்கப் போனால் நல்லமுறையில் யாருடைய தொந்தரவும் இல்லாமல் வாழ்க்கை நடத்த ஏதுவாகயிருக்கும். அந்தகாலத்திற்குதான் போகவேண்டுமென்ற விருப்பத்தோடு நண்பர்கள் பேசியிருக்கிறார்களோ என்று எனக்கு ஒரு ஐயப்பாடு. சில பேர்களுக்கு சில காரியங்களை, சில உலகம் வெறுத்துப் போய்விடுகிறது. அபிலாஷைகளை மனதில் வைத்துக் கொண்டுதான் மேலும் மேலும் பணக்காரனாக வேண்டும், பலரைச் சுரண்ட வேண்டும், அதற்கு அதிகாரிகள் தயவு வேண்டுமென்று விரும்பலாம். ஆனால் காங்கிரஸ், அதிகாரிகள் தயவைக் கொண்டு வளர்ந்ததல்ல. அதிகாரிகளுக்கு எதிராக, பிரிட்டிஷ்காரனிடம் ஆட்சியிருந்த போது அதை மோதி முறியடித்து இந்த நாட்டிற்கு சுதந்திரம் பெற்றோம் என்றால் மாற்றுக் கட்சி நண்பர்கள் இதை ஏற்று கொஞ்சம் புத்தியை கடுமையாக உபயோகப்படுத்த வேண்டும். "அனார்கிஸ்ட் மூவ்மெண்ட்"-க்கு போக விருப்பம் இருந்தால் இந்த நாட்டில் ஏராளமாக காடுகள் இருக்கின்றன. பீடி வியாபாரி "கோல்ட் ப்ளேக்" உபயோகிப்பவனை எதிர்த்து, நம் பீடியை வாங்காமல் கோல்ட் ப்ளேக் குடிக்கிறானே, ஒரு கை பார்த்து விடலாம் என்று அதற்காக சட்டசபையை உபயோகப்படுத்துவது சரியல்ல. பீடியை கூடுதலாக, அதிகமாக உபயோகியுங்கள் என்று விளம்பரம் செய்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால் கோல்ட் ப்ளேக் சிகரெட்டை உபயோகிப்பவர்களை எதிர்பதற்கு சட்டசபையை உபயோகிப்பது அவ்வளவு கண்யமாக இராது. வீட்டில் 12 noon.

கோபம் இருந்தால் அதை வெளியில் வந்து காண்பிப்பதுபோல், லட்சக்கணக்கில் பணம் செலவு செய்யவேண்டியதாகயிருக்கிறது என்று ஒரு சிலர் அங்கலாய்த்துக் கொண்டார்கள். லட்சம் என்ன கோடிக்கணக்கில் செலவு செய்தாலும் சுரண்டுவதை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் எவ்வளவு செலவு செய்தாலும் சட்டசபைக்கு வருவதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். தன்னைச் சுற்றியிருக்கும் பலரைக் கவனித்தால் தெரியும். பணமற்றவர்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருப்பதை காணலாம், பொது மக்களின் பலம் காரணமாக. அவர்கள், சேவை செய்ததால், சேவை செய்தவர்களை கிண்டல் செய்யாத காரணத்தால், பலர் ஆயிரக்கணக்கில் மட்டும் செலவு செய்து வந்திருக்கிறார்கள் என்பதை லட்சக்கணக்கில் செலவு செய்தவர்கள் மனதில் கொள்ள வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டு விட்டது என்று கூறுவதால் ஒரு பலனுமில்லை. அரசாங்கத்தை தாக்கி கூற வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தங்கள் வாழ்க்கையில் இடைஞ்சலாக இருப்பவர்கள் அழிந்து போக வேண்டுமென்று நினைப்பவர்கள் காட்டிற்கு சென்று தவமோ அல்லது யோகமோ செய்துகொண்டிருக்கட்டும், பாக்கி மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றி கவலைப் படாமல். அங்கு அவர்கள் நன்கு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கலாம். ஒரு தொந்தரவும் இருக்காது. அங்கு யாரும் பீடி, சிகரெட் குடிக்க மாட்டார்கள். எந்த வேலையும் செய்யவேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு) வேட்டி கூட கட்டவேண்டியதில்லை, மர உரி போதும். அந்தமாதிரி ஒரு நிலைக்கு போவதில் எனக்கு ஆட்சேபணையில்லை என்று சொல்லிக் கொண்டு, சமீப காலத்தில் ஏற்பட்ட மழையைப் பற்றி கவர்னர்பிரான் அவர்கள் உரையில் அதனால் ஏற்பட்ட நன்மை பற்றி சொல்லியிருக்கிறார்கள். இதில் இன்னொன்றையும் பாராட்ட வேண்டும். மழை பெய்து கொண்டிருந்தபோது மந்திரிகள் வந்தது மட்டுமல்ல. நமது அதிகாரிகள் அத்தனை பேர்களும் இந்தத் தடவைபோல், ஒரு சந்தர்ப்பத்திலும் வெள்ளம் வந்த போது மக்களுக்கு உடனுக்குடனே நல்லமுறையில் உதவி செய்த ஒரு நிலை ஏற்பட்டதை நான் பார்த்ததே இல்லை. தஞ்சை ஜில்லாவில் வெள்ளம் புகுந்து அழிவு வேலை செய்து கொண்டிருந்தபோது நல்லமுறையில் பரிகாரங்கள் உடனுக்குடன் கிடைத்தது. இரவு 12 மணிக்கு பாதிக்கப்பட்ட குடிபடைகளுக்கு இரவு 2 மணிக்கெல்லாம் எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டது. மதிப்பிற்குரிய மின்சார அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களும் அங்கு வந்து, இரவு 10, 12 மணிக்கு தஞ்சையில் கூட்டம் போட்டு பரிகாரம் அளிக்க திட்டம் வகுக்கும் முன்னரே அதிகாரிகள் வெகு தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு கட்டுமரங்கள் அனுப்பவேண்டிய இடங்களுக்கு அவைகளை அனுப்பி, அரிசி கொடுக்கவேண்டிய இடங்களுக்கு அரிசி கொடுத்து, எங்கெங்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து, மக்களுக்கு சிறந்த



முறையில் உதவி செய்திருக்கிறார்கள். அவர்களையும் நாம் பாராட்ட வேண்டும். இன்னொரு விட்டுப்போன விஷயம். மழையால் எல்லாயிடங்களிலும் நன்மை ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. மழையால் பாதிக்கப்பட்ட இடங்கள், மழைக்குப் பின்னால் பூச்சியால் பாதிக்கப்பட்டயிடங்கள் எல்லாம் அமோகமாக ஆங்காங்கு பெருகிவருகிறது என்பதை மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்கள் தாலுகாவில் கீழ்ப் பகுதி பூராவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது சொற்பம் என்றால் பூச்சியால் பாதிக்கப்பட்டது மிகக் கடுமையாகயிருக்கிறது என்பதை நான் சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது வந்திருக்கிற பூச்சி, ரொம்ப ரொம்ப கடுமையான பூச்சி. ஒன்றிரண்டு தினங்களில் ஒரு ஏக்கர் பூராவையும், வைக்கோல் கூட இல்லாது பாழ் அழித்து விடுகிறது. எவ்வளவு மருந்து தெளித்தாலும் பலன் இல்லாமல் இருக்கிறது. ஏராளமான நிலம் வைத்திருப்பவர்கள் அதைப்பற்றி கவலைப் படாமல் இருக்கலாம். ஆனால் சாகுபடி செய்கிறவர்களை நாளைய தினம் இந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு வெளியேற்றலாம். இதை சர்க்கார் நன்கு உணரவேண்டும். இந்த நிலையில் ஒரு சில நிலச்சுவாந்தார்கள் அடுத்த வருடம் பாக்கியைக் கொடுத்து விடலாம், நீங்கள் எழுதிக் கொடுத்தால் போதும் என்று அவர்களை ஏமாற்றி அறுவடை செய்யச்சொல்லி பாக்கியிருப்பதற்காக அவர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் பல இடங்களில் சீட்டுகள் கொடுக்கப்படாததின் காரணமாக குடிபடைகள் சாகுபடி செய்திருந்த நிலங்களை தாங்களே சாகுபடி செய்ததாக சொல்லி பல இடங்களில் அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் திருநெல்வேலியையும் தஞ்சாவூரையும் இணைத்து, தஞ்சாவூரைப்பற்றி அதிகமாக அறிந்தவர் போல பேசினார்கள். காங்கிரஸ் தொழிற்சங்கத்திற்கு போலீஸ்காரர்கள் என்னவெல்லாமோ செய்கின்றார்கள், அவ்வாறு வேலை செய்யுமாறு அவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். அதற்காக ரகசியமாக சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது என்றெல்லாம் பல குற்றச்சாட்டுகளை சொன்னார்கள். அவர்கள் எங்கள் பக்கத்தில் வந்து பார்த்தால் நன்றாக புரிந்து கொள்வார்கள், பெரும்பகுதி போலீஸ்காரர்களும் பெருவாரியாக இருக்கின்ற நிலச்சுவாந்தார்கள் பக்கத்தில் தான் இருப்பார்கள், நமது நண்பர் அவர்களைப்போல், என்பதை. எங்கள் பகுதியில் வலங்கைமானுக்கு பக்கத்தில் 40, 50 குடும்பங்கள் இன்று போலீஸ் நடவடிக்கையின் காரணமாக, நட்ட நடவை எல்லாம் விட்டு விட்டு, சட்டம் தெரியாத காரணத்தினால் அப்புறப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இன்னும் இது போன்று பல்வேறு இடங்களிலும் குடிபடைகள் ரசீது பெறாத காரணத்தினால் வெளியேற்றப் படுகிறார்கள். இங்கே பலர் குறிப்பிட்டார்கள், வெள்ளைக்காரன் காலத்தில் இம்மாதிரி சட்டத்திட்டங்கள் இல்லையே, அப்போது

எல்லாம் நடக்கவில்லையா, அப்போது ரசீதுகள் எல்லாம் கொடுக்காமல் இருந்ததில்லையா என்று கேட்டார்கள். அதே முறையில் தான், அந்த நம்பிக்கையிலேயே ரசீது வாங்காமல் இருந்தார்கள். இந்த நம்பிக்கையை பயன்படுத்திக்கொண்டுதான் இப்போது குடிபடைகள் வெளியேற்றப்படுகிறார்கள். இன்று இந்த வருஷத்தில் இம்மாதிரி பல இடங்களில் நடைபெற ஏதுக்கள் இருப்பதால் சர்க்கார் உடனடியாக நல்ல அதிகாரிகளை நியமித்து பாதிக்கப்பட்ட இடங்கள் எவை எவை. அதற்கு பரிகாரங்கள் என்ன என்பதைப்பற்றி எல்லாம் உடனடியாக யோசிக்காவிட்டால் இந்தச் சட்டங்கள் எல்லாம் யாருக்காக செய்தோமோ, அவர்கள் இதனால் பெரும்பகுதியாக பாதிக்கப்பட்டவர்களாகவும், பலன்பெறுபவர்கள் சிறு பகுதியினராகவும் மாறிவிடுவார்கள் என்பதை நான் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று ராஜ பிரதிநிதி முதல் சாதாரண அரசியல் வாதிகள் வரையிலும் பல வகையிலும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை பல இடங்களில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் பெறுவது மிக மிக கஷ்டமாயிருக்கிறது. இந்த கூட்டுறவு முறையை யார் கவனிக்க வேண்டுமோ, எந்த அதிகாரிகள் கவனிக்கவேண்டுமோ அந்த அதிகாரிகளுக்கே கூட்டுறவு முறையில் நம்பிக்கை இருப்பதாக தெரியவில்லை. அப்படியே நம்பிக்கைஉள்ளவர்கள் வந்தாலும் கூட அங்குஇருக்கின்ற பெரியநிலச்சுவாந்தார்கள் அவர்களுக்கு கூட்டுறவில் நம்பிக்கைஇல்லாத வகையில் மாற்றிவிடுகிறார்கள். அவ்வளவு சக்தி பெற்றிருக்கிறார் அங்கிருக்கின்ற பெரிய நிலச்சுவாந்தார்களாகிய பண்டாரா சந்நதிகள். மந்திரிகளை கூட கவனிக்காமல் அவர்கள் விரும்பியபடியே அவர்கள் எண்ணுகின்ற காரியங்களை சாதிப்பதற்கு பண்டார சந்நதிகள் பல அதிகாரிகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆஸ்திகத்தை பரப்புவதற்கு என்று சொல்லிக்கொண்டு, பண்டாரா சந்நதிகளுக்கு என்னென்ன காரியங்கள் நடைபெற வேண்டுமோ அவைகளை எல்லாம் நடத்துவதற்கு, அதற்காக எந்த அதிகாரிகளை அணுக வேண்டுமோ அதற்கு தகுந்தபடி ஆட்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கென்று ஒரு பிரச்சார இலாகாவை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அதற்கென்று விஸ்தாரமான ஒரு கட்டிடத்தை சென்னையில் ஏற்படுத்தி, இதற்கென்றே ஒரு இலாகாவை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எம்.எல்.ஏ-க்களில் யார் யாரை எவ்விதம் சரிப்படுத்த வேண்டும், யார் யாரை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும், இதற்கு விரோதமாய் இருக்கின்றவர்களை எவ்விதம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதையெல்லாம் கவனித்துக்கொள்ளுகின்ற முறையில், கடவுளின் பெயரால், பலரை நியமித்து, ஒரு இலாகாவையே நடத்தி வருகிறார்கள். அதில் நாவலர்கள், பாவலர்கள் இன்னும் இது போன்ற பலர் இருக்கின்றார்கள். இவைகளை எல்லாம் ஏற்படுத்தி வைத்துக்கொண்டு பண்டார சந்நதிகள் விவசாயிகளை அப்புறப்படுத்திக்கொண்டிருக்



கிறார்கள். சர்க்கார் போடும் சட்டத்திட்டங்களை எல்லாம் அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். குற்றாலம் என்கிற ஊரில் இம்மாதிரி சச்சரவு ஏற்பட்டதின் காரணமாக நிலங்களைகூட்டுறவு சங்கத்திற்காக மந்திரியின் கையில் ஒப்படைத்தார்கள். "அன்பும் சிவமும் வேறல்ல, இரண்டும் ஒன்றே" என்று சொல்லக்கூடிய இந்த பண்டார சந்நதிகள் குடிபடைகளின் கையிலிருந்த நிலத்தை மாற்றி மந்திரிகளின் கையில் கொடுத்தார்கள். பின்னால் அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏர்களை பூட்டி ஒரே நாளில் உழுதுகொடுத்தோம். அவ்விதம் இருந்தும் அதற்கு சரியான முறையில் நிலக் கணக்கு கொடுக்க வில்லை. எல்லாம் கடவுளுக்கு, சுவாமிக்கு கொடுப்பதாக சொல்லப்படுகிறதே தவிர உண்மையாக அங்கு சுவாமிக்கு அளிப்பது இல்லை. ஆனால் அதற்கான வவுச்சர்களை தயார் செய்து வைத்துக்கொள்வார்கள். ஸேல்ஸ்டாக்ஸ் வந்தவுடன், அல்லது இன்கம் டாக்ஸ் வந்தவுடன் அதற்கு தகுந்தவாறு கணக்கெழுதி வவுச்சர்களை தயார் செய்து கொடுக்கக் கூடிய கணக்குப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இதற்கென்று சில நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்களைக்கொண்டு கணக்கெழுதி காட்டி, தங்கள் காரியத்தை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மணி நெல் கூட பாக்கியில்லாமல் சென்ற ஆண்டு கொடுத்தும் கூட அந்தச் சங்கத்தில் உள்ள விவசாயிகளுக்கு குத்தகைப் பத்திரம் எழுதிக் கொடுக்காமல் காலங்கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, குடிபடைகளின்மீது பல கிரிமினல் கேஸ்களை போட்டுவிடுகிறார்கள். கோர்ட்டுகளில் கோயிலுக்கு நெல் இல்லை, திருவிளக்கு ஏற்றுவதற்கு வழியில்லை என்றெல்லாம் வக்கீல் வைத்து வாதாடுகிறார்கள் ஆஸ்திக புத்தியுடையவர்கள். இந்த நிலையில் கூட்டுறவு சங்கங்களை நடத்த முடியாத நிலையில் கொண்டுபோய் விடுகிறார்கள். முன்னால் பொள்ளாச்சி செட்டியார் என்பவருக்கு குத்தகை உரிமை இருந்தது, பின்னால் அந்த கூட்டுறவு சங்கத்திற்கு கொடுத்தவுடன் அதில் சேர்ந்திருந்த 40 ஏக்கர் புஞ்சை நிலத்தை கொடுப்பதற்கில்லை என்று தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்காக அங்குள்ள விவசாயிகள் பலத்த கிளர்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மந்திரி அவர்கள் உடனடியாக கவனித்து தொந்தரவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வக்கிரமாரி என்ற இடத்தில் பாக்கி கொடுக்க வேண்டிய பழைய குத்தகைகாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 40 ஆயிரம், 50 ஆயிரம், 60 ஆயிரம், 80 ஆயிரம் என்று பாக்கி போட்டிருக்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் 3 ரூபாய் பாக்கியிருந்தால் அதற்காக 3 கோர்ட்டுகளுக்குப் போக தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நடவடிக்கைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருப்பவர்களுக்குத் தெரியும். எண்டோமெண்ட் மந்திரி அவர்கள் இந்தச் சட்டத்தை யாருக்கு சாதகமாக இருக்கவேண்டும் என்று செய்தார்களோ, அதற்கு நேர்விரோதமாக போய்க்கொண்டிருக்

கிறது என்பது மட்டுமல்ல, இதனால் சர்க்காருக்கு பலம் ஏற்படுவதற்குப் பதிலாக பலகீனம்தான் ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு வேண்டுகோளை தெரிவித்துக்கொள்கிறேன். மங்கநல்லூரிலிருந்து பொறையாறு வரையிலும் இருக்கின்ற ரோட்டில் கப்பி போட வேண்டும் என்று பல தடவைகள் கேட்டிருக்கிறோம். இதில் பி.டப்ளியு.டி. இலாகாவினருக்கும் ஹைவேஸ்-க்கும் இருக்கின்ற தகராறு காரணமாக இன்னும் முன்னால் இருந்தபடியே இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த ரோட்டுக்கு கப்பிப் போட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதே போன்றுதான் காளி என்கிற ஊருக்கு ரோடு போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை, என் பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர் அவர்கள் வாலிபமும் ஊக்கமும் உள்ள அங்கத்தினர், அவர் அனுமதி வாங்கிக்கொண்டு எடுத்துக் கொண்டு போய் விட்டார், ஆகவே அதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு தெரிவிக்கும் நன்றி தீர்மானத்தை முழு மூச்சுடன் ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரை மீது நடக்கும் இந்த விவாதத்தில் நானும் கலந்துகொண்டு இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட அவாவுறுகின்றேன்.

இந்த உரையைப் படிக்கக் கூடிய சாதாரண ஒரு மனிதனுக்குந் தோன்றுவது—தோன்றக் கூடியது—ஏதோ நாட்டில் இருக்கக் கூடிய விலைவாசிகளானது குறைந்து கொண்டிருக்கிறது என்பதாகும். அப்படி குறைந்துகொண்டிருப்பது போல இதிலே ஒரு வரி இருக்கிறது. கவர்னர் பெருமானுடைய உரையைப் படிக்கும்போது நான் கூட அங்கலாய்த்து விட்டேன். ஏனெனில் இதில் வந்திருக்கக் கூடிய விஷயம் எந்த அளவுக்கு நாட்டின் யதார்த்த நிலைக்குப் பொருந்தும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. “நல்ல மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் விலைவாசிகளும் குறையத் தொடங்கியுள்ளன” என்று சொல்லும்போது நாட்டிலே ஏதோ விலைவாசிகளானது உயர்ந்திருந்தது, இப்போது சரிந்துகொண்டு வருகின்ற மாதிரி தோன்றுகிறது. நான் அதைச் சரியாகப் புரிந்துகொள்வதற்காக, நமது சர்க்காருடைய புள்ளிவிவர இலாகாவிடமிருந்து தகவல் சேகரித்து அந்தத் தகவலை இங்கு சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1960-ம் ஆண்டிலே ஜனவரி தொடக்கத்தில் இரண்டாவது ரக அரிசியின் விலை ஒரு மணங்குக்கு ரூ. 20.06-ஆக இருந்தது, மே மாதம் வரும்போது ரூ. 21.41-ஆக உயர்ந்து, செப்டம்பர் வரும்போது ரூ. 22.76-ஆக உயர்ந்து, டிஸம்பர் வரும்போது ரூ. 23.19-ஆக வந்து அந்த இலக்கை எட்டியுள்ளது. அதே போல சாதாரண மக்கள்





உபயோகப்படுத்தக் கூடிய சோளம் ஒரு மணங்கு ரூ. 16.33-ஆக இருந்தது ஆண்டு முடிவில் ரூ. 17.07-ஆக உயர்ந்திருக்கிறது. ராகியை எடுத்துக்கொண்டால் ரூ. 14.94-ஆக இருந்தது ரூ. 15.50-ஆக உயர்ந்திருக்கிறது. இது ஒரு குறிப்பிட்ட சில பொருள்களுக்கு மாத்திரமன்று. இதரப் பொருள்களைப் பார்த்தாலும், அவைகளும் கணிசமான அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது. இவைகள் யாவும் சர்க்கார் தரப்பிலிருந்தே, சர்க்காருடைய புள்ளிவிவர இலாகா தயாரித்துக் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களாகும். சென்னையைப் பொருத்த மட்டில் மிகவும் உயர்ந்திருக்கக் கூடியது விறகின் விலையாகும். காஷூரினா அல்லாமல் மற்ற விறகு, ஒரு டன் ஜனவரி மாதத்தில் ரூ. 44.37-ஆக இருந்தது, ஜூன், ஜூலையில் ரூ. 51-ஆக உயர்ந்து, அக்டோபரில் ரூ. 49-ஆக உயர்ந்து, நவம்பரில் ரூ. 60.70-ஆக உயர்ந்து, டிஸம்பரில் ரூ. 75.94-ஆக உயர்ந்திருக்கிறது. இன்று மார்க்கெட்டிலே சென்று நல்ல விறகாக வாங்க வேண்டுமானால், காஷூரினா விறகு வாங்கவேண்டுமானால் இதைப் பார்க்கிலும் அதிகமாக, ரூ. 85-க்குக் குறைந்து வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆனால் கவர்னருடைய உரையிலே விலைவாசிகள் குறையத் தொடங்கி விட்டன என்று மாத்திரம் சூசகமாகச் சொல்லப்பட்டுள்ளது. இன்று இருக்கக் கூடிய காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் பற்றி கிடைத்திருக்கக் கூடிய புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால், 1960-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 441-ஆக இருந்தது படிப்படியாக உயர்ந்து, அக்டோபரில் 477 ஆகி, டிஸம்பரில் 488-ஆக உயர்ந்த நிலையைத் தொட்டிருக்கிறது. இப்படி விலைவாசிகளானது உயர்ந்துக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றதே தவிர குறைவதற்குள்ள சூசகம் ஏதும் இல்லை. பிளானிங் கமிட்டியின் பல குழுக்களில் ஒரு குழு சமீபத்தில் பார்லிமெண்டில் சமர்ப்பித்த அறிக்கையில் விலைவாசிகள் பற்றி பொதுவாக அகில இந்திய ரீதியில் குறிப்பிடும்போது.

**“The index of wholesale prices (1952–53) showed a rise of 6·5 per cent for the 11 months ended November 1960 as compared to a rise of only 3·6 per cent for the corresponding period in 1959”.**

என்று அந்த அறிக்கையிலே கழிந்த ஆண்டு அதாவது 1959-ம் ஆண்டு எந்த அளவு உயர்ந்ததோ (அப்போது 6½ சதவீதம் உயர்ந்தது). இந்த ஆண்டு அதே காலத்தில் அதைப் போல இரண்டு பங்கு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது. இப்படி விலைவாசி ஓரேயடியாக உயர்ந்திருக்கும்போது, ஏதோ ஒரு சமயத்தில் ஓரிடத்தில் டன்னுக்கு 5 ரூபாய் குறைந்துவிட்டால், அதைப்பற்றி உடனே கவர்னருடைய உரையிலே இப்படி புகுத்துவது நியாயத்திற்குப் புறம்பானது. விலைவாசி குறைவு என்று சொன்னால், கழிந்த ஆண்டு இதே காலத்தில், அறுவடை கால கட்டத்தில் என்ன விலை இருந்ததோ அதோடு ஒப்பிட்டுப் பார்த்து விலைவாசி குறைந்திருக்கிறது, குறைந்துகொண்டு வருகிறது என்று சொன்னால், அது நியாயமாகும், நேர்மையாகவும் இருக்கும்.

[Sri K. Sattanatha Karayalar] [23rd January 1961

6 சதவிகிதம், 7 சதவிகிதம் கூடியதில் 5 சதவிகிதம் குறைந்தால் அதைக் காரணமாகக் காட்டி விலைவாசிகள் குறைந்திருக்கிறது என்று சொல்வது எந்த அளவு நேர்மையாகும் என்று நீங்களே சிந்திக்க விட்டு விடுகின்றேன்.

அடுத்தபடியாக இந்த உரையைப் பார்த்தால் அதில் எந்த விதமான கொள்கை அறிக்கைகளையும் காணவில்லை. பொதுவாக கவர்னர் பெருமான் வரும் ஆண்டுக்கான கொள்கை விளக்கங்களைக் கூறியிருக்கவேண்டும். இந்த உரையைப் பார்த்தால் தயாரித்தவர்கள் மனதில் தேர்தல் தான் மனதில் இருக்கிறது என்பது நன்கு புரிகின்றது. நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைச் சமர்ப்பித்துப் பேசும்போது அதில் ஏதாவது சொல்லலாம், கவர்னருக்கு அதை ஏன் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தினால் இதில் ஒன்றும் இல்லையோ என்னவோ? இதில் கொடுத்திருப்பதெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியே. அதைப் பற்றி முன் சொன்ன பல்லவியையே சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டியிருக்கிறது. திட்டத்திலே 100 கோடி ரூபாய் அளவுக்கு வெட்டு வந்து விட்டது. ஆனால், இதில் விசேஷமாக திட்டத்தில் எந்தக் குறைவுமில்லாமல் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நூறு கோடி ரூபாய் வெட்டு வந்தும் திட்டத்தில் வெட்டு இல்லையென்றால், திட்டமிட்டதில் தவறு இருக்கவேண்டும். அல்லது 25 சத விகிதம் எஸ்டிமேட்டட் ரேட்டை கூட்டிப் போட்டிருக்கவேண்டும். இல்லையானால் 100 கோடி ரூபாய் அளவுக்கு எந்தத் திட்டத்தை விட்டிருக்கிறார்கள்? குறிப்பாக தொழில் திட்டத்திலும், மின்சாரத் திட்டத்திலும் வெட்டு இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இரண்டு இனத்தை எடுத்து விட்டால் விவசாயம், சமுதாய நலத்திட்டம் இவைகளுக்கு 76 கோடி ரூபாய், நீர்ப்பாசனத்திற்கு 40 கோடி ரூபாய் போன்று மொத்தம் 234 கோடி ரூபாய் ஒதுக்கினோம். சோஷல் சர்விஸ்ஸுக்கு 111 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. வெட்டு என்று சொன்னால், முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கின்ற பின் தங்கிய சமூகத்தினருக்கு, போக்குவரத்திற்கு, குடிசைத் தொழில்களுக்கு, சுகாதாரம், குடி தண்ணீர் போன்ற இனங்களுக்கு செலவழிக்க இருக்கின்ற தொகையில் பெரிய வெட்டு ஏற்படும். அப்படிப் பார்க்கும்போது கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழித்த தொகையைக் கூட செலவழிக்க முடியாது. கிராமாந்திரங்களுக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகளில் இந்த வெட்டுக் காரணமாக எவ்வளவோ குறைவுபடும் என்பதில் சந்தேகமில்லை. அகில இந்திய ரீதியில் இந்த இனத்திற்கு 1,250 கோடி செலவழிக்க இருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது கிட்டத் தட்ட 111 கோடி ரூபாய் நம் மாநிலத்தில் செலவழிக்க வேண்டும். இந்த மாநிலத்திற்கு 100 கோடி வெட்டு என்று சொன்னால், அதிலும் தொழில், மின்சாரம் இரண்டும் இதனால் பாதிக்கப்படாது என்று சொன்னால், நாட்டிலே வருகின்ற ஐந்தாண்டுகளில் செய்யக் கூடிய சுகாதார வசதிகள், மருத்துவ வசதி-



23rd January 1961] [Sri K. Sattanatha Karayalar]

கள், கல்வி, பின் தங்கியவர்களுக்குச் செலவு செய்வது எல்லாம் நிச்சயமாகக் குறையும். குறிப்பாக ஹரிஜனங்களுக்கென்று செய்யக் கூடிய சேவையில் பெரிய வெட்டு ஏற்படும் என்று வற்புறுத்த அவாவுகிறேன். பொதுவாக என்ன என்ன செய்யவிருக்கிறார்கள் என்று ஓரளவுக்குக் கூறினால் நன்மை தருவதாக இருக்கும்.

அடுத்தபடியாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எந்த அடிப்படையிலே அகில இந்திய ரீதியில் பணம் ஒதுக்கினார்கள் என்று தெரிய அவாவுறுகிறேன். பிற மாநிலங்களுக்கு பணம் ஒதுக்கியிருப்பதைச் சற்று கவனிக்கவேண்டும். அதில் கேரளம் தான் மிக மிக அதிர்ஷ்டம் செய்த இடம். ஒன்றரை கோடி மலையாளிகள் இருக்கக் கூடிய கேரளத்திற்கு 107 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில் 2½ பங்கு அதிகமாக ஜனத்தொகையுள்ள தமிழகத்திற்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இருநூற்றுத் தொண்ணூற்றொரு கோடி ரூபாய் செலவு செய்வதில் நமது மாநிலத்தினுடைய பங்கு 101 கோடி என்றிருக்கிறது. மத்திய சர்க்காரின் கண்ட்ரிப்யூஷன் 190 கோடி என்றிருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் கேரளத்திற்குக் கொடுத்திருக்கக்கூடிய தொகை அப்படியல்ல. சதுர மைல் விகிதாசாரப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஒரு சதுர மைலுக்கு இவ்வளவு என்ற அடிப்படையில்? அப்படி நிலப்பரப்பை வைத்துப் பார்த்தால், கேரளத்திற்கு கொடுத்திருக்கக்கூடியது உண்மையிலேயே மிக மிக அதிகமானது என்றுதான் சொல்லவேண்டும். அங்கு ஸ்திரமான ஆட்சி நடத்த முடியாத நிலைமை முன்பு இருந்ததால், அதையொட்டி அவ்வாறு கொடுத்தார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஒரு சதுர மைலுக்கு ரூ. 1,13,000 கொடுத்திருக்கிறார்கள். அத்தொகையை நமது மாகாணத்திற்கு கொடுத்துள்ளதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மூன்றில் ஒரு பங்குகூட இல்லை. ஒரிசாவை எடுத்துக்கொண்டால், இன்னும் வேடிக்கையாக இருக்கிறது. ஒரிசாவுக்கு மொத்தம் 160 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 160 கோடியிலே அந்த மாகாணத்திலிருந்து வரக்கூடிய முதலீடு ரூ. 28 கோடிதான். அதாவது அதைப் பார்க்கிலும் நான்கு பங்கு அதாவது 132 கோடி ரூபாய் மத்திய சர்க்காருடைய பங்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு மாகாணத்திற்கு ஒரு விதம், இன்னொரு மாகாணத்திற்கு ஒரு விதம் என்று கொடுக்கக்கூடிய முறையில் வித்தியாசம் இருக்கிறது. சில மாகாணங்களுக்கு இன்னும் குறைவாக மோசடி செய்திருக்கிறார்கள். ஆனால், சென்னை அதிலிருந்து தப்பி விட்டது. பணம் ஒதுக்குவதில் ஒரு அடிப்படை அல்லது ஒரு வரையறை இருக்கவேண்டும். ஒன்று நிலப்பரப்பை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். அல்லது ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அல்லது பின்தங்கிய

12-30 p.m.

[Sri K. Sattanatha Karayalar] [23rd January 1961

மாகாணங்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுக்கலாம் என்ற அடிப்படையாவது இருக்க வேண்டும். அப்படியில்லை, நம்மைக் காட்டிலும் ஆந்திராவிற்கு அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். அதைக் காட்டிலும் கேரளாவிற்கு அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில்தான் திட்டத்திற்கு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்.

எல்லோரைக் காட்டிலும் நாம் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றியிருக்கிறோம். அப்படித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தீர்வை அதிகம் வசூல் செய்து வந்திருக்கிறோம். அப்படி நல்லபடியாக நடந்துகொண்டும், நமக்கு எந்த விதமான பாராட்டுதலும் இல்லை. கிடைக்க வேண்டிய பங்கும் நமக்கு கிடைக்கவில்லை. மற்ற மாகாணங்கள் தாங்கள் திரட்ட வேண்டிய பங்கைக்கூட திரட்ட முடியாமல் போய் விட்டன. அப்படியிருந்தும் அவைகளுக்கெல்லாம் அதிகமாக தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேசமயத்தில் நம்மால் எந்தெந்த வகைகளிலெல்லாம் வரி போட்டு வசூலிக்க முடியுமோ, அந்த வகைகளில் எல்லாம் வசூலித்தும், நமக்கு பாராட்டுதல்கூட தெரிவிக்கவில்லை. பொதுவாக மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் ஒரு அடிப்படையை வைத்துக் கொடுத்ததாகத் தெரியவில்லை. எந்த அடிப்படையான இன்டெக்சும் காணவில்லை.

இப்படி வரையறையில்லாது ஒதுக்கப்பட்டுள்ள முறையிலே 3-வது ஐந்தாண்டுத் திட்டம் இருக்கிறது. அப்படியிருந்தும் தொழில் துறைக்கு முக்கியமான மின்சாரத் திட்டங்கள் நல்ல முறையிலே நடந்திருப்பதையும், நடத்த யிருப்பதற்கும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்திலே அத்தியாவசியமான, மிகவும் தேவையான பல திட்டங்களைக் கைவிட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்நிலைமை சீரடைய வேண்டிய முயற்சி எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, மத்திய சர்க்காரே நேரடியாக செய்யக்கூடிய தொழில்கள் என்னென்ன? அதற்கு என்ன முதலீடுகள் கிடைக்குமென்ற விவரங்கள் எதுவும் நிச்சயமாகச் தெரியவில்லை. இன்று ஹெவி எலெக்ட்ரிகல் பிளாண்ட் நமக்கு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் பக்கத்தில் உள்ள ஆந்திரர்கள் தங்களுக்குக் கிடைக்குமென்று கூறுகிறார்கள். அதேபோல் மைசூரில் உள்ளவர்கள் தங்களுக்கு கிடைக்க இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதிலே யாருக்கு கிடைக்குமென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. எவற்றிற்கு முதலிடம் கொடுப்பார்கள் என்றும் தெரியவில்லை. ஆகவே இதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, நமது மாகாணத்திற்கு நிச்சயமாகக் கிடைத்து விடுமென்றாலும்கூட, முதலிடம் பெற்று தொழில் துறையிலே மேலும் மேலும் வளர்ச்சியடையவேண்டிய முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் அடாமிக் பிளாண்ட் நிறுவ முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.



23rd January 1961] [Sri K. Sattanatha Karayalar]

புதிய ரயில் பாதையை பொறுத்தவரையில் நமக்கு முன்பு கிடைக்குமா என்ற பயமிருந்தது. இப்போது நமக்கு கிடைக்குமென்று உறுதி சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவு கிடைக்கும் என்று குறிப்பிடப்படவில்லை. தெற்கே குறிப்பாக, நெல்லை மாவட்டத்தையும், கன்னியாகுமரியையும் இணைக்கும் ரயில் பாதை அமைப்பை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும். கன்னியாகுமரி ஜில்லா முன்பு கேரளத்தோடு இணைக்கப்பட்டிருந்ததால், அதற்கு நெல்லையோடு பொருளாதார தொடர்பு கொள்ள முடியாமல் போயிற்று. இப்போதாவது பொருளாதார தொடர்பு வளர, குமரி முனையையும், நெல்லை மாவட்டத்தையும் இணைக்கக் கூடிய ரயில் போக்குவரத்தை உடனடியாக அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சேது சமுத்திரத்தைப் பற்றி அறிவதற்காக இப்போது திரு. ஜே. எஸ். டேவிஸ் என்ற ஒரு அதிகாரியை மத்திய சர்க்கார் அனுப்பி, நடவடிக்கைகள் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிய நியமிக்கப்பட்டிருப்பதாக சமீபத்திலே பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். அதையும் உடனடியாக கவனித்து இந்த 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தூத்துக்குடி துறைமுகம் எப்படியும் இத்திட்டத்தில் கண்டிப்பாக இடம் பெறும் என்று சொல்கிறார்கள். அது வெறும் பெயரளவில் இல்லாமல், தேர்தல் பிரச்சாரமாக இல்லாமல் நடைமுறையில் செய்யுமாறு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்நிலைமை ஓரளவு நல்ல மழை பெய்ததின் விளைவாக இச்சமயத்தில் இருக்கலாம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றும் ரேஷன் கடைகளிலே பர்மா அரிசி கொடுக்கப்படுவதைப் பார்க்கலாம். நமது நாடு இன்னும் அந்த நிலைமையில்தான் இருக்கிறது. அதே போல் 1.7 கோடி டன் கோதுமை அமெரிக்காவில் இருந்து வாங்குகிறோம். சமீபத்திலே பர்மாவுடன் ஒரு உடன்பாடு கூட செய்து கொண்டோம். அதன்படி 30 ஆயிரம் டன் அரிசியை அங்கிருந்து வாங்குகிறோம். இன்று நாட்டிலே நல்ல முறையிலே மழைபெய்து, நாடு செழித்திருக்கக்கூடிய நிலைமையிலே கூட உணவு தானியங்களை அன்னிய நாடுகளிலிருந்து தான் பெற வேண்டியிருக்கிறது, என்பதை மறந்துவிடக் கூடாது. உணவு தானியங்கள் நியாயமான விலைக்கு கிடைக்கக் கூடிய நிலை இன்றும் நாட்டிலே இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே விவசாயத் துறை எந்தவிதத்திலே முன்னேறியுள்ளது என்பதைக் கவனித்தால், விவசாயத்திற்கு மிக முக்கியமான அம்மோனியம் சல்பேடு சரியாக கிடைக்கவில்லை என்பது குறித்து பல எம். எல். ஏ.-க்கள் வருத்தம் தெரிவித்ததைக் காணலாம். வழக்கமாக ஒரு ஏக்கருக்கு

80 பவுண்டு அம்மோனியம் சல்பேடு உரம் கொடுப்பதற்குப் பதில், 40 பவுண்டு உரமே உரத் தட்டுப்பாட்டின் காரணமாக கொடுக்கப்பட்டது நினைவிருக்கலாம். இந்த நிலைமையிலே உற்பத்தியை எவ்வாறு அதிகமாக எதிர்பார்க்க முடியும்? அது இல்லாமல் இவ்வாறு உர உற்பத்தி எப்படி குறைந்தது என்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. 1954-ல் 340 ஆயிரம் டன் அமோனியம் சல்பேட் உரம் உற்பத்தியாகி உள்ளது. ஆனால் இன்று அந்த அளவுகூட உற்பத்தியாகுமா என்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. அது எப்படியென்று பார்த்தால், 1955-லே 394 ஆயிரம் டன்னாக உற்பத்தி இருந்தது. ஆனால் இன்று 1959 வரையிலே உள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால், அது 378 டன்னாக குறைந்துள்ளது. அகில இந்திய ரீதியிலே சல்பேட் உரம் குறையக் காரணம் என்ன? இப்போது 1959-லே குறைந்ததற்கும், மிகக் குறைவாக குறைந்திருக்க வேண்டுமென்றே நம்புகிறேன். ஏனெனில் விவசாயிக்கு கிடைத்திருக்கக் கூடிய விநியோகத்தைப் பார்த்தால் மிகவும் குறைந்துள்ளது. இப்படியிருந்தால் எப்படி உணவு உற்பத்தி முன்பிருந்ததைவிட அதிகரிக்க முடியும்? ஆகவே இன்று உரம் தட்டுப்பாடின்றி விவசாயத்திற்கு, விவசாய மக்களுக்கு கிடைக்கக்கூடாத ஒரு சிக்கலான நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. திட்டமிட்டுவிட்டால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்யவேண்டும்.

தவிர, நமது சென்னை மாகாண சர்க்காருக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. சாதாரணமாக எந்தப் பிரச்னையைப் பற்றியும் முடிவு எடுக்குமுன், எல்லாக் கட்சியினரையும் குறிப்பாக சட்ட சபையிலாவது கலப்பது வழக்கம். ஆனால் சமீபத்திலே பலரை பாதிக்கக்கூடிய முறையில் ஒரு விஷயம் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. நமது சபையிலே கூட 38 ரிசர்வ் தொகுதி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த தொகுதிகளை பிரிக்க மத்திய சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறது. இதை மாகாண சர்க்கார் விரும்பவில்லை என்பதுகூட தெரியும். இருப்பினும் இம்முடிவு எடுக்கப்படும்போது, எதிர்க்கட்சியினரைக் கலந்து கொண்டுதான் எம்முடிவும் செய்யப்படுவதாகச் சொல்வதை நமது சர்க்கார் இவ்விஷயத்தில் சொல்ல முடியாது. இவ்விஷயத்தில் இந்த சர்க்காரை மத்திய சர்க்கார் கேட்டதாகக் கூட தெரியவில்லை. ஆயினும் ஏதோ கட்சி அளவிலே, அகில இந்திய காங்கிரஸ் எடுத்த முடிவை அப்படியே மத்திய அரசாங்கம் செயல்படுத்துகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இது எந்த அளவிலே ஒவ்வொரு மக்களையும் பாதிக்கிறது, இதிலுள்ள லாபநஷ்டங்கள் என்னென்ன என்பதையெல்லாம் கவனிக்காது ஜனநாயகத்திற்குப் புறம்பான, விரோதமான முறையிலே இது செய்யப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய, குறிப்பாக திரு. ஆதிமூலம் அவர்கள் சொன்னதுபோல், இன்றுள்ள அதிகாரிகள் ஒவ்வொருவரும் காங்கிரஸ்காரர் என்னென்ன சொல்கிறார்களோ, அந்தந்தக்



காரியங்களைத்தான் செய்யவேண்டுமென்ற மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதைக் காண்கிறோம். என்னைப் பார்த்து பல ஆபீசர்கள் நான் கதர் அணிவதினாலே காங்கிரஸ்காரன் என்று எண்ணிக்கொண்டு, அந்த மனப்பான்மையுடன் பேசுவது உண்டு. குறிப்பாக சில உத்தியோகஸ்தர்களைச் சொல்ல முடியும். ஆனால், பெயரைச் சொல்ல விரும்பவில்லை. "நமது கட்சிக்காக" என்றே பேசுகிறார்கள். அதை நான் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருப்பேன். கடைசியிலேதான் நான் காங்கிரஸ்காரன் இல்லை என்று சொல்வது வழக்கம்.

**THE HON. SRI P. KAKKAN :** கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று தெரிந்துகொள்ள முடியாத வகையில் அவர் எல்லாக் கட்சிகளிலும் தொடர்பு கொள்வது காரணமாய் இருக்கலாம்.

**SRI K. SATTANATHA KARAYALAR :** சரிதான், ஆனால், நான் சொல்ல வந்தது உத்தியோகஸ்தர்களைப் பற்றித்தான். காங்கிரஸ்காரர்களுக்குத்தான் நன்மை செய்ய வேண்டும் என்ற நிலைமையிலே உத்தியோகஸ்தர்கள் செயல்படுகிறார்கள். அவர்களுக்குக் கட்சி மனப்பான்மை எப்போதும் இருக்கக் கூடாது. இன்றுள்ள ஜனநாயகத்திலே இரண்டு கண்களைப் போல் இந்த இரண்டும் இருக்க வேண்டும். ஒன்று நிரந்தரமான நிர்வாகம். மற்றொன்று சட்டசபை. இவ்விரண்டையும் இரண்டு கண்களாகக் கொண்டே ஆட்சி நடைபெறுவதாக இருக்க வேண்டும். நிர்வாகத்திலே கட்சிக் கண்ணோட்டம் வரக்கூடாது. சட்டசபை முடிவை நிறைவேற்றக் கூடியவர்களாக உத்தியோகஸ்தர்கள் பணியாற்ற வேண்டுமேயல்லாது, கட்சிக் கண்ணோட்டத்திற்கே இதில் இடமிருக்கக் கூடாது என்று கூற விரும்புகிறேன். இந்த முறையிலே சர்க்காரில் இருப்பவர்கள் கட்சி நிர்வாகத்திற்காக அல்ல, அரசாங்கத்தில் நிரந்தரமாக இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் என்ற கண்ணோட்டத்தோடு காரியங்கள் செய்யப்படவேண்டும். கேரளத்தில் கம்யூனிஸ்டு இம்மாதிரிதான் செய்தார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அந்தக் குற்றம் இங்கு உங்களைச் சாரும். அப்படி இல்லாத முறையிலே காரியங்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படவேண்டும். உதாரணமாக, ஒரு மாவட்ட தண்டல்நாயகம் ஏதாவது தவறாக நடந்துகொண்டால், அந்த தவறை சுட்டிக்காட்டி கிளர்ச்சி செய்யவேண்டுமே தவிர, ஒரு கட்சிக்கு சாதகமாக ஒரு அதிகாரி நடந்துகொள்ளவில்லை என்று சொன்னால், அந்த மாவட்டத்தில் பொதுக்கூட்டங்களிலும் மற்ற இடங்களிலும் 'இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய உயர் அதிகாரிகளை நாங்கள் மாற்றிவிடுவோம்' என்று ஒரு கட்சி மார்தட்டுமேயானால் அது அந்த கட்சி நிர்வாகத்தில் எந்த அளவு தலையிடுகிறார்கள் என்பது தெளிவு.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது நாட்டில் இருக்கக்கூடிய விதைப் பண்ணைகளைப் பற்றித்தான். விதைப் பண்ணைகளை செம்மைப் படுத்துவதற்காக ஒரு

கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. உரம் விவசாயிகளுக்கு எந்த விதத்தில் கிடைக்கிறது என்பது பற்றி சொன்னேன். விதை விநியோகத்தைப் பொறுத்த மட்டில் மிகவும் ஒரு மோசமான நிலைமை இருந்து வருகிறது. நல்ல விதை கிடைப்பதில்லை. நல்ல விதை கிடைக்கவேண்டுமென்றால், மிகச் செல்வாக்குள்ளவர்களுக்குத் தான் கிடைக்கிறது. மற்றபடி விதைப் பண்ணைகளில் கிடைக்கக்கூடிய விதைகள் சண்டும் சாவியுமாக இருக்கிறது. நிரந்தரமாக உத்திரவாதமான விதைகள் அல்ல. இந்தெந்த மாவட்டத்திற்கு இந்தெந்த விதைப்பண்ணைகள் என்று வரையறுக்க வேண்டும். என்னென்ன விதைகள் தேவையோ அந்தந்த விதைகளை எடுக்க வேண்டும். எப்படி எப்படியோ விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டன. அது பழைய கதை. எஸ்டிமேட் கமிட்டி அதைப் பற்றி தீர்ப்பு கூறியிருக்கிறது. எடுத்த விதைப் பண்ணைகளை, சர்க்கார் ஏற்கனவே அதிக விலை தகாத விலை கொடுத்து வாங்கிய விதைப் பண்ணைகளை இனியாவது செம்மைப்படுத்தி, அதை ஒரு எகனமிக் யூனிட்டாக இயங்கும்படி பெரிது படுத்தி, செம்மையாக விவசாயம் நடத்தி அதிலிருந்து கிடைக்கக்கூடிய பொறுக்கு விதைகளை இந்தெந்தப் பகுதிகளுக்கு, இந்தெந்த பிளாக்குகளுக்கு கொடுக்கிறோம் என்று பிரித்து கொடுக்கக்கூடிய பழக்கம் இருக்க வேண்டும். அந்த முறையிலே விதைப் பண்ணைகள் இயங்கி வந்தால் மக்களுக்கு பயன்படும். இல்லாத முறையிலே, ஒவ்வொரு விதைப்பண்ணையிலும் என்னென்ன உற்பத்தி செய்யப்படுகிறது, எங்கு விநியோகிக்கப்படுகிறது என்று நேரிடையாக மக்களுக்கு தெரிவதில்லை. அந்தந்த மாவட்டத்திற்கும் தேவையான விதைகள் அந்தந்த விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய முறையிலே அந்த விதைப்பண்ணைகள் இயங்கவேண்டும். அந்தந்த மாவட்டத்திற்கு எது தேவையோ அந்த விதைகளை அதற்கு முந்திய அறுவடை காலத்திலேயே அந்தந்த விதைப் பண்ணைகளில் தயார் செய்யவேண்டுமென்று நான் கோருகிறேன்.

அடுத்தபடியாக, சிறு தொழில்களைப் பற்றி பேச விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் சிறு தொழில்களை நடத்துவது ஒரு வினையாக முடிகிறது. உதாரணமாக மண்பாண்டங்கள் செய்யும் தொழிலை கூட்டுறவு முறையில் அமைக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் பல இடங்களில் சென்று கூட்டுறவு சங்கங்களை சேர்த்தோம். அம்மாதிரி சேர்த்தது இப்பொழுது ஒரு பெரிய வினையாக வந்திருக்கிறது. இந்தக் கூட்டுறவு பண்டகசாலையிலிருந்து ஒரு சட்டிபானை விற்கவேண்டுமென்றால் அதற்கு ஒரு அணா விற்பனை வரி கொடுக்கவேண்டும். ஆனால், கூட்டுறவு சங்கத்தில் சேராமல், தனியாக ஒருவர் சட்டிபானை வேய்ந்து விற்றால் அவர் 12 அணாவுக்கு விற்கலாம். ஆனால் கூட்டுறவு பண்டகசாலையில் செய்த சட்டிபானையை விற்கவேண்டுமென்றால், ஒரு அணா கூட போட்டு 13 அணாவுக்குத் தான் விற்கவேண்டும். இம்மாதிரி நிலை இருந்தால், கூட்டுறவு முறை எப்படி நிலைக்கும் என்று கேட்கிறேன். சிறு குடிசைத் தொழில்கள் அத்தனைக்கும் விற்பனை வரி



இருப்பது மிகப் பெரிய சாபக் கேடாக இருக்கிறது. தெரியாமல் சில கூட்டுறவு சங்கங்கள் விற்பனை வரியில்லாமல் குறைந்த விலைக்கு விற்றிருக்கின்றன. அவைகளுக்கு மொத்த 'டர்ன் ஓவர்' இவ்வளவு ஆகியிருக்கிறது. ஆகையால் இவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும், ரூ. 1,300 கட்ட வேண்டும், என்றெல்லாம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பல கூட்டுறவு பண்டக சாலைகள் மூடவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. கண்டிப்பாக சிறு தொழில்கள் செய்யக்கூடிய கூட்டுறவு பண்டகசாலைகளுக்கெல்லாம் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒன்றிரண்டு நடக்கக் கூடிய திட்டங்கள் எப்படி நடக்கின்றன என்பதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டுவிட்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன். மந்திரி அவர்களுக்கும் தெரியும். மாராமத்து இலாகா பாலம், செங்கோட்டை, தென் காசி இரண்டு பகுதிகளையும் இணைக்கக்கூடிய பாலம், ராஜ்ய புனரமைப்புக்கு முன்பே திருவாங்கூர் கவர்ன்மெண்டால் ஆரம்பிக்கப்பட்ட பாலம் 'டெக் லெவல்' என்று சொல்லக்கூடிய ரோடு மட்டத்திற்கு கட்டிவிடப்பட்ட பாலம் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. இம்மாதிரி காலதாமதம் ஆகிறது. அதேமாதிரி இன்னொரு மிகச் சிறிய பாலம், ஒரு லட்ச ரூபாய் செலவில் கட்டவேண்டிய பாலம் இன்று வரை கட்டி முடிக்கப்படவில்லை. மூன்று ஆண்டுகளாக திரும்பித் திரும்பி அதுபற்றி கூறிக்கொண்டே இருக்கிறேன். அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமலேயே திரிசங்கு சொர்க்கத்தில் விடப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, தென்காசியில் 40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு குடி தண்ணீர் திட்டம் இன்னும் அமுலாக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே கனம் முதல் மந்திரி அவர்கள் அதற்கு அடிக்கால் நாட்டினார்கள். ஆனால், இன்றுவரை எந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுப்பது என்பது யாருக்கும் தெரியாது. இப்பொழுது 'காபினட்' அப்ரூவலுக்கு' பேப்பர்ஸ் போயிருக்கிறது என்று அறிகிறேன். முடிவு என்னவென்று தெரியாது. தண்ணீர் எங்கிருந்து எடுக்கவேண்டுமென்பது யாருக்கும் தெரியவில்லை. டாங்கு கட்டிவிட்டார்கள். ஆங்காங்கு குழாய்களும் அமைக்கப்பட்டு விட்டன. ஜனங்கள் எப்பொழுது தண்ணீர் வரும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தண்ணீர் எடுத்தால் யாராவது தங்களை பாதிக்கும் என்றால் இங்கு வந்து கேட்டவுடன் ஒரு 'ஸ்டே ஆர்டர்' கொடுத்து விடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் வயல்களை பாதிக்கும் என்று கேட்டால், உடனே 'ஸ்டே ஆர்டர்' கொடுத்துவிடுகிறார்கள். ஏதாவது ஒரு இடத்தில் தண்ணீர் எடுத்தால், யாராவது ஒருவருடைய வயலை அது பாதிக்கத்தான் செய்யும். குடி தண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுத்து, நிலங்களை ஆர்ஜிதம் செய்ய

வேண்டுமென்றால், 'அக்விசிஷன் ப்ரொசீடிங்ஸ்' எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியில்லை என்று கேட்பவர்களுக்கு எல்லாம் 'ஸ்டே ஆர்டர்' கொடுத்தால், இம்மாதிரி இந்த முக்கியமான குடி தண்ணீர் திட்டம் 9 ஆண்டுகளாக காலம் தாழ்த்தப் பட்ட திட்டம்; மேலும் காலம் தாழ்த்திக்கொண்டே போகப்படும். போட்ட திட்டத்தை உறுதியாக நின்று துரிதமாக நிறைவேற்றி வைக்கவேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் திட்டம் தீட்டியபடி அந்தத் திட்டங்களை பாரபட்சமற்ற முறையிலே, கட்சி மனப் பான்மை இல்லாமல், தங்கள் நண்பர்கள் பற்று, ஜாதிப் பற்று இல்லாமல் நிறைவேற்றுவதற்கு நியாயமாகவும், நேர்மையாகவும் செயலாற்றவேண்டும். அது இல்லாத காரணத்தினால் நான் மிகவும் வருந்துகிறேன்.

**SRI M. KANDASAMI PADAYACHI**: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் ஆற்றிய உரையை வரவேற்று, சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நமது தேசத்தை ஆண்டு வந்த வெள்ளையர் நம்மிடத்தில் ஆட்சியை ஒப்படைத்து 13 வருஷங்கள் ஆகின்றன. மகாத்மா காந்தி அடிகள் காட்டிய வழிகளை பின்பற்றி நம் தேசம் நல்ல முறையில் முன்னேறி வருகின்றது. இப்பொழுது மாட்சிமை தங்கிய ராணியார் எலிசபெத் அவர்கள் நம் நாட்டிற்கு விஜயம் செய்வதை நாம் வரவேற்கிறோம். அது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ராணியார் அவர்களுக்கு நல்ல வர வேற்பு கொடுக்க வேண்டியது அவசியம்தான். நமது கவர்னர் பெருமான் முறைப்படி அவருக்கு முதலில் நல்வரவு கூறியிருக் கிறார். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடி வடைந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இப் பொழுது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். முதல் இரண்டு திட்டங்களில் நிறைவேற்றப் படாமல் விட்டுப் போன திட்டங்களை இந்த மூன்றாவது திட்டத்தில் எடுத்து நிறைவேற்ற நமது ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். அதற்காக நமக்கு மத்திய சர்க்கார் 190 கோடி ரூபாய் உதவி அளிக்க இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. காலா காலத்தில் மழை பெய்யாமல் காலம் தவறி மழை பெய்ததால் குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் உடைப்பு ஏற்பட்டு அநேக சாலைகளுக்கு சேதம் ஏற்பட்டு, அவைகள் பழுதடைந்திருக்கின்றன. பயிர்களும் சேதமடைந்துள்ளன. நாற்றுகளையெல்லாம் திரும்ப நடவேண்டிய நிலை ஏற் பட்டுவிட்டது. அதனாலே விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதுதான் நமது முக்கிய திட்டம். தற் போதைய உற்பத்தி சுமார் 52 லட்சம் டன் என்றும், இன்னும் 15 லட்சம் டன் அளவு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்க மிகவும் சந்தோஷம். விவசாயிகளுக்கு வேண்டிய உரங்கள், கருவிகள் இவைகளை அரசாங்கம் சரியான முறையிலே விநி





யோகிக்க வேண்டும். என்னுடைய வட்டாரத்திலுள்ள முக்கிய மான இடங்களிலே விதைகள், உரங்கள், சரியான முறையிலே கொடுக்கப்படுவதில்லை என்றுதான் அங்கேயுள்ளவர்கள் கருது கிறார்கள். எதிர்க்கட்சி நண்பர் சொன்னமாதிரி, ஒரு வட்டாரத் திற்கு எவ்வளவு தேவையோ, அதை ஸ்டாக் செய்து, வட்டார வளர்ச்சி அதிகாரியின் வரம்புக்கு உட்பட்டு, அதைப் பங்கிட உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலாகாலத் தில் உரங்கள் சரியான முறையிலே பங்கிடப்படவில்லை என்ற குறை இருந்து வருகிறது. வட்டார வளர்ச்சி அதிகாரியோடு சட்டசபை உறுப்பினர்களையும், இன்னும் விவசாய மக்களையும் சேர்த்துக்கொண்டு, பங்கீடு செய்வார்களேயானால் நல்ல முறை யில் பயன்படும். உற்பத்தி பெருக வசதி ஏற்படும்.

மின்சார அபிவிருத்திக்கு 101 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். பல அணைக்கட்டுத் திட்டங் களினாலே முன் பகுதியிலுள்ள நிலங்கள் பாசன வசதி பெறு கின்றன. பின் பகுதியிலுள்ள நிலங்களுக்கு கிணறுகள் வெட்டி, வேண்டிய பம்பு செட்டுகள் வைப்பதற்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும். பிற்போக்கான இடங்களிலே விவசாயி களுக்கு பம்பு செட்டுகளுக்குக்கூட மின்சார வசதியில்லாமல் இருக்கிறது. எந்தெந்தப் பகுதிகள் பிற்போக்காக இருக்கின் றனவோ அங்கேயெல்லாம் முன் பாத்தியத்தை கொடுத்து, மின் சாரத்தை உபயோகப்படுத்தும்படியான திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கிணறுகள் வெட்டி 3 அல்லது 4 வருஷங்கள் ஆகியும், குறைந்தபட்சக் கட்டணம் 10 சதவிகிதம் வரவில்லையென்ற காரணத்தினாலே பல பகுதிகள் மின்சார வசதியில்லாமல் பின்தங்கிய நிலையில் இருக் கின்றன. ஆகவே விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து, பம்பு செட்டுகளுக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால், எங்கள் மாவட்டத் திலுள்ள நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி உற்பத்தியாகிறது: சேலத்திலே இரும்பு உருக்குத் தொழிற்சாலையை அமைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. எங்கள் ஊரிலே விமான நிலையம் ஒன்று அமைந்துள்ளது. அயல் நாட்டு நிபுணர் கள் அங்கே வந்து இறங்கினால், பக்கத்திலே உள்ள நெய் வேலிக்குப் போவதற்கு சௌகரியமாக இருக்கும். அங்கி ருந்து 8 மைல் தூரத்திலேதான் இருக்கிறது. இப்பொழுது அது காலியாகக் கிடக்கிறது. அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டிய வசதி இருக்கிறது. விமான நிலையத்தை சீர்படுத்தினால் வெளிநாட்டு நிபுணர்கள் வருவதற்குச் சௌகரிய மாக இருக்கும். அதே இடத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையையும் அமைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதியை எடுத்துக்கொண்டால், நண்பர் சுவாமிக்கண்ணுப் படையாச்சி சொன்னது போல் பெண்ணையாற்றுத் திட்டத்தை செங்கல்பட்டு, தென் ஆற்காடு

மாவட்டங்களுக்குக் கொண்டுவந்தால் நல்ல திட்டமாக இருக்கும். குடி தண்ணீருக்கு மட்டுமல்லாமல், நீர்ப்பாசனத்திற்கும் பயன் படும். சாத்தனூர் அணைக்கட்டிலேயிருந்து தென்புறமாக சங்கரா புரம் வழியாகக் கால்வாயை வெட்டிக் கொண்டுவரவேண்டு மென்று கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக் கிறோம். அந்தத் திட்டம் நிறைவேறினால், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற மேட்டுப்பாங்கான இடங்களுக்கும் பாசன வசதி ஏற்படும்.

பொதுக் கல்வியைப் பொறுத்தவரையில் 6 முதல் 11 வயது உள்ள சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி அளிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சில உயர்தரப் பள்ளிகளில் நல்ல முறை யில் பயிற்சி அளிக்கப்படவில்லை. ஆகவே எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயக் கல்வி முறையைப் புகுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. சில டவுன்களிலும், பஞ்சாயத்துகளிலும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்துப் பாராமரிக்கவேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. எப்படி உயர்நிலைப் பள்ளிகளை சர்க்கார் எடுத்து நடத்த உத்தேசித்திருக்கிறார்களோ, அதேமாதிரி ஆஸ்பத் திரிகளையும் எடுத்து நடத்தினால் நல்லது. மக்களுக்கு உதவியாக இருக்கும். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் கிராமங்களில் பணி புரி கின்றன. டவுன்களிலே ஆஸ்பத்திரிகள் இருப்பதனால், அர சாங்கம் அவற்றை எடுத்து நடத்தினால்தான் மக்களுக்குப் பயன் ஏற்படும்.

மூன்றாவது திட்டத்திலே நல்ல நல்ல திட்டங்கள் சேர்க்கப்பட் டிருப்பதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம். எதிர்க் கட்சி அங்கத் தினர்கள் திட்டத்தைப்பற்றி குறை கூறுகிறார்கள். இதை எதிர்த்துப் பெரிய கிளர்ச்சி செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். நல்ல திட்டங்களை நிறைவேற்று வதற்கு வரி வேண்டுமானாலும் கொடுக்க மக்கள் தயாராய் இருக்கிறார்கள். மக்களை அதிகம் பாதிக் காமல் எந்த அளவுக்கு வரி வசூலிக்க முடியுமோ, அந்த அளவுக்கு வரி வசூலிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால்தான் மக்களுக்கு வேண்டிய பல திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆகவே, இம்மாதிரி நல்ல திட்டங்களை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எதிர்ப்பதை விட்டு விட்டு, அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு சபாநாயகருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri T. L. SASIVARNA THEVAR :** கனம் உதவி சபாநாயகர் களே, நம் மாநில கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின்மீது, என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசிய பல கனம் அங்கத்தினர்கள், பொதுவாகக் குறிப்பிட்ட ஒரே ஒரு





விஷயம், விலைவாசி ஏற்றத்தைப்பற்றி. அதைப்பற்றி அபிப் பிராய பேதம் இல்லாமல், அக்கரையோடு பேசினார்கள். அதையே நானும் சொல்ல விரும்புகிறேன்.

அது சமுதாயத்தில் உள்ள ஒரு பெரிய குறை. ஆளும் கட்சி அங்கத்தினர்களும், கவர்னர் பெருமான் உரையை வரவேற் கிறோம் என்று சொல்லி விட்டு குற்றந்தான் கூறுகிறார்கள்; எதிர்க் கட்சி அங்கத்தினர்களும், கவர்னர் பெருமான் உரையை எதிர்க் கிறோம் என்று சொல்லி அதே குற்றங்களைச் சொல்கிறோம். ஆரம் பத்தில் தான் வித்தியாசம் என்று, சபாநாயகர் அவர்களே, அறி விக்க விரும்புகிறேன். விலைவாசி ஏற்றத்தால் மக்கள் படும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. இன்று 13 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி இருந்து வந்திருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாகி விட்டது. இந்த சந்தர்ப்பத்திலும் எந்த விலை பொருளாவது விலைகுறைந்திருக்கிறதா என்றால், நிச்சய மாக இல்லை. அத்யாவசியப் பொருளாவது குறைந்திருக்கிறதா, மற்றதைப்பற்றிக் கவலை இல்லை. விலை குறைந்திருக்கிறதா, அல்லது நியாயமான விலைக்காவது கிடைக்கிறதா என்றால், இல்லை என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. அதைப்பற்றி, விலைவாசியைக் குறைக்க என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்கப் போகிறது என்று கவர்னர் பெருமான் உரையில் ஒன்றும் கிடையாது. விலைவாசிகள் குறைய ஆரம்பித்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மதுரையிலிருந்து வருகிறேன். சமீபத்தில் அறுவடை முடிந்த சமயம்; அங்கு மூட்டை நெல் கார் நெல்லைவிட அதிகமான விலைக்கு விற்கிறது. அறுவடை காலத்திலும் மூட்டை ஒன்று ரூ. 30-க்குக் குறையவில்லை. அம்மாதிரியே தான் மற்றுமுள்ள தானியங்களும். புஞ்சைப் பயிரும் அப்படித்தான். மழை பெய்தது வாஸ்தவம். ஆனால் அது காலம் தாழ்த்திப் பெய்தது. அதனால் புஞ்சைப் பயிர்கள் கெட்டு விட்டது என்பதை மறக்கக் கூடாது. ஆனால், நஞ்சை நல்ல முறையிலே இருக்கிறது, இனிமேலும் நல்ல முறையில் இருக்கலாம். ஆனால் புஞ்சைப் பயிருக்கு இது நெருக்கடியான காலம். இனிமேலும், நெருக்கடியாகத்தான் இருக்கும் என்பதை மட்டும் மறந்து விடக் கூடாது. ஆகவே, அதைத் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும். புளி, மிளகாய் எல்லாம் சகிக்கமுடியாதபடி விலை ஏறிக்கிடக்கிறது. நல்லண்ணெய் ஒரு படிக்கு ரூபாய் ஐந்து அல்லது ஆறு கொடுக்கவேண்டி இருக்கிறது. அதேமாதிரி எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் இதற்கெல்லாம் பண வீக்கம் காரணம் என்று சொல்லலாம். வருமானம் நிறைய வரு பவர்களுக்குப் பரவாயில்லை. ஆனால், நிர்ணயிக்கப்பட்ட வரு மானம் உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், மில் தொழி லாளிகள் முதலியவர்கள் இம்மாதிரி விஷம் கட்டினாற்போல் விலைகள் ஏறிக்கொண்டு போனால் எப்படிச் சமாளிக்க முடியும் என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். விறகை எடுத்துக் கொள்ளுங்கள், இரண்டே முக்கால் ரூபாய்க்குகூட ஒரு ரூண்டு

விறகு கிடைக்கவில்லை மதுரையில். இப்படியே ஏறிக்கொண்டே போகும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், ஆபத்துக் காத்துக் கொண்டிருக்கிறது பின்னால் என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்திற்கு பெரும் அளவு கவனம் செலுத்தப் படுகிறது என்று சொல்கிறார்கள். இதிலே, தகராறு என்னவென்றால், உரம் பற்றாக்குறை. அதைச் சொல்லி முடியாது. சென்ற வருஷத்தைக் காட்டிலும், இந்த வருஷம் கஷ்டம் சொல்ல முடியாதபடி அதிகமாகி விட்டது. உரமே கிடைக்கவில்லை என்றுகூட சொல்லி விடலாம், அவ்வளவு கஷ்டம், நஷ்டம். கோஆபரேடிவ் முறையிலே விநியோகிக்கிறோம் என்கிறார்கள். மதுரையில் கோஆபரேடிவ் ஸ்டோர்களிலே உரம் வாங்குவது என்பது குதிரைக் கொம்பாகி விட்டிருக்கிறது. ஆனாலும், கீழ மாசி வீதியில் உள்ள ஒரு கடையில் மாத்திரம் 2,000, 3,000 மூட்டைகளை பகிரங்கமாக மூட்டை ஒன்று ரூ. 100 வரை விலை போட்டு விற்கிறார்கள். அதைக் கண்ணால் பார்க்கிறோம். எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை. லாரி, லாரியாக வருகிறது. இந்த லாரி எங்கிருந்து வருகிறது என்று கேட்டால், கோயம்புத்தூரிலிருந்து என்கிறார்; அந்த லாரி எங்கிருந்து வருகிறது என்றால், திருநெல்வேலியிலிருந்து என்கிறார். எந்த சொஸைடி மூலமாகவோ, அதிக விலை கொடுத்து வாங்கியோ என்னவோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் சர்க்கார் கவனிக்க வேண்டும். இதை மனப் பூர்வமாக, தாழ்மையோடு தெரிவிக்கிறேன்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க என்று மூன்றாவது திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. ஆனால் இதே சமயத்தில், கிழக்கு இராமநாதபுரம் பற்றி ஒரு சில வார்த்தைகள். கிழக்கு இராமநாதபுரம் ரொம்பப் பிற்போக்கான பிரதேசம். அதற்கு ஒரு நீர்பாசனத் திட்டம் வேண்டும் என்று நாலு வருஷ காலமாக கத்தாமல் கத்துகிறோம். காங்கிரஸ் அங்கத்தினர்களும் சரி, மற்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் சரி, பல அங்கத்தினர்கள் கத்திக்கொண்டே இருந்திருக்கிறார்கள். சென்ற தடவை நீர்ப்பாசன சம்பந்தமான மானியத்தின் பேரில் பேசும் போதும் நான் குறிப்பிட்டேன், அப்பொழுது கனம் மராமத்து மந்திரியவர்கள் அப்பர் பெரியாறு திட்டம் சம்பந்தமாகவும் எவ்வளவு உதவிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். சோனல் கவுன்சில் கூட்டத்தில் அதைப் பரிசீலனை செய்கிறோம் என்றும் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொன்ன இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு, நம் லைப்ரெரியில், சோனல் கவுன்சில் அஜெண்டாவையும் அந்தக் கூட்டத்து மினிட்ஸையும் பார்த்ததில், முதல் இடமாக சிறுவாணித் தண்ணீரை கோவை நகரத்திற்கும் விவசாயத்திற்கும் உபயோகிப்பது பற்றி அஜெண்டாவில் இருந்ததே தவிர, அப்பர் பெரியாறு திட்டம் அஜெண்டாவில்கூட இடம் பெற்றிருக்கவில்லை. அமைச்சரவர்கள் இங்கே இருப்பதால் இதைச் சொல்லு-



கிறேன். ஆகவே, கிழக்கு ராமநாதபுரத்திற்கு பரிபூரணமாக நன்மை பயக்கும் திட்டம் காலதாமதம் செய்யப் படுகிறது. தண்ணீர் தகராறு என்றால், கேரளா சர்க்காரோடு தகராறு என்றால், கேரளா முதல் அமைச்சர் ஒரு துளித் தண்ணீர்கூட கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார் என்றால், அம்மாதிரித் தகராறுகள் அப்பர் பெரியாறு திட்டத்தில் இருக்கவில்லை. அதற்குக் காரணங்களும் இல்லை. அப்பர் பெரியாறு திட்டம் முக்கியமாக மின்சாரத் திட்டம். அந்த மின்சாரம் கேரளாவுக்கு வேண்டும். அது அவர்களுக்குக் கிடைக்கிறது. அதில் உபயோகப்படுத்தப்பட்ட தண்ணீர், நமக்குக் கிடைக்கிறது தண்ணீர் கேரளாவுக்கு அவசியம் இல்லை. இந்த திட்டத்தை ஏன் மூன்றாவது திட்டத்தில் சேர்க்கவில்லை என்று தெரியவில்லை. கேரளா சர்க்காரை அணுகி—கேரளா சர்க்காருக்கு நிறைய மின்சாரப் பசி இருக்கிறது—பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு வேண்டிய மின்சாரம் கிடைக்கிறது, நமக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கிறது. எந்தக் காரணத்திற்காகவோ இது தள்ளிப் போய் விட்டது. அது சரியில்லையென்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். கிழக்கு ராமநாதபுரம் மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். இதற்காக ஒரு சிறிய சத்தியாக்கிரக போராட்டமேகூட செய்யத் தயாராக இருக்கிறோம் என்று என் தொகுதி மக்கள் சார்பாக கூறிக்கொள்ளுகிறேன். காலம் தாழ்ந்து விடவில்லை. இன்றைய தினம் தமிழகத்திலே, பிற்போக்கான பகுதி கிழக்கு ராமநாதபுரம், அந்தப் பகுதி நல்லமுறையிலே வாழ வேண்டும் என்று அந்த திட்டத்தை நிச்சயமாக மூன்றாவது திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிர்ஷ்டவசமாக இங்கு மராமத்து இலாகா அமைச்சரவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சோஷலிச பாணி முறை எங்களது என்று சொல்லி, அதற்கு எல்லாம் கூட்டுறவு முறைதான் என்று சொல்லி திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தக்கூட்டுறவு முறையைப்பற்றி பலபேர் பல அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதற்கென்று புதிதாக ஒன்றும் சட்டம் கிடையாது பழைய சட்டமே தான். காம்ப்ரிஹென்ஸிவ், சர்வாங்கச் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்கிறார்கள். ஆனால். இரண்டு வருஷ காலமாகப் பார்க்கிறோம், கோஆபரேடிவ் முறையின் பரிபூரண தோல்வியை. முன்பெல்லாம் குற்றம், குறை திருட்டுச் செய்தவர்கள் ஜெயிலில் இருப்பார்கள். ஆனால், இப்பொழுது, ஒரு கூட்டுறவு சங்கத் தலைவர் அல்லது அந்த செக்ரடரி இம்மாதிரி ஜெயிலுக்குப் போய் விடுகிறார்கள். ஆனால். நான் கூட்டுறவு தத்துவத்தைக் குறைகூறவில்லை. அதில் ஈடுபட்டிருப்பவர்கள் தவறு செய்கிறார்கள். அவர்களும், தவறு செய்வதற்கு முன்னால் இல்லை. தவறு செய்ததன் பிறகு காங்கிரஸ் தாரகை மாற்றுகிறார், கதர் அணிகிறார், மந்திரியோடு போகிறார், மாலை அணிகிறார். சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்

கிறார்களா என்றால், ஏதோ நடவடிக்கை என்று ஆரம்பிக்கிறார்கள், பின்னால் ஒன்றும் இல்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன மாதிரியாக, ஒரு நடவடிக்கையும் இல்லாமல் போகிறது. ஆகவே, கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய வேண்டுமானால், கண்காணிப்பும் உறுதியான சட்டங்களும் இருக்க வேண்டும்; இல்லையானால், அதற்குள் சம்பந்தப்பட்டவர்கள் பணத்தை 'ஸ்வாஹா' பண்ணிவிட்டு ஜெயிலுக்குப் போய் விடுவார்கள். இதனால் கூட்டுறவு தத்துவமே கெட்டுவிடும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் சர்வகலாசாலையொன்று வைப் போவதாகக் கேள்விப்படுகிறேன். அதற்கு ஒரு தகுதியான இடம் மதுரை மாநகரம்தான். அதற்குச் சரித்திரம் இருக்கிறது—நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் எப்படியாவது கோயம்புத்தூருக்கு அதைத் தட்டிக்கொண்டு போய்விடுவாரோ என்ற சந்தேகம் இருக்கிறது—இதற்கு மதுரைதான் பொருத்தமான நகரம். சென்ற காலத்தில், தமிழ்நாட்டு மூவேந்தர்கள் காலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்த இடம் மதுரை. ஆகவே, எவ்விதமான ஆட்சேபணையும் இல்லாதபடி, எவ்வித தகராறும் இல்லாத நிலையில் மதுரையில் ஒரு சர்வகலாசாலையை நிறுவ வேண்டிய வேலையைச் சர்க்கார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பெரிய பிரச்னை இருக்கிறது. 30-ந் தேதி ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவர் ஒருவர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்த ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதில் என்ன கஷ்டம் இருக்கும் என்பது எனக்கு விளங்கவில்லை. மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டபோது எல்லா மாகாணங்களுக்கும் மொழி சம்பந்தப்பட்ட பெயர் இருக்கும்போது, நமக்கு மட்டும் ஏன் இல்லாமல் இருக்க வேண்டும்? எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே, அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது என்ற வீம்பு அரசாங்கத்திற்கு இருக்கத் தேவையில்லை. ஜமீன் ஒழிக்கப்படவேண்டுமென்று எதிர்க் கட்சிக்காரர் சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றவில்லையா அரசாங்கம்? குறைகளையும், செய்ய வேண்டியவைகளையும் சொல்வது இடது சாரிக் கட்சிகளின் பொறுப்பு. அவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கக் கட்சியைச் சார்ந்தது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த வகையில் நம்முடைய மாநிலத்திற்குச் சிறந்த முறையில் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க எதற்காக அரசாங்கம் பயந்துகொண்டிருக்க வேண்டும். ஜனநாயகம் என்றால் அபிப்பிராயபேதம் இருக்கும். அதைக் கேட்கத்தான் வேண்டும். எதிர்க் கட்சிகள் சொல்வதைக் கேட்க மாட்டோம் என்று சொல்வது சர்வாதிகாரமாகும். நாளைய தினமே சர்க்கார் நம்முடைய ராஜ்யத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பார்களேயானால், எதிர்க்கட்சியினர் சப்தம் போடாமல் வாயடைத்துப் போய்விடுவர். இதில் கட்சிப் பாகுபாடு தேவையில்லை.



காங்கிரஸ் கட்சி, எதிர்க் கட்சி என்று பாரபட்சம் வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளைய தினமே 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதாக முடிவு கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

எதிர்த் தரப்பிலிருந்து பேசக் கூடியவர்கள் சர்க்கார்த் தலையீடுகளைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அம்மாதிரி பேசும்போது ஆளும் கட்சியிலிருந்து பல கடுமையான தாக்குதல்கள் வந்தன. ஒரு அன்பர், காட்டுக்குப் போகச் சொல்கிறார். அது அவசியம் இல்லை. நாட்டில் வாழத்தான் நீங்கள் ஆட்சி செய்கிறீர்கள். அந்தக் கனம் அங்கத்தினர் கடுமையாகச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதைக் கண்டு வருந்துகிறேன்.

காங்கிரஸ்காரர் யாராவது அணுகிச் சொன்னால்தான் செய்ய வேண்டும், எதிர்க்கட்சிக்காரர் அணுகினால் செய்யக்கூடாது என்ற உணர்ச்சி உத்தியோகஸ்தர் மத்தியில், தமிழ்நாடு பூராவும், பரவியிருக்கிறது; காங்கிரஸ்காரர் அநியாயமாகச் சொன்னாலும் கேட்கவேண்டும், காங்கிரசல்லாதவர் நியாயமாகச் சொன்னாலும் கேட்கக்கூடாது என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உதாரணங்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். எண்ணற்ற உதாரணங்கள் கைவசம் இருக்கின்றன. பூராவும் சொல்லிக்கொண்டிருக்க விருப்பம் இல்லை.

தேர்தல் வருகிறது. அந்தக் காலத்திலாவது முடிந்த அளவு நியாய பூர்வமாகத் தேர்தலை நடத்த லாயக்காக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். முக்கியமான கோரிக்கையைச் சொல்கிறேன். அதாவது, தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னால் ஆட்சியிலுள்ளவர்கள் அதிகாரத்தைவிட்டு வெளியே வந்துவிடவேண்டும். தேர்தலில் ஜெயித்து மீண்டும் ஆட்சிக்கு வருவோமா இல்லையா என்று ஆளும் கட்சியினர் பயப்படவேண்டாம். நம்முடைய ஜனங்களின் பேரில் நம்பிக்கை இருக்கும் பட்சத்தில் தைரியமாக அம்மாதிரி செய்யட்டும். அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. ஆட்சியாளர் பேரில் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. பல உபதேர்தல்களில் ஆட்சியாளர்கள் தங்களுடைய அரசாங்க அதிகாரத்தை உபயோகப்படுத்தி வோட்டு வாங்கியதற்குத் தக்க ஆதாரம் இருக்கிறது. அந்த சந்தேகத்தால்தான் கேட்கிறோமே யொழிய வேறு ஒன்றுமில்லை. ஒரு முக்கியமான கோரிக்கை, நல்ல கோரிக்கை. அதைச் செய்ய வேண்டிய பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். பொறுப்புள்ள, நம்பிக்கையுள்ள நமது மாநில சர்க்கார் உடனே மத்திய சர்க்காருக்கு இதைப்பற்றித் தகவல் கொடுத்து, தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆட்சியைவிட்டு வெளியேறுவதில் தவறு ஒன்றும் இல்லை. குடி ஒன்றும் முழுகிவிடாது. அண்டை ராஜ்யத்தில் ஜனநாயக முறையில் தேர்தல் நடந்து, கம்யூனிஸ்டு ஆட்சி நடந்தது. பிறகு கிளர்ச்சி நடந்தது. அதைக் காங்கிரஸ்காரர்கள் யாரும் ஆட்சேபிக்கவில்லை. பிறகு, அங்கே ராஷ்டிரபதி ஆட்சி வந்தது. ஆறு மாதம் சென்றது.

அதன்பிறகு மீண்டும் தேர்தல் நடந்தது. காங்கிரஸ் ஆட்சி நடைபெறுவிட்டாலும், ஒரு அரைகுறை ஆட்சியாகவே நடக்கிறது. ஆகவே, தேர்தலுக்கு ஆறு மாதத்திற்கு முன் அதிகாரத்திலிருந்து வெளியேறி, மக்கள் அபிமானம் இருந்தால் மீண்டும் பதவி ஏற்று ஆட்சி செய்யலாம். இது நியாயமான கோரிக்கை, தருமமான கோரிக்கை. இதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திட்டம் சம்பந்தப்பட்டமட்டில் எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. கரையாளர் அவர்கள் கேட்டார்கள், எந்த அடிப்படையில் பணம் ஒதுக்கப்படுகிறது என்று. அவர் குறிப்பிட்ட புள்ளிவிவரத்தோடு இரண்டு சொன்னார்கள். கேரளாவுக்கும் ஒரிசாவுக்கும் மட்டும் ஜாஸ்தி வெட்டு இல்லாமல் அவர்கள் கேட்ட தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு மாகாணத்தில் திட்டத் தொகையில் வெட்டு இருந்தால் ஒருவேளை தேர்தலில் கை விட்டுவிடுமோ என்ற பயம் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்து திட்டக் கமிஷன் வரையில் அரசியல் வேலை செய்கிறதே தவிர, நியாயம் வேலை செய்யவில்லை. அரசியல் காரணமாக நம்முடைய ராஜ்யத்திட்டங்களுக்கான தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. கேரளாவிலும் ஒரிசாவிலும் காங்கிரஸ் ஆட்சி வருமோ வராதோ என்ற சந்தேகத்தோடு அங்கே நிறைய தொகை ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். அரசியல் காரணமாகத்தான் பாகுபாடு செய்யப்படுகிறதே தவிர, நியாய பூர்வமாக இந்த வெட்டு செய்யப்படவில்லை என்பதை இங்கே ஞாபகப்படுத்துகின்றேன்.

தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில், திட்டம் சம்பந்தமாக எத்தனையோ காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வைப்பர் பெரியார் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் எடுத்துக்கொள்வதுபற்றி சந்தோஷம். அத்துடன் இணைந்த சேதுசமுத்திரத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், தூத்துக்குடித் துறைமுக விஸ்தரிப்பினால் மட்டும் நன்மை இல்லை என்பதை நினைவூட்டுகின்றேன். இவ்விரண்டையும் இணைத்துக் காரியங்கள் செய்தால் தான் நாட்டுக்கு நலம் ஏற்படும்.

கைத்தொழில் பேட்டைகள் (இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள்), ட்ரேட் ஸ்கூல்கள் இவைகளை முடிந்த அளவு கிராமப் பகுதியில் வைக்கவேண்டும். மீண்டும் மீண்டும் நகரத்திலேயே வைத்துக் கொண்டிருந்தால், கிராமங்கள் கொஞ்சங்கொஞ்சமாக க்ஷீணித்து விடும். கிராமங்களில் வேலை வாய்ப்பு இல்லாததால், கிராமங்களை விட்டு மக்கள் நகரங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதனால், கிராமங்களில் வேலைக்கு ஆள் கிடைப்பது துர்லபமாக இருக்கிறது. ஆகவே, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள், ட்ரேட் ஸ்கூல்கள் இவைகளை கிராமப் பகுதியில் வைக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பிரசங்கத்தை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.



SRI K. PONNAIAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். அவருடைய உரையில் கடந்த நவம்பர் மாதத்தில் பெய்த மழையைப் பற்றியும், அதனால் பல இடங்களில் சேதம் விளைந்ததைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சேதம் ஏற்பட்ட பகுதிகளில் எங்கள் பகுதியும் ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறை பிராந்தியத்தில் மலைப் பிராந்தியப் பகுதியில் உள்ள 'காட்' ரோடு இரண்டு மூன்று பர்லாங்கு தூரம் பாதிக்கப்பட்டு வெளியுலகத் தொடர்பே இல்லாமல் ஒரு வார காலமாக எங்கள் பகுதி மக்கள் திண்டாடிக் கொண்டிருந்தோம். எங்கள் பிராந்தியம் தொழிலாளர் பிராந்தியம். கலெக்டர் அவர்கள் உடனடியாக அந்தப் பிராந்தியத்திற்கு ஆயிரம் மூட்டை அரிசி கேரளம் வழியாகக் கொடுத்தார்கள். அதற்காக கலெக்டருக்கு, சர்க்கார் மூலமாக, எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த இடத்திற்கு வேறு ரோடு மார்க்கம் கிடையாது. அந்த ரோடை அகலப்படுத்த வேண்டும், அல்லது வேறு ரோடு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கின்றேன். 'காட்' செக்ஷனையால் எங்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. பல திருப்பங்கள், பல வளைவுகள் இருப்பதால், இனி மழை பெய்தால் என்ன ஆகுமோ என்று இன்னும் பயந்து கொண்டிருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் நேரில் அதைப் பார்த்தார்கள். ஆவன செய்வதாக உறுதி தந்தார்கள். அதைச் சீக்கிரம் முடித்துக் கொடுக்கும்படி கனம் அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

என்னுடைய பிராந்தியத்தில் பாம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் உருவாகியிருக்கிறது. சோலையாறு டிவிஷனை வால்பாறை டிவிஷனுக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்தப் பிராந்தியத்தில் பல ஊர்களிலிருந்து வேலைக்கு வருவதால், நியாய விலைக் கடைகள் ஆரம்பிக்க வேண்டும். இன்றைக்கும் இருக்கிறது. ஆனால், கொடுக்கக்கூடிய தானியம் கட்டுப்படியாவது இல்லை. குறைந்தது பத்து மூட்டை அரிசி, ஐந்து மூட்டை கோதுமையாவது கொடுக்க வேண்டும். கீழ்நாட்டில் என்ன விலைக்கு விற்கிறார்களோ அந்த விலைக்கு அந்தப் பகுதிக்கும் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக திட்டப்பகுதியில் அணைக்கட்டு வேலையை ஆரம்பிக்கும்போதே கூடத்தொடர்ந்து மீன் வளர்ப்புப் பண்ணையையும், பால் பண்ணையையும் அங்கு ஆரம்பித்தால் நலம் என்ற என்னுடைய யோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அணைக்கட்டின பிற்பாடு அவற்றுக்கு முயற்சி செய்யலாம் என்றால் அதற்குப் பிறகு மூன்று நான்கு வருஷங்கள் ஆகும். அதனால் ஜனங்களுக்கும் பிரயோசனம் இல்லை, மன வருத்தம், பணம் கஷ்டம். ஆகவே அணைக்கட்டு வேலையோடு தொடர்ந்தே

[Sri K. Ponnaian] [23rd January 1961

மீன் வளர்ப்புப் பண்ணையையும், பால் பண்ணையையும் தொடங்கு
வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்
என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. திட்டப் பகுதியில் அட்மினிஸ்ட்ரேட் ஆபீஸ்
எக்ஸிக்யூடிவ் ஆபீஸ் என்று பற்பல கட்டிடங்களைக் கட்டு
கிறார்கள். திட்டவேலை முடிந்த பிற்பாடு அந்த இடங்களில்
கட்டப்பட்ட இந்தக் கட்டிடங்களுக்கு வேலை இல்லாமல்
போகிறது. இக்கட்டிடங்களுக்கு அப்புறம் ஒருவித பிரயோ
சனமும் அங்கே இல்லாததால் இடிந்து போகத்தான் விட
வேண்டியிருக்கிறது. அதற்குப் பதிலாக திட்டப் பகுதிக்கு
பக்கத்தில் உள்ள கிராமங்களிலோ, நகரங்களிலோ—இந்தக்
காரியாலயத்தைக் கட்டினால் திட்டம் முடிந்த பிறகும் இந்தக்
கட்டிடங்களை வேறு காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள
உதவியாக இருக்கும் என்று என்னுடைய அபிப்பிராயத்தைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு திட்டப் பகுதிகளில் பள்ளிக்கூடம் கிடையாது.
போஸ்ட் ஆபீஸ் கிடையாது. உதாரணமாக பாம்பிக்குளத்
திட்டப் பகுதியை எடுத்துக்கொண்டால் நம்முடைய அரசாங்கம்
அங்கே பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முடியாது என்று சொல்லு
கிறார்கள். ஆகையால் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின்
குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். திட்டம் நமது, ஆதலால்
அங்கு வேலை செய்கிற நம்முடைய தொழிலாளர்களின் குழந்தை
கள் நலனுக்காக அங்கே உடனடியாக ஒரு ஆரம்பப் பள்ளியை
ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல
ஒரு தபால் ஆபீஸ் திறக்கப்படுவதற்கும் வேண்டிய முயற்சிகளை
எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளத்தில் இருந்து பாலாறு பகுதி வரையில் காண்டூர்
கானல் வேலை நடக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழி
லாளர்கள் தினந்தோறும் ஐந்தாறு மைல்கள் நடந்து தங்கள்
வீட்டில் இருந்து வரவேண்டியிருக்கிறது. அதனால் காலையில்
இரண்டு மணி, மாலையில் இரண்டு மணி வீணாகிறது. வீட்டை
விட்டு 7 மணிக்குக் கிளம்பினால் 9 மணிக்குத்தான் வர முடிகிறது.
அதுபோல 5½ மணிக்கு வேலையை விட்டு மாலை திரும்பினால்
வீட்டுக்கு ஏழு, ஏழரை மணிக்குத்தான் போக முடிகிறது.
இதைத் தவிர்ப்பதற்கு அந்தத் தொழிலாளர்களுக்கு கானலை
ஒட்டியே ஷெட்டு போட்டுக்கொடுத்தால் நலம். வேலை நடக்க
நடக்க இந்த ஷெட்டுகளையும் வேலை நடக்கிற இடத்திற்குத் தகுந்
தாற்போல நகர்த்திக் கொண்டே போகலாம்.

மின்சார சக்தியைப் பொறுத்த வரையில் நமது மாகாணம்
இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது என்று தெரிகிறது. அப்படி
இருந்தும் தொழிலாளர்களுடைய லைன்களுக்கு மின்சார வசதி
கிடையாது. வால்பாறைப் பிராந்தியம் முழுக்க முழுக்க தொழி
லாளர் நிரம்பிய இடம். முதலாளிகளும் நிரம்ப லாபம் சம்பாதிக்
கிறார்கள். தேயிலை தான். ஆனால் தினந்தோறும் சாயந்திரம்



23rd January 1961] [Sri K. Ponnaian]

தொழிலாளர்கள் லேபர் லைனுக்குப் போக வேண்டுமென்றால்
பந்தத்தைக் கட்டிக் கொண்டு அங்கே போகவேண்டும். ஆகவே
தொழிலாளர்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்காக தொழிலா
ளர்கள் லைன்களுக்கு உடனடியாக மின்சார வசதி செய்து
கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மலைப் பிராந்தியங்களில் வேலை செய்கிற சர்க்
கார் சிப்பந்திகளுக்கு, ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கு ஒரு
அலவன்சு கொடுத்துவந்தார்கள். உண்மையிலே அங்கு வேலை
செய்கிறவர்கள் குளிரினால் கஷ்டப்படுகிறார்கள். தனியாக அவர்
களுக்கு கம்பளி உடைகள் பிரத்யேகமாகத் தேவைப்படுகிறது.
அதனாலேயே அங்கு யாரும் வேலைக்கு வருவது என்றால் சிரமப்படு
கிறார்கள். அங்கு வேலைக்கு என்றால் வருஷத்தில் குறைந்தது 150
ரூபாய் வார்ம் க்ளோத்துக்காக வேண்டியிருக்கிறது. ஆகவே
றில் அலவன்சு என்றோ வார்ம் க்ளாத் அலவென்சு என்றோ
திரும்பவும் அந்த மலைப் பிராந்தியங்களில் வேலை செய்யக்கூடிய
சிப்பந்திகளுக்கு அலவன்சு கொடுக்கவேண்டும் என்பதாக
மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை, ஊட்டி
போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு எல்லாம் அவசியம்
கொடுத்தாகவேண்டும்.

வால்பாறைப் பிராந்தியம் மலைப்பிரதேசம். வருஷத்தில்
150 இன்சுக்கு மேல் அதிகமாக மழை பெய்கிறது. அங்கே
நன்றாக வளர்க்கிற கால்நடை சிந்தி. இந்த ரகம் இந்தியா
விலேயே அதிகம் கிடையாது. பாகிஸ்தான் பிரிந்த பிற்பாடு
அந்த ரக மாடுகள் இங்கே ஏற்றுமதி ஆவதில்லை. ஆகவே இந்த
வால்பாறைப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் வேறு மாடு
களை உள்ளே வரக்கூடாது என்றாவது தடைவிதித்துவிட்டு
இந்தப் பிராந்தியத்தில் பிரத்யேகமாக சிந்தி வளர்ப்பு நடை
பெற்றால்தான் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் ஹரிஜனங்களுக்கு
ஹவுஸ் சைட் மிகவும் பூஜ்யம் ஆக இருக்கிறது. சர்க்காரிடம்
பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எங்களுக்கு மாடு
வாங்கப் பணம், விதை வாங்கப் பணம் என்று பலவகையில்
ஒத்தாசை செய்வதை கொஞ்ச காலத்திற்கு குறைத்துக்கொண்
டாவது வீட்டு மனை வாங்கித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்
கொள்கிறேன். கடந்த மூன்று நான்கு வருஷங்களாகவே குடி
யிருப்பு மனை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நில ஆர்ஜிதம்
செய்வதில் எத்தனையோ தகராறு. எங்களால் லாண்டு அக்வி-
சிஷன் சட்டத்தை அமுலாக்க முடியவில்லை. ஆகவே அங்குள்ள
தரிசு நிலங்கள், இன்னும் இதர பூமிகள் இவற்றைப் பார்த்து
அங்குள்ளவர்களுக்கு ஹவுஸ் சைட் உடனடியாக வழங்கி அவர்
களுக்கு வாழ்வு அளிக்க உடனடியாக முயற்சி செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்
கிறேன்.

1-27 p.m. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## V.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Rules and Orders

143. *Notification issued with G.O. Ms. No. 4938, Industries, Labour and Co-operation (Labour), dated 26th October 1960 regarding the appointment of Inspectors for the purposes of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act,* 1958 [*Laid on the Table of the House under section* 12 (3) *of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act*, 1958 (*Madras Act XXXIII of* 1958).]

144. *Notification issued with G.O. Ms. No.* 3943, *Home, dated* 1st *December* 1960 *under the Madras Motor Vehicles Taxation Act*, 1931 [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

145. *Notification regarding the powers delegated to the Regional Inspector of Municipal Councils and Local Boards in Thanjavur district* [*Laid on the Table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950).]

### B.—Reports, Notifications and other papers.

36. *Amendments to Rules* 18 *and* 20 *of the Madras Factories Rules*, 1950 *issued in G.O. Ms. No.* 3771, *Industries, Labour and Co-operation (Labour), dated* 1st *August* 1960 *under the Factories Act*, 1948 (*Central Act LXIII of* 1948).



## APPENDIX I.

[Vide answer to the starred question No. 88 asked by Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 23rd January 1961, page 251 supra.]

*Statement showing particulars of prisoners belonging to Communist party confined in Jails in Madras State.*

| *Serial number and Name of the prisoners.* | *Jails in which confined.* | *Age.* | *Nature of sentence passed.* | *Period of sentence already undergone as on 9th September 1960.* | | | *Un-expired period of sentence after deducting remission as on 9th September 1960.* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | | | (6) | | |
| | | | | Y. | M. | D. | Y. | M. | D. |
| 1 K. Baladandayutham. | Central Jail, Coimbatore. | 42 | (1) Imprisonment for life. (2) R. I. for 4 years to run concurrently. | 6 | 7 | 6 | 11 | 8 | 23 |
| 2 V. Meenakshinathan. | Central Jail, Madurai. | 42 | Imprisonment for life. | 8 | 1 | 12 | 11 | 10 | 17 |
| 3 Krishna Konar. | Do. | 41 | R. I. for 10 years. | 9 | 8 | 8 | – | 2 | 29 |
| 4 K. B. S. Mani. | Do. | 40 | Imprisonment for life. | 9 | 5 | 24 | 10 | 6 | 3 |
| 5 Alagamuthu. | Do. | 34 | Do. | 9 | 7 | 29 | 10 | 6 | 29 |
| 6 Vairavan, | Do. | 47 | Do. | 12 | 2 | 19 | 7 | 8 | 10 |
| 7 Sivasamy. | Do. | 40 | Do. | 12 | 0 | 0 | 8 | 3 | 7 |
| 8 Veeran. | Do. | 40 | Do. | 12 | 4 | 15 | 7 | 7 | 14 |
| 9 Joseph | Do. | 37 | Do. | 12 | 3 | 16 | 7 | 8 | 13 |
| 10 Motteyan alias Sakkarai. | Do. | 35 | Do. | 11 | 11 | 16 | 8 | – | 12 |
| 11 David Rajamani | Do. | 33 | Do. | 12 | 5 | 5 | 8 | 2 | 16 |
| 12 Maruthaiah Ekali. | Do. | 40 | Do. | 11 | 6 | 1 | 8 | – | 26 |
| 13 Veeraiah Naidu. | Do. | 40 | Do. | 12 | 2 | 5 | 7 | 9 | 24 |

## APPENDIX II.

[Vide answer to the starred question No. 98 asked by Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 23rd January 1961, page 262 supra.]

[SUBJECT.—*Law and Order—Ramanathapuram district—Katcha Theevu—Threatening of fishermen from Katcha Theevu by Ceylon Police.*]

In the second week of March 1960, five fishing boats set out into the sea from Verkkot in Ramanathapuram district to fish off Katcha Theevu. Each boat carried its owner and a few

[23rd January 1961

fishermen. While the fishermen were repairing their nets, a launch carrying a few Ceylon Police officials appeared at Katcha Theevu. The Police officials directed the fishermen to take their boats near the launch. As the fishermen were just then laying their nets, there was some delay in complying with the direction. The Ceylon Police fired two shots in the air. Thereupon, the fishemen took their boats near the launch. The Ceylon Police warned them to return to their places within 3 p.m. of the following day. The fishermen asked that they may be allowed two days for returning to their villages. Their request was rejected. The fishermen returned to their villages immediately.

A couple of weeks later, three out of the five fishing boats referred to above went to Katcha Theevu carrying the same fishermen and the respective boat-owners. This time, the fishermen took with them certificates declaring them to be bona fide fishemen, from the village headman and the President, Rameswaram Fishermen Co-operative Society. On this occasion also a Ceylon Police party went there. The Police men got into one of the boats and beat one of the fishermen. After that the boat was tied to the launch and towed towards Ceylon. Meanwhile, the fishermen showed them their certificates. The Ceylon Police then released the boat and the fishermen.

## APPENDIX III.

[Vide answer to the starred question No. 100 asked by Sri R. Srinivasa Iyer at the meeting of the Legislative Assembly held on 23rd January 1961, page 264 supra.]

*Answer* :

(*a*) Extent and Population—

| *Name of taluk.* | *Area in square miles.* | *Population as per 1951 Census.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Sirkali .. .. .. . | 171 | 163,891 |
| 2 Mayuram .. .. .. .. | 282 | 321,493 |
| 3 Nannilam .. .. .. .. | 291 | 248,487 |
| 4 Nagapattinam .. .. .. | 340 | 261,236 |
| 5 Tiruturaipundi .. .. .. | 496 | 248,942 |
| 6 Thanjavur .. .. .. .. | 421 | 381,984 |
| 7 Kumbakonam .. .. .. | 212 | 348,104 |
| 8 Papanasam .. .. .. .. | 228 | 216,498 |
| 9 Mannargudi .. .. .. | 301 | 248,830 |
| 10 Pattukottai .. .. .. | 698 | 401,818 |
| 11 Arantangi .. .. .. .. | 398 | 141,387 |
| Total .. | 3,738 | 2,982,670 |



23rd January 1961]

(*b*) Length of roads —

| *Name of taluk.* | *National Highways.* | | *State Highways.* | | *Major District Roads.* | | *Other District Roads.* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | | (4) | | (5) | |
| | M. | F. | M. | F. | M. | F. | M. | F. |
| 1 Sirkali .. .. .. | .. | | .. | | 36 | 5 | 47 | 6 |
| 2 Mayuram .. .. | .. | | .. | | 97 | 4 | 58 | 7 |
| 3 Nannilam .. .. | .. | | 11 | 0 | 104 | 3 | 80 | 5 |
| 4 Nagapattinam .. | .. | | 17 | 0 | 54 | 6 | 109 | 4 |
| 5 Tiruthuraipoondi .. | .. | | .. | | 82 | 6 | 88 | 7 |
| 6 Mannargudi .. .. | .. | | 2 | 3 | 70 | 7 | 69 | 0 |
| 7 Pattukkottai .. | .. | | .. | | 107 | 7 | 91 | 3 |
| 8 Orathanad .. .. | .. | | 9 | 0 | 69 | 6 | 24 | 3 |
| 9 Arantangi .. .. | .. | | .. | | 80 | 5 | 50 | 0 |
| 10 Papanasam .. .. | .. | | 17 | 4 | 75 | 5 | 13 | 1 |
| 11 Thanjavur .. .. | .. | | 44 | 0 | 93 | 2 | 22 | 1 |
| 12 Kumbakonam .. | .. | | .. | | 100 | 5 | 23 | 3 |
| Total .. | .. | | 100 | 7 | 974 | 5 | 679 | 0 |

(*c*) Mileage of new and improved roads—

| *Name of taluk.* | *Roads newly laid.* | | *Metalled with white Kankar or screened or laterite.* | | *Metalled with granite metal.* | | *Black topping.* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | | (4) | | (3) | |
| | M. | F. | M. | F. | M. | F. | M. | F. |
| 1 Sirkali .. .. | 2 | 4 | .. | | 8 | 0 | 5 | 0 |
| 2 Mayuram .. .. | .. | | 10 | 0 | .. | | .. | |
| 3 Nannilam .. .. | 1 | 4 | 14 | 4 | .. | | .. | |
| 4 Nagapattinam .. | .. | | 8 | 4 | .. | | 5 | 5 |
| 5 Tiruthuraipoondi .. | .. | | 11 | 2 | .. | | 12 | 3 |
| 6 Mannargudi .. .. | 4 | 4 | 1 | 6 | 1 | 6 | 1 | 6 |
| 7 Papanasam .. .. | 6 | 7 | .. | | .. | | .. | |
| 8 Pattukkottai .. .. | 17 | 0 | .. | | .. | | .. | |
| 9 Kumbakonam .. | 4 | 2 | 0 | 4 | .. | | .. | |
| 10 Arantangi .. .. | 4 | 0 | .. | | .. | | .. | |
| 11 Orathanad .. .. | .. | | .. | | .. | | .. | |
| 12 Thanjavur .. .. | .. | | .. | | .. | | .. | |
| Total .. | 40 | 5 | 46 | 4 | 9 | 6 | 24 | 6 |

## APPENDIX IV.

[Vide answer to the starred question No. 119 asked by Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on 23rd January 1961 page 277 supra.]

*Exclusion of certain posts from the purview of the Madras Public Service Commission in 1959-60 and the reason therefor.*

| *Designation of the post.* (1) | *Reasons for exclusion.* (2) |
| --- | --- |
| 1 Gramsevaks, Grade II. | The posts were brought within the purview of the Madras Public Service Commission in 1956. The Expert Committee appointed by the Ministry of Community Development in its review of arrangements for training of personal for work connected with the Community Development Programme observed that "in the matter of Selection, rural backround, physical fitness power of endurance, general knowledge, aptitude for development work, leadership and initiative, power of expression power of adjustment, histrionic talent and personality should be taken into consideration". With reference to that suggestion, the State Informal Consultative Committee constituted to advise Government on problems relating to the execution of the Community Development Programme recommended that selection of Gramasevaks be taken out of the purview of the Commission as it will facilitate the selection of candidates with aptitude for service in rural areas if the selection is done at the district level by a Special Committee. The posts were accordingly excluded from the Commission's purview in consultation with the Commission which also agreed to the proposal. |
| 2 Tourist Officer, Tourist Information Bureau, Ootacamund. | The post is an isolated technical one requiring a suitable hand with experience in dealing with tourist traffic. |
| 3 Publications Officer, Public (Information and Publicity) Department. | This is a stray technical post requiring experience in publications work. The officer is to be in charge of collection of particulars from the heads of Departments and other relevant sources preparation of materials for printing and publishing publicity pamphlets, folders, brochures, etc. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 24th January 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR U. KRISHNA RAO) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO SRI M. NARAYANA MENON, EX-M.L.C.

MR. SPEAKER : *1937-ம் ஆண்டிலிருந்து 1950-ம் ஆண்டு வரையிலும் பாலக்காடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை கவுன்சில் அங்கத்தினராக இருந்த ஸ்ரீ எம். நாராயண மேனன் அவர்கள் காலமாகி விட்டார் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர் பாலக்காடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், கேரளா ப்ரொவின்சியல் காங்கிரஸ் கமிட்டியிலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் அங்கத்தினராக இருந்தார். ஹிந்தி பிரசார சபையின் தலைவராகவும் இருந்தார். பாலக்காடு நகரசபையின் அங்கத்தினராகவும் இருந்தார், எல்லோருக்கும் தெரிந்தவர். நல்ல வழக்கறிஞர். அன்னார் காலமானதைக் குறித்து இந்த சபையின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு நிமிட நேரம் மௌனமாக நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.*

*(சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.)*

## II.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Government holidays*

* *S.N.Q.* 1.—SRI T. SAMPATH : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Government holidavs have been cut down in the year 1961 from 26 days to 15 days;

(*b*) if sa, the reason for reducing the holidays;

(*c*) whether holidays granted for festivals like Avani-Avittam, Krishna Jayanthi, etc., last year have also been cut down; and

(*d*) if so, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*c*) Yes, Sir.

(*b*) & (*d*) The Pay Commission considered that the number of holidays declared in previous years was excessive and that there was need for greater output of work in Government offices. The Government agreed with the view and ordered reduction in the number of holidays.

SRI T. SAMPATH : Will the Government consider the feasibility of restoring these festival holidays?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir, we are not going to reconsider it.

SRI T. SAMPATH : At least optional holidays?

THE HON. SRI C. SUBRAMANIAM : Employees can take optional casual leave for two or three days.

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் மேல் நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்து வந்திருக்கிறார்கள். அந்த நாடுகளில் இம்மாதிரி விடுமுறைகள் விடப்படுகின்றனவா? அப்படியிருந்தால் அதைப்பற்றிய விவரங்கள் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் நாட்டிலேதான் விடுமுறை நாட்களும் ரொம்பவும் அதிகம். வறுமையும் நம் நாட்டில் தான் அதிகம். வேலைசெய்யும் நேரமும் குறைவானது நம் நாட்டில்தான்.

SRI A. A. RASHEED : Sir, Meladi Nabi has been excluded in the list of holidays but Muharram has been included. Will the Government exclude Muharram and include Meladi Nabi in the list of holidays?

THE HON. SRI C. SUBRAMANIAM : We were told that Muharram was more important. But if Muslim opinion is in favour of having Meladi Nabi in the list of holidays, we have absolutely no objection to substitute one for the other.

SRI K. R. NALLASIVAM : கிருஷ்ண ஜயந்தி, ஆவணி ஆவிட்டம் போன்ற நாட்களுக்குப் பதிலாக தேசியத் தலைவர்கள் சுப்ரமணிய பாரதியார், பால. கங்காதர திலக் போன்றவர்கள் பிறந்த நாட்களில் விடுமுறை விடப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இம்மாதிரி பிறந்த நாட்களிலேதான் அதிகமாக வேலை செய்து அவர்களுடைய பிறந்த நாட்களை கொண்டாடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

*High School (Kalambur)*

*121 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) களம்பூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் தேவையென்று ச. மொ. அண்ணாமலை, எம்.எல்.ஏ.-யிடமிருந்து கடித எண். SMA|F9|27, 1959|-ம் வருடம் அக்டோபர் மாதம் 10-ந் தேதி சர்க்காருக்குக் கிடைத்ததா?



(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The letter has been sent to the Special Officer, North Arcot District Board for such action as may be necessary.

SRI S. M. ANNAMALAI: இது சுமார் இரண்டு மூன்று ஆண்டுகளாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம் களம்பூரில் உயர்நிலைப்பள்ளி கட்டடம் கட்டவேண்டுமென்று கோரி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. இதை உடனடியாக பரிசீலனை செய்து கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு அங்கத்தினரும் தாங்கள் இருக்கும் இடத்தில் கட்டடம் கட்டவேண்டும் என்பது முடியாத காரியம். கனம் அங்கத்தினர் ஒரு கடிதம் எழுதியதற்காகவே அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றில்லை.

*Higher Grade Teachers*

*122 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எத்தனை ஹையர் கிரேடு ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளிலிருந்தும், ஜில்லா போர்டு பள்ளிகளிலிருந்தும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்?

(இ) அவர்களில், எத்தனை பேர்களுக்குத் திரும்ப வேலை தரப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) One hundred and eleven from Aided Schools; none from District Board Schools.

(இ) For fifty-six teachers.

SRI S. M. ANNAMALAI : மீதம் உள்ள 56 ஆசிரியர்களுக்கு மறுபடியும் வேலை தேடித்தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்விக்கு பதில் தயாரிக்கும் காலத்திலே இந்த புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டது. இப்போது அவர்களுக்கு வேலை கிடைத்திருக்குமென்று நம்புகிறேன்.

*Waste lands*

*Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பரா—

(அ) ஐந்து ஏக்கரா சொத்து நிலத்திற்கு பட்டாதாரர்களாக இருப்பவர்களின் பேரில், எத்தனை ஏக்கரா சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் பட்டா செய்யப்பட்டுள்ளது?

[24th January 1961

(இ) ஐந்து ஏக்கராவுக்கு உட்பட்டவர்களின் பேரில் எத்தனை ஏக்கரா பட்டா செய்யப்பட்டுள்ளது—ஜில்லா வாரியாக ?

(உ) 1947-வது ஆண்டுக்குப் பிறகு எத்தனை ஏக்கரா ?

(எ) 1947-வது ஆண்டுக்கு முந்திய வரை எத்தனை ஏக்கரா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) *to* (எ) The information is not easily avainable with the Government.

* 124 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 2½ ஏக்கருக்கு மேல் சொந்த பட்டா நிலமுள்ளவர்கள் பேரில் தரிசு நிலங்களை பட்டா செய்யக்கூடாதென்று சர்க்கார் உத்தரவு உண்டா ?

(இ) அது போல் நிறைவேற்றப்படுகிறதா ?

(உ) இல்லையென்றால் ஏன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ), (இ) & (உ) Under the present policy of the Government in the matter of assignment, lands at the disposal of the Government are assigned free of cost to landless and poor persons who will take to direct cultivation, a landless person being one who owns a total extent of less than 5 acres of land if dry or a total extent of less than 2½ acres if wet.

In certain exceptional cases, however, lands are assigned to persons who are not landless poor.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரே குடும்பத்தில் இருக்கக் கூடிய தலைவர் தகப்பனார் பேரில் சொந்த நிலம் இருப்பது தவிர, தாயார் பேரிலும், பிள்ளை பேரிலும் பட்டா வாங்கிக்கொள்ளப்படுகிறது. இம்மாதிரியான நிலைமையை சமாளிக்க சர்க்காரின் கொள்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: குடும்பத்தில் தாய், தகப்பன், பிள்ளை ஒன்றாக இருக்கலாம். அவர்கள் தனித் தனியாக குடித்தனம் நடத்தினால் அது வேறு விஷயம். அப்படியில்லாமல் ஒரே குடும்பமாக இருந்து ஒவ்வொருவர் பேரிலும் பட்டா வாங்கினார்கள் என்று கனம் அங்கத்தினர் தெரிவித்தால் அது கவனிக்கப்படும்.

• 125 Q.—MR. SPEAKER : We will take up this question when the Hon. Minister for Industries comes.



24th January 1961]

*Labourers*

* 126 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959, 1960-ஆம் வருஷங்களில், மலேயா நாட்டிலிருந்து இந்தியாவுக்குப் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுக்கு அரசாங்கம் மூலமாக என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no classification as " Tamilian Labourers arrived from Malaya " in the registers maintained in the Madras Harbour and in the Emigration office. The following are the number of persons disembarked at Madras Harbour and Nagapattinam Port from Malaya during the years 1959 and 1960 :—

| *Year.* | *Place of disembarcation.* | *Men.* | *Women.* | *Children.* | *Total.* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1959 | Madras Harbour .. .. | 371 | 252 | 308 | 931 |
| | Nagapattinam Port .. .. | 348 | .. | .. | 348 |
| 1960 | Madras Harbour (up to June). | 77 | 56 | 72 | 205 |
| | Nagappattinam Port (up to 9th September 1960). | 145 | .. | .. | 145 |

(*b*) Collectors of districts have reported that they have not been approached for relief by any repatriates from Malaya during 1959 and 1960. The Government have also not received any reports from Collectors so far indicating the need for rehabilitating these repatriates. The question of giving them assistance does not therefore arise.

SRI P. G. MANICKAM : மலேயாவிலிருந்து நம் சென்னைக்கு வந்தவர்களில் யாருமே உதவி கோரி சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பவில்லையா? அப்படி அனுப்பியிருப்பின் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்காரிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே விடை அளித்தேன். இதைப்பற்றி கலெக்டரை விசாரித்தபோது, இம்மாதிரி யாரிடமிருந்தும் உதவி கோரப்படவில்லை என்று கலெக்டரிடமிருந்து தகவல் வந்தது. மலேயாவிலிருந்து யாரும் நிர்ப்பந்தத்தின் பேரில் இங்கு வரவில்லை, அவர்களாகவே தான் வந்தார்கள். ஏனென்றால் அந்த நாட்டில் சிடிசன்ஷிப் அளிப்பதில் தொந்திரவு ஒன்றும் இடையாது. அவர்கள் தாய் நாட்டிற்கு வரவேண்டுமென்று வந்தார்களே தவிர, அவர்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் வரவில்லை.

[24th January 1961

SRI A. VEDARATHNAM : இவர்கள் உதவி கோரி ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் உதவி கோரியதாக தகவல் ஒன்றும் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கேட்பவர்களுக்கெல்லாம் பிரஜா உரிமை காப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அந்த இடத்தில் " சிடிசன்ஷிப் " கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அது குறித்து இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவலில்லை.

## *Strike*

* 127 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் குந்தாப் பகுதியில் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக சிறைத் தண்டனை பெற்ற ஊழியர்கள் எவ்வளவு பேர் ?

(இ) அவர்களுக்குச் சிறைத் தண்டனை முடிந்தபின் மீண்டும் வேலையளிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M.. BHAKTAVATSALAM : (*a*) Sixty-nine persons were convicted and sentenced to various terms of imprisonment.

(*b*) The question is under the consideration of Government.

## *Office hours*

* 128 *Q.*—SRI N. K. PALANISAMI and SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the working hours of the offices as 11 a.m. to 5-30 p.m. instead of 10-30 a.m. to 5 p.m.?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : சென்னை செகரட்டேரியட் என்.ஜி.ஓ. சங்கம், மாகாண என்.ஜி.ஓ.-க்கள் சங்கம் இவை நான்கைந்து மாதங்களுக்கு முன்பாக இம்மாதிரி 10½ மணி என்பதற்கு பதிலாக 11 மணியிலிருந்து 5½ மணிவரை என்று வேலை செய்யும் நேரத்தை மாற்றவேண்டுமென்று சொன்னதற்கு,



24th January 1961]

அதற்குப் பதிலாக இப்பொழுது ஏப்ரல் மாதத்திலிருந்து 8½ மணியிலிருந்து வேலை செய்யவேண்டுமென்று உத்தரவு போடவேண்டுமென்று சொல்வதற்கு காரணம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 8½ மணி என்பதுபற்றி முடிவு எடுக்கப்படவில்லை. 10½ மணி என்பதை 11 மணி என்று மாற்றுவதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அநேக இடங்களில் நான் என் கருத்தை தெரிவித்துவருவது அவர்களுக்கு தெரிந்திருக்கலாம். காலையில் அலுவலகங்களில் வேலை ஆரம்பிப்பது மிகவும் நல்லது. வேலை நல்லமுறையில் நடைபெறுவதற்கு அது தகுந்தது என்ற கருத்தை தெரிவித்துவந்திருக்கிறேன். நமது அனுபவமும், இங்கு வந்து 8½ மணிக்கு வேலை செய்வது 11 மணிக்கு கூடுவதைவிட நல்ல சுமுகமான சூழ்நிலையில் இங்கு நடக்க முடிகிறது என்ற நமது அனுபவம் இருக்கிறது. இன்னும் முடிவு செய்யவில்லை. எனது கருத்தை தெரிவித்துவருகிறேன், அதுபற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டுதான் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என் கருத்து.

SRI M. KALYANASUNDARAM : 8½ மணிக்கு காரியாலயங்களில் வேலை தொடங்குவதாகயிருந்தால் அதனால் உத்தியோகஸ்தர்களுக்கும், மற்ற சிப்பந்திகளுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப்பற்றி, அரசாங்கம் பரிசீலித்தார்களா ? இப்பொழுது காலையில் சாப்பிட்டுவிட்டு வரலாம். எட்டரை மணிக்கு என்றால் காலையில் சாப்பிட முடியாது. மத்தியானம் இங்கு சாப்பிட வேண்டியிருக்கும். ஆகவே அதனால் அதிகப்படியான செலவு ஏற்படும். அதற்கு என்ன வழி செய்ய உத்தேசம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மாறுதல் ஏற்படும்போது அதில் கஷ்டங்களும்தான் இருக்கும். ஆகவே இதில் எது சரி, எதன்மூலம் அதிக பலன் ஏற்படும் என்று யோசித்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் பிரச்னைகளுக்கு எந்த வழியில் தீர்வு காண முடியும் என்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி மாறுதலினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எப்படி தீர்ப்பது என்பது பற்றியும் ஆலோசித்து அதற்கு ஒரு முடிவு கட்டக்கூடிய முறையில்தான் நாம் ஒரு ஏற்பாடு செய்யவேண்டியதாகயிருக்கும்.

SRI K. VINAYAKAM : May I know at least for judicial institutions like the High Court, City Civil Court and other institutions, the Government would make an exception and allow them to work from 11 a.m. instead of from 10-30 a.m. because it is difficult for lawyers, litigants and the Judges to come in time after taking full meals?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is a matter for Honourable Judges to decide. I do not think we are going to impose hours of work particularly on the High Court. Therefore I do not think that question arises now.

[24th January 1961

SRI A. A. RASHEED: Will the Government change the working hours to morning at least in the summer when it is so hot that it is difficult to concentrate on work?

THE HON. SRI C. SUBRAMANIAM: That is also one aspect which has to be kept in mind. But as I already stated this is a matter which is just under consideration. No question of any decision having been taken arises.

SRI A. VEDARATHNAM: கனம் அமைச்சர் அவர்கள் கூறி வருகிற அந்த மாறுதலுக்கு, காலை 8½ மணிக்கு வேலை துவங்க வேண்டுமென்ற மாறுதலுக்கு நம் நாட்டில் முழுவதும் பொருத்த ஆதரவு இருக்கிற காரணத்தால் அதை விரைவில் அமுலுக்கு கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்கு ஆதரவு அளிக்கக் கூடிய முறையில் பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சில பத்திரிகைகளும் இதை ஆதரித்து எழுதியிருக்கின்றன. அதே போல் ஒரு சிலர் மாறுபட்ட கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். கடைசியில் எது சௌகரியம் என்று யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

*Clerks*

* 129 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to change the designation of "clerks" of Madras Secretariat to "Assistants"?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI A. A. RASHEED: Have the Government received any suggestion from the N.G.O.'s Association for changing the name of "Clerks" to "Assistants"?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெயர் மாற்றுவது என்பது ஒரு வியாதியாக பரவிக்கொண்டு இருக்கிறது. பெயர் மாற்றினால் என்ன வந்துவிடுமென்று தெரியவில்லை. ஆகவே இது அவசியமில்லை. தொடர்ந்து இதையே நாம் உபயோகப்படுத்திக் கொண்டுவருவதில், அதில் இழிவு கிடையாது. ஆகவே இதை மாற்றவேண்டிய அவசியமில்லை என்பது சர்க்கார் கருத்து.

*Fair price shops*

* 130 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to open fair price shops in the North Arcot district owing to the failure of monsoon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have ordered the opening of fair price shops in all districts of this State, including North Arcot district.



24th January 1961]

SRI A. A. RASHEED: May I know the number of fair price shops opened in North Arcot district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Number of fair price shops actually opened is 90 whereas what has been sanctioned is only 50.

SRI M. KALYANASUNDARAM: ராஜ்யம் பூராவுமே நியாய விலை கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எத்தனை நியாயவிலைக் கடைகள் ராஜ்யம் பூராவும் இயங்குகின்றன ? எவ்வளவு அரிசி அவற்றின்மூலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நானூற்று நாற்பத்தொன்று கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன ராஜ்யம் பூராவும். முதலில் ஐந்து மூட்டைகள் ஒரு கடைக்கு கொடுப்பதாகயிருந்தது. இப்பொழுது பத்து கொடுக்க உத்தரவிடப் பட்டிருக்கிறது. பத்து மூட்டை சென்னை நகரில் கொடுப்பதாகயிருந்தது, பதினைந்து மூட்டை கொடுக்க உத்தரவு இடப் பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: May I know whether rice is distributed through co-operative societies and multi-purpose co-operative societies in North Arcot district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, fair price shops are all run by co-operative societies.

SRI R. RAMAMIRTHA THONDAMAN: சமீபத்தில் அடித்த பேய்மழை காரணமாக பாதிக்கப்பட்ட தஞ்சை ஜில்லாவிலுள்ள மீனவர்கள் வசிக்கும் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் திறக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சை ஜில்லாவில் 35 கடைகள்வரை திறந்திருக்கிறது. வட ஆற்காடு ஜில்லாவில் 19 என்று சொன்னேன். தஞ்சையில் 35 இருக்கும்போது கனம் அங்கத்தினர் குறைகூற இடமில்லை.

SRI S. RANGANATHA MUDALIAR: The Collector of Chingleput told me the other day that he had recommended to the Board of Revenue the closure of all fair price shops in the district because of the recent rains and there was no necessity to continue the fair price shops. Will the Government please look into the matter and see that these shops are allowed to continue?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have been looking into the matter.

SRI N. K. PALANISAMI: 1958-59 வருடங்களில் கிட்டத்தட்ட ஆயிரம் நிவாரணக் கடைகள் வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது

400தான் மாகாணம் பூராவும் திறக்கப்பட்டிருக்கின்றன. இது போதுமானதில்லை. ஆகவே இதை உயர்த்த சர்க்கார் உத்தேசிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் ஒன்றும் உரிமை இல்லை. ஆயிரம் கடைகள் இருக்கலாம். இரண்டாயிரம் இருக்கலாம். இப்பொழுதுள்ள நிலையை உத்தேசித்துத்தான் கடைகள். மேலும் சென்ற வருடம் கொள்முதல் செய்தோம். கொள்முதல் செய்து கடைகளில் வைத்து விற்றோம். அவ்வளவு மோசமாக இப்பொழுதில்லை. ஆகவே ஆயிரம் கடைகள்கூட வைக்கவேண்டிய அவசியமில்லை என்பதுதான் இச்சர்க்கார் கருத்து.

SRI K. PONNIAN: பாம்பிக்குளம் போன்ற திட்டப் பகுதியில் நியாயவிலைக் கடைகள் இருந்தும் போதுமான அரிசி சப்ளை செய்ய முடியவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதை அதிகப்படுத்த சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோவையில் 70 கடைகள்வரை சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை 21 கடைதான் வைத்திருக்கிறார்கள். குறிப்பான குறைபாடுகள்பற்றி அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் அதை மேலும் கவனித்து வேண்டியது செய்யலாம்.

SRI K. VINAYAKAM: Is it not a fact that Government have passed orders instructing the Collectors to close these shops by the end of this month? Is it because of the fact that we have not enough stock of rice? Would it not be possible to continue these shops for some time more till the demands of the people of the State are fully met?

MR. SPEAKER: The hon. Member is repeating the question put by Sri S. Ranganatha Mudaliar.

THE HON. SRI M. BHATAVATSALAM: Collectors have been authorized to close these shops whenever they feel that there is no further need to run these shops. There is no question of stock. We are getting stocks now and then from the Government of India.

SRI M. KALYANASUNDARAM: நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு கைவசம் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது? இன்னும் அதிகப்படுத்த ஏதாவது முயற்சி உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது அதிகப்படுத்த வேண்டிய பிரச்னையில்லை. மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டதே வேண்டிய அளவு ஸ்டாக் இருக்கிறது. அதிகப்படியான கடைகள் வைப்பதற்குக்கூட ஸ்டாக் இருக்கிறது, ஸ்டாக் பற்றி குறைவில்லை.



*Lemuria*

* 131. *Q*.—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது பழம்பெரும் தமிழகமான கடல்கொண்ட லெமூரியா கண்டம் பற்றி சர்க்கார் ஆராய்ந்ததா?

(இ) அதுபற்றி விரிவான அறிக்கை சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI A. VEDARATHNAM: லெமூரியா என்ற இடம் இருந்தது என்று நமக்கு எந்த ஆதாரத்தைக் கொண்டு தெரிகிறது? அதிலிருந்து ஏதாவது சரித்திர உண்மைகள் தெரிகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது ஒரு யூகம்தான். லெமூரியா கண்டம் என்று ஒன்று இருந்திருக்கவேண்டும் என்று பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையாகவே இருந்தது என்பதற்கு புள்ளி விவரங்கள் இல்லை. இதைப்பற்றி ஆராய்வதைவிட இனிமேல் வருவதைப்பற்றி ஆராய்ச்சி செய்வது நன்றாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

*Hindi shorthand*

* 132 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் நம் மாநிலத்தில் ஹிந்தி சுருக்கெழுத்துப் பயிற்சி, தட்டெழுத்து (டைப்) பயிற்சி எங்கே நடைபெறுகின்றன?

(இ) இப்பயிற்சி எத்தனை பேருக்கு எவ்வளவு காலத்திற்கு நடக்கும்?

(உ) இதற்காகும் செலவென்ன?

(எ) இதற்கு மத்திய அரசாங்க உதவி உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Examinations in Shorthand and Typewriting in Hindi are not conducted by this Government. The Government have no information whether any unapproved private institution is giving coaching in this subject.

(இ) *to* (எ) Do not arise.

SRI A. VEDARATHNAM: நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள சுருக்கெழுத்தாளர்கள்தான் அகில இந்தியாவிலும் நல்ல திறமையாக இருந்து வருகிறார்கள். நம் நாட்டிலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கு அகில இந்தியாவில் கிராக்கி அதிகமாக இருக்கிறது.

[24th January 1961

ஆகவே இவர்கள் இந்தியிலும் சுருக்கெழுத்து தேர்ச்சி பெற்றிருந்தால் இந்தியாவில் எந்த இடங்களிலும் போய் வேலை பார்க்கலாம். இதனால் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னையும் ஓரளவுக்கு தீரும். இம்மாதிரி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் இந்தி சுருக்கெழுத்து பயிற்சி அளிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்காக பயிற்சி பெற வேண்டும் என்று யாராவது முன்வருவார்கள் என்றால் அதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்கும். இப்போது இம்மாதிரிப்பட்ட பயிற்சிக்கு தேவையிருப்பதாக தெரியவில்லை.

SRI A. VEDARATHNAM : இந்தி சுருக்கெழுத்துக்கு பயிற்சி அளிக்க தனியார் பள்ளிகள் முன் வந்தால் அரசாங்கம் அதற்கு ஏதாவது உதவி அளிக்க முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி பரிசீலனை செய்வது, எப்போது இந்தப் பிரச்னை வருமோ அப்போது நான் பரிசீலனை செய்ய முடியும். இப்போது ஹைபாதெடிகலாக கேட்கப்படும் கேள்விக்கு பதில் சொல்வதற்கில்லை.

*Counterfeit Currency Notes*

* 133 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டவர்கள் கண்டு பிடிக்கப்பட்டார்களா ?

(இ) அவர்களிடமிருந்து கிடைத்த தடயங்கள் என்ன ?

(உ) இதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir. The gang responsible for the attempt to forge two-rupee currency notes was unearthed and so far seven accused persons have been arrested.

(இ) Nine blocks three incomplete two-rupee conterfeit notes and the treadle machine with its dismantled parts were seized.

(உ) The case is pending trial.

MR. SPEAKER : If it is pending trial is it not *sub judice*? No further question can be asked.

THE HON. the Minister for Industries has come. We shall take up Question No. 125.



24th January 1961]

*Housing Scheme*

* 125 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of houses proposed to be built under the Low Income Group Housing Scheme during 1960–61;

(i) by the Corporation of Madras;

(ii) by the Government sponsored Co-operation Housing Socitey;

(iii) by the City Improvement Trust; and

(*b*) the tenements available and the number of applicants in each of the abovesaid schemes during 1960–61?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The information a is placed on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, is it not a fact that about 100 houses have been constructed by the Corporation of Madras under the Low Income Group Housing Scheme and it is pending allotment to the people who have requested for allotment? What is the *modus operandi* or the method that the Corporation would adopt to allot these houses or are they to be given through a Committee of Councillors or to be distributed by the Commissioner himself or under the instructions from the Government of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : The Corporation is responsible for the allotment of the houses. They have not yet allotted the houses. They are lying vacant.

SRI K. VINAYAKAM : May I know, Sir, when these houses have been constructed and for how long they have been lying vacant for want of proper method of allotment? Is there trouble in the matter of allotting these houses? Why is it pending for such a long time?

THE HON. SRI R. VENKATARAMAN : This question may be addressed to the Corporation because they are responsible for the allotment and they have not done. Why they have not allotted these houses should be answered by the Corporation.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : In view of the acute shortage of accommodation, is there any proposal to construct houses on the model of Bombay pattern giving one flat to each individual?

THE HON. SRI R. VENKATARAMAN : The proposal is now under way. Actually an advertisement was put up some time back to assess public response for the ownership of flats. We received about 300 applications and we feel that it is encouraging and we propose to go ahead with the construction of ownership of flats.

---

a Printed as Appendix on page 465 infra.

SRI A. A. RASHEED : Sir, from the statement placed on the table of the House it is found that 600 applications received in 1958 have not yet been disposed of by the City Improvement Trust. May I know the reason for not disposing of these applications?

THE HON. SRI R. VENKATARAMAN : It is due to want of houses.

*Teaching of Views*

* 134 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்திலுள்ள ஆலயங்களில் ஓதுவதற்கு அவசியமான வேதங்கள், ஆகமங்கள், திருமறைகள் போதிப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Long-term courses and short-term refresher courses are being run in several temples for the training of Oduvars, Archagas and others.

SRI A. VEDARATHNAM : ஆலயங்களில் பூஜைகள் எல்லாம் ஆகம முறைப்படி நடைபெற வேண்டும் என்று இருப்பதால், இதற்கான வசதி எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லா இடங்களிலும் இதற்கான பாடசாலைகளை ஏற்படுத்தி இம்மாதிரி ஆகம பாடசாலைகளில் தேறியவர்களுக்குத்தான் ஆலயங்களில் வேலை கொடுக்கப்படும் என்று முடிவு செய்தால் எல்லோரும் படிக்க முன் வருவார்கள். அதன் பின்னுல் முறைப்படி பூஜை முதலியனவும் நடைபெறும். இதற்காக வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த நோக்கத்துடன்தான் அநேக ஆலயங்களில் இம்மாதிரிப்பட்ட பாடசாலைகள் நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன.

SRI K. R. NALLASIVAM : ஸார், இதே போல் பைபிளையும், குரானையும் கற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து கொடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்து ஆலயங்களில் அங்குள்ள நிதியைக் கொண்டு ஆகம பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. பைபிளையும், குரானையும் கற்றுக்கொடுப்பதற்கு அவர்கள் ஆலயங்களிலிருந்து நிதி ஒதுக்கிக் கொடுத்தால் அதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு தயாராக இருக்கிறது.





*Scholarships*

* 135 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து ஐந்து வருட கட்டாய சேவை சர்க்காரில் செய்ய வேண்டுமென்று உத்திரவிட உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : A similar suggestion has already been made and is under examination of the Government.

*Text-book in Arithmetic*

* 136 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் ஐந்தாம் வகுப்புக்கு வெளியிடப்பட்ட கணக்குப் புத்தகத்தில் புதிய காசு முறை கணக்குகள் தரப்பட்டு உள்ளனவா?

(இ) இல்லையாயின், காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Does not arise.

*Highways Department (Reorganization)*

Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

பெருவழித்துறையை (Highways) மாற்றி அமைக்க சர்க்கார் தனி அதிகாரியை நியமித்துள்ளார்களா?

THE HON. SRI P. KAKKAN : Orders for reorganizing the Highways Department as Highways and Rural Works Department to suit the future pattern of Panchayat Administration have already been issued. No special officer has been appointed for this purpose.

SRI S. M. ANNAMALAI : ஸார், இதற்கு ஒதுக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : அது போகப் போகத்தான் தெரியும்.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இதில் வேலை செய்யக்கூடிய கடை நிலை ஊழியர்களுடைய நிலைமை ரீஆர்கனைசேஷன் நடந்த பின்னுல் எப்படியிருக்கும்? அவர்கள் எந்த டிபார்ட்மென்டில் இருப்பார்கள்? அதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

[24th January 1961

*Cottage Industry*

*138 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதர் நல இலாகா மூலமாக எந்தெந்த இடங்களில் ஹரிஜனப் பெண்களுக்கு சாயம் போடுதல், பாய் முடைதல், சட்டை செய்தல், பொம்மைகள் செய்தல் போன்ற கிராமத் தொழில்கள் செய்வதற்கான கைத்தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) இந்நிலையங்களில் எத்தனை ஹரிஜனப் பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) No cottage industry work centre has been started exclusively for Harijan Women. In the 23 work centres now run by the Women's Welfare Department, 22 Harijan women are now undergoing training.

SRI P. G. MANICKAM : ஸார், இந்தப் பள்ளிகளின் மூலமாக அரிஜனங்களுக்கோ அல்லது நான்-அரிஜனங்களுக்கோ உதவி செய்கின்ற முறையில் இப்படிப்பட்ட வேலைகளை துவக்குவதற்கு ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அவ்விதம் ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருப்பின் அந்த வேலைகளை கண்காணிப்பு செய்ய ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் விவரங்களை கொடுக்க வேண்டுமானால் தனிக்கேள்வி போட வேண்டும்.

*Home for women*

* *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலை செய்து பிழைக்கின்ற நிலையில் இல்லாத மாதர்களையும், குழந்தைகளையும் ஆதரித்துக் காப்பாற்றுவதற்கான நிலையம் ஒன்றை மாதர் நல இலாகா மூலமாக ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறதா?

(இ) அவ்வாறிருப்பின், இந்நிலையம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

(உ) எத்தனை மாதர்களும் குழந்தைகளும் இந்நிலையத்தில் சேர்க்கப்படுவார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) **Yes, Sir.**

(*b*) & (*c*) The details are yet to be **finalized.**



24th January 1961]

*Fire accidents during Deepavali*

*140 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of fire accidents that occurred during Deepavali in 1960?

THE HON. SRI M. A. MANICKAVELU : The labour and time involved in gathering these particulars will not be commensurate with the result.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. the Minister aware that there were several fires due to the exploding of crackers, also several persons were injured and several lost their lives? If so, will the Government stop exploding crackers in the crowded areas?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is a matter for the public to bring a change in the mentality of people, especially children. That is the difficulty.

SRI K. VINAYAKAM : Is it a fact that on the eve of Deepavali, instructions were issued that atomic crackers known as "அணுகுண்டு வெடி" were prohibited? But still they were freely used in the City of Madras. What action did the local Police take against such infringement of rules?

THE HON. SRI M. A. MANICKAVELU : That seems to be so. But the noise the hon. Member heard must be due to non-atomic crackers.

*Transferred personnel*

* 141 *Q.*—SRI M. P. SARATHI, SRI K. SATTANATHA KARAYALAR AND SRI T. T. DANIEL: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9 a.m.

ராஜ்ய சீரமைப்பினால் திருவாங்கூர்-கொச்சியிலிருந்து இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களை, இந்த ராஜ்ய ஊழியர்களுடன் சேர்த்து இணைக்கும் வேலை (Integration of Services) பூர்த்தி ஆகி விட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Orders of integration have been passed in respect of all persons holding State-wide posts allotted to this State. In respect of a few isolated local posts proposals for equation and integration of services are awaited from certain Heads of Departments and they are very small in number.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த டிரான்ஸ்பர்ட் பர்சோனெல் ராஜ்யப் புனரமைப்பின் காரணமாக 1—11—1956-லே மாற்றப்பட்டவர்களுக்கு 19—10—1956-லே இங்கிருந்து மலை

[24th January 1961

யாளத்திற்குச் சென்ற உத்தியோகஸ்தர்களால் ஏற்பட்ட காலி ஸ்தானங்களில் சீனியாரிட்டி அடிப்படையில் உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிலிருந்து வந்த உத்திரவின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதர இலாகாக்களுக்குப் பொருந்தக்கூடிய உத்திரவு ஃபுட் அண்ட் அக்ரிகல்சர் இலாகாவிற்குப் பொருந்ாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கொள்கை பொதுவாக வகுக்கப்பட்டிருந்தால் எல்லா இலாகாக்களுக்கும் பொருந்தும், பொருந்தாத விஷயங்கள் இருந்தால் அதை அடிப்படையாக வைத்து ஏதாவது மாறுதல் ஏற்படலாம்.

*Library cess*

*1'2 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் 1959-ல் நூல் நிலையத்திற்கான செஸ் எவ்வளவு வசூலாகியது ?

(இ) இந்த இனத்தில் செலவாகிய தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Rs. 62,488–55 nP. for 1959–60.

(b) An expenditure of Rs. 1,80,256–34 nP. was incurred by the Local Library Authority during 1959–60.

SRI A. A. RASHEED : May I know whether the Government have paid any grant towards the extension of the Library service in the North Arcot district?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, under the Libraries Act

*Last Grade Servants*

* 143 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஈரோட்டிலுள்ள சர்க்கார் கடைநிலை ஊழியர்கள் கொல்லம் பாளையத்துக்கருகிலுள்ள புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டிக்கொள்ள நிலம் கோரி விண்ணப்பித்தனரா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) About 50 applications from the last grade Government servants and the low paid Government servants have been received by the local revenue authorities.

(b) The proposals for assignment are engaging the attention of the local revenue authorities.



24th January 1961]

SRI K. R. NALLASIVAM : மொத்தமாக சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பிரித்துக் கொடுத்து பட்டா கொடுப்பது எந்த அளவில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU :As it is, there are 45 sites available, of which 6 sites are given to the school building. As already stated by me, there are 50 applications. For the others, some adjacent land is being looked for.

*Lower Bhavani Area*

* 144 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கீழ்பவானிப் பாசனப் பகுதிக்குள் ஆயக்கட்டில் சேராத நிலங்களை ஆயக்கட்டில் சேர்ப்பது என்ன நிலையிலுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : The Executive Engineer, Lower Bhavani Project Cannals Division, is taking action, on receipt of application from the ryots, to include, in the Lower Bhavani Project ayacut, such of the lands as were originally excluded owing to the unwillingness of the ryots but are so situate that the project water enters them either by percolation or by direct flow and/or are surrounded on all sides by the included block. The inclusion of the other lands which were excluded due to unwillingness of the ryots or due to extension of project ayacut to Dharapuram and Karur taluks will be considered after watching the development of the ayacut and the supply position for some years.

SRI K. R. NALLASIVAM : ஆயக்கட்டுப் பகுதியில் இருக்கக் கூடிய பகுதிகளில் நீர்க்கசிவுத் தண்ணீரை எடுத்துப் பாய்ச்ச சிறு சிறு திட்டங்கள் போடப்பட்டும் இன்னும் செய்யப் படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளை ஆயக்கட்டில் சேர்த்து போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கசிவினால் வரும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தத்தான் அப்பர் காளிங்கராயன் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும் போது இதையெல்லாம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல என்று நினைக்கிறேன். இதிலே நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும் என்றுதான் பரிசீலனைசெய்து கொண்டிருக்கிறோம்.

SRI K. R. NALLASIVAM : அப்பர் காளிங்கராயன் திட்டம் என்பது கீழ் பவானி கடைக் கோடியில் வரும் பகுதிகளுக்கான திட்டம். மேல் கோடியில் பயன்படுவதற்கு நீர்க் கசிவுத் தண்ணீரைப் பயன்படுத்தி சிறு வாய்க்கால் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை நிறைவேற்ற சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றிய பரிசீலனை செய்ய முயற்சி செய்யலாம்.

[24th January 1961

**SRI P. G. MANICKAM:** கோபி தாலுக்காவில் இருக்கின்ற எல்லிஸ்பேட்டையில் 200 ஏக்கர் பகுதி பாசனப் பகுதியில் சேர்ந்திருக்கிறது. அதற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று இரண்டொரு எம்.எல்.ஏ.-க்கள்கூட அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறோம். அமைச்சரும் நேரடியாக ஆபீசர்களுக்குத் தெரிவித்திருப்பார்களென்று நினைக்கிறேன். இன்னும் தண்ணீர் வசதி கிடைக்காததால், அதற்கான நடவடிக்கைகளை எடுத்து தக்க உத்திரவைப் பிறப்பிப்பார்களா?

**THE HON. SRI P. KAKKAN:** கனம் அங்கத்தினர் சொல்லும் இடம் மட்டுமல்ல. அநேக இடங்களில் பல விவசாயப் பெருமக்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். அவைகளையெல்லாம் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

*Drugs*

* 145 *Q.*—**SRI A. VEDARATHNAM:** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் ஆல்கஹால் சம்பந்தப்பட்ட மருந்து முதலிய பானங்கள் விற்றதற்காக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன?

(இ) அவைகளில் எத்தனை பேருக்கு இதுவரை தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றது, ஜில்லாவாரியாக?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The particulars are as follows districtwise :—

| Name of the district. | Number of prosecutions so far launched during the year 1960 for the offence of selling medicinal and other preparations containing alcohol as drinks. | Number of persons sentenced so far out of these. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Kanyakumari .. .. | 1 | .. |
| 2 Thanjavur .. .. .. | 5 | 4 |
| 3 Madurai, North .. .. | 5 | 2 |
| 4 Madurai Urban .. .. | 1 | 1 |
| 5 Madras City .. .. | 42 | 31 |
| 6 Other districts .. .. | Nil. | Nil. |

**SRI A. VEDARATHNAM:** ஸார், சிகிச்சைக்கு ஆல்கஹால் எந்த மருந்துக்கும் உபயோகப்படுவதில்லை, ஆனால் மருந்துகளை ப்ரிசர்வ் செய்யத்தான் தேவையாக இருக்கிறது என்று நிபுணர்கள்—சர்ஜன்-ஜெனரல் போன்றவர்கள்—கூறி வருகிறார்கள்.



24th January 1961]

அப்படி இருக்கும்போது இந்த ஆல்கஹால் கலந்த மருந்து விற்பனையை அடியோடு தடுத்துவிடுவதன் காரணமாக இந்த மது வியாபாரத்தைத் தடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இம்மாதிரி மருந்தாகக் கொடுக்கவேண்டுமென்று பிரிஸ்க்ரிப்ஷன் வழங்கப்படுகிறது. விற்பனை செய்பவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டும், டாக்டர் ப்ரிஸ்க்ரிப்ஷன் பேரில் விற்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது.

*Prohibition*

* 146 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to relax Prohibition rules in some of the hill stations; and

(*b*) the basis on which liquor permits are given to persons other than foreigners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) In the case of persons other than foreigners who are Indians, permits are granted only on medical grounds, i.e., where the applications are supported by medical certificates obtained from paid Civil Surgeons. No medical certificate is however insisted on in the case of renewal of permits unless the quantity of liquor is to be increased. The quantity of liquor allowed to Indians on grounds of health is fixed in each case with reference to the personal circumstances of the applicant. The maximum quota allowed is limited to four units a month.

* 147 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to relax the Prohibition rules for tourists in Ootacamund?

THE HON SRI M. BHAKTAVATSALAM: The restrictions have been sufficiently relaxed for the benefit of tourists in Ooty.

* 148 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government propose to constitute a high power commission to review the progress of Prohibition programme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

**SRI N. K. PALANISAMI:** ஜில்லா மெடிக்கல் ஆபீசர்கள் சிபார்சு செய்யக்கூடிய காலத்தில் மெடிக்கல் க்ரௌண்ட்ஸ் இல்லாத கேஸ்களிலும்கூட பர்மிட் கொடுக்க சிபார்சு செய்கிறார்களா? அப்படியானால் எந்த விதிகளின்படி சிபாரிசு கொடுக்கப்படுகிறது?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இதன்படி கொடுக்க வேண்டிய சர்டிபிகேட் மெடிக்கல் க்ரௌண்டில்தான் கொடுக்க வேண்டும்.

Sri A. A. RASHEED : May I know whether the Government have received any recommendation from the Union Government for the complete waiving of prohibition rules so far as they applied to foreign tourists who visit Ootacamund and other hill stations?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, the answer is, 'No.' But, I may tell the Hon. Member that with regard to foreign tourists, everything is being done and attended to, so that they may feel no difficulty in the matter of getting permits and drinks.

Sri N. K. PALANISAMI : இவ்வளவு கடுமையான சட்டங்கள் இருந்தும் மாதா மாதம் அதிகப்படியான குற்றங்கள் ஏற்படக் காரணம் என்ன? இதில் தோல்வி ஏற்பட்டிருக்கிறதா? அதைப் பற்றி புனராலோசனை செய்ய சர்க்கார் முன் வருவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயமாக இருக்கலாம். அல்லது அவருடைய கட்சி அபிப்பிராயமாக இருக்கலாம். குற்றங்கள் குறைந்து கொண்டு வருகின்றன. மதுவிலக்குச் சட்டத்தை நீக்குவதாக உத்தேசம் இல்லை.

Sri A. VEDARATHNAM : இந்த பர்மிட் வழங்குகின்ற முறையில் சில டாக்டர்கள் அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக அரசாங்கத்திற்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியானால் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எல்லாத் துறையிலும் சிற்சில துஷ்பிரயோகம் நடைபெறலாம். அப்படி ஏதாவது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் உடனடியாக அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

Sri K. SATTANATHA KARAYALAR : சார், வெளிநாட்டு யாத்ரீகர்களுக்கு அகில இந்திய ரீதியில் ஒரு பர்மிட் வழங்குவது பற்றி இந்த சர்க்காரை மத்திய சர்க்கார் யோசனை கேட்டதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது அரசாங்கங்கள் பரிசீலனையில் இருக்கிறது.

Sri S. M. ANNAMALAI : சார், மதுவிலக்கு தோற்று விட்டது என்றும், மதுவிலக்கை இந்த மாகாணத்தில் ரத்து செய்ய வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்யும் வகையிலே ஒரு சங்கம் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருவதைப்பற்றி இந்த சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா? அப்படி கொண்டு வரப் பட்டிருந்தால், அந்த சங்கத்தின்மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எவ்வளவோ கிளர்ச்சிகள் இந்த நாட்டிலே பல சங்கங்களிலும், கழகங்



களிலும் நடைபெறுகின்றன. அவைகள் எல்லாம் இந்த அரசாங்கத்திற்குத் தெரிந்தும், தெரியாமலும் இருக்கின்றன. அப்படித் தெரிந்திருந்தாலும், எல்லாவற்றின் மேலும் நட வடிக்கை எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

*Air-conditioned buses*

* 149 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to introduce air-conditioned buses in the Government Transport System on long distance routes; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) Yes, Sir. Detailed proposals have yet to be worked out.

Sri N. K. PALANISAMI : எவ்வளவு பஸ்கள் அம்மாதிரி விடுவதாக உத்தேசம்?

The Hon. Sri R. VENKATARAMAN : ஏர் கண்டிஷன் பஸ்கள் இன்னும் அதிகப்படியாக தயார் செய்யப்படவில்லை. ஒரே ஒரு பஸ் தயார் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. முதன் முதலாக ஒரு ஏர் கண்டிஷன் பஸ்ஸை இப்போது அசோக் லேலண்ட் ஸ்தாபனம் தயார் செய்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்த பிறகுதான் முடிவு செய்ய வேண்டும்.

Sri A. A. RASHEED : May I know the approximate cost of air-conditioning one bus?

The Hon. Sri R. VENKATARAMAN : We have no idea.

*Cine Technique*

* 150 Q.—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) what are the courses proposed to be started in Cine Technique;

(b) when they will be started;

(c) the expenditure to be incurred on these courses; and

(d) under whose guidance and the nature of certificate to be given?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) & (b) Diploma courses in Cinematography, Sound Engineering and Film Processing are offered in the Institute of Film Technology started on 15th September 1960.

[24th January 1961

(c) A sum of Rs. 38,500 has been provided in the budget for 1960–61 for the expenditure on staff, furniture, scholarships, stipends, etc. The ultimate cost will be Rs. 6·4 lakhs which includes lands, buildings and equipment. The annual recurring cost will be Rs. 35,300.

(d) The Institute is under the control of the Director of Technical Education. The examination will be conducted by the Board of Examinations and Diplomas will be awarded to the successful candidates by the State Board of Technical Education and Training.

*** 151 Q.—Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சினிமாத் துறையில் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியாயின், அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The attention of the Member is invited to the answer given to starred Question No. 150 by Sri T. S. Ramaswami, M.L.A.

SRI K. VINAYAKAM : Is it not a fact that these students undergoing training in the Technical Institute at Guindy are given only theoretical training and not much of practical training? So, will the Government consider the feasibility of deputing them to cinema studios to get more practical training?

THE HON. SRI C. SUBRAMANIAM : This matter has been looked into and I think the syllabus has been reorganised now and practical courses are also included.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know for how many years the course is?

THE HON. SRI C. SUBRAMANIAM : Three-year course.

**SRI N. R. THIAGARAJAN :** ஸார், இரண்டு நாட்களுக்கு முன்பு வேலூரிலே சினிமாவை ஆதரிக்கின்ற ஒரு சாராருக்கும் சினிமாவை எதிர்க்கின்ற ஒரு சாராருக்கும் இடையே சண்டை ஏற்பட்டதாகவும், அதிலே ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர்கூட தாக்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அப்படி அடித்துக் கொள்ளாமல் இருப்பதற்கான பாடத்தை இந்தப் பள்ளிக் கூடத்திலே கற்றுக்கொடுப்பார்களா ?

(பதில் இல்லை)

**SRI S. M. ANNAMALAI :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், பாராளுமன்றத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தினரைப் பற்றிய விஷயத்தை, அதுவும் அடிக்கப்பட்டார் என்ற விஷயத்தை இந்தச் சபையிலே விவாதிக்கலாமா என்று கேட்கிறேன்.



24th January 1961]

**MR. SPEAKER :** அடிபட்டார் என்றுதான் சொன்னார். அப்படித்தான் எனக்குக் கேட்டது. அடித்தார் என்று சொன்னால்தான் தப்பு.

*Forests*

*** 152 Q.—Sri A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களிலே காட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தும் புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) அதன் விவரமென்ன ?

(உ) மத்திய அரசாங்கம் இதற்கு என்ன உதவி செய்கிறது ?

(எ) இதுவரை எங்கெங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? இன்னும் எங்கெங்கே ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது ?

(ஐ) இதற்கான அரசாங்க உதவி விவரமும் கிராமத்தார் பங்கும் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b), (d) & (e) The Scheme, which aims at the development of village forests by planting trees of fuel, manure and fodder value, has been ordered to be undertaken on a pilot scale by the Forest Department over 2,074 acres in selected Development Blocks in the Chingleput, South Arcot and North Arcot districts during 1960–61 at an estimated cost of Rs. 2·05 lakhs. During the Third Five-Year Plan period, it is proposed to undertake the scheme on a large scale in all unutilised areas in the villages such as Village commons belonging to the Panchayats in all Development Blocks to the extent to which funds are made available for implementing the scheme in the Third Five-Year Plan, when it is finalised. During this period, the scheme will be undertaken by the Panchayats themselves with the assistance of the Forest Department. Other details in this regard have not yet been finalised.

(c) For the year 1960–61, a 100 per cent subsidy for this scheme has been claimed from the Government of India.

**SRI A. VEDARATHNAM :** இந்தப் பண்ணைகள் இதற்கு முன் எங்கெங்கே செயல்பட்டு வருகிறது ? இப்போது எந்தெந்த இடத்தில் இதைப் பரீட்சார்த்தமாக துவக்க யோசனை செய்யப் பட்டிருக்கிறது ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இதற்கு முன்பு இம் மாதிரிப் பண்ணைகள் நடைபெறவில்லை. ஆனால் இப்போது பரீட்சார்த்தமாக செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. திருக்கழுக் குன்றம் வட்டார வளர்ச்சிப் பகுதியிலே இப்போது நடைபெற்றுக்

[24th January 1961

கொண்டிருக்கிறது. இதுபோல் இன்னும் பல வட்டார வளர்ச்சிப் பகுதியிலே தொடங்கப்பட இருக்கிறது. இதைப்பற்றிய விவரங்கள் முன்பே கொடுத்திருக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : After the scheme has been finalised, will the Government consider the desirability of placing a copy of the scheme on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. This will take a year and this can be considered when we discuss the Budget for the next year.

**SRI P. G. MANICKAM :** ஸார், 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவிலே, தாளவாடி மலை பிரதேசத்திலே இவ்வாறு காட்டுப் பண்ணை தொடங்குவதற்கு அரசாங்கத்தில் ஏதாவது பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது பரிசோதனைத் திட்டந்தான். 3-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே பல இடங்களில், பல வட்டார வளர்ச்சித் திட்டங்களிலே இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளப் படும். அப்போது வசதியாக இருக்குமானால், அதுபற்றி அப்போது கவனிக்கப்படும்.

*Home Minister's tour*

*** 153 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரஷ்ய நாட்டிற்கு கனம் அமைச்சரவர்கள் விவசாய ஆராய்ச்சிப் பிரயாணம் செய்தமைதின் மூலம் இந்த நாட்டு விவசாயத்துறையில் என்னென்ன அபிவிருத்தி செய்யப்படும் ?

(இ) அவற்றை அமுலுக்குக் கொண்டுவர ஏதேனும் திட்டமிடப்பட்டிருந்தால் அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The Minister has been very much impressed with the Scientific Research and its application to the land in the Soviet Union, and Government will devote larger attention to Scientific Research and extension work in the matter of agricultural development.

**SRI A. VEDARATHNAM :** அமைச்சர் அவர்கள் ரஷ்ய நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது, இந்த நாட்டிற்குப் பொருத்தமான விவசாய முறை ஏதாவது அங்கே அனுஷ்டிக்கப் பட்டது அவர்களுக்குப் புலப்பட்டதா ? அப்படியிருந்தால், அதை இங்கே அனுஷ்டிப்பதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** நான் என் விடையிலேயே அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அந்த ஆராய்ச்சிகள் மேலும் நிலத்திற்கு விஸ்தரிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டேன். ஆகவே அதை இன்னும் தீவிரமாக நடத்த வேண்டுமென்பது இப்போது எனக்குப் புலப்படுகிறது.



24th January 1961]

SRI K. VINAYAKAM : On the whole are the agricultural conditions obtaining in Russia any better than ours excepting the technical backwardness that is found in our country or the yield from land is any better than what is obtaining in our country?

THE HON SRI M BHAKTAVATSALAM : Land is the same but everything depends on the application of the results of scientific research.

*Single teacher schools*

*** 154 Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுகாவில் எத்தனை ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன ?

(இ) படவேடு, மதுரா, தேவனுங்குளம், ஜவ்வாது மலையிலுள்ள கானமலை கிராமங்களில் பள்ளிகள் திறக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Four

(b) A single teacher school has been ordered to be opened at Devanankulam. At present there is no proposal to open a school at Kanamalai.

**SRI S. M. ANNAMALAI :** சார், தேவனுங்குளத்தில் ஓராசிரியர் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று D.E.O முதற்கொண்டு சிபார்சு செய்திருந்தார்கள். அப்படி செய்யப்பட்டும், அங்குள்ள ரீஜனல் இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டாமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். தவிர, அதற்குப் பதில் ஓர் ஆரம்பப் பள்ளியை இப்போது சாமந்திபுரத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் அங்குள்ள ரிக்கார்டுகளை வரவழைத்து இரண்டு அதிகாரிகளுக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை அறிந்து, நியாயமான இடத்தில் பள்ளியை ஆரம்பிக்க உத்தரவுபோட முன்வருவார்களா என்று கேட்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இங்கு இருக்கக்கூடிய தகவலிலே, இம்மாதிரியான தகராறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது இருப்பின், அங்கத்தினர் அவர்கள் குறித்துக் கொடுத்தால், அதுபற்றி பரிசீலனை செய்கிறேன்.

*Schools (Javadu Hills)*

*** 155 Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போளூர் தாலுகா ஜவ்வாது மலையில் எத்தனை ஆரம்ப உயர்தரப் பாடசாலைகள் உள்ளன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are no higher elementary schools in the Javadu Hills

[24th January 1961

**SRI S. M. ANNAMALAI :** ஸார், ஜவ்வாது மலை மேலிருந்து கீழே இறங்கி வரவேண்டுமென்றால், 20 மைலுக்கு மேல் ஆகிறது. தவிர, சரியான ரோடு வசதி கிடையாது. அங்கே இப்போது 5-வது வகுப்பு வரைதான் பள்ளிக்கூடம் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அப்படி ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியை அங்கு ஆரம்பித்து நடத்துவது அவசியமானால், அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அதற்கு சர்க்கார் தனது ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

### *Palar*

* 156 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலாற்றுக்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் சமீபத்தில் சென்னை சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்கும் நடைபெற்றதா ?

(இ) அப்படியானால் அதன் முடிவென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED : Will the Government approach the Mysore Government for the release of water to the Palar which is now dry?

**THE HON. SRI P. KAKKAN :** இந்த வருடம் நல்ல மழை பெய்து இருக்கிறது. வெள்ளமும் வந்திருக்கிறது. அதேபோல் எப்படியாவது அவர்கள் கொடுக்காவிட்டாலும், தண்ணீர் வந்து விடுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Text-books*

* 157 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Madras State Education Conference held at Madurai has recommended to the Government to drop proposals to publish Text-books; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) No action is considered necessary.



24th January 1961]

SRI A. A. RASHEED : May I know the number of text-books so far published and may I also know whether these text-books are sold on 'no profit no loss' basis?

THE HON. SRI C. SUBRAMANIAM : One text-book, the English text-book for the V Standard has been published and it has been sold comparatively at lesser price than the one sold by private publishers.

**SRI K. SATTANATHA KARAYALAR :** இந்த மகாநாடு யாரால் நடத்தப்படுகிறது. இது வருடாந்திர மகாநாடா ? சர்க்கார் இதில் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்களா ? சர்க்கார் டிபார்ட்மெண்டுகள் இதில் பங்கு எடுத்துக் கொள்ளுகிறதா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இதை ஆசிரியர்கள் நடத்துகிறார்கள். அதிலே சர்க்கார் என்கிற முறையில் பங்கு எடுத்துக்கொள்ளுவதில்லை. மந்திரிகள், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் ஆகியோர் தனிப்பட்ட முறையிலே பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

SRI K. VINAYAKAM : In addition to this English text book for V Standard do the Government propose to publish any other book in other subjects like Arithmetic, Social Studies or some other subject?

THE HON. SRI C. SUBRAMANIAM : The decision is to publish text-books necessary for I to V Standards. Because the printing capacity is not available it is being postponed. Attempts are being made to get the necessary printing machinery.

### *"Level jumping"*

* 158 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether 'Level jumping' had been introduced in our departments as they have been introduced in the departments of the Government of India?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. But it is already in force to a limited extent in the Madras Secretariat.

**SRI K. SATTANATHA KARAYALAR :** 'லெவல் ஜம்பிங்' என்றால் என்ன ? இதனால் எந்த அளவு வேலை குறைவுபடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** 'லெவல் ஜம்பிங்' பற்றி கேள்வி கேட்டிருப்பதால், அதைப் பற்றி தெரிந்துக் கொண்டுதான் கேள்வி கேட்டிருக்கிறார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். இப்பொழுது செகரடேரியட் அலுவலகத்தில் லோயர் டிவிஷன் கிளார்க், அப்பர் டிவிஷன் கிளார்க், சூப்பரிண்டெண்டெண்ட், உதவிக் காரியதரிசி, டெப்யூடி காரியதரிசி, காரியதரிசி என்கிற அமைப்பிலே வரிசையாக இருக்கிறது. இவர்கள்

ஒவ்வொருவருக்கும் வரிசையாக பேப்பர்கள் போகாமல் அந்தந்த ஸப்ஜெக்ட்டுக்கு தகுந்தாற்போல் நேராக எடுத்த எடுப்பிலேயே அப்பர் டிவிஷன் கிளார்க் அல்லது சூபரிண்டெண்டெண்ட் அல்லது அண்டர் செகரடரி பார்த்து மேலே செகரடரிக்கும் மந்திரிக்கும் பேப்பர்களை சர்குலேட் செய்வது என்ற முறைதான் 'லெவல் ஜம்பிங்' என்பது. இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் தொடர்ச்சியாக பேப்பர் போகாமல், இரண்டு, மூன்று இடம் தாண்டிப் போவது தான் 'லெவல் ஜம்பிங்' என்பது. (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம்: படிப்படியாக போகாமல் ஒன்று அல்லது இரண்டுபடி தாண்டிப் போவதை) படி தாண்டுவது என்று சொன்னால் அது 'லெவல் ஜம்ப்' ஆகிவிடும். ஆகவே நான் சொன்னபடி ஒவ்வொரு இடமாக வரிசையாக போகாமல் ஒன்று, இரண்டு இடம் விட்டு போவதென்ற 'லெவல் ஜம்பிங்' முறை இப்பொழுது நடைமுறைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் நல்ல முறையிலே திருத்தி அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

*Bridge (Erode-Karur Road)*

* 159 *Q.*—Sri K. R. NALLASIVAM: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் ஈரோட்டிலிருந்து கரூர் போகும் பாட்டையில் (ரோடு) 21/1 மைலில் உள்ள அருங்கு பாலத்தை பெரிய பாலமாக மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்காகும் உத்தேச செலவின் மதிப்பென்ன?

(உ) எப்பொழுது அவ்வேலை ஆரம்பமாகும்?

The Hon. Sri P. KAKKAN: (*a*) The proposal to construct a high level bridge instead of a causeway at the site is under the technical examination of the officers of the Highways Department.

(*b*) The cost of bridge is estimated at Rs. 4,15,000.

(*c*) The work is likely to be taken up during the next year (1961-62).

*Meeting at Periamet, Madras*

* 160 *Q.*—Sri A. A. RASHEED: Will the Hon. Minister for Home be pleased to state whether it is a fact that the Deputy Commissioner of Law and Order addressed a meeting at Periamet, Madras, in December 1959 which was presided over by a thrice convicted bad character who was in the Police list of rowdies?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: No, Sir.

Sri A. A. RASHEED: Is the Hon. Minister aware that a hand-bill was printed and published by this bad character stating that he would preside over the meeting which would be addressed



by the Deputy Commissioner of Law and Order? If this was wrong information why was not action taken against the bad character?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: This person did not preside over the meeting. He attended the meeting. The hand-bill was printed so that he could prove his respectability at the trial which was held.

Sri A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that this bad character is taking undue advantage of his friendship with the Deputy Commissioner of Law and Order and persecuting the merchants and hand-cart pullers in Periamet?

The Hon Sri M BHAKTAVATSALAM: I totally deny there is any friendship between the Deputy Commissioner of Law and Order and the bad character.

Mr. SPEAKER: Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

III.—CALLING ATTENTION TO THE WHOLESALE EVICTION OF TENANTS IN THANJAVUR DISTRICT.

Mr. SPEAKER: I have received notice under Rule 41 from the hon. Members Sri C. Muthiah and Sri T. R. Ramamirtha Thondaman calling attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance viz., the wholesale eviction of tenants in all towns in Thanjavur district.

The hon. Member Sri C. Muthiah will briefly state his case.

Sri C. MUTHIAH: கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே சில முனிசிபல் நகரங்களிலே இந்தக் குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டம் இருந்துகொண்டு வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு சட்டசபையிலே தொழில் நடத்தும் ஸ்தாபனங்களுக்கு மாத்திரம் அந்த சட்டம் அமுலாகாது என்கிற திருத்தம் வந்த பிறகு, இப்பொழுது தஞ்சை, கும்பகோணம் போன்ற இடங்களில் கடைகள் இருக்கிற இடங்களை காலிசெய்யும்படியான நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டு சில இடங்களில் காலி செய்து கொண்டு வருகிறார்கள். மேஜர் பஞ்சாயத்துக்களாகிய சீர்காழி, திருவாரூர் ஆகிய இடங்களில் குடியிருப்பு பாதுகாப்பு சட்டம் இல்லாத காரணத்தினால், இப்பொழுது பூமியினுடைய விலை ஏற்றத்தினால் ஆறு மாத காலத்தில் எல்லோரும் அந்த நகரங்களில் உள்ள பகுதிகளை விற்று வருகிறார்கள். அதனால் டவுன்புறங்களில் வெளியேற்றும்படியான சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. சென்ற மாதம் சீர்காழியில் ஒன்பது பேர்கள் கோர்ட்டில் கேஸ் நடத்தி வெளியேற்றியிருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இப்பொழுது

[Sri C. Muthiah] [24th January 1961

கூட 2, 3 கேஸ்களில் ரூ. 1,000, 1,500 செலவில் ஏழைக்குடியானவர்கள் கட்டின இடத்தை இடித்துக்கொண்டு போகக் கூடிய சூழ்நிலை இருந்தும் கொண்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் அவசரமாக இந்தப் பிரேரேபணையை நான் கொண்டு வந்திருக்கிறேன். கோர்ட்டில் போனால்கூட அதற்கான 'ஸ்டே' கிடைக்கவில்லை. கிராமப் புறங்களில் இந்தப் பாதுகாப்பு கொடுத்த பிறகு நகர் புறங்களுக்கும் இது அவசியமாக இருக்கிறது. கிராமப் புறங்களில் இந்தப் பாதுகாப்பு கொடுத்த பிறகுகூட, அந்த இடத்தை காலி செய்யாவிட்டாலுங்கூட மரங்களை வெட்டி தொந்தரவு கொடுப்பதினால் நாங்கள் அதற்காக தலையிட்டு சமாதானம் செய்தாலேயொழிய எங்கள் நேரம் பூராவும் போய்விடுகிறது. நாங்கள் அங்கு போய் கஷ்டப்பட்டு சமாதானம் செய்தாலும் கூட, மறுபடியும் மரங்களை வெட்டி தொந்தரவு கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுபோல் நகர்ப்புறங்களில் இப்பொழுது சமாளிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்குக் கூட நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். வாங்குகிறவர்கள் தான் இப்பொழுது ஸ்டாம்ப் ட்யூட்டி கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. விற்கிறவர்கள் ஒருவிதமான வரியும் கொடுக்க வேண்டியதில்லை. வாங்குகிறவர்களைப்போல் விற்பவர்களும் ஸ்டாம்ப் ட்யூடி கொடுக்கவேண்டும் என்று சட்டம் செய்துவிட்டால் நலம் என்று நினைக்கிறேன். இப்பொழுது ஒன்றும் வரி இல்லாமல் இருப்பதால்தான் விற்பவர்கள் நகர்புறங்களிலே அவசர அவசரமாக விற்றுவிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். நான் இந்தப் பிரச்னையை இங்கே எழுப்பிய பிறகு, இதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, விற்பவர்கள் இன்னும் வெகு வேகமாக விற்பார்களோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள்கூட சீர்காழியில் ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்கு இடம் வேண்டும் என்று சுற்றிப் பார்த்தோம். ஆனால் அதற்கு இடம் கிடைக்காமல் நஞ்சை நிலம்தான் கிடைக்கிறது. அரசாங்கம் தயை கூர்ந்து இதற்காக 20 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருந்தபோதிலும், சீர்காழியில் நஞ்சை நிலத்தைத் தான் அக்விஸிஷன் ப்ரொஸீடிங்ஸ் எடுத்து ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. சீர்காழியில் ரூ. 2,40,000 வருமானம் இருந்தும், 22,000 ஜனத்தொகை இருந்தும் இன்னும் அது முதல் கிரேடு பஞ்சாயத்தாக இருக்கிறது. அதை முனிஸிபாலிடி இல்லை என்று ஒதுக்கித் தள்ளாமல், உடனடியாக அதற்கு இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டும். கும்பகோணம், தஞ்சை ஆகிய இடங்களில் தொழில் நடத்துகிறவர்களுக்கும் இந்தச் சட்டத்தை அமுலாக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் இப்பொழுது பதில் சொல்லும்போது, சமாதானம் கொடுக்காமல் நல்ல முறையில் அங்கு சட்டம் உடனடியாக வரும் என்ற சந்தோஷ செய்தியை அன்புடன் சொல்லவேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.



24th January 1961]

* THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member wanted elucidation on many points. However, I will confine myself to the subject given notice of by him. 9-30 a.m.

It has been brought to the notice of Government that there is wholesale eviction of tenants in all towns in Thanjavur district. Presumably, the hon. Members want the Government to help the tenants from being evicted, by applying the provisions contained in the Madras City Tenants Protection Act, 1921.

The Madras City Tenants Protection Act, 1921, was originally enacted with the main object of safegauarding tenants from eviction from residential buildings in the City of Madras. In 1955, the Act was amended so that it could be extended to other municipal towns and to areas within a radius of five miles from municipal towns where similar conditions prevailed and where there was real hardship. It was not however clearly provided in the Act at that time whether the protection from eviction was available also to the tenants of non-residential buildings. Advantage was taken of the above position by tenants of non-residential buildings. The protection from eviction thus enjoyed by the tenants of non-residential buildings was not consistent with the object for which the principal Act was enacted. It was therefore decided to restrict the protection afforded by the Act to tenants of residential buildings only and the Act was accordingly amended in 1960, making however an exception in the case of City of Madras and four municipal towns of Coimbatore, Madurai, Salem and Tiruchirappalli, where the protection extends also to tenancies of non-residential buildings.

In Thanjavur district the Madras City Tenants Protection Act, 1921, has already been extended to the municipal towns of Kumbakonam, Mayuram, Thanjavur and Nagapattinam and to the Tiruvadamarudur village in Kumbakonam taluk. The eviction proceedings referred to by the hon. Members should therefore be in respect of non-residential buildings only which have lost protection under the Act after the passing of the Amendment Act of 1960. If therefore protection has to be afforded in the case of non-residential buildings also in these places legislation will have to be undertaken in this regard. Hhe necessity for such a legislation has been recently examined on a request from some of the M.L.As. from Thanjavur district and it was considered not necessary as it will be inconsistent with the object of the Act, viz., to afford protection to tenancies of residential buildings only.

It may thus be seen that there is no urgent action for Government to take in the matter.

## IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We shall continue the discussion on the Governor's Address. To-day, the hon. Member, Sri M. Kalyanasundaram will speak first.

[24th January 1961

**Sri M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தின் மூலமாக நம்முடைய மந்திரி சபை என்னென்ன செய்திருக்கிறார்கள், இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தின் முன்பு இருக்கிற பிரச்னைகளைப்பற்றி நம்முடைய அமைச்சர்கள் வைத்திருக்கும் கருத்து என்ன என்பதைப் புரிந்துகொள்ள இது ஒரு வாய்ப்பு என்று கருதுகிறேன்.

முதலாவதாக நான் சொல்ல விரும்புவது, சட்டசபையைக் கூட்டுவதில் இவ்வளவு தாமதம் ஏற்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் ராஜ்யத்தில் முக்கியமான நிகழ்ச்சிகள் நடக்கக்கூடிய சமயத்தில் சட்டசபையை உடனடியாகக் கூட்டி இருக்கவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டம் பரிசீலிக்கப்பட்டு முடிவாக எவ்வளவு தொகை ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தவுடனேயே, சட்ட சபையைக் கூட்டியிருக்க வேண்டியது அவசியம். அதோடு நம்முடைய ராஜ்யத்தில் மழை போன்ற இயற்கை கோளாறுகள் ஏற்பட்டதன் விளைவாக பெருத்த நஷ்டம் ஏற்பட்டதினால், சட்டசபையைக் கூட்டியிருக்கவேண்டும். மொத்தமாகப் பார்த்தாலும் வருஷா வருஷம் சட்டசபை கூடிய நாட்கள் குறைந்து வருகின்றன என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1957-ல் 57 தினங்கள் நாம் கூடியிருக்கிறோம். 1958-ல் 63 தினங்கள் கூடியிருக்கிறோம். 1959-ல் 66 தினங்கள் கூடியிருக்கிறோம். 1960-ல் 41 தினங்கள்தான் கூடியிருக்கிறோம். காலண்டர் வருஷ அடிப்படையில்தான் நான் இந்தப் புள்ளி விவரங்களைக் கொடுக்கிறேன். சட்டசபை கூடுவது முக்கியமா இல்லையா என்பதைப் பற்றி அமைச்சர்கள் சிந்திக்கவேண்டும். அதற்குப் பதிலாக அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணம் தீவிரமாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் 20 நாட்கள், 30 நாட்கள் என்று அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள்—நேரடியாகப் பிரச்னைகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அக்கறையோ என்னவோ. அப்படியென்றால் நாங்கள் எதற்காக சட்டசபைக்கு வருகிறோம்? மக்களுடைய பிரச்னைகளைப்பற்றித்தான் நாங்கள் இங்கே பேசுகிறோம். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக மக்களுடைய பிரச்னைகளை அமைச்சர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மக்களை வேண்டுமானால் திருப்திபண்ணுவதற்காக, அரசியல் நோக்கத்தோடு சுற்றுப்பிரயாணங்கள் செய்யலாம். ஆனால் உண்மையாகப் பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக சட்ட சபை கூடுகிறதோ, எவ்வளவு அதிகமாக அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மக்களுடைய பிரச்னைகளை அவர்கள் புரிந்துகொள்ள முடியுமென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.



24th January 1961]

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நவம்பர்-டிசம்பரிலேயே சட்டசபையைக் கூட்ட முடியவில்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் ஓரளவாவது உணர்ந்திருப்பார்கள். ஆகவே சர்க்கார் மீது குறை சொல்லுவதில் பிரயோஜனமில்லை.

**Sri M. KALYANASUNDARAM :** இப்பொழுதும் என்னால் உணர முடியவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாதது ஒரு காரணம். அவரும் அக்டோபர் 26-ம் தேதி வந்துவிட்டார். நவம்பர்-டிசம்பரில் பிளானிங் கமிஷன் கூட்டம் முடிந்த உடனேயே சட்டசபையைக் கூட்டியிருக்கவேண்டும். டிசம்பரில் சட்டசபையைக் கூட்டுவதற்கு எந்தவிதமான இடையூறும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

அங்கத்தினர்கள் மூலமாக மக்களுடைய குறைகளைப் புரிந்து கொள்வதில் அமைச்சர்களுக்குக் கொஞ்சம் தயக்கம் இருக்கிறது. அரசியல் நோக்கம்தான் இதற்குக் காரணம். உதாரணமாக, நம்முடைய மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு—அநேகமாக எல்லா கிராமங்களுக்கும் வருவதாக, இரண்டு தினங்கள் சுற்றுப் பிரயாணத்திற்குத் திட்டமிட்டு எனக்கும் புரோகிராம் வந்தது. நான் அதை வரவேற்று, "நானும் தங்களோடு வரலாமா? தாங்கள் மக்களுடைய பிரச்னைகளைப் புரிந்துகொள்ளத் தயாராயிருந்தால் நானும் வந்து உதவி செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால் அரசியல் பிரசாரத்திற்குப் போவதாயிருந்தால், நான் தங்களுக்கு சங்கடம் விளைவிக்க விரும்பவில்லை. தயவுசெய்து பதில் எழுதுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். என்ன பதில் எழுதினார்கள் தெரியுமா? "நான் இன்ஸ்பெக்ஷன் பங்களாவிலே இருக்கிறேன். அங்கே வந்து என்னை சந்தியுங்கள்" என்று எழுதினார்.

**The Hon. Sri P. KAKKAN :** அபிஷியல் டூரா அல்லது நான்-அபிஷியல் டூரா என்று கேட்டிருந்தார்கள். அபிஷியல் டூர்தான் என்றும், சந்திப்பதாக இருந்தால் சந்தியுங்கள் என்றும் எழுதினேன்.

**Sri M. KALYANASUNDARAM :** இரண்டு பேர் எழுதிய கடிதங்களும் இருக்கின்றன. வேண்டுமானால், அவைகளை வைக்கத் தயாராயிருக்கிறேன். இதிலிருந்து அவருடைய நோக்கம் தெரிகிறது. என்னுடைய தொகுதியிலுள்ள கிராமங்களைக் குறிப்பிட்டுத்தான் எழுதியிருந்தேன். என்னுடைய நோக்கம், அவருடன் சென்று பிரச்னைகளைத் தெரிவிக்க வேண்டுமென்பது. அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ, அந்தக் கிராமங்கள் சென்ற தேர்தலின்போதுதான் என்னுடைய தொகுதியில் சேர்க்கப்பட்டன. அதற்கு முன்பு காங்கிரஸ் காரர்கள் பிரதிநிதிகளாய் இருந்தார்கள். எப்படியிருந்த போதிலும், அமைச்சர் அவர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு, அந்தப் பிற்போக்கான கிராமங்களுக்குச் சென்று சீர்திருத்தம் செய்வதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன்.

[Sri M. Kalyanasundaram] [24th January 1961

இப்பொழுதாவது அங்குள்ள பிரச்னைகளைப் புரிந்து கொண்டிருப்பார்கள். நான் பிரதிநிதி என்பதற்காக இடையூறு செய்யாமல் வேலைகளைத் துரிதமாகச் செய்யவேண்டும். அமைச்சர் அவர்களே நேரில் பார்த்துவிட்டு வந்ததால், பிரச்னைகளை சீக்கிரம் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபை அதிக நாட்கள் கூடுவதற்கு நவம்பர்—டிசம்பரில் முடியாது என்பது பிரச்னையல்ல. சென்ற வருஷம் 41 நாட்கள் தான் சட்டசபை கூடியிருக்கிறது. டிசம்பர் மாதத்தில் அங்கே கூட்டம் இருந்தது, இங்கே காங்கிரஸ் இருந்தது என்று பதில் சொன்னால் அது சரியாக இருக்காது.

அடுத்தபடியாக பிரச்னைகளுக்கு வருவோம். கவர்னர் அவர்கள் உரையில் திட்டங்கள் வெற்றிகரமாக நடந்திருப்பது பற்றியும், இன்னும் வேலைகள் எல்லாம் திறமையாக நடந்திருப்பது பற்றியும், பருவ காலம்கூட அனுகூலமாக இருப்பது பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பருவ நிலை கூட சாதகமாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. அதனால் எந்தப் கோளாறுகளை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது. நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டாலும், தேசம் பூராவும் எடுத்துக்கொண்டாலும், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் திட்டக் குறிக்கோள்படி நடந்திருக்கின்றன என்றுதான் நம் முடைய அமைச்சர்களும், மத்திய சர்க்காரில் உள்ள அமைச்சர் களும் சொல்லுகிறார்கள். இதை நான் மறுக்கவில்லை. புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன. நம்முடைய ராஜ்ய சர்க்காரின் விசேஷப் பெருமை என்னவென்றால், இந்தியாவிலேயே நாங்கள் தான் முதல் வரிசையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதையும் நான் மறுக்கவில்லை. பிளானிங் கமிஷன் நகலில் கூறி யிருக்கும் புள்ளி விவரங்கள் என்ன? நம்முடைய தேசத்தின் மொத்த வருமானம் 42 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஏனென்றால், பிளானிங் கமிஷன் மூலம்தான் புள்ளி விவரங்கள் பெற முடியும். தனிப்பட்ட முறையில் நபர் ஒன்றுக்கு வருமானம் 20 சத விகிதம் அதிகரித்திருப்பதாகக் கூறுகிறார்கள். அதையும் ஒப்புக் கொள்ளலாம். திட்டத்தில் போட்ட குறிக்கோளின்படி உணவு உற்பத்தி, துணி உற்பத்தி எல்லாம் பெருகியிருக்கிறதா என்றால், கட்டாயம் பெருகியிருக்கிறது. விவசாய பொருள்கள் உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும், முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்த காலத்தில் குறிப்பு எண் 95-ஆக இருந்தது. அதாவது 1949-50-ல் 100 என்று வைத்துக்கொண்டோமானால். 1960-61-ல் இது 135-ஆக இருக்குமென்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1958-59-னுடைய உண்மையான உற்பத்தி 132-ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே, 135-ஆக இருக்கும் என்று நம்பலாம். உத்தேசத்தில் தவறு இல்லை. உணவு தானியங்கள், அரிசி, நெல், புஞ்சை தானியங்கள் பருப்பு முதலியவை ஒட்டுமொத்தமாக உற்பத்தி, 1951-52-ல் 52,500,000 டன் ஆக இருந்தது, 1960-61-ல் 75,000,000



24th January 1961] [Sri M. Kalyanasundaram]

டன்னாக தேசம் பூராவும் உற்பத்தியாகும் என்று கணக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைச் சந்தேகிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஓரளவு கூடுதலாக வரலாம், அல்லது குறை யலாம். ஆனால், திட்டப்படி நிறைவேறும் என்பதில் சந்தேகம் இருக்க வேண்டியதில்லை. அதே போல, எண்ணெய் வித்துக்களை எடுத்துக் கொண்டாலும், கரும்பு முதலிய விளை பொருள்களும் உற்பத்தியில் பெருகியிருக்கிறது. (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: என் விலை ஏறியிருக்கிறது!) அது அடுத்த கேள்வி; அடுத்த கேள்விக்கு வருகிறேன். ஆகவே, உணவுப் பொருள்கள் 43 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. எண்ணெய் வித்துக்கள் 41 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. இவைகளை திட்ட கமிஷன் புள்ளி விவரங்களிலிருந்து கொடுக்கிறேன். தேச முன்னேற்றம் என்றால், மக்கள் முன்னேற்றம் இருக்க வேண்டும். தேசம் சுபிட்சமாக இருக்கிறது முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றால், அது நடைமுறையில் மக்கள் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும். ஜனங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது? விலைவாசிகள் எப்படி இருக்கின்றன? உழைக்கும் மக்கள் நிலைமை எப்படியிருக்கிறது? மக்களில் 95 சத விகிதம் உழைக்கும் தொழிலாளிகள். இந்த விலைவாசி உயர்வுக்கேற்றபடி உழைக்கும் மக்களின் சம்பளம், ஊதியம் உயர்ந்திருக்கிறதா? தேசத்தின் சுபிட்சத்தை எப்படிப் புரிந்து கொள்ளுகிறது? சுபிட்சத்தை காணும் அளவுகோல் என்று எதை வைக்கவேண்டும். தேச மொத்த வருமானம், உற்பத்தி பெருக்கு என்பதை மட்டும் வைத்துக்கொண்டு, தேசத்தின், மக்களின் சுபிட்சத்தை கணக்கிடமுடியாது. எந்த அளவுகோல் இருக்கிறது? விலைவாசிதான் அளவுகோல். அதற்கும் அரசாங்கம் கொடுத்திருக்கும், கொடுக்கும் புள்ளி விவரங்கள்தான். 1959-ம் வருஷம் ஜனவரி மாதத்தில், 421 புள்ளி, 1960 ஜனவரியில் 441, அதுவே 1961-ல் நாம் இப்பொழுது 1961 ஜனவரியில் இருக்கிறோம், 476. இந்த மூன்று வருஷத்தில், 421-லிருந்து, 476-ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் அமைச்சரவர் கள் குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். எதை வைத்துக் கொண்டு? 1960 டிசம்பரில் 488-ஆக இருந்தது இந்த மாதம் 476 புள்ளியாகக் குறைந்திருக்கிறது என்ற காரணத்தை வைத்துக் கொண்டு விலைவாசி குறைந்திருக்கிறது என்று, குறைய ஆரம்பித் திருக்கிறது என்று கூறலாம். ஆனாலும், திட்ட காலத்தில் விலை வாசிகள் வெகு அதிகமாக ஏறியிருக்கிறது. இந்த ஏற்றத்திற்குச் சரியாக சம்பளமோ, தனி நபர் தொழிலாளிகளானாலும் சரி, சர்க் கார் ஊழியர்களானாலும் சரி, இந்த விலைவாசி உயர்வுக் கேற்றபடி உயர்ந்திருக்கிறதாகக் காட்ட முடியாது. நாட்டு முன்னேற்றத் தின் பலனை மக்கள் அனுபவிக்கிறார்களா என்றால், கிடையாது. ஒரு சிலர் அனுபவிக்கிறார்கள். உற்பத்தி பெருகியும், உயர்வு ஏற்பட்டும், அதன் பலனை கைவிரலால் எண்ணக் கூடிய ஒரு சிலர் தான் அனுபவிக்கிறார்கள்; ஆனால், மெஜாரிட்டி வயலில் வேலை செய்யும் ஊழியர்களோ, கிராமப் புறங்களில் உழைக்கும் தொழி லாளிகளோ, அலுவலகங்களில் வேலை செய்யும் சர்க்கார் ஊழியர் களோ அனுபவிக்கவில்லை; அவர்கள் வாழ்க்கைத் தரம் தேசத்தில்

[Sri M. Kalyanasundaram] [24th January 1961

சுபிட்சம் அதிகரித்திருக்கும் அளவுக்கு உயரவில்லை. இதை சர்க்கார் புள்ளி விவரங்களே எடுத்துக் காட்டுகிறது. என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் இதைத் தடுக்க? இதுதான் முக்கியப் பிரச்சினை; இதில் விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சோஷலிசம் போன்ற சமுதாயம் என்று சொல்லுகிறார்கள். அது கவர்ச்சிகரமாக இருக்கும் கருத்து. "சோஷலிஸத்திற்கு" வெற்றி மேல் வெற்றி இருக்கிறது; பார்க்கிறோம். நாமும் "சோஷலிஸம்" என்று சொல்லி, மக்களின் வோட்டுகளைப் பெற, கவனத்தைக் கவரக்கூடிய கருத்துக்களை மட்டும் சொல்லிக் கொண்டு போனால் சரியாகாது. கருத்துப் படி நடக்க வேண்டும் என்று அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். அதில் இடையூறு எங்கே இருக்கிறது: மத்திய சர்க்காரிலா, அல்லது ராஜ்ய சர்க்காரிலா? அப்படி இருக்கும் இடையூறுகளைத் தவிர்க்க பரிகாரம் தேடவேண்டும். உற்பத்தி, சுபிட்சம் இவற்றின் பலன் ஒரு சிலருக்குக் கிடைத்திருக்கிறது, மக்களுக்குக் கிடைத்தால்தான் அது தேசத்தின் சுபிட்சம் ஆகும். அமைச்சரவர்கள் அதற்குப் பரிகாரம் காணவேண்டும். நம் ராஜ்யத்தில் இடையூறு, அதற்கு என்ன பரிகாரம் என்று கவர்னர் உரையில் என்ன தேடினாலும், ஒரு ஆதாரத்தையும் காணோம் என்று வருந்துகிறேன். ஆனால், ஒரு ராஜ்யத்தில் நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது; தேசம் பூராவும் எடுக்கவேண்டும். ஒரு ராஜ்யத்தில் மட்டும் சுபிட்சம் முந்திக்கொண்டு போகமுடியாது. தேசம் பூராவும் முன்னேறி எல்லா மக்களும் பயனடைய வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவன் நான்.

மத்திய சர்க்கார் வினியோக முறையில் மக்களுக்குக் கிடைக்கும் முறையில்லாமல், கொள்கை சோஷலிஸ கருத்துக்கள் என்று வோட்டுப் பிடிக்கும் கருத்துக்களாக இருக்குமே தவிர, மக்களுக்கும் பயன் படும் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்ல முடியாது.

அதோடு இதை விட்டு விட்டு, அடுத்ததாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் பார்ப்போம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் ராஜ்ய சர்க்கார் சிபாரிசு கிட்டத்தட்ட 398 கோடி ரூபாய் அளவில் பல துறைகளில் அபிவிருத்தி வேலைகள் எடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், அதில் ரூ. 291 கோடிதான் கிடைத்திருக்கிறது. அதையாவது எப்படிப் பயன்படுத்துவது, இந்தத் தொகையை வைத்துக்கொண்டு எவ்வளவு அதிகப்படியான திட்டங்கள் போடுவது என்பதைப் பற்றியெல்லாம் அமைச்சரவர்கள் ஆலோசனைக் குழுவில் ஒன்றும் விவாதிக்காமல், சட்டசபையிலும் வைத்து விவாதிக்கும் அளவுக்கு இல்லாமல் இருக்கிறது. கவர்னர் உரைமீது விவரமாகப் பேச சந்தர்ப்பம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில், இதற்கும் இரண்டு தினங்கள் ஒதுக்கி, பின்னால் தனியாக சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, சில முக்கியப்



24th January 1961] [Sri M. Kalyanasundaram]

பிரச்சினைகள்மீது அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ரூ. 291 கோடி என்று நம் திட்டத்தில் ஒதுக்கி இருப்பதால், குறைந்திருப்பதின் காரணமாக, முதல் பலி பாசனத் திட்டங்கள். நடுத்தரத் திட்டங்களுக்கு அதிகக் கவனம் செலுத்தவேண்டும், சிறிய பாசனத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று ஆலோசனைக் குழுவில் அமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டார்கள், கிட்டத்தட்ட ரூ. 51 கோடி ரூபாய் வரை செலவு செய்ய யோசனைகள் நாம் கொடுத்திருந்தோம், நம் தேவைக்குத் தகுந்தாற்போல. இப்பொழுது பார்க்கும் போது, ரூ. 29 கோடியாக பாசன வசதிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படியானால், நடுத்தர பாசனத்திட்டங்களின் கீழ் 22 திட்டங்கள் போட்டிருந்தோம்; பல ஜில்லாக்களிலும், மக்கள் எதிர் பார்த்திருந்தார்கள். இப்பொழுது அவைகளில் ஒரு திட்டம்கூட எடுத்துக் கொள்ளப்படாது என்று தோன்றுகிறது. இது அமைச்சரவர்கள் டிசம்பர் மாதம் கொடுத்திருக்கும் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. வார்த்தைக்கு நடுத்தரத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப் படலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. கால்வாய் அபிவிருத்தித் திட்டங்களை எடுத்துக் கொண்டு, பல சிற்றாறுகளுக்கும் நீர் தேக்கங்கள் கட்டி, பின்தங்கிய பிரதேசங்களுக்காகப் போட்ட 22 திட்டங்களில் ஒன்றுகூட சேர்த்துக் கொள்ள வாய்ப்பில்லை என்று பார்க்கும் போது, பின்தங்கியிருக்கும் பகுதிகளெல்லாம், முன்போலவே தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இங்கே கொடுத்திருக்கும் அறிக்கையில் 45-வது பக்கத்தில் திட்டங்கள்பற்றி இருக்கிறது. இந்தத் திட்டங்களுக்கு ரூபாய் 28 கோடியளவில் தொகை வேண்டும் என்றோம். அதில் ஒன்றுகூட சேர்க்கப்படாமல் இருப்பது, எல்லா ஜில்லாக்களிலும் உள்ள மக்கள் ஏமாற்றமடையக்கூடிய நிலையில் இருக்கிறது. வளர்ச்சியடைந்த ஜில்லா முன்னேறிக்கொண்டே இருக்கிறது. ஆனால், குடிதண்ணீர்கூட இல்லாத ஜில்லா அதே நிலையில் இருக்கிறது. அப்படி அவை நீடித்துக்கொண்டே இருக்கும் நிலையை மாற்றியமைக்க யோசனைகள் என்ன என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் சொல்லவேண்டும். என் யோசனை, இருக்கக்கூடிய தொகையை ஓரளவு நடுத்தரத் திட்டங்களுக்காக ஒதுக்க வேண்டும். அதே போன்று, சிறிய பாசனத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், குளம், மராமத்து இவற்றிற்காவது நிதி ஒதுக்க வேண்டும். இதுவே என் யோசனை. இதைப்பற்றி கவர்னர் பிரசங்கத்தில் பார்த்தால், "நடுத்தரப் பாசனத் திட்டங்கள் சிலவற்றையும் நிறைவேற்ற உத்தேசித்திருக்கிறோம்" என்று கண்டிருக்கிறது. ஆனால், நிதி திரட்டப் போகிறார்களா, எங்கிருந்து, எப்பொழுது, என்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியை எடுத்துக் கொள்வோம். நம் தமிழ்நாடு பூராவும் கடந்த பத்து வருஷ காலமாக ஆவலாக எதிர்பார்த்திருப்பது சேலத்தில் நிறுவுவதாக வாக்களிக்கப்பட்டிருக்கும் உருக்கு ஆலைத் திட்டம். அதைப்பற்றி பரிட்சை செய்வதற்காக 75 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதற்காக ஐ.ஏ.எஸ். உத்தியோகஸ்தர் ஒருவர் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இரண்டு விஷயங்களிலே கொஞ்சம் முன்னேற்றம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அது நடைமுறைக்கு வரக்கூடிய அறிகுறி என்ன இருக்கிறது என்றால் 1952-ம் வருஷத்திலே இருந்த நிலையிலேதான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது வருத்தப்படாமல் இருக்க முடியாது. நெய்வேலியில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பழுப்பு நிலக்கரியைப் பொருத்திருக்கிறது சேலத்தின் இரும்பைப் பயன்படுத்துவது. உருக்கு ஆலை சேலத்தில் இருக்குமா நெய்வேலியில் இருக்குமா? என்பது அல்ல பிரச்னை. தமிழகத்தில் எங்கு வைத்தாலும் அதைப்பற்றி ஆட்சேபிக்க முடியாது. தொழிலின் தன்மையைப் பொருத்து எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அங்கு வைக்கலாம். அதைப்பற்றி மாறுபட்ட கருத்து இல்லை. இப்படிப்பட்ட தொழிற்சாலை வருவது என்பதிலே எல்லோருடைய கருத்தும் ஒன்றாக இருக்கவேண்டும். சேலத்தில் வந்தாலும் சரி, நெய்வேலிக்கு அருகாமையில் வந்தாலும் சரி, எப்படியும் தொழில் வரவேண்டும் என்பதுதான் முக்கியம். ஆனால், நெய்வேலிக்கு அருகாமையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வருமா, என்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஒளிவு மறைவு இல்லாமல் பதில் சொல்லவேண்டும். நெய்வேலிக்கு அருகாமையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வருவதற்கான ஏற்பாடுகள் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும். ஏற்பாடுகளில் இருக்கும் சந்தேகத்திற்கான இடங்கள் என்ன என்பதை நான் சொல்லிவிடுகிறேன். அமைச்சர் அவர்கள் இப்பொழுது பதில் சொல்லாவிட்டாலும் மத்திய அரசாங்கத்தைக் கேட்டாவது பதில் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முதலிலே லிக்னைட்டை எடுத்துக் கட்டி செய்வது, அதாவது பிரிக்கெட்டிங் என்பது முக்கியமானது. லிக்னைட்டைத் தோண்டி எடுத்து அப்படியே வைத்துக்கொண்டிருந்தால் சீக்கிரம் எரிந்து விடும். கட்டி செய்துதான் தொழில்களுக்கு பயன்படுத்த முடியும். நிலக்கரி விஷயத்தில் பற்றாக்குறையாக இருக்கும் ராஜ்யம் நம்முடைய ராஜ்யம். அப்படியிருக்கும்போது சேலம் இரும்பை உருக்குவதற்கு மட்டுமல்லாமல், மற்ற தொழில்களுக்கும் பயன்படுத்தவும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கும் சிறு உலைகளை ஏற்படுத்த பழுப்பு நிலக்கரியை 'பிரிக்கெட்' செய்யவேண்டுமென்பது முக்கியமானது. அந்த பிரிக்கெட் செய்யக்கூடிய மெஷினரியை எங்கே வாங்குவது என்றாவது ஒப்பந்தம் ஆகியிருக்கிறதா? மெஷினரி எங்கே இருக்கிறது, எந்த தேசத்தோடு அதுபற்றி பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது, எப்பொழுது கிடைக்கும் என்பது கூட இன்னும் முடிவு செய்யப்படவில்லை. 35 லட்சம் டன், 45 லட்சம் டன் எடுப்பது என்று முடிவு செய்துவிட்டதாகச் சொல்லி அழகாக காகிதத்தில் அச்சடித்துக் காட்டுவதில் பயன் இல்லை. 45 லட்சம் டன் இந்த வருஷத்தில் வருமா, அடுத்த வருஷத்திலாவது வருமா, அதற்கு அடுத்த வருஷத்திலாவது வருமா, எப்பொழுது பயன்படுத்த





முடியும் என்று பார்த்தால் அதற்கு பிரிக்கெட்டிங் மெஷினரி கூட வாங்கப்படவில்லை. அதற்கான டெண்டர் கேட்டு கூட இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்ற விவரத்தை மத்திய அமைச்சர் பார்லிமெண்டில் கூறியிருக்கிறார். அப்படியிருக்கும்போது 35 லட்சம் டன்னிலிருந்து 45 லட்சம் டன் என்று உயர்த்திக்கொண்டு விடுவது என்றால், அது நம்மை நாமே திருப்தி செய்து கொள்வதாக இருக்கிறதே தவிர, நடைமுறையில் வரக்கூடிய அறிகுறியைக் காணோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(Sri A. Vedarathnam in the Chair.)

ஆலோசனைக் குழுவில், ஒரு கோடி டன் வருஷமொன்றுக்கு எடுப்பதற்கான திட்டம் வேண்டுமென்று நாம் தெரிவித்திருந்தோம். ஒரு கோடி டன் வருஷமொன்றுக்கு எடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நம்முடைய ராஜ்யம் எரிபொருள் பற்றாக்குறையுள்ள ஒரு ராஜ்யம். தொழில்களுக்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில்லை, அதனால் தொழில் பாதிக்கப்படுகிறது என்ற குறை தொழில் அதிபர்களிடத்தில் இருந்து வருகிறது. இதைப் பார்க்கும்போது பழுப்பு நிலக்கரியைத் துரிதமாக எடுப்பதற்கும், இதை நம்முடைய ராஜ்யத்தில் பயன்படுத்துவதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது நெய்வேலித் திட்டத்தில் மின்சார நிலையம் ஒன்றுக்குத்தான் மெஷினரி வந்து வேலை நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறதே தவிர, பிரிக்கெட்டிங் ப்ளாண்ட் சம்பந்தமாக இன்னும் எந்த வேலையும் தொடங்கப்படவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: பர்ட்டிலைஸர் பாக்டரி. . .

SRI M. KALYANASUNDARAM: இவை இரண்டிலேதான் வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. திட்டப்படி வேலை நடக்கும் என்ற நம்பிக்கை இருக்கக்கூடியது, இவை. மற்றவை எதுவும், சேலம் உருக்கு ஆலை, பிரிக்கெட்டிங் ப்ளாண்ட் இவைகளைப் பொறுத்தவரையில் திட்டமிட்ட காலத்தில் வந்து சேரும்; தொழில்கள் தொடங்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் ஏற்படவில்லை. அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் சொல்லட்டும். அதைச் சந்தோஷத்தோடு வரவேற்கத் தயாராயிருக்கிறேன்.

இப்பொழுது எதையுமே அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத்தைப்பற்றிக் குறிப்பிட்டால், உடனே, அரசியல் லாபத்திற்காகப் பேசுகிறார்கள் என்று ஒரு கனம் அங்கத்தினர் பேசுகிறார். தூத்துக்குடி துறைமுகம் வந்தால் என்ன, அதில் என்ன அரசியல் லாபம் வந்துவிடப் போகிறது? மக்களுக்கு லாபமா என்று பார்க்கவேண்டுமே அல்லாது, இந்தக் கட்சிக்கு லாபமா அந்தக் கட்சிக்கு லாபமா என்று பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. எதிர்க் கட்சிகளுடைய கடமை, சர்க்கார் செய்வதில் குறைகள் இருந்தால் [illegible]

எடுத்துக்காட்டுவதும், செய்யத் தவறியதை எடுத்துக் காட்டுவதும் ஆகும். தூத்துக்குடி துறைமுகம் என்ன ஆயிற்று என்று கேட்ட வுடனே அரசியல் கட்சிகள் தங்களுடைய சுயநலத்தைப் பார்க்கிறார்கள் என்ற குறை சொல்லப்படுகிறது. நாங்களும் காங்கிரஸ் கட்சிக்காரர்களைப் பார்த்து இதே மாதிரி சொல்லக்கூடும். 'அரசியல் நோக்கத்தோடுதான் ஏதோ திட்டங்களைப் போட்டு நிறைவேற்றுகிறதாக மக்களிடம் சொல்கிறீர்கள்' என்று. ஆகவே தூத்துக்குடி துறைமுகத்தின் நிலைமை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாகச் செய்யவேண்டும் என்ற அளவுக்கு உறுதிமொழி கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். திட்டம் என்ன, மத்திய அரசாங்கம் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்? சேது சமுத்திரத் திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டும், அதன் முழு விவரங்கள் என்ன என்று விசாரணை செய்த ஸர் ஏ. ராமசாமி முதலியார் கமிட்டி என்ன கூறியிருக்கிறது? அவர்கள், சேது சமுத்திரத் திட்டம் இல்லாமல் தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது லாபகரமாக இருக்காது என்று கூறியிருக்கிறார்கள். தூத்துக்குடி துறைமுகத்தை மட்டும் ஆழ்கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்துவிட்டால் முழுப் பலனும் இருக்காது. சேது சமுத்திரம் கால்வாய் வழியாக பெரிய கப்பல்கள் போவதற்கு முட்டுக்கட்டையாக திட்டு இருப்பதால் அந்தத் திட்டு இல்லாமல் கால்வாய் வெட்டினால், அதன் மூலம் சென்னை, விசாகப்பட்டணம், கல்கத்தா போன்ற துறைமுகங்களிலிருந்து வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றுவதற்குப் பதிலாக நேரடியாகப் போவதற்கு மார்க்கம் கிடைக்கும். சேதுசமுத்திரத் திட்டத்தோடு இணைத்து தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால்தான் முழுப் பலன் உண்டு என்று தெளிவாக எழுதியிருக்கும்போது, சேது சமுத்திரத் திட்டம் என்ன ஆயிற்று, அது எப்பொழுது ஏற்படும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ராஜ்யத்தில் சமீபத்தில் புதிய தொழில்கள் தோன்றியிருக்கக் கூடியதைப் பார்க்கும்போது, பொதுத் துறையில் தொழில் தோன்றுவதே ரொம்ப துர்லபமாக இருக்கிறது. எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக்கிறது என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அரசாங்கம் தொழில் நடத்துமானால் அது தேசத்திற்கு நன்மை. தனிப்பட்டவர்கள் கையிலே இருக்குமானால் அவ்வளவு பலன் இருக்காது. தற்காலிகமாக வேண்டுமானால் தனியார் துறையில் தொழில்கள் ஏற்படலாம். அதை ஆட்சேபிக்கவில்லை. எப்படியாவது தொழில்கள் வருவது நல்லதுதான். இருந்தாலும், இரண்டில் எது சிறந்தது என்றால், தனிப்பட்டவர்கள் கையில் விடுவதனால் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன, சர்க்கார் கையில் இருந்தால் சில கஷ்டங்கள்



இருக்கலாம். சில குறைபாடுகளை எடுத்துக்காட்டலாம். சர்க்கார் நடத்தும் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டைப்பற்றி கிண்டலும் கேலியுமாக சில பத்திரிகைகளில் எழுதப்பட்டிருக்கிறது. நான் ஒரு விஷயத்தைச் சவால் விட்டுக் கேட்கிறேன். சர்க்கார் பஸ்ஸில் உட்கார இருக்கும் வசதி போல் வேறு எந்தத் தனிப்பட்டவர்கள் நடத்தும் ட்ரான்ஸ்போர்ட் பஸ்ஸிலாவது இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். எவ்வளவுதான் தேசபக்தராக, காங்கிரஸ்காரராக இருப்பவராக இருந்தாலும் அவர் நடத்தும் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டிலாவது ஸீட் வசதி நன்றாக இருக்கிறதா பாருங்கள். பதினைந்து அங்குல அகலமுள்ள ஸீட்டை குறுக்கே வெட்டி உட்காருவதற்கு 9 அங்குலமாக வைத்திருக்கிறார்கள். அம்மாதிரி ஸீட்தான் தனிப்பட்ட முதலாளிகள் பஸ்களில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் நடத்தும் பஸ்களில் உள்ள ஸீட் வசதி தனிப்பட்டவர்களுடையதைவிட சிறப்பாக இருக்கிறது. மற்ற குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், அரசாங்கம் நடத்துவதில் அநேக நன்மைகள் இருக்கின்றன. எண்ணெய் வாங்குவதில் சில தவறுகள் செய்கிறார்கள். தெரிந்தே செய்கிறார்கள். உதாரணமாக, சோவியத் யூனியனிலிருந்து நமக்கு எண்ணெய் தருவதாகத் தெரிவித்தார்கள்.

THE HON. SRI K. KAMARAJ: சோவியத் யூனியனைக் குறிப்பிட ஆரம்பித்து விட்டீர்களா?

SRI M. KALYANASUNDARAM: அதனால் என்ன தப்பு? யார் நமக்கு மலிவாகக் கொடுத்தாலும் வாங்கவேண்டியதுதானே. சோவியத் யூனியன் மலிவாகக் கொடுப்பதற்கு முன்வந்தார்கள். அவர்களும் நம் அரசாங்கத்தின் மூலமாகத்தான் கொடுக்கமுடியும். முதலில் ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டது. அமெரிக்கக் கம்பெனிகளும் பிரிட்டீஷ் கம்பெனிகளும் ஒரு நயா பைசா குறைத்து டெண்டர் போட்டார்கள். ஆகவே அவர்களிடமிருந்து எண்ணெய் வாங்குகிறார்கள். லாபம் இந்திய சர்க்காருக்குத்தான் போகிறது, தனிப்பட்டவர்களுக்குப் போவதில்லை என்றாலும், இதிலே சிந்தித்துப் பார்த்து நாம் முடிவு எடுக்க வேண்டும். ஒரு நயா பைசா குறைவாக டெண்டர் கொடுத்தார்கள் என்றால் என்ன அர்த்தம்? டிபார்ட்மெண்டை அங்க லட்சணத்தில் வைத்திருக்கிறோம் என்று இதிலிருந்து புரிகிறது. என்ன ரேட்டுக்கு டெண்டர் போடப்பட்டது என்பதை தெரிந்துகொண்டு ஒரு நயா பைசா குறைத்துப் போட்டிருக்கிறார்கள். அதனால் பர்மா ஷெல்லுக்கும், எஸ்.வி.ஓ.ஸி-க்கும் ஒப்பந்தம் பண்ணிவிடுகிறார்கள். நமக்குத் தேவையான எண்ணெயை மலிவான விலைக்கு வாங்குவதாக இருந்தாலும். . . .

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் சொல்வது அவ்வளவும் தவறு. இது சம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கிறேன்.

[24th January 1961

**SRI M. KALYANASUNDARAM:** நான் தவறாக இருந்தால் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். இதுபற்றி தனியாகக் கேட்பதற்கு தனிக் கேள்வி ஒன்றும் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது நான் சொல்ல விரும்பிய விஷயம் தனி நபர்களுடைய கையில் சர்க்கார் தொழில் வளர்ச்சியை விட்டுவிடக் கூடாது என்பதுதான். சர்க்காரே முக்கியமான எல்லாத் தொழில்களையும் எடுத்துப் பொதுத் துறையில் நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இருக்கிற தொழிலைத் தனியார் கையில் இருந்து எடுத்துவிட வேண்டும் என்று சொல்லவில்லை. இனி ஆரம்பிக்கப் போகிற தொழில்களை தனியார் துறையில் விட்டுவிடவேண்டாம் என்று வலியுறுத்திச் சொல்லவிரும்புகிறேன். "என் கையில் ஒரு கோடி ரூபாய் இருந்தால் பத்து தனிப்பட்ட முதலாளிகளுக்கு பத்து லட்சம், பத்து லட்சம் என்று கொடுத்து பத்துத் தொழில்களை இந்த நாட்டில் ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்வேன்" என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆனால் அந்த முதலாளிகள் என்ன எல்லாப் பணத்தையும் தங்கள் கையில் இருந்து போட்டா தொழில் நடத்துகிறார்கள்? அன்னிய நாட்டில் இருந்து கடன், சர்க்காரில் இருந்து கடன், ஷெயர் மூலமாக பொது மக்களிடம் இருந்து வேறு பணம் என்று ஆளுக்காக தாங்கள் நின்றுகொண்டு பலவகையிலும் பணம் திரட்டித்தான் செய்கிறார்கள். இப்படித் தொழில் நடத்துகின்ற முறை யாரும் அறியாதது அல்ல. சர்க்காரே இப்படிப் பலவகையில் கடன் தொகைகளை எழுப்பி என் தங்களுடைய சொந்தப் பார்வையில் பொதுத்துறையில் தொழில்களை ஆரம்பிக்க முன்வரக்கூடாது? உண்மையில் சோஷலிஸ்டு சர்க்கார் என்பது மக்களிடம் இருந்து வாங்குகிற வரிப் பணத்தைக்கொண்டு நடத்தப்படுவதாக இருக்கக் கூடாது. சர்க்கார் பொதுத் துறையில் நடத்துகின்ற தொழில்களில் இருந்து வருகின்ற வருமானத்தைக்கொண்டே நடைபெறுவதாக இருக்கவேண்டும். தனியார் கைக்கு இந்தத் தொழில்களை எல்லாம் விட்டுவிட்டால் நமக்குப் பயன் இல்லை. சொல்லலாம், நாம் இவர்களுக்கு வரி போட்டுவிடலாமே என்று. முதலாளிகளுக்கு வரி போடுவது என்பது முடியாது. சர்க்காருக்கு ஒரு கணக்கு, தங்களுக்கு ஒரு கணக்கு என்று எல்லா முதலாளிகளுக்கும் இரண்டு கணக்கு நன்றாக வைத்துக்கொள்ளத் தெரியும். இந்த வகையில் சர்க்காரை அவர்கள் ஏமாற்றி விடுவார்கள் என்பது சர்க்கார், அமைச்சர்கள் அறியாதது அல்ல. ஆகவே அவர்களைத் தொழில் நடத்த அனுமதித்து, மக்களிடமிருந்து கொள்ளை லாபம் சம்பாதிக்கவும் அனுமதித்து, கடைசியில் அவர்கள் குறைந்தபட்சமாக சர்க்காருக்குக் கட்டக்கூடிய வரியையும் ஏமாற்றிவிடுவதற்கும் நாம் அனுமதி அளிக்கின்றவாறு ஆகிவிடும். ஆகவே தனியார் துறையை வளரவிடுவது தேசத்தின் நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும் உகந்தது அல்ல. நாமோ பணம் இல்லை, பணம் இல்லை என்று ஏழை எளிய மக்களின்மீது



24th January 1961] [Sri M. Kalyanasundaram]

போடுகிற வரியைத்தான் அதிகமாக்கிக்கொண்டே போகவேண்டியிருக்கும். நாடு வேகமாக முன்னேற வேண்டுமென்றால் பொதுத் துறை வளரவேண்டும்.

ஆனால் இன்றையதினம் நமது அரசாங்கம் நேரிடையாக வைக்க உத்தேசித்திருக்கும் சர்ஜிகல் ப்ளாண்ட் போன்றது தவிர நம் ராஜ்ய சர்க்கார் பொறுப்பில் வேறு திட்டம் ஒன்றும் இல்லையென்று சொல்லலாம். ஸ்டீல் ரோலிங் ப்ளாண்ட் வைப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். இப்படி பல தொழில்கள் பொதுத் துறையில்தான் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று நான் சொல்வேன். சில குறைகள் ஏற்பட்டால் அவற்றை நிவர்த்திக்க வேண்டுமானால் யோசனை சொல்வேனே தவிர, "சர்க்கார் தொழில் துறையில் தலையிட்டால் இப்படித்தான் குறைகள் ஏற்படும், ஆகவே தனியார் துறைக்கே இத்தொழில்களை விட்டுவிட்டால் சிறந்ததாய் இருக்கும், விசேஷமாக இருக்கும், தனி நபர் சுதந்திரத்தில் கை வைக்காதீர்கள்" என்று சொல்கிறவர்களில் ஒருவன் ஆக மாட்டேன். சர்க்காரே தொழில்களை நடத்த வேண்டும். அதில் குறைகள் இருந்தால் அந்தக் குறைகளை நீக்குவது மக்கள் பொறுப்பு.

குறிப்பாக ஹெவி எலெக்ட்ரிகல் ப்ளான்ட் தமிழகத்தில் ஏற்படுத்த இருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு என்னுடைய திருச்சி மாவட்டத்தில் ஏற்படுத்த இருப்பது மிகவும் மகிழ்ச்சி. இது இயற்கையாக இருக்க வேண்டியதுதான். அதுவும் கடந்த மூன்று நான்கு வருஷங்களாக சேலம், கோவை போன்ற மாவட்டங்கள் எத்தனை வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறதோ அவ்வளவு வளர்ச்சி திருச்சி மாவட்டம் அடையவில்லை. ஆகவே அதை திருச்சி ஜில்லாவில் வைக்க இருப்பது நல்லது. அது என்னுடைய தொகுதியாயிற்றே என்று அமைச்சர்கள் யாரும் பயப்படவேண்டாம்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்படிக் கொண்டு வருவதைப் பார்த்து பயந்து நீங்கள் தொகுதி மாற்றப் போகிறீர்களா?

**SRI M. KALYANASUNDARAM:** நான் ஒன்றும் தொகுதி மாற்றப் போவதில்லை. உங்களுடன் அவ்வகையில் ஒத்துழைக்கத் தயார் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக மூன்றாவது திட்டத்தில் இன்னும் இருக்கக்கூடிய பல பலவீனமான அம்சங்கள் பற்றிக் குறிப்பிடவேண்டுமானால் நேரம் இல்லை. பின் ஒரு சமயத்தில் சந்தர்ப்பம் கிடைக்கிறபோது விரிவாகப் பேசுகிறேன்.

இந்த ஆண்டு தேர்தலுக்கு முந்திய ஆண்டு. ஆகவே அமைச்சர்கள் எதிர்க் கட்சிகளை நடத்துவதிலும், தாங்கள் நடந்துகொள்வதிலும் ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். நேற்று பேசிய திரு. சசிவர்ண தேவர் அவர்கள்

[Sri M. Kalyanasundaram] [24th January 1961

ஆறு மாதத்திற்கு முன்னால் தேர்தலுக்கு முன் அமைச்சர்கள் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதுகூட அவ்வளவு முக்கியமல்ல. ராஜிநாமா செய்துவிட்டு பின்னாலே இருந்துகொண்டு பலவிதமான காரியங்களைச் செய்வதைக் காட்டிலும் அதிகாரத்தில் இருந்துகொண்டே செய்தார்கள் என்றால் மக்களிடத்திலாவது எங்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே அவர்கள் ராஜிநாமாச் செய்யவேண்டுமா, வேண்டாமா என்பது அல்ல பிரச்சனை. தேர்தல் காலத்தில் ஜனநாயக உரிமைகள் நியாயமாகவும் நேர்மையாகவும் நடைபெறும்படியாகச் செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதுவும் கூட்டங்கள் நடத்துவது என்றால் பலவகையில் போலீசாரின் குறுக்கீடுகள் இருக்கின்றன. இந்த இடத்தில்தான் நடக்கவேண்டும், இன்ன வேளையில்தான் நடக்கவேண்டும், இரவு 6 மணி முதல் என்றால், அது 9 மணி முதல்தான் நடக்கவேண்டும், ரெக்கார்டு போடக்கூடாது, மைக் போடக்கூடாது என்று இப்படிப் பல தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன. அதுவும் தொழிலாளிகள் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில் போலீஸ்காரர்கள் கண் மூடித்தனமாக நடந்துகொள்கிறார்கள். மரியாதை வாரக் கொண்டாடுகிறார்களே தவிர—பொதுமக்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும் என்று நினைப்பதே இல்லை. மக்களுக்கு போலீஸ் ஸ்டேஷனில் மதிப்பு இல்லை. நிலப் பிரபுக்கள், முதலாளிகள் கை ஓங்கித்தான் இருக்கிறது. நியாயமான விஷயங்களில்கூட அவர்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருப்பது இல்லை. தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகள் அனாவசியமாகப் போடப்படுகிறது. வழக்கு போடப்பட்டும் அதற்காக பயப்படுகிறவன் அல்ல நான். எனக்கு கோர்ட்டுகளில் அறவே நம்பிக்கை போய்விடவில்லை. செக்ஷன் 107 படி ஒரு வருஷத்திற்கு நன்னடத்தை ஜாமீன் எழுதி வாங்குகிறார்கள். வழக்கு முடிய இரண்டு வருஷம் ஆகிறது. இதற்குள் 26, 30 தாவாக்களுக்கு மேல் இழுத்தடித்து அவர்களது மனதையே ஒடித்துவிடுகிறார்கள். இந்த மாதிரியாகப் போடப்படுகிற பொய் வழக்குகள் எல்லாம் தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கு ஒரு சாதனமாக ஆளும் கட்சியினர் உபயோகிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் பெரு மழை வெள்ளம் காரணமாக மக்கள் அவதிப்பட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று எல்லாக் கட்சிகளும் சேர்ந்து—காங்கிரஸ் உள்ளிட்டு—சென்னை நகர மேயருடைய தலைமையில் ஒரு நிவாரணக் கமிட்டி அமைக்கப்பட்டது. நானும் அந்தக் கமிட்டிக்குச் சென்றிருந்தேன். ஆனால் சர்க்கார் அந்தக் கமிட்டி மூலமாக நிவாரண வேலையை அளிப்பதாவது என்று கலெக்டர் மூலமாகவும், இன்னும் தனிப்பட்ட வகையிலும் உதவி வேலைகளைச் செய்தார்களே தவிர ஒத்துழைக்கவில்லை. தங்கள் கட்சியின் செல்வாக்கை வளர்த்துக் கொள்வது எப்படி என்றுதான் பார்த்தார்கள். இதில் கட்சிக் கண்ணோட்டம் இருக்கக்கூடாது. மேயர் திராவிட முன்னேற்றக்



24th January 1961] [Sri M. Kalyanasundaram]

கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம். மற்ற எதிர்க்கட்சிகளும் இருக்கின்றன. கோயம்புத்தூரில் கம்யூனிஸ்டு சார்மென் இருக்கலாம். திராவிட கட்சியும் அங்கே ஒத்துழைக்கிறது. திருப்பூரில் சுயேச்சைக்காரர் செயர்மென்கூட இருக்கலாம். நகர சபை யாருடைய கையில் இருக்கிறது என்பது அல்ல பிரச்சனை. மக்களுடைய நன்மையைப் பொறுத்தவரையில் கட்சிப் பாகுபாடின்றி நடக்க முன்வரவேண்டும். அதுவும் தேர்தல் சமயத்தில் ஒழுங்கும், நியாயமும், கண்ணியமும் நிலவவேண்டும்.

அதோடுகூட இன்னொரு கோரிக்கை. என் கட்சி சம்பந்தப்பட்டவரையில் ஒரு கோரிக்கை உண்டு. நேற்றைய தினம் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட கேள்விக்குச் சொன்ன பதிலைப் பார்க்க வேண்டும். கிட்டதட்ட 13 பேர், கம்யூனிஸ்டுக் கட்சியைச சேர்ந்தவர்கள் அரசியல் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். "இவர்கள் கொலைக் குற்றம் செய்தவர்கள் அல்லவா" என்றார்கள். அவர்கள் மீது குற்றச்சாட்டு இருப்பது உண்மை. கோர்ட் தண்டித்தது. இதற்காகத் தலை குனிய வேண்டிய அவசியம் இல்லை. 1948-ல் எத்தனை கம்யூனிஸ்டுகள் போலீஸ்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்? அதற்காக நாம் என்ன செய்து விட்டோம்?

Mr. SPEAKER: The hon. Member has already taken about 40 minutes. He should finish his speech soon.

Sri M. KALYANASUNDARAM: Yes, Sir. I shall finish my speech in two or three minutes.

கடந்த 7 ஆண்டுகாலமாக இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இதுதான் முதல் தடவையாக பேசுவது. அப்போது நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியபோது, "தங்களுடைய தோழர்களுக்காக வாதாடியதைப் பாராட்டுகிறேன். இதைப் பற்றி ஆலோசிப்போம்" என்று சொன்னார்கள். இன்னும் ஆலோசித்துக்கொண்டே இருக்கிறார்கள். 12 வருஷங்களாக சிறைவாசத்தைக் கழித்துவிட்டார்கள். சாதாரண கைதிகளையும் அவர்கள் அதற்குள் விடுதலை செய்திருக்கலாம். அவர்களை விடுதலை செய்யவேண்டியது அவசியம். இன்னும் வைத்திருந்தால் அரசியல் குரோதத்திற்காக வைத்திருப்பதாகுமே தவிர வேறு ஒன்றும் இருக்கமுடியாது. கட்சி அரசியல்தான் நடக்கிறது. அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்தால் சட்டமும் அமைதியும் பாதுகாப்பதாகப் போய்விடுகிறது. எதிர்க்கட்சியினர் தற்காப்பிற்காக என்று ஏதோ செய்தால் கொலை என்று சொல்லிவிடுகிறார்கள். வேண்டுமென்று திட்டம்போட்டு யாரும் கொலை செய்துவிடவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி பலாத்காரத்தை நம்பவில்லை. மக்களைத்தான் நம்புகிறது. பார்லிமென்ட்டரி முறையில் அரசியல் சட்டத்தை பயன்படுத்தி இந்த நாட்டில் சோஷியலிசத்தை அமைக்கவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி திட்டவட்டமாக சொல்லியிருக்கிறது. அதுமாதிரித்தான் நடந்து கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி என்ன பலாத்காரத்தை

செய்துவிட்டது? முன்பு எப்போதோ நடந்ததை வைத்துக் கொண்டு இன்னும் ஒரு கட்சியின்மீது குரோதமாக நடப்பது சரியல்ல. உங்களுக்கு எதிர்க்கட்சியின்மீது மரியாதை இருக்கிறது என்றால் சிறையில் உள்ள அவர்களை இப்போதாவது, இந்தச் சந்தர்ப்பத்தையொட்டியாவது விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் பிரசங்கத்தின்மீது நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். கவர்னர் அவர்களுடைய பேருரையிலே நம்முடைய ராஜ்யத்தின் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடிய பல விஷயங்களையும் குறிப்பிட்டு இருப்பதுபற்றி நான் பாராட்டுகிறேன். விவசாயத் துறையில் மிகவும் முன்னேற்றகரமான பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருப்பதைப்பற்றி நான் அரசாங்கத்தை மிகவும் பாராட்டுகிறேன். விவசாயத்துறையிலே ரசாயன உரம் சரியான அளவில் ஜில்லாக்களில் வினியோகிக்கப்படவில்லை என்ற குறையைப் பல அங்கத்தினர்கள் கூறினார்கள். அவர்கள் சொல்வது உண்மைதான். சென்ற வருஷத்தைப்போல் இந்த வருஷத்திலே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டிய திட்டத்தின் அடிப்படையில் காரியங்கள் நிகழ்ந்துவரும்போது ரசாயன உரம் பற்றாக்குறையாக சென்ற வருஷத்தைவிட குறிப்பாக இந்த வருஷம் வினியோகிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. என்றாலும் கூட இதற்குக் காரணம் பல இருக்கின்றன என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை. சென்ற வருஷத்தைப் போல் இந்த வருஷத்திலும் வரக்கூடிய உரம் இருக்கிறது என்பது தெரிந்திருக்கிறது. ஆனால் அது ஏனோ வந்து சேரவில்லை. கிடைத்த அளவில் சரிவர இந்த வருஷத்தில் வினியோகப் படுத்தியதுபற்றி அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக ராமனாதபுரம் ஜில்லாவிற்கு இந்த வருஷ முதலில் பல மக்களுக்கு 1,200 டன் ரசாயன உரம் ஒதுக்கப்பட்டிருந்தும் 400 டன் உரம்தான் இந்த வருஷம் கிடைத்திருக்கிறது. ஆனால் விசாரித்ததில் கடல் கொந்தளிப்பினால் கப்பல் வரத் தாமதம் ஏற்பட்டு துறைமுகங்களிலே ஏற்றிச் செல்லாததினால் ஏற்பட்ட தாமதம் காரணமாக 400 டன்னில் ஒரு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட ரசாயன உரம் காலாகாலத்தில் கிடைப்பதற்கு வழியின்றி 250 டன்னோடு நின்றுவிட்டது. ஆகையால் சரிவர விவசாயிகளுக்கு கொடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டது. என்றாலும் ஒரு வகையில் இந்த வருஷத்தில் ரசாயன உரம் காலாகாலத்தில் கிடைக்குமா என்று சோதனை ஏற்பட்டாலும்கூட என் பகுதிக்கு சென்ற வருஷம் ரசாயன உரம் போட்டு பயிர்கள் எவ்வளவு நன்றாக இருந்ததோ அதைவிட இந்த வருஷம் ரசாயன உரம் அதிகமாக உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யமுடியாவிட்டாலும் மகசூல்கள் மிகவும் செழிப்பாக இருந்துகொண்டு வருகிறது என்பதை ஆறுதலாக விவசாயிகள் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த வருஷம் ரசாயன உரம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வினியோகிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அதன் அதன் அதிகார எல்லையில் எவ்வளவு நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை கணக்கெடுத்துக் கொண்டு அதற்குத் தகுந்தபடி அந்தந்த சங்கத்திற்கு எவ்வளவு உரம் ஒதுக்கவேண்டுமோ அவ்வாறு ஒதுக்கிக் கொடுத்து அந்த நிர்வாகிகள் மூலமாக விவசாயிகளுக்கு அந்த உரத்தையும் வினியோகம் செய்யவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. எவ்வாறு அந்த வினியோகம் நடக்கிறது என்று உன்னிப்பாக தொடர்பு கொண்டு கவனித்தேன். நியாயமான முறையில் வினியோகம் நடைபெற்றிருக்கிறதென்று தெரிந்துகொண்டேன். பொதுமக்களும் பஞ்சாயத்துக்களும் கூட்டுறவு சங்கங்களின் தொடர்போடு செயல்பட்டு ஒத்துழைத்தால் நல்லவிதமாக நிர்வாகம் நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சோதனைகளிலேகூட இந்த சங்கங்கள் வினியோகிக்கும் முறையில் சரிவர நடத்திக்கொண்டிருக்கின்றன என்று தெரிகிறது. விவசாயத்துறையிலே இப்பொழுது ஏற்பட்டுள்ள அபிவிருத்திக்கு சோஷியலிச முறையில் முன்னேற்றகரமான காரியங்கள் அரசாங்கம் செய்துகொண்டிருக்கும்போது அதனுடைய பயனை யார் அனுபவிக்கிறார்கள் என்ற சந்தேகம்கூட இங்கு எழுந்திருக்கிறது. ஜில்லாவிலே நல்லமுறையில் நம்முடைய நிர்வாகம் நடைபெற்று பொதுமக்கள் முக்கியமாக உழைப்பாளர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு அளித்திருக்காவிட்டால் விவசாயத்துறையில் கிராமங்களில் இவ்வளவு நல்ல முறையில் ஒரு அபிவிருத்தி ஏற்பட்டிருக்காது. ஏக்கர் ஒன்றுக்கு சில படி தானியங்கள், சில மாக்கால் தானியங்கள் விளையக்கூடிய நிலங்களில் எல்லாம் அதிக விளைச்சல் கண்டிருப்பது எதனால் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். பல கிராமங்களில் எவ்வாறு விவசாய நிலங்கள் எப்படி நல்ல வகையிலே உரம் போட்டு பயிர் செய்யப்படுகின்றன? நிலத்தின் தரம் எவ்வாறு உயர்ந்திருக்கிறது? பல வருஷங்களுக்கு முன்னால் இதே நிலத்தில் எப்படி சாகுபடி செய்யப்பட்டு வந்ததென்பதையும், இப்பொழுது அந்த நிலத்தினுடைய தரம் உயர்ந்து அதிகமாக உற்பத்தியை கொடுத்து வருவதையும் நாம் காண்கிறோம். அப்படி இருக்க எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள் என்று புரியவில்லை. இதை நன்றாக சிந்தித்துப்பார்க்கவேண்டும். சில வருஷங்களுக்கு முன் எல்லா கிராமப் புறங்களிலும் நிலங்களை வைத்துக்கொண்டிருந்தவன் கடனாளியாக இருந்து விற்க முன்வருவானானால் அதை வாங்குவதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். இன்றைய தினம் ஒருவன் நிலத்தை விற்கவேண்டுமென்று எண்ணினால் பலர் போட்டிபோட்டுக்கொண்டு வாங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் நிலங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருப்பதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நிலத்தை ஒருவன் விற்க வேண்டுமென்றால் பலர் போட்டிபோட்டுக்கொண்டு அந்த நிலத்தை வாங்கவந்தால் அது எதை காட்டுகிறது. நிலத்தின் மதிப்பு [illegible] காரணம் விவசாயத் [illegible]

[Sri R. Krishnasami Naidu] [24th January 1961

லாபம் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. சர்க்கார் போட்டுள்ள திட்டங்கள் மூலமாக இந்த பாட்டாளிகளுக்கு, விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு இப்பொழுது கடன் வசதி ஏற்பட்டிருக்கிறது. முன்னால் தாலூகா தலைநகரங்களிலும், மற்ற இடங்களிலும் வட்டிக்குப் பணம் கொடுக்கக்கூடிய லேவாதேவிக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது அந்தத் தாலூகா தலைநகரங்களில் அவ்வாறு செய்துகொண்டிருக்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுது கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கடன்கள் சரிவர பயன்படுத்தப்பட்டுவருகின்றன. ஆனால் அரசாங்கம் இதற்கு திட்டம் வகுத்தாலும்கூட கொடுக்கும் கடன் வசதிகளை விவசாயிகள் பெறக்கூடிய வகையில் பொதுமக்களுடைய பிரதிநிதிகள் எடுத்துக் கூறவில்லை என்றுதான் நான் கூறுவேன். கடன் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அந்த வசதிகள் பொதுமக்களுக்கு கொடுக்கும்படியாக செய்யவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்தது என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்களுடைய பிரசங்கத்தில் நம்முடைய ராஜ்யத்தில் வருஷத்திற்கு இரண்டு லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் வகையிலே தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை தரக்கூடியது. அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்பு அளிப்பதாகவும் இருக்கிறது. விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் அம்மாதிரி பண வருவாய்க்கு சில மகசூல்களை செய்வதற்கு வாய்ப்பு அளித்து அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதானது வரவேற்கத்தக்கது. என்னுடைய பகுதியில் சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் இவைகளை விவகார எல்லையாகக் கொண்டு ஒரு கூட்டுறவு சக்கரை ஆலை ஏற்படுத்த யோசனை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கு நேரடியாக கோயம்பத்தூர் முதலிய வட்டாரங்களில் அப்படி கரும்பு சாகுபடி செய்வதன் மூலம் அவர்கள் வருமானம் பெற வாய்ப்பு இருக்கிறது. இதுமாதிரி இந்தப் பகுதியில் ராஜபாளையம் பகுதியிலே ஒரு சக்கரை ஆலை நிறுவ வாய்ப்பு இருக்கிறது.

இப்பொழுது இந்த ஒரு தாலூகாவில்மட்டும் 4,000 ஏக்கர் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. ஆகவே அந்த சர்க்கரை ஆலையை அங்கு கூட்டுறவுத் துறையில் அமைக்க ஏற்பாடு செய்து தரவேண்டுமென்றும், அதற்கு ஆவன செய்து தரவேண்டுமென்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். சென்ற வருடம்கூட குறிப்பிட்டேன். சட்ட மன்ற அங்கத்தினர்களுக்காக நம் ராஜ்யத்தில் கட்டப்பட்டிருக்கும் விடுதியை இன்னும்



24th January 1961] [Sri R. Krishnasami Naidu]

கொஞ்சம் சௌகரியம் உள்ளதாக அதை அமைக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் மறுமுறையும் கேட்டுக்கொள்கிறேன். பக்கத்திலுள்ள ராஜ்யங்களிலுள்ள சட்டமன்ற அங்கத்தினர்களுக்குக் கட்டிக்கொடுத்துள்ள விடுதியையும், நம் அங்கத்தினர்களின் விடுதியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. ஆகவே நமது அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலாவது சட்டமன்ற அங்கத்தினர்கள் தங்கும் விடுதியை கொஞ்சம் நல்ல முறையில் சௌகரியமாக—படாடோபம் வேண்டாம், போகம் அனுபவிக்கக்கூடிய முறையில், பிறர் பார்த்து பரவசமடையக் கூடிய முறையில் இல்லாவிட்டாலும்கூட—குறைந்த பட்ச சௌகரியங்களுடனாவது அந்த விடுதியை அமைக்க ஏற்பாடு செய்யக் கூடிய வகையில் விரைவில் திட்டமிட்டு அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இன்று காலை கேள்வி நேரத்தில் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. அரசாங்கத் துறையில் சினிமாத் தொழில் கலைப் பயிற்சி சம்பந்தமாக ஏதோ ஏற்பாடு செய்வது குறித்து பேசப்பட்டது. அது நல்ல முறையில் நடைபெறவேண்டியதுதான். வேறு ஒன்றும் இப்பொழுது என் ஞாபகத்திற்கு வருகிறது. நமது கல்வி அமைச்சர் அவர்கள்கூட பள்ளிச் சீரமைப்பு போன்றவைகள் சம்பந்தப்பட்ட கூட்டங்களில் பேசும்போது கல்வித்துறையில் 13, 15 கோடி ரூபாய் அளவில் செலவிட்டு மக்கள் அறிவும், பண்பும், திறமையும் வளரவேண்டுமென்று பணியாற்றி வருகிறோம். இன்னொரு பக்கத்தில் நம்மை அறியாமலேயே நமக்கு முன்னால் நடைபெறக்கூடிய காட்சிகளும், கேள்விகளும், எப்படி நம் பண்பு வளரவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அதை அழித்துவிடக்கூடிய முறையில் சினிமா கலைகள் உருவாகிக் கொண்டு வருவது கண்டு நாம் கவலைப்படவேண்டியதாயிருக்கிறது என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டு வருவது என் ஞாபகத்திற்கு வருகிறது. சென்ற மகாயுத்தத்தின்போது ஐரோப்பிய கண்டத்திலுள்ள சில நாடுகள், முற்போக்காக இருந்த நாடுகள் பெரிய புரட்சி உண்டாக்கி ஜனநாயகத்தை ஸ்தாபித்த நாடுகள் போகபோக்கியங்களிலும், கேளிக்கைகளிலும் தங்கள் மனதை பறிகொடுத்து நாட்டின் பொறுப்பை கவனிக்க சக்தியற்றவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதையும் அந்த நாட்டு மக்கள் யுத்த காலத்தில் உணர்ந்து கொண்டார்கள். போக போக்கியங்களில் திளைத்து விட்ட காரணத்தினால் நாட்டிற்கு சோதனை காலம் வரும்போது அதை எதிர்நோக்க சக்தியற்றவர்களாகி விட்டார்கள். ஆக, புரட்சி நடந்து ஒரு குடியரசை அங்கு ஸ்தாபித்தார்கள் மக்கள். சில நாடுகள் பொறுப்பையும், கடமைகளையும் மறந்து போகபோக்கியங்களில் திளைத்திருந்த காரணத்தினால் சென்ற யுத்தத்தின்போது அழிவுற்றது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆகவே, பொதுமக்கள் வேலை செய்யும் நேரம் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் தங்கள் கவலைகளை மறப்பதற்காக சில விளையாட்டுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கவேண்டுமென்றாலும்கூட, காரியாலயங்களில் வேலை செய்வதற்கு அடுத்தபடியாக சினிமா பார்ப்பது என்ற நிலைதான் இன்று இருக்கிறது.

[Sri R. Krishnasami Naidu] [24th January 1961

மக்கள் மனம் சினிமா மேல்தான் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, சினிமா கலை நல்ல முறையில் உருவாக வேண்டும். சினிமா காட்சிகள் மக்கள் மனதை அதிசீக்கிரம் வசீகரிக்கக் கூடிய கலையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கலை நல்ல முறையில் அமையாவிட்டால் அது நாட்டிற்கு பெரும் பாதகத்தை உண்டு பண்ணும். இன்று சினிமா காட்சிகள் ஒரு நாளைக்கு எத்தனையோ நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரவு 9, 10 மணிக்கு மேல் சினிமா காட்சிகள் நடந்து வருவதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சிறிய நகரங்களில்கூட எந்த நேரத்திலும் ஒலிப் பெருக்கி மூலம் சினிமா பாட்டுக்களும், நமது பண்பை கெடுத்துவிடக்கூடிய பாட்டுக்கள் பதிவு செய்த ரிக்கார்ட் மூலம் வைக்கப்படுகின்றன. ஹைஸ்கூல் மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் வீட்டில் இருக்கும்போதுகூட தங்கள் மனதை பாடங்களில் செலுத்தாமல் பக்கத்தில் ஒலிக்கக்கூடிய சினிமாப் பாட்டுகளில்தான் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே, மாணவர்கள் குறிப்பாக, தங்கள் மனதை நல்ல காரியங்களில் செலுத்துவதற்கு, நல்ல முறையில் சிந்திக்கக்கூடிய வகையில், மனதை நல்ல முறையில் செலுத்துவதற்கு, அலங்கோலமான விதத்தில் மனதை செலுத்தவொட்டாமல், அப்படி கெட்ட எண்ணங்கள் மனதில் ஏற்படாதவாறு அவற்றை அகற்றுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை சர்க்கார் கைக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோஷியலிஸ சமுதாய அமைப்பின் மூலம் நாட்டுக்கு ஏற்படுகிற நன்மைகள் துரிதமாக ஏற்படவேண்டுமென்றால் மக்களின் உள்ளம் நலம் பெறவேண்டும். நல்ல உணர்ச்சி மனதில் நிலவவேண்டும். அப்படி மக்களின் மனதில் நல்ல உணர்ச்சிகள் உருவாகவில்லை என்றால் எத்தனை திட்டங்கள் வகுத்தாலும் கூட அதன் பலனை அனுபவிக்க முடியாது என்ற நிலைதான் ஏற்படுமென்று சொல்லிக்கொண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri GOMATHISANKARA DIKSHITAR :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உரையில், நம் ராஜ்யத்தில் சுபிட்ச வாழ்க்கைக்கு வேண்டிய அம்சங்கள் எல்லாம் அடங்கியிருப்பது கண்டு நாம் மகிழ்ச்சியடைய கடமைப்பட்டிருக்கிறோம். அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாடு, மஹாத்மா காந்தியடிகளின் ஆசியால் சுதந்திரம் பெற்று குடியரசாக திகழும் இத்தருணத்தில் நம்மை ஆண்டுக்கொண்டிருந்த அரச வம்சத்தோடு சேர்ந்த எலிசபெத் ராணி அவர்கள் இந்த குடியரசு நாட்டிற்கு சிநேகத் தன்மையோடு விஜயம் செய்வது கண்டு நமது இந்திய மக்கள் அவர்களுக்கு மனமுவந்த நல்வரவு அளிப்பதும் சரித்திர சம்பந்தமான விஷயமாகும். உலகத்திலேயே சிறந்த ஜனநாயக நாடாக விளங்கும் இந்நாட்டை பிரிட்டிஷ் ராணியார் வந்து பார்ப்பதும், அவர்களுக்கு நாம் நமது நட்பைத்



24th January 1961] [Sri Gomathisankara Dikshitar]

தெரிவிப்பதும் சரித்திரத்தில் ஒரு முக்கிய விஷயமாகும். கவர்னர் அவர்கள் உரையில் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட இருப்பது குறித்து, அதனால் நம் ராஜ்ய வியாபாரம், தொழில் இவைகள் வளர்வதற்குரிய ஒரு நிலை ஏற்படுவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். நாட்டில் மழை பெய்து அதன் மூலம் நீர்நிலைகள் நன்கு நிரம்பி விவசாயத்திற்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய நிலையில் இருந்தும் அம்மழை காரணமாக பலவிடங்களில் மக்கள் கஷ்டப்படும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் என் தொகுதியில் தாமிரபரணியில் அதிக வெள்ளம் ஏற்பட்ட காரணத்தால், பல வீடுகள் இடிந்து விழுந்தும், சிலர் உயிர் இழந்தும் கஷ்டப்படும் நிலை ஏற்பட்டு விட்டது. அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய நிவாரணம் அளித்து வருகிறார்கள். மணிமுத்தார், பாபநாசம் இவற்றில் அணை லெவலுக்குமேல் மழைத் தண்ணீர் பெருகுவதன் மூலம் அந்த அணைகளைக் காப்பதற்கு ஏராளமான தண்ணீரை வெளியில் திறந்து விடக்கூடிய ஒரு நிலை தாமிரபரணி வெள்ளத்திற்குக் காரணமாக ஏற்பட்டு விட்டது. சுமார் 30 வருஷ காலத்தில் இம்மாதிரி வெள்ளம் தோன்றியதில்லை. அதைத் தடுப்பதற்கு பாபநாசம் அணைக்குப் பக்கத்தில் சேர்வையாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அதில் சிறிய அணைக்கட்டு ஒன்றை கட்டி அதன் மூலமாக அதிகமான அளவில் தண்ணீரை பாபநாசம் அணையில் தங்கவிடாமல் அதைத் திறந்து விட்டுவிட்டால் இம்மாதிரி வெள்ளத்தினால் எந்தவிதமான சேதமும் எங்களுக்கு ஏற்படாது 10-30 என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். p.m. சேர்வையாறு விஷயமாக ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இதில் அதிகமான பணம் செலவழிக்கத் தேவையில்லை. அதோடு இது பாசனத்திற்கும் உதவியாக இருக்கும். அதேபோல் வருகின்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அம்பாசமுத்திரம் தாலூகாவில், கடனாநதி அணைக்கட்டுத் திட்டத்தையும், ராமநதி அணைக்கட்டுத் திட்டத்தையும் எடுத்து வேலைகள் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலமாக சுமார் ஏழாயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும். ஆகவே இந்தத் திட்டத்தை கூடிய சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோடிக் கணக்கான ரூபாய் செலவழித்து உணவு உற்பத்தியை பெருக்குவதற்கும், தொழில் வளத்தை பெருக்குவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இது வெற்றியுடன் நடைபெறுவதற்கு அரசியல் கட்சிகள் தங்களுக்குள் எந்தவிதமான வேறுபாடுகள் இருந்த போதிலும் இதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று நான் எல்லா அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டில் சர்க்கரை (சீனி) உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களில் சர்க்கரை ஆலைகளை கூட்டுறவு

முறையில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்து வருகின்றன. அதன் மூலமாக நமக்கு வேண்டிய சர்க்கரையை உற்பத்தி செய்து கொள்ளலாம். இதன்மூலம் நமக்கு இருந்து வருகின்ற பற்றாக்குறையும் போகும் என்று நம்புகிறேன்.

அதேபோன்று தொழில் வளம் பெருகுவதற்கான முறையில் மணிமுத்தாறு—பாபநாசம் அணைக்கட்டுகளில் பக்கத்தில் ஒரு பேப்பர் மில்லை ஆரம்பித்து வேலை நடத்துவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு விக்கிரமசிங்கபுரம் என்ற இடத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். அந்த இடத்தில் குடிதண்ணீர் வசதியில்லாத காரணத்தால் பலவிதமான தொத்துவியாதிகள் பரவுகின்றன. அந்த ஜில்லாவுக்கு தொத்து வியாதிகள் பரவுவதற்கு காரணமாயிருக்கின்ற இடமாகிய விக்கிரமசிங்கபுரத்தில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். இதுவரையிலும் எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே கூடிய சீக்கிரத்தில் விக்கிரமசிங்க புரத்திலும், தாமிரபரணி ஆறு கரையோரமாக, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேர்மாதேவி போன்ற பெரிய பஞ்சாயத்து நகரங்களிலும் இந்த குடிதண்ணீர் வசதி திட்டத்தை கொண்டு வருவதற்கு, அதிலும் குறிப்பாக இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அமுலுக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியமான விஷயமாகும். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் சுகாதார அதிகாரிகள் எவ்வளவோ தடுப்பு முறைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அதிகமான அளவில் தொத்துவியாதிகள் வராமல் இருக்கின்றன. ஆனால் இம்மாதிரிப் பட்ட தொத்துவியாதிகள் வந்துவிட்டால் ஒரேயடியாக ஆயிரக் கணக்கான பேர்களைக் கொண்டு போய்விடும். ஆகவே இதைத் தடுக்கவேண்டுமானால் பெரிய பஞ்சாயத்துகளிலும், நகரங் களிலும் உடனடியாக குடிதண்ணீர் வசதியை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும். இதில் அரசாங்கம் தக்க கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, பலவிதமான தொழில் எஸ்டேட்டுகள், சுமார் 20 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் நிர்மாணிக்கப் போவதாக கவர்னர் பெருமான் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தகைய இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்றை என்னுடைய தொகுதியாகிய அம்பா சமுத்திரம் தாலூகாவில் ஏற்படுத்தவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மணிமுத்தாறு அணை கட்டி முடித்த பின்னால் அங்கு ஏராளமாக உபயோகப் படுத்தப்பட்ட பல வீடுகள் இருக்கின்றன. அதோடு அங்கு லைட் வசதி, தண்ணீர் வசதி போன்ற எல்லா வசதிகளும் ஏராளமாய் இருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு தொழில் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினால் அதன் மூலமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள்



வேலை வாய்ப்பு பெறுவதற்கு வசதி ஏற்படும். இப்போது அங்கே அம்பர் சர்க்கா இன்ஸ்டிட்யூட் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. மேலும் எங்கள் தாலூகாவைப் பொறுத்தவரை கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருப்பதின் காரணமாக அங்கே சாயம் காய்ச்சக்கூடிய ஒரு தொழில் ஸ்தாபனத்தை நிறுவி அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி கிடைக்கும் வாய்ப்பை அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் கல்வி முன்னேற்றத்திற்காக, வரப்போகும் ஆண்டில் எல்லோருக்கும் அதாவது, 6 வயது முதல் 11 வயது வரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி வசதி அளிக்கப் படுவதைப்பற்றி குறிப்பிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஏனென்று கேட்டால், நம் நாட்டில் கல்வி பெறாத குழந்தைகளே இருக்கக்கூடாது என்கிற நோக்கத்தோடு கட்டாய இலவச கல்வித் திட்டம் கொண்டுவரப்படுவது மிகவும் போற்றுதற்குரியதாகும். அதை எல்லாக் குழந்தைகளும் பயன் படுத்திக்கொள்ளக்கூடிய முறையில் எல்லாவிதமான பஞ்சாயத்துகளும், மற்றும் பொதுஜன ஊழியர்களும், பொதுமக்களும் இதில் சிரத்தையோடு ஒத்துழைக்க முன் வந்தால், நம் ராஜ்யத்தில் கல்வி முன்னேற்றம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இதில் முக்கியமாக கவனம் எடுத்துக்கொண்டு இந்தத் திட்டம் வெற்றியாக நடந்தேறுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சேர்மாதேவி என்கிற இடம் முக்கியமாக ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் வசிக்கக் கூடிய இடம். திருநெல்வேலிக்கும் அம்பாசமுத்திரத்திற்கும் மத்தியில் இருக்கக்கூடிய இடம். இந்த இடத்திலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லவேண்டுமானால் சுமார் 21 மைல் தூரமிருக்கிறது. இந்த தூரத்தை குறைக்க சுலபமாக, சேர்மாதேவியின் பக்கத்தில் தாமிரபரணி ஆற்றில் ஒரு பாலத்தைக் கட்டினால் 15 மைல் தூரத்தில் திருநெல்வேலிக்குப் போகலாம். ஆகவே இந்த பாலத்தையும் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக விவசாயிகளுக்கு வேண்டிய உரம் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய ஜில்லா கலெக்டர் இந்தக் காலத்தில் விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதற்கு நல்ல முறையிலே ஏற்பாடு செய்திருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனாலும் கிராமத் தலைவர்களுடைய பயிற்சி முகாம் பல இடங்களில் நடத்தப்பட்டு, அதன் மூலம் விவசாயிகள் விஞ்ஞான முறையில் விவசாயம் செய்ய முற்படும்போது மிகவும் தேவையாக இருப்பது உரம். உரம் பற்றாக்குறையாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய அளவு உரம் கிடைப்பதில்லை, ஆதலால் விவசாயத்தை விருத்தி செய்து, உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை. அத்தகைய குறைகளை நீக்க நெய்வேலியில் இப்போது ஆரம்பிக்கப் போகும் உரத் தொழிற்சாலையில்

அதிக அளவு உரம் உற்பத்தி செய்து அதன் மூலம் விவசாயிகளுக்கு உரம் இல்லாக் குறையை நீக்க ஜரூராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. இப்போது விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றார்கள். அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது. பஞ்சாயத்து கவுன்ஸில் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய முயற்சி நடைபெற்று வருகின்றது. பஞ்சாயத்து கவுன்ஸிலின் வேலைகளில் இத்தகைய நிர்மாண வேலைகள் இருப்பதால் இதையெல்லாம் பஞ்சாயத்தார்கள் கவனித்து 1958-ம் வருஷத்து பஞ்சாயத்து ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருகின்ற ஊழியர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய கடமையை நன்குணர்ந்து கிராம மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய மனப் பான்மையில், பஞ்சாயத்து ஆக்டின் நன்மையை கிராம மக்கள் பெற்று, கிராம ராஜ்யத்திற்கு அடிகோலியாக இருக்கக்கூடிய முறையில் சேவையையும் ஒத்துழைப்பையும் அளித்து பஞ்சாயத்து ஆக்ட் வெற்றி பெறும்படி செய்யவேண்டுமென்று பஞ்சாயத்து அதிகாரிகளை முக்கியமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பஞ்சாயத்து ஆக்ட் வெற்றிபெறவேண்டுமானால் பஞ்சாயத்து பிரெஸிடெண்ட்களும், பஞ்சாயத்து மெம்பர்களும், பஞ்சாயத்து அதிகாரிகளும் ஒன்றுபட்டு வேலை செய்து அந்தச் சட்டத்தின் நல்ல அம்சங்களை மக்கள் பெறுவதற்கு பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்போது கிராம ராஜ்யத்திற்கு அடிப்படையாக பஞ்சாயத்து கவுன்ஸில் ஏற்படுவதன் காரணமாக பஞ்சாயத்து ஆக்ட் வெற்றியுடன் நடைபெற அதிகாரிகளும், பஞ்சாயத்து பிரெஸிடெண்ட்களும், மெம்பர்களும் ஒத்துழைத்து வெற்றிபெறச் செய்ய முன்வரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

*SRI D. SUBRAMANIA RAJAKUMAR : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களின் உரையின் மீதான விவாதத்திலே என்னுடைய மாவட்டத்திலுள்ள குறைகளை மட்டும் சர்க்காருக்கு எடுத்துக் கூறுகிற முறையில் பேசுவதற்கு முன் வந்திருக்கிறேன்.

மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே பல திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தபோதிலும், முக்கியமாக இந்த மாகாணத்திலே மிகவும் பின் தங்கிய மாவட்டமாகிய கிழக்கு ராமநாதபுரத்திற்கு எந்தவிதமான திட்டமும் கூறப்படாதது குறித்து மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது முக்கியமான ஒரு திட்டம் இடுக்கி என்ற அப்பர் பெரியார் திட்டம். இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பார்கள், அதற்கான வேலைகள் நடைபெறும் என்று அப்பகுதி மக்கள் மிகவும் ஆசையுடன் இருந்தார்கள். ஆனால் கவர்னர் பெருமானுடைய உரையிலே





அதைப் பற்றி காணப்படாதது அவர்களுக்கு பெருத்த ஏமாற் றத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த இடுக்கி என்ற அப்பர் பெரியார் திட்டத்தை எடுத்துக்கொள்ளாததற்கு முக்கிய மாக கேரள மாகாண முதன் மந்திரி பெரியாற்றின் தண்ணீரை இந்த மாகாணத்திற்கு விடமுடியாது என்று கூறியதாக இருக்கலாமோ என்று கருத வேண்டியிருக்கிறது. ஆனால் கேரள மாகாண முதன் மந்திரி அவர்கள் இந்த மாகாணத்திற்கு பெரியாற்றின் உபரித் தண்ணீரில் ஒரு சொட்டுக்கூட விடமுடியாது என்று கூறுவதற்கு எந்தவிதமான நியாயமும் கிடையாது என்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஏனெனில் பெரியாற்றில் கள்ளாறு, ஆனைமலையாறு, நீராறு போன்ற ஆறுகள் கலக்கின்றன. மேலும் பழைய பெரியாறு ஸர்ப்ளஸ் வாட்டர் ஒப்பந்தப்படி இந்த மாகாணத்திற்கு தண்ணீர் விடவேண்டியது முக்கியம் பெரியாறை ஒரு இண்டர்-ஸ்டேட் ரிவராக எடுத்துக்கொள்ள வேண்டும். இதை மனதிலே வைத்துக்கொண்டு சென்னை சர்க்கார் கேரள சர்க்காருடன் பேசி இந்த இடுக்கி என்ற அப்பர் பெரியார் திட்டத்தை இந்த மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முன் வர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு பாம்பார் திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. இதைப்போல கவனக் குறைவால் கேரள சர்க்காருக்கு விட்டு விடாதபடி சென்னை சர்க்கார் முயற்சி செய்து உடனடியாகச் செய்யவேண்டு மென்று அம்மாவட்ட மக்கள் மிகவும் ஆசைப்படுகிறார்கள். இன்னும் முக்கியமான திட்டம் சேதுசமுத்திரத் திட்டம். அதையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அம்மா வட்ட மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் தொடர்ந்து பல வருஷங்களாக புயலினாலும், பருவ மழை தவறியதாலும், இன்னும் காலம் தவறி அதிக மழை பெய்ததாலும் அந்தப் பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அம்மாவட்டம் ஒரு பஞ்ச நாடாகக் காட்சியளிக்கிறது. அங்குள்ள விவசாயிகள் விவசாயத்தொழிலில் அவநம்பிக்கை கொண்டு அடுத்த மாவட்டங் களுக்கோ அல்லது அடுத்த தேசமாகிய இலங்கைக்கோ சென்று மிகவும் கேவலமான நிலையில் அவதிப்படுகிறார்கள். இதை சர்க் காரும், அமைச்சர்களும் நன்றாக உணர்வார்கள். இதையெல்லாம் மனதில் வைத்து இந்த மாவட்டத்தின் இரண்டு திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பார்கள் என்று நம்பு கிறேன். அவைகளைச் சேர்க்கவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொருத்த வரையில் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் பல இருந்தும் அவைகள் இதுவரையில் கவனிக்கப்படவில்லை. முக்கியமாக ஈச்சனோடை, முடிக் கொண்டான், அதினிப்பட்டி போன்ற திட்டங்கள் ரொம்ப கால மாக இருந்துகொண்டிருக்கின்றன. சரியான முறையில் வாய்க் கால்கள் வெட்டப்படாத காரணத்தினாலும், கண்மாய்கள்

மராமத்து செய்யப்படாத காரணத்தினுலும் ரொம்பவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை உடனடியாகச் செய்யவேண்டு மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திரு. அருள்தாஸ் ரிப்போர்ட்டிலே காவிரி-மேட்டூர் ப்ராஜெக்ட் தண்ணீரை திருவாடானை, திருப்பத்தூர் இந்த இரண்டு தாலுக்காக்களுக்கும் கொண்டு வாலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் எந்தவிதமான பரி சீலனையும் செய்யாமல் இருந்து வருகிறது. தனிப்பட்ட அதிகாரியைப் போட்டு அதைப் பரிசீலனை செய்ய அதற்கு வேண்டியவைகளைச் செய்தால் அந்தப் பகுதியில் விவசாயத் தொழில் விருத்தியடையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கண்மாய்கள் மராமத்துக்கு லட்சக் கணக்கிலே சாங்ஷன் ஆகியிருக்கிறது. ஆனலும் இது வரையில் எந்தவிதமான மராமத்தும் செய்யப்படவில்லை. தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு பெற்றவர்களுடைய தலையீட்டினுல்தான் பல வேலைகள் நடக்க முடியாமல் இருக்கின்றன. தனிப்பட்டவர் களுடைய சிபார்சுகளாலும், தனிப்பட்டவர்களுடைய செல்வாக் கினுலும் பல வேலைகளை நடத்த முடியாமல் இருக்கிறது.

ஆதலால் இந்த கண்மாய் மராமத்து வேலைகள் நல்லமுறை யிலே நடக்க வேண்டுமானுல் குறிப்பிட்ட கண்ட்ராக்டர்களுக்கு மட்டும் கொடுக்காமல், டெண்டர் மூலம் விடவேண்டும். சில குறிப்பிட்ட கண்ட்ராக்டர்கள் நாமிநேஷன்கள் போட்டு, பல கண் மாய் வேலைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு, அவைகளைச் செய்ய முடியாமல் இருந்து கொண்டிருப்பதைக் காணலாம். ஆதலால் இந்த சர்க்கார் ஒரு கிராமத்திலே ஒரு கண்மாய் ரிப்பேர் செய்ய வேண்டுமானுல், அங்குள்ள ஒரு பெரிய பட்டாதார் அந்த வேலையை தான் எடுத்துக்கொண்டு செய்வதற்கு முன்வந்தால், அந்த வேலையை அவருக்கே விட்டுவிட வேண்டும். இவ்விஷயத் திலே பல போட்டிகள் இருந்தால், அதை எந்த விதத்திலும் சிபார்சு செய்யாமல் டெண்டர்க்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமீபத்திலே பேய் மழை பெய்ததின் காரணத்தால் சிவகங்கை தாலுக்காவிலே, கல்லல் பிர்க்காவிலே பயிர்கள் எல்லாம் சேதமடைந்து விட்டது. ஆனல் இந்த சந்தர்ப்பத்திலே அங்கு கெடுபிடியாக வரி வசூல் பாக்கிகளை வசூலிக்க நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் தக்காவி லோன், மற்றும் புயல் லோன் போன்ற கடன் பாக்கிகளையும் உடனடியாக கொடுக்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுகிறது. இந்த சமயத் திலே அம்மாதிரியான வரிகளையெல்லாம், கடன் பாக்கிகளையெல் லாம் வசூல் செய்வது மிகவும் அநியாயமான காரியம் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எஸ்டேட் மானேஜர்கள் மூலம் மிகவும் அமைதியான முறையிலே, விவசாயிகளுக்கு கஷ்டம்





ஏற்படாத முறையிலே தற்போது பழைய கடன் பாக்கிகளை யெல்லாம் கேட்காமல், இருபசலி வரி வசூல் பாக்கியை மட்டும் வசூல் செய்யும்படியாக மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே புதியதாக தென்னகத்தில் ரயில் பாதைகள் போடப்படுமென்று கூறியிருப்பது மிகவும் சந்தோஷகரமான ஒரு விஷயமாகும். இந்த சந்தர்ப்பத்திலே பழைய ஒரு திட்டத்தின்படி கிழக்கு ராம நாதபுரத்திலே, அருள்தாஸ் ரிப்போர்டில் குறிப்பிட்டுள்ளபடி தேவகோட்டை, திருவாடானை, ராஜசிங்கமங்கலம், பரமக்குடி, முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, விருதுநகர் போன்ற இடங்களை இணைக்கக்கூடிய ஒரு ரயில் பாதையை அமைப்பதற் கான முயற்சியை சர்க்கார் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எக்ஸ்-கிரிமினல், ஸ்காலர்ஷிப், மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஸ்காலர்ஷிப் ஆகியவைகள் விஷயத்திலே இதுவரையில் ரினியூவல் கேஸ்களுக்குத்தான் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனல் புதிதாக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கும் இதுவரை பணம் வந்து சேரவில்லை. கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி சமயத்தில்கூட ஸ்காலர்ஷிப் வரவில்லையென்றுல், அவர்கள் ஹாஸ்டலில்கூட இருந்து படிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக் கிறது என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு வருஷமும் இப்படித்தான் தாமதமாக வந்து கொண்டி ருப்பதைப் பார்க்கிறும்.

**THE HON. SRI P. KAKKAN :** வருடா வருடம் இப்படித் தாமதமாகிறது என்ற காரணத்தினுலேதான், இந்த வருடத்தி லிருந்து ஜில்லா ஹரிஜன் வெல்பேர் ஆபீசர் மூலம் அந்தந்த ஜில்லாவிற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள தொகையை கொடுத்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி வரவில்லை யென்று சொன்னுல், நிதி எவ்வளவு இருக்கிறதோ, அதற்குத் தக்கபடிதான் கொடுத்திருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

**SRI D. SUBRAMANIA RAJAKUMAR :** இதுவரையிலும் ரினியூவல் கேஸ்கள்தான் வந்திருக்கின்றன. புதியதாக போடப் பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு வரவில்லை. சிவகங்கை கல்லூரியைப் பொறுத்தவரையில் பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கும், எக்ஸ்-கிரிமினல் மாணவர்களுக்கும் புதிதாக விண்ணப் பிக்கப்பட்டவர்களுக்கு உதவி இன்னும் வரவில்லையென்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதனுல் அங்குள்ள மாணவர்கள் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்து வருகிருர்கள். இப்போது அவர்களுக்கு பரீட்சைகள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு, ஆவன செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri D. Subramania Rajakumar] [24th January 1961

கோயம்புத்தூரிலே ஒரு புதிய யூனிவர்சிடியை கொண்டு வரப் போவதாக தெரிய வருகிறது. அதை மதுரையிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் மதுரை மாவட்டத்தைச் சுற்றி மிகவும் பிற்பட்ட மாவட்டங்கள் இருக்கிறது. ஆகவே மதுரையில் ஒரு யூனிவர்சிடியை ஏற்படுத்தினால், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் கல்வித் துறையிலே முன்னுக்கு வா ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதையும் உடனடியாக சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, அதிகாரிகள் விஷயமாக தனிப்பட்டவர்கள் தலையிட்டினால் அவர்களுக்கு வேண்டிய பகுதியிலே அவர்களுக்கு ஏற்ற ஒரு அதிகாரியை வைத்துக்கொண்டு, அவர்களிடம் சலுகையும், பிறகாரியங்களையும் பெறுகின்றனர். அந்த அதிகாரிகளும் அவர்களிடம் நல்ல முறையிலே நடந்து கொள்கிறார்கள். இது ஒரு அநீதியான காரியம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். முக்கியமாக ஒரு மாவட்டத்திலே ஒரு மாவட்ட அதிகாரி மாற்றப் படுவதற்குக் காரணம், அம்மாவட்ட அதிகாரி அங்கு மூன்று வருஷங்களுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றக்கூடாது என்பது வழக்கமான கருத்து. ஆனால் கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தேவகோட்டையிலே உள்ள ஆர்.டி.ஓ. நான்கு வருஷங்களாக அங்கேயே தொடர்ந்து இருந்து வருகிறார். சென்ற வருடம் அவர் மாற்றப்பட்டார். பிறகு திடீரென்று தந்தி மூலம் மாற்றல் உத்திரவை கான்சல் செய்து மறுபடியும் சென்ற மாதம் அவர் மாற்றப்பட்டு, மற்றொரு நபர் அங்கு வருவதாக பத்திரிகைகளிலேகூட வெளி வந்தது. ஆனால் கடைசியாக மறுபடியும் தந்தி மூலமாக அவர் மாற்றல் உத்திரவு கான்சல் செய்யப்பட்டு, அங்கு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார். சர்க்காரிலே ஒரு மாவட்ட அதிகாரி தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குமேல் ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்ற நல்ல கொள்கையை வைத்துக் கொண்டிருந்தும், தனிப்பட்ட ஒரு சிலருக்காக ஒரே பகுதியில் மூன்று ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து இருக்க அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த சர்க்கார் நல்ல முறையிலே உள்ள இந்தக் கொள்கையை பாகுபாடு இல்லாமல் கண்டிப்பாக அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI A. E. CHANDRASEKHARA NAYAGAR** : கனம் சபா நாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு ஆதரித்து சில வார்த்தைகள் பேச இருக்கிறேன். அவர்கள் உரையில் பல நல்ல அம்சங்களைப் பார்க்கலாம். மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய, நம்பிக்கை அளிக்கக்கூடிய அளவில் உரை நிகழ்த்தி இருக்கிறார். வருங்காலத்தில் கட்டாயக் கல்வி வரப்போகிறது என்ற ஒரு நல்ல செய்தியை கொடுத்திருக்கிறார். இவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன்.



24th January 1961] [Sri A. E. Chandrasekhara Nayagar]

அள்ள அள்ளக் குறையாத அரசியல் நிர்ணய சட்ட செல் வத்தை நாம் அடைந்திருக்கிறோம். அந்த அரசியல் சட்ட அடிப் படையில் சமதர்ம சமுதாயத்தை ( Socialistic pattern of Society ) உருவாக்கும் கொள்கையை உருவாக்கி யிருக்கிறார்கள். இவையிரண்டின் அடிப்படையில் திட்டங்கள் தயாராகி இருக்கின்றன. அப்படி தயாரிக்கப்படும் திட்டங்கள் கிராமாந்திரங்களிலுள்ள ஏழை, எளிய மக்கள் அனுபவிக்கக்கூடிய அளவிற்கு, அனுபவித்துப் பயன்பெறக்கூடிய முறையில் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அதில் பல தடைகள் இருந்து வருகின்றன. இந்தக் தடைகளை அரசிய லிலுள்ள ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது கடமையாகும். இந்தத் தடைகளுக்கு சில முக்கியமான காரணங்கள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று, நம்முடைய அரசியல் சட்டம் ஏற் படுவதற்கு பல நூற்றாண்டுகளாக ஏகாதிபத்திய அடிப்படையில் இருந்த சட்ட திட்டங்கள் எல்லாம் அப்படியே இருந்து வருவது ஆகும். அவை மறு பரிசீலனை செய்யப்படவில்லை. இரண்டாவ தாக, நம்முடைய நிர்வாக அமைப்பு பழங்காலத்தில் எப்படி ஏற்பட்டதோ, எப்படி இருந்து வந்ததோ, அப்படியே இப் போதும் இருந்து வருவதாகும். மூன்றாவது காரணம், நம் முடைய மக்களுடைய கவனம் பெருவாரியாக அரசியலில் இழுக்கப்பட்டிருப்பதாகும். இம்மாதிரியான ஒரு சூழ்நிலை இன்று நமது சமுதாயத்தில் உருவாகப்பட்டிருக்கிறது. இந்த மூன்று குறைகளினாலும்தான் ஏழை எளிய மக்கள் நன்மையும் அடைய முடியாமல் இருக்கின்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த சர்க்கார் செய்கின்ற நன்மைகளையெல்லாம், மக்கள் அனுபவிக்க வேண்டுமானால், அரசியல் சட்டத்திற்கு முரணாக இருந்து வரும் பழைய சட்டதிட்டங்களை மறு பரிசீலனை செய்து, எந்தெந்த அம்சங்களை அதிலிருந்து நீக்க வேண்டுமோ அவைகளை யெல்லாம் நீக்குவதற்காக ஒரு உயரிய குழுவை அமைத்து பரி சீலனை செய்தால், நல்ல முறையில் மக்கள் பயன் பெறுவார்கள். குறிப்பாக, கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் மணியம் இசும்பு சட்டம் செல்லாது என்றும் அரசியல் சட்டத் திற்கு விரோதம் என காரணம் காட்டி சுப்ரீம் கோர்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வாறு சர்க்கார் பல நன்மைகளை மக்களுக்குச் செய்ய முன்வந்தாலும், அவைகளால் மக்கள் பயனடைய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே இவைகளையெல்லாம் திருத்தி அமைத்தால், பல நல்ல நன்மைகளை மக்கள் அனுபவிக்க முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'சோஷலிஸ்டிக் பாடர்ன்' என்ற கொள் 11-00 p.m.
கையை சர்க்கார் தலைவர்கள், சர்க்கார் தலைமை பீடத்தில் மட்டும் நாம் வைத்துக்கொண்டிருந்தால் போதாது. சர்க்கார் இலாகா விலுள்ள ஒவ்வொருவரும் பரவலாக சர்க்காரில் உள்ள கடைசி ஊழியர்கள் வரை அந்தக் கொள்கையை எந்த முறையில் கை யாள வேண்டும், எந்த அடிப்படையில் நாம் நடக்கவேண்டும் என்று திட்டவட்டமாக நாம் தெரிவிக்க வேண்டும். அப்படி

தெரிவித்தால்தான் அதனுடைய பலாபலன்களை எல்லா மக்களும் அனுபவிக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மக்களுடைய கவனத்தை அதிகமாக அரசியலில் ஈடுபடுத்தி, அவர்கள் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் பின்னடையச் செய்திருக்கிறோம். ஆகவே, சர்க்காரும், அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும் முன்வந்து ஒரு திட்டவட்டமான கொள்கையை நம்மிடையே வகுத்துக் கொண்டு, மக்களின் கவனத்தை அரசியலில் அதிகமாக ஈடுபடுத்தாமல் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் அவர்கள் முன்னேறுவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்ட மக்களைப்பற்றி கூற விரும்புகிறேன். பிற்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் பின் அடைந்திருக்கிறார்கள், 'சோஷலிஸ்ட் பாடர்ன்' கொள்கைகளெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு ஒரு முகமாக நன்மை பயக்கக்கூடியவைகளாக இருக்கின்றன என்னும் அடிப்படை எண்ணத்தில் பிற்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று தவறான கருத்தை சர்க்கார் கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவார்கள் என்ற சர்க்காரின் நம்பிக்கை சரியானதாகும்; ஆனால், Practical -ஆக அவர்கள் பல துறைகளிலும் பல ஆண்டுகளாக பின்னடைந்திருக்கிறார்கள். அவர்கள் எந்தத் துறைகளில் பின்னடைந்திருக்கிறார்களோ அந்தத் துறைகளை அறிந்து ஆவன செய்யவேண்டும். இந்த அடிப்படையில்தான் தீர்க்கதரிசிகளாக இருந்த நம்முடைய பெரிய தலைவர்கள் பிற்பட்ட மக்களின் நிலையை விசாரித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும், அதன்படி அவர்கள் முன்னேற வழிவகை செய்ய வேண்டும் என்று ஒரு குழுவை நியமித்தார்கள். ஆனால், துரதிருஷ்ட வசமாக காகா காலேல்கார் அவர்களுடைய தலைமையில் அமைந்த குழுவின் சிபாரிசுகள் அமுலுக்குக் கொண்டுவரப் படாமலே போய்விட்டன. அது பெரிய தவறு என்று கருதுகிறேன். அந்தக் குழுவின் அறிக்கையை அமுலுக்குக் கொண்டு வரும்படி இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அறநிலைய பாதுகாப்புக் கமிஷனர் பட்சபாதமாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது மதுரையில் அழகர் மலையில் வைஷ்ணவர் கோவில் உள்ள இடத்தில் வேறு ஒரு கோவில் ஏற்படுத்துவதற்கு அவர் உடந்தையாக இருந்திருக்கிறார். நம் சர்க்கார் பழைய காலத்தில் இருந்தே, அன்னிய ஆட்சி காலத்தில் இருந்தே மத சம்பந்த விஷயங்களில் தலையிடுவதில்லை என்று ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டிருந்தது. நம்முடைய அரசியல் சட்டமும் மத சம்பந்தப்பட்ட விஷயத்தில்





தலையிடுவதில்லை என்று உறுதியும் அளித்திருக்கிறது. ஆகவே, இம்மாதிரி சந்தர்ப்பத்தில் அறநிலையங்களை பாதுகாக்கவேண்டுமே தவிர, கமிஷனர் அவர்கள் அதில் தலையிட்டு பக்தர்கள் மனம் புண்ணுகும்படி ஒருதலைப்பட்சமாக செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், நம்முடைய திட்டத்தில் விவசாயத்திற்காக பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அந்த உதவியை பெறும் விவசாயிகளுடைய நிலையை நாம் கவனிக்கவேண்டும். எப்படி என்றால், ஒரு உதவி செய்யும் பொழுது உதவி பெறுபவருடைய நிலை என்ன, உதவியைப் பெறுபவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிந்து உதவி செய்யவேண்டும். ஒருவர் பல்வேறு வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தால், அந்த வியாதியை போக்காமல், அவருக்கு வைடமின் டானிக் கொடுக்கும் முறையில் நாம் உதவி செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவருடைய வியாதி என்ன, எந்த முறையில் அவருக்கு உதவி தேவை என்பதை அறிந்து தேவையான உதவியை செய்யக்கூடிய திட்டவட்டமான ஒரு கொள்கையை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக விவசாயத் துறையில் நீர்ப்பாசன வசதிகள் அதிகமாக பெறுவதற்கு பல ஜில்லாக்களைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வட ஆற்காடு ஜில்லாவைப் போன்ற சில ஜில்லாக்கள் இருக்கின்றன. அது மிகவும் பின்னடைந்த பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். வட ஆற்காடு ஜில்லாவில் கிராமாந்திரங்களில் ஏழை எளிய மக்கள் 4 அணா, 8 அணா கூலிக்குப் போகிறார்கள் என்றால், அவர்களுடைய நிலை எப்படி இருக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதைப்போல வரண்ட ஜில்லாக்களில் நல்ல வாய்ப்பை உண்டாக்க நீர்ப்பாசன வசதிகள் கண்டிப்பாக வேண்டும். ஐந்து ஏகராவுக்கு ஒரு கிணறு இருக்கவேண்டும் என்ற ஒரு விதியை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இப்பொழுது நம்முடைய லோகல் டெவலப்மெண்டு திட்டங்களிலும் மற்றும் பல திட்டங்களிலும் ஒதுக்கப்பட்ட தொகை பல்வேறு சட்ட சிக்கலினால் செலவு செய்ய முடியாதபடி அப்படியே நின்று விடுகிறது. அம்மாதிரி சட்ட சிக்கல்களையெல்லாம் போக்கி அந்தத் தொகையை மக்கள் நல்ல முறையிலே பயன்படுத்தக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் செலவு செய்யும் தொகை நல்ல முறையில் பலன் தரும்.

அடுத்தபடியாக, கிராமாந்திரங்களில் உள்ள விவசாயிகளை சிறு தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். இப்பொழுது மின்சார பம்பு செட்டுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஓய்வு நேரங்களில் மின்சார பம்பு செட்டுகளை சிறு தொழில்களில் எப்படி அவர்கள் உபயோகப்படுத்தி அவர்களுடைய வருமானத்தை பெருக்க முடியும், கிராமாந்திரங்களில் உள்ளவர்கள்

[Sri A. E. Chandrasekhara Nayagar] [24th January 1961

என்னென்ன செய்ய முடியும் என்பதற்கு வழிவகைகளை வகுத்து சர்க்கார் அறிவிக்க வேண்டும். இப்பொழுது சர்க்கார் பல சிமெண்டு ரோடுகள் போடுகிறார்கள். அவைகளையெல்லாம் கொஞ்ச நாட்களுக்கு நிறுத்தி வைத்து கிராமாந்திரங்களில் உள்ள பொது நெற்களங்களை நவீன முறையில் திருத்தி அமைத்துக்கொடுக்க வேண்டும் கிராமாந்திரங்களிலுள்ள நெற்களங்கள் இன்றும் புராதன முறையிலேயே இருந்து வருகின்றன. சிமெண்ட்டு ரோடு போடுவது போல் நவீன முறையிலே பொதுக் களங்களை போட்டுக் கொடுத்தால் தானியங்களை நல்ல முறையில் சீர்படுத்தி, பக்குவப்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியை பெருக்க முடியும். அதன் மூலம் நல்ல விதைகள் கிடைக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் பொதுக் களமும், தானிய சேமிப்புக் கிடங்கும், சிறு அளவில் தச்சுப் பட்டரையும், கருமான் பட்டரையும் இருக்க வேண்டும். நம்முடைய நாட்டு மக்களுக்கு தகுந்தாற்போல், ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய அளவிலே அவர்கள் புரிந்து கொண்டு செயலாற்றக்கூடிய அளவில் ஒரு தச்சுப் பட்டரையும், கருமான் பட்டரையும் ஏற்படுத்துவதற்கு திட்டம் வகுக்க வேண்டும். பெரிய நகரங்களில் போடக்கூடிய திட்டங்களை கொஞ்ச நாட்களுக்கு நிறுத்தி வைத்தாகிலும், தயவுசெய்து கிராமப் புறங்களை கண் திறந்து பார்த்து, கிராம மக்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். கிராமங்களிலுள்ள விவசாயத் தொழிலாளிகளின் வருமானம் மிகவும் அவல நிலைமையில், கேவலமான நிலையில் இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அந்தப் பெரிய **Gap** இடைவெளியை எப்படிச் சரி செய்வது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த **gap** சரி செய்வதற்கு, நமது கிராமாந்திர மக்கள் முன்னேறுவதற்கு வேண்டிய வாய்ப்புகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சொற்பொழிவை நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் இங்கு சில நாட்களுக்கு முன் நிகழ்த்திய உரையை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அவர்கள் பொதுவாக, நமது ராஜதானியில் நல்லவிதமாக ஒவ்வொரு காரியமும் நடந்து வருகிறது, மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அது நாம் எல்லோரும் சந்தோஷப்படவேண்டிய விஷயம். ஆனால், சில பேர்கள் இதை நம்பமாட்டார்கள். உண்மையாக இருந்தாலும்கூட, அதை அவர்கள் நம்பாமல், இன்னும் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன, மக்கள் சந்தோஷமாக இல்லை, குறைகள் எவ்வளவோ அதிகமாக வளர்ந்துகொண்டே போகின்றன என்றெல்லாம் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். விவசாயத் துறையில் நமக்கு வேண்டிய அளவு விவசாயம் இருந்தாலும்கூட, சில காரணங்களினால் பற்றாக்குறையாக இருந்து கொண்டு வருகிறது. அதுவும் மற்ற 'ஸ்டேட்களுக்கு' நாம்



24th January 1961] [Sri K. S. G. Haja Sheriff]

அனுப்புவதன் காரணமாக இருக்கிறதே ஒழிய, உண்மையாக நமக்கு வேண்டிய விவசாயத்தை நாமே உண்டு பண்ணி வருகிறோம். மேலும் மேலும் விவசாயத்தை அதிகமாக உண்டு பண்ணுவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

இண்டஸ்டிரியல் துறையிலும், எவ்வளவோ தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. தொழிற்சாலைகள் ஏற்பட்டால்தான் ஊதியம் அதிகமாக வரும். அப்படி இருந்தால்தான் மக்களிடையே சந்தோஷம் பிறக்கும் என்பது உண்மையான விஷயம். அப்படியிருந்தும்கூட, ஒரே காலத்தில் ஒரு வருஷத்திலேயே எல்லா தொழிற்சாலைகளையும் கொண்டு வர முடியாது. அதற்கும் சில 'ஸ்டேஜஸ்' இருக்கின்றன. அந்தந்த ஸ்டேஜில் அந்தந்த தொழிற்சாலைகள் கொண்டுவந்தால்தான் மக்களிடையே சந்தோஷம் வரும். அப்பொழுதுதான் அவைகளை நாம் நல்லவிதமாக பரிபாலனம் செய்ய முடியும் என்ற ஒரு உண்மை இருக்கிறது. அப்படியிருந்தும்கூட கவர்ன்மெண்டு எவ்வளவோ தொழிற்சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அது வரவேற்கத்தக்கது. மூன்று, நான்கு வருஷங்களில் எவ்வளவோ தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன, வந்துவிட்டன. மற்ற ராஜ்யங்களைவிட நம்முடைய ராஜ்யத்தில் நல்ல விதத்தில் தொழில்கள் பிரபல்யமாகிக்கொண்டு வருகின்றன என்பதைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வேண்டும். "எவ்வளவோ நீங்கள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறீர்கள்; எவ்வளவோ புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால ஜனங்களிடத்தில் சந்தோஷமில்லையே" என்று ஒரு அங்கத்தினர் கூறினார். இவ்வளவு உணவுப் பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்தபோதிலும், இன்னும் எல்லா வகைகளிலும் உற்பத்தி பெருகியும்கூட, பற்றாக்குறையாகத் தான் இருக்கிறது. "நிறைய இருக்கிறது, வாங்குவோர்" இல்லை என்ற குறையே கிடையாது. ஆகவே மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்துக் கொண்டே போகிறது. அதாவது, அவர்களுடைய வருமானமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதன் காரணமாகத்தான் இந்தமாதிரி அதிகப்படியாக உற்பத்தியாகும் பொருள்களை வாங்குவதற்கு சாத்தியமாகிறது. அதனால்தான இன்னும பொருள்களை உற்பத்தி செய்ய வழி வகுக்கிறார்கள். இது உண்மை. இதை விட்டுவிட்டு, "விலைவாசிகள் அதிகமாகிக் கொண்டே போகின்றனவே, இனி மேல் தொழில்களை வளர்க்கக்கூடாது, விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்" என்று சிலர் சொல்லுகிறார்கள். எந்த நாட்டினுடைய சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும், அந்த நாடு சுபீட்சமாக இருக்கவேண்டுமென்றால், அங்கே தொழில்கள் பெருக வேண்டும். உணவுப் பொருள்களில் பற்றாக்குறை இல்லாமல் இருந்தால்தான், ரொம்பவும் தீவிரமாக மற்ற வேலைகளில் ஈடுபட முடியும். அப்படியானால்தான் நாட்டின் "பெர் காபிடா" வருமானம் உயரும். நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டால், சென்ற 5 வருஷங்களில் நம்முடைய பெர் காபிடா

வருமானம் 40 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. வெளி தேசங்களிலிருந்து வரும் பொருளாதார நிபுணர்கள் இதைக் கணக்கிட்டிருக்கிறார்கள். மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும், நம்முடைய ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, ஊக்கத்துடன் பல தொழில்களை நாம் செய்துகொண்டு வருகிறோம் என்று அவர்கள் தீர்மானமான முடிவு கூறியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் நம்முடைய அரசாங்கம் முன்னேறிக் கொண்டு வருகிறது எனபதை யாரும் மறுக்கமுடியாது.

குறிப்பாக தூத்துக்குடித் துறைமுகத்தை ஒரு ஆழ்கடல் துறைமுகமாக ஆக்க தீர்மானித்திருப்பதை நாம் எல்லோரும் ஆதரிக்கவேண்டும். சென்னைத் துறைமுகத்திற்கு அடுத்தாற்போல் கொச்சித் துறைமுகம் இருக்கிறது. இந்த இரண்டிற்கும் நடுவில் எந்தத் துறைமுகமும் பெரிய துறைமுகமாக இல்லை. தூத்துக்குடித் துறைமுகம் ஒரு பெரிய துறைமுகமாக அபிவிருத்தி அடைந்தால், அந்தத் துறைமுகம் ஐந்து ஜில்லாக்களுக்கு ரொம்பவும் உதவியாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே பெரிய தொழிற்சாலைகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. அது மட்டுமல்ல. சிலோன் துறைமுகத்தில் சில சமயங்களில் நெருக்கடியான நிலைமை ஏற்படுவதுண்டு. கப்பல்காரர்கள் சில சமயங்களில் அங்கே கப்பல்கள் அனுப்புவதற்குக்கூட தயங்குகிறார்கள். தூத்துக்குடி பெரிய துறைமுகமானால், கொழும்புத் துறைமுகத்தில் இறக்கவேண்டிய ஒரு பகுதிப் பொருள்களை தூத்துக்குடியில் இறக்கிவிட்டு, அங்கிருந்து கொழும்பிற்கு அனுப்புவதற்கு சாத்தியமாக இருக்கும். ஆகவே இதை ஒரு பெரிய துறைமுகமாக்கப் போகிறார்கள் என்ற தீர்மானத்திற்கு வந்ததற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இதுபற்றி நாம் எல்லோரும் அவர்களைப் பாராட்டவேண்டும். அதே சமயத்தில் சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய துறைமுகங்களை நல்ல நிலைமையில் வைத்துக் கொண்டால், அதன்மூலம் பெரிய துறைமுகங்களுக்கு வரக்கூடிய நெருக்கடியையோ, கஷ்டங்களையோ நாம் தீர்த்துக்கொள்ளலாம். சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் சில கஷ்டங்கள் தான் இருக்கின்றன. அநதக் கஷ்டங்களை சீக்கிரத்தில் நிவர்த்தி செய்யலாம். முக்கியமான கஷ்டம் என்னவென்றால், சிறிய துறைமுகங்களில் "பார்" என்ற ஒரு வழியிருக்கிறது. இருபத்திநான்கு மணி நேரமும் அதை ஆழமாக்குவதற்காக ஒரு கருவியைக் கொண்டுவந்து வைத்துக்கொள்வோமேயானால், 24 மணி நேரமும் அதன் மூலம் போட்டுகள் போக்குவரத்து நடைபெறலாம். அதன் மூலம் அந்தத் துறைமுகத்தில் வியாபாரம் அதிகமாக ஏற்படும். இதனால் சுற்றியுள்ள வட்டாரங்கள் செழிப்புறுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



இன்னும் பெரிய தொழிற்சாலைகள் நம் நாட்டில் ஏற்பட வேண்டியது மிகமிக அவசியம். இங்கே ஒரு அங்கத்தினர் பேசும் பொழுது, சர்க்காரே ஒவ்வொரு தொழிலையும் நடத்த வேண்டும், தனியார் துறைக்கு விட்டுவிடக்கூடாது என்றார். ஒரு பெரிய தொழிற்சாலையை நடத்துவது என்பது சாதாரணமான விஷயமல்ல. அதற்கு சரியான மானேஜ்மென்ட் வேண்டும். அப்படியில்லாவிட்டால் சரியானபடி நடக்காது. தவிர, வேண்டிய முதலீடும் செய்யவேண்டும். இப்பொழுது சர்க்கார் 10 கோடி ரூபாய் முதலீடு செய்கிறார்கள் என்றால், ஒன்று அல்லது இரண்டு பெரிய தொழிற்சாலைகள்தான் ஏற்படும். ஆனால் இதே பணத்தை வைத்துக்கொண்டு தனிப்பட்டவர்களுக்கு உதவி அளித்தால் சுமார் 10 தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். அது மட்டுமல்ல, வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவுக்குத் தீரும். உற்பத்தி பெருகும். நாட்டின் செல்வம் பெருகும். நாட்டின் செழிப்பு ஓங்கும். அப்படி சர்க்கார் உதவி செய்ய முன்வருவார்களேயானால், ஊக்கம் அளிப்பார்களேயானால், தொழில் நடத்துபவர்கள் மேலும் மேலும் பெரிய பெரிய தொழில்களை நடத்த முன்வருவார்கள். சர்க்கார் நடத்தும் தொழிலைப்போல வருமானம் வராது என்று கூறினர். எப்படி வராது என்று கேட்கிறேன். இன்று இன்கம் டாக்ஸ், சூப்பர் டாக்ஸ் ஸ்டாக்சரை எடுத்துக்கொண்டால், சர்க்கார் நடத்தும் தொழில்களில் கிடைக்கும் வருமானமும், தனியார் நடத்தும் தொழில்களில் கிடைக்கும் வருமானமும் சராசரியாக இருக்குமே தவிர, அதற்குக் குறைந்துவிடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் சிறுகத் தொழில்களுக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருகிறோம் என்று கூறினார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் பெரிய தொழில்கள் மட்டும் வளர்ந்தால் போதாது. சிறிய தொழில்கள் அநேகம் வந்தால்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், இன்னும் "மீடியம்" தொழிற்சாலைகள் எல்லாம் வந்தால்தான் நம்முடைய ராஜ்யம் வளம் பெறும். உதாரணமாக, நாம் இரு தேசங்களை எடுத்துக் கொள்ளலாம். இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் வெகுவாக பாதிக்கப்பட்டன. அவர்கள்தான் ரொம்பவும் அடியும் இடியும் வாங்கினார்கள். ஆனால் 12 வருட காலத்திற்குள் இன்று உலகத்திலேயே மிகவும் முன்னேற்றம் அடைந்து மகத்தான தேசங்களாக விளங்குகின்றன. இதற்குக் காரணம் தொழில் துறையில் அவர்கள் காட்டிய ஊக்கமும், தைரியமும் அவர்கள் போட்ட திட்டங்களும்தான். அதனால்தான் அவர்கள் இன்று இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் அதிகமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டும். தொழில்கள் வளருவதற்கு எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்து தரவேண்டும், அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

[Sri K. S. G. Haja Sheriff] [24th January 1961

இப்பொழுது கவர்னர் அவர்கள் உரையில் மதராஸ் ஸிடியைப் பொருத்த மட்டும் எந்தவிதமான ஒரு நன்மையையும் பெரும் வழிக்கு இடம் இல்லை என்பதைக் குறித்து வருந்துகிறேன். அநேக தடவைகள் இந்த ஹௌஸிலேயே நான் சொல்லியிருக்கிறேன், குடிசை வாழ்பவர்கள் சங்கடத்தைப் போக்கி, இந்தக் குடிசைகளே இல்லாமல் இருக்கக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும் என்று. ஒரு தலைநகரமான ஸிடியில், குடிசை வாழ் மக்களின் நிலை இப்படியே இருந்து கொண்டிருந்தால், நகரத்தின் ஹெல்துக்கே அபாயகரமாக இருக்கிறது. மேலும், நகரத்துக்கு மற்ற நாட்டு மக்கள் வரும்போது, இந்த ஸ்லம்-களைப் பார்த்தால், ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் கஷ்டப் படுவதை விட, நமக்கே இந்தக் குடிசைவாழ் மக்கள் வாழ்க்கையைக் காண ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்த ஸ்லம்கள் இல்லாமல் இருக்கவேண்டும். அதுவும் என்னுடைய தொகுதியில் அதிகமாக ஸ்லம்கள் இருக்கின்றன. அவைகளைச் சீர்திருத்தவும் கஷ்டமாக இருக்கிறது. சீர்திருத்த வருபவர்களுக்கு சிலர் கஷ்டங்கள்கூட விளைவிக்கிறார்கள். ஆகவே, இது சம்மந்தமாக சர்க்கார் ஒரு சட்டத்தையே கொண்டு வந்து, இந்த ஸ்லம்-களை ஒழித்து அல்லது அவைகளை இம்ப்ருவ் பண்ண ஒரு ஆக்டே கொண்டு வந்து, அதற்கு எல்லா கட்சிக்காரர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

**Mr. SPEAKER**: இன்னும் பத்து அங்கத்தினர்கள் பேச வேண்டும் என்று என்னிடம் பேர் கொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர் கனம் அன்பழகன் தலைவருக்காக ஒதுக்கி வைத்த அரைமணியைக் கொடுக்கும்படி கேட்கிறார். ஆகவே, மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் எட்டு நிமிஷம்தான் கொடுக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். எட்டு நிமிஷம் ஆனவுடன் மணியடிக்கிறேன், மணியடித்தவுடன் அங்கத்தினர்கள் உட்கார வேண்டும். அப்பொழுதுதான் ஒன்பது அங்கத்தினர்களுக்கும் பேச அவகாசம் கிடைக்கும். இம்மாதிரியான நெருக்கடிக்கு அங்கத்தினர்கள்தான் காரணம். இரண்டாம், மூன்றாம் நாளில் பேச அங்கத்தினர்கள் முன்வரவில்லை. எல்லாரும் கடைசி நாளில் பேச வேண்டுமென்றால் எப்படி முடியும்? ஆகவே, எவ்வளவு கஷ்டம் இருந்தாலும், பொறுத்துக்கொண்டு, எட்டு நிமிஷத்திற்குள்ளாக ஒவ்வொரு அங்கத்தினரும் தன் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. R. MARIMUTHU**: இப்பொழுது மூன்றாவது திட்டம் வகுத்து முடிக்கும் நிலையில் இருக்கிறோம். இன்னம் இரண்டு மூன்று மாதங்களில், மூன்றாவது திட்டத்தை ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறோம்.

(Sri M. Selvaraj in the Chair.)

[illegible]ணத்திற்கு ரூபாய் 291 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது — ரூபாய் 190



24th January 1961] [Sri A. R. Marimuthu]

கோடி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுவதாகவும், பாக்கி 100 கோடி, இந்த ராஜ்ய சர்க்காரே ஈடு செய்து கொள்ளும் என்ற நிலை இருக்கிறது. இந்த 100 கோடி ரூபாயை பழைய வரியையே போட்டு நாம் இதிலே எவ்வளவு ஈடு செய்து கொள்ளமுடியும், புதிதாக எவ்வளவு நாம் வழி செய்ய வேண்டும் என்ற விவரங்கள் தெரியவில்லை. இதைத் தயவுசெய்து அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கும் நிலையில், சாதாரண மக்களுக்கு ஏற்கனவே வரியினால் பாதிக்கப்பட்டு, விலைவாசி உயர்வினால் இருக்கும் நிலையில், அவர்கள் வாழ்க்கைத்தரம் குறைந்து போய் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நாம் மூன்றாவது திட்டத்துக்கு போதிய வரிகளை சாதாரண மக்கள் தலையில் போடக்கூடிய நிலையில் இல்லை, அதை அரசாங்கம் ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் புதிய திட்டங்கள் போடும்போது பண வசதியை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அம்மாதிரி நிலையில், புதுப்புது வருவாய்களை அதிகரிக்க, சாதாரண மக்கள் தலையில் வரியைச் சுமத்தாமல், புதுத் துறையில் வருவாயை அடைய, முன்கூட்டியே சிந்தித்து, அதற்கேற்றவாறு வருவாயை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது விலைவாசி மிகவும் ஏறிய நிலையில் இருக்கிறது. சாதாரண உணவு தானியங்கள் விலை அதிகமாகி இருக்கிறது. சாதாரண மக்கள் மாக அரிசி விலையை எடுத்துக்கொண்டால், சாதாரண மக்கள் வாங்கிச் சாப்பிடமுடியாத அளவுக்கு விலை உயர்ந்து போய் இருந்தது. இம்மாதிரி விலை உயர்வால், விவசாயிகளுக்கு, சிறு நிலக்காரர்களுக்கு, இந்த விலை உயர்வால் செழிப்பு ஏற்படும் என்ற ஒரு எண்ணம் பொதுவாக இருக்கிறது. அந்த எண்ணம் தவறு என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். சாதாரணமாக சிறு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள், இன்றைக்கு அறுவடையானவுடன் சர்க்கார் கிஸ்தி கட்டவும், முன்னமே வாங்கியிருந்த கடனைக்கட்டவும், மார்கெட்டில் உடனுக்குடனே விற்றுவிடும் நிலையில் இருக்கிறார்கள். விலை ஏறும்போது அதிக விலைக்கு விற்க வைத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. ஆகவே, அவர்கள் குறைந்த விலையில் விற்று விட்டுப் போய்விடுகிறார்கள். இடையில் இருக்கும் வியாபாரிகள், அப்படிப்பட்ட வியாபாரத்திற்காகவே இருக்கும் வியாபாரிகள் அந்த நெல்லை வாங்கி, பின்னால் அதிக விலைக்கு விற்று லாபம் அடைகிறார்கள். ஆகவே, இது அந்த விவசாயிகளுக்குப் போகிற தில்லை, இடையில் உள்ள தரகர்களுக்கு, வியாபாரிகளுக்குத் தான் போய்ச் சேருகிறது. இதுதான் இன்றைக்கு இருக்கும், நாம் கண்கூடாகக் காணும் உண்மை. தஞ்சை ஜில்லாவில் இப்பொழுது அறுவடை ஆரம்பித்திருக்கிறது. அங்கே ஒரு மூட்டை ரூ. 23-க்கு விற்றுக் கொண்டிருந்தது. இப்பொழுது அறு வடை காலமானதால், அது ரூ. 18-க்கு குறைந்து விட்டிருக்கிறது. ரூ. 23-க்கு விற்ற நெல் 18 ரூபாய்க்கு விற்கும் சமயத்தில், சாதாரண விவசாயி 18-க்கு விற்காமல், அதிக விலை கூடும் வரை[illegible]

வைத்து விற்போம் என்று வைத்திருக்க முடியாது. அந்த நெல்லை வாங்கி ஸ்டாக் செய்து, அதிக விலை ஏறும் காலத்தில் விற்பது விவசாயி அல்ல, அந்த விலை ஏற்றத்தால் ஏற்படும் நன்மை விவசாயிக்குப் போய்ச் சேருவதில்லை என்பதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும். ஆகவே, விலை விஷயத்தில் கட்டுப்பாடான உத்தரவாதம் இருக்கவேண்டும். மார்கெட்டில் விவசாயிகள் விற்கும் விலைக்கும், வாங்கிச் சாப்பிடுபவர்கள் கொடுக்கும் விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கக்கூடாது. இதை ஆலோசித்து அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் நிலையில் உற்பத்தியாளருக்கும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் பலன் இல்லை; இடையில் உள்ளவர்களுக்குத்தான் பலன் போகிறது.

அடுத்தபடியாக உணவு உற்பத்தி அதிகமாகப் பெருக வேண்டும் என்று பேசும்போது, பல ஆயிரக்கணக்கான, சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாமல் இருக்கிறது. சாகுபடிக்கு லட்சக் கணக்கான விவசாயிகள் தயாராக இருந்து, நிலங்களை ஜாரி செய்து கொடுங்கள் என்று கேட்டும், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதில் காலதாமதம் ஆகக்கூடாது. அதற்கேற்ற நடவடிக்கை அரசாங்கம் துரிதமாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? வெகுக் குறைந்த நபர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. என் தொகுதியில் ஒரு கிராமத்தில் 20 பேருக்குத்தான் வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களைத் தவிர, இன்னும் நிலம் இல்லாதவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். பிறர் மனைக்கட்டுகளில் இருந்துகொண்டு பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, ஹரிஜனங்கள் மட்டுமின்றி, மற்ற நிலம் இல்லாதவர்களுக்கும், இம்மாதிரியான எல்லா விவசாயிகளுக்கும் மனைக்கட்டுகள் வழங்கவேண்டுமென்று, அதற்கேற்ற திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தது உர விநியோகம் பற்றியது. ரசாயன உரங்கள் வாங்க அரசாங்கத்தால் கடன் கொடுக்கப்படுகிறது. அதையும் காலத்தோடு கொடுத்தால், அநேகம் பேர்கள் பயனடைவார்கள். அதிலேகூட அநேகம் பேர்கள், மார்கெட்டில் விற்றுவிடுகிறார்கள்; ஏனென்றால், விவசாயம் செய்ய போதுமான பணம் அவர்களிடம் இல்லை; ஆகவே, உரத்தை விற்றாவது விவசாயம் செய்யலாம் என்றுதான் உர லோன் போடுகிறார்கள். ஆகவே உரத்தை வாங்கினாலும், அதை விற்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, நாம் உர லோன் தொகையை பணமாகக் கொடுத்தால், உரத்தில் ஏற்படும் கள்ள வியாபாரம் நடக்க முடியாமல் தடுக்க முடியும்.



பாக்கேஜ் டீல் திட்டம் எங்கள் ஜில்லாவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றியெல்லாம், பெருமையாகப் பேசுகிறோம். ஓரளவு கடன் வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும், அது காலத்தோடு செய்யப்படவில்லை. இது ஆரம்ப காலத்தில் ஏற்படக்கூடிய சிரமமாக இருக்கலாம். இருந்தாலும், திட்டமிட்டு, சாகுபடி ஆரம்பக்காலத்தில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* **SRI S. RAMALINGA PADAYACHI**: சட்ட மன்றத் தற் 11-30 a.m.
காலிகத் தலைவர் அவர்களே, நமது மாநில கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையை ஆதரித்துச் சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். 13 ஆண்டுகளுக்கு முன் நமது தேசத்தை ஆண்ட மகாராணி அம்மையார் நம் தேசத்திற்கு வருகிறார். நம் நாட்டில் வந்து, நமது அடுத்த சட்டசபைக் கூட்டத்திலே எல்லா அங்கத்தினர்களும் பார்ப்பதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு கவர்னர் அவர்கள் மகிழ்ச்சியை தெரிவித்திருப்பது

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்ற முறையிலே அமைந்திருக்கிறது. அம்மையார் வரவைப் பற்றிக் குறிப்பிட்டதற்காக இந்தச் சபை மூலமாக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டில் தென் மேற்கு பருவக் காற்று—மழை நன்றாக அமையாவிட்டாலும், அதனால் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தாலும், வட கிழக்குப் பருவக் காற்று மழை நன்றாக அமைந்து இருக்கிறது. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் நல்ல மழை பெய்து, எல்லாக் குளங்களிலும் தண்ணீர் நிரம்பி, நஞ்சை நிலங்களெல்லாம் நன்றாக அறுவடை செய்யப்படுவதும், கதிராக இருப்பதும், பூவாக இருப்பதும், பயிர்களாக இருப்பதும் மறு சாகுபடிக்கு வேலைத் தொடங்கி விவசாயக் காரியங்கள் துரிதமாக நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, மிக்க வளம் பொருந்தி செழுமை ஏற்பட்டிருக்கிறது—

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்றபடி இந்த ஆண்டிலே நன்றாக இருப்பதைப் பார்க்கும்போது மழையினுடைய முன் பாதியதை உடைய பயிர்கள் கெட்டாலுங்கூட, பின் பாதியதை உடைய பயிர்களினால் க்ஷேமநலம் உண்டாகியிருக்கிறது.

மழை பெய்ததால் விலைவாசி குறைந்திருக்கிறது என்று சிலர் கேட்கிறார்கள். அறுவடை ஆனபிறகு கிராம மக்கள் வாங்காத நிலைமை ஏற்படும்போது, நகரப் பகுதிகளில் விலைவாசி இறங்கத்தான் செய்யும். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம்

இல்லை. கட்டாயம் இந்த ஆண்டிலே விலைவாசி குறையத்தான் செய்யும். நல்ல மழை பெய்து எங்கு பார்த்தாலும் ஏரி, குளங்கள் நன்றாக நிரம்பி இருக்கின்றன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே, 27 கோடி ரூபாய் பெரிய நீர்ப்பாசனத்திற்காகவும் எட்டு கோடி ரூபாய் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான தொகை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், 13 ஆண்டுகளாக எங்கு பார்த்தாலும் ஏரி, குளங்கள பராமரிப்பு செய்யப்படவில்லை. ஏதோ புதிய பாசனங்களில் வேலை நடந்தாலும், பழைய பாசனங்களில வேலை நடக்கவில்லை. என் தொகுதியில் நூற்றுக்கணக்கான ஏரிகள் எங்கு பார்த்தாலும் தூர் எடுக்கப்படாமல் பழைய பாசனங்கள் எல்லாம் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. மாநிலம் பூராவும் அதுபோல்தான் இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை போதாது. குறைந்த பட்சமாக இன்னும் முப்பது கோடிக்கு அதிகமாக தொகை ஒதுக்கினால்தான் நல்லமுறையில் சிறிய பாசனங்கள் எல்லாம் செப்பனிடப்பட முடியும் என்று இந்தச் சபைக்கு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

என் தொகுதியில் குறிப்பாக நக்கம்பாடி ஏரி, குழுமூர் ஏரி, கீழ்முத்தூர் ஏரி இம்மூன்று ஏரிகளைப்பற்றி பல காலமாக இந்தச் சபையில் சொல்லியிருக்கிறோம். நீர்ப்பாசன கமிட்டி மூலமாகவும் அதற்கு பின் ஏற்பட்ட ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் மூலமாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறேன். ப்ரோக்ரெஸ் ரிப்போர்ட்டில் ஏதோ சொல்லப்படுகிறது. 'நக்கம்பாடி ஏரிக்கு 82 ஆயிரம் ரூபாய், குழுமூர் ஏரிக்கு 84 ஆயிரம் ரூபாய்' என்று அந்தக் கூட்டத்தில் படிக்கப்பட்டது. நடைமுறையிலே ஏதுவும் காணப்படவில்லை. அதற்கு பின் என்ன ஆகிறது? 1958-ஆம் ஆண்டிலும் இம்மாதிரி ரிப்போர்ட் வாசித்தார்கள். அதற்குப் பின் சட்ட மன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அங்கே டெவலப் மெண்ட் கமிட்டியிலே கேட்டபோது, "கலெக்டரிடமிருந்து இந்த ஏரி சம்பந்தமான ரிபோர்ட்டுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது' என்று சொல்லப்படுகிறது.

அதற்குப் பிறகு எஸ்.எம்.ஐ.பி. எக்ஸிக்யூடிவ் இன்ஜினீர் அவர்கள் நக்கம்பட்டி ஏரிக்கு சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் வந்து, 'அது மராமத்து செய்யத் தகுதியற்றது' என்று சொல்கிறார்.

அதற்குப் பின் ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலில் இதைப் பிரேரேபிக்கும்போது, 'டெபுடி கலெக்டரிடமிருந்து அரசாங்கத் திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது' என்று கலெக்டர் சொல்கிறார். இது எப்படியிருக்கிறது பாருங்கள். ஏற்கெனவே இன்ஜினீர் வந்து, 110 ஏக்கர் புதிதாக எடுத்துக்கொள்ள முடியும், அதற்கு 82 ஆயிரம் ரூபாய்' என்று இன்ஜினீர் ரிபோர்ட் கொடுத்திருக் கிறார்கள். அதைத் தாசில்தார் அவர்கள் 80 ஏக்கர்தான் பாய முடியும், ஆகையால், செலவழிக்கப்படக்கூடிய 82 ஆயிரம் ரூபாய்





அதிகமாக இருப்பதால், அந்த ஏரி கைவிடப்படும்' என்று கலெக்டர் ரிபோர்ட் எழுதி அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாக எஸ்.ஐ.எம்.பி. இன்ஜினீர் சொல்கிறார். 'அந்த ஏரியின் மூலமாக அதிகமான ஏக்கருக்குப் பாசனம் செய்ய முடியும், 110 ஏக்கருக்குப் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ள லெவல் சரியாக இருக்கிறது' என்று ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்.

அதைப் போலவே, 84 ஆயிரம் ரூபாய் செலவில் குழுமூர் ஏரி எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. இந்தச் சட்ட மன்றத்தில், அந்தத் தொகுதியில் வந்திருந்த திரு. விஸ்வனாதம் அவர்கள் பல காலமாகச் சொல்லியும் அந்த ஏரிக்கு எந்தவிதமான காரியமும் செய்யப்படவில்லை. இதுபோல் பல ஏரிகளில் பராமரிப்பு செய்யாமல் விடப்பட்டிருக்கின்றன. ஏரிகள் தூர் ஏற்பட்டு, தண்ணீர் தேங்குவது குறைந்து விடுகிறது, விளைச்சலும் குறைவாக இருக்கிறது. இம்மாதிரி ஏரிகளைப் பராமரிப்பு செய்து ஒருமுறை தண்ணீர் பிடித்தால் ஒரு போகம் விளையப் பாசன வசதி ஏற்படும் வகையில் செய்யவேண்டுமென்று சர்க்காரை இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு வயது பதினொரு வயது வரையிலுள்ள சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை எப்படிச் செய்ய முடியும்? மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குச் சரியான சாப்பாடுகூட போட முடியாத நிலையில் எப்படி பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப முடியும்? ஏதோ உச்சி வேளைக்கு ஒரு தடவை பள்ளிக்கூடத்தில் சாப்பாடு போட்டால் போதுமா? போதாது. ஆகவே, மூன்று வேளையும் சர்க்கார் செலவில் சாப்பாடு போட்டால்தான் ஏழை எளிய பிள்ளைகள் படிக்க முடியுமே தவிர, இல்லாவிட்டால் கட்டாயக் கல்வித் திட்டம் என்று சட்டம் போட்டால் ஏழை மக்களுடைய குழந்தை படிக்க முடியாது. பட்டினியாக எப்படிப் பிள்ளைகள் நாள் பூராவும் படிக்க முடியும்? ஆகவே, பள்ளியில் படிக்கும் ஏழை சிறுவர்களுக்கு மூன்று வேளையும் சர்க்கார் செலவில் உணவு அளித்து, கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கின்றேன்.

* **Sri P. JAYARAJ** : மதிப்பிற்குரிய தற்காலிகத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன். கவர்னர் அவர்கள் சென்ற ஆண்டு நிகழ்த்திய பேருரையில் பருவ மழை சரியாக இல்லாததால், விளைபொருள்கள் அவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை என்று கூறினார்கள். இவ்வாண்டு உரையில், பருவ மழை சற்று அதிகமாகப் பெய்ததன் காரணமாக விளை பொருள்கள், மற்றும் குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று உரையில் சொல்லியிருக்கிறார்கள். இந்த மழையினால் தஞ்சை ஜில்லாவிலே பெரிய அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்

[Sri P. Jayaraj] [24th January 1961]

இறது. குடிசைகள் நாசமாயின. இன்று மக்கள் அல்லோல கல்லோலமாகக் காட்சியளிக்கிறார்கள். சர்க்கார் ஐநூர் நடவடிக்கை எடுத்து, பாடசாலைகளையும் கோயில்களையும் பொது இடங்களையும் திறந்துவைத்து மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். அந்தச் சமயத்தில் சர்க்கார் தீவிரமாக நிவாரண வேலைகளை எடுத்துக்கொண்டார்கள். உடனடியாக மாமந்து இலாகா அமைச்சர் அவர்களும், மின்சார இலாகா அமைச்சர் அவர்களும் நான்கு தாலுகாக்களில் இரண்டு நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். சுற்றுப்பிரயாணம் செய்து பார்க்கிற நேரத்தில் அநேகமாக ஹரிஜனங்கள்தான் வீடு இழந்து நின்றார்கள். காரணம் கிரமமான முறையில் அவர்கள் முதலிலேயே வீடுகள் சிறிய குடிசையாக இருந்ததால்தான். இப்படி வெள்ளப் பெருக்கினால் அவர்கள் வீடுகள் நாசமானபோது அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க சர்க்கார் எவ்வளவு நிவாரணம் கொடுத்தாலும் போதாமல் இருந்தது. இப்படி அவர்களுக்கு மீட்டும் உதவி செய்கின்றபோதாவது அவர்கள் போட்டியாங்களை இடங்களில் குடிசை போட்டுக்கொள்ள பட்டா செய்துதர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஜில்லாவில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிர்கள் எல்லாம் பெரும் அளவுக்கு நாசமாகிவிட்டன. ஆகவே எந்த அளவுக்கு நாம் அவர்களுக்கு நிவாரணம் அளித்தாலும் போதாது. முக்கியமாக உரம் வாங்கக் கடன், விதை வாங்கக் கடன் போன்றவைகள் வழங்கினாலும், முன்பு வழங்கப்பட்ட கடன்களானாலும் இன்னும் ஓராண்டு காலத்திற்கு அவர்களிடம் இருந்து வசூல் செய்யக் கூடாது என்பதாக உத்திரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு வாரச் சாகுபடியாளர்கள், குத்தகைதாரர்கள் இவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஒப்புக்கொண்ட குத்தகைப்படி இவ்வாண்டு மிராசுதாரர்களுக்கு குத்தகை அளிக்க முடியாமல் இருக்கும். காரணம் பெருமழையினால் பயிர்கள் நாசமானதுதான். இதற்காக "குத்தகை சரியாக அளக்கவில்லை" என்று மிராசுதாரர்கள் அந்த விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்றிவிடாமல் இருக்க தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கிஸ்தி வஜா செய்ய கூடிய நிலைமை இருந்தாலும் அப்படிச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனை அவசரமாகச் செய்து தரவேண்டும். அங்கங்கு கிரயமாகச் செய்து கொடுப்பதானாலும் சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்டு செய்ய வேண்டும். மேலும் அங்கே அரசலாற்றில் ஒரு பாலம் கட்ட திட்டம் வகுத்திருக்கிறார்கள். சாங்ஷன் செய்யப்பட்டது எங்கே கட்டுவது என்கிற தகராறினால் கான்சல் செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. எங்கே கட்டுவதாக இருந்தாலும் உடனடியாக அதைக் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



24th January 1961] [Sri P. Jayaraj]

ஆடுதுறையில் இருந்து மங்கை நல்லூர் பொறையார் போகிற ரோடைக் கப்பி போடவேண்டுமென்று பன்னிரண்டு ஆண்டுகளாக பொது ஜனங்களிடம் இருந்து மகஜர்களும், கோரிக்கைகளும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த ரோடை துரிதமாகக் கப்பி போட்டுத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கக் கூடியது. இந்தத் திட்டத்தில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். கிட்டத் தட்ட 80 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இர்ரிகேஷனுக்காக 27 கோடி என்று வேறு ஒதுக்கப்பட்டிருக்கிறது. காலா காலத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை ஆங்காங்கே செலவு செய்து ஆறுகளுக்கு எல்லாம் ரிவிட்மெண்டு போன்றவற்றைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். செய்தால்தான் வெள்ள காலத்தில் மழை காலத்தில் உடைப்பு எடுத்துக்கொண்டு சேதமாகாமல் இருக்கும். அப்படிக் கட்டாத காரணத்தினால் எங்கள் பகுதியில் உடைப்பினால் போன ஆண்டு ஆயிரம் ஏக்கருக்குமேல் சேதமாயிற்று. ஆகவே ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு விவசாயிகளுக்கு காலாகாலத்தில் எல்லாவிதமான வசதிகளையும் செய்து தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**Sri M. P. SUBRAMANIAM**: தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் சட்டசபையில் உரையாற்றுவது ஒரு சம்பிரதாயமாக ஆகிவிட்டது என்பதை நாம் ஓரளவுக்கு உணர்கிறோம். இதுவரையில் கவர்னர் ஆற்றியிருக்கும்படியான உரைகளில் மிகவும் சுருங்கிய உரை. அளவில் மாத்திரம் அல்ல. அதில் அடங்கியுள்ள சங்கதிகளிலும் மிகச் சுருங்கிய உரை. நம்மை எல்லாம் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சனைகள் இதில் இடம் பெறவில்லை என்று பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது என்று மற்றவர்கள் சொல்வது போல இவர்களும் சொல்லியிருக்கிறார்களே தவிர அதைக் கட்டுப்படுத்த என்ன செய்வது என்பதைப்பற்றி பேச்சே இல்லை. நோயாளி ஒருவன் டாக்டரிடம் சென்று வயிற்று வலி என்றால் டாக்டர் மருந்து கொடுக்காமல் ஆமாம் உனக்கு வயிற்றுவலிதான் என்று கூட ஒப்புக்கொள்வதில் என்ன பயன் உடனடியாக விளையும் என்று பார்க்கவேண்டும். அப்படி விலைவாசி உயர்வுப் பிரச்சனைகளுக்கு என்ன பரிகாரம் என்று சர்க்கார் இதிலே ஒன்றும் குறிப்பிடவில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது கவர்னர் பெருமான் உரையில் புதுத் திட்டங்கள்பற்றி ஒன்றும் இல்லையே என்பதுதான். ஒவ்வொரு ஆண்டும் அதில் பல சங்கதிகளை எதிர்

பார்ப்பது அவசியம் இல்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று முதலிலேயே நாம் திட்டங்களை வகுத்துக்கொண்டுவிடுவதனால் ஒவ்வொரு ஆண்டும் அந்த அந்தத் திட்டத்தில் முதல் ஆண்டு, இரண்டாம் ஆண்டு என்றுதான் செயல்படுகிறோமேயொழிய ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் திட்டம்போட என்ன இருக்கிறது என்று சொல்லலாம். அப்படியே இருந்தாலும் நாம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் முடித்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமைக்கும் தருவாயில் இருக்கிறோம். ஆகவே கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி என்ன, அபிவிருத்தி என்ன, அவற்றினால் மக்கள் எவ்வளவு தூரம் நன்மை அடைந்திருக்கிறார்கள் இவற்றையெல்லாம் குறிப்பிட்டு இப்போது பேசியிருந்தால் மிக்க பயன் இருக்கும். அதைப்பற்றியும் குறிப்பிடவில்லை.

கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏராளமாகப் பணத்தைச் செலவு செய்திருக்கிறோம். அண்டை நாட்டில் கடன், உள்நாட்டில் கடன், அதிக வரிவிதிப்பு என்று பலவகைகளில் வருவாயைக் கூட்டி ஏராளமாகச் செலவு செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏராளமாக மூலதனம் செய்ய இருக்கிறோம். ஆகவே அதற்குத் தேவைப்படுகிற பணத்தை கடன் மூலமாகப் பெறப் போகிறீர்களா? அல்லது புது வரி விதிப்பை மேற்கொள்ளப்போகிறார்களா என்பதைப்பற்றி ஒன்றும் இந்த உரையில் காணவில்லை. சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை எவ்வாறு ஒழிக்கப் போகிறார்கள்? வேலை இல்லாத் திண்டாட்டத்தை எவ்வாறு நீக்கப் போகிறார்கள்? தனிப்பட்ட மனிதனுடைய வருமானத்தை எந்த வகையில் உயர்த்தப் போகிறார்கள்? இவைப்பற்றி ஒன்றும் காணப்படவில்லை.

ஆனால் உண்மை நிலை என்னவென்று பார்த்தால் இன்று சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வு சிறிதாவது குறைந்திருக்கிறதா என்றால் குறையவில்லை என்று நான் கூறவில்லை. அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது. அரசாங்க ஆதரவு பெற்ற திட்டக்கமிஷன் அதன் குழுக்கள் மூலம் வெளியிட்டிருக்கிற அறிக்கைகளைப் பார்த்தால் தெரியும், அக்ரிகல்சரல் லேபரின் வருமானம் இன்று எப்படியிருக்கிறது என்பது. அவர்கள் தயாரித்த புள்ளிவிவரத்திலேயே கூறப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இருந்த வருமானம், 105 ரூபாயாக இருந்தது இன்று 99 ஆக குறைந்துவிட்டது என்று. இதிலிருந்து என்ன தெரிகிறது? இன்று சமுதாயத்தில் 70 சதவிகிதம் விவசாயத்தில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்தில் அதிகளத்தில் உள்ளவர்கள் நிலம் இல்லாத விவசாயக் கூலிகள்தான். அவர்கள் வாழ்க்கைத்தரத்தில் சிறிதும் முன்னேற்றம் இல்லாதது மட்டுமல்ல, அவர்கள் வாழ்க்கைத்தரம் கீழே போயிருக்கிறது.





இதை அந்த அறிக்கையே சுட்டிக் காட்டுகிறது. ஆக பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைந்திருக்கிறதா என்பதை எல்லோரும் கட்சிக் கண்ணோட்டத்துடனில்லாது பார்க்க வேண்டும். நாட்டிலே விலைவாசி மேலும்மேலும் பெருகி வருகிறது என்று அவர்களே சொல்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் அளிக்கப்பட்டிருக்கிற இந்நேரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமுடிவில்கூட வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை இன்னும் கடுமையாக இருக்கும் என்று. வேலைவாய்ப்புகளை நாம் அதிகம் ஏற்படுத்துவதைவிட வேலையில்லாதவர்களின் எண்ணிக்கைதான் வளரும், சுமார் 140 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியாத ஒரு நிலைதான் இருக்கும் என்ற ஒரு நிலை இருக்குமானால் இந்த ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாட்டு மக்களுக்கு நன்மையிருக்கிறதா என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்தபடியாக, நான் குறிப்பிட விரும்புவது இந்த நாட்டிலுள்ள சகலப் பிரச்னைகளுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களை மருந்தாக நம் நாட்டு மக்களுக்கு வைக்கிறோம். இந்தத் திட்டங்கள் உருவாவதற்கு ஜனநாயக வழியில் செயலாற்றுகிற இந்த அரசாங்கத்திற்கு உண்மையான பங்கிருக்கிறதா என்றால் இல்லை என்பதை நான் கூறுவது மட்டுமல்ல, பெரிய அறிஞர்களும், பொருளாதார நிபுணர்களும் கூறியிருக்கிறார்கள். சில நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை வைத்து அவர்கள் சொல்வதே வேத வாக்கு என்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அவர்களுக்கு பொறுப்பான அமைச்சரவைகளோ அதில் கொஞ்சித்தேனும் கை வைப்பதற்குக்கூட வழியில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அதிலுள்ளவர்கள் எல்லோரும் அறிஞர்கள், அவர்கள் எல்லோரும் நிபுணர்கள், அவர்கள் எல்லோரும் திறமைசாலிகள், அவர்கள் நல்ல அனுபவசாலிகள் ஆகவே அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வாதம் செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்களைவிட, அமைச்சர்களைவிட திறமையுள்ள அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களை வைத்து ஆட்சி நடத்துவது என்றால் இதைவிட திறமையாக அரசாங்கத்தை நடத்த முடியும். ஆனால் அது ஒரு ஜனநாயக அரசாங்கமாக இருக்க முடியாது. 10,000 கோடி அளவில் செலவு செய்யக் கூடிய திட்டங்கள் வகுப்பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதில் யாதொன்றும் சொல்வதற்கு வாய்ப்பில்லை. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருவதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். திட்டக் கமிஷன் என்ன சொல்கிறதோ அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றதொரு நிலைதான் இன்று இருக்கிறது. மாகாண அரசாங்கங்களின் நிலை எப்படியிருக்கிறதென்றால், மத்திய அரசாங்கத்தின் தயவால்தான் பெரும்பாலான காரியங்களை செய்யவேண்டியிருக்கிறதே தவிர நாம் சுதந்திரமான நிலையில் இருக்கவில்லை, செயலாற்ற முடியவில்லை என்பதைத்தான் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசும்,

மாகாண அரசாங்கங்களும் சேர்ந்து 6,600 கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூலதனம் இட இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் 3,825 கோடி ராஜ்ய அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2,775 கோடி மத்திய அரசாங்கத்திலிருந்து நாம் கடனுதவி பெறவேண்டும். ஆக 10, 11 ராஜ்யங்களும் சேர்ந்து ஆயிரம் கோடி அளவிற்குத்தான் அவர்கள் பணத்தை உபயோகிக்க முடியும். ஆகவே, 5,000 கோடிக்கு மேல் மத்திய அரசின் தயவின் பேரில்தான் திட்டங்கள் தீட்ட வேண்டும். நிலைமை இப்படியிருந்தால், நம் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களுக்கு உரிமையில்லாது போகிறது. இதைத்தான் பல ராஜ்யங்கள் இன்று எதிர்க்கிறார்கள். பல ராஜ்யங்கள் தங்கள் தேவைகளையொட்டி, 400, 500 கோடி வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய அரசாங்கம் நேரிடையாக எடுத்துக் கொள்ளாவிடினும் நாங்களாக எடுத்துக்கொள்ள வாய்ப்பிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆக, மாகாண அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் நிலைதான் இன்று இருக்கிறது. மத்திய அரசு, திட்ட கமிஷனுக்கே எல்லா அதிகாரங்களும் இருக்க வேண்டுமென்று சொல்கிறது. திட்டங்களை வகுப்பதற்கு, அவைகளை நிர்ணயிப்பதற்குள்ள முழு உரிமையும் திட்டக் கமிஷனுக்கே இருக்கவேண்டுமென்கிறது மத்திய அரசு. நாங்கள்தான் மக்களின் பிரதிநிதிகள், ஆகவே எங்களுக்குத்தான் இதுபற்றிய முழு அதிகாரங்களும் இருக்க வேண்டும் என்று மாகாண அரசாங்கங்கள் கோர மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இன்று ஒரு போராட்டம் ஏற்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இன்றைய நிலை எப்படி இருக்கிறதென்றால், இந்தியா முழுவதும் ஒரே நாடு என்ற நிலை கொஞ்ச கொஞ்சமாக சரிந்து வருகிறது, இது ஒரு நல்ல அறிகுறி என்றுதான் நான் நினைக்கிறேன். 1947-ல் இருந்த உணர்வுகூட இன்று இல்லையே என்று பெரிய தலைவர்கள்கூட கூறுகிறார்கள். நமது மாகாணத்தை எடுத்துக் கொண்டால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 291 கோடி தரப்படும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 400 கோடி நாம் கேட்டிருந்தோம். 290 கோடியில் 190 கோடி மத்திய அரசாங்கத்தின் தயவால் நமக்கு கிடைக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பணம் ஒதுக்குவதில், அந்த ராஜ்ய மக்களின் எண்ணிக்கை, அதன் பிற்போக்குத்தன்மை, எந்த அளவு திட்டங்களை நிறைவேற்றுவதற்குள்ள திறமை இருக்கிறது, டெக்னிக்கல் பெர்சனல் எவ்வளவு இருக்கிறது, இவைகளைப் பொறுத்துத்தான் திட்டம் வகுக்கப்படுமென்று நிதி அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள், சென்ற காலத்தில் நம்மைவிட திறமையாக செயலாற்றியவர்கள் இல்லையென்று. அதோடு பிற்போக்கான நிலையில்தான் நாம் இருக்கிறோம் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நமக்கு தகுதியும் இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நாம் செலவு செய்திருக்கிறோம்.



ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு இதை விட அதிகமாக உறுதியாக கிடைத்திருக்கவேண்டும். (மணியடிக்கப் பட்டது) முடித்துக் கொள்கிறேன். இறுதியாக ஒன்றே ஒன்று. எல்லோருடைய கவனத்தையும் இன்று ஈன்றிருப்பது சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்று ஏற்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிச்சயமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உத்தரவாதம் தரப்படவில்லை. நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கிழக்கு ஜெர்மனியில் பரிசீலனை செய்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள எல்லா முயற்சியும் எடுப்போம் என்று நம்பலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்க அமைச்சர்களும், பிரதம மந்திரியும், பணம் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது குறிப்பிட்டது, பெரும் தொழில்களைத் துவங்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது, மாகாண அரசாங்கங்கள் கவலைப்படவேண்டியதில்லை என்று கூறப்பட்டது. ஆக, இரும்பு உருக்குத் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை, தர்மல் ப்ளாண்ட், அணு சக்தியின் உலை இவைகள் எல்லாம் ஏற்படுத்துவது மத்திய அரசின் பொறுப்பு என்று கூறப்பட்டது இப்பொழுது பொய்ப்பிக்கப்பட்டு விட்டபோது, இரும்பு உருக்கு தொழிற்சாலை உறுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு வழியில்லாதிருக்கிறது. ஆகவே, நான் மேற்குறிப்பிட்டிருக்கும் தொழிற்சாலைகளை பெற வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு கவர்னர் உரையில் இதுபற்றியொன்றும் இல்லை என்ற வருத்தத்தை தெரிவித்து முடித்து கொள்கிறேன்.

* **Sri M. C. MUTHUKUMARASWAMY**: தாற்காலிக தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையில், கால தேச வர்த்தமானத்தை அறிந்து நாட்டின் நிலையை நன்கு புரிந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில் பெய்த மழை காரணமாக தஞ்சை ஜில்லாவில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இன்று சேதமடைந்திருக்கிறது என்பதை கூறாமல் இருக்க முடியாது.

**(Deputy Speaker in the Chair.)**

இந்த மழையினால் சேரிகள்தான் அதிகமாக சேதமடைந்திருக்கின்றன, பள்ளத்தில் கட்டப்பட்டதின் காரணமாக அவர்கள் வீடு இழந்திருக்கிறார்கள். சமீபத்தில் பெய்த மழை ஹரிஜனங்களின் பிரத்தியட்ச நிலையைக் காட்டி விட்டது. மற்ற ஜில்லாக்களைவிட தஞ்சைதான் பிற்போக்கானது என்றுதான் கூறவேண்டும். மற்ற ஜில்லாக்களில் ஹரிஜனங்களுக்கு ஏதோ ஒன்றிரண்டு ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தாலும், தஞ்சையில் குடியிருக்கக்கூட மனையின்றி தவிக்கிறார்கள் அங்குள்ள ஹரிஜன மக்கள் என்பதை **12-00 noon.** நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு பிரிட்டிஷார் காலத்திலேயே பஞ்சம தரிசு நிலங்கள்என்று (**Reserved lands for Panchamas**) குறிப்பிடப்

[Sri M. C. Muthukumaraswamy] [24th January 1961

பட்டிருக்கிறது. அந்த பஞ்சம தரிசு நிலங்கள் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்தால் அவைகளை எல்லாம் ஹரிஜனங்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்த நிலையில் அவர்களுக்கு என்று இருந்து வந்த சட்டத்தை மாற்றி அமைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதை அரசாங்கம் உடனடியாக கவனிக்கவேண்டும் என்று நான் மிகவும் தயவாக கேட்டுக்கொள்கிறேன். இப்போதும்கூட ஹரிஜன மக்கள் புறம்போக்கு நிலங்களை அனுபவித்து வந்தாலும்கூட, அதிலும் குறிப்பாக எட்டு வருடம் பத்து வருடங்கள் என்று அனுபவித்து வந்தாலும்கூட, சில இடங்களில் அவர்கள் அனுபவித்து வருகின்ற இடங்களிலிருந்து அவர்கள் வெளியேற்றப் படுகிறார்கள். இதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இதில் உடனடியாக அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அதை அடமானம் செய்து கொடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு தரிசு நிலங்களை, உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில், இந்த நிலங்களை எல்லாம் ஏழை மக்களுக்கு பிரித்துக்கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொடுப்பது, நடை பாதைகள் போட்டுக் கொடுப்பது, பம்பு வைப்பது போன்ற இந்த விதமான வேலைகளை தான் செய்து கொடுக்கிறார்களே தவிர பெரிய தொழில் துறையில் அவர்களுக்கு எந்த விதமான வாய்ப்பும் செய்து கொடுத்திருப்பதாக தெரியவில்லை. இருக்கின்ற பஸ் ரூட்-களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அவைகள் எல்லாம் ஹரிஜனங்கள் அல்லாதார் கையில் தான் இருக்கின்றன. எத்தனையோ பஸ் பெர்மிட்டுகள் ஹரிஜனங்களுக்கும் கொடுக்கலாம். சட்டத்தில் இதற்கு இடமில்லை என்று ஒதுக்கிவிடுவது அவ்வளவு தர்மமல்ல. அவர்களுக்கும் எந்த விதத்திலாவது பஸ் பெர்மிட்டுகள் கொடுக்க முன்வரவேண்டும். இன்னும் பல விதமான லைஸன்ஸ்கள் இருக்கின்றன. இம்மாதிரிப் பட்ட லைஸன்ஸ்கள் எல்லாம் ஹரிஜன மக்களுக்கும் தாராளமாக கொடுக்க வேண்டும். அப்படி அவர்களுக்கும் வழங்கினால்தான் ஹரிஜனங்கள் முன்னுக்கு வரமுடியும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன் வெல்பார் டிப்பார்ட்மெண்ட் என்று ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக ஹரிஜன மக்களுக்கு தொண்டாற்றி வருவதாக சொல்லுகிறார்கள். அந்த டிப்பார்ட்மெண்டில் கூட ஹரிஜன மக்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் கொடுப்பதில்லை என்பதை நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற ஹரிஜன் வெல்பேர் டிப்பார்ட்மென்டை எடுத்துக்கொண்டால் பெயர் அளவில்தான் ஹரிஜன் என்று இருக்கிறதே தவிர 100-க்கு 85 அல்லது 90 வீதம் மற்ற ஜாதி இந்துக்கள்தான் அங்கு வேலை செய்து வருகிறார்கள் என்பதை என்னால் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. அதைப்



24th January 1961] [Sri M. C. Muthukumaraswamy]

போலவே மற்ற இலாக்காக்களை எடுத்துக்கொண்டாலும், கழிந்த 13 வருட காலத்தில் ஹரிஜனங்களுக்கு குறிப்பாக முனிசிபாலிட்டிகளை எடுத்துக்கொண்டால், எங்காவது 10 ஹரிஜனங்களுக்கு உத்யோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திட்டவட்டமாக சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். எந்த இடத்திற்கு ஹரிஜனங்கள் வேலைக்குப் போனாலும் இடம் காலியில்லை (நோ வேக்கன்ஸி) என்று தான் சொல்லுகிறார்கள். ஆகவே இந்த நிலைமையை மாற்றி அமைத்து அரசாங்கம் நல்லதொரு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் தஞ்சை ஜில்லாவை, பொறுத்தவரையில் விவசாயப் பிரதேசம் எடுத்துக்கொண்டாலும் அங்கு ஏறக்குறைய ஐந்தாறு மாதங்கள் தான் சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற மாதங்களில் எல்லாம் சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் ஆறு மாதங்கள் சாகுபடி வேலைகளை பார்த்து விட்டு பாக்கி ஆறு மாதகாலம் சும்மா இருப்பதின் காரணமாக; அங்குள்ள மக்களின் நிலைமை மிகவும் மோசமாகி பிற்போக்குத் தன்மையை அடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு ஏற்கனவே இரண்டொரு தொழிற்சாலை இருப்பதாக அறிகிறேன். அதோடு நிறுத்திவிடாமல் இன்னும் அதிகமாக தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. S. ARUNACHALAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமக்கு கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை அதிகமாக ஆதரித்து சில வார்த்தைகள் குறிப்பிட்டு பேச விரும்புகிறேன். இந்த அறிக்கையில் மூன்று முக்கியமான திட்டங்களை குறிப்பிட்டு இவைகள் மூலமாக நாட்டிலுள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் முக்கியமானது பாசனமாகும். பாசன வசதிக்காக நமக்கு அதிக நிதி ஒதுக்கி சிறு சிறு பாசனங்களையும் எடுத்து விவசாய மக்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குத் தகுந்த நிதியை ஒதுக்கியிருப்பதைப்பார்த்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். இதில் சிறு பாசனங்களுக்காக நடவடிக்கை எடுக்கும்போது ஆங்காங்கு அதிகாரிகள் சென்று எந்தெந்த பாசன வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும், மழை காலங்களில் எந்த கால்வாய்களில் தண்ணீர் சரியாக போகும் என்பதைப்பற்றி எல்லாம் நன்றாக ஆராய்ந்து அதன் படி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதான் இதில் முக்கியமான நோக்கமாய் இருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதில் வேலை செய்யக்கூடிய நேரங்களில் சில சந்தர்ப்பங்களில் ஹரிஜன மக்களுக்கு வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை கொடுக்க முன்வர வேண்டும். சில ஹரிஜனங்கள் பணை

வசதியுள்ளவர்கள் சில வேலைகளை எடுக்க முன் வந்தால், அவர்களுக்கு தகுந்த சொத்துக்கள் இருக்கிறதா, இதை அவர்கள் செய்ய முடியுமா ? என்று எல்லாம் பலவிதமான குறிக்கோள்களை காட்டி அவர்களுடைய கோரிக்கையை புறக்கணித்துவிடுகிறார்கள். ஆகவே ஹரிஜன மக்களில் வசதியுள்ள சிலர் வேலைகளை எடுத்து நடத்தக் கூடியவாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே ஒரு சில ஹரிஜன மக்கள், பண வசதியுள்ளவர்கள் வேலைகளை எடுத்து நடத்துவதற்கு முன் வருவார்கள் என்றால் அவர்களுக்கு எந்த விதமான தடையும் இல்லாமல் வேலைகளை கொடுக்கவேண்டும். அதற்காக அரசாங்கம் வேண்டிய உத்தரவை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற்சாலைகளைப்பற்றி நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கு பார்க்கவும் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதைப்பற்றி மிக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இப்போது தொழிற்சாலை இருக்கும் இடங்களில் வேலை வேண்டும் என்று ஹரிஜன மக்கள், அதிலும் டர்னர் கார்பெண்டர், பிட்டர்கள் போன்ற கோர்ஸ்-களுக்கு ஒன்றரை வருடங்கள் பயிற்சி பெற்றதின் பின்னால், வேலை மனுக்களை அனுப்பினால் அவர்களுக்கு வேலையில்லை என்ற பதில் வருவது சகஜமாகிவிட்டது. இவர்களுக்கு எல்லாம் தகுந்த முறையில் எம்ப்ளாய்மெண்ட் மூலம் அல்லது ஒரு எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அதற்கு தகுந்தவாறு இடங்களை ஒதுக்கி கோர்ஸ்-கள் படித்து முடித்த மாணவர்களுக்கு வேலைகொடுக்க அரசாங்கம் அக்கறை காட்டி, தனிப்பட்டவர்கள் நடத்தும் பாக்டரிகளாய் இருந்தால் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து இப்படிப்பட்ட ஹரிஜன மக்கள்—தகுதி உடையவர்களாயிருந்தால் அவர்களை பரிசீலனை செய்து கூட எடுத்துக்கொள்ளலாம்—இப்படி பரிசீலனை செய்து பார்த்து அவர்களுக்கு வேலை இல்லை என்ற வருத்தமான வார்த்தைகள் அடங்கிய லெட்டர்களை அனுப்பாமல் அவர்களுக்கு வேலைகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்கள் அரசாங்கத்திற்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடைஞ்சல் இல்லாமல் சில புறம்போக்கு நிலங்களில், ஒரு சென்ட் கூட நிலமில்லாத ஏழை மக்கள், பயிர் செய்துவிட்டால் அதற்காக அதிகமாக தீர்வை, அபராதம் போடுகிறார்கள். அந்த கிராமத்திலுள்ள மக்கள் இவர்கள் பயிர் செய்வதினால் எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னாலும் கூட—அது மட்டுமல்ல அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் இவர்களுக்கு கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொன்னாலும் கூட—சில அதிகாரிகள் ஹரிஜன மக்களை துன்புறுத்தி வருகிறார்கள். இடைஞ்சல் இல்லாத இடங்களில் பயிர் செய்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காமல் இருக்குமாறு அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவு போடவேண்டும் என்று இந்த சபையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே அநேக ஹரிஜன மக்கள்





இப்படிப்பட்ட அல்லலில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட கஷ்டங்களைத் தீர்த்து அவர்களுக்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு மனைகள், வீட்டு மனைக்கட்டுகள் வாங்கும் நேரத்தில் மிக மிகத் தாமதம் ஏற்படுகிறது. ஒரு சில இடங்களில் தேன் கூட்டிலே ஈக்கள் எப்படி நிறைந்திருக்கின்றனவோ அதே மாதிரி ஹரிஜனக் காலனிகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் மனைகள் கேட்டால் மிக மிக தாமதம் ஏற்படுகிறது. சட்டப்படி பல முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸர், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அவர்களுக்கு போதிய அதிகாரம் கொடுத்து அவர்கள் மூலமாக அந்த மனைக்கட்டுகளைக் கொடுக்க அரசாங்கம் ஒரு உத்திரவு போட வேண்டும். சீக்கிரமாக தாமதமில்லாமல் மனைக்கட்டுகளை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri P. K. MOOKIAH THEVAR** : சட்ட சபை துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்பு மிக்க கவர்னர் அவர்களுடைய உரையில் மக்களுடைய எந்தப் பிரச்னையையும் தீர்க்கக் கூடிய முறையில் திட்டங்களோ, சொற்களோ எதுவும் அமையவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்கது. இது வழக்கமாக கொடுக்கப்படுகிற அரசாங்கத்துத் தரப்பு அறிக்கையாக வழங்கப்பட்டிருக்கிறதே யொழிய, பெரும் மாறுதல்களைக் கொடுக்கக் கூடியதாக அமையவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய ஸ்டேட்டிற்கு "நோ பிராப்ளம் ஸ்டேட்" என்று பெயர். எதையும் விட்டுக்கொடுத்து, அமைதியான முறையில் எதையும் சாதிக்கக் கூடியவர்கள் என்று சொல்லப்படக் கூடிய ஸ்டேட். அதைப் பார்க்கும்போது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 100 கோடி ரூபாயை விட்டுக்கொடுக்கும் அளவுக்கு, ராஜ்யப் புனரமைப்பிலே தமிழ் மக்கள் நிறம்பிய பகுதியாகிய தேவிகுளம், பீர்மேடு பகுதியை விட்டுக்கொடுத்து, பிறகு பம்பையாறு திட்டத்தை சமீபத்தில் விட்டுக்கொடுத்து, பிறகு சேது சமுத்திரம் திட்டத்தை விட்டுக் கொடுத்து, இந்தப் பகுதி மக்கள் வெளி நாடுகளான சிலோன் முதல் மலேயா, பர்மா போன்ற இடங்களுக்குச் சென்று அங்கு இடம் இல்லாத நிலையில் அவர்கள் அல்லலுக்கு ஒரு பரிகாரம் தேடும் முறையில் ஒரு திட்டத்தை மூன்றாவது திட்டத்தில் காணாது விட்டுக்கொடுத்த திட்டமாக இருப்பதைப் பார்க்க வருந்தக் கூடியதாக இருக்கிறது. ஏற்கனவே, இங்கு இருக்கக் கூடிய ஆறுகளில் எந்த விதமான புதுத் திட்டத்தையும் போடுவதற்கு வழியில்லை என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் அப்பர் பெரியாறு திட்டத்தைப் பொருத்த வரையில் அது இன்று இண்டர்-ஸ்டேட் ரிவர் இல்லை என்று கேரள சர்க்கார் சொல்வதாகத் தெரிகிறது. அதையும் நமது சர்க்கார் விட்டுக் கொடுப்பதுபோன்று இருக்கின்றார்கள். நமது சீஃப் என்ஜினீயரோ அது ஒரு இண்டர்ஸ்டேட் ரிவர் தான் என்று சொல்லியிருக்

ஞர்கள். எப்படியும் இதைச் செய்தாலொழிய நமக்கு வேறு விமோசனமே கிடையாது. இந்த ஒரு திட்டம் தான் பெரிய திட்டம். இதையும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் முக்கியமாக பிரிட்டிஷ் ராணி அவர்களின் வருகையைக் குறிப்பிட்டு அவர்களுக்கு வரவேற்பு கூறியிருக்கிறார்கள். அந்நிய நாட்டுக்காரர்களுக்கு இயற்கையாகவே பெருமை கொடுக்கக் கூடிய குணம் இந்தியாவிற்கு உண்டு. "இன்டியன் ஹாஸ்பிடாலிட்டி", பண்பாடு மிகவும் பெயர் போனது. நாம் அவர்களுக்குக் கொடுக்கும் ஹாஸ்பிடாலிட்டியில் கால் பங்காவது அவர்கள் நமக்குக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, ரத்தினக் கம்பளம் விரித்து ராணியை வரவேற்கத் தயார் செய்து கொண்டிருக்கிறோம். ராணி எந்தத் திசையில் போவார்கள், அந்த திசையெல்லாம் ரோடுகள் போடப்பட்டு சென்னையில் [illegible] அந்த திசையில் போகும் என்று கூடத் தெரியாமல் இருக்கிறது. அந்த அளவுக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. அதே நேரத்தில் நமது நாட்டுத் தலைவர்களுக்கும், நாட்டுக்கும் அவர்கள் மதிப்புக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. உதாரணமாக சமீபத்தில் நேரு அவர்கள் யுனைட்டெட் நேஷன்ஸுக்குப் போய் அங்கு பேசிவிட்டு வருகின்றபோது, ஆங்கிலேயருக்குப் பிடிக்காத ஒன்றைப் பேசிவிட்டார் என்று, இங்கிலாந்து தேச விமான நிலையத்தில் வந்தபோது அவரை வரவேற்க அதிகாரிகள் கூடப் போகவில்லை என்று பத்திரிகைகளில் படித்தோம். இரண்டு வாரம் நேதாஜி அவர்களைக் குறிப்பிட்டு "Nebru is giving reception to the daughter of India's quisling" என்று அனிடா போஸைப் பற்றிக் குறிப்பிடும்போது பத்திரிகைகளெல்லாம் நேற்று வரையில் எழுதி வருகின்றன. நாம் மரியாதை கொடுக்கிறோம். ஆனால் அதே நேரத்தில்—வேதனை தருகிற அளவுக்கு—அவர்கள் மரியாதை கொடுக்கின்றார்களா? வெளி நாட்டுக்காரர்களை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். நமது தலைவர்களுக்கும், நமது நாட்டிற்கும் அதே முறையில் வரவேற்பு மரியாதை இருக்க வேண்டும் என்பதை வருத்தத்தோடு சொல்லாமல் இருக்க முடியாது.

அதே மாதிரி இன்று ஒரு ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கூடச் சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆதிமூலம் அவர்கள் அரசாங்கத்தலையீடுப் பற்றிப் பேசியதற்கு பீடி, சிகரெட் என்று மிகவும் தரக்குறைவாகப் பேசினார். வரப்போகின்ற தேர்தல் காரணமாக கட்சியின் தலையீடு, கட்சி அங்கத்தினர்களின் தலையீடு அதிகமாகிவிட்டது. இதைப் பற்றி எனக்குக் கொடுத்திருக்கக் கூடிய 7-8 நிமிஷங்களில் அதிகமாக பேச முடியாது. என்றாலும் நிறையச் சொல்ல முடியும். உதாரணமாக எங்கள் பகுதியில் வைகையாற்றுத் திட்டம் என்று ஒரு திட்டத்தை போட்டு நிறைவேற்றினார்கள். அதிலே ஆண்டிப்பட்டிக்குப்பக்கத்தில் அணை



போடப்பட்டது. இந்தத் திட்டம் நீண்ட நெடுங்காலமாக போஸ்ட்-வார் ப்ளானில் இருந்தது. இதற்காக 14 கிராமங்களைக் காலி செய்தார்கள். 22 மைல் நீளத்திற்கு, 22,000 ஏக்கருக்கு உசிலம்பட்டி பகுதியில் பாயும் என்று—இன்றல்ல, நேற்றல்ல—வெகுகாலமாக பேசப்பட்டது. உசிலம்பட்டி பகுதியில் பெருங்காநல்லூர் பகுதி மிகவும் பிற்போக்கான ஒரு பகுதி. இதற்காக வெள்ளைக்காரர்கள் இங்கே இருந்தபோது மூன்று விதத் திட்டங்களை பெருங்காநல்லூர் வரை [illegible] போட்டார்கள். அதில் ஒரு திட்டம்தான் அணைப்பட்டியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நாகமங்கலம், வைகை கால்வாய் திட்டம். அதே திட்டத்தில் 22 மைலுக்கு பெருங்காநல்லூர் வரையில் கால்வாய் செல்லும் என்று ஒரு பர்லாங்குக்கு ஒரு கல் வீதம் போட்டு பெருங்காநல்லூரில் கடைசி கல் 4 அடி உயரத்தில் போடப்பட்டது. கால்வாய் வெட்டி தண்ணீர் விடுவதற்காக கால்வாய் வெட்டப்பட்டு 17-வது மைலில் 17-வது மைல் வரையில் வெட்டப்பட்டிருக்கிறது. கால்வாயின் நீளம் 22 மைலோடு இது நிறுத்தப்பட்டிருக்கிறது. மைல் என்று ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளைப் பற்றிய புத்தகத்தில் போடப்பட்டுள்ளதே, அதில் பாக்கி 5 மைல் எங்கே போயிற்று? என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த 5 மைல் கால்வாயை மாற்றி அமைப்பட்ட ஒரு சிலருக்கு தண்ணீர் பாயும் அளவுக்கு கால்வாய் திட்டத்தை மாற்றி விட்டார்கள். அரசாங்கத்தில் செல்வாக்கு படைத்தவர்கள், கட்சியில் செல்வாக்கு படைத்தவர்கள் சிலருக்காக இந்தத் திட்டம் மாற்றப்பட்டிருக்கிறது என்று நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். சமீபத்தில் அந்தப் பகுதி மக்கள் அதைப் பற்றி அச்சிட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை உடனடியாக கவனித்துச் செய்யவேண்டும். ஏனெனில் ஏற்கனவேயே அங்கு ஒரு அநீதி நடந்து விட்டது. அதாவது திருமங்கலம் பகுதியில் அய்யனார்குளம் பத்தாறு என்ற இடத்தில் ஒரு கால்வாய் வெட்டி, தண்ணீர் செல்வதற்கு வழி செய்திருந்தால் உசிலம்பட்டி பகுதிக்குத், தலைகீழாகத் தண்ணீர் பாயும். என்ன செய்திருக்கிறார்கள் என்றால் அந்தப் பகுதி பெரிய மேடாக இருக்கிறது, செலவு அதிகம் ஆகும். ஆகவே இந்தத் திட்டம் முடியாது என்று புறக்கணித்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். புறக்கணிக்கப்பட்டதோடல்லாமல், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று கூட்டங்களைப் போட்டு, "உங்கள் பகுதி எம்.எல்.ஏ. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர், எங்களுக்கு ஓட்டுப் போட்டிருந்தால் இந்தத் திட்டம் வந்திருக்கும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்குமேல் வரியும் வாங்கி இருக்கிறார்கள்.

**THE HON. SRI P. KAKKAN**: திரு. மூக்கையாத் தேவர் அவர்கள் இந்தச் சபையில் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**SRI P. K. MOOKIAH THEVAR**: அந்தப் பாடத்தை உங்களிடம் தான் கற்றுக்கொண்டிருக்கிறேன். உயர்ந்த நிலையில் இருந்து கூடிய அமைச்சர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்

களுடைய முறையைத் தான் நாங்களும் பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஆற்றுப் பாசனங்களை வருஷக்கணக்கில் வாய்க்கால் வெட்டுகிறது என்று எங்கிக் கொண்டிருக்கும்போது, பாய்ந்து கொண்டிருந்த நிலத்திற்குக் கூட தண்ணீர் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

தனிப்பட்ட ஒருவர் தன் நிலத்திற்கு பாசன வசதி வேண்டுமென்பதற்காக சொந்த முறையில் ஏக்கர் ஒன்றுக்கு 300, 400 ரூபாய் தனிப்பட்ட முறையில் செலவு செய்து பக்குவப்படுத்திய பிறகு, அந்த நிலத்திற்குத் தண்ணீர் இல்லையென்று சொல்கிறார்கள். புதிதாக போடப்பட்ட திட்டத்தை மாற்ற ஒருவருக்காக இடையில் உள்ள நிலங்களை விட்டு அப்பால் உள்ள புஞ்சைகளை 5 மைலும் சேர்த்துக் கொள்ளப்படுத்துகிறார்கள். இதையெல்லாம் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் மந்திரி அவர்கள் இங்கு இருப்பதினாலே சொன்னேனே தவிர, பிரசாரத்திற்காக அல்ல. அப்படி பிரசாரத்திற்கு வேண்டுமானால் அதற்கு வேறு எவ்வளவோ இடங்கள் இருக்கிறதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனை எடுத்துக் கொண்டாலும் சரி, பி.டி.ஓ. ஆபீஸை எடுத்துக் கொண்டாலும் சரி, பஞ்சாயத்து ஆபீஸை எடுத்துக் கொண்டாலும் சரி—அங்கெல்லாம் காங்கிரஸ் கட்சியின் தலையீடு இல்லாமல் இல்லை. பஞ்சாயத்து ஆட்சியில் எந்த அரசியல் கட்சியின் தலையீடும் கூடாது என்று சட்டம் போடப்படுகிறது. ஆனால் இன்று பஞ்சாயத்து ஆட்சியில் காங்கிரஸ் கட்சிதான் செல்வாக்கு செலுத்துவதைப் பார்க்கிறோம். அப்படி தப்பித் தவறி அங்குள்ள மக்கள் செல்வாக்கினால் தனிப்பட்ட முறையிலே ஒருவர் கட்சி சார்பற்ற முறையிலே பிரசிடெண்டாக வந்தாலுங்கூட, அவருக்கு கொடுக்கின்ற முதல் வேலை கதர் சட்டை மாட்டிக் கொள்ள வேண்டுமென்பது தான் (Convertion to Congress) இதைத்தான் முதல் அபிவிருத்தியாகக் கொள்கிறார்கள். இவ்வாறுதான் இன்று பி.டி.ஓ. ஆபீசாலும், பஞ்சாயத்து ஆபீசாலும் செய்கின்ற முதல் காங்கிரஸ்கட்சி ஆபீசுகளாகமாறி வருகின்றன. இது ஆச்சரியப்படுவதற்கில்லை. என் சொந்த அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன். எங்கு போனாலும், எதிர்கட்சிக்காரன் என்று தெரிந்தால் பேய், பிசாசைப்போல் கருதுகிறார்கள். காங்கிரஸின் இந்த நிலைமை 62 நெருங்க நெருங்க சந்தர்ப்பத்தில் இன்னும் அதிகமாகும் என்ற நிலைதான் இன்று இருக்கிறது. இந்த மாதிரியெல்லாம் இல்லாமல், நல்ல முறையில் செயல்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த வைகைத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு போராட்டமாக வந்தாலுங்கூட வரலாம். ஆகவே இத்திட்டத்தை எந்த காரணத்தினாலும் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI T. S. SWAMINATHA ODAYAR:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரையை ஆதரித்துப் பேசுகின்ற இந்த நேரத்திலே, என்னுடைய



இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் பல திட்டங்களைச் செய்து, முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறோம். இன்னும் பல புதிய திட்டங்களையெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்திலே நிறைவேற்ற இருப்பதை புத்தாண்டில் நமது கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையிலிருந்து கேட்டு மகிழ்ச்சி அடையாமல் இருக்கமுடியாது.

பொதுவாக இந்த மாகாணத்தில் விவசாயத்தை முக்கியமாகக் கொண்டிருக்கிறோம். இப்போது விவசாயத்தை மக்கள் நல்ல முறையில் ஊக்கமெடுத்து சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உள்ள குறைகளை அமைச்சர் வரும்போது, நேரில் தெரிவித்து, வேண்டிய வசதிகள் பெற்று விவசாயத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். ஆனால், உரவிநியோகத்தில் மட்டும் கொஞ்சம் சிரமம் இருந்துகொண்டுதான் வருகிறது. இந்த உரத்தை விநியோகம் செய்வதற்காக, தஞ்சை ஜில்லாவில் கோவாப் ரேடிவ் மார்க்கெட்டிங் பெடரேஷன் என்று ஒன்றை ஏற்படுத்தி, அவர்களே ஸ்டாக்கிஸ்டுகளாகவும் இருந்து வருகிறார்கள். இவர்களிடமிருந்து கிரெடிட் சொஸைடிகளெல்லாம் பணம் கேட்டு, வாங்கி நல்லமுறையில் டீலர்களுக்கும், ரீடெல் வியாபாரிகளுக்கும் விநியோகம் செய்து கொண்டிருந்தது. இப்போது சமீபத்தில் அவர்கள் இதை நீக்கி, தங்களுடைய ஏஜெண்டுகளாக இருந்தால் தான் விநியோகம் செய்யப்படும், டீலர்களாகவும், ரீடெல் வியாபாரிகளாகவும் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இதனால் இந்த கிரெடிட் சொஸைடிகள் ரொம்பவும் கஷ்டப்படுகின்றன. சொஸைடியாக இருந்து விற்பனை செய்தால் டன் ஒன்றுக்கு 20 ரூபாய் லாபம் கிடைக்கும். ஆனால் அவர்களுடைய ஏஜெண்டுகளாக இருந்தால் டன் ஒன்றுக்கு 7½ ரூபாய்தான் லாபம் கிடைக்கும். அதல்லாமல் ஏஜெண்டுகளாக இருக்கக் கூடியவர்கள் வேறு யாருடைய உரத்தையும் விற்பனை செய்யக்கூடாது. தனிப்பட்ட முறையில் கிரெடிட் சொஸைடிகளாக இருந்தால், பெடரேஷனில் இருந்தும் உரத்தை வாங்கி விற்கலாம், பாரி போன்ற கம்பெனிகளிடமிருந்தும் உரத்தை வாங்கி விற்கலாம். ஆகவே, இந்த உர விநியோக விஷயத்தில் சற்று கவனம் செலுத்தி, நல்ல முறையில் உரங்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதோடு, ஜில்லாவை விட்டு வேறு ஜில்லாவிற்கு கள்ளக்கடத்தல் செய்யப்படுவதையும் தவிர்க்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மன்னார்குடி தாலுக்காவில் சி.எம்.பி. வருவதற்கு முன்பு அவ்விடம் நகரத்தில் 10 குளங்கள் இருந்தன. அவைகளுக்கு வடுவூர், மன்னடி ஆகிய ஏரிகளிலிருந்து வாய்க்கால் வழியே 10 குளங்களுக்கும் தண்ணீர் வந்து நிரம்பி, பின்னர் அவை பாசனத்திற்கும் உபயோகப்பட்டு வந்தது. இப்போது சி.எம்.பி. வந்த பிறகு இந்த வாய்க்கால் தண்ணீர் நிறுத்தப்பட்டு, சி.எம்.பி. தண்ணீர் மட்டும்தான் வருகிறது. அதனால் விவசாயத்திற்கு அதிகமாக தண்ணீர் கிடைக்கவில்லை. அதோடு, நகர மக்க

இதுவரையிலும் ஏற்பட்டதில்லை என்று கருதுகிறார்கள். ஆகவே, இது போன்ற திட்டங்களை நமது அரசாங்கம் எப்படியாவது நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்களின் உரையில்கூட நாம் எதிர் பார்த்த தொகை குறைந்திருந்தாலுங்கூட நாம் போட்ட திட்டங்கள் படிப்படியாக பிற்காலத்தில் எடுத்து நடத்தப்படும் என்று கூறியிருப்பது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த முறையில் அரசாங்கம் அதற்கு வேண்டிய வாய்ப்புகளை தேடிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பரம்பிக்குள திட்டம் நிறைவேற்றும்பொழுது, அது கோவையிலே பல பகுதிகளிலே பாய்கிறது. அப்படி பாயும் பொழுது எங்கள் தாலுகாவாகிய கரூருக்கும் வேண்டும் என்று கேட்கும் நிலையில்தான் இருக்கிறோம். ஆனால் அம்மாதிரி வரக் கூடிய நிலையில் இல்லை என்பதை உணர்ந்து அந்தத் திட்டத்தின் மூலம் ஓரளவு சலுகை எங்களுக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனுடைய கழிவு நீர் பூராவும் அமரா வதியில் கலக்கிறது. அமராவதியில் கலக்கக்கூடிய நீர் மீண்டும் பல திட்டங்கள் மூலம் அமராவதியில் மேற்கு பகுதியில் உள்ள தாராபுரம், உடுமலைப்பேட்டை தாலுகாக்களுக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் எங்கள் கரூர் தாலுகாவிற்கு பயன்படும்படிச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் பரம்பிக்குளத் திட்டத்தின் பலனை நாங்கள் அடைய முடியும். ஆகவே, அரசாங்கம் கரூர் தாலுகாவிற்கு நல்லதோர் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியிலே மிகவும் வரட்சையாக இருப்ப தற்குக் காரணம், மழை பெய்தாலும் மழைத் தண்ணீரை தேக்கி வைக்க முடியாமல் இருப்பதினால்தான். ஆகவே ஊற்று இல்லாததன் காரணத்தினால் எங்கள் பிரதேசம் வரண்டு போயிருக் கிறது. அதற்காக ஆங்காங்கு ஓடக்கூடிய சிறு சிறு ஓடைகளை தேக்கி வைத்து ஊற்று அதிகரிக்கும்படிச் செய்தால் கிணறுகளில் தண்ணீர் அதிகமாக ஏற்பட்டு, எங்களுக்கு பாசன வசதி தேடிக் கொள்ள முடியும். அங்கு நடக்கக்கூடிய வட்டார வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செய்யலாம் என்றால், அதில் ஒரு பகுதி மக்க ளுடைய தொகை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு தொகை போடுவதற்கு அங்கு உள்ள மக்களுக்கு சக்தி இல்லை. ஆகவே, அரசாங்கமே இதை எடுத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய நிதி உதவி செய்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI B. DORAISAMI REDDIAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரை மிகவும் சுருக்கமாக இருப் பதாக எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னார்கள்.



கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக் குறுகத்தரித்த குறள், என்ற குறளுக்கு இணங்க மிகவும் சுருக்கமாக அந்த உரை அமைந் திருக்கிறது. விவசாயம் பெரிய அளவுக்கு முற்போக்கு அடைந் திருக்கிறது என்று அதில் குறிப்பிடப்பட்டிருப்பது அதிகமான அளவில் உற்பத்தி ஆகியிருக்கிறது என்று கூறப்பட்டிருப்பது மிகவும் வருத்தமான நிலை என்று எனக்குத் தோன்றுகிறது. விவசாயம் அதிகமாக உற்பத்தி ஆகியிருக்கிறது என்று சொல்லப் பட்டிருப்பது, மழை அதிகமாக பெய்திருக்கிறது, அந்த அளவுக்கு விவசாயம் அதிகமாக உற்பத்தி ஆகியிருக்கும் என்ற அளவில்தான் சொல்லப்பட்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். மழை மட்டும் அதிகமாக பெய்து விட்டால், விவசாயம் அதிகமாகிவிடும் என்று எண்ணுவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. மழை அதிகமாகப் பெய்தாலும்கூட விவசாயிகள் நீர்சாவி என்று சொல்லுவார்கள். காலாகாலத்தில் வேண்டிய மழை பெய்தால்தான் பலன் கிடைக்கும். காலம் தவறி பெரிய மழை பெய்தால் அதை நீர்சாவி என்று சொல்லுவார்கள். அதனால் விளைச்சல், மகசூல் நிச்சயமாகக் குறைந்துவிடும். சென்ற வருஷம் 100 மூட்டை சாகுபடி செய்த ஒரு நிலத்தில் இப்பொழுது 50 மூட்டைதான் சாகுபடி ஆகி யிருக்கிறது. நான் இந்த சாகுபடி முறையையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். வியாபாரம் செய்கிற முறையையும் அறிவேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மிகவும் குறை வாகத்தான் மார்க்கெட்டிற்குத் தானியங்கள் வந்திருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. எந்தக் கட்சிக்காரர்களும் அறிவார்கள். அவர்கள் வேண்டுமானால் அவரவர்கள் கட்சிக்குத் தகுந்தமாதிரி பேசிக்கொள்ளலாம். ஆனால் நேர்மையாகப் பேச வேண்டுமானால் இதுதான் உண்மை நிலை. விவசாயிகளுக்குச் சொஸைடிகள் மூலம் உரம் சப்ளை செய்தால் ரொம்பவும் நல்ல படியாக கிடைக்கும் என்ற எண்ணத்தில்தான் தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த லைசென்ஸ்களை 'கான்ஸல்' செய்து, சொஸைடி மூலம் உரங்களை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் பெரிய தனவந்தர்களுக்குத்தான், அந்த ஊரில் உள்ள பிரமுகர்களுக்குத்தான் உரம் கிடைக்கிறது. சிறிய விவசாயிகளுக்கு உரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஊரில் பெரியவர்களோடு தொடர்பு இல்லாதவர்களுக்கு உரம் கிடைப்பதில்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு மூட்டை 25 ரூபாய் விற்ற கிச்சிலிச் சம்பா நெல், மகசூல் வருகிற இக்காலத்தில் புதுநெல் 32 ரூபாய் விற்கிறது. பழைய நெல் வேண்டுமானால் ரூ. 40. துவரம்பருப்பு படி ரூ. 1-8-0. கடலைப்பருப்பு ரூ. 1-8-0 அல்லது ரூ. 2-0-0. அந்த அளவில் மார்க்கெட் இருக்கிறது. இதற்கு முன்பு பேசிய நண்பர் ஒருவர் பணக்காரர்கள்தான் அதிகமாக வாங்குகிறார்கள், ஏழைப்பட்டவர் களுக்குக் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். பணக்காரர்கள் தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம், மாணிக்கம், கோமேதகம் இவைகளை வேண்டுமானால் வாங்கி வைத்துக்கொள்ளலாம். தானியங்களை வாங்கிச் சேர்த்து வைத்தால், அதனால் என்ன பயன் படும்? மாதக்கணக்கில் நிற்கும், அவ்வளவுதான். நமது நாட்டில்

விவசாயம் என்றால் ஒரு பிற்போக்கான தொழில் என்ற எண்ணம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது 25 ரூபாய் சம்பளம் கிடைத்தால் போதும் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. பழைய காலத்தில் "கோழி மேய்க்கிறது என்றாலும் கம்பெனியில் வேலை செய்யவேண்டும்" என்று சொல்லுவார்கள். அதுபோல கிராமத்தில் இருக்கக்கூடிய ஜனங்கள் நகரத்திற்குக் குடியேறி சுகவாழ்வு வாழவேண்டும் என்று நினைப்பவர்களாக இருப்பதால், விவசாயத் தொழில் பிற்போக்கு அடைந்திருக்கிறது. விவசாயம் முற்போக்கு அடைந்து உற்பத்தி அதிகமாக வேண்டுமானால், மக்கள் அதில் அதிகமாக சிரத்தையோடு ஈடுபட வேண்டும். எனக்குப் பேசுவதற்கு 8 நிமிஷங்கள்தான் இருக்கிறது. கொடுத்துவைத்த நண்பர்கள் சிலர் சென்ற தினங்களில் 30 நிமிஷங்கள்கூடப் பேசினார்கள். ஆனால் எனக்கு அதில் நான்கில் ஒரு பகுதி 8 நிமிஷங்கள்தான் கொடுபட்டிருக்கிறது. ஆகையால் பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு அவகாசம் இல்லை. இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைமட்டும் பற்றிச் சொல்லி நிறுத்திக்கொள்ளுகிறேன். இன்று சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்திலே பலவிதமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். ஆனால் அபிஷியல்களும், "நான்-அபிஷியல்" மெம்பர்களும் அந்தத் திட்டங்களை எவ்வளவு மட்டமாக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு மட்டமாக்கி விடுகிறார்கள். அமைச்சர்களும் அதைக் கவனித்து, போட்ட திட்டங்கள் மட்டமாகாத அளவுக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோதிலும், நம் நாட்டிலுள்ளவர்கள் அவைகளை மட்டத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அரசாங்கம் செய்யும் திட்டங்கள் சரியான முறையில் இயங்குகிறது என்று பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

அடுத்தபடியாக பஸ் ஸர்வீஸை எடுத்துக்கொண்டால், தனியார் நடத்தும் பஸ் சர்வீஸிலே "ஓவர் லோடு" போடக் கூடாது. ஒரு டிக்கட் ஓவர் லோடு போட்டாலும் லைசென்சு ரத்தாகிவிடும். டவுனுக்கு வந்தாலும் ஓவர் லோடு ஏற்றக்கூடாது. ஆனால், அரசாங்கம் நடத்தும் சென்னை நகர பஸ்ஸிலே, "பிரஸ் மெஷினி"-லே போட்டு "பிரஸ்" பண்ணுகிற மாதிரி எவ்வளவு பேர் வேண்டுமானாலும் ஏறலாம். (சிரிப்பு.) "பெண் பால்" ஏறிவிட்டால் சிலர் இடம் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் வேறு சிலர், சம உரிமை பேசுகிறவர்கள், அவர்களும் நிற்கவேண்டுமென்று நினைத்து, ஒருவரோடொருவர் ரொட்டி மாதிரி ஒட்டிக் கொண்டு நிற்கிறார்கள் (சிரிப்பு). இந்தமாதிரி நிலையில் திருப்பதிக்குக்கூடப் போகவேண்டியதில்லை. காசிக்குத்தான் போகவேண்டும். ஒரு பஸ்ஸிலே ஒரு குழந்தை ஏறிற்று. மிலிடரி உடை போட்டுக்கொண்டு ஒருவன் ஏறினான். குழந்தையின் கால் மீது அவனது பூட்ஸ் கால் படவே, நகம் அடியோடு போய் விட்டது. ஏதோ 10 பேர் அல்லது 15 பேர் என்று ஏற்றினாலும் தொலைந்து போகிறது. ஆனால் 50 பேர், 75 பேர் என்று ஏற்றி, பிரஸ் மெஷின் மாதிரி ஆட்களை அடைத்துப்



போடுவது அவ்வளவு நன்றாக இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே இல்லை. இப்பொழுது சபையில் இருக்கிற மராமத்து இலாகா அமைச்சருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். தெரியாதவர்களே இருக்கமுடியாது.

**THE HON. SRI P. KAKKAN:** ஓவர்லோடு போடக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தினுடைய கட்டளை. அங்கத்தினர் வசிக்கும் பகுதியில் எப்படியிருக்கிறதோ என்னமோ.

**SRI B. DORAISAMI REDDIAR:** அரசாங்கம் நடத்துகிற பஸ்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அதாவது "ஸிட்டி பஸ்" என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றித்தான் பேசுகிறேன் (சிரிப்பு). அமைச்சரும் நானும் காரிலேயோ, டாக்ஸியிலேயோ போகிறோம். ஆனால் ஏழை எளியவர்களின் கதி என்ன? நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. கடைசியில்தான் எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள். எட்டு நிமிடத்திற்குள்ளே எல்லாவற்றையும் பேசவேண்டும். "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றி நான் யோசனை பண்ணிப் பார்த்தேன். செய்யாறு, போளூர், ஆரணி தாலூகாக்கள் தேய்கின்றன. ரெவின்யூ அமைச்சருடைய மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள். ஆரணி தாலூகாவிலே ஒரு லட்ச ரூபாய்க்கு ஜாகீரைச் சேர்ந்த ஒரு கட்டிடத்தை வாங்கினார்கள். அந்தக் கட்டிடத்தைச் சுண்ணாம்பு அடிப்பதற்கு நாலில் ஒரு பங்கு செலவாகும். அங்கே கிராம சேவகர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்தம் 60 பேர்கள் இருக்கிறார்கள். டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் அரக்கோணம் தாலூகாவைச் சேர்ந்தவர். அங்கே ஒரு "ஏரோடிரோம்" கட்டி, சிலர் கண்டிராக்ட் எடுத்துச் சம்பாதித்து விட்டார்கள். வேலூரிலும் பரவாயில்லை. வந்தவாசியில் ஒரு நூல் ஆலை வரப்போகிறது என்று சொல்லுகிறார்கள். வருமோ, வராதோ. போகப்போகத்தான் தெரியும் (சிரிப்பு). குடியாத்தத்திலும் பரவாயில்லை. திருப்பத்தூர் தாலூகாவில் நெல் பயிரிடுவது கஷ்டம். "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ்", "லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ்" என்று சொல்லுகிறார்கள். தொழிற் பேட்டைகளை நடத்துகிறார்கள். கனரகத் தொழிலுக்கு முதலிலே அரக்கோணத்திலே இடம் பார்த்தார்கள். அங்கே 100 ஏக்கரா நிலம் இருக்கிறது. அதை விட்டுவிட்டுத் தஞ்சாவூர் ஜில்லாவுக்குப் போய்விட்டார்கள். ஆரணியில் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தினால் என்ன? ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. பிளாட்பாரம் இல்லாத ஊர் என்று சொல்லுகிறார்கள். பிளாட்பாரம் இல்லாமல் இருந்தாலும், முன்னேற்றம் அடைவதற்கு ஏதாவது ஒரு "பாரம்" இருந்தால் போதும். (சிரிப்பு). எனக்குக்கூட 200 ஏக்கரா சொந்தமாக இருக்கிறது. ஒரு மாட்டுப்பண்ணை வைத்தால் நன்றாக இருக்கும். எஸ். வி. நகரத்தில் தண்ணீர் வசதி இருக்கிறது. ஒரு மில்லோ, காலேஜோ ஏற்படுத்தாமல், கிராம சேவகர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். கிராம சேவகிகள் 40 வயதுக்கு மேற்பட்டு இருந்தால் தேவலை. சேவகர்களுக்கு ஏந்த

[Sri B. Doraisami Reddiar] [24th January 1961

வயது வேண்டுமானாலும் இருக்கலாம் (சிரிப்பு). நான்கூட ஒரு துவக்க விழாவுக்குப் போயிருந்தேன். சிறு வயதுப் பெண்கள் தனியாக கிராமங்களுக்குப் போகமுடியாது. நாற்பது வயதுக்கு மேல்பட்டு இருப்பவர்களை நியமிக்கலாம். குழந்தை பெறாத குழந்தைகளுக்கு என்ன அனுபவம் இருக்கும்? (சிரிப்பு). ஆகவே, 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களைத்தான் கிராம சேவகிகளாக வைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI T. N. ANANDANAYAKI : உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதலிலே, பருவ மழையைப் பற்றிக் குறிப்பிட்டு, குறிப்பாக சென்னை நகரில் மழை அதிகமாகப் பெய்து, சேரிவாழ் மக்களுக்கும், மற்றவர்களுக்கும் பல தொல்லைகள் கொடுத்தது என்றும், இருந்த போதிலும் பல பேர்கள் உதவி செய்ததாகவும் அவர்களைப் பாராட்டியும் இருக்கிறார்கள். நகரப் பிரிதிநிதி என்ற காரணத்தினாலே, இம்மாதிரி மழையினால், பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரச்னைகள் இனிமேல் திரும்பவும் வாராதபடி தடுக்க நாம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால், இந்த மழையினால் பாதிக்கப்பட்ட சேரிகளெல்லாம் மிகத் தாழ்ந்த இடங்களிலே கால்வாய்களுக்கும், குட்டை குளங்களுக்கும் பக்கத்திலே இருந்ததினால், பல மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த இடங்களையெல்லாம் "ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீம்"-இன் கீழ் கொண்டு வந்து சீர்படுத்த வேண்டுமென்றும், சிறு சிறு குடிசைப் பகுதிகளையெல்லாம் நல்ல முறையில் சீர்திருத்த வேண்டும் என்றும் ஒரு திட்டத்தை ஐந்தாண்டுகளுக்கு முன்னால், கார்ப்பொரேஷன் சமர்ப்பித்தது. நமது அரசாங்கமும் அதை ஒத்துக்கொண்டது. மத்திய அரசாங்கம் பணம் தருகிறது. 1956-57-ல் என்னுடைய தொகுதியிலே, அப்பொழுது மத்திய மந்திரியாக இருந்த ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் சேரிகளின் சீர்திருத்தத்திற்காக அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். அப்புறம் மிகவும் புரட்சிகரமாகப் புகுந்த கட்சி அதைப்பற்றி கவனிக்காமல் இருந்து வருவது மிகவும் வருந்தத்தக்கது. சேரிகள் சீர்திருத்தம் என்று பல கோடி ரூபாய்கள் செலவு செய்தும்கூட கூவத்திற்கு வடக்கேயுள்ள பகுதிகளை கார்ப்பொரேஷனே நேரடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லியும்கூட, காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும் துரிதமாக வேலைசெய்யும் திறமை படைத்தவர்களென்று வாயார தங்களைத் தாங்களே புகழக்கூடிய கட்சி இந்த வெள்ளத்தின் விளைவுகளை நேரில் பார்த்திருந்தால், அது பதட்டத்தைத் தந்திருக்கும். அந்த முறையிலே கவனம் செலுத்தாமல் இருந்ததினால், சேரிகளெல்லாம் அன்றைக்கு இருந்த நிலைமையைக் காட்டிலும் இன்றைக்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. வேலை செய்யக்கூடிய விறுவிறுப்பு இல்லாமல் போனாலும், ஏதோ கொடுத்த சோற்றையும், துணியையும்கூட கட்சி பிரசாரத்திற்காக வைத்துக்கொண்டு, மூட்டையை வீடு வீடாகத் தூக்கிக்கொண்டு



24th January 1961] [Srimathi T. N. Anandanayaki]

மக்களை தவறான பாதையில் இழுத்துச் சென்றார்களே தவிர, அந்தப் பிரச்னையிலே சரியான அக்கரை காட்டவில்லை என்பதை நான் சொல்லமுடியும். அதுவும் அல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட சலுகைகளை பலபேர் பல வகைகளிலே கொடுத்ததினால், யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவருக்குப் போய்ச் சேரவில்லை என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். செஞ்சுலுவைச் சங்கம், தன்னிச்சையாக ஏதோ நிவாரண வேலை செய்துகொண்டிருந்தது. ஒரு புறம் கார்ப்பொரேஷன் தன்னிச்சையாக செய்து கொண்டிருந்தது. சில செய்தித்தாள்களில் பார்த்தேன், கொடுக்கப்பட்ட போர்வைகளை அங்கத்தினர்களே போர்த்திக்கொண்டார்களோ என்னமோ, போய்ச்சேர வேண்டியவர்களுக்குப் போய்ச்சேரவில்லை, என்று செய்தித்தாளில் பார்த்ததுதான். கொஞ்ச நஞ்சம் கலெக்டர் நிவாரணம் கொடுத்ததையும் பலசட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கொடுக்கவேண்டியிருந்தது. குடிசை முழுவதும் போய் இருந்தால் ரூ. 30-ம், ஒரு பக்கம் சுவர் போயிருந்தால் ரூ. 10-ம், இரண்டு பக்கம் சுவர் போயிருந்தால் ரூ. 20-ம் கொடுத்தார்கள். நாங்கள் குடிசை குடிசையாகச் சென்று கணக்கெடுத்தோம். நாங்கள் கொடுத்த கணக்கை ஏற்றுக் கொள்ளாமல், ரெவின்யூ இன்ஸ்பெக்டரை அனுப்பித்தார்கள். அவர் வீட்டுக்கு வெளியே நின்றே நாங்கள் முப்பது என்று கொடுத்ததை, மூன்று என்று எழுதிக் கொடுத்துவிட்டார். இனிமேல் இப்படிப்பட்ட நெருக்கடியான சமயங்களிலே, நிவாரணம் அளிக்கும்போது, சர்க்கார் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, (They must pool all the agencies together) இஷ்டப்படி அவரவர்களுடைய நோக்கத்திற்கு விட்டுவிடாமல், அரசாங்கத்தின் பொறுப்பிலேயே, யார் யாருக்கு உதவி போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு போய்ச் சேரும்படி செய்யவேண்டும். ப்ரைவேட் ஏஜென்ஸிகளில் நல்ல மனப்பான்மை படைத்தவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இந்த வெள்ள நிவாரணத்திற்கு இயன்றவரை உதவி புரிந்திருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் கொடுப்பது, கார்ப்பொரேஷன் கொடுப்பது, தனிப்பட்டவர்கள் கொடுப்பது, இவற்றையெல்லாம் சேர்த்து, ஒழுங்கான முறையில் விநியோகிப் பார்களேயானால், அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

சேரிகளை சீர்படுத்த வேண்டியது மிகமிக அவசியம். சென்னை நகரில் குட்டை, குளங்களுக்குப் பக்கத்தில், உள்ள சேரிகள் அவல நிலையில் அதிக நாட்களுக்கு நீடித்திருக்குமேயானால், அது நமக்கும் நல்லதல்ல, மக்களுக்கும் நல்லதல்ல. ஆகையால், கவர்னர் பெருமான் அவர்கள், இவ்வளவு அக்கரை செலுத்தியிருக்கும்பொழுது, இன்னும் கொஞ்சம் அக்கரை செலுத்தி, துரிதமாக சேரிகளைச் சீர்படுத்த வழிவகை செய்யவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 100 கோடி குறைந்துவிட்டதேயென்று பலர் எள்ளி நகையாடலாம். இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கிய பணத்தைக் காட்டிலும், அதிகம் செலவு செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் கொடுக்க முன்

[Srimathi T. N. Anandhanayaki] [24th January 1961

வந்தார்கள். முட்டுக் கட்டை போடவில்லை. அதுபோன்று, மூன்றாவது திட்டத்திலும், கொடுத்த பணத்தை வெகு சீக்கிரத்தில் செலவழித்து திட்டங்களை நிறைவேற்றுவோமேயானால், கட்டாயமாக இன்னும் சில திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியும். செயல் திறமை பெற்றிருந்தால்தான் நாம் அதிகமான பணத்தை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பெற்று திட்டங்களை முழுமையாக நிறைவேற்றி முன்னேற முடியும்.

மின்சார அபிவிருத்திக்கு நாம் முதலிடம் கொடுத்திருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்திலே, மின்சாரம் மின் வேகத்தில் போகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. போட்ட திட்டங்களை முடித்துவிட்டோம். குறித்த காலத்திற்கு முன்பே குந்தா திட்டத்தை முடித்துக்கொண்டு வருகிறோம். வருங் காலத்தில், நம்முடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமானால், சீக்கிரத்திலேயே அணு சக்தியினால் இயங்கும் ஒரு பவர் ஸ்டேஷனை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தை துரிதமாக விஸ்தரிக்கிறோம் என்று நாம் சொல்லி வருகிறோம். சிறு சிறு தொழில்கள் சென்னையைச் சுற்றி வளரும் போது, மின்சாரம் கொடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும், வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும், இன்னும் அரசாங்கம் பல உதவிகளைச் செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். இவ்வளவு உதவிகள் செய்தும், மின்சாரம் கொடுப்பதற்கு தடை செய்தால், அது நம்முடைய முன்னேற்றத்தையே பாதிப்பதாக இருக்கும். ஆகவே, சிறிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மின்சாரம் கொடுத்து உதவி செய்து நகரைச் சுற்றிலும் பல சிறு தொழில்கள் வளருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நமது தெற்குப் பகுதியிலும் புதிய ரெயில் பாதைகள் நிறுவப்படும் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தெற்கே அதிக ரெயில்பாதைகள் போடவேண்டுமென்று பண்டித நேருவே வாதாடியிருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது, நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். வடக்கு, தெற்கு என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்பிக் கொண்டிருக்கும் நிலையிலே, தென் பகுதியிலே ரெயில் பாதைகள் போடவேண்டும் என்று ஒப்புக் கொண்டுள்ள ரெயில்வே மினிஸ்ட்ரிக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அடுத்ததாக மேம்பாலங்கள் கட்டுவதுபற்றி: நான்கு பாலங்கள், மெக்நிக்கல்ஸ் ரோடில் ஒன்று, கோடம்பாக்கத்தில் ஒன்று, இங்கே போர்ட் ஸெண்ட்ஜார்ஜ் பாரிஸ் கார்னரில் ஒன்று, திருவொற்றியூர் பக்கம் ஒன்று, ஆக நான்குக்குத் திட்டம் போட்டார்கள். அதில், மெக்-நிக்கல்ஸ் ரோடு பாலம் முடித்து விட்டார்கள். மற்றவை என்னவாயிற்று என்றே தெரிய மாட்டேன் என்கிறது. நானும் எம்.எல்.ஏ. ஆனதிலிருந்து, மேம் பாலம் பைல் பின்னால் சுற்றுகிறேன். ஏதோ பணம் வரவில்லையென்கிறார்கள்; மீட்டிங் இன்றைக்கு, நாளைக்கு என்கிறார்கள். ஆனால், காரியம் ஆனபாடாக இல்லை. இந்த ஐந்து வருஷ ஆயுளும் முடிந்துபோய்விடும்போல் இருக்கிறது. அந்தத் தொகுதி மெம்பர்



24th January 1961] [Srimathi T. N. Anandanayaki]

என்று நானும் எவ்வளவோ முயன்று பார்க்கிறேன். திருவொற்றியூர் லெவல் கிராஸிங் சென்று பார்த்தால்தான் தெரியும். அங்கு நின்றால், கதவு திறக்க எவ்வளவு நேரம் ஆகிறது, எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரியும். மேம்பாலப் பொருப்பு இருக்கும் பப்ளிக் ஒர்க்ஸ் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், அதற்கு அஸ்திவாரக் கல்லாவது போடுங்கள், போட்டால் அப்பொழுதாவது வேலை தொடங்கும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தது எஜுகேஷன். கல்விக்குப் பெரிய சலுகை கொடுப்பது வரவேற்கத் தக்கது. அதிலே நாட்டு மக்களுக்கு இன்றியமையாதது. அதே சமயத்தில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிற்போக்கான மக்களுக்குச் சலுகை மிகக் குறைவு. இன்றைக்கெல்லாம், 35,000 அல்லது 40,000 அப்ளிகேஷன்கள் வந்தால், நாம் கொடுக்கப்போவது 5,000 அல்லது 10,000 பேர்களுக்குத்தான். அதிலும் "எகனமிக் பாக்வர்ட்நஸ்" என்று பார்த்தும், பொருளாதார நிலைமைக்குத் தகுந்தாற்போல் அளிக்கிறோம். வெறும் ஜாதி அடிப்படையில் கொடுப்பதில்லை. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்பதால், அவர்கள் முன்னேற்றம் சற்று பின்னேதான் போகிறது. ஆகவே, அமைச்சரவர்கள் அக்கரைகொண்டு, அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும்; ஒரு சில லட்சம்தான் தேவைப்படும், கோடிக்கணக்கான ரூபாய்கள் வேண்டாம்; ஓரளவு எல்லோருக்கும் அது உதவும். அது சமூகப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு பெரும் சலுகையாக இருக்கும். இன்று ஒரு பையனுக்கு உதவியளிக்கிறோம் என்றால், அவன் படித்து முன்னுக்கு வந்தால் அது அந்தக் குடும்பத்திற்குப் பயன்படுகிறது. பொருளாதார வசதி ஏற்படுகிறது, பின்னால் அவர்களுக்கு அது சாதகமாகப் போய்விடும். ஆகவே இன்று ஒரு பையனுக்குச் செய்யும் உதவி, ஒரு குடும்பத்திற்கு கொடுக்கும் உதவியாக இருக்கிறது. ஆகவே, அந்த விஷயத்தில், தாராளமாகக் கொடுத்தால், கல்விப் பிரச்சினையை கணிசமான அளவுக்கு தீர்த்ததாக இருக்கும்.

காலம் குறைவாக இருப்பதனால், இதோடு முடிக்கிறேன்.

*SRI K. ANBAZHAGAN: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையை ஒட்டி சில கருத்துக்களைக்கூற வாய்ப்புப் பெற்றதற்கு மகிழ்ச்சி; கவர்னர் உரைக்காக நன்றி தெரிவிக்க இன்றைய தினம் காரணம் இல்லாவிட்டாலும், உரை நிகழ்த்த வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை, இன்றைய தினம் பருவ மழை பொழிந்து அந்த அளவுக்கு நல்ல விளைச்சல் காணும் சூழ் நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பேசினாலும், கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், பொதுமக்கள் சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் இந்த அரசாங்கம்

[Sri K. Anbazhagan] [24th January 1961

தன்னுடைய கடமையைச் செய்யவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் அதன் கீழ்திசைப் பகுதியில், பெரும்பாலான பகுதிகளில், பயிர்கள் முழுதும் அழிந்து அதனால் விளைச்சல் கெட்டிருக்கிறது. ஓர் அமைச்சர் பேசும்போது, பெரிய அளவில் விளைச்சல் கெட்டிருக்கிறது என்பது உண்மைதான் என்று தெரிவிக்கிறார்; மற்றொரு அமைச்சர் பேசும்போது, 50, 60 ஏக்கரா நிலம் கெட்டுப் போய் இருக்கும் என்கிறார்; ஒருவேளை, அந்த அமைச்சர் பேசும்போது, தன் சொந்த நிலம் நினைவில் இருந்ததோ என்னவோ என்று கருதுகிறேன். இந்த அளவுக்குப் பெரும் அழிவுகளை, கேடுகளைப்பற்றி அமைச்சர்கள் கூடிக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வராமலே பேசி இருக்கிறார்களே என்பதைக் குறித்து வருத்தம் தெரிவிக்கிறேன்.

இதே போலத்தான் விலைவாசிகள் ஏறியிருக்கிறது என்றால், அது எதிர்கட்சிகளின் வெற்றுக் கூச்சல் என்று அமைச்சர்கள் கருதுகிறார்கள். இதிலே நிதியமைச்சர் யார் சொன்னாலும், எளிதில் நம்பாத நல்ல மனம் படைத்தவர்கள். அவரே நேராகக் கடைகளுக்குச் சென்று, வணிகரைக் கேட்டு விலைவாசி ஏற்றத்தைத் தெரிந்து கொண்டார்கள். முறுக்கிய மீசையும், வாட்ட சாட்டமான தோற்றமும் இல்லாமல் இருப்பதால், கடைக்காரர், இவர் அமைச்சர் என்று தெரிந்துகொள்ளாமலே, தான் வெளியில் மற்றவர்கட்கு விற்கும் விலையைச் சொல்லிவிட்டார். அதனால், அதிர்ச்சிக்கு ஆளான அமைச்சர் இரண்டொரு நாள் வெளியில்கூடப் பேசவில்லை என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு விலைவாசி ஏறியதை நிதியமைச்சர் உணர்ந்திருந்தும், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன். விலைவாசி ஏற்றம் அன்பழகனுக்குத் தெரிந்து, நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், யாரும் குறையாகக் கருத முடியாது; ஆனால் அமைச்சரவர்களுக்குத் தெரிந்திருந்தும், அவர் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், என்னவென்று கருதுவது? அமைச்சரவர்கள் "நான் அமைச்சராக இருந்தும் பலன் இல்லை" என்றாவது சொல்லட்டும்; "நாங்கள் நாட்டில் ஆட்சி நடத்தினாலும், எங்களுக்கு இந்த உரிமை இல்லாமல் இருக்கிறது" என்றாவது தெரிவிக்கட்டும்; அல்லது அந்த உரிமை இருக்கிற இடத்தைக் கண்டு, அதைப் பெறுவதற்காவது முயற்சிக்க வேண்டும்; அல்லது மக்களோடு சேர்ந்தாவது, ஆழ்ந்த வருத்தத்தை, நிதியமைச்சர் டெல்லி சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். எதைச் செய்தார் என்று கேட்க விரும்புகிறேன்? உண்மையில் நிதியமைச்சர் மனம் வேதனைப்பட்டிருக்கிறது; இந்த அனுபவம் அவருக்குக் கிடைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்றைய தினம், நாட்டிலுள்ள சூழ்நிலை, எதற்கெடுத்தாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு அதனால் மக்கள் நிம்மதியாக வாழலாம் என்று அமைச்சர்கள் மகிழ்ச்சியோடு பேசுகிறார்கள். அது ஒருவேளை அடுத்த பொதுத் தேர்தலுக்கு பயன்படும் என்ற தெளிவான



24th January 1961] [Sri K. Anbazhagan]

நம்பிக்கையால் இருக்கலாம், அந்தக் காரணத்தினால்தான் அதை எடுத்துச் சொல்லுகிறார்கள் என்று ஐயுறுகிறேன். ஆனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமே கூடாது, அப்படித் திட்டமிட்டு செய்வதே கூடாது என்று கருதும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள். போடுகிற இந்தத் திட்டங்களால் தமிழ் நாட்டின் முன்னேற்றம் எந்த அளவுக்கு இருக்கும்—தமிழ் நாடு என்று நான் சொல்லும் போது, அமைச்சரவர்கள், "அந்தப் பெயரை நாங்கள் வைக்கவா போகிறோம், வீண் ஆசையில் அடிக்கடி சொல்கிறீர்கள்" என்று, கூறக்கூடும்! ஆனால் அந்தப் பெயரை வைக்கிறார்களா இல்லையா என்று நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது; இதை பின்னர் விளக்குவேன்—அதே நேரத்தில் தமிழ் நாட்டு மக்கள் வாழ்க்கைத்தரத்தை எந்த அளவுக்கு உயர்த்த முடியும் என்று அமைச்சரவர்கள் திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும். திட்டத்தில் சென்னைக்குக் கிடைத்த பங்குத் தொகையாவது நாங்கள் போய்க்கேட்காமலா கிடைத்தது; கேட்காமலா இருந்தோம், டில்லியிடம் வற்புறுத்தாமலா இருந்தோம்; ஒரே அமைச்சராகப் போய்க் கேட்டால், தேவையான அளவு சத்தம் போட்டுப் பேசக்கூடிய அளவுக்கு உடலில் பலம் இல்லாத காரணத்தால், பக்கத்தில் இரண்டு அமைச்சர்களை வைத்துக் கொண்டு, கேட்டு, கொடுத்தும் இருக்கிறார்களே என்றுகூட அமைச்சரவர்கள் பதில் கொடுக்கக்கூடும். உள்ளத்தில் ஆர்வம் இருந்ததை நான் குறைத்து மதிப்பிடவில்லை. நாட்டுக்கு நல்லது செய்ய நினைப்பார்கள் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஆனால் நினைக்கும் அளவு திட்டத்தை நிறைவேற்று 1-00 p.m.
வதற்கு இன்றைய தினம் வழி இல்லாமல் இருப்பதை ஏன் இவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது? இந்தத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டார்கள் என்பதைக் குறித்து இந்தச் சட்ட மன்றத்தில் பேசத் தொடங்கிய காலத்தில் அமைச்சர் அவர்கள், 'தனித் தனியாகப் பேச வேண்டாம், சர்வ கட்சித் தலைவர்கள் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம்' என்று சொன்னார்கள். அதன்படி திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டபோது, தம்முடைய கருத்தாக ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தந்தார்கள். திட்டத்திலே தவறு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கருதினால், இன்னது தவறு, இன்னது நியாயம், இந்தப் புள்ளி விவரம் தவறானது, இது சரியானது, உங்கள் கணக்கில் இது குறை, எங்களுடைய கணக்குப்படி இது சரி என்று எடுத்துச் சொல்லியிருந்தால் நான் அவரைப் பாராட்டியிருக்க முடியும், ஏற்றுக்கொண்டிருக்க முடியும்.

இதே சட்டமன்றத்தில் பேசும்போது நிதி அமைச்சர் அவர்கள், முதன்முதலில் 250 கோடி, 260 கோடி ரூபாய் அளவு தான் கேட்க முடியும்' என்று தெரிவித்தார்கள். அப்பொழுது இத்தொகை மிகவும் குறைவு என்று வருத்தம் தெரிவித்துக் கண்டித்துரைத்தேன். அதற்குப் பிறகு, ஆயிரம் கோடி ரூபாய் அளவு அறிஞர் அண்ணா கேட்டவுடனே, அதைக் குறித்து நிதி அமைச்சர் அவர்கள், 'திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் இப்படித் தெளிவு இல்லாமல், விளக்கம் இல்லாமல் ஆயிரம்

கோடி என்று சொல்லிவிட்டால் யார் தருவார்கள், இது பண்டாரத்தின் கதையாக இருக்கிறதே' என்று கேலியாகச் சொன்னார்கள்.

உண்மையாகவே, 'பண்டாரம்' என்றால் என்ன நினைப்பில் அமைச்சர் சொன்னார் என்று தெரியவில்லை. நல்ல எண்ணத் தோடுதான் சொல்லியிருக்க முடியும், அதனால்தான் பண்டாரம் என்று சொன்னார் என்று கருதுகிறேன். 'பண்டாரம்' என்றால் 'பொருள் உடையவர்', பொருள் காப்பாளர்' என்று பொருள். 'நிதி அமைச்சர்' என்றும் அதற்குப் பொருள். ஒரு வேளை நிதி அமைச்சர் அவர்கள் தன்னைத்தான் குறிக்கும் என்று தெரியாமலே சொல்லிவிட்டார் என்று நினைக்கிறேன். 'அவர் நிதி அமைச்சர் அல்லவே, நான் அல்லவோ நிதி அமைச்சர்' என்ற கோபத்திலேயும் சொல்லியிருக்கலாம். பழங்காலத்தில் 'பண்டாரத்தார்' என்றால் இந்தக் காலத்தில் நிதி அமைச்சர் என்று சொன்னால் என்ன பொருள் உண்டோ அப்படிப்பட்ட பொருள் தந்த சொல் இதுவாகும். அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரம் கோடி கேட்டது தவறு என்று அமைச்சர் சொன்னார், ஆனால் அவரே நியாயமான அளவு கேட்க முடியாமல் கேட்ட 250 கோடியே தவறாகப் போய்விட்டதே. நான் அப்பொழுதே, இது மிகவும் குறைவு என்று கண்டித்தேன். பின்னரே சட்ட மன்றத் தில் பேசும்போது, '400 கோடிக்கே திட்டமிட்டுக் கேட்கலாம்' என்று அமைச்சர் தெரிவித்தார். அப்பொழுதும் சட்டமன்றத் தில் பேசும்போது நான் சொன்னேன், 'நீங்கள் 400 கோடி என்று சொல்கிறீர்களே, அது போதாது, அரசாங்கத்தின் மூலம் 400 கோடி என்று சொன்னால், வேறு துறை களிலே, ப்ரைவேட் செக்டார் மூலமாக மிச்சமிருக்கும் 600 கோடி ஈடு ஆகிறதா என்று பார்க்கவேண்டும். பொதுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், மொத்தத்திலே அந்த அளவு தொகை முதலீடு செய்யப்படுதற்கு ஏற்ப தமிழ் நாட்டுக்குத் திட்டம் வகுத்தால்தான் தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்' என்று குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லையே தவிர, அமைச்சரவையில் அந்தக் கருத்து இருந்தது. அமைச்சரவையில் அந்தக் கருத்து இருந்த காரணத்தால்தான் செப்டம்பர் 7-ந்தேதி அன்று மேல் சபையில் பேசிய தொழில்துறை அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், மேல் சபையில் காங்கிரஸ் ஆளுங்கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் சொல்லியுள்ளார், 'இன்றைய தினம் அரசாங்கத் தின் மூலம் ஏறத்தாழ 400 கோடிக்குத் திட்டம் போடுகிறோம், தனியார் துறையில் ரூ. 600 கோடி அளவுக்கு திட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். ஆக மொத்தத்தில் சேர்த்துப் பார்த்தால் ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டம் தமிழ்நாட்டுக்கு வந்து சேரும்' என்று தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் இவ்வாறு ஆயிரங்கோடி அளவு என்று தெரிவித்திருக்கிறார். நிதி அமைச்சரோ 400 கோடியுடன் நிற்கிறார். இதிலே எந்த எடுத்துக்கொள்வது என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த நிலையில் தி.மு.க. தலைவர் கேட்ட ஆயிரம் கோடியை கேலி பேச வேண்டும்?



ஆயிரம் கோடி ரூபாய் என்று அமைச்சர் தெரிவித்த ஆயிரம் கோடி தான் நியாயமான ஆயிரம் கோடியா? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் குறிப்பிட்ட ஆயிரம் கோடி 'என்ன தனுஷ்கோடியா? ஆயிரம் கோடி என்பதில் என்ன வேறுபாடு இருக்கிறது? மொத்தத்தில் ஆயிரம் கோடி என்று யார் சொன்னாலும் ஒன்றுதானே? அமைச்சர் அவர்கள் மேல் சபையில் பேசும்போது சொல்லியிருப்பதைக் கவனிக்கவேண்டும். மேல் சபை பொறுப்புள்ள இடம். மதிக்கத்தக்க இடம். அங்கு ஆயிரம் கோடி என்று அரசாங்கக்கட்சித் தலைவரால் சொல்லப் பட்டிருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : தலைவர்கள் கூடிப் பேசும் போது, திரு. அன்பழகன் அவர்கள் இல்லாத காரணத்தால் நான் சொல்கிறேன். அன்றைக்கு திரு. அண்ணாதுரை அவர்கள் ஆயிரம் கோடி நம்முடைய அரசாங்கத் திட்டத்திற்கு வேண்டு மென்று ஆலோசனை சொன்னார்கள்.

SRI K. ANBAZHAGAN : ஆயிரம் கோடி. அரசாங்கத் திட்டத் தில் என்று சொன்னது கொள்கை அடிப்படையில். அரசாங்கத் தின் மூலமாக பல்வேறு தொழில்களும் நிறைவேற வேண்டு மென்று சொன்னது கொள்கை அடிப்படையில். ஆளும் கட்சிக்கே அரசாங்கத்துறை மூலமாக நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இல்லாதபோது, தனியார் துறையில் யாவது வகை செய்கிறோம் என்ற உறுதி அளித்தீர்களா? இப்பொழுதாவது அந்த உறுதி அளிப்பீர்களா என்று இந்த மன்றத்தில் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும்போது, 1961-ல் தொடங்கி, 1965-66 வரையில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு தமிழ் நாட்டுக்கு என்று தனியார் துறையிலேயும் 'சேர்த்தேனும் திட்டம் நிறைவேறும் என்ற உறுதி அளிக்க முடியுமா என்று நான் கேட்கின்றேன். கொள்கை வேறுபாடு இருக்கலாம். ஆனால், முதலீடு செய்யவேண்டிய ரூபாயிலே வேறுபாடு எதற்காக இருக்க வேண்டும்?

அதுமட்டுமல்ல. ஆயிரம் கோடி என்று தெரிவித்து அகில இந்தியத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 10,200 கோடி என்று கணக் கிட்டபோது, இன்றையதினம் அது ரூ. 12,000 கோடியை எட்டி யிருக்கிறது. மொத்தம் ரூ. 10,200 கோடி என்று இருந்தபோது ஆயிரம் கோடி தமிழ்நாட்டுக்கு என்று சொல்லும் அளவில் தொழில் அமைச்சர் கருதியிருப்பதை வரவேற்கிறோம். தொழில் அமைச்சர் அவர்களின் கருத்தை நிதி அமைச்சர் அவர்களும் இதுகாறும் மறுக்கவில்லை. ஆனால், அந்தக் கருத்தின்படி, இன்றைய தினம் அகில இந்தியாவுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயரும்போது, தமிழ்நாட்டுக்கு அந்த ஆயிரத் தோடு இன்னும் 100 கோடி சேர்க்கலாம். தமிழ்நாட்டில் ஏறத் தாழ மூன்றரை கோடி மக்கள் இருப்பதாகக் கணக்கு இருந்

[Sri K. Anbazhagan] [24th January 1961

கிறது. அகில இந்திய மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், பன்னிரண்டில் ஒரு பங்கு தமிழ்நாட்டு மக்கள் என்று கணக்கிடலாம். இந்தப் பன்னிரண்டில் ஒரு பங்கு மக்களுக்கு எந்தத்துறையிலாவது தொழிலும் வருவாயும் கிடைக்கவேண்டும். அந்தத் தொழில் கிடைக்க ஆயிரம் கோடி அளவு முதலீடு செய்யப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் உறுதிக் கொள்வாரா? மத்திய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வாரா? அந்த உறுதியை நிதி அமைச்சர் அவர்கள் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

முதல் இரண்டு திட்டங்களை நிறைவேற்றியது பற்றி எவ்வளவு பெருமைப்படுகிறார்கள்? முதல் இரண்டு திட்டங்களைக் காங்கிரஸ் ஆட்சி நிறைவேற்றியதால் சுயராஜ்யத்தின் முழுப் பலனை இந்த நாடு பெற்று விட்டது என்றும், அதனால் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது என்றும்—விலைவாசி ஏற்றத்தைப்பற்றி எண்ணிக்கூடப் பார்க்காமல், மக்கள் படும் வேதனையை எண்ணிப் பார்க்காமல், ஏழை மக்கள் வரவரக் கீழே போய்க்கொண்டிருப்பதை எண்ணிப் பார்க்காமல்—முதல் இரண்டு திட்டங்களினால் ஏற்பட்ட பலன்களைப்பற்றியே பேசுகிறார்கள்.

முதல் திட்டத்தில் மத்திய அரசினர் அதைப்பற்றிக்கூறும் போது, ரூ. 2,200 கோடிக்குத் திட்டம் போட்டுவிட்டோம் என்று சொன்னார்கள். மறுபடியும் அது 2,338 கோடிக்கு உயர்ந்தது. கடைசியாக முடிக்கிறபோது ஏறத்தாழ 2,000 கோடியிலே முடிந்தது. அரசாங்கத்தினுடைய துறையிலேயும் தனியார் துறையிலேயும் சேர்த்துப் பார்க்கும்போது 3,360 கோடி ஆயிற்று. அதில் சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய பங்கு ஏறத்தாழ 280 கோடி ரூபாய் ஆகும். எனக்குக் கிடைத்த புள்ளி விவரத்தைச் சொல்கிறேன்—என்னுடைய புள்ளி விவரம் தவறு என்றால் அமைச்சர் அவர்கள் அதை விளக்கட்டும். ஏதோ நான் பன்னிரண்டில் ஒரு பங்கு என்று சொன்னது தவறாமல், பதின்மூன்றில் ஒரு பங்குதான் கிடைக்கலாம் என்றால் அவர்கள் புள்ளி விவரம் காட்டும். நமக்குக் கிடைக்கவேண்டிய தொகையோ ஏறத்தாழ 280 கோடி ரூபாய் ஆகும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order Sir, When another hon. Member wants to know the truth, the hon. Member (Sri K. Anbazhagan) must be able to substantiate it. May I know the documents from which the hon. Member is quoting figures?

DEPUTY SPEAKER : It is not a point of order. The hon. Member (Srimathi T. N. Anandanayaki) wants some information. I hope the hon. Member (Sri K. Anbazhagan) will explain.

SRI K. ANBAZHAGAN : அவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது தெளிவு பெறாதவர்கள் தெளிவைப் பெறுவதற்கு முயற்சித்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். நான்



24th January 1961] [Sri K. Anbazhagan]

குறிப்பிட்டது, முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அரசாங்க வெளியீடுகளில் உள்ள புள்ளி விவரங்களில் சேர்ந்திருக்கிறது. அதைப்பற்றிய பல்வேறு குறிப்புகள் மத்திய அரசாங்கத்தால் வெளியிட்ட ஏடுகளிலே இருக்கின்றன. மாநில அரசாங்கம் வெளியிட்ட ஏடுகளிலும் இருக்கின்றன. நான் குறிப்பிடும் இந்தப் புள்ளி விவரம் தவறு என்றால் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அதற்கான புள்ளி விவரங்களை இன்றையதினமோ நாளையதினமோ தெரிவிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டுக்கு 280 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் அன்று கேட்ட தொகையே 97 கோடி ரூபாய் தான். மாற்றங்களுக்குப் பிறகு கொடுக்க இசைந்தது 86 கோடி. முதல் திட்டத்தில் செலவிட்டது 80 கோடி ரூபாய். ஆக, ஆறு கோடி ரூபாய் செலவழிக்கப்படாமல் விடப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். இரண்டாவது திட்டத்தில் பத்து, பதினைந்து கோடி ரூபாய் அதிகம் செலவழித்தால் அதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். முதல் திட்டத்திலே செலவாகததால் இழந்தது ஆறு கோடி ரூபாய். ஆனால், வரவேண்டிய 280 கோடியில் வந்தது ஏறத்தாழ 80 கோடி ரூபாய்தான். ஒருவேளை, தனியார் துறையில் பத்து கோடி இருக்கும் என்று சொல்லலாம். நெய்வேலித் திட்டத்திற்குப் போட்ட தொகை 10 அல்லது 15 கோடி என்று சொல்லலாம். கோச் பாக்டரியில் 5 கோடி செலவிட்டிருக்கலாம். ஆனால், மொத்தம் செலவழித்ததைக் கணக்கெடுத்து பார்த்தால் 105 முதல் 110 கோடி ரூபாய்தான் முதலீடாக இருக்கும். கிடைக்க வேண்டிய தொகை 280 கோடி ரூபாய். கிடைக்கத் தவறியது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 150 கோடி ரூபாய். என் புள்ளி விவரம் தவறு என்றால், அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவிக்கலாம்.

முதல் திட்டத்தில் நம் மாநிலத்தில் ரயில்வேக்கான பங்குத் தொகை எவ்வளவு? புதிய ரயில் பாதை போடுவதில் கிடைக்க வேண்டிய பங்கு எவ்வளவு? எந்த அளவு ரயில் பாதை போட்டார்கள்? அமைச்சருக்குப் புள்ளி விவரம் தெரியும். அவர்களே வெட்கப்பட்டிருக்கிறார்கள், வேதனைப் பட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் குறைபட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள், புது ரயில் பாதைகள் போடப்படும் என்ற நம்பிக்கையோடு ஊர் போய்ச் சேருங்கள் என்று ரயிலில் வழி அனுப்பி வைத்திருக்கிறார்கள். முதல் திட்டத்தில் ஏமாற்றப்பட்ட புள்ளி விவரம் அமைச்சருக்குத் தெரியாதா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் பேசப்பட்ட தொகை 4,800 கோடி ரூபாய். அது உடனே 4,600 கோடி ரூபாய் ஆயிற்று. பொதுத் துறையிலே செலவழிக்கப்பட்டது 3,630 கோடி ரூபாய். அது தவிர தனியார் துறையிலே 3,300 கோடி ரூபாய் ஆயிற்று. மொத்தத்தில் 6,750 கோடி வரையில் ஆகி

இந்தியத் திட்டத்தை நிறைவேற்றும்போது, நம்முடைய மாநிலத்திற்கு என்று தொடக்கத்தில் கேட்கப்பட்டது 400 கோடி ரூபாய். கிடைத்தது ஏறத்தாழ 152 கோடி ரூபாய்தான். கேட்டதற்கும் கிடைத்ததற்கும் இடையே வித்தியாசம் 250 கோடி ரூபாய். மேற்கொண்டு செய்த முயற்சியால் அவர்கள் மேலும் பெற்றது 15 முதல் 20 கோடி ரூபாய். ஆகையால், மொத்தத்தில் கணக்கிடும்போது, நெய்வேலி, கோச் பாக்டரி, மத்திய அரசாங்கம் மேற்கொண்ட தொழில்கள், தனியார் துறையில் பர்மிட், லைசன்ஸ் வழங்கியது இவையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் கூட ஏறத்தாழ 250 கோடி ஆகும். அகில இந்தியாவுக்குமான மொத்தம் 6,750 கோடி ரூபாயில் மக்கள் தொகையின்படி சென்னை மாநிலத்திற்கு ஏறத்தாழ 560 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்க வேண்டும், பல்வேறு துறைகளிலே. எங்கே 560 கோடி ரூபாய்? மொத்தத்தில் 280 கோடிக்கே வழியில்லையே. ஏமாந்து கைவிடப்பட்ட தொகை 300 கோடி ஆயிற்றே. இதற்கு என்ன மறுப்பைச் சொல்ல முடியும்? 'அன்பழகன் அவசரக்காரன்' என்று சொல்வார்களானால், அப்படியே ஏற்றுக் கொண்டாலும், புள்ளி விவரத்தில் ஏதோ பத்து, இருபது கோடி ரூபாய் அளவில் வித்தியாசம் இருக்கலாமே தவிர, அதற்குமேல் இருக்கமுடியாதே? இப்படி முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறபோது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கூட நமக்கு உரிய பங்கைக் கொடுக்கவில்லை என்றால் இங்குள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வாறு உயர முடியும்?

ரெயில்வே துறையை எடுத்துக்கொண்டால் தென்னகத்தில் ஏதாவது புது ரெயில் பாதைகள் போடப்பட்டதா? அகில இந்தியாவுக்குமாக 156 கோடி ரூபாய் ரெயில் பாதை அமைப்புக்காக ஒதுக்கினார்கள் என்றால் அதிலே தென்னகத்தைப் பொறுத்த வரையில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு? அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? 92 லட்சம் ரூபாய் தான் என்பது. 156 கோடி ரூபாய் நான்கு மண்டலங்களுக்கும் என்று சேர்த்து ஒதுக்கிய தொகையை செலவழிக்கிறபோது அதில் நான்கில் ஒரு பங்காவது தென்மண்டலத்திற்கு என்று செலவழித்திருக்க வேண்டாமா? தவறிப் போனால் ஐந்தில் ஒரு பங்காவது செலவழித்திருக்க வேண்டும். அதிகமாக இருந்தால் 6-ல் ஒரு பங்காவது செலவழித்திருக்க வேண்டும். தென்னகம் கொஞ்சம் ஒதுக்கப்படுத்துவதற்குரியது என்று எண்ணியிருந்தாலும் 8-ல் ஒரு பங்காவது செலவழித்திருக்கவேண்டும். ஆனால் செலவழித்தது 92 லட்சம் ரூபாய் மட்டுமே—மொத்த தொகையில் 150-ல் ஒரு பங்கு கூட இல்லையே! புதிய ரெயில் பாதை என்று எதுவுமே இங்கு போடப்படவில்லை. இதற்காக அமைச்சர் அவர்கள் ரயில் ஏறாமல் இருந்தார்களா? அல்லது இதைக் கண்டித்து வாய் திறந்து பேசாமலிருந்தால் தான் ரெயில் பாதைகள் தானே வந்து சேருமா? இப்படிப் பலவகையிலும் தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது. [illegible] என்று சொன்னால், நாங்கள் [illegible]





சொல்கிறோமா? "தென்னகம் தேய்கிறது" என்று நாங்கள் சொன்னால், தொட்டுப் பார்த்து தடவிப்பார்த்து எங்கே தேய்கிறது என்று கேட்கக் கூடிய செய்தியா இது? திருநெல்வேலிக்கும் நாஞ்சில் நாட்டுக்கும் ரெயில் பாதை போட்டால் அங்குள்ளவர்கள் தாம் ஏறி இறங்கமாட்டார்களா? அல்லது ரெயில் பாதை அந்த இடத்தில் போட்டால் அங்குள்ளவர்கள் காங்கிரஸை ஆதரிக்காமல் போய்விடுவார்களா? விருதுநகரில் உள்ள வியாபாரிகள் சங்கத்தார் அருப்புக்கோட்டை ரயில் பாதையை உடனடியாகப் போட வேண்டும் என்று எத்தனை முறை எழுதியிருக்கிறார்கள்? இன்று கூட விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களே! விருதுநகரைச் சேர்ந்தவர் தான் முதல் அமைச்சர். ஏன் அந்த ரெயில் பாதையையாவது போட்டாகவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. சேலத்திற்கும், பங்களூருக்கும் இடையில், கோவைக்கும், மைசூருக்கும் இடையில் ரெயில் பாதை போட முடியும் என்று எத்தனை முறைகள் பேசினார்கள். ஆசை காட்டினார்கள். புது பெண் ஒருத்தியை எப்படியாவது அழைத்துவந்து திருமணம் செய்து கொண்டுவிட வேண்டும் என்று விரும்பும் இளைஞன் ஒருவன் அதற்காக அவளைப் புகழ்ந்து வருணிப்பதைப் போல அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் எத்தனைமுறை அழகாகப்பேசி அந்த ஆசையை ஊட்டினார்கள். அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன? ஏன் முடியவில்லை?

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய புள்ளி விவரங்களையே நோக்கட்டும். ஆரம்பத்தில் 7,500 கோடியில் திட்டம் உருவாக்க ஆலோசிக்கப்பட்டது. அது 9,900 கோடியாக முதல் பேச்சிலேயே உயர்ந்தது. அப்புறம் 10,200 கோடி என்றார்கள். அப்புறம் இன்று 12 ஆயிரம் கோடி ஆகும் என்கிறார்கள். அது நிறைவேறக்கூடியதா, நிறைவேற முடியாததா என்பது இருக்கட்டும். ஆனால் 11 ஆயிரம் கோடியே நிறைவேறுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். தமிழகத்திற்கு அதில் 12-ல் ஒரு பங்கு இல்லையென்று சொல்லிவிட முடியுமா? நமக்குரிய பங்கைப் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் என்ன வழிவகைகளை மேற்கொண்டார்கள் என்று கேட்கின்றேன்.

**DEPUTY SPEAKER**: The hon. Member has got only two more minutes.

**SRI K. ANBAZHAGAN**: எங்கள் கட்சித் தலைவருக்குப் பதிலாக நான் பேசுவதற்கு கனம் சபா நாயகர் அவர்கள் அரை மணி நேரம் ஒதுக்கினார்கள். அந்த நேரம் அளவுக்கு நீங்கள் அனுமதி அளித்தால் தொடர்ந்து பேசுகிறேன். இல்லாவிட்டால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER**: In that case, the hon. Member may continue his speech.

[24th January 1961

**SRI K. ANBAZHAGAN:** எனவே எந்த அளவு நமக்குச் சேர வேண்டுமோ அந்த அளவு தொகை நமக்குக் கொடுக்கப்படவில்லை. எந்த அளவு தொகை கொடுத்தால் தமிழகம் முன்னேற முடியுமோ அந்த அளவு கொடுக்காவிட்டாலும் மற்ற வட்டாரங்களில் செலவழிக்கப்படும் அளவாவது நமக்கும் கொடுக்கவேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவதற்கென்ன? வட்டாரங்களுக்குத் தொகை ஒதுக்குகிறபோது அந்த அந்த வட்டாரங்களில் உள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, பிற்பட்ட வட்டாரங்களில் உள்ள மக்களின் நிலையை உயர்த்துவதற்கு ஏற்றவகையில் அதிக தொகை ஒதுக்க வேண்டும் என்று கோருகிறோம். பிற்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றத்துக்கு தனியாக தொகை ஒதுக்க வில்லையா ? அதைப் போல மண்டலங்களில் பிற்பட்ட மண்டலங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி அவற்றை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் அல்லவா ? அப்படிச் செய்தாலொழிய ஒன்றுக்கொன்று சம அந்தஸ்துடன் வாழ்வதற்கு முடியுமா ? இன்றைய தினம் தமிழ்நாடாக இருக்கட்டும், அல்லது தென்மண்டலமாகவே தான் இருக்கட்டும். இங்குள்ளவர்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது ? இதர ராஜ்யத்திலுள்ளவர்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது ? இதுபற்றிய புள்ளி விவரம் சிலவற்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். கருத்துக்காக மட்டுமேதான். மன்னிக்கவேண்டும்.

"It is shown there that the advance will be greatest in the Punjab at 138·56 per cent, Orissa at 114·86 per cent and Gujerat at 101·02 per cent.

இப்படி இந்த ராஜ்யங்கள் எல்லாவற்றிலும் 101 சத விகிதம், 114 சத விகிதம், 138 சத விகிதம் என்கிற அளவுக்கு வருமானத்தில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் Comparatively slow movers will be Andhra, Kerala and Madras என்று சொல்லப்படுகிறது. மண்டலங்களின் அடிப்படையில் மூன்றாவது திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படுவது என்ன ?

"The Southern Zone is estimated to record a rise of only 25·05 per cent over the Third Plan period, against 35·83 per cent in the Northern Zone and 36·57 per cent in the Eastern Zone. The Central Zone will increase by only 26·50 per cent sligbtly faster than the Southeren Zone, but slower than all other Zones."

அமைச்சர் அவர்களுக்கு இது தெரியாதா ? தெரிந்தும் நான் அந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்வதற்குக் காரணம் திட்டகாலத்தில் 1950-51-ல் இருந்ததற்கு மேல் 1965-66-ல், பீகாரில் 51 சத விகிதம் வளர்ச்சி ஏற்படப்போவதிருக்க, பஞ்சாபில் 72 சத விகிதம் வளர்ச்சி ஏற்படப்போவதிருக்க, வங்காளத்தில் 60 சத விகிதம் வளர்ச்சி ஏற்படப்போவதிருக்க, சென்னையில் எதிர்பார்க்கப்படுவது 26·79 சத விகிதம்தான்; பொருளாதார வளர்ச்சியில் தென்னகம் எத்தனை கீழான நிலையில் இருக்கப்போகிறது என்பது



24th January 1961] [Sri K. Anbazhagan]

அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா ? அதற்கென்ன ; வேண்டுமென்றால் மணிப்பூரைப் பார் என்பார். இன்னொரு பகுதியைப் பார் என்பார். இந்தப் பகுதிகளில் குறைவாக இருக்கிறது என்பதனால் நாம் அதிகமாக வளர்ந்துவிட்டோம் என்று நினைத்துக் கொண்டு விட முடியுமா ? இப்படிக் குறைந்திருக்கிற வருமானத்தை ஈடு செய்வதற்கு எங்கே தொகை கேட்டீர்கள் ? பின் தங்கியிருக்கிற நிலைமையை மாற்றுவதற்கு என்ன ஏற்பாடு செய்தீர்கள் ? காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசும்போது பின் தங்கிய வகுப்புக்கு உதவித் தொகை அதிகம் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். பிற்பட்ட வகுப்புக்கு உதவி செய்யலாம். பிற்பட்ட மண்டலத்திற்கு அந்த உதவித் தொகை எங்கே ? தென்னகம் விவசாயத்துறையில், தொழில் துறையில், எல்லாவகையிலும் பிற்பட்ட நிலையில் இருக்கிறது என்றால் இல்லை என்பதற்கு நீங்கள் என்ன ஆதாரம் கொடுக்கிறீர்கள் ? நேற்று இருந்ததை விட இன்று முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். நேற்று இருந்ததைவிட இன்று மற்ற இடங்களில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் என்ன என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஜனநாயக அரசியல் வாழ்வில் ஏற்பட்டிருக்கிற போட்டாபோட்டிச் சூழ்நிலையில் நாம் மிகவும் பின் தங்கிவிட்டோம். இப்படிப் பின் தங்கிவிட்டால் தமிழகம் என்றென்றும் தலைதூக்க முடியாத நிலைமை வந்துவிடும் என்று உணர்த்த விரும்புகிறேன். தமிழகத்தின் நல்வாழ்வுக்கு அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் என்ன வழிவகுத்திருக்கிறார்கள் ? இந்தப் புள்ளிவிவரப்படி . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir, according to May's Parliamentary practice when a Member reads an extract, he must tell the House from which book he is quoting. The hon. Member cannot brief the House from any bazaar book. We must know what it is.

DEPUTY SPEAKER : The hon. Member will explain. He has got some figures.

SRI K. ANBAZHAGAN : From Regional Incomes over the Three Plans collected by Sri P. K. Sarangapani Mudaliar from the Quarterly Report of the Indian Institute of Public Opinion.

"பசார்" என்ற சொல்லைக்கொண்டு நான் ஏதும் வெறுப்படையவில்லை. பசார் நல்ல இடந்தான். ஆனால் "பசாரைச்" சில பேர்தான் கெடுத்துவிடுகிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைத்தான் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் மத்திய சர்க்காரில் குறிப்பிட்டு பேசினார்கள். பொருளாதாரத் துறையில் நிபுணர்களாக இருக்கக்கூடியவர்கள் தந்த இந்தப் புள்ளிவிவரங்கள் தவறு என்றால் அதைவிட மகா மேதாவிகளாக இருக்கக் கூடியவர்கள்தான் வேறு புள்ளிவிவரங்களைத் தரவேண்டும். அதைவிட்டு இந்தப் புள்ளிவிவரங்கள் தெரியாதது போல நடிக்கிறார்கள் அமைச்சர்கள். இப்படிப்பட்ட நடிப்புக்கு இடம் கலைத்துறையிலேயே அன்றி அரசியலில் அல்ல

[Sri K. Anbazhagan] [24th January 1961

தமிழ்நாடு பொருளாதாரத்துறையில், தொழில்துறையில் எவ்வளவு தேய்ந்து வருகிறது, புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதை உண்மையான புள்ளிவிவரங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இப்படி எல்லாவகையிலும், பின்தங்கியிருக்கிற நிலைமையைப் போக்குவதற்கு வங்காளத்தின் முதல் மந்திரியைவிடத் தீவிரமாகப் போராடவேண்டிய நிலைமை அதிகம் ஏற்படும். போராடாவிட்டால் தமிழ்நாடு தலை தூக்காது. தமிழகம் பூக்காது, காய்க்காது. தமிழ் மக்கள் வாழ்வு மணக்காது, வளம் பெறாது. உங்கள் உணர்ச்சியை டில்லிக்குக் காட்டினாலொழிய தமிழ்நாடு செழித்து வாழாது. தமிழ்நாடு எப்படியோ ஒழியட்டும், நாங்கள் அமைச்சராக இருந்தால்போதும் என்று நீங்கள் நினைத்தால் அதற்காகவே, டில்லிக்குத் திருப்தி ஏற்படும்படி எங்களை யெல்லாம்—எதிர்க்கட்சிகளை எல்லாம்—நீங்கள் ஒழிக்கத் திட்டமிட்டால்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நாங்களா ஒழிக்கப் போகிறோம்?

SRI K. ANBAZHAGAN : தானாக ஒழிந்துவிடுவீர்கள் என்று அமைச்சர் ஆசையை வெளிப்படுத்துகிறார். ஆனால் யார் ஒழியப் போகிறார்கள் என்பது 1962-மார்ச்சில் தெரியும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஏற்பட்ட ஏமாற்றம் 150 கோடி; இரண்டாவது திட்டத்தில் ஏமாற்றம் 300 கோடி; ஆக இரண்டையும் சேர்த்துக் கணக்கிட்டால் 450 கோடிக்கு நாம் ஏமாந்து கைவிட்டிருந்தாலும், தூத்துக்குடி துறைமுகத்தை கொஞ்சம் ஆழப் படுத்துங்கள் என்று கேட்பதற்கு எத்தனை தடவை டில்லி போய் வருவது? எத்தனை முறை போராடுவது? நெய்வேலித் திட்டத்தை சிறிது துரிதப்படுத்துங்கள் என்று எத்தனை முறை போய்க் கேட்பது? சேலத்திலுள்ள இரும்பை வெளிக்கொண்டு வாருங்கள் என்று கேட்க எத்தனை தடவை ஓடிச் செல்வது? இதற்காக செலவான கட்டணச் செலவைக் கொண்டே ஒன்றிரண்டு திட்டங்களைக் கொண்டு வரலாம் என்று கூடத் தோன்றுமே! ஆக, மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் தெற்கு தேய்கிறது என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? மற்றொன்று, இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படாத வரையில் எந்த நாடும் வளராது: அதுவும் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இங்கு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்பட்டாலொழிய தமிழ்நாட்டிற்கு தொழில் துறை முன்னேற்றமில்லை, வாழ்வில்லை. ஆகவே, இங்கு ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை கொண்டு வர இந்த அரசாங்கம் மனமாற முன்வரவேண்டும். எப்படி முன் வரும்? அங்குள்ளவர்களுக்கு, துர்க்காபூரில் அக்கறையிருக்கிறதே தவிர, பிலாயில்தான் கருத்து இருக்கிறதே தவிர, ரூர்கேலாவில்தான் முக்கிய விருப்பம் இருக்கிறதே தவிர, பொக்காராவில் இன்னொரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்துவது நோக்கமாக இருக்கிறதே தவிர, இங்கு சேலத்தில் இரும்பு உருக்கு தொழிற்சாலை அமைப்பது, பரிசிலனை கட்டத்திலிருந்து விடுபட்டு



24th January 1961] [Sri K. Anbazhagan]

25 கோடி அடையாளமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தவிர திட்டவட்டமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது? என்ன செய்திருக்கிறார்கள்? நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி இல்லையா? வேண்டிய சாதனங்கள் கிடைக்கவில்லையா? ஆனால் தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு அதை உடனடியாக நிறைவேற்ற ஆற்றல் இல்லை என்றுதானே பொருள். ஆனால் வடக்கே உள்ளவர்களுக்கு மட்டும் அதற்கு வேண்டிய ஆற்றல் இருக்கிறது! தமிழ் நாட்டில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்பட்டாலொழிய நமது நாட்டின் முன்னேற்றம் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பின் தங்கியே போக நேரிடும். அது வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அதிகப்படுத்தத்தான் செய்யும். அதற்குப் பின்னர் இந்தியாவின் ஒற்றுமை பற்றிப் பேசுகிறவர்கள் மிக மிக வெகுளிகளாகத்தான் கருதப்படுவார்கள், லாப நோக்குடையவர்கள் என்றுதான் அவர்கள் கருதப்படுவார்கள். அவர்களை நாட்டு மக்கள் மதிக்கமாட்டார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளவும்மாட்டார்கள். தமிழ்நாட்டில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படாத காரணத்தால், தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்காத காரணத்தால் தமிழ்நாட்டில் தொழில்வளம் மங்கிப் போய்விட்டது. எனவே, சர்தார் வேதரத்னம் அவர்கள் முன்னர் சொன்னதுபோல் சிறுசிறு துறைமுகங்கள் கவனிக்கப்படாமல் இருக்கிற காரணத்தால் தமிழ்நாடு பின்தங்கிக் கிடக்கிறது. சென்னைமா நகராட்சி சில நெடுஞ்சாலைகளைப் பழுது பார்க்காத காரணத்தால் காங்கிரஸ் அதில் விழுந்து நொறுங்கி விடுமோ என்று வேதனைப்படுகிற காங்கிரஸ் அரசாங்கம், தமிழ்நாடு முழுவதும் பழுதடைந்து கிடக்கிற நெடுஞ்சாலைகளை எப்படி வைத்திருக்கிறது? சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் ஒரு பாலம் பழுதடைந்தால் அதைப் பழுது பார்ப்பதற்குத் தாமதமாவதில் முப்பது மைல் சுற்றி வர வேண்டியிருக்கிறது. இன்று அந்தளவு கேவலமாகத்தான் நெடுஞ்சாலை நிலை இருக்கிறது. நெடுஞ்சாலைகள் எங்கு சீராக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன? வட நாட்டில் பெரிய நகரங்களிடையே 100 மைல் அளவு எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் ரோடு போட்டுள்ளனர். அதேபோல் தமிழகத்தில் போட வேண்டுமென்றால், நமக்கு அளிக்க அவர்களுக்கு மனம் இல்லை. கேட்பதற்கு தைரியமும் இல்லை. கிடைக்கலாம் என்ற நம்பிக்கையும் இல்லை. ஆக, கவர்னர் அவர்கள் அவர்களது உரையில் என்ன சொல்லியிருந்தாலும் இன்றையதினம் அதை மக்கள் விரும்பி வரவேற்க மாட்டார்கள். (மணியடிக்கப்பட்டது) கடைசியாக ஒன்று சொல்கிறேன். வேறு ஒன்றும் செய்ய இல்லாவிட்டாலும் நல்லெண்ணத்தையாவது ஏன் காட்டக் கூடாது? பொது மக்களிடம் உங்கள் நல்லெண்ணத்தை காட்டிக்கொள்வீர்களானால் உங்கள் திறமையற்ற தன்மையை நான் வேதனையுடன் எடுத்துச் சொல்லமாட்டேன். நமது மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று மக்கள் கேட்கிறார்கள், எதிர்க்கட்சியினர் அத்தனை பேரும் கேட்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்கூட மக்களைச் சந்திக்கும்போது எங்களுக்குக் கூட தமிழ் நாடு என்று பெயர் வைக்க ஆசைதான், ஆனால் [illegible]

[Sri K. Anbazhagan] [24th January 1961

நிலை இடம் தரவில்லை என்று சொல்கிறார்கள். ஏன் தமிழ் நாடு என்று பெயர் வைக்க ஆட்சியாளருக்கு மனம் வரவில்லை? நம் நாட்டிற்கு எல்லை வகுப்பது தமிழ் மொழிதானே. நிதியமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை மதிக்கிறவர்கள். அப்படி மொழியை மிகவும் மதிப்பவர்கள் ஏன் தமிழ்நாட்டை மதித்து அப்பெயர் வைக்கக் கூடாது? மாற்றுக்கட்சியினர் சொல்கிறார்களே என்பதற்காக அப்படிச் செய்யவில்லை என்றால், அந்த ஆளுங்கட்சி வாழாது, அந்தக் கட்சியின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டு உண்ணாமலிருந்து உத்தமர் சங்கரலிங்க நாடார் உயிர் நீத்தார். தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று காலஞ் சென்ற திரு. வி. க. கேட்டுக் கொண்டார். தமிழ் நாடு என்று பெயரைச் சொல்லிச் சொல்லி வ. உ. சி. வழி காட்டினார். செந்தமிழ் நாடு என்று களிப்புடன் பாரதி பாடினார். காங்கிரஸிலிருந்து வெளியே வந்திருக்கும் திரு மா.பொ.சி.-யும் அதையே முன் வைத்துப் போராடுகிறார். அரசியல் கருத்துக்களில் மாறுபட்டிருக்கும் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும், சுதந்திரா கட்சியும் இங்குள்ள அத்தனை கட்சிகளும் சொல்கின்றன, 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று. இந்த நாட்டிற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்க மாட்டோம் என்று சொன்னால் தமிழ்நாட்டிற்கு காங்கிரஸ் கட்சி ஏற்றதல்ல என்றுதான் (மணி அடிக்கப்பட்டது) மக்கள் எண்ணுவார்கள். கவர்னர் உரையில் இம்மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்னும் பெயரை இந்த அரசாங்கம் ஏற்றுவைக்கும் என்று சொல்லியிருந்தால் அந்த ஒன்றுக்காவது நாங்கள் மனமார நன்றி செலுத்தியிருப்போம், ஆனால் அது கூடக் கூறப்படவில்லை. அதைக்கூடத் தெரிவிக்க கவர்னருக்கு மனம் இல்லாததால் எனது ஆழ்ந்த வருத்தத்தை தமிழ்த்தாயின் சார்பில் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-25 p.m. The House then adjourned.

V—PAPER PLACED ON THE TABLE OF THE HOUSE.

A.—STATUTORY RULES AND ORDERS

146. *Notification issued with G.O. No. 3759, Revenue, dated 19th September 1960, under the Madras General Sales Tax Act, 1959 (Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).*

B.—REPORTS' NOTIFICATIONS AND OTHER PAPERS

37. ***Decisions of the Zonal Ministerial Committee as approved by the Southern Zonal Council regarding safeguards to be afforded to the Linguistic minorities issued in G.O. No. 1281, Public (Partition), dated 11th August 1960.***



24th January 1961]

APPENDIX

[Vide answer to the starred question No. 125 asked by Sri S. Pakkirisami Pillai at the meeting of the Legislative Assembly held on 4th January 1961, page 367 supra.]

*Statement showing the particulars of number of houses proposed to be constructed under the Low Income Group Housing Scheme during 1960–61 and the tenements available for allotment and the number of applications received for allotment.*

| | *Number of houses proposed to be built under Low income group housing schemes, during 1960–61.* | *Number of houses available for allotment during 1960–61.* | *Number of applications received for allotment.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Corporation of Madras .. .. | 120 | 94 | 1,054 |
| 2 Government sponsored Co-operative Housing Societies. | 150 | Loans are sanctioned to the members of the Co-operative Societies for construction of houses, and therefore no houses will be available for allotment to others, and no applications will be entertained by Registrar of Co-operative Societies for allotment of houses. | |
| 3 City Improvement Trust .. | 126 | 126 | 600 (These are old applications of 1958 and selection will be made from them only) |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 25th January 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Community Development*

* 161 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** *கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) நம் மாநிலத்தில் ஏ., பி., ஸி., டி. சமுதாய நலத்திட்டப் பகுதிகள் எத்தனை உள்ளன ?*

*(இ) இவைகள் எந்த அடிப்படையில் ஏ., பி., ஸி., டி. என்று பிரிக்கப்படுகின்றன ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) The matter is under the consideration of the Government. No final decision has yet been taken.

**SRI S. M. ANNAMALAI :** *ஸார், இப்படி ஏ., பி., ஸி., டி. என்று பிரித்தாலும் கூட அதற்கு பணம் ஒதுக்குவதில் ஏதாவது வித்தியாசம் காட்டப்படுமா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *ஆம், பணம் ஒதுக்குவதற்காகத்தான் நான்கு பகுதியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் முற்போக்கான பகுதி, மிகவும் பிற்போக்கான பகுதி, மத்தியத்தர பகுதி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் பணம் ஒதுக்குவதும் மாறுபடத்தான் செய்யும்.*

**SRI M. K. SOMASUNDARAM :** *பணம் ஒதுக்குவதில் பாப்புலேஷன் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா, அல்லது ஏரியா அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா? ஏரியாவை எடுத்துப் பார்த்து பணம் ஒதுக்குவது என்றால் அதிகமாக ஒதுக்கவேண்டுமல்லவா ? இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *இதையெல்லாம் பஞ்சாயத்து ஆக்ட் நிறைவேற்றியபோது பரிசீலனை செய்யப்பட்டது. மேலும் எந்தெந்த பகுதிகளுக்கு என்னென்ன தேவையிருக்கிறது என்பதையும் பார்த்து அதற்குத் தகுந்தபடி பணம் ஒதுக்கப்படும்.*

**SRI K. VINAYAKAM : In the matter of selection of these Community Development Centres based on their backwardness or forwardness as the case may be, will the Government consider the**

possibility of choosing the Tiruttani taluk which has come over to us under the Pataskar Award and which is supposed to be a very backward area and giving preferential treatment to that taluk for having Community Development Centres there?

THE HON. SRI C. SUBRAMANIAM: In Tiruttani taluk, there are blocks functioning and we have laid down an objective method of classification. Therefore, if it comes under any of those categories, it would be automatically taken up under that category.

*Attappadi*

* 162 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of Sri P. S. CHINNADURAI): *கனம் நிதி அமைச்சர் அர்வகள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) அட்டப்பாடி மலைப் பகுதியை சென்னை ராஜ்யத்துடன் சேர்க்க சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டுமென கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?*

*(இ) அப்படியானால், அதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை யாது ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *(அ) & (இ) கேள்வியில் சொல்லப்பட்ட விண்ணப்பம் வந்தது. ஆனால் அந்த கோரிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று சர்க்கார் தீர்மானித்துள்ளார்கள்.*

*Ticketless travel*

* 163 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI V. K. Kothandaraman): *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*1960-ம் வருடம் ஏப்ரல் மீ 19-ல் 720 எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி—*

*(1) அபராதம் விதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?*

*(2) என்ன தண்டனை ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

1957—Rs. 79,235.55.

1958—Rs. 77,642.16.

1959—Rs. 89,502.16.

Other kinds of sentences range from imprisonment till the rising of the Court to imprisonment for six months.

SRI A. VEDARATHNAM: *பிரயாணிகளிடம் டிக்கெட்டுகளை செக் செய்வதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற டிக்கட் கலெக்டர்கள் டிக்கட் இல்லாத பிரயாணிகளிடமிருந்து பணத்தை செய்து கொண்டு டிக்கட் இல்லாமல் அழைத்துச் சென்று விடுவதாக புகார் இருந்து வருகிறது. இதன் பேரில் ரயில்வே நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்குமாறு நமது அரசாங்கம் ரயில்வே இலாகாவுக்கு ஆலோசனை கூறுமா ?*



THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இம்மாதிரிப்பட்ட தவறுதல்கள் நடப்பது ரயில்வே இலாகாவினருக்கும் தெரியும். இதற்காக தனியாக செக்யூராட்டி ஃபோர்ஸ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் மூலம் தக்க நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள்.*

SRI M. K. SOMASUNDARAM: *ஸார், டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்ததற்காக தண்டனை அடைந்தவர்கள் எல்லோரும் இப்போதுதான் முதல் தடவையாக தண்டனை பெறுகிறார்களா அல்லது பல தடவை தண்டனை பெற்றிருக்கிறார்களா, இவ்விதம் பல தடவை தண்டனை பெற்றவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *தண்டனைகளைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. தண்டனை கொடுப்பது என்பது கோர்ட்டார் கொடுக்க வேண்டும். அதிலும் சட்டத்தின் பிரிவுகளுக்குத் தகுந்தபடிதான் தண்டனை கொடுக்க முடியும்.*

SRI K. VINAYAKAM: Sir, the entire block of Swatantra Party Members is vacant.

MR. SPEAKER: How am I responsible for it?

SRI K. VINAYAKAM: I have simply brought it to your notice, Sir.

MR. SPEAKER: Thank you.

SRI S. M. ANNAMALAI: *இதில் அபராதம் மட்டும்தான் விதிக்கப்பட்டதா, அபராதம் கட்டாமல் சிறை சென்றவர்களும் இருக்கிறார்களா, அவ்விதம் சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர் ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *அபராதம் செலுத்தாமல் இருந்தால் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். எத்தனை பேர் என்கிற விவரங்கள் என்னிடமில்லை.*

SRI A. A. RASHEED: May I know whether these fine amounts are credited to our Madras Treasury?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, when the courts are in the Madras State . . . (Sri M. Kalyanasundaram: *சர்க்காருக்கு லாபந்தானே*). But, we have to spend more on the organization.

*Mazdoors*

* 164 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether certain number of mazdoors working in the Institute of Veterinary Preventive Medicine, Ranipet, North Arcot, are paid out of contingencies without having the right of enjoying the full weekly holidays and festival days;

(b) the present scale of pay of these workers;

(c) the reasons for keeping them still under contingencies, when such categories of mazdoors in other hospitals have been brought to regular establishment; and

(d) the details of the benefits acquired by these workers according to the Madras Pay Commission's recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The mazdoors working in the Institute of Veterinary Preventive Medicine, Ranipet, are paid from contingencies. They are given half-a-day's holiday on important festival and national holidays and Sunday afternoons by turns.

(b) They are paid at the following rates :—

Pay—Rs. 15 per mensem.

Dearness Allowance—Rs. 18 per mensem.

Special Compensatory Allowance—Rs. 17 per mensem.

They will also be eligible for an *ad hoc* increase of Rs. 5 in the rate of dearness allowance from 1st June 1960.

(c) Such categories of mazdoors are still employed under contingencies in the Animal Husbandry Department (even in Veterinary Hospitals) as they are appointed with reference to the actual needs. The question of bringing all the contingent mazdoors of the State in general into regular establishment has been examined by the Madras Pay Commission and they have made some recommendations. These recommendations will be examined by Government in due course.

(d) They have acquired a benefit of increase of Rs. 5 per mensem in the rates of Dearness Allowance applicable to them.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த பே கமிஷனின் சிபாரிசு பிரகாரம் இவர்களுக்கு ஊதியத்தை கொடுக்க இன்னும் எவ்வளவு கால தாமதமாகும்? கூடிய சீக்கிரத்தில் இவர்களுக்கு பே கமிஷன் சிபாரிசு பிரகாரம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சிபாரிசு பிரகாரம் உடனடியாக ஐந்து ரூபாய் பஞ்சப்படியாக கொடுக்கப் பட்டது. மற்றவைகள் எல்லாம் கூடிய சீக்கிரத்தில் கொடுப்ப தற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

## *Sports*

* 165 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of Sri T. S. Ramaswami) : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to encourage sports in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have constituted a State Sports Council for the development of sports and games. The Sports Council disburses grants to various affiliated associations and also conducts coaching camps in selected



games. The Government are also conducting annual sports and championships for secondary school boys and girls, in connection with the Republic Day celebrations. Last year the National Physical Efficiency Drive was inaugurated and the tests were conducted in thirty centres in the State. In the current year, the State has been enrolled as a member of the School Games Federation of India and the teams have been sent to participate in the National Championships held for boys and girls of secondary schools, under its auspices.

SRI A. VEDARATHNAM : சமீப காலமாக் நம் நாட்டிலுள்ள ஸ்போர்ட்ஸ்மென்கள் எல்லா பந்தயங்களிலும் தோற்று வருகிறார்கள். உலகத்திலேயே நம் நாட்டிலுள்ளவர்கள்தான் ஹாக்கி பந்தயத்தில் முதன்மையாக இருந்தார்கள். அவர்கள் சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் தோற்று இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை கண்டு பிடித்து அவர்களுக்கு மேலும் நல்லமுறையில் ஊக்கம் அளிக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹாக்கி பந்தயத்தில் பாகிஸ்தானிடத்தில்தான் நமது கோஷ்டி தோற்றது. பாகிஸ்தான் இந்தியாவோடு சேர்ந்திருந்ததுதான். அதனால் பாகிஸ்தான் வெற்றி பெற்றதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. பொதுவாக மற்ற நாடுகளிலும் ஹாக்கி விளையாட்டில் நல்ல முறையில் முன்னேறி வருகிறார்கள் என்பதையும் நாம் ஞாபகத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்த விளையாட்டு பந்தயத்தில் நம் நாட்டுக்காரர்கள் போதுமான அளவு பரிசு பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நாட்டில் மற்ற பல பிற்போக் கான நிலை இருந்து வருவதுபோல் இதுவும் பிற்போக்கை பிரதி பலிக்கிறது.

SRI T. T. DANIEL : May I know whether sports like Basket Ball, Foot-ball, etc., come under the category of sports encouraged by this Council and whether students of our State have won prizes in All-India Tournaments?

THE HON. SRI C. SUBRAMANIAM : As a matter of fact, Foot-Ball, Volley Ball, Basket Ball and all these games are encouraged by the Sports Council. Only this year, our boys and girls participated in the school National Championship and they have gained a few prizes. But, I do not think they have won any creditable prizes anywhere.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the Sports Council constituted by the Government does not pay any attention to acquatic sports like swimming, diving, etc.? If so, will the Government instruct them to pay attention to these kinds of sports also? May I know whether the Government will give any aid to private agencies like the Madras Swimming Club if they come forward to conduct such sports?

THE HON. C. SUBRAMANIAM: I may inform the hon. Member that the Government themselves are not conducting any sports activities. It is only a question of our encouragement of the various associations which are engaged in the advancement of sports. Therefore, if there are any associations which are interested in acquatic sports, certainly, they can take advantage of the Sports Council.

SRI A. A. RASHEED: Will the Government consider making physical exercises and sports compulsory for the higher elementary schools and High schools in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. Physical exercise and some games are compulsory but in the higher elementary schools till now we did not have trained Physical Instructors. This year we are trying to have Physical Instructors for every higher elementary school provided it has got some minimum strength.

SRI M. K. SOMASUNDARAM: ஸார், "ஆல்-இண்டியா பேஸிஸ்"-ஸிலே விளையாட்டுக் குழு தேர்ந்தெடுப்பதில் தேர்விலே சில தகராறுகள் இருப்பதால்தான் நம் ஆட்டக்காரர்கள் தோற்று விட்டார்கள் என்று ஆட்டக்காரர்களிடையே பேசிக்கொள்கிறார்களே. அதனால் நல்ல முறையில் திறமையைப் பார்த்து ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு நல்ல கமிட்டியை நியமிக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நம் நாட்டிலே தேர்தலில் இந்தக் கோளாறுகள் வருவதாகத் தெரிகிறது—அரசியல் தேர்தலாக இருந்தாலும் அல்லது விளையாட்டுத் தேர்தலாக இருந்தாலும். தேர்தலினால்தான் பிரச்னைகள் அதிகமாக வருகிறது என்றால் அந்த அளவுக்கு நம்மிடையே ஒழுக்கமும் கட்டுப்பாடும் குறைவு என்று தெரிகிறது.

*State Finance*

* 166 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சமீபத்தில் நியமிக்கப்பட்ட நிதிக் கமிஷனிடம் இந்த ராஜ்ய நிலையைப்பற்றி விளக்குமுன் அது விஷயம்பற்றி இந்தச் சபையில் விவாதிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: As the New Finance Commission has not finalized its rules of procedure, it is not yet definite whether the Memorandum to be submitted to it is to be kept confidential or not. A decision will be taken on this question in consultation with the Finance Commission.



*Sheep*

* 167 *Q.*—SRI A. A. RASHEED:
SRI A. VEDARATHNAM: } Will the Hon. the Minister for Home be pleased to state, whether the Government have recommended to the Union Government against the export of sheep, fowls and eggs to Ceylon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. A. RASHEED: Is the Hon. the Minister aware that the prices of mutton, fowls and eggs have increased steeply in the recent times because of their export to Ceylon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I cannot say that the rise, if at all there is, in the prices of these commodities has arisen on account of export. Export has been there and we should be interested in these exports from the economic point of view. This will give also a stimulus for the producers to produce more. I may also refer to the export policy of the Government of India from March 1960 and onwards. Export of sheep will be licensed at Madras, within a ceiling on the basis of best year's exports of sheep during any one of the four calendar years 1954–57 to established shipper, and for new comers export will be allowed within a separate ceiling. Export of fowls will be licensed freely on shipping bills on the principle of first-come-first-served to all permissible destinations excluding Portuguese possessions and Pakistan. Eggs are classified under provisions and oilman stores and export of the same is allowed without any licence under Export Trade Control Regulations.

SRI A. VEDARATHNAM: இதன் மூலமாக நம் மாநிலத்திற்கு எவ்வளவு நிதி கிடைக்கிறது என்று அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதை நான் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

SRI J. MATHA GOWDER: சமுதாய நலத்திட்டத்தில் நடத்துகின்ற கோழிப் பண்ணை போன்ற பண்ணைகளில் கோழி கிடைப்பது அரிதாக இருக்கும்போது, முட்டைகளையும் கோழிகளையும் எக்ஸ்போர்ட் செய்வது சரியா? இந்த எக்ஸ்போர்ட்டைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சமுதாய நலத் திட்டங்களில் கோழிப் பண்ணைகளை அநேகம் பேர்கள் வைத்துக் கொண்டு வருகிறார்கள். அவைகள் எவ்வளவு தூரம் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் பூர்த்தி செய்து கொண்டுதான் வருகிறது. அப்படி பூர்த்தி செய்யவில்லையானாலும் அந்தக் காரணத்திற்காக ஏற்றுமதியை நிறுத்திவிடுவது என்று சொல்வது சரியல்ல.

[25th January 1961

SRI A. A. RASHEED: May I know what are the steps taken by this Government to protect the interests of Non-Vegetarians?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Non-Vegetarians are in a large majority and they do not need any special protection.

SRI P. G. KARUTHIRUMAN: சைவர்களும் அசைவ உணவு உட்கொள்ளுவதால்தான் இந்த விலையானது ஏறியிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: That is what the common man in the Madras City is reported to be remarking.

*Milk powder*

* 168 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have requested the Union Government to increase the quantity of milk powder to be imported into this State; and

(*b*) if so, the nature of reply received from them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Government of India have called for an estimate of the total annual requirements of non-fat dry milk (skimmed milk powder) for the next two to three years and the matter is under consideration.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that milk has become a luxury in the City of Madras? So, will the Government reconsider the whole matter and again appeal to the Government of India for the larger import of milk powder?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This Government have been assessing the requirements of milk powder for the Government as well as for others and informing the Government of India about the total quantity required. But there are certain limitations in getting it from America and other countries. If sufficient quantity could not be got from America, it is also proposed to get it from Denmark and Australia. Still for imports there is limitation.

SRI A. A. RASHEED: May I know how the imported milk powder is distributed among various consumers in the Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, if the hon. Member would put a separate question, I can give details about distribution.

SRI J. MATHA GOWDER: பால் பவுடர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக நீலகிரியில் ஒரு பால் பவுடர் பாக்டரியை வைக்கப் போவதாக கனம் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் சொல்லியிருக்கிறார்களே, அதை உடனடியாக அமைத்து நடத்த அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா?



25th January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தொழிற்சாலை வைப்பதென்பது அரசாங்கத்தின் உத்தேசம். அதை அவசரமாக உடனடியாகச் செய்வதில் கஷ்டம் இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து எவ்வளவு சீக்கிரத்தில் வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வைக்கவேண்டுமென்பதுதான் உத்தேசம்.

*Bridges*

* 169 *Q.*—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Works be pleased to state how many new bridges and culverts have been constructed during the Second Plan period so far and the total cost incurred in each taluk of Thanjavur district?

THE HON. SRI P. KAKKAN: The information is laid on the table of the House.[a]

SRI R. SRINIVASA IYER: அறந்தாங்கி தாலூகாவிலே பிரிட்ஜே கட்டவில்லை. பட்டுக்கோட்டை தாலூகாவில் ஒன்று கட்டியதாகப் போட்டிருக்கிறார்கள். பட்டுக்கோட்டை—அறந்தாங்கி பகுதி யானது மிகவும் பிற்போக்கான பகுதி. அதிகமான காட்டாறுகள் குறுக்கே போகக் கூடிய காரணத்தினால் கள்ளக்கடத்தலுக்குச் சௌகரியமாக இருப்பதோடு கூட குற்றங்களை சிற்சில சமயங்களில் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதால் இனிமேலாவது இங்கிருக்கும் ஆறுகளில் பாலங்கள் கட்டி போக்குவரத்துக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும், எங்கெல்லாம் பாலங்கள் கட்டவேண்டுமோ அங்கெல்லாம் கட்ட திட்டமிட்டுக் கட்டிக்கொண்டுதான் வருகிறோம். வெகு சீக்கிரத்தில் 2 பாலங்களுக்கு அஸ்திவாரக்கல் கூட நாட்டப் போகிறோம்.

SRI R. SRINIVASA IYER: ராமநாதபுரம் ஜில்லாவிலே, முதுகளத்தூர் பகுதியிலே அதிகப் பாலங்கள் கட்டி இப்போது போக்குவரத்து சாதனங்கள் சௌகரியமாக இருப்பதால் மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரியே இந்தப் பகுதியையும் நல்ல கண்ணோட்டத்தோடு பார்த்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜாஸ்தியாகப் பணம் ஒதுக்கி நல்ல நிலைக்குக் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI P. KAKKAN: இங்கு வெகு நாட்களாக ரோடு அமைப்பு சரியாக இல்லை. அங்கு வாழக்கூடிய மக்கள் அறந்தாங்கி தாலூகா மக்களைப் போல ஏழைகளாக இருப்பதால் அங்கு முக்கியமாகச் செய்யவேண்டுமென்று விசேஷமாகச் செய்யப்பட்டது. அறந்தாங்கி தாலூகாவைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு குறிப்பு கொடுத்து எங்கெங்கே போட வேண்டுமென்று சொன்னால் அதை கவனிக்கலாம்.

---

a Printed as Appendix I on page 581 infra.

[25th January 1961

SRI A. VEDARATHNAM : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் கண்டிருக்கிற பாலங்களின் விவரங்களைத் தாலூகாவாரியாக சொல்ல முடியுமா ? திருத்துறைப்பூண்டி தாலூகாவில் மூன்று என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அவைகள் எவை என்று அறிவிக்க முடியுமா ? இன்னும் போடவிருக்கின்ற பாலங்களைப்பற்றியும் கூற முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இன்னும் தஞ்சாவூர், பாபநாசம், ஒரத்தநாடு முதலிய தாலூகாக்களில் 80,000 ரூபாய் அளவுக்கு வேலை நடந்து வருகின்றது. அவைகள் மார்ச் மாதத்தில் முடியும். இன்னும் 4 பாலங்கள் கட்ட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டாவது வருஷத்தில் முடிக்க திட்டமிட்டிருக்கிறது. இன்னும் 13 பாலங்களையும் 10 கல்வெர்ட்டுகளையும் கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அவைகளும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் டெக்னிக்கல் ஸாங்ஷன் ஆகவில்லை.

அந்த நான்கு பாலங்கள்—

| | Estimated cost in lakhs. RS. |
|---|---|
| 1 Construoting a bridge across Adapar at M. 19/4 of Velanganni-Vedaranyam road. | 6.90 |
| 2 Reconstructing the bridge across Ammanar at M. 6/1 of Tranquebar-Mayuram road. | 0·90 |
| 3 Constructing a bridge across Arasalar at M. 4/2 of Tiruneelakudi-Kanalangudi road. | 2·49 |
| 4 Construction of bridge across Kaduvyar at M. 4/4 of Sikkli-Palakurichi road. | 1·00 |

SRI R. SRINIVASA IYER : பட்டுக்கோட்டை தாலூகாவிலே ராஜா மடத்திற்கு அருகிலே ஒரு பாலம் கட்டுவதாக ஏற்கெனவே ஒரு திட்டம் இருந்தது. அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது ? அதேபோல் கிழக்கு கடற்கரை ஓரத்திலுள்ள அம்பாசமுத்திரத்திலே உள்ள அம்புலி ஆற்றிற்கு அருகிலும் ஒரு பாலம் போடுவதாக இருந்தது. அதுவும் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிப்பதற்கு வசதியாக இருக்கும்.

*State Bank and Taluk Treasuries*

* 170 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri N. R Thiagarajan) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டேட் பாங்கும், தாலூகா டிரஷரியும் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியமிருப்பதை சர்க்கார் அறியுமா ?

(இ) இரண்டையும் ஒரே இடத்தில் வைக்க உத்தரவிடுவார்களா ?



25th January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & ( ) The Government are aware of the inconvenience caused to the public as a result of the sub-treasury and the State Bank branch conducting the cash transactions of the sub-treasury, being located at different places but there are pratical difficulties in locating both institutions in the same premises. The present inconvenience is not of such a magnitude as to warrant any expensive change-over. Treasury and Sub-treasury have also been specially instructed to see that urgent bills and bills presented by legislators are sent to the bank in time for the payment to be made by the banks during the same day.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், அநேகமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்டேட் பாங்கும், தாலூகா டிரஷரியும் தனியாக வெகு தூரத்திலே இருப்பதால், ஒரு பில்லை மாற்றுவதற்கு மூன்று நாட்களுக்கு மேலாகிறது. ஆகவே கூடிய சீக்கிரத்தில் மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக அரசாங்கம் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இனிமேல் இந்த காலதாமதம் அதிகமாக இருக்காது என்று நம்புகிறேன்.

*Indian students (Foreign Universities)*

* 171 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் நம் மாநிலத்திலிருந்து வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு எத்தனை மாணவர்கள் எந்தெந்தப் பயிற்சிகள் பெறச் சென்றனர் ?

(இ) இவர்களுக்கு நம் அரசாங்கம் புரிந்த உதவி என்ன ?

(உ) இந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் எந்தெந்த துறைகளில் பட்டம் பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No student was sent by the Government for further studies in Universities in foreign countries during the period.

(இ) & (உ) : Do not arise.

SRI A. VEDARATHNAM : தனியார்கள் அனுப்புவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து வெளிநாடுகளுக்கு மாணவர்களை அனுப்புகின்றதா ? அப்படி தனியார் மாணவர்கள் எத்தனை பேர் இப்போது வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி மாணவர்கள் வேறு நாடுகளுக்குச் செல்வதற்கு இந்த அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that comparatively speaking other Governments in the country are sponsoring foreign studies of students, who show capacity for further studies whereas this Government do not undertake to send even one student for foreign studies? Will the Government therefore revise their policy and encourage studies of more number of students in foreign countries?

THE HON. SRI C. SUBRAMANIAM : Even from our State, many students are going to foreign countries for further studies. This delusion that studies only in foreign countries are progressive and so we should send students there, should go. It is only for essential training we should go to foreign countries.

SRI A. VEDARATHNAM : நம்முடைய நாட்டிலே பொறியியல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் இடம் கிடைப்பது ரொம்பவும் கிராக்கியாக இருப்பதினாலே, அந்த இரு துறைகளிலுள்ள மாணவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி, அங்கு பயிற்சி பெற்று, நம் நாட்டிலுள்ள பற்றுக்குறையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுமாதிரி பட்டப் படிப்பு அளவிலேயே வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும். அப்படி வெளி நாடுகளுக்கு பட்டப் படிப்பு அளவிலே செல்லுவதால், அந்நிய செலாவணி அநாவசியமாக செலவழிக்கப்படுகிறது. அதோடு அங்கு போய் பெறுகின்ற பயிற்சியும் நம் நாட்டுக்கு உரிய முறையில் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே வெளிநாடுகளுக்குச் செல்லுவதென்றால், இங்கு பட்டம் பெற்று அனுபவம் சற்று ஏற்பட்டதற்குப் பிற்பாடு அங்கு விசேஷ பயிற்சி பெறுவதற்காகச் சென்றால், அதன் மூலமாக நல்ல பலன் ஏற்படுமே யொழிய, அனுபவமில்லாமல் பட்டப் படிப்புக்காக மட்டும் முதன் முதலிலேயே போவது அவ்வளவு பலனளிக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*Harijan Colonies (lights)*

* 172 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஹரிஜன காலனிகளிலுள்ளத் தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே 1960-ம் வருடம் வரைக்கும் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

THE HON. SRI RAMAIAH : The attention of the Hon. Member is invited to the answer[a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படும் என்று கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே

[a] Printed as Appendix II on page 581 infra.



தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் பார்த்தால், ஹரிஜனங்களுடைய தெருக்களுக்கெல்லாம் மின்சார லைட் வசதி செய்து கொடுக்க 10 ஆண்டுகளுக்கு ஸ்கீம் போடப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, இனிமேல் லைட் போடுவதென்றால் அந்தந்தப் பஞ்சாயத்துக்கள் போடும்போது அதுவும் சேர்ந்து விடுகிறது. ஆனாலே போடப்படாமல் இருக்கிற ஹரிஜனத் தெருக்கள் 6 அல்லது 7 ஆயிரம் தான் இருக்கும். இதற்கு 10 வருஷம் ஸ்கீம் போட்டு, ஹரிஜன நிதியிலிருந்து எடுத்து செலவு செய்யாமல், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதைச் சேர்த்துக்கொள்ள சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI V. RAMAIAH : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்படும் எல்லாக் கிராமங்களிலுமுள்ள ஹரிஜன காலனிக்கும் மின்சார வசதி கிடைக்கும். இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே குறிப்பிடுவது என்னவென்றால், ஆரம்பத்திலிருந்து விட்டுப்போன ஹரிஜன காலனிகளுக்குத் தனியாக மின்சார வசதி கொடுக்க வேண்டுமென்பதேயாகும். இரண்டு வருஷங்களுக்கு முன், அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து ஹரிஜன நல இலாகாவுடன் கலந்து பேசி, இப்படி விட்டுப்போன ஹரிஜன காலனிகளுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். அந்த திட்ட அடிப்படையிலே கடந்த சில ஆண்டுகளாக பல கிராமங்களுக்கு, ஹரிஜன காலனிகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். மீதமுள்ள அப்படிப்பட்ட கிராமங்களுக்கு இன்னும் துரிதமாகக் கொடுக்க பரிசீலனை செய்யவேண்டுமென்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : கிராம பஞ்சாயத்துப் பிரதேசங்களிலுள்ள ஹரிஜன காலனிகள் விஷயத்திலே, அந்த பஞ்சாயத்துக்கு ஏற்கெனவே மின்சாரம் இல்லாமல் இருந்தால், அப்படிப்பட்ட ஹரிஜன காலனிகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மின்சாரமே இல்லாத கிராமப் பஞ்சாயத்துக்கு அருகிலே உள்ள ஹரிஜனக் காலனிகளுக்கு மின்சாரம் கொடுப்பது இதனால் தடைப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : மின்சாரம் அறவே இல்லாத கிராமங்களுக்கு கிராம விஸ்தரிப்புத் திட்டக் காலத்திலே விஸ்தரிக்க முடியும். இந்தக் கேள்வியிலே கனம் அங்கத்தினர் கேட்டிருப்பது விஸ்தரிக்கப்பட்ட கிராமங்களுக்குப் பக்கத்திலே ஹரிஜனக் காலனியிருந்தால், அப்படிப்பட்ட கிராமங்களுக்கு இதற்கு முன்பு விஸ்தரிக்க முடியாமல் போய்விட்டதே, அதற்கு விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதாகும். அதற்குத் தான் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

[25th January 1961]

SRI P. G. MANICKAM: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரம் இதுபற்றி கவனித்து விளக்குகள் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு பரிசீலனை செய்து இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகவே அதை கூடிய சீக்கிரம் கவனித்து செய்வதற்கு சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

*Cauvery Irrigation Areas*

* 173 *Q.*—SRI K. R. NALLASIVAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரிப்பாசனப் பிரதேசங்களில் தண்ணீர் விடுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஒவ்வொரு நிலத்துக்கும் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கிடைக்கும்?

THE HON. SRI P. KAKKAN: (அ) No, Sir. There had been no restriction in supply in any of the areas fed by Cauvery old ayacut viz., Cauvery delta, ayacut under Tiruchi channels, etc., New ayacuts under the New Kattalai High Level Canal and Pullambady Canal are being supplied only when surplus flows are available in the Cauvery.

(இ) Does not arise.

9-00 p.m. SRI K. R. NALLASIVAM: தண்ணீரைக் குறைத்துப் பாய்ச்சுவதன் மூலம் ஒன்று, விளைச்சலை அதிகப்படுத்த முடியும். மற்றொன்று, அப்படி செய்யப்படுவதால் இன்னும் அதிகப்படியான நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வர முடியும். ஆகவே காவேரியில் தண்ணீரைக் கட்டுப்படுத்தி, அதனால் தஞ்சாவூரிலே இன்னும் அதிகப்படியான விளைச்சல் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: தஞ்சாவூரிலே அப்படித் தண்ணீரைக் கட்டுப்படுத்தி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டுதான் வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI R. SRINIVASA IYER: ஸார், தண்ணீரைக் குறைத்து விடுவதைப்பற்றி பட்டுக்கோட்டை அரசினர் ஆராய்ச்சிப் பண்ணையில் ஐந்து வருஷங்கள் ஆராய்ச்சி செய்து, தண்ணீரை அப்படி ரொம்பவும் குறைப்பதினால், பயிர்கள் கெட்டுப் போகின்றன. அதோடு விளைச்சலும் குறைகிறது என்று கண்ட விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா? ஆகையினாலே, விளைச்சலுக்கு முக்கியமாக உள்ள தண்ணீரைக் குறைக்காமல், தண்ணீர் குறைந்து விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், இப்போது இருக்கும் அளவிலேயே தண்ணீர் விட சர்க்கார் முயற்சி செய்வார் [illegible]



25th January 1961]

THE HON. SRI P. KAKKAN: அப்படி ஆராய்ச்சி செய்த நிகழ்ச்சிகள் எல்லாம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக கேள்வி போட்டால் சொல்கிறேன்.

SRI K. R. NALLASIVAM: ஆராய்ச்சியையெல்லாம் எடுத்துக் கொள்ளாமல், நடைமுறையிலே உள்ளதை எடுத்துக் கொள்வோம். இப்போது கீழ்ப் பவானிப் பிரதேசத்திலே ஐந்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விடப்பட்டு, அதன்படி ஒரு லட்சம் ஏக்கராக்கள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அதே மாதிரி ஏற்பாட்டிலே மீதியுள்ள எல்லாப் பாசனங்களுக்கும் தண்ணீர் கொடுத்து, ஏராளமாக சாகுபடி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்?

THE HON. SRI P. KAKKAN: சில இடங்களிலே தண்ணீர் ஜாஸ்தியாக வேண்டியிருக்கும். சில இடங்களில் தண்ணீர் சீக்கிரமாக உறிஞ்சப்பட்டு விடும். ஆகவே, அதை வைத்துக் கொண்டு, கீழ்ப் பவானியையும், காவேரி டெல்டாப் பிரதேசத்தையும் ஒப்பிட்டுப் பேசுவது நல்லதல்ல என்று கூறுகிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN: கீழ் பவானி அணைக்கட்டு பிரதேசத்தில் புஞ்சைக்கான தண்ணீர் விடுவதிலே அருமையான நஞ்சை அதிகமாக உற்பத்தி ஆகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? தஞ்சாவூரைப் போல் நான்கில் ஒரு பங்கு தண்ணீரில் அதிகமாக உற்பத்தி பெருகி இருக்கிறது என்பதை சர்க்கார் அறிவார்களா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் பகுதியில் நெல் அதிகமாக விளைகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

*Minor irrigation works*

* 174 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to place on the Table of the House a copy of the Minor Irigation Works to be undertaken in the Coimbatore district under the Third Five-Year Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The principal schemes that will be undertaken in the Third Five-Year Plan are :—

(1) Special Minor Irrigation Programme;
(2) Desilting-*cum*-Reclamation Scheme;
(3) New Well Subsidy Scheme (Revived).

Other Minor Irrigation Schemes such as Hire Purchase Scheme for the distribution of electric motors, scheme for the sinking of filter points etc., will also be continued.

[25th January 1961

Detailed particulars in respect of individual districts are not available at this stage, as even the State Programme for 1961–62 is yet to be finalized.

**Sri N. K. PALANISAMI :** கோவை, சேலம் ஜில்லாக்களில் சிறிய நீர்ப்பாசனம், குட்டை ஸ்கீம்கள் உள்பட அதிக தேவை இருக்கிறது. இப்பொழுது 2 வருஷ காலமாக ‘பட். டிபார்ட்மென்டில்’ ஒரு ‘சப் டிவிஷன்’ வேலை செய்யும்கூட, இந்தப் பணத்தைச் சரியானபடி செலவழிக்க முடியாத காரணத்தினால் இந்த ‘சப் டிவிஷனை’ ஒரு எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் டிவிஷனாக கோவையில் விஸ்தரிப்பதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் யோசனை செய்யப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் செய்ய வேண்டியதில்லை. ஒரு டிவிஷனை பெரிது பண்ணி அதிகமாக என்ஜினியர்கள் நியமிக்க வேண்டியதை அவ்வப்பொழுது கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**Sri S. NAGARAJA MONIGAR :** சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ‘ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட்’ வேலை செய்துகொண்டு வருகிறது. சுமார் 1½ வருஷமாக வேலை துவங்கியும் டன் ஒன்றுக்கு ரூ. 2,000 அளவில் இருக்கக்கூடிய ஸ்கீம்கள் தான் எடுத்துக்கொள்ளப்படும் என்ற காரணத்தினால், தருமபுர வட்டாரத்தில் உதவி என்ஜினியர் சுமார் 20 ஸ்கீம்கள் போட்டு அனுப்பியிருந்தும், அவைகள் ரூ. 4,000, 5,000-க்கு குறையாத அளவில் இருந்து வருவதன் காரணமாக எந்த வேலையையும் துவக்க சாத்தியப்படவில்லை என்பதை சர்க்கார் அறிவார்களா ? அதற்கு ஏதேனும் பரிகாரம் செய்ய முன்வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும், அதில் தான் முன்னேற வழி இருக்கிறது என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்து தாராளமாகவே செலவை அதிகமாக பாராட்டாமல் கூட பல திட்டங்களை எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறது. இதற்காக அதிகப்படியான பணமும் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால் செலவு செய்வதிலும் ஒரு அளவு உண்டு. ஒரு டன் விளைச்சலுக்கு எவ்வளவு தூரம் செலவு செய்யலாம் என்பதற்காக ரூ. 2,000 என்ற குறிப்பிட்ட தொகை ஒரு வரம்பாக வைக்கவேண்டியிருக்கிறது. அந்த வரம்பைப் பார்த்துத் தான் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால், இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் அவ்வப்பொழுது செலவு செய்யப்பட்டு தான் வருகிறது. கனம் அங்கத்தினர் கவனத்திற்கு நான் சில புள்ளி விவரங்களைக் கொண்டு வர விரும்புகிறேன்.

25th January 1961]

The particulars of outlay for the Third Plan and 1961-62 for the State as a whole are as follows :—

| | RS. IN LAKHS |
|---|---|
| Special Minor Irrigation Programme .. .. | 800 |
| Desilting-*cum*-Reclamation Scheme .. .. .. | 80 |
| New Well Subsidy Scheme .. .. .. .. | 1 Crore |
| Bore wells .. .. .. .. .. .. | 50 |
| Tube wells and artesian wells .. .. .. | 94 |
| Filter points .. .. .. .. .. .. | 50 |
| River pumping scheme .. .. .. .. | 5 |
| Pumpsets on hire-purchase scheme for electric motors. | 1 Crore |
| Ground water exploration and survey .. .. | 1 lakh |

இப்படி மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது ஜில்லாவாரியாக எடுத்துக் கொள்ளப்படும்.

SRI N. K. PALANISAMI : திட்டத்திற்கு எஸ்டிமேட் தயாரிக்கக்கூடிய காலத்தில் ஒரு டன் நெல் விளைச்சலுக்கு ரூ. 2,000 செலவிடலாம் என்று கணக்குப் போட்டு, அதற்கு மேல் இருந்தால் அந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்ற நிலைமை இப்பொழுது இருந்து வருகிறது. முதலில் இந்தத் தொகை ரூ. 1,500 ஆக இருந்து இப்பொழுது அது ரூ. 2,000-க்கு ஏற்றப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு நிர்ணயம் இருப்பதன் காரணமாக பல திட்டங்கள் இப்பொழுது சாங்ஷன் ஆகாமல் போய்விடுகிறது. ஆகவே, இந்த ரூ. 2,000 என்ற வரம்பை ரூ. 3,000-க்கு உயர்த்துவது பற்றி சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரூ. 2,000 என்பது சாதாரணமாக ஒரு வரம்பாக வைக்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக அதற்கு மேலே போனுல் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுவதில்லை என்பது கூட இல்லை. அந்தந்தப் பிராந்தியத்தின் நிலைமையை ஆலோசித்து கொஞ்சம் செலவு அதிகமானுலும் கூட, சில திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனுல், மீண்டும் சொல்லுகிறேன், எதற்கும் ஒரு வரம்பு இருக்கத் தான் வேண்டும்.

*Dead bodies at the shores of Ceylon*

* 175 Q.—SRI A. A. RASHEED :
SRI N. K. PALANISAMI : } Will the Hon. the Minister for Home be pleased to state, whether it is a fact that 18 dead bodies of South Indians were found recently near the shores of Ceylon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : On 19th August 1960 a party of about forty illicit emigrants departed from Manappad in Tirunelveli district in a boat. Sixteen of them were drowned in the sea on disembarkation and their bodies were washed ashore near Mannar Coast on 22nd August 1960.

[25th January 1961

MR. SPEAKER : இன்னும் 25 நிமிஷங்கள் தான் இருக்கின்றன. 25 கேள்விகள் இருக்கின்றன. ஆகவே பாக்கி இருக்கும் கேள்விகளை சீக்கிரம் முடிப்பதற்கு கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, May I know whether the Government have investigated the cause of this tragedy and has any action been taken against persons responsible for this?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It was obvious that this is illicit emigration. They went stealthily and they could not take necessary precaution. The deceased are only responsible. What action can we take? Of course, the Inspector-General of Police was asked to publicise in that area that there are risks in illicit emigration and that they should not resort to this.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி கள்ளத் தோணிகளில் போவதை தடுக்க சர்க்கார் என்ன தீவிரமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கள்ளக் கடத்தலை தடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்களோ அதுமாதிரி இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய நிலையில் கூட நம்முடைய நாட்டு மக்களுக்கு திருட்டுத் தனமாக அங்கு செல்லவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை சர்க்கார் அறிவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஊரை விட்டு ஊர் போகும்பொழுது இக்கரைக்கு அக்கரை பச்சை என்று எல்லாருக்கும் தோன்றுகிறது. அம்மாதிரிப் போகிறார்கள்.

*Small Savings Scheme*

* 176 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state the amount of collections under the Small Savings Scheme last year?

THE HON. SRI C. SUBRAMANIAM: The gross and net collections in 1959-60 were Rs. 1,583 lakhs and Rs. 41 lakhs, respectively. Audited figures are not yet available.

SRI T. S. RAMASWAMI: Sir, will the Hon. the Minister for Finance come forward to furnish the figures for the previous year, if it is in his possession?

THE HON. SRI C. SUBRAMANIAM: The figures are—

| | Gross collection. | Net collection. |
|---|---|---|
| | RUPEES IN LAKHS. | |
| In 1956-57 .. .. .. .. .. | 1,490 | 193 |
| In 1957-58 .. .. .. .. .. | 2,041 | 801 |
| In 1958-59 .. .. .. .. .. | 1,782 | [illegible] |



25th January 1961]

*Metric system*

* 177 *Q.*—SRI V. SUBBIAH (on behalf of SRI M. P. Sarathi) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர் பிரயாணப்படி பற்றிய விதிகளில் தசாம்ச முறை (Metric system) ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) பயணதூரங்களை கிலோமீட்டர்களிலும், பயணத்துக் கான செலவுகளை ரூபாய், நயா பைசாக்களாகவும் கணக்கிட உத்தரவிடப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையென்றால், எப்போது உத்தரவிடப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) The Metric System for weights and distances has not been formally adopted in the Madras Travelling Allowance rules. Since the Railways have adopted " Kilometres " and " Kilograms " in their calculation of fares and freight from 1st April 1960, it has been ordered that weights and distances expressed in " Kilograms " and " Kilometres " may be converted into " maunds " and " miles " while preferring Travelling Allowance claims.

(இ) & (உ) Travelling Allowance claims are calculated in terms of rupees and annas and the total claim is then converted into rupees and naye Paise. The receipt of orders from the Government of India regarding the revised rates of Travelling and Daily Allowances in terms of metric system is awaited so as to secure uniformity in rounding-off.

SRI V. SUBBIAH : இன்று இருக்கக்கூடிய நயா பைசா குழப்பத்தோடு கூட தசாம்ச முறையின் காரணமாக ஏற்பட்ட குழப்பம் ஜனங்களிடையே ஏற்பட்டிருக்கிறது. வீசை, பலம், தோலா இதெல்லாம் எதற்குச் சமம் என்று ஒன்றும் புரியாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இந்த தசாம்ச முறையை மெதுவாக, ஜில்லாவாரியாக, பரீட்சார்த்தமாக அமுலுக்குக் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த மாறுதல் ஏற்பட்டாலும் தற்காலிகமாக குழப்பங்கள் இருப்பதை தவிர்க்க முடியாது. ஆனால் இம்மாதிரி மாறுதல் மூலம் நாம் இப்பொழுது கொஞ்சம் கஷ்டப்பட்டாலும்கூட, இன்னும் 5 வருஷம், 10 வருஷங்களில் இருக்கக்கூடிய நிலைமையிலே பெரிய புரட்சிகரமான முன்னேற்ற மாறுதல் ஏற்படும் என்பதில் சந்தேகம் கிடையாது.

*Radiation medicine*

* 178 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether radiation medicine is being used in any of our hospitals;

(b) if so, whether isotopes are used for diagnostic or therapeutic purpose or for both; and

(c) if not, whether there are any proposals to use them?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Deep X-Ray therapy is now being used for the treatment of patients at the Barnard Institute of Radiology, Government General Hospital, Madras, Government Stanley Hospital, Madras and Government Erskine Hospital, Madurai.

(b) No, Sir.

(c) No, Sir.

*Orphanages*

* 179 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த சபையில் 17–8–1960-ல் 238 எண்ணுள்ள கேள்வியின் பதிலில் கண்டபடி ஆலயங்கள் நடத்திவரும் அனாதை விடுதிகளை யார் பரிசீலனை செய்கிறார்கள்?

(இ) அந்தப் பரிசீலனை இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது?

(உ) எப்போது அதன் முடிவு தெரியும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) The general supervision of the working of the orphanages is attended to by the Officers of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department. The working of the orphanages is not satisfactory. There is, therefore, no proposal now to start any more orphanages.

(இ) & (உ): Do not arise.

SRI A. VEDARATHNAM: ஆலயங்கள் நடத்துகின்ற இந்த அனாதை விடுதிகள் சரியாக, நன்றாக நடைபெறவில்லை என்றால், மற்ற அனாதை விடுதிகளுக்கு அந்த ஆலய நிதியிலிருந்து உதவி, அந்த அனாதைப் பிள்ளைகளை காப்பாற்ற முன்வருவார்களா? ஆலயத் திருப்பணியைக் காட்டிலும், அனாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றுவது மிகவும் அவசியமான விஷயம் அல்லவா? அதற்கு அந்த நிதி பயன்படும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது அனாதைக் குழந்தைகளைப் பாதுகாக்கும் இல்லங்கள் பக்கத்தில் இருந்தால்—வேறு எங்கேயோ இன்னொரு இடத்தில் இருந்தால், உதவி கேட்டு பெறுவது கஷ்டம்—பக்கத்திலுள்ள ஆலயத்தின் நிதி நிலைமை சரியாக இருந்து கேட்டால், அதற்கு உதவி அளிக்கலாம்.

SRI A. VEDARATHNAM: அரசாங்கம் இதில் ஊக்கம் காட்டுகிறது என்றால்தான் அந்த ஆலயங்களில் இருக்கிற நிதியை இந்த



அனாதைப் பிள்ளைகளுக்கு உதவ முன் வருவார்கள். இதற்கு சமிக்ஞையாக, அனாதை இல்லங்களுக்கு உதவவேண்டுமென்று சர்க்கார் அறிக்கை வெளியிட முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சில ஆலயங்களே இம்மாதிரி அனாதை இல்லங்களை வைத்து நடத்துவதே இதற்குச் சான்றாகும்.

*Polytechnics*

* 180 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் தெற்கு அபிவிருத்திக் கவுன்சில் பிராந்தியத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. The Government Polytechnic for the North Arcot district which is now functioning temporarily at Madras will be shifted to Vellore as soon as lands are acquired and permanent buildings are put up. Several sites, including some sites in the region comprising the South Vellore Development district are being considered in this connection.

* 181 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have acquired any lands for the construction of buildings for the Polytechnics in the Kanyakumari district; and

(b) whether the Government propose to construct a hostel for the students of these Polytechnics?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The Government have ordered the acquisition of 50 acres of land in Nagercoil village for putting up permanent building for the Government Polytechnic, Kanyakumari.

(b) Yes, Sir.

SRI T. T. DANIEL: May I know the total approximate estimate of expenditure for purchasing the sites and also the construction of buildings? May I also know whether the building had been planned with the ultimate object of developing the polytechnic into an Engineering College later?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sorry I do not have figures with reference to the total expenditure to be incurred. It is not the intention of the Government to convert polytechnics into Engineering Colleges. If necessary, new Engineering Colleges will be started.

*Auto-rickshaws*

* 182 Q.—SRI P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடம் ஏப்ரல் மாதம் 20-ம் தேதிக்குப் பிறகு ஆட்டோ ரிக்ஷாக்கள் எதுவும் மீட்டர்கள் இல்லாமல் ஓட

அனுமதிக்கப்படாது என்று அரசாங்கத்தின் உத்தரவு வெளியானதற்குப் பிறகு, மீட்டர்கள் இல்லாமல் ஓடிய எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

(இ) இவைகளுள் (1) சென்னை நகரத்தில், (2) இதர ஜில்லாக்களில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள்?

THE HON SRI V. RAMAIAH: (a) & (b): There are no auto-rickshaws without taxi-meters in Madras City and therefore the question of taking action for non-fitment of meters does not arise.

There are no auto-rickshaws in the districts of Chingleput, Kanyakumari, the Nilgiris, North Arcot, Ramanathapuram, South Arcot, Thanjavur and Tiruchirappalli.

In the remaining districts of Coimbatore, Madurai, Salem and Tirunelveli, there were no cases in which action was taken against holders of permits for non-fitment of taxi-meters to auto-rickshaws in view of the discretion vested in the Regional Transport Authority in rule 401 (a) of the Madras Motor Vehicles Rules to grant exemption.

* 183 Q.—SRI A. VEDARATHNAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மீட்டர் பொருத்தப்படாத ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு எப்போது மீட்டர்கள் பொருத்தப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: There are no auto-rickshaws in Madras City which are plying without taxi-meters.

SRI P. G. MANICKAM: கோயமுத்தூர் டவுனிலே ஓடுகின்ற அநேக ஆட்டோ ரிக்ஷாக்களிலே மீட்டர்கள் இல்லாமல் இருக்கின்றன. இதை விசாரித்து, இந்த ஆட்டோ ரிக்ஷாக்களிலே மீட்டர்கள் பொருத்துவதற்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI V. RAMAIAH: கோயமுத்தூர் நகரத்திலே ஓடக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்களிலும் இன்னும் பல ஆட்டோ ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. அங்கே இருக்கும் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி விதிவிலக்கு அளித்திருக்கிறார். கூடியசீக்கிரம் அங்கேயுள்ள ஆட்டோ ரிக்ஷாக்களிலே மீட்டர்கள் பொருத்த என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டுமோ, அவைச் செய்யப்படும்.

SRI P. G. MANICKAM: ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்தப்படாததினால், அவர்கள் கேட்கிற தொகையை பொதுஜனங்கள் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுத்தினால், கூடிய சீக்கிரம் மீட்டர்கள் அமைப்பதுபற்றி கவனம் செலுத்தப்படுமா?





THE HON. SRI V. RAMAIAH: ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் ஒரு உத்தரவைப் போட்டு, உடனடியாக மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று சொன்னால், அதனால் பல கஷ்டங்கள் மீட்டர் கிடைக்காததினால் ஏற்படுகின்றன. அதனால்தான் டாக்ஸி மீட்டரோ, இல்லாவிட்டால் மைலோ மீட்டரோ இரண்டில் ஒன்று பொருத்தப்பட்டு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதனால் அதிகமாகத் தொந்தரவு இருக்காது. உடனடியாக உத்தரவு போட்டு அதை அமலுக்குக் கொண்டுவருவதிலுள்ள கஷ்டங்களைப் பரிசீலனை செய்துதான் புது முடிவுகளை எடுக்கிறோம்.

SRI S. PAKKIRISAMI PILLAI: ஆட்டோ ரிக்ஷா, பேபி டாக்ஸி மீட்டர்கள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. டாக்ஸி மீட்டர்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH: சென்னை நகரத்தில் ஓடக்கூடிய வண்டிகளுக்கு எல்லாம் டாக்ஸி மீட்டர் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM: மீட்டர்கள் வியாபாரம் செய்கிற வியாபாரிகள் மீட்டர்கள் செலவாகவில்லை என்று புகார் கூறுகிறார்களே, அது சரியா?

THE HON. SRI V. RAMAIAH: என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவல் என்னவென்றால், சென்ற வருஷமும் அதற்கு முந்திய வருஷத்திலும் மீட்டர்களைப் பொருத்தவேண்டுமென்று உத்தரவு போட்ட உடனே, அவர்கள் முன் சொல்லிய விலையைக் காட்டிலும் அதிகமாகச் சொன்னார்கள். அதனால் சிக்கல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அந்தக் கஷ்டம் இருக்காது.

*English*

* 184 Q.—SRI V. K. KOTHANDARAMAN:
SRI P. S. CHINNADURAI:
SRI A. VEDARATHNAM:
SRI M. P. SARATHI:
} கனம் நிதி

அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாவது வகுப்பிலிருந்து ஆங்கில போதனை ஆரம்பிக்க உபாத்தியாயர்களை நியமிப்பதின் காரணமாக பாதிக்கப்படும் உபாத்தியாயர்கள் எவ்வளவுபேர், ஜில்லாவாரியாக?

(இ) ஸ்தல ஸ்தாபன பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், சர்க்கார் பாடசாலைகள் முதலியவைகளில் எவ்வளவு பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) & (இ) A statement* is placed on the table of the House. All the teachers ousted were from Elementary schools under private agencies.

* Printed as Appendix III on page 582 infra.

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் எய்டெட் பள்ளிக்கூடங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் ஆசிரியர்களைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியிலுள்ள பி-பிரிவுக்குப் பதில் சொல்லவில்லை. பி-பிரிவுக்குப் பதில் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் சொன்ன பதிலைக் கவனித்திருந்தால் விடையைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். பிரைவேட் பள்ளிகளிலிருந்துதான் அவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். மற்ற பள்ளிகளிலிருந்து விலக்கப்படவில்லை.

* 185 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் தற்போது ஆங்கிலம் ஐந்தாம் வகுப்புகளுக்கு வைக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) வரும் வருடம் நான்காவது வகுப்பிலேயே ஆங்கிலத்தை வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(இ) No final decision has been taken in the matter yet.

SRI K. R. NALLASIVAM : வெளியிலே 4-வது வகுப்பிலிருந்து ஆரம்பிப்பதைப் பற்றி அமைச்சர் பேசிவருகிறார்கள். முன்பு நமது போதனமொழி ஆங்கிலமாக இருந்தது. இப்பொழுது அப்படியில்லாத நிலைமையை உண்டுபண்ணுகிறோம். அப்படியிருக்கும்பொழுது 5-வது வகுப்பிலிருந்து 6 வருடங்கள் கற்றுக் கொண்டால் போதாதா ? ஏன் நான்காவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கவேண்டும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கிலம் போதனமொழியாக இல்லாத காரணத்தினால்தான், அதை நன்றாகக் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : As regards the introduction of the teaching of English from IV standard, may I know whether there is any conflict between the Minister in charge of Education and the Director of Public Instruction? For, I read in the papers that the Director of Public Instruction had announced that English would be introduced in the IV standard from the next academic year, but the Minister had categorically contradicted it the very next day. So, may I know whether the consolidated opinion of the Minister and the head of the Department will be formulated on the subject and announced?

THE HON. SRI C. SUBRAMANIAM : There could be many points of view as far as this matter is concerned. I have already stated that the matter of introduction of the teaching of English from the IV standard is under consideration and no final decision has yet been taken on the same.



* 186 *Q.*—SRI N. K. PALANISAMI : (on behalf of Sri V. K. Kothandaraman) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாவது வகுப்புக்காக அரசாங்கம் அச்சிட்டுள்ள ஆங்கில புத்தகத்தின் பெயர் என்ன ?

(இ) எத்தனை அச்சிடப்பட்டது ?

(உ) விற்பனை ஆகியது எத்தனை ?

(எ) எப்படி விற்பனை செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) English Reader, Book I for Standard V.

(*b*) 550,000 copies.

(*c*) 362,098 copies.

(*d*) The books were distributed through leading publishers and book-sellers who were selected after inviting tenders in this regard.

SRI S. M. ANNAMALAI : ஐந்து லட்சம் புத்தகங்களுக்கு மேல் அச்சடிக்கப் பட்டதில் ஏறத்தாழ 3 லட்சம் புத்தகங்கள்தான் விற்பனையாகின என்று சொன்னார்கள். அந்தப் புத்தகங்களை அச்சிட்டதில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அடுத்த வருஷத்திலும் இதே புத்தகங்களைத்தான் விற்கவேண்டும். அதனால் நஷ்டம் ஏற்படாது.

## *Petrol*

* 187 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have suggested to the Union Government for the reduction of prices of petrol and petroleum products?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : Since the Oil companies have reduced the price of petrol and petroleum products, will the Government consider the question of passing on that benefit to the consumers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All these things will have to be considered by the Government of India.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that the high price of petrol and petroleum products is standing in the way of development of road transport?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I don't think so. Of course, it would be good if the prices were reduced. But, I do not think that the high prices stood in the way of development of road transport.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாகிலும் யோசனை சொல்லியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆங்கிலத்தில் சொன்னேன், "நோ" என்று. இந்த அரசாங்கம் அபிப்பிராயம் ஒன்றும் தெரிவிக்கவில்லை.

*Elections*

* 188 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேர்தலில் ஊர்வலங்கள் நடத்துவது பற்றி மத்திய சர்க்கார் நம் அரசாங்கத்தின் ஆலோசனையைக் கேட்டார்களா?

(இ) அப்படியானால், மாநில சர்க்கார் அனுப்பிய பதில் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 189 *Q.*—SRI S. M. ANNAMALAI: }
SRI A. VEDARATHNAM: } கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரட்டை மெம்பர்களின் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாகப் பிரிப்பதைப் பற்றியும், தேர்தல் வாக்குச் சீட்டுகளில் குறிபோடும் முறையைப்பற்றியும் குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) The Election Commission has invited suggestions regarding the splitting up of the two-member constituencies into single-member constituencies. Details are being examined.

In regard to the introduction of the marking system of voting at elections, the Election Commission enquired whether it would be necessary to adopt the old ballotting system of voting instead of the marking system in any remote and very backward areas in this State and the Commission was informed that the marking system of voting could be adopted without difficulty in all the constituencies in the State in the General Elections, 1962.

SRI S. M. ANNAMALAI: நம் மாநிலத்தில், இப்படி மார்க் செய்யப்படும் அளவுக்கு மக்கள் தயாராக இல்லை என்று சர்க்காருக்குத் தெரியுமா? பிற்போக்கான பகுதிகளிலாவது இம்முறையைக் கொண்டு வராமல் இருப்பார்களா?



THE HON. SRI C. SUBRAMANIAM: திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் எப்பொழுதுமே மக்கள் பிற்போக்காக இருக்கிறார்கள் என்று சொல்வது வழக்கம். ஆனால், நிலைமை வேறு; மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பது நடந்த எல்லாத் தேர்தல்களிலும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM: வரப் போகும் தேர்தலில் இரட்டை மெம்பர் தொகுதிகள் இருக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது ஒரு சட்டம் கொண்டுவருவதாக பார்லிமெண்டில் பிரேரேபித்திருக்கிறார்கள். அந்த சட்டம் நிறைவேறினால், இரட்டை மெம்பர் தொகுதி இருக்காது.

* 190 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஏற்கனவே பத்து ஆண்டுகளாக இரட்டை மெம்பர் தொகுதிகளாக இருந்த அசெம்பிளி தொகுதிகளை மாற்றி, இதுவரை பிரதிநிதித்துவம் வகிக்காத தொகுதியில் உள்ள ஹரிஜன மக்கள் பிரதிநிதித்துவம் பெறும் வகைகளில் இரட்டை மெம்பர் தொகுதி மாற்றியமைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: There is no such proposal under consideration.

SRI K. VINAYAKAM: Regarding the splitting up of the Double-Member constituency into one General and one Scheduled Caste constituencies, what is the stand taken by our State and what are the advantages derived by splitting-up this constituency into two different categories?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sure all these aspects will be considered by the Parliament. As far as this Government was concerned, they though that splitting-up might not be necessary at this stage.

*Wrestling*

* 191 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there was any lathi charge at the wrestling tournament on 24th August 1960 in the Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

*Financial assistance to students*

* 192 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any decision has been taken by the Government to provide financial assistance to students on economic basis instead of communal basis;

(b) if so, the details of the decision and the date on which it was taken; and

(c) when it will be given effect to?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The matter is under consideration.

(b) & (c) Do not arise.

*Urdu*

* 193 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government of India have instructed this Government to recognise *Urdu* as one of the regional languages?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. Urdu is already a regional language in this State.

*Lower Bhavani Project*

* 194 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ்பவானிப் பாசனத்தில் தற்போதுள்ள முறையின் மூலம் ஒவ்வொரு நிலத்துக்கும் எத்தனை நாட்களுக்கொருமுறை தண்ணீர் பாசனத்துக்குக் கிடைக்கும்?

(இ) தற்போது வாய்க்காலில் விடப்படும் தண்ணீர் குறைக்கப்பட்டுள்ளதா? ஏன்?

THE HON. SRI P. KAKKAN : (a) The present system of irrigation introduced in fasli 1369, has replaced the previous intermittent turn system. Under the present system, there is no question of intermittent supply being made to the ayacut. During this year, 'even' number sluices get continuous supply from 1st August to 30th November 1960 and the 'odd' number sluices get continuous supply from 1st December 1960 to 15th March 1961.

(b) No, Sir.

SRI K. R. NALLASIVAM : பொதுவாகத் தண்ணீர் தொடர்ந்து வருவதாகக் கருதுகிறார்கள், ஆனால், ஐந்து நாளைக்கு ஒருதரம் தான் தண்ணீர் வருகிறது. இதைப் புரிந்துக் கொள்ளாமல் விவசாயிகளுக்குள்ளே தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, டைம்-ஷீட்படி, அது கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், கொடுக்கப் படுவதில்லை. அதைக் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று உறுதி கொடுப்பார்களா? அதனால் தகராறு குறையும்.

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே விவசாயப் பெரு மக்கள் கூடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இப்பொழுது ஏதாவது மாற்றம் வேண்டுமென்றால், அது 1961-62-க்குப் பிறகு தான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.



*Examinations*

* 195 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to make suitable changes in the present system of examinations in view of the recommendations made in the report on the present system of examinations drawn up by the Committee of Educationists at the instance of the University Grants Commission; and

(b) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : ஸார், இந்தக் கமிட்டியானது, வருஷக் கடைசியில் பரீட்சை வைத்து கொடுக்கப்படும் தேர்வு முறைக்குப் பதிலாக, ஒரு மாணவர் வருஷ முழுதும் எடுக்கும் மார்க்குகளை வைத்து தேர்வு முறை இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடம் இருக்கும் தகவல்படி, அந்தக் கமிட்டி ரிபோர்ட்டை இன்னும் முடிவு செய்ய வில்லை என்று தெரிகிறது. அங்கத்தினர் எப்படி அவர்கள் சிபாரிசைக் கண்டு பிடித்தார் என்று சொல்ல முடியவில்லை.

SRI N. K. PALANISAMI : எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் இந்த வருஷம் 52 சத விகிதம் பெயில்யூர் ஆக இருக்கிறது. கிட்டத் தட்டச் சில கேஸ்களில் ஒரு மார்க்கு, இரண்டு மார்க்கு குறைவுக் காக பல மாணவர்கள் பெயில் ஆகியிருக்கிறார்கள். அம்மாதிரி கேஸ்களுக்கு இரண்டாவது லிஸ்டு கொடுக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூலக் கேள்வி யுனிவர் ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் பற்றியது. இப்பொழுது அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை.

*History of Tamil Nad*

* 196 *Q.*—SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் சரிதத்தை சரியாக ஆராய்ந்து தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

(இ) அப்படியாயின், விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது இருக்கிற சரித்திர வரலாற்றில், வீர பாண்டிய கட்டபொம்மன் போன்ற வீரர்களின்

வரலாறுகள் இருக்கவில்லை. ஆகவே, அம்மாதிரி வரலாறுகளைச் சேர்த்து சரித்திரப் புத்தகங்களை வெளியிட சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டோர் ஆராய்ச்சி செய்து அம்மாதிரி எழுதலாம். அதில் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. சர்வ கலாசாலைகளும் நடவடிக்கை எடுக்கலாம்.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know whether this Government was contacted by the Central Government in compiling the National Register of Historical Documents and Monuments?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I do not have that information with me just now.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், அப்படி திருத்திச் சரித்திரம் எழுதப்பட்டால், சுதந்திரத்திற்கு சம்மதமாகவும் எழுதி, சுதந்திரத்திற்கு சாதகமாக யார் யார் இருந்தவர்கள், பாதகமாக இருந்தவர்கள் யார் யார் என்று மக்கள் புரிந்துக்கொள்ள சரித்திரம் நிலைநாட்டப் படுமா ? (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : எழுதுவதாகச் சொல்லவில்லை.

*Co-operative Milk Supply Union (Salem)*

* 197 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் கூட்டுறவுப் பால் வினியோகச் சங்கம் பாலில் கலப்படம் செய்ததாக வந்த புகாரின் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A case was filed in the Court of the Additional Magistrate No. 2, Salem. The Magistrate imposed a fine of Rs. 1,000 on the Society. The President was let off with admonition and the Secretary and the vendor were acquitted.

SRI A. VEDARATHNAM : இன்னும் பல சங்கங்களிலே இம்மாதிரிப் பாலில் தண்ணீர் கலந்து வியாபாரம் செய்கிறார்கள்; ரெயில்வே ஸ்டேஷன்களில் இருக்கும் பாலெல்லாம் தண்ணீராக இருக்கிறது. அவற்றைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமானவரையில், இவைகளைச் செக் பண்ணி, பரிசீலனை செய்து, எங்கெங்கே தண்ணீர் கலந்து அகப்படுகிறார்களோ, அங்கங்கே ப்ராஸிக்யூஷன் செய்கிறோம்.



*Pensions*

* 198 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்களின் பென்ஷன் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

(உ) இது சம்பந்தமாய் ஆசிரியர்களின் பிராவிடெண்டு, இன்ஷூரன்ஸ், பென்ஷன் விதிகள் திருத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

(எ) அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*d*) A scheme of grant of pension to teachers in elementary schools and certain categories of teachers in secondary schools was sanctioned with effect from 1st April 1955. In 1958, this scheme was extended to L.T. teachers and other teachers in secondary schools including post-basic schools, Special schools, training schools and Anglo-Indian schools. The Provident Fund Insurance Rules, etc., have been suitably amended to give effect to the decision to extend the scheme to all teachers in secondary schools.

SRI A. VEDARATHNAM : இந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு, ப்ராவிடெண்ட் பண்ட், இன்ஷூரன்ஸ், பென்ஷன் முதலியவற்றில், இந்த ப்ராவிடெண்ட் பண்ட் கட்டாயமாக இருக்கிறதா, இல்லை இஷ்டம்போல் செய்யலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்டாயம்.

* 199 *Q.*—SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களின் காண்ட்ரிபூடரி பிராவிடெண்டு பண்டு-பென்ஷன் விதி முறைகள் மாற்றப்பட்டுள்ளனவா ?

(இ) அப்படியானால், எத்தகைய மாற்றம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) : The Madras Contributory Provident Fund-Pension Insurance Rules, 1950, were cancelled with effect from 1st July 1960 in their application to all non-industrial employees of the State Government.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following steps have been taken to put an end to the loud speaker nuisance in Madras City :—

(1) The use of loud-speakers in public meetings has been regulated by the Commissioner of Police and all politcal parties have agreed to restrict to the absolute minimum the number of loudspeakers to be used at the meetings, so that the amplifiers serve only those people who attend the meetings;

(2) Divisional Inspectors have been instructed by the Commissioner of Police to ensure that the time-limit during which loudspeakers should be used is not exceeded and to take steps to restrict the volume of sound emanating from loudspeakers;

(3) Public have also been informed through a press release issued by the Commissioner of Police that when they feel the loud-speaker nuisance, they could contact the Police control room immediately so that effective action could be taken to stop the nuisance;

(4) Instructions have also been issued by the Commissioner of Police to the Subordinate Police Officers to the effect that whenever a loud-speaker licence is issued both the Inspector and Sub-Inspector having jurisdiction must check it at least once during the currency of the licence and make a note in their diaries of having done so; and

(5) Orders have also been issued to the firms supplying loud-speakers for hire that they should take out a Police licence so that they may be held responsible for observing the conditions.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that in spite of the rules regulating the use of loud-speakers, the loud-speaker nuisance still remains unabated? If so, will the Government issue strict instructions to the Police to take more vigorous action against the offenders?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I have not completed the answer.

Necessary instructions have been issued to all Police Officers that they should not wait for complaints from the general public to be made to the Police about the misuse of loud-speakers in every case and that they should take action *suo motu* for a strict and rigid enforcement of the conditions regarding the use of loud-speakers.

That is my answer to the supplementary question also.



*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. CALLING ATTENTION TO THE SERIOUS DAMAGE BY CATERPILLAR PEST TO CROPS MADURAI DISTRICT.

MR. SPEAKER : I have received a notice under rule 41 from the hon. Member Sri W. P. A. R. Chandrasekharan calling the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., the serious damage caused by red hairy caterpillar pest to the dry crops in Dindigul, Nilakottai and Periakulam taluks in Madurai district.

The hon. Member Sri W. P. A. R. Chandrasekharan will now speak.

* **SRI W. P. A. R. CHANDRASEKHARAN** : கனம் சபாநாயகர் அவர்களே, மதுரை ஜில்லாவில், பெரியகுளம், நிலக்கோட்டை, திருமங்கலம், திண்டுக்கல் ஆகிய நான்கு தாலுகாக்களிலும் சென்ற ஆகஸ்டு—செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் கம்பளி பூச்சி தோன்றி மிகப் பெரிய அளவில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறது. முக்கியமாக நிலக்கடலையும், எள்ளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன, என்பதைக் கனம் விவசாயத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அத்துடன், இடையே பயிரிடப்பட்டிருக்கும் கம்பு, மொச்சை முதலிய பயிர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பூச்சி வருஷா வருஷம் தோன்றி சேதம் விளைவித்து வந்தாலும் சென்ற தடவை இந்த நஷ்டம் மிகப் பெரிய அளவில், மிகப் பெரிய பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. சுமார் 17 லட்ச ரூபாய்க்கு மேல் மதுரை ஜில்லாவில் மட்டும் சென்ற ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் என்ன கஷ்டம் இருக்கிறதென்றால், பாதிக்கப்பட்ட பகுதிகள் அத்தனைக்கும் ஒரே காலத்தில் அந்தத் தடுப்பு முறையைக் கையாண்டால்தான் நல்ல முறையில் பலன் ஏற்படும். ஆனால், சிறிய விவசாயிகள் குறைந்த விலையில் மருந்து விநியோகிக்கப் பட்டும்கூட, அந்த விலையில்கூட வாங்குவதற்குச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் ஆகவே, இதை ஒரு pest infected area வாக டிக்ளேர் செய்து, தடுப்பு முறைகள் எடுப்பதற்கு பிரத்தியேகமாக சிப்பந்திகள் போடப்படவேண்டும். என்டொமாலஜிஸ்ட் என்ற ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து சர்க்காரே தங்களுடைய பிரச்சினையாக எடுத்து கம்பளிப் பூச்சி பூராவும் அற்று போகும் வரையில், சர்க்கார் செலவிலேயே, சர்க்கார் ஆட்களைக் கொண்டே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக என்னொய் வித்துக் கமிட்டி, மத்திய அரசாங்க நிலையிலும் நமது சர்க்கார் நிலையிலும் நிறுவப்பட்டிருக்கிறது. அதனுடைய யோசனையையும் கேட்டு. பணவரவு செலவுகளுக்கு என்ன செய்யவேண்டுமோ அதை அனுசரித்து சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to make the following statement :—

The red hairy caterpillar is a notorious pest affecting the groundnut crop in this State. It is endemic to certain red sandy areas of Coimbatore, Salem, South Arcot, North Arcot, Ramanathapuram and Madurai districts. The study of its like-history and control measures have been engaging the attention of the Agricultural Department for the last five decades. In the earlier years, mechanical methods of control like (i) hand-picking and destruction of the sluggish moths after monsoon showers, (ii) setting up of light traps and attracting them, (iii) hand-picking of the egg masses and (iv) trapping the caterpillars in the course of their march by digging trenches across the direction of their march were recommended. In the endemic areas of South and North Arcot districts, provisions of the Pest Act were also enforced, whenever found necessary. With the advent of potent pesticides in recent years, application of BHC 10 per cent at the most vulnerable stage of the development of the caterpillar, *i.e.*, when it is three to five days' old has been found to be very effective. The control of the grown-up caterpillars was, therefore, a problem though dusting Taxophene 20 per cent gave some relief. Spraying with more potent phosperous compounds like Folidol has also been found effective against the grown-up caterpillars Since the groundnut crop is grown extensively under rainfed conditions, spraying of Folidol over large areas will not be practicable. More recent trials with dust formulation (2 per cent) of this chemical have however given encouraging results. Effectiveness of this and Paramar 1 per cent against this pest has still to be confirmed by large-scale field trials. Treatment with BHC 10 per cent at the vulnerable stage would be the most effective and economic method of dealing with this pest as it would cost only about Rs. 5 per acre. On the other hand it would cost more than Rs. 10 per acre to control the grown-up caterpillars with Parathion compounds. Sometimes, 2–3 breeds of this pest occur in succession. Under such conditions, two dusting BHC followed by one dusting with a Parathion compound would be necessary. Thus, even the most severe infestation of the pest can be effectively controled by systematic and timely treatment with the above pesticides. To render the control measures effective, it is very necessary to ensure that the operations are carried out at the proper stage and over the entire pest affected area. Otherwise, the efforts put forth by a few progressive farmers will become ineffective by the migration of the pest from the untreated fields in the neighbourhood. Thus, organising control measures on a community basis over the entire pest affected area is very essential for the success of the campaign work on this pest.

The District Agricultural Officer, Madurai, alerted the Block Development Officers on the possibility of occurrence of this pest in September 1960 and instructed them to maintain adequate stocks of the required pesticides in the Block Depots. On receipt of information about actual emergence of the pest in the first week



of September 1960 he toured the affected areas with the Block Development Officers and Extension Officers and carried out intensive propaganda for adopting timely measures by addressing Village Leaders' Camps, Farmers Forum Meetings and Special Pest Campaign Meetings. An additional quantity of about 24 tons of pesticides (over and above the then available stock of 9 tons at Usilampatti) were also diverted from other centres. Parathion tubes 580 in number were also supplied to this depot for controlling the adult caterpillars. The emergence of the caterpillars were also announced by beat of tom-tom in the villages and the growers were requested to take up immediate control measures by the Plant Protection Staff, Extension Officers and Village Level Workers. Hand notices were also printed and distributed by the Block Development Officer, Chellampatti to the agriculturists. The Plant Protection Officers also toured the affected areas and arranged for field demonstration of the control measures at a number of places. Hence all possible steps were taken by the Departmental Officers and the Block Development Officers for the control of the pest.

Immediately on noting the emergence of caterpillars in the first week of September 1960, the Extension Officers proceeded to the affected villages and persuaded the groundnut growers to take up to the control measures immediately and warned them against the danger of not tackling the pest at the vulnerable stage. In spite of this warning, the growers did not heed to the warning and did not come forward to adopt the recommended control measures. Some of the growers were expecting good rains which in their opinion would destroy the pest completely. Such inaction and the false ideas on the part of the growers had aggravated the situation with the result that the caterpillars multiplied in considerable numbers within two weeks of their emergence and caused considerable damage to groundnut and other crops over vast areas. After this, a large section of the growers realised the danger and began rushing to the depots for pesticides. Since treatment with BHC 10 per cent is not effective in the case of well grown caterpillars, the damage to the groundnut crop continued uninterrupted in spite of dusting with BHC. Unwillingness on the part of some of them to carry out these measures also contributed to the ineffectiveness of the operations done by a good number of farmers as migration of caterpillars subsequently occured from untreated areas. Under these conditions, the damage by the pest became widespread and serious. Only in Kondanjinaickenpatti village the growers have dusted the crop with BHC on community basis and achieved fair amount of success. They also carried out the control measures in time. This example goes to emphasise the fact that only timely action on a community basis will ensure success of the control measures undertaken against this pest.

An area of nearly 11,000 acres in Chellampatti, Usilampatti and Sedapatti blocks were seriously affected by the Red Hairy Caterpillar pest. The area affected has been approximately estimated at 6 to 10 per cent and the loss in crop has been estimated

approximately at 2 per cent. Of these places, the Usilampatti taluk is the most seriously affected area. It is estimated approximately that nearly 23,000 acres have been affected in Usilampatti taluk alone and the loss is estimated at 11½ lakhs of rupees. Judging from the off-take of the pesticides, it is estimated that more than 40 per cent of the affected area would have been treated with the pesticides. But owing to late application of the treatment and the disinclination on the part of some of them to adopt the recommended measures, the treatment given has not been fully effective. Since the crop over large areas was in fairly advanced stage of growth and had fairly good pod formation at the time of incidence of the pest, it is estimated that reduction in these cases would not be more than 10 to 15 per cent. But in the case of crops in the stage of flower production and initial pod setting (1–2 months old) the damage was expected to be rather serious. Even if seasonal conditions would become favourable, in the coming weeks, the yields might be only about 25 to 50 per cent of the normal. In the case of late sown crops (less than 1 month old) the damage by the pest was not appreciable. Taking on overall picture, it may be stated that the damage to crop nearly 10,000 acres of the early sown crops might be of the order of 2–5 bags per acre. The monetary value of this might be of the order of Rs. 7·5 lakhs. In this connection, it may be mentioned that dry weather during the pest-emergence period had been a real blessing in that adult caterpillars owing to the hard nature of the soil were not able to enter it. Thus millions of them perished owing to natural causes. It is therefore surmised that the incidence of this pest may not be so severe during 1961.

The Minister for Electricity personally visited the pest affected places in the Madurai district. The Joint Director of Agriculture who was deputed to tour the districts and submit a report in the matter to the Government is reported to have appraised the Minister of the position.

The Joint Director of Agriculture and the Collector of Madurai have suggested the measures given below for controlling the pest effectively in future and also in regard to certain concessions to be shown to the ryots affected by the pest.

*Suggestions of the Joint Director of Agriculture.*

1. In the advance of the normal time of emergence of the pest, intensive propaganda may be done by special staff to explain the groundnut growers the life history of the pest and the nature of damage caused and the remedial measures to be adopted. Local Committees at Block and Village level may also be constituted to implement the Campaign Programmes successfully;

2. Adequate quantities of pesticides and equipment may be stocked in the villages;

3. Concessional sale of pesticides may be done;



4. Setting up of one Special Plant Protection Squad for oil seeds crops at Madurai with financial assistance of the I.C.O.C. so that the Campaign can be organised well in advance and carried out immediately on noting the pest incidence;

5. The provisions of Pest Act may be strictly enforced so as not to leave any untreated pockets.

*Suggestions of the Collector, Madurai.*

6. Full remission may be granted for these growers whose crops have been seriously damaged, i.e., who have less than 4 annas crop;

7. The collection of arrears of all loans from the affected agriculturists may be postponed;

8. Block or Village Committees may be constituted for organising and executing the campaign work;

9. Sale of pesticides at concessional rates and issue of Takkavi loans to the agriculturists for their purchase; and

10. Supply of seeds at half-cost to the ryots during the next sowing season.

The Government have accepted the suggestions in items 1, 2, 5 and 8 above and the Director of Agriculture has been asked to implement them.

Regarding the suggestion in item 6 above, Revenue Department have proposed to grant a full dry remission in respect of groundnut crops affected by this pest, where the yield is four annas and below and half dry remission where the yield comes up to 8 annas.

As regard the suggestion in item 7 above, the Revenue Department, in accordance with the suggestions of the Board of Revenue, have proposed not to postpone the collection of loans.

The remaining suggestions in items 3 and 4 above are separately under consideration.

There is now no incidence of caterpillar in the fields. Egg masses are traced after thorough search. The crop is being either harvested or will be harvested in the course of a week. The staff of Agricultural Department and Community Development have been instructed to keep late-sown fields under close watch for the appearance of this pest.

## III.—ANNOUNCEMENTS.

### SITTING OF THE HOUSE.

MR. SPEAKER: I want to make an announcement. We meet on the 28th at 10 o'clock in the morning because hon. Members who go to their places would return by train in the morning on that day. So the House will meet on 28th between 10 to 1 and 3 to 5.

[25th January 1961

IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We will now proceed with the discussion on the Governor's Address.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னரின் உரையின் பேரில் நான்கு நாட்களாக இங்கே விவாதங்கள் நடைபெறுகின்றன. அநேக அங்கத்தினர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். முக்கியமாக ஆளும் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்கள்கூட அநேக குறைகளை சொல்லி கடைசியில் ஆதரித்து பேசி வந்தார்கள். பொதுவாகப் பார்க்கப் போனால் கவர்னருடைய உரையானது எல்லோருக்கும் ஒரு ஏமாற்றத்தை கொடுத்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக நமக்கு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவாயின. இப்போது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கும் கட்டத்தில் இருக்கிறோம். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 12 ஆயிரம் கோடி வரையில் செலவிடப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்க கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாட்டில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அசெஸ்மெண்டு எடுத்திருக்கிறார்களா? பொருளாதாரத் துறையில் தமிழகம் எத்தனை சதவிகிதம் முன்னேறியிருக்கிறது? ப்ளான்கள் போடுவதற்கு முன்பு இருந்த நிலை என்ன? இப்போது எவ்வளவு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது? முன்பு இங்கு தனிப்பட்டவர்களுடைய வருமானம் என்னவாக இருந்தது? இப்போது எவ்வளவு உயர்ந்திருக்கிறது? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வாறு உயர்ந்திருக்கிறது? இதைப் பற்றியெல்லாம் தெளிவாகக் கணக்கெடுத்திருக்கிறார்களா? எடுத்திருந்தால் அதை இங்கே சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். ஒரு பக்கம் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்றாலும் மற்றொரு பக்கம் விஷம் போல் விலைவாசிகள்



25th January 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

ஏறிக்கொண்டு போகிறது? ஆகவே முன்பு வருமானம் எவ்வளவு? அவர்களிடம் மிச்சம் எவ்வளவு? இப்போது வருமானம் எவ்வளவு? அவர்களிடம் மிச்சம் தங்குவது எவ்வளவு என்றும் கணக்கிடவேண்டும். அதோடு விலைவாசிகளைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்காரிடம் சொல்லி தீவிரமாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியதும் அவசியமாகிறது. விலைவாசி உயர்வைப்பற்றி நாம் அதிகமாக சொல்லவேண்டியது இல்லை. இது எல்லோருக்கும் தெரியும். ஒரு பே கமிஷன் (Pay Commission) போட்டார்கள். இன்னும் ஒரு பே கமிஷன் போடும்படியான நிலைமை உருவாகிக்கொண்டிருப்பதால் அப்படிப் போடப் போகிறார்களா என்பதையும் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்? பொதுவாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 291 கோடி ஒதுக்கினால் அதில் நமக்கு 101 கோடி ரூபாய் பங்கு. இது மாதிரி மற்ற மாகாணங்களை ஒத்திட்டுப்பார்த்தால் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய தொகை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. ஒரு வேளை நமது மாகாணம் முற்போக்காக இருக்கிறது என்ற காரணத்தினால் அவ்வாறு செய்யப்பட்டதோ என்னவோ. மற்ற மாகாணங்கள் பிற்போக்காக இருக்கிறதென்ற காரணத்தினால் அவ்வாறு அதிகத்தொகை ஒதுக்கப்பட்டதாக சிலர் சொல்லக் கூடும். ஆனால் உண்மையில் பார்க்கப்போனால் மிகவும் பிற்போக்கான மாகாணங்களுக்குத்தான் சிறு கைத்தொழில் கனரகத் தொழில் இருக்கின்றன இவைகள் கொஞ்சம் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. ஆனால் நம்முடைய மாகாணத்திற்கு கிடைத்த பங்கு அந்த அளவில் இல்லை. ஒரு வேளை நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சரியான முறையில் வாதாடவில்லையோ என்னவோ? கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் இதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். இப்போது ஒரிஸ்ஸா மாகாணத்திற்கு 28 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பிற்போக்கான மாகாணம் அதனால் கொஞ்சம் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள். இது மாதிரி மற்ற மாகாணங்களை ஒத்திட்டுப்பார்க்கும்போது ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் நமக்குக் கிடைத்த பங்கு மிகவும் குறைவு என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை எல்லாம் பார்க்கும்போது நம்முடைய தென் பிராந்தியம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சென்னை ராஜ்யத்திலே அனேகத்துறையிலே ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன? சென்னை ராஜ்யத்தில் அனேகத் துறையில் நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்ற அபிப்பிராயம் அங்கே இருக்கிறது. இதனால்தான் மற்ற மாகாணங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம் சென்னை ராஜ்யம் முற்போக்கு மாகாணமாக இருப்பதாக எண்ணி மற்ற மாகாணங்களைவிட குறைவான தொகை ஒதுக்கி இருக்கிறார்கள் என்றுதான் சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது.

ஆனால் நம்முடைய மாகாணத்தில் நீர்ப்பாசன வசதிகள் மிகவும் குறைவு. இதன் காரணமாக அனேக இடங்களில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதனால்தான் நம் ராஜ்யயத்தில் விளைகின்ற நெல் போதாமல் இருப்பதனால் நாம் அண்டை ராஜ்யங்களில் இருந்து தருவித்துக் கொள்ளுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி இம்மாகாணம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இதனால் இங்குள்ள மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

திட்டகமிஷன் எவ்வாறு நம் திட்டங்களை பரிசிலனை செய்தார்கள் என்பதைப்பற்றி நான் விஸ்தாரமாக பேசலாம் என்று நினைத்தேன். ஆனால் எனக்கு கொடுத்திருக்கக்கூடிய நேரம் மிகவும் குறைவாக இருப்பதனால் சில விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்ளுகிறேன். முக்கியமாக ஒரு (Coastal Road) கோஸ்டல் ரோட்டு கன்யாகுமரியிலிருந்து சென்னைக்கு போடவேண்டுமென்ற இதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. இதற்கு நம் மத்திய அரசாங்கத்தின் போக்கு வரத்து இலாகா மந்திரி அவர்கள் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் இதை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொள்வது கடினமான விஷயம் என்று சொல்லிவிட்டார்கள். காரணம் என்னவென்று அவர்கள் சரிவர சொல்லவில்லை. இம்மாதிரி (Coastal) கோஸ்டல் ரோடுகள் போட்டால் இந்தப் பகுதியில் கிடைக்கின்ற பொருள்களை மற்ற இடங்களுக்கு அனுப்புவதற்கும் தொழில் முன்னேறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். புதுச்சேரி, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், ராமனாதபுரம் முதலிய இடங்களில் தேங்காய், முந்திரி முதலிய பொருள்களை இந்த கோஸ்டல் ரோடுகளின் மூலமாகக் கொண்டுவரமுடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். தவிர கோஸ்டல் சாலை ஏற்படுவதனால் மெயின் ரோடில் கன்ஜஷன் (Congestion) குறையும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோஸ்டல் ரோடுக்குப் பணம் ஒதுக்காமல் சென்னை ராஜ்யத்தை புறக்கணிக்கிறார்கள் என்றுதான் நான் சொல்லவேண்டும். இதைப்பற்றி சர்க்கார் என்ன கேட்டார்கள்? மத்திய சர்க்கார் பதில் என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றி விவரமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரயில்வேயை எடுத்துக்கொண்டால் மின்சார ரயில் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலும் விஸ்தரிக்கப்போவதாக 10, 12 வருஷங்களாக சொல்லப்பட்டுவருகிறது. இதைத் தவிர ஏ.ஸி. போடலாமா, டி.ஸி. போடலாமா என்ற கோளாறு வேறு இருக்கிறது. இது எப்பொழுது ஆரம்பிக்கப்போகிறார்கள் என்று திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. ஏதோ செங்கல்பட்டுவரை சிங்குள் லைன் (Single line) போடப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி போடுவதென்றால் அம்மாதிரி போடாமலேயே இருக்கலாம். டீசல் வண்டிகளையே விடலாம். எதுவும் திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. ஐம்பது, நூறு, மைல் வரை





சென்னையிலிருந்து போட்டால் சென்னையில் கூட்டம் குறையும். இதற்காக விழுப்புரத்திலிருந்து டபிள் லைன் (Double line) போடவேண்டும். அப்பொழுதுதான் கிராமங்களில் இருக்கும் மக்கள் சென்னைக்கு வந்து வேலை செய்ய முடியும்.

பீஹார் மாகாணத்தை எடுத்துக்கொண்டால், ரயில்வே அமைச்சர் ஸ்ரீ ஜக்ஜீவன்ராம் அவர்கள் ஒன்பது கோடி ரூபாய் செலவில் ஏற்படப்போகும் ரயில் பாலம் கட்டுவதற்கு கால்கோல் விழா நடத்தினார். இம்மாதிரியாக இன்னொரு இடத்தில் மீட்டர் கேஜ் மார்ஷல் யார்டை எடுத்துவிட்டு பிராட்கேஜ் ரயில்வே பாதைகள் போட்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் ஓடுகின்ற முதல் வகுப்பு, மூன்றாம் வகுப்புகளை எடுத்துக் கொண்டால் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஜலம், மற்ற வசதிகள் எல்லாம் மிகவும் குறைவாக இருக்கின்றன. நான், சட்டசபை அங்கத்தினர்கள்கூட, விழுப்புரத்தில் சில மாதங்கட்கு முன்பு ரயில் என்ஜின் கெட்டுபோனதால் சில மணி நேரங்கள் காத்திருக்கவேண்டியதாக இருந்தது. அந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று என்ஜின் டிரைவரைக் கேட்டேன். அதற்கு அவர் அந்த என்ஜின் 50, 60, வருஷங்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டது என்று சொன்னார். இங்கு இன்டக்ரல் கோச் பாக்டரியில் (Integral Coach Factory) -ல் உற்பத்தியாகும் ரயில் பெட்டிகள் எல்லாம் வடக்கே போகிறது. இதனால் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று நான் சொல்லவில்லை. நான் சொல்லுவது என்னவென்றால் ரயில்வே வசதிகள் எல்லாம் நம் பிராந்தியத்தில் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றன என்றுதான். இவ்விஷயங்களில் நமக்கு வேண்டிய உதவி மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறை.

இம்மாதிரி கனரக (Heavy Electricals) எலக்ட்ரிகல்ஸ் எடுத்துக் கொண்டாலும் சென்னை ராஜ்யத்தில் இதானது முதலில் நிறுவப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது ஆந்திரா ராஜ்யத்தில் போடப்படலாம் என்று சொல்லுகிறார்கள். அந்த ராஜ்யத்தில் அமைக்கப்பட்டால் எனக்கு பொறாமை ஒன்றும் இல்லை. தென் பிராந்தியத்தில் இவைகளை எங்கு அமைத்தாலும் இதுபற்றி கவலையில்லை. ஆனால் நான் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஆந்திரா, மைசூர், சென்னை, கேரளா இந்த ராஜ்யங்களைச் சேர்த்து 126 பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பிரதம மந்திரியிடமும், மற்ற மத்திய சர்க்கார் மந்திரிகளிடமும் சென்று ஏன் நம் தென் பிராந்திய தேவைகளைப்பற்றி சண்டை போடக்கூடாது என்று கேட்கிறேன். பார்லிமெண்டில் உள்ள 500 அங்கத்தினர்களில் தென்பிராந்திய 126 அங்கத்தினர்கள் ஒன்றாக சேர்ந்து எவ்வளவோ காரியங்கள் சாதிக்கலாம். இம்மாதிரி செய்யாத காரணத்தால் பலவிதத்தில் நம்முடைய தென்பிராந்திய மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் பத்திரிகையில் பல முறை படித்தேன். சென்னை ராஜ்யத்தில் கைத்தொழில் ஏற்பட

போகின்றன என்று பிரசுரிக்கப்படுகின்றன. ஆனால் திடீரென்று சென்னை ராஜ்யத்தில் இந்த தொழில்கள் ஏற்படாமல் மற்ற ஏதோ ஒரு மாகாணத்தில் ஏற்பட்டதாக பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. இவ்வாறு சென்னை ராஜ்யம் புறக்கணிக்கப்படுகிறது. இதனால் சென்னை ராஜ்யத்திலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

10-00 a.m. பெரிய நீர்ப்பாசன வேலைகளை (Major Irrigation Works) எடுத்துக் கொள்வோம். அதற்கு நம் மாகாணத்துக்கு சுமார் 27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவிற்கு ஜில்லா அதிக வித்தியாசமாக நான் சொல்லவில்லை. ஆனால் அதில் சுமார் 23 கோடி ரூபாய் பரம்பிக்குளத்திற்கு (Parambikulam Works) ஒதுக்கியிருப்பதாகவும், மற்ற நாலு கோடிதான் மற்ற ஜில்லாக்களுக்கு ஒதுக்கியிருப்பதன் காரணமாக, மற்ற ஜில்லாக்கள் வரண்ட பிரதேசங்களாகயிருப்பினும் அங்கு நீர்ப்பாசன வசதிகள் போன்றவை செய்வதற்கு போதுமான பணம் சர்க்காருக்கு இல்லை என்று மற்ற ஜில்லாக்களிலுள்ள மக்கள் குறைப்படுகிறார்கள், இங்குள்ள மெம்பர்களின் குறையும் அது தான். பரம்பிக்குளத்திற்கு வேண்டியது செலவு செய்ய வேண்டும். ஆனால் மற்ற ஜில்லாக்களை ஏன் புறக்கணிக்க வேண்டும்? சிறிய நீர்ப்பாசன வசதிக்காக, ஒன்றிரண்டு கோடியில் பல திட்டங்கள் அங்கு இருக்கின்றன. உதாரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் பம்பையாறு திட்டம் இருக்கிறது. ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள், சங்கரன்கோவில் இவ்விடங்களில் அநேக வரண்ட பிரதேசங்கள் உள்ளன. இந்த பம்பை ஆறு திட்டத்தினால் அங்கு 4 லட்சம் ஏக்கரா சாகுபடிக்குக் கொண்டுவர முடியும் என்று திட்டவட்டமாக சொல்கிறார்கள். நம்பூதிரிபாட் அவர்கள் கேரளா முதன் மந்திரியாக இருந்தபோது இதுபற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு மின்சாரம் கொடுப்பதாயும் நமக்கு ஜல வசதி கிடைப்பதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு அது திடீரென்று கைவிடப்பட்டதாம். அதன் காரணம் என்ன. இதுபற்றி நிதியமைச்சர் அவர்கள் பதில் உரையில் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சிறிய நீர்ப்பாசன வசதிகள். சிறிய நீர்ப்பாசன வசதிக்காக வேண்டிய அளவு நிறைய தொகைகள் ஒதுக்க வேண்டும். அவைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் நாம் காத்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. எவ்வளவு அவசரமாக நாம் அவைகளை எடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க வசதி செய்ய வேண்டுமோ அவைகளை உடனடி எடுத்து நடத்த வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்கள் நடத்தப்படாததால்தான் நாம் உணவு பற்றாக் குறையைப்பற்றி சிந்திக்க வேண்டியவர்களாகயிருக்கிறோம். அடுத்தபடியாக, (Ports) துறைமுகங்கள். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை எடுத்துக் கொள்ளப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு வருடத்தில் அதைச் செய்து முடிப்பார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எடுத்துக் கொள்வதாக சொல்லி





யிருப்பதுபற்றி சந்தோஷந்தான். பின்னர், நாகப்பட்டினம், புதுச்சேரி போன்ற சிறிய துறைமுகங்களை எடுத்து விருத்தி செய்வதற்கு வேண்டிய நிதியை நாம் மத்திய சர்க்காரிடத்திலிருந்து பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி சிறிய துறைமுகங்களை நாம் விருத்தி செய்தால்தான் நாம் பொருளாதாரத் துறையில் முன்னேற வழி ஏற்படும். ஆகவே அவைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நான் அமைச்சர்களை திட்டவட்டமாக ஒன்று கேட்க விரும்புகிறேன். நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்ஸிலிற்கு (National Development Council) போகிறார்களே, அவர்கள் மட்டுமல்ல அநேக உத்தியோகஸ்தர்களும் போகிறார்கள். அப்படிப் போய் நமக்கு என்ன வந்திருக்கிறது? நாம் என்ன சாதித்திருக்கிறோம்? போதுமான தொகையை அவர்கள் கொடுக்காததன் காரணம் என்னவென்று நான் கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்கார் நமக்கு அப்படி கொடுக்காததால் நீங்கள் நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்ஸில் மீட்டிங்-க்கு ஏன் போகவேண்டும். அவர்கள் கொடுத்தால் கொடுக்கட்டும், கொடுக்காவிட்டால் போகட்டும் நமக்கு அக்கரையில்லை. நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டும், எவ்வளவோ வாதாடியும் அவர்கள் கொடுக்காமலிருந்தால் அவர்கள் அபிப்பிராயம் என்ன? அதன் அர்த்தமென்ன? ஏன் நம்மை இப்படி புறக்கணிக்கிறார்கள் என்பது குறித்து அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். அடுத்தபடியாக மதுபானம் நிறுத்தல் (Prohibition) இதை நல்ல முறையில் அமுல் நடத்தவேண்டும். நல்ல முறையில் அதை அமுல் நடத்த முடியவில்லை என்றால் அதை கைவிட்டு விடவேண்டும். கேரளா அமைச்சர் ஒருவர்கூட சமீபத்தில் சொல்லியிருக்கிறார், புரொஹிபிஷன் சரியாக நடக்கவில்லை என்று. எங்கள் அபிப்பிராயம் என்னவென்றால், அதை சரியான முறையில் நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டும். எதிர்க் கட்சிக்காரர்களை நசுக்குவதற்கு போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு பொய் கேஸ்கள் போட்டு அதனால் அவர்கள் இம்சிக்கப் படுகிறார்களே தவிர அது சரியாக அமுல் நடத்தப்படவில்லை. (குறுக்கீடு). நிறைய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் போடப்பட்டிருக்கிறார்கள். எண்பது லட்சம் முதல் ஒரு கோடி வரை இதை அமுல்படுத்த செலவாகி வருகிறது. அப்படி செலவு செய்யப்பட்டும்கூட அது ஏன் நல்ல முறையில் அமுல் நடத்தப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அதற்குக் காரணமென்ன? அடுத்தபடியாக, எலெக்ட்ரிஸிட்டி விஸ்தாரம் (Expansion) நமக்கு போதுமான மின்சாரம் இல்லை. இன்னும் மூன்றல்லது ஐந்து லட்சம் கிலோவாட்ஸ் இருந்தால்தான் நமக்கு அதில் "செல்ப் ஸபிஷியன்ஸி" (Self sufficiency) போதுமானது ஏற்படும். அதற்காக திட்டக்கமிஷனிடம் மறுபடியும் கேட்டு ஒரு தர்மல் ஸ்டேஷனாவது இந்த பிராந்தியத்தில் வைக்க ஏதாவது செய்யமுடியுமா என்று அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டும். மின்சாரம் நம் மாநிலத்தில் அநேக கிராமங்களில் பரவி வந்த

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th January 1961

போதிலும், நமக்கு ஒரு தர்மல் ப்லாண்ட் இல்லாவிடில் "செல்ப் ஸபிஷியன்ஸி" (self-sufficiency) வராது. அடுத்தபடி லஞ்சம். டிஸ்ட்ரிக்ட் லெவெலில் எடுத்துக் கொண்டால் கரப்ஷன் வர வர அதிகமாகிக்கொண்டே வருகிறது. அதைத் தடுக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடில் இது மக்களுக்கு மிகவும் அதிருப்தியைத்தான் கொடுக்குமென்று நான் சொல்லத் தேவையில்லை. Living Index (விலைவாசிகள்) ஏற ஏற கரப்ஷனும் அதிகமாகுமோ என்ற பயம் இருக்கிறது. அடுத்தபடி விவசாயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சமீபத்தில் நமது நாட்டின் வைஸ் பிரசிடெண்ட் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியிருப்பதைப் பார்க்கலாம் :

"It is a matter of shame for India that though 70 per cent of its pedple are engaged in some form of agriculture, self-sufficiency in food has not been achieved. Large outputs and cheaper food are the foundation of a well-conceived programme of Industrialisation. Food remains a precarious problem and at the mercy of seasons and the land is burdened with outmoded laws, regulations and practices and these should be altered.

Backward methods of farming, inferior seeds, inadequate manuring, lack of pest control, small holdings and above all, dislike of change and fear of social consequences of an agricultural revolution are the causes. Our farmers are intelligent and receptive and they need more economic allotments."

இவை முற்றிலும் உண்மை.

பூச்சி மருந்துகள், விதைகள், இவைகளை பண்ணைகள் போன்றவைகளில் வைத்துக் கொடுத்தபோதிலும் போதுமான உதவி கொடுக்கப்படவில்லை. இதற்கு Top Priority (டாப் ப்ரயாரிடி) முதலிடம் கொடுக்கவேண்டும். பூச்சி மருந்து (Pediciser) விலையை இன்னும் குறைத்துக் கொடுக்க வேண்டும், அதுவும் உடனடியாக கொடுக்கப்படவேண்டும். ஆபீஸர்கள் எல்லாம், வான்களில் அதை வைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் கொடுக்க வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், இரும்புகள் எல்லாம் கொடுக்க வேண்டும், கடன் வசதி வேண்டியிருக்கிறது, அதையும் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். கிராப் இன்ஷூரன்ஸைப் பற்றி நான் இங்கு பல தடவை கூறியிருக்கிறேன். அதையும் உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகளுக்கு நாம் சௌகரியம் செய்தவர்களாவோம். விவசாயத்திற்கு "டாப் ப்ரயாரிட்டி" கொடுக்காவிட்டால் நமது உணவு உற்பத்தி கொஞ்சமும் பெருகாது. அடுத்தபடியாக, பஞ்சாயத்து அட்மினிஸ்ட்ரேஷன். ஒரு குழு நியமித்து அதில் நாங்கள் எல்லோரும் இருந்து திட்டவட்டமாக ஒரு மசோதாவை திருத்தியமைத்தோம். இருந்தபோதிலும் பஞ்சாயத்து அட்மினிஸ்ட்ரேஷன் எப்படி இப்பொழுது நடக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும்.



25th January 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

இவைகளில் எல்லாம் போதுமான இன்ஸ்பெக்ஷன் கிடையாது. போதுமான ஆடிட் கிடையாது. முன்னால் இருந்து வந்த ஐ.எல்.பி. என்கிற ஸ்தானத்தை எல்லாம் எடுத்தீர்கள். இப்பொழுது ஐ.எல்.பி. என்றும் அதோடு டெப்யூடி செக்ரட்டரி என்றும் ஏற்படுத்தப்பட்டது. அம்மாதிரி போடப்பட்டதின் காரணமாக இப்போது டெப்யூடி செக்ரட்டரி எக்ஸ்-அபிஷியோ இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருவதாக தெரிகிறது. இவ்விதம் வேலை செய்து வருவதற்கு இவர்களுக்கு சட்டம் இடம் கொடுக்கிறதா என்பதைப்பற்றி தெளிவாக ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலும் ஐ.எல்.பி. ஒரு மனுவை தள்ளிவிட்டால் பின்னால் அப்பீலுக்கு யாரிடத்தில் போவது என்று தெளிவாகத் தெரியவில்லை. இம்மாதிரி பல குறைகள் இருக்கின்றன. ஐ.எல்.பி.-க்கும் டெப்யூடி செக்ரட்டரிக்கும் இருந்து வருகிற உறவு (ரிலேஷன்ஷிப்) என்ன என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும். இதற்காக உத்தரவுகள் ஏதாவது போடுவதாக இருந்தால் அதை சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அனுப்பினால் அதைப்பற்றி தெரிந்து கொள்ள முடியும். புதிதாக ஒரு முறையை கொண்டு வர வேண்டுமென்றால் இதற்கென்று இருக்கின்ற குழுவினிடம் ஆலோசனை கேட்க வேண்டும். அதுவும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் ஐ.எல்.பி. அல்லது டெப்யூடி செக்ரட்டரி எல்லா பிராந்தியங்களையும் எப்படி சுற்றிப்பார்க்கப் போகிறார்கள்? இவைகளை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக சொல்ல வேண்டும். மேலும் புதிதாக ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத் ராஜ்யத்திற்கும் கலெக்டர்களுக்கும் என்ன சம்பந்தம்? புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத் ஆபீஸர்களுக்கும் பிளாக் டெவலப்மெண்ட் கீழ் இருக்கும் ஊழியர்களுக்கும் என்ன வித்தியாசம் என்பதைப்பற்றியெல்லாம் திட்டவட்டமாகச் சொல்லவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு டெவலப்மெண்ட் கமிஷனர் ஒருவர் இருந்து வருகிறார், அவருடைய வேலை (function) என்ன? Second Secretary to the Government with the status of a Board Member என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அதே ஆபீஸர்தான் ஃபைனான்ஸ் செக்ரட்டரி (Finance Secretary) யாகவும் இருந்து வருகிறார்கள். அவருக்கு அனேகவிதமான வேலைகள் இருக்கின்றன. அவர் கீழே பென்ஷன், அலவன்ஸ், பட்ஜெட் இது போன்ற காரியங்கள் எல்லாம் இருந்து வருகின்றன. ஆகவே இம்மாதிரிப்பட்ட வேலைகளை எல்லாம் ஒருவரிடத்திலே கொடுப்பது என்றால் அவற்றை எல்லாம் திறமையாக பார்க்க முடியுமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் ஆபீஸர்களைப்பற்றி குறை சொல்லுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். அதிகமான வேலைகளை கொடுத்தால் ஒரே ஆளுக்கு எப்படி அவகாசம் கிடைக்கும், ஆகவே அவர்கள் எல்லா காரியங்களையும் திறமையாக பார்க்க முடியாத கட்டத்தில் இருக்கிறார்கள். டெவலப்மெண்ட் கமிஷனர் என்று போட்டுவிட்டால், அவர்கள்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th January 1961

வட்டார வாரியாகப் போய் பார்க்க முடியுமா? அதற்குள்ள நேரம் அவர்களுக்குக் கிடைக்குமா என்பதையும் Co-ordination of the activities of different Departments என்பதை சரியாக கவனிக்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். எவ்வளவுதான் திறமையிருந்தாலும் பலவிதமான வேலைகளை ஒரே ஆளின் கையில் கொடுப்பதினால்தான் பல வேலைகளும் திறமையாக நடக்கவில்லை என்பதை வற்புறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன். வேண்டுமானால் அவர்களின்கீழே அஸிஸ்டன்ட் ஆபீஸர்களை போடலாம், அதன் மூலம் வேலைகளைத் திறமையாக நடத்த முடியுமா என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்னும், பே ஃபிக்ஸேஷன், (Pay fixation) ஸ்டேட் ரீஆர்கனேஸேஷன் (Stat Re-organisation) லோகல் ஃபண்ட் ஆடிட், பஞ்சாயத் அட்மினிஸ்ட்ரேஷன் இவைகளில் எல்லாம் வேலை திறமையாக நடப்பதாகத் தெரியவில்லை. பஞ்சாயத் ஆட்சியில் இனி என்ன செய்யப் போகிறார்கள், அதில் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அதோடு ஹைவேஸையும், ரூரல் அட்மினிஸ்ட்ரேஷனையும் சேர்க்கப்போவதாகத் தெரிகிறது, இதில் பல கஷ்டங்கள் ஏற்படலாம், நான் டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரஸிடென்டாக இருந்தபோது இதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்திருக்கிறேன். இதில் பிளாக்கில் இருக்கும் ஆபீஸர்களுக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்போகிறார்கள், இதில் இருக்கும் ஜூனியர் இன்ஜினீயருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்படும் என்பதற்கெல்லாம் இன்னும் சரியானபடி ரூல்ஸ் போடவில்லை. ஆனால் எல்லா இடங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பற்றி இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் குழுவினருக்காவது திட்டவட்டமாக தெரிவிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களைப்பற்றி அநேகம் பேர் இங்கு சொன்னார்கள். அவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை போக்குவதற்காக அவர்களிடமுள்ள ஸ்டாக்குகளை சர்க்காரே வாங்கப்போவதாகச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் தற்காலிகமான நடவடிக்கை என்று இருந்தாலும் அவர்களுக்கு நிரந்தரமாக இந்தப் பிரச்னையை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நமது ராஜ்யத்திற்கு நெசவு (spinning) மில்கள் வரப்போவதாக சொல்லப்பட்டது, அவைகள் எந்தெந்த இடத்தில் வருகிறது என்பதைப்பற்றி சொல்லவேண்டும். அதோடு இப்போது அனுமதி கொடுத்திருக்கும் மில்களுடன் இன்னும் கூடுதலாக வரப் போகிறதா என்பதைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு பெரிய நன்மை கிடைக்கும் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, குடிதண்ணீர் வசதியைப்பற்றி எடுத்துக்கொண்டால், அநேக இடங்களில் கிணறுகள் தோண்டப்பட வேண்டும். இன்று காலையில் ரேடியோ மூலம் கேட்டேன், மத்திய



25th January 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

உணவு மந்திரி கிருஷ்ணப்பா அவர்கள் ஆந்திர ராஜ்யத்திற்கு 10 ஆயிரம் கிணறுகள் தோண்டுவதற்கு 50 லட்சம் ரூபாய் இலவசமாக ஒதுக்கியிருப்பதாகவும் சொன்னதைக் கேட்டேன். அதே முறையில் நம் மாகாணத்திற்கும் அநேக கிணறுகள் தோண்டப்பட வேண்டும். இதற்காக வரண்ட பிரதேசத்திலுள்ளவர்களுக்கு போதிய சப்சிடி கொடுக்கவேண்டும். சண்டை காலத்தில்கூட அநேகம் கிணறுகள் தோண்டியதின் காரணமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடியானது. ஆகவே கிணறுகள் விஷயத்தில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வைத்திய வசதிகளை எடுத்துக்கொண்டால் நமக்கு போதுமான அளவுக்கு வைத்திய வசதி கிடைத்திருப்பதாக சொல்ல முடியாது. அநேக இடங்களில் மெட்டர்னிட்டி சென்டர்கள் (மருத்துவ விடுதி) ஏற்படுத்த வேண்டும். ஆனால் சில இடங்களில் குறிப்பாக என் பிராந்தியத்தில் பல இடங்களில் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் முயற்சி செய்து மேட்டர்னிடி சென்டர்கள் கொண்டுவந்து ஏற்பட்டதை மூடிக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் பிராந்தியத்தில் ஒரு இடத்தில் கட்டிடம் எல்லாம் கொடுத்து பிளாக்கிலிருந்து எல்லா உதவிகளும் வாங்கின பின்னால், கனம் அமைச்சர் அவர்கள் வந்து திறந்து வைத்தார், சிறிது நாட்களுக்குப் பின்னால் அதை மூடிவிட்டார்கள், என்ன காரணம் என்றே தெரியவில்லை. (கனம் ஸ்ரீ. கே. காமராஜ்: டாக்டர்கள் இல்லாமல் இருந்திருக்கலாம்) பெரிய டாக்டர்கள் ஒன்றும் இதற்குத் தேவையில்லை. வெறும் மெட்டர்னிட்டி சென்டர்தான் (மருத்துவசாலை). இதைப்பற்றி கேட்டால் பப்ளிக் ஹெல்த் டயரக்டர் அவர்களிடம் மறுபடி கேளுங்கள் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி அங்கேயிருந்து திரும்பவும் அனுமதி கிடைக்கவேண்டும் என்றால் குறைந்தது இரண்டு வருடங்கள் ஆகும். அதற்குள் இந்த சட்டசபை போய் வேறு சட்டசபை வந்து விடும். அது வேறு சமாச்சாரம். நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எதிர்க்கட்சியினருக்கு ஆதரவு கொடுத்த இடத்தில் இருக்கிறது என்பதற்காக இதை மூடாமல், அந்த இடத்திலுள்ளவர்கள், 100-க்கு 90 பேர் காங்கிரசுக்கு எதிராக வோட்டு போட்டார்கள் என்றாலும், 10 பேராவது காங்கிரசுக்காக வோட் போட்டிருப்பார்கள், அவர்களை எண்ணியாவது இம்மாதிரி மூடாமல் திறந்த மெட்டரினிட்டி சென்டர்களை அப்படியே வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட இந்த மெட்டரினிடி சென்டரை நமது உள்நாட்டு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள், அவர்கள் இப்போது இங்கு இல்லை, பின்னால் அங்குள்ள மண்டல காங்கிரஸ் தலைவர் அதில் தலையிட்டு மூடிவிட்டதாக தெரிகிறது. (கனம் ஸ்ரீ. கே. காமராஜ்: இது எந்த இடத்தில்?) அத்தியூர் என்ற இடத்தில் சென்ற மாதம் இது நடந்திருக்கிறது, இது தவிர வாலாஜாபாத் அருகில் இருந்ததையும் வேறு இடத்திற்கு கொண்டு போய்விட்டார்கள், பெயர் போர்டு மட்டில் அங்கேயே பழைய இடத்தில் இருப்பதாக தெரிகிறது. இந்த மாதிரியான அக்கிரமங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. இதையெல்லாம்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th January 1961

அதிகாரிகளிடம் மனுக்கள் மூலமாக கேட்டு அனுமதி கிடைக்க வேண்டுமானால் இரண்டு வருடங்கள் ஆகும். இதை திறந்து வைத்த அமைச்சர் அவர்களுக்கே இந்த சென்டர் மூடப்பட்டது தெரியுமோ என்னமோ என்று தெரியாது. எங்கள் பிராந்தியத்தில் பலவிதமான சச்சரவுகள் இருப்பதற்கு காரணம் இதுமாதிரி தான் உள்நாட்டு அமைச்சர் அவர்கள் வந்து ஒன்றை செய்கிறார், அங்கிருக்கின்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அவர்கள் வேறொன்றை செய்யச் சொல்வதாக சொல்லுகிறார். எனக்கு இதன் உண்மை தெரியாது. இம்மாதிரி கோளாறுகள் இருப்பதால் பல போலீஸ் சச்சரவுகள்கூட ஏற்படுகிறது, திடீரென்று ஆபீசர்களுக்கு மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. இந்தமாதிரி வெளிப்படையாக சொல்ல வேண்டுமானால் பல சம்பவங்களை சொல்லிக்கொண்டேயிருக்கலாம். இம்மாதிரியான ஊழல்களை எல்லாம் போக்க வேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கின்றவன் என்ற முறையில் என்னிடம் ஏதாவது குறைகள் தெரிவிக்கப்பட்டால் அதற்கு என்னால் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்து வருகிறேன். ஆகையால் இதைப்பற்றி சர்க்கார் யோசித்து நல்ல முறையில் ஆட்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி ஆட்சி செய்து கொண்டு போனால் நல்லதல்ல. கூடிய சீக்கிரம் ஏதாவது ஒரு பெரிய கெடுதி வரப்போகிறது என்று சொல்ல வேண்டியதில்லை.

"டபிள் மெம்பர் கான்ஸ்டிட்டியுவென்சீஸ்" இரட்டை மெம்பர் தொகுதியைப் பற்றிய வரையில் மத்திய சர்க்கார் அவைகளை மாற்றுவதற்காக திட்டம் போட்டிருப்பதாகப் பேப்பரில் பார்த்தோம். அதைப்பற்றி நமது சர்க்காரை ஆலோசனை கேட்டார்களா என்று இன்று காலை கேள்வி நேரத்தின்போது கேட்டதற்கு கனம் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். அது பரிதாபத்திற்குரிய விஷயம். இம்மாதிரி செய்து வீணாக ஏன் க்ளாஸ் ஹேட்ரெட் (class hatred) ஏற்படுத்த வேண்டும்? இதைச் செய்வதற்கு முன்பாக மாகாண சர்க்காரைக் கலந்து ஆலோசித்து ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? மத்திய சர்க்காரில் இருக்கக்கூடிய ஒரு அமைச்சர் சொன்னார் என்ற காரணத்திற்காக இம்மாதிரி செய்வது நியாயமா? முக்கியமாக தனிப்பட்ட மனிதனின் உரிமை பறி போகின்றது என்பது ஒருபுறமிருக்க, சட்டசபை அங்கத்தினர்களையும், சட்ட மன்றங்களையும் கலக்காமல் திடீரென்று செய்வது ரொம்பவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். இதை மறுபடியும் புனராலோசனை செய்ய முடியுமா என்று மத்திய சர்க்காருடன் எழுதி பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதிரி அநேக பிரச்னைகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் இம்மாதிரி ஊழல்கள் இருக்கின்றன. கிராமங்களில் இருக்கக்கூடிய கஷ்டங்களெல்லாம் பிரதம மந்திரிக்குத் தெரியுமா? தாலூகாக்களில், கிராமங்களில், ஜில்லா வட்டாரங்களில் இருக்கக்கூடிய கஷ்டங்கள் தெரியாது. முக்கியமாக சுற்றுப்பிரயாணம் செய்வதில் ஏதேதோ பார்க்கிறார்களே ஒழிய, ஆபீசில் இருந்துக்கொண்டு வேலை செய்தால்தான்



25th January 1961] [Sri V. K. Ramaswamy Mudaliar]

நன்றாகக் கண்காணிக்க முடியும். இன்றைய தினம் அமைச்சர்கள் அதிகமாக சுற்றுப்பிரயாணம் போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போகும்போது சொந்தக் காரிலேயே போக வேண்டும். அப்படிச் செய்தால்தான் சுற்றுப்பிரயாணம் குறையும். இம்மாதிரியான செலவுகளைக் குறைத்து ஆட்சி செலுத்தவேண்டும்.

Government should see that bribery, corruption, nepotism and skyrocketing of prices are put down. If the Government do not do it, I am afraid they will have to vacate their office. The ignorant will no longer be kept in the darkness and their cry will no longer be a cry in the wilderness.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, இவ்வாண்டுத் துவக்கத்தில் கவர்னர் உரையுடன் சட்டசபை நிகழ்ச்சிகளைத் துவங்கவேண்டி ஏற்பட்டது. அது அரசியல் சட்டத்திலேயே கண்டிருக்கக்கூடியது. முன்பெல்லாம் இதற்காக நவம்பர்-டிசம்பரிலே சட்டசபைக் கூட்டத்தை ஆரம்பித்து, தொடர்ந்து பட்ஜெட் விவாதமும் அதே தொடர்க் கூட்டத்தில் நடந்துகொண்டு வந்தது. அதன் காரணமாக பட்ஜெட் சமயத்திலே கவர்னர் உரை என்று நிகழ்த்த வேண்டிய அவசியமில்லை என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தோம். நவம்பர்-டிசம்பரிலே இந்தத் தடவைகூட முடியாத காரணத்தினால்தான் ஜனவரியில் கூடும்போது அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு கவர்னருடைய உரையையும் ஏற்பாடு செய்ய வேண்டியதாக ஏற்பட்டது. கனம் அங்கத்தினர் கல்யாணசுந்திரம் அவர்கள் நவம்பர்-டிசம்பரில் கூடாததைப் பற்றியும் 1960-ம் ஆண்டிலே நாம் கூடிய நாட்கள் மிகக் குறைவு என்பதைப்பற்றியும் குறை கூறினார்கள். நவமம்பர்-டிசம்பரில் கூட்டம் கூடாததற்குக் காரணம் வேறு என்பதைப்பற்றி நான் அவர்களுக்குத் தெரிவித்தேன். நாம் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தபோது கனம் சபா நாயகர் அவர்களுக்குச் சிறிது தேக அசௌக்கியம் ஏற்பட்டதன் காரணத்தினால், கூட்டத்தை ஜனவரியில் வைத்துக்கொள்ள முடியுமா என்று பார்த்து, அவசரக் காரியங்கள் ஒன்றும் இல்லாத காரணத்தினால், ஜனவரி மாதத்தில் வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தோம். ஏதோ எதிர்க் கட்சியைப் பார்க்கக்கூடாது, சட்டசபையில் வந்து உட்காரக்கூடாது, விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கூடாது என்ற காரணத்தினாலல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னருடைய உரையின்மீதான விவாதத்திலே அவ்வளவு உற்சாகம் இந்த சபையிலே காணாதது கண்டு வருத்தப்படுகிறேன். ஒரு சமயம் 1-30 மணி வரையில் உட்கார வேண்டுமென்பதை போதுமான அங்கத்தினர்கள் இல்லாத காரணத்தினால் 1-00 மணிக்கே சபையைக் கலைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அது, அங்கத்தினர்கள் இந்த சட்டசபை நடவடிக்கைகளில் அசிரத்தையாக இருக்கிறார்கள் என்ற மக்களிடையே பரவ ஏதுவாக ஆகும். மற்ற எந்த

[Sri C. Subramaniam] [25th January 1961]

காரியங்கள் இருந்தாலும், சட்டசபை நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்து இங்கு கலந்துகொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். சட்டசபையிலேயே இருக்கக்கூடிய அசிரத்தையைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில்தானோ என்னவோ, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் இந்தக் கூட்டத்திற்கே வராமல் இருந்து விட்டார். இது வரையில் இருக்கக்கூடிய சம்பிரதாயம், கவர்னர் உரையின்மீதான விவாதமாக இருந்தாலும், பட்ஜெட் விவாதமாக இருந்தாலும், கட்சித் தலைவர்களெல்லாம் பங்கு கொள்ளவேண்டும் என்ற முறையில் நடத்திக்கொண்டு வந்திருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கு வர முடியவில்லையென்றால், ஏன் வரமுடியவில்லை என்று அந்தக் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் பேசும்போது சொல்வார்கள் என்று நினைத்தேன். (குறுக்கீடு) சொல்லித்தான் தீரவேண்டுமென்பதில்லை—சொல்வார்கள் என்று நினைத்தேன். தவிர்க்க முடியாத காரணத்தினால் வரமுடியவில்லையென்றால், இதனால் தவிர்க்க முடியவில்லை, வர முடியவில்லை என்று சொல்லியிருந்தால் சபைக்கு மதிப்பு கொடுப்பதாக இருக்கும். எதிர்க் கட்சிகளை சபைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. . . .

**Sri A. GOVINDASAMI**: எங்கள் கட்சித் தலைவர் இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ளாத விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டு சபையை குறைவுபடுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு வராமலிருந்து விட்டார்கள் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை, அப்படிப் பேசுவது முறையல்ல என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: முறை, முறையல்ல என்பதைப்பற்றித் தீர்ப்புச் செய்யவேண்டியவர்கள் கனம் சபாநாயகர் அவர்கள்தான். இப்போதும் அவர்களால் ஏன் வர முடியவில்லை என்று சொல்ல முடியவில்லை . . . . . .

**Sri K. ANBAZHAGAN**: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், ஒரு எதிர்க் கட்சித் தலைவர் சட்டசபைக் கூட்டத்திற்கு வராத காரணத்தினால் ஏன் வரமுடியவில்லை என்று சொல்லவேண்டுமென்று ஒரு அமைச்சர் அவர்கள் கேட்பது முறைதானா? அப்படிக் கேட்கக்கூடிய உரிமை உண்டா? அப்படிக் கேட்பதை சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கின்றாரா?

**Mr. SPEAKER**: கேட்க உரிமை உண்டு. அதில் தப்பு என்ன? பதில் சொல்லவில்லையென்றால் சொல்லாமலும் இருக்கலாம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இதை நான் சபைக்காக மட்டும் சொல்லவில்லை. மற்றவர்கள் எவ்வாறு நினைப்பார்கள் என்று இதைக் கருத்திலே வைத்துப் பார்க்கவேண்டியது [illegible]



25th January 1961] [Sri C. Subramaniam]

அவசியம். ஆகையினாலே, எதிர்க் கட்சி ஒன்றின் தலைவரைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. பொதுவாக அசிரத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது என்ற கருத்தைத்தான் வெளியிட்டேன் . . . . . . 10-30 a.m.

**Mr. SPEAKER**: மன்னிக்கவேண்டும் . . . ஒரு அங்கத்தினர் சபைக்கு 60 நாட்கள் வராதிருந்து, சபை அனுமதி அளிக்காவிட்டால், அவரது ஸ்தானமே போய்விடும். அறுபது நாட்களுக்குள் இருந்தால் சொல்லவேண்டுமென்ற சட்டமில்லை. ஆனால் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

**The Hon. Sri C. SUBRAMANIAM**: நான் சட்டத்தைப் பற்றிப் பேசவில்லை—நமது மரபைப் பற்றி, நமது சம்பிரதாயத்தைப் பற்றிப் பேசுகின்றேன். எங்களுக்கு இதைப் பற்றிக் கவலையில்லை, எங்கள் இஷ்டப்படி நடப்போம் என்று சொன்னால், 60 நாட்கள் வராமலிருந்தால் நீக்குவதற்குச் சட்டம் இருக்கிறது. ஆனால் இங்கு வந்துதான் ஆகவேண்டுமென்று அங்கத்தினர்களையும், தலைவர்களையும் நிர்ப்பந்தம் செய்ய சட்டம் இல்லை.

பட்ஜெட் விவாதம் வேறு வரப்போகின்றது. அதிலும்கூட நான் கனம் சபாநாயகர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவெனில், இப்படிப்பட்ட பொது விவாதங்களுக்கு 4, 5 தினங்கள் ஒதுக்கி வைக்க வேண்டியது அவசியம்தானா என்பதாகும். இதைப்பற்றி நீங்கள் யோசிக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுமாதிரி அக்கறையில்லாமல் இருப்பதால், 4, 5 தினங்களுக்குப் பதில் 2, 3 தினங்கள் என்று இருந்தால், அதனால் ஒரு வேளை சுறுசுறுப்பாக இருக்குமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதையும் முடிவு செய்ய வேண்டியது பிஸினஸ் அட்வைசரி கமிட்டியாகும். அவர்கள் ஆலோசனை செய்யவேண்டுமென்பதற்காகத்தான் நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்திய பிறகு இரண்டு பெரிய முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஒன்றைப் பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது பிரிட்டிஷ் ராணியார் நம்முடைய நாட்டிற்கு வருவது பற்றியாகும். இப்போது பிரிட்டிஷ் ராணியார் நம்முடைய நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். வந்து இப்போது நம்முடைய நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை வரவேற்பது குறித்து பல கருத்து தெரிவிக்கப்பட்டது. அது ஒருபுறம் இருக்க, இன்றைக்கு ஒரு நாட்டிற்கும், மற்றொரு நாட்டிற்கும் அது காமன்வெல்த் நாடாக இருந்தாலும்சரி, வேறு எந்த நாடாக இருந்தாலும்சரி, நாட்டுக்கு நாடு தொடர்பு கொள்கின்ற நல்ல முறையிலே வரவேற்புக்கு ஏற்பாடு செய்து, அந்தத் தொடர்பின் மூலமாக உலக சமாதானம் ஏற்படுவதற்கான சக்தியை வளர்க்க வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அந்த முறையிலே ராணியாரின்,

[Sri C. Subramaniam] [25th January 1961

வருகை நம்முடைய நாட்டுக்கும், பிரிட்டிஷ் நாட்டுக்கும் இருக்கக்கூடிய தொடர்பை இன்னும் அதிகப்படுத்தும், பலப்படுத்தும். அந்த பலத்தின் மூலமாக, அந்த சக்தியின் மூலமாக உலக அரங்கிலே சமாதானத்தை நிலவுவதற்கு இன்னும் நல்ல முறையிலே பணியாற்ற முடியும் என்ற வகையிலே, ராணியார் அவர்களை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சி, அமெரிக்காவிலே புதிய ஜனாதிபதி பதவி ஏற்றது. அதன் மூலமாகவும் இன்றைய உலக சூழ்நிலை மாறுபட்டு, சமாதானம் உலகத்திலே ஏற்படுவதற்கு உதவியாக இருக்குமென்ற நம்பிக்கை இன்று உலகத்திலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன், என்று சொன்னால், நாம் இப்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி, நம் நாட்டிலே ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைப் பற்றி நாம் இங்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். நாட்டிலே, உலகத்திலே சமாதானம் சீர்குலைந்து மறுபடியும் போர் மூளக்கூடிய நிலைமை ஏற்படக்கூடுமாயின், எல்லா நாட்டினுடைய முன்னேற்றங்களும் தடைபட்டுவிடும். அதனால் நம்முடைய முன்னேற்றம் தடைபடும். ஆகவே இன்று எங்கெல்லாம் சமாதானம் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றதோ, அவைகளையெல்லாம் நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அது ரஷ்யாவானாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி, சீனாவானாலும் சரி, பாகிஸ்தானானாலும் சரி, இந்தியாவானாலும் சரி நாம் எல்லாவற்றையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆகவேதான் இன்றைக்கு அந்த அடிப்படையில் ராணியார் அவர்களின் வருகையை கவர்னர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் ஒருவர், அது எப்படி, இனவெறி இருக்கக்கூடிய காமன்வெல்த்திலிருந்து வரக்கூடிய தலைவியை வரவேற்க முடியுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது ரொம்பவும் வருந்தத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri N. K. PALANISAMI** : நான் எந்தத் தலைவர்களையும் வரவேற்பதில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. பிரிட்டிஷ் காமன்வெல்த் தலைவியை மிகவும் பெருமையாக, ஆடம்பரமாக வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். வரவேற்பதில் தப்பு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : வரவேற்பது என்று சொன்னால் ஒன்று ஆதரிப்பதாக இருக்க வேண்டும் அல்லது தவறு என்று சொல்ல வேண்டும். செலவிடுவது தப்பு என்று சொல்லிவிட்டு, அதற்கு வேறு அர்த்தம் கூறுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவேற்பது நல்லது என்று சொல்வாரேயானால், அதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

The hon. Member, Sri M. Kalyanasundaram rose.

**Mr. SPEAKER** : I allowed the hon. Member, Sri N. K. Palanisami, to speak on a point of personal explanation. But I cannot allow the hon. Member Sri M. Kalyanasundaram to speak.



25th January 1961]

**Sri M. KALYANASUNDARAM** : Sir, on a point of clarification.

Let the hon. Member please resume his seat.

**Mr. SPEAKER** : Let the hon. Member please resume his seat. No hon. Member can speak unless it is on a point of personal explanation. I cannot allow one hon. Member to speak on a point of personal explanation and also the leader of his party to speak on another point of personal explanation. I deprecate the idea of any hon. Member intervening and disturbing the thought of the Hon. Minister for Finance while he is speaking. Let the Hon. Minister please resume his speech and not field to any nterruption. (Laughter.)

**Sri A. GOVINDASAMI** : The same instructions apply to the Hon. Minister also.

**Mr. SPEAKER** : The hon. Member can raise that point at the appropriate time and I will give my ruling.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : ஸ்ரீ பழனிசாமி அவர்கள் இந்த வரவேற்பிலே கலந்து கொள்வது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொண்டு, அவர் வரவேற்பதாக கூறியதற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும் பொதுவாக சர்க்கார் நடத்தி வரக்கூடிய நிர்வாகத்திலுள்ள குறைகளைப் பற்றியும் பேசினார்கள். ஒவ்வொரு கட்சியும் அதன் அதனுடைய கோணத்திலே இருந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், நிர்வாகத்தைப் பற்றியும் அவரவர்களுக்குச் சொல்ல வேண்டிய குறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிலே முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி, அவர்களுக்கு திராவிட நாடு 'பிரியவேண்டுமென்ற ஒரு கோணத்திலே இருந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். அவர்கள் எப்போதும் பிரிவினையிலேயே நம்பிக்கையுள்ளவர்கள். அதன் காரணமாக ஒரு அங்கத்தினர், எங்கு பிரிவினை சக்தியிருந்தாலும் அது முன்னேற்றத்திற்குரிய ஒரு சக்தியாகும், ஆகவே அது வரவேற்கப்படக்கூடியதாகும் என்று சொன்னார்கள். அப்படி பிரிந்து போகக்கூடிய சக்தி ஜாதியின் அடிப்படையில் இருந்தாலும் சரி, மொழியின் அடிப்படையில் இருந்தாலும் சரி, அல்லது கொள்கையின் அடிப்படையிலே இருந்தாலும் சரி, அச்சக்தி முன்னேற்றத்திற்குரிய ஒரு சக்தி என்ற கருத்துப்பட பேசினார்கள். அதை அவர்களுடைய திராவிட முன்னேற்றக் கழகமும் ஒத்துக் கொள்ளக் கூடிய அளவில் இருக்கிறது. பிரிவினை என்று சொன்னாலே, அதை ஒரு முன்னேற்றமாகக் கருதக்கூடியவர்கள். ஆகவேதான் அவர்கள் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக்கொண்டார்கள்.

பிரிவதை ஒரு முன்னேற்றமாகக் கொள்ளக் கூடியவர்களாகையால், அப்படி பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அக்கட்சியிலிருந்து பிரிந்து போய் வேறு கட்சியை ஏற்படுத்தினால், அதற்கு திராவிட தீவிர முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக்கொள்ளக்கூடியவர்கள்.

SRI A. GOVINDASAMI : The Hon. Minister is not speaking with reference to the Governor's Address.

MR. SPEAKER : I would also appeal to the Hon. Minister not to go away from the point.

(Sri A. Govindasami rose.)

MR. SPEAKER : I have upheld the point raised by the hon. Member. Let the Hon. Minister please continue his speech now.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** நான் சொல்வதிலே சிரிப்புக்கு இடமிருந்தாலும்கூட, வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மாதிரி ஒரு கொள்கை இருப்பது பற்றி நான் வருத்தப்படுகிறேன். இந்தப் பிரிவினைச் சக்தி என்ற அடிப்படையிலே இன்றைக்கு நாம் யோசித்துப் பார்ப்போமேயானால், எந்தத் திட்டத்தையும் நாம் நிறைவேற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் காரணமாக, அந்தப் பிரிவினை என்ற மனப்பான்மையோடு பார்க்கும்போது, தமிழ் நாட்டிலே எதைப் பார்த்தாலும் அவர்களுக்கு ஒரு பாழடைந்த காட்சியாகத் தெரிகிறது. தமிழ் மக்களிடத்திலே, தமிழ் மந்திரிகளுக்கு திறமை என்பது எப்போதும் கிடையாது என்று கூறப்படுகிறது. எதையெடுத்தாலும், ஒன்றும் நடைபெறவில்லை என்ற கருத்துடன் பேசப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் பிரிவினை மனப்பான்மை என்பதுதான் என்று நான் சொல்லியிருந்தேன். அந்த அடிப்படையிலேதான் கருத்துக்கள் அத்தனையும் மக்களிடத்தில் தெரிவிக்கப்படுகிறது என்பதை நான் எடுத்துக் காட்ட முடியும்.

அடுத்தபடியாக, கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து பேசியவர்கள் திட்டம் அவசியம், திட்டத்தின் மூலம் முன்னேற்றம் ஏற்படுகிறது என்று சொல்லி, புள்ளி விவரங்களுடன் எந்த அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதைப் பற்றியும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால், அதே சமயத்தில் சில கொள்கைக் கோளாறின் காரணமாக உற்பத்தியின் பலன் மக்களுக்குக் கிடைக்காத முறையிலே விலை ஏறி விட்டது என்பதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். அதிலும் முக்கியமாக தனிப்பட்டவர்கள் துறையிலே பல தொழில்கள் ஏற்பட்டதன் காரணமாக, கோளாறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன, இன்னும் அதிகமாக சர்க்கார் துறையிலே, பொதுத் துறையிலே இந்தத் தொழில்கள் ஏற்படுத்தப்படுமானால், இந்தக் கோளாறுகள் ஏற்படாது என்றும் அவர்கள் பேசினார்கள்.

எந்தக் கட்சித் தலைவர் என்று கனம் இராமசுவாமி முதலியார் அவர்களைக் குறிப்பிடுவது என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் தயக்கம் இருக்கிறது. (ஸ்ரீ வி. கே. இராமசுவாமி முதலியார் : பழையபடியே சொல்லுங்கள்.) 'ஐ.என்.டி.சி. கட்சித் தலைவர்—ஐ.என்.டி.சி. கட்சித் தலைவராக இருந்தாலும்கூட சுதந்திரக் கட்சி இலட்சியங்களை கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால், சுதந்திரக் கட்சியின் இலட்சியங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அவர்கள் பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவரவர்கள் அவர்களுடைய கண்ணோட்டத்தோடு தான் நோக்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கடைசியில் எது சரி என்பதைப்பற்றி நாம் ஆலோசனை செய்து, இருக்கக்கூடிய சரியான புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். அதிலும் முக்கியமாக எந்தவிதமான முன்னேற்றமும் நம் ராஜ்யத்தில் ஏற்படவில்லை என்பதற்கு ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து பல புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி, அதன் மூலம் தமிழ் நாடு பாழடைந்து விட்டது, பத்து வருட காலத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்கிற முறையிலே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் பேசினார்கள். பொதுவாகப் பேசியதை விட்டுவிட்டு இன்றைக்கு தனியாக துறைவாரியாக எடுத்துப் பார்ப்போம். எதிலே நாம் பின்னடைந்திருக்கிறோம், எதிலே மற்ற மாகாணங்களைவிட நாம் பின்னடைந்திருக்கிறோம் என்பதைப்பற்றியெல்லாம் அவர்களே ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்கின்ற ஒரு முறையிலே ஒவ்வொரு துறையாக எடுத்துக்கொண்டு நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், நம்மைவிட மற்றவர்கள் அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்பதை பரிசீலனை செய்து பார்ப்போம். பொதுவாக ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு, நாம் இதிலே குறைவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், அதனால் முழுவதுமே நமக்கு எல்லாவற்றிலும் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது சரியல்ல. இன்றைக்கு யாரும் எந்தப் பகுதியிலும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துவிட முடியாது. ஆகையினால்தான் ஒவ்வொரு துறையையும் வரிசையாக எடுத்துக் கொண்டு, எதில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், ஓரளவு எதில் பின் அனடந்திருக்கிறோம், அம்மாதிரி பின்னடைந்ததை சரி செய்வதற்கு என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி ஆலோசிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு விவசாயத்திலும்கூட நாம் முன்னேற்றம் அடையவில்லை என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டது. எப்பொழுதும் சொல்லுகின்ற பாணியிலே, எல்லாமே குறைவு என்கின்ற பாணியிலே சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை. விவசாயத் துறையை எடுத்துக்கொள்வோமானால் 10 ஆண்டுகளில் 32 சதவிகிதம் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. அம்மாதிரி 32 சதவிகிதம் அதிக உற்பத்தி வேறு எந்த ராஜ்யத்திலும் ஏற்படவில்லை என்கின்ற முறையிலே அந்த அளவுக்கு அபிவிருத்தி ஏற்பட்டிருந்தாலும்கூட, விவசாயத் துறையிலே நாம் முன்னேற்றம் காணவில்லை என்று சொல்லி வலியுறுத்தினார்கள். அதோடு மட்டுமல்ல. ஏகரா ஒன்றுக்கு எந்த அளவுக்கு விளைகிறது என்கின்ற கணக்கை, புள்ளிவிவரத்தை நாம் எடுத்துப் பார்ப்போமானால்,

[Sri C. Subramaniam] [25th January 1961

நெல்லை எடுத்துக்கொண்டாலும் சரி, மற்ற தானியங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, கரும்பை எடுத்துக்கொண்டாலும் சரி, பருத்தியை எடுத்துக்கொண்டாலும் சரி, நிலக்கடலையை எடுத்துக் கொண்டாலும் சரி, எல்லா விளை பொருள்களையும் எடுத்துக் கொண்டாலும் ஏகரா ஒன்றுக்கு எந்த ராஜ்யம் அதிகமாக விளைவிக்கிறது என்று பார்த்தால், அது சென்னை ராஜ்யம்தான் என்பதற்கு புள்ளிவிவரங்கள் சொல்லமுடியும். (குறுக்கீடு). ஏற்கனவே இருந்தது அல்ல. இப்பொழுது 10 வருஷங்களில் 32 சதவிகிதம் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. இன்றைக்கு புள்ளிவிவரங்களை யோசித்துப் பார்ப்போமானால் எந்த அளவுக்கு இந்த 10 ஆண்டுகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைப்பற்றி புள்ளிவிவரங்களை நல்ல முறையில் எடுத்துச் சொல்ல முடியும். அதோடு மட்டுமல்லாமல் சமீபத்தில் ஸ்ரீ எம். எஸ். ராண்டவா, Vice-President of the Council of Agricultural Research and Additional Secretary to the Government of India ஹிந்து பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதை திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் படிக்கவேண்டும். அதுவும் விவசாயத் துறையில் முன்னேற்றம் காணவில்லை என்று சொல்லும்பொழுது அதை அவர்கள் படித்துப் பார்க்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். அதிலிருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் படிக்கிறேன்.

**SRI K. ANBAZHAGAN**: கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய வாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், விவசாயத் துறையிலே முன்னேற்றம் அடையவில்லை என்று வற்புறுத்தியதாக எடுத்துக்காட்டி, அதற்கு மாற்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடம் நேற்று பேசும் பொழுது சொன்னது, முன்னேற்றம் அடைந்திருப்பதை மறுத்துச் சொல்லவில்லை. பிற மாகாணத்தின் சராசரி வருமானத்தை எடுத்துக்கொண்டால், விவசாயத் துறையில் அந்த அளவுக்கு பெறும் வாய்ப்பை நாம் எட்டிப் பிடிக்கவில்லை என்பதை புள்ளி விவரங்களுடன் சொன்னேன். கனம் அமைச்சர் வேறு சரியான புள்ளிவிவரம் கொடுத்தால், நான் அதை வரவேற்பேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: விவசாய உற்பத்தி நிலத்திலிருந்துதான் ஏற்படுகிறது. சராசரி நிலத்தில் எவ்வளவு உற்பத்தி ஆகிறது என்பதைப் பொறுத்துத்தான் சராசரி வருமானம் இருக்கிறதே ஒழிய, ஆகாயத்தில் விவசாயம் செய்துவிடமுடியாது. ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வந்தால், அவர்களுடைய திறமையின் காரணமாக, அவர்கள் ஆகாயத்தில் விவசாயம் செய்து உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவார்களோ என்னவோ தெரியாது. (சிரிப்பு) விளைச்சல் எந்த அளவுக்கு ஏற்படுகிறது என்பதை வைத்துக் கொண்டுதான் நாம் இதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் (குறுக்கீடு). இதர ராஜ்யங்களில் எப்படி அதிக வருமானம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நான் பின்னாலே சொல்லுகிறேன். அதைப்பற்றி அவர்கள் இன்னும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கான கணக்குகளை



25th January 1961] [Sri C. Subramaniam]

நான் சொல்லுகிறேன். அதை ஏற்றுக்கொண்டால் ஏற்றுக் கொள்ளட்டும். இல்லை, எப்பொழுதும் போல ‘நிதி அமைச்சர் சொல்லுகிறார், நான் ஏற்றுக்கொள்ளுவதற்கு தயாராக இல்லை’ என்று அவர்கள் ஒதுக்கிவிட்டாலும் விடலாம். ஸ்ரீ ராண்டவா அவர்கள் சொல்லியிருக்கக்கூடியதை படித்துக் காண்பிக்கிறேன்:

“The most highly developed of the Southern States is Madras. Apart from the high level of literacy and good administration......

அவர்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அது வேறு பொறுமை. நான் பாராட்டியது இல்லை. ராண்டவா அவர்கள் சொன்னது.

Apart from the high level of literacy, and good administration the general standard of agriculture is also of a high order. The crop yields are higher than in the other States in India. This is largely explained by the technical knowledge, capacity for industry of the farmer and plentiful use of fertilisers and green manures.”

அடுத்தாற்போல கோவை ஜில்லாவைப் பற்றி சொல்லியிருந்தாலும், அதையும் படித்துவிட விரும்புகிறேன்:

“The district of Coimbatore can claim to be one of the most progressive districts in India.”

நாம் ஏதோ பின்னடைந்திருக்கிறோம் என்று சொல்லுவது வாதத்திற்கு வேண்டுமானால் சொல்ல முடியும். ஆகவே, நாம் விவசாயத் துறையில் போதிய அளவு மற்ற மாகாணங்களைவிட அதிக உற்பத்தி செய்துவருகிறோம் என்பதில் சந்தேகம் கிடையாது. அதில் முதன்மை ஸ்தானத்தை நாம் வகித்துக் கொண்டு வருகிறோம், வகித்துக்கொண்டுதான் வருவோம் என்பதில் சந்தேகம் கிடையாது. (குறுக்கீடு). விவசாயத் துறையிலே அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் கிடையாது. கல்வித் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், நாங்கள் இனிமேல் படிப்பது என்பது இல்லை, குழந்தைகள் அதிகமாக படிக்கிறார்கள், குழந்தைகளுக்கு படிப்பு அதிகமாகியிருக்கிறது என்[illegible] அர்த்தம்.

இன்றைக்கு அடுத்தபடியாக கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், மற்ற ராஜ்யங்களில் ஏற்பட்டதைவிட நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றம் குறைவா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அதற்கான புள்ளிவிவரம் அவர்களிடம் இருக்கிறதா, பார்த்தார்களா என்று கேட்கிறேன், நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன், இந்த 10 ஆண்டுகளில் கல்வித் துறையிலே எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் சரி, சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்ற அளவு வேறு எந்த ராஜ்யத்திலும் ஏற்படவில்லை என்று நான் சொல்ல முடியும். வேண்டுமானால் வேறு யாராவது இதை எதிர்த்துச் [illegible] சொல்லட்டும். (ஆரவாரம்). கல்லூரி படிப்[illegible]

[Sri C. Subramaniam] [25th January 1961

இருந்தாலும் சரி, கல்லூரிப் படிப்பிலே தொழில் படிப்பாக இருந்தாலும் சரி, மருத்துவப் படிப்பாக இருந்தாலும் சரி, விவசாய மேல் படிப்பாக இருந்தாலும் சரி, அல்லது கால்நடையைப் பற்றிய மேல்படிப்பாக இருந்தாலும் சரி, புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் இந்த 10 வருஷங்களில் நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தி அளவுக்கு வேறு ராஜ்யத்தில் ஏற்படவில்லை என்று சொல்ல முடியும். புள்ளி விவரங்களைக் கொண்டு நிரூபிக்க முடியும். அதற்கான புள்ளி விவரங்களைப் பார்த்தால் சென்னை ராஜ்யம் முதன்மையாக இருக்கிறது என்பதைப் பற்றி மறுக்க முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR: What about Kerala?

THE HON. SRI C. SUBRAMANIAM: பத்து வருஷத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை சொல்லுகிறேன். நாங்கள் பொறுப்பு ஏற்றதற்கு பிற்பாடு, சுதந்திரம் அடைந்ததற்கு பிற்பாடு, அதிலே ஏற்பட்ட முன்னேற்றத்தைச் சொல்லுகிறேன். வேறு எந்த ராஜ்யத்திலும் இல்லாத அளவு முன்னேற்றம் இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

அதற்கு அடுத்தாற்போல் மின்சாரம் எந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதைப் பார்ப்போமானால், (ஒரு கனம் அங்கத்தினர்: இரும்புத் தொழிற்சாலையைப் பற்றி சொல்லுங்கள்)—நான் உங்களைப்போல் மழுப்பிவிட்டு பேசுகிறவன் அல்ல. அதைப் பற்றியும் நான் சொல்லத்தான் போகிறேன். மின்சார உற்பத்தி எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். பத்து வருஷங்களுக்கு முன் இருந்ததைப் பற்றி நான் சொல்லவில்லை. பத்து வருஷங்களில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆகையினால் அதற்கு நான் பதில் சொல்லுகிறேன். பத்து வருஷங்களுக்குள்ளாக ஏற்பட்ட அபிவிருத்திக்கு புள்ளி விவரங்கள் கொடுத்து நான் கேட்கிறேன். சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்ட மின்சார அபிவிருத்தி அளவு வேறு எந்த ராஜ்யத்திலும் ஏற்படவில்லை என்று நான் சொல்லுகிறேன். அதை யாராவது மறுக்கமுடியுமா என்று கேட்கிறேன் (ஆரவாரம்). 1951-ம் வருஷத்திலே உற்பத்தி சக்தி 146,000 கிலோவாட்ஸ் ஆக இருந்தது. 1961-ல் 571,000 கிலோவாட்ஸ் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது உற்பத்தி அளவு மூன்று பங்கு உயர்ந்திருக்கிறது. 300 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. மூன்றாவது திட்டத்திலே போதுமான அளவு மின்சார சக்தி ஏற்படப்போவதில்லை என்றும், ஆகவே இன்னும் அதிகமான அளவுக்கு சில திட்டங்களைப் போடவேண்டுமென்றும் சிலர் சொன்னார்கள். இன்னும் அதிகமாக உற்பத்தி பெருகவேண்டியதுதான். ஆனால் எந்த அளவுக்கு நாம் சென்றிருக்கிறோம் என்பதையும் பார்க்கவேண்டும். 1961-ம் வருஷத்தில் மற்ற ராஜ்யங்களிலுள்ளதையும் கணக்கிட்டுப் பார்த்தால், நாம் ஐந்தாவதாகத்தான் இருக்கிறோம். முழு மின்சார சக்தியை எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, ஹைட்ரோ எலெக்டிரிக் உற்பத்தியாக இருந்தாலும் சரி, தெர்மல் பவர் ஆக



25th January 1961] [Sri C. Subramaniam]

இருந்தாலும் சரி, இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, நாம் ஐந்தாவதாகத்தான் இருக்கிறோம். (இச்சமயத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் எழுந்திருந்தார்).

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் பேசும்பொழுது ஏன் குறுக்கிடுகிறீர்கள். அவரைப் பேச விடுங்கள். நேற்று நீங்கள் பேசும்பொழுது அவர் இப்படிச் செய்யவில்லையே. அடிக்கடி நான்கு ஐந்து பேர் பேசுவதை நான் நேற்றுப் பார்க்கவில்லை. தயவுசெய்து பொறுமையாக இருங்கள். அவர் பேசி முடித்தபிறகு உங்கள் சந்தேகத்திற்கு விளக்கம் கேட்கலாம்.

SRI A. GOVINDASAMY: அவரை உற்சாகப்படுத்துவதற்காகத்தான். . . . . . . . . . .

MR. SPEAKER: Rules of debate require that every hon. Member must be given the right to speak in this House uninterrupted. The Hon. Minister is as much entitled to protection as any hon. Member. I am here to see that the Hon. Minister is not interrupted. I won't allow interruptions.

THE HON. SRI C. SUBRAMANIAM: தங்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். என் பேச்சு சூடு ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், அந்தச் சூட்டைத் தாங்க முடியாமல் குதிக்கிறார்கள்.

MR. SPEAKER: சூடு ஏறாமல் பார்த்துக் கொள்வதற்குத்தான் நான் இருக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: சூடு ஏறினாலும் அதை சகித்துக்கொள்ள வேண்டுமென்று அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை நாம் கணக்கு எடுத்துப் பார்க்கும் பொழுது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவுக்குள்ளாக நம்முடைய மின்சார சக்தி 1,440,000 கிலோவாட்ஸ்லாக உயர்ந்து விடும். அப்பொழுது நம்முடைய நாட்டிலே இரண்டாவது ஸ்தானத்தை நாம் வகிப்போம். பதினாறு லட்சம் கிலோவாட்ஸ் அளவிலே, முதல் ஸ்தானம் மகாராஷ்டிராவுக்குச் செல்லும்.

நேற்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் பேசும் பொழுது, ஜனத்தொகை அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை வலியுறுத்தினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் நாம் 14 லட்சம் கிலோ வாட்ஸ் பெற முடியாது. பத்து லட்சத்துடன் நிறுத்திக்கொள்ளவேண்டும். அவர்களுடைய வாதத்தை எடுத்துக்கொண்டு ஜனத்தொகை அடிப்படையில் எல்லாம் இருக்கவேண்டுமென்று சொன்னால், முதலிலே விவசாயத் துறையில் முன்னேற்றத்தை நாம் நிறுத்திவிட வேண்டும். கல்வித் துறையிலும் மின்சாரத் துறையிலும் அபிவிருத்தியை நிறுத்திவிடவேண்டும். மற்றவர்கள் எல்லாம் நம்முடன் சேர்ந்து வரும் வரையில் நாம் ஒன்றுமே செய்யமுடியாது.

[Sri C. Subramaniam] [25th January 1961]

மின்சாரத்தை எடுத்துக்கொண்டாலும், சென்ற பத்து வருஷ காலத்திலே மற்ற ராஜ்யங்களைவிட இங்கே அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மற்ற ராஜ்யங்களைவிட, அளவிலே உற்பத்தியைப் பெருக்கப் போகிறோம் என்பதையும் எடுத்துக்காட்ட முடியும். ஆகலால் மற்றவர்களால் வஞ்சிக்கப்பட்டோம், ஏமாற்றப்பட்டோம் என்று சொல்லுவதற்கு இடமில்லை.

ரோடுகளைப் பற்றிப் பேசுகையில் பாலம் போய்விட்டது என்று சொன்னார்கள். இங்கே மட்டுமல்ல. ரொம்ப முன்னேற்றகரமாக இருக்கக்கூடிய நாடுகளிலேகூட, எதிர்பாராத விதமாக வெள்ளம் வந்து, விபத்துக்கள் ஏற்பட்டு பாலங்கள் அடித்துச் செல்லப்படுகின்றன. பத்திரிகையில் பார்க்கிறோம். நேரில் சென்றவர்களும் பார்த்திருப்பார்கள். "வெள்ளம் அதிகமாக வந்து பாலம் இடிந்து விட்டதே, பார்த்தீர்களா ரோடுகளை" என்று சொல்லி, எங்களுக்குத் திறமையில்லை என்று எடுத்துச் சொல்ல முன்வந்தார்கள். சென்ற 10 வருஷ காலத்திலே ரோடுகளின் கணக்கை எடுத்துப் பார்த்து, மற்றவர்களைவிடப் பின்தங்கியிருக்கிறோமா அல்லது முன்னேறியிருக்கிறோமா என்று அகில இந்திய ரீதியிலே புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், சென்னை ராஜ்யத்திலேதான் அதிக ரோடுகள், நல்ல ரோடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லமுடியும். அகில இந்திய ரீதியிலே பார்க்கும்பொழுது 1,000 சதுர மைலுக்கு சராசரி 28 மைல் நீளம் ரோடுகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டால் 54 மைல் நீளம் ரோடுகள் இருக்கின்றன. சராசரிக்கு மேல் இரண்டு பங்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, எவ்வளவோ ரோடுகள் போடவில்லை என்கிற அடிப்படையில் பேசுவது தவறு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கனம் மந்திரி மாணிக்கவேலு அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. (சிரிப்பு) (ஒரு அங்கத்தினர்: அவர் இங்கே இருக்கிறாரே) கடைசிக்குப் போய்விட்டார் போலும். 1960-65-லே அகில இந்திய ரீதியில் பார்க்கும்பொழுது 10,000 பேருக்கு 4 படுக்கை வசதி இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, கனம் மாணிக்கவேலு அவர்களுடைய இலாகாவிற்கு ஒதுக்கிய பணத்தில் ஒரு பகுதியை எடுத்து மின்சார அபிவிருத்திக்குச் செலவு செய்தோம். அப்படியிருந்தும்கூட இன்று நம்முடைய ராஜ்யத்தில் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்றால், 6 படுக்கை விகிதம் இருக்கிறது என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இன்னும் டாக்டர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்று கணக்குப் பார்க்கும்பொழுது, நம் ராஜ்யத்தில் 10 லட்சத்திற்கு 181 டாக்டர்கள் இருக்கிறார்கள். அகில இந்திய ரீதியிலே சராசரி 166-ஆக இருக்கிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதத்தை எடுத்துக்கொள்வோமேயானால் ஆஸ்பத்திரிகளின் அபிவிருத்தியை நிறுத்த வேண்டும்.



25th January 1961] [Sri C. Subramaniam]

அதிகமான அளவுக்கு டாக்டர்கள் தயாரிப்பதை நிறுத்திவிட வேண்டும். மற்ற பகுதிகளும் நம்முடைய அளவுக்கு வந்த பிறகு தான் நாம் மேலும் முன்னேற முடியும்.

இதெல்லாம் இருக்கட்டும், தொழில் துறைக்கு வாருங்கள் என்று சொல்லுகிறார்கள். அதைப் பற்றியும் பேசத்தான் போகிறேன். இன்றைக்கு மின்சார சக்தி அதிகமாக இருக்கிறது என்று சொல்லும்பொழுது, அந்த மின்சாரத்தை நாம் சாப்பிடுவது இல்லை. அதிலே ஒரு சிறு பகுதிதான் கிராமங்களிலே விளக்குகள் போடுவதற்கும், தண்ணீர் இறைப்பதற்கும் பயன்பட்டு வருகிறது. எண்பத்தி எட்டு சதவிகிதம் இண்டஸ்டிரியல் லோடுக்குத்தான் போகிறது. அந்த அளவுக்கு மின்சாரம் உற்பத்தியாகியும், பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. மீதமானது சிறிதுகூடக் கிடையாது. ஆகவே அந்த அளவுக்கு பரவலாக தொழில்கள் ஏற்பட்டதன் காரணமாகத்தான், இவ்வளவு மின்சார உற்பத்தி செய்தும் பற்றாக்குறையாக இருக்கிறது. அப்படி தொழில்கள் பெருகாமல் இருந்தால், இந்த நிலையை எட்டிப் பார்த்திருக்க முடியுமா என்று கேட்கிறேன். கிராமங்களுக்காகக் கொடுப்பது மிகவும் குறைவாகத்தான் இருக்கும். கிட்டத்தட்ட 100-க்கு 90 பங்கு தொழில்களுக்காகத்தான் உபயோகப்படுத்தியாக வேண்டும். வேறு வகையில் உபயோகப்படுத்திவிட முடியாது. அந்த அளவுக்கு நம் நாட்டிலே தொழில் வளம் ஏற்படப் போகிறது. ஆகவே மின்சார உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று திட்டமிட்டிருப்பதே தொழில் வளர்ச்சிக்கு அடையாளமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக சில தொழில்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் முதலில் ஏற்பட்டது நூல் நூற்கும் தொழில். திராவிட முன்னேற்றக் கட்சி அங்கத்தினர்களுக்கு புள்ளி விவரங்கள் தெரிந்திருக்குமோ, தெரியாதோ. தெரிந்திருந்தாலும் வெளியே சொல்லமாட்டார்கள். நூற்கும் கதிர்களை எடுத்துக் கொண்டால், இந்தியா முழுவதிலும் 135 லட்சம் கதிர்கள்தான் இருக்கின்றன. (ஒரு அங்கத்தினர்: இனிமேல் நமக்கு ஸ்பின்டில்ஸ் கொடுக்க மாட்டார்கள்) நான் என்ன செய்வது? சொல்லத் தான் வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே மட்டும் 30 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. அவர்கள் சொல்லுகிறபடி ஜனத்தொகை அடிப்படையிலே பார்த்தால், இதிலே 15 லட்சம் குறைத்துவிட வேண்டும். ஜனத்தொகை அளவில் பார்ப்போமேயானால் 12-ல் ஒரு பங்கு, அதாவது 8 சதவிகிதம்தான் வரவேண்டும். இன்றைக்கு எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். அதே மாதிரி, ஒரு தொழில் வரும்போது, அந்தத் தொழிலோடு நிற்பதில்லை. நூற்பாலைகளில் பெரும் வளர்ச்சி கோயம்புத்தூர் ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தொழிலோடு நிற்கவில்லை; பல உப தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று என்ஜினீயரிங் தொழில்கள். அவை எந்த அளவுக்கு வந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். சமீபத்தில் 11-00 a.m.

[Sri C. Subramaniam] [25th January 1961

அமெரிக்க நிபுணர் ஆராய்ச்சி செய்து, ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அந்த அடிப்படையில், எஞ்ஜினியரிங் தொழிற்சாலை சிறிதாக ஆரம்பித்து, மேன்மேலும் வளர்ந்திருக்கிறது. நாம் எந்த விதத்திலும் குறையவில்லை. சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ளுங்கள். நம் ராஜ்யத்தில் உற்பத்தி, ஜனத்தொகை விகிதாசாரப்படி பார்த்தால் அதிகம் குறைவில்லை. சர்க்கரைத் தொழிற்சாலைகள் அதிகம் இல்லாமல் இருந்தது; ஆனால், இப்பொழுது பல தொழிற்சாலைகள் அமைத்து நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல சர்க்கரைத் தொழிற்சாலைகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய எல்லாத் தொழிற்சாலைகளும் கிடைப்பதானால், ஜன சங்கியை விகிதாசாரத்திற்கு மேலேயே உற்பத்தி செய்ய ஆரம்பித்து விடுவோம்; நாம் அதிலும் குறைவில்லை.

இன்றைக்கு மிக முக்கியமாகச் சொல்லக் கூடிய இரும்பு தொழிற்சாலை ஏற்பட்டால், இரும்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, அப்படிப்பட்ட தொழிற்சாலை உடனே ஏற்படாததற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். இன்னும் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள், "இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும், ஏற்படுத்த வேண்டும் என்கிறோம்; சர்க்கார் மனது உருகவில்லை" என்று. இரும்புத் தொழிற்சாலை என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. மீதிப் பேர் தொழிற்சாலை அமைக்கவில்லையா என்றால், நம் நாட்டில் மற்ற இடங்களில் 100-க்கு 60 பங்கு இரும்பு சத்து இருக்கக் கூடிய, நல்ல இரும்புக் கனியும், உயர்தர நிலக்கரியும் இருக்கும்; உலகத்திலேயே பெருவாரியான நாடுகளில் இரும்புத் தொழிற்சாலை அப்படித்தான் செய்யப்படுகிறது. சேலத்தில் இரும்புக் கனி இருப்பது வாஸ்தவம்; ஆனால், அதில் 100-க்கு 38 பங்குதான் இரும்பு சத்து இருக்கிறது. நமக்கு உயர்ந்த நிலக்கரியும் இல்லை. நெய்வேலியில் கிடைப்பது, "பிஞ்சு" நிலக்கரிதான் லிக்னைட் உருவத்தில் கிடைத்திருக்கிறது. அங்கே ஆரம்பித்திருக்கும் முறை புதிதானது. ஆகையினால்தான் மற்ற முறைகளை உடனடியாக அமைக்க இயலவில்லை. ஆக நெய்வேலி நிலக்கரி கிடைத்ததும், இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என்கிறோம். நிலக்கரி இல்லாமல் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என்பது தவறான கருத்து. ஆகையினால்தான் இந்தப் புதிய முறையை ஒட்டி, இயந்திரங்கள் அமைப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடக்கின்றன. கிழக்கு ஜெர்மனி நிபுணர்கள், மேற்கு ஜெர்மனி நிபுணர்கள், மற்றவர்களும் வந்து பார்த்திருக்கிறார்கள். ஒன்றுதான் தெரிவிக்கப்படுகிறது; நிலக்கரியை வைத்துக் கொண்டு இரும்பு செய்ய முடியும், அதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள். ஆனால், சாத்தியத்திற்குத் தக்கவாறு, இயந்திரங்கள் எந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதைப் பற்றி இன்னும் திட்டவட்டமாக சொல்ல வேண்டுமென்றால், பல பரீட்சைகள் செய்துதான் சொல்ல முடியும். நெய்வேலி நிலக்கரி 2,000, 3,000 டன் வண்டி பெறும் அளவில் எடுக்கும்போதுதான் பரீட்சித்து



25th January 1961] [Sri C. Subramaniam]

எந்த விதமான இயந்திரங்கள் அமைக்க வேண்டும் என்று தீர்மானிக்கவேண்டும். அப்படி நெய்வேலி நிலக்கரியை உடனடியாக எடுத்தால் என்ன என்று உடனே சொல்லப்படலாம். வெகு சுலபமாகச் சொல்லலாம். பிரச்சினை கஷ்டமானது. அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ, நிலக்கரி வெட்டி எடுக்கும் போது, கீழே அமுக்கும் தண்ணீர் இருக்கிறது என்று கண்டோம். இதன் காரணத்தால், இரண்டு பக்கங்களிலும், இங்கே 30 பம்புகள், அங்கே 30 பம்புகள், 1,000 ஹெச். பி. கொண்டவை தண்ணீரை, தண்ணீரின் அமுக்கலை குறைக்க வேலைசெய்து கொண்டிருக்கின்றன. தண்ணீரை இறைத்துக் கொண்டு இருக்கிறது. தண்ணீரை இறைத்தால்தான் நிலக்கரி இருக்கும் பக்கத்திலேயே போக முடியும். இந்த 60 பம்புகளும் தொடர்ந்து வேலைசெய்யாவிட்டால், அங்கு பூராவும் வெள்ளக்காடாகப் போய்விடும். ஆறு மாதம் பொறுப்போம் என்ற முடிவுக்கு பரிசிலனை செய்த பிறகு வந்திருக்கிறோம்; ஆறு மாதம் பொறுத்துத்தான் மற்ற உபயோகத்திற்கு நிலக்கரியை எடுக்கவேண்டும், அதே சமயத்தில் 1,000, 2,000 டன் நிலக்கரியை எடுக்கலாம் என்று. பொருளாதார, தொழில் நிபுணர்கள் இந்த முடிவே சரி, இதுவே சரியான முடிவு என்று சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த விதமான முடிவைப்பற்றி வேறுகச் சொல்லலாம். எங்களுக்குத் திறமை குறைவு என்றாலும், மற்றவர்கள் இது சரியான முடிவு என்றுதான் சொல்லுவார்கள். ஆகவே, இது இரண்டையும் இணைத்துத்தான் செய்யவேண்டும். அவர்கள் சொல்வது போல் என்றால், நாம் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் வரை, மற்ற இடங்களிலும் இரும்புத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்காமல் இருக்கலாம் என்று சொல்லலாமா? பீஹாரில் தொழிற்சாலை என்றால், அங்கே எல்லா வசதிகளும், தெரிந்த முறைகளும் இருக்கின்றன. அப்படியேதான் ஒரிஸாவிலும், வங்காளத்திலும் இருக்கிறது. எங்கள் நிலக்கரி கிடைக்கும் வரை நீங்கள் ஒன்றும் பண்ணக் கூடாது என்று சொல்லலாமா? அது நமக்கே நல்லதா என்று பார்க்கவேண்டும்.

இன்னொன்றையும் மனதில் வைக்க வேண்டும். இரும்பு என்ன விலையில் செய்ய முடிகிறது? தேன் இரும்பு, பிக் அயர்ன், வெளி இடங்களில், டாடாவில் எடுத்துக் கொண்டால், டன்னுக்கு ரூ. 120. பொதுவாக ரூ. 180-க்கு மற்ற நிலக்கரிகள் விற்கின்றன. கொஞ்ச நஞ்சம் மேலாக இருக்கலாம். ஆக, 180-க்கு எடுக்கும் நிலக்கரியை, நமக்கு ரூ. 300 ஆகிறது என்று வைத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குறைகூறுகிறார்களே என்று ரூ. 300 செலவில் ஒரு டன் ஆனால், அது யார் தலையில் விடியும்? வாங்கி உருக்கு அப்படியே செய்யப்படுவதில்லை. மற்ற தொழில்களுக்கு உபயோகிக்க வேண்டும். அந்தத் தொழில்களெல்லாம், ரூ. 180-க்கு வாங்கி தொழில்கள் நடக்கும்போது, நம் தொழிலை ரூ. 300-க்கு வாங்கிச் செய்ய வேண்டுமென்றால், நாம் தொழில் முன்னேற்றம் அடைய முடியுமா? இதை யோசிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தார் [illegible] நாட்டுக்கு ஒரு இரும்புத் தொழிற்

சாலை வேண்டும் என்பதற்காக முடிவு இல்லை. எடுக்கக் கூடிய முடிவு, நம் தொழில் வளர்ச்சிக்கு சாதகமா அல்லது தொழில் வளர்ச்சிக்குப் பாதகமா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் எடுக்க வேண்டும். ஏதோ தொழில் வேண்டும் என்பதற்காக, குழந்தைகள் தன்னிடம் எத்தனை பொம்மைகள் இருந்தாலும், புதுப் பொம்மையைப் பார்த்தால், எப்படியும் தனக்கு அது தர வேண்டும் என்று போராட ஆரம்பிக்குமோ, அது போல (குறுக்கீடு) ஏதாவது நமக்கு வேண்டுமென்று செய்வதற்கில்லை; ஆகவேதான் குழந்தை அரசியலில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இரும்புத் தொழிற்சாலை சம்பந்தமாக முடிவு செய்ய வேண்டும் என்று சொல்லும் போது, பெரிய அளவில் பரீட்சைகள் செய்து பார்த்து, எந்த விலைக்கு உற்பத்தி செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும்; மற்றவர்கள், வடக்கத்தியார் சொல்வது இருக்கட்டும், வெளிநாட்டிலிருந்து வரும் நிபுணர்கள் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது கிடைத்திருக்கும் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு, தொழிற்சாலை ஏற்படுத்த, சாத்தியக் கூறுகள், நம்பிக்கை இருக்கிறது என்று சொல்ல முடியும். நிபுணர்கள் பெரிய அளவில் பரீட்சைகள் செய்த பிறகு, அது முடியாது என்றால் நிபுணர்களைப் புறக்கணித்து, அன்பழகன் நிபுணத்துவத்தை ஒத்துக் கொள்ள வேண்டுமென்றால், அது நாங்கள் அரசாங்கத்தில் இருக்கும் வரை முடியாது. இம்மாதிரி ஆரம்பிக்கும் திட்டங்களை உருவாக்க திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள், தலைவர்கள் கருத்தை மட்டும் கேட்டுக் கொண்டு செய்வது என்பது முடியாத காரியம். இன்றைக்கு முக்கியமாக உலகத்திலே ஒரு பொருளைக் கொண்டு இன்னொரு பொருளாக மாற்றும் சக்தி மனிதனுக்கு வேண்டியிருக்கிறது. என்ன செலவானால் என்ன, ரூ. 100 செலவழித்து ஐந்து ரூபாய் தங்கம் எடுப்போமென்றால், அது சாதாரண மக்களுக்குச் செய்யக் கூடியதில்லை. முக்கியமாக ஒரு கருத்து இருக்கிறது. இரும்புத் தொழிற்சாலை வந்து விட்டால், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட்டது என்ற கருத்துப் பரவியிருக்கிறது. பீஹாரை எடுத்துக் கொள்ளுங்கள்; அங்கு ஏற்பட்டிருக்கும் இரும்பு உற்பத்தி எந்த ராஜ்யத்திலும் கிடையாது. ஆனாலும், பீஹாரைப் போன்ற பிற்போக்கான மாகாணம் நம் நாட்டில் வேறொன்றும் கிடையாது. என்ன காரணம்? பஞ்சாப் ராஜ்யத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பெரும் தொழில் ஒன்றுமே அங்கு கிடையாது. சர்க்காரிலேயிருந்து ஒரு கோடி ரூபாய் அளவுக்குக்கூட செலவு செய்து பெரிய தொழில் ஆரம்பிக்கவில்லை அங்கு. அப்படி இருந்தாலும், இன்றைக்கு நம் நாட்டிலேயே மிக உயர்ந்த வாழ்வைப் பெற்றிருப்பது பஞ்சாப் ராஜ்யமாகும். பெரும் தொழில்கள் அல்ல அதற்குக் காரணம். ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு பாக்டரியாக இருக்கிறது அங்கே. அங்கேயே இரும்பு உற்பத்தியாகி, அதை அவர்கள் தொழில்களுக்கு உபயோகிக்கவில்லை. பீகாரிலிருந்து வாங்கிய இரும்பை வைத்துக்கொண்டுதான் அவ்வாறு செய்து இருக்கிறார்



கள். ஆகவேதான், இப்படி இரும்பை வாங்கி, சிறு தொழில்களைப் பெரிய அளவில் பரவலாக எந்த அளவுக்கு ஆரம்பிக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் நாட்டின் வளம் உயர முடியும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்கின்றேன்.

நம்முடைய ராஜ்யத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்திருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. புள்ளி விவரங்களோடு அதற்கான சமாதானங்களை நான் சொல்கிறேன். அவர்கள் ஏதோ புத்தகத்தைப் படித்துக் காண்பித்தார்கள். அந்தப் புத்தகத்தை நானும் முன்னரே பார்த்திருக்கிறேன். அதிலே கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். அந்தப் புள்ளி விவரத்தை 1960 ஆகஸ்டில் வெளியிட்டிருக்கிறார்கள். 1965-66-ல் எந்த நிலைமையில் ஒவ்வொரு ராஜ்யமும் இருக்கும் என்று யூகத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் இவ்வளவுதான் வரப் போகிறது, என்ன என்ன தொழில் எந்த எந்த ராஜ்யத்தில் வரப் போகிறது என்று இவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது; திட்டக் கமிஷனுக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது. எந்த அடிப்படையில் புள்ளி விவரம் சேகரித்துச் சொன்னரோ தெரியவில்லை. அது ஒருபுறமிருக்கட்டும். வேறு புள்ளி விவரம் இருக்கிறதா என்று கேட்கலாம். வேறு புள்ளி விவரம் இருக்கிறது. நாமும் ஸ்டாடிஸ்டிக்ஸ் டைரக்டரை வைத்துப் புள்ளி விவரம் சேகரித்திருக்கிறோம். திட்டத்தின் அளவு தெரியும் வரையிலாவது அதை வெளியிடாமலிருப்பது என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால், அதை வெளியிடாவிட்டாலும் சிற்சில குறிப்புகள் வெளி வந்திருக்கின்றன.

அகில இந்திய ரீதியிலே கணக்கிட்டுப் பார்க்கும்போது, சராசரி வருமானம் நம்முடைய ராஜ்யத்தில் 1955-56-ல் 257 ஆக இருந்தது. அப்பொழுது அகில இந்திய சராசரி 260. 1956-57-ல் நம் ராஜ்யத்தில் 292-ஆக உயர்ந்தது. இதே ஆண்டில் அகில இந்திய சராசரி 291. 1957-58-ல் நம் ராஜ்யத்தில் 283 ஆக இருந்தது. அகில இந்திய சராசரி 290. 1958-59-ல நம்முடைய ராஜ்யத்தின் சராசரி 304·3. அகில இந்திய சராசரி 313·?. ஆக, எந்த வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்று பார்க்கும்போது, 1955-56-லிருந்து 1958-59 வரைக்கும் உள்ள நான்கு வருடங்களில் நம் ராஜ்யத்தில் 20 சத விகிதம் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. அகில இந்திய ரீதியில் 19 சத விகிதம் தான் உயர்ந்திருக்கிறது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். இன்னும் ஒரு வருஷத்தில் மேலும் உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஏனென்றால், 1960-61-ல் இன்னும் அதிகமாக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதிலே வேகம் மற்றவர்களைவிடக் குறைவாக இருக்கிறது என்று சொல்வது தவறு என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தலை ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று சொல்லும்போது, விவசாயத் துறையில் எவ்வளவு வருமானம் வருகிறது, தொழில் துறையில் எவ்வளவு வருமானம் வருகிறது

[Sri C. Subramaniam] [25th January 1961

என்பதை நாம் பார்க்கவேண்டும். விவசாய வருமானம்தான் இன்றைக்கு இந்தியாவிலே பெரும் பங்கு இருக்கிறது. தொழில் வருமானத்தில் 45 சத விகிதம்தான் தேசிய வருமானத்தோடு போய்ச் சேருகிறது. தமிழ்நாட்டிலும் அந்த முறையில்தான் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. அவ்வாறு பார்க்கும் போது, பருவ நிலையில் கொஞ்சம் கோளாறு ஏற்பட்டால் கூட, தேசிய வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதனால் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, நமக்கு இருக்கும் நிலம் ஒரு குறிப்பிட்ட பரப்பு தான் இருக்கிறது. அதை அதிகப்படுத்த முடியாது. ஆனால், நிலத்திலிருந்து உற்பத்தியாகக் கூடியதை அதிகப்படுத்த முடியும். நிலத்திலிருந்து உற்பத்தியாகக் கூடியதில் பாதிப் பங்கு தேசிய வருமானத்தில் சேருகிறது. மக்களுடைய எண்ணிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், ஒரு சதுர மைலுக்கு 300 பேர் அகில இந்திய சராசரி என்றால், நம் ராஜ்யத்தில் 650-லிருந்து 700-வரை இருக்கிறது. இரண்டு பங்குக்கும் மேலாக இருக்கும்போது, நம் ராஜ்யத்திலுள்ள மொத்த நிலத்தில் வரும் வருமானத்தை இந்த இரண்டு பங்கு மக்களுக்கும் பங்கு போட்டு சராசரி வருமானத்தைக் கணக்கிட வேண்டியதாக இருக்கிறது.

இன்றைக்கு நாட்டில் இருக்கும் நிலத்தைக் கணக்கிட்டால், ஆந்திராவில் தலைக்கு சுமார் இரண்டரை ஏக்கர் நிலம் சராசரியாக இருக்கிறது. அந்த இரண்டரை ஏக்கரிலிருந்து வரக்கூடியது தேசிய வருமானத்தோடு போய்ச் சேருகிறது. நம் ராஜ்யத்தில் தலைக்கு சராசரி ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது என்று கணக்கிடலாம். அந்த ஒரு ஏக்கரிலிருந்து வரக்கூடிய வருமானம் தான் தேசிய வருமானத்தோடு சேருகிறது. கேரளாவில் தலைக்கு அரை ஏக்கர் என்று இருக்கிறது. அந்த அரை ஏக்கரிலிருந்து வருவது தேசிய வருமானத்தோடு போகிறது. அப்படியிருந்தும், நாம் அகில இந்திய அளவில் இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் குடும்பத்திற்கு 200 ரூபாய் வருமானம் வந்தால், ஆளுக்கு 100 ரூபாய் வருகிறது. குடும்ப வருமானம் 220 ரூபாயாக உயர்ந்தால், ஆளுக்குப் பத்து ரூபாய் அதிகமாகும். அந்தக் குடும்பத்தில் ஐந்து பேர்கள் இருந்து, ஆளுக்குப் பத்து ரூபாய் அதிகமாக வேண்டுமானால், ஐம்பது ரூபாய் அதிகமாக வரவேண்டும். அப்பொழுதுதான் பத்து சதவிகிதம் வருமானம் உயர முடியும். அதுபோல அகில இந்திய ரீதியில், நம் ராஜ்யத்தில், மற்ற ராஜ்யங்களை விட இரண்டு பங்கு ஜன நெருக்கம் இருப்பதால், அதே வேகத்தில் நாம் முன்னேற வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? விவசாயத் துறையில் மற்றவர்களை விட அதிகமாக நாம் முன்னேறினால்தான் அந்த வேகத்திலே இருக்க முடியுமே தவிர, வேறு விதத்தில் இருக்க முடியாது. ஜன நெருக்கடி இவ்வளவு இருந்தும் கூட, ஒவ்வொரு



25th January 1961] [Sri C. Subramaniam]

வருக்கும் இருக்கும் வருமானத்தைப் பொறுத்த வரையில், அகில இந்திய வேகத்தில் நாமும் முன்னேறிக் கொண்டிருக்கிறோம், ஒன்றரை, இரண்டு பங்கு பல துறைகளில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன.

விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டு எந்த நாட்டிலும் சராசரி வருமானத்தை அதிகப்படுத்திவிட முடியாது என்று உலக நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காண்பித்திருக்கின்றன. வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கும் எந்த நாட்டைப் பார்த்தாலும் கூட, தொழில் வளம் பெருகியிருக்கும் காரணத்தால்தான் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதே தவிர, விவசாய அடிப்படையில் மட்டும் எந்த நாடும் முன்னேறியது கிடையாது.

பிரிட்டனில் நூற்றுக்கு ஐந்து பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்திலிருந்து ஐந்து சதவிகிதம்தான் தேசிய வருமானத்திற்கு வருகிறது. பாக்கி 95 சதவிகிதம் தொழில்களிலிருந்தும், மற்ற துறைகளிலிருந்தும் வரக்கூடிய வருமானம் ஆகும். ஆனால், இங்கு நிலைமை வேறு. இங்கு நூற்றுக்கு 70 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். தேசிய வருமானத்தில் பாதி பாகம் விவசாயத்திலிருந்து வருகிறது என்றாலும் நாம் எவ்வளவுதான் விவசாயத்தைப் பெருக்கிக் கொண்டாலும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட முடியாது. ஆகையால், தொழில்கள் மேலும் மேலும் பெருகுவதன் மூலமாகத் தான் நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும், அதுவும் விரைவாக உயர்த்திக்கொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டுமென்பதற்காக என்னுடைய ஒரு கருத்தைச் சொல்கிறேன். அதை உடனடியாக ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றிச் சிந்தனை செய்து பார்ப்பதற்காகத்தான் வைக்கின்றேன். ஒரு குடும்பம் விவசாயக் குடும்பமாக மட்டும் இருக்கும்போது எத்தனை வருவாய் வந்தாலும், மேலும் மேலும் அதை பூமியிலேயே போடுகிறோம். லட்ச ரூபாய் பூமியில் போட்டாலும், கணக்குப் போட்டு வரும்படியைக் கவனிக்க மாட்டோம். ஏதோ வீட்டைக் கட்டுவோம். நகை வாங்குவோம். விவசாயக் குடும்பமாக இருந்தால் முன்னேற்றம் ஏற்படுவதில்லை. அதுபோல, வெறும் விவசாய நாடாக இருந்தால் நாடு முன்னேற முடியாது. நம்முடைய நாடு தொழில் நாடாக வந்து அமைய வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் நமக்கிருக்கும் வசதிகளையெல்லாம் விவசாயத்திலே போடவேண்டுமென்று நினைப்பது சரியா? அப்படிப் போடவேண்டுமென்றால், அதன் மூலம் எவ்வளவு வரும்படி வரும் என்பதைப்பற்றியும் யோசிக்க வேண்டும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் செலவிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால், 2,000 அல்லது 3,000 ஏக்கர் பாசனம்

பெறும். ஏதோ வருமானம் வரும். நான் சர்க்கார் வரும்படியைக் கணக்கிடவில்லை. சமுதாயத்திலே இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் போடுவதன் மூலமாக அதிக வரும்படி எவ்வளவு வருகிறது என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால், நூற்றுக்கு ஒரு ரூபாய் கூட வருவது இல்லை. ஆகவேதான், அப்படிப்பட்ட வகையில் செலவிடுவதை நிறுத்திவிட்டு, அந்த இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாயை புதிய தொழில்கள் ஆரம்பிக்க உபயோகப் படுத்தினால் நூற்றுக்கு 4 பங்கு, 5 பங்கு, 6 பங்கு அதிலிருந்து வரும்படி கிடைக்கும் நிலைமை ஏற்படுகிறது என்றால், விவசாயத்திலே பணத்தைப் போடுவதில் பிரயோசனம் இல்லை. ஒரு சத விகிதம் கூட கட்டுவது இல்லை. ஆகவே இப்படி கிடைக்கிற வருமானத்தையும் விவசாயத்துறையிலேயே ஈடுபடுத்த வேண்டுமா? அல்லது தொழில் துறையில் ஈடுபடுத்த வேண்டுமா என்பதைப்பற்றி எல்லோரும் நிதானமாக யோசித்துப் பார்க்கவேண்டும். இல்லை இல்லை, உழவுக்கு மிஞ்சின தொழில் இல்லை, விவசாயத்திலேயே ஈடுபடுத்த வேண்டும் என்று சட்டசபை முடிவு செய்தால் அதை மாற்றிவிடுவதில் எவ்வித கஷ்டமும் இல்லை. உடனே மாற்றிவிடலாம். ஆனால் இன்றைக்கு தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் காண்கிறோமோ அந்த அளவுக்குத்தான் தேசியத் துறையில் முன்னேற்றம் காணமுடியும். நம்முடைய தேசிய வருமானத்தையும் அதிகப்படுத்திக்கொள்ள முடியும். அதைவிட்டு விவசாயத்துறையிலே ஈடுபடுத்தினால் நிச்சயமாக நம்முடைய வருமானத்தை தொழில்துறையில் ஈடுபடுத்துவதன் காரணமாக எந்த அளவு பெருக்கிக்கொள்கிறோமோ அந்த அளவுக்குப் பெருக்கிக் கொள்ள முடியாது. இது என்னுடைய கருத்து.

இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம். குறைந்துதான் இருக்கிறது. எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் இருக்கக்கூடிய நிலத்தில்தான், இருக்கக்கூடிய மக்களுடைய எண்ணிக்கை வருடா வருடம் உயர்ந்துகொண்டே போகும்போது, அதில் கிடைக்கக்கூடிய வருமானத்தை அவர்கள் அத்தனை பேரும் பங்கு போட்டுக்கொள்ளவேண்டும் என்கிறபோது —அவர்களுடைய வருமானம் குறைந்துதான் போகும். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்களில் ஒரு பகுதியினரைப் பிரித்துப் புதிய தொழில் துறையில் அமர்த்தினால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. விவசாயப் பொருளாதார அமைப்பில் இருந்து தொழில் அமைப்புக்கு மாறவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். இப்படி மாறவேண்டியது அவசியமா இல்லையா என்பதை இங்குள்ளவர்கள்தான் ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். அவசரமில்லை. எப்போது வேண்டுமானாலும் அதைப் பற்றி முடிவு செய்யலாம். நன்றாக எல்லோரும் யோசனை செய்ய வேண்டும் என்றுதான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்னொன்று. இன்று விவசாயத்தில் கூலி வேலை செய்கின்ற வனுடைய வருமானம் எத்தனை? மில்லில் வேலை செய்கின்ற வனுடைய வருமானம் எத்தனை என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளிக்கு மாதம் 120 ரூபாய் கிடைக்கிறது. அதுவும் வருடம் முழுவதும் கிடைக்கிறது. சாதாரண விவசாயத் தொழிலாளிக்கு என் சிறிய விவசாயிக்கே அந்த அளவுக்கு வருமானம் இருக்கிறதா என்று பாருங்கள். ஆகவே இன்றைய தினம் நாட்டில் புதிய தொழில் திருப்பம் ஒன்று கொடுத்தாக வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையிலே இதைப் பார்க்கிறபோது—முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்குத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில்—தனியார் துறையில் மட்டும் தொழில்கள் ஏற்பட்டிருக்கிறது என்ன என்ன என்று எடுத்துப் பார்த்தால் இரண்டாவதாக, மூன்றாவதாக இந்தியா விலேயே நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். பத்து மாகாணங்களுக்கு மேல் நமக்குப் பின்னாலே இருந்து கொண்டிருக் கின்றன என்பதை நிரூபித்துக் காட்ட முடியும். அதன் காரணமாகத்தான் ஒரு அமெரிக்க நிபுணர் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து In the booklet 'Industrial Entreprenuerpehin in Madras State' Mr. James J. Berna says:

"In a word there is much evidence that Madras State may be just at the 'take off point' where cumulative development becomes possible, if entrepreneurs come forward in sufficient numbers."

என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் முன்னேற்றம் மற்ற ராஜ்யங்களை விட அதிகமாகவே ஏற்பட்டிருக்கிறது. இன்னமும் அதிகமாக ஏற்பட வசதிகள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதுவும் அந்த நிபுணர் வெறும் கட்டுரை எழுதுவது போல வெறுமனே எழுதிவிடவில்லை. தக்க புள்ளிவிவரங்களோடு கொடுத்திருக்கிறார்.

**SRI A. V. P. ASAITHAMBI:** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். அமைச்சர் அவர்கள் சென்னை மாநிலம் முன்னேறியிருக்கிறது என்பதற்கு அமெரிக்க நிபுணர் எழுதியுள்ள புத்தகத்தில் இருந்து எடுத்துக்காட்டினார். அதுபோல தென்னகம் முன்னேறவில்லை என்பதற்கு மற்றவர் எழுதியுள்ள புத்தகத்திலிருந்து எடுத்துக் காட்டலாமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** நான் அவர்களை அதுதான் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து தப்பான பாடத்தைப் படிக்காதீர்கள். நல்ல பாடத்தைப் படியுங்கள் என்று. (பலத்த சிரிப்பு) ஆகையால் நாம் தொழில் துறையில் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம், எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைய வேண்டியிருக்கிறது என்று பார்க்கவேண்டியதாக இருக்கிறது. ஆனால் இது விஷயமாக திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன

[Sri C. Subramaniam] [25th January 1961

யோசனையை நன்றாகப் பரிசிலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். "தனியார் துறைக்கு எல்லாத் தொழில்களையும் விட்டுவிடக் கூடாது. பொதுத் துறையிலேயே வைத்துக்கொள்ள வேண்டும்," என்று அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் கேந்திரமாக இருக்கக்கூடிய தொழில்களை, கன ரகத் தொழில்களைப் பொதுத் துறையில்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது முடிவான கருத்து. ஆனால் அதே சமயத்தில் பொதுத் துறையில் ஏற்பட முடியாது, தனியார் துறையில்தான் ஏற்பட முடியும் என்ற சூழ்நிலை இருக்குமானால் "அது கொள்கைக்கு விரோதமானது. ஆகையால் இதைத் தவிர்க்க வேண்டும்" என்ற கருத்தும் எனக்குக் கிடையாது. அலுமினியத் தொழிலைப்பற்றிச் சொன்னார்கள். முன்பு அது பொதுத் துறையில்தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அகில இந்தியாவிலேயே அலுமினியத்திற்கு இப்போது இருக்கிற நிலைமையில் அதைத் தனியார் துறைக்கே விட்டுவிடலாம் என்று முடிவு செய்தார்கள். நாம் மட்டும் அது பொதுத் துறையில்தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருந்தால் இன்று இங்கு அலுமினியத்தொழில் ஏற்படுவதற்கே வசதி இல்லாமல் போயிருக்கும். ஆகவேதான் இன்றைக்கு தனியார் துறையா, பொதுத் துறையா என்கிற பிரச்சனையை ஓரளவு ஒதுக்கி வைத்துவிட்டு இங்கே பல தொழில்களும் ஏற்படவேண்டும் என்கிற எண்ணத்தில் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தொழில் வளரவேண்டும், எப்படி வளரச் செய்யவேண்டும், தொழில்துறை பற்றி நாம் அனுஷ்டிக்கிற கொள்கை சரியானதுதானா என்பதை எல்லாம் பரிசீலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழில் அமைச்சர் அவர்கள் 2½ கோடி ரூபாய் இருந்தால் அதைக்கொண்டு தனியார் துறையில் பத்துத் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று சொன்னால் இல்லை அது தவறு, அதைக்கொண்டு ஒரு தொழிலை பொதுத் துறையில் ஆரம்பித்தால் போதும் என்று தீர்மானித்தால் அதையும் இந்தச் சபைதான் முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறைக்கு என்று போய்விட்டால் அதில் பல கோளாறுகள் ஏற்படுமே என்று சொல்லலாம். சில தொழில்கள் வளரும்போது கோளாறுகளும் வளர்கின்றன. அதைப் போக்க வேண்டிய சக்தி நம்மிடத்தில் இருக்கிறது. அதற்குரிய பாது காப்புகளையும் செய்துகொள்கிறோம். மீறி கோளாறுகள் ஏற்பட்டாலும் நம்முடைய சட்டங்களை அவ்வப்போது திருத்திக் கொள்கிறோம், அந்தக் கோளாறுகளைக் களைவதற்கு. அதனால் தான் கம்பெனிச் சட்டம் பல முறை திருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. ஆகையால் இன்றைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதற்காக மட்டும் அல்ல. இன்றைக்கு தமிழ்நாட்டில் பல புதிய தொழில்கள் ஏற்படவேண்டும் என்ற எண்ணம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் எல்லோரும் சேர்ந்து அந்தக் கருத்துக்கு நல்ல ஆதரவு கொடுத்தோமானால் நிச்சயமாக



25th January 1961] [Sri C. Subramaniam]

ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாகவே பல புதிய தொழில்கள் அமைவதற்கு வழி ஏற்படும். அந்த நம்பிக்கை இருக்கிறது. அதை வெறும் நம்பிக்கை என்றுமட்டும் சொல்லவில்லை.

இன்றைக்கு உலகத்திலே இருக்கும் பல நாடுகளிலிருந்து 11-30
தொழில் அதிபர்கள் வருகிறார்கள். தொழில் நிபுணர்கள் a.m.
வருகிறார்கள். புதிய தொழில்களை இங்கு ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்க வருகிறார்கள்—ஏதோ சென்னை அரசாங்கத்தைப்பற்றி பெருமையாகச் சொல்லிக் கொள்வதற்காக இதைச் சொல்லவில்லை. சென்னை அரசாங்கத்திற்கு மட்டும் அல்ல அந்த பெருமை. அது தமிழ் மக்களின் பெருமைதான். தமிழ் மக்கள் என்று சொல்லும்போது எல்லா கட்சிகளின் பெருமையும் கூடத்தான்—உலக நாடுகளெல்லாம் உணர்ந்திருக்கிறது. சென்னையில்தான் தொழில் அமைப்பதற்கு நல்ல சூழ்நிலையிருக்கிறதென்று. இங்கு வருகிறவர்கள் சொல்லுகிறார்கள், "நாங்கள் அமெரிக்காவிலிருந்து புறப்படும்பொழுது முதலிலே சென்னைக்குச் செல்லுங்கள், அங்கு வாய்ப்பு இல்லையென்றால் மற்ற ராஜ்யங்களுக்குச் செல்லுங்கள் என்று எங்களுக்கு யோசனை சொன்னார்கள். ஆகையால்தான் இங்கு வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அமெரிக்காவில் இருந்து வருகிறார்கள் என்ற காரணத்திற்காக திரு கல்யாணசுந்தரம் அவர்கள் நம்மை வந்து பிடித்துக்கொள்ளப்போகிறார்களோ என்று நினைக்க வேண்டாம்.

SRI M. KALYANASUNDARAM: அவர்களைப் பிடிக்க நமக்கே சக்தி இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்களைப்பிடிக்க நமக்கு சக்தி இருக்கிறது என்று சொல்கிறார். அப்படியென்றால் அவர்கள் வருகையை வரவேற்பதாக எடுத்துக்கொள்கிறேன். வெளிநாட்டிலிருந்து தொழில் அதிபர்கள் இங்கு தொழில் அமைக்க வந்தால் அவர்களுக்கு எல்லாவிதமான வசதியும் செய்துகொடுக்க கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து கூட ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறதென்று சொல்லும்போது முன்பு இருந்த சூழ்நிலையைவிட இன்றைக்கு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சொன்னார்கள் நிலைமை சீர்கெட்டுவிட்டது, முன்னேற்ற நிலையில் இல்லை என்று. மனதிலே இருக்கும் குறையை, அந்த மனோவியாதியை நினைக்கும் போது, அந்த மனோவியாதியினால் உடம்பு வியாதியும்கூட வருகிறது. அதனால்தான் என்று நினைக்கிறேன் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சில சமயங்களில் ஏன் இன்றைக்குக்கூட வரமுடியாமல் இருப்பதற்கு மனோவியாதிதான் காரணமோ என்று நினைக்கிறேன்.

(ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி எழுந்தார்.)

SRI A. V. P. ASAITHAMBI: On a point of information, Sir.

MR. SPEAKER: The hon. Member cannot intervene. The Hon. Minister can proceed.

SRI M. KALYANASUNDARAM : Sir, We have got other items in the Agenda, viz., the Demands for Grants for further Expenditure for the year 1960-61, etc. We have got only two hours. If the Hon. Minister goes on roaming about, it will encroach upon the time required for the other items in the Agenda. I would, therefore, request you, sir, to call the Hon. Minister to order.

MR. SPEAKER : I do not propose to do it.

THE HON. SRI C. SUBRAMANIAM : பத்து நிமிஷத்திலே முடித்துக்கொள்கிறேன். ஆகையால்தான், நாம் எல்லோருமாகச் சேர்ந்து தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு முன்வரவேண்டும். முதலீடு செய்தவர்கள் மட்டுமல்ல. தொழிலை நடத்துவது ஒரு சிறு பகுதிதான். தொழில் நிபுணர்கள் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறார்களோ, அந்த அளவிற்குத் தான் புதிய தொழில்கள் வரமுடியும். அதற்காக பெரிய அளவிலே இன்ஜினியர்களாக இருந்தாலும் சரி அதற்குக் கீழே டிப்ளோமா நிலையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்து தொழில் பயிற்சி சர்டிபிகேட் பெற்றவர்களாக இருந்தாலும் சரி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம் செய்திருக்கிறோம். அதற்கு முதலிடம் கொடுக்கிறோம். மின்சாரத்திற்கு மற்ற பகுதிகளைவிட அதிகமாக தொகை ஒதுக்கியிருப்பதற்குக் காரணம் அதன் மூலமாக புதிய தொழில்களுக்கான வாய்ப்பு ஏற்படுத்துவதற்காகத்தான். மக்களுடைய சூழ்நிலை நல்ல முறையிலே இருக்குமானால் எந்த ராஜ்யத்திலும் ஏற்படாத அளவிற்கு இங்கு தொழில்கள் ஏற்படுத்துவதன் மூலமாக மற்ற ராஜ்யங்களுக்குக் கூட உதவி செய்யக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு புள்ளிவிவரத்திற்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு வேறு சில விஷயங்களைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கக் கூடிய ராஜ்யங்கள் பீகார், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் என்பது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் புள்ளிவிவரம். (ஸ்ரீ ப. வு. ஷண்முகம் : பஞ்சாப்கூட . . . .) மூன்று ராஜ்யங்களில்தான் அதிகமாக வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கருத்து தெரிவித்தார்கள். அதற்கான புள்ளி விவரமும் காண்பித்தார்கள். பீகாரில் எண்ணிக்கை அதிகரித்துக் காண்பதற்குக் காரணம் அங்கு ஏற்பட்டிருக்கும் உருக்குத் தொழிற்சாலைகள். ஒரு ராஜ்யத்திலே உருக்குத் தொழிற்சாலை ஏற்பட்டது என்றால், அதிலே உற்பத்தியாவதையெல்லாம் கணக்குப் போட்டு, மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது என்ற கணக்குக் காண்பிக்க முடியுமா?

நீலகிரியை எடுத்துக்கொண்டால் அங்கு மின்சாரம் உற்பத்தியாகிறது. மின்சாரம் உற்பத்தி ஆவதைக் கணக்குப் போட்டு நீலகிரியில்தான் நம்முடைய தமிழ்நாட்டிலேயே வாழ்க்கைத்தரம் மிகவும் உயர்ந்திருக்கிறதில்லையா என்று நாம் சொன்னால் திரு. மாதா கவுடர் அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார். அதைப் போல் பீகாரிலே உருக்கு உற்பத்தி ஆகிறது என்றால், எப்படி நாம் நீலகிரியில் மின்சாரத்தை உற்பத்தி செய்து ராஜ்யம் முழுவதும் பரப்புகிறோமோ, அதைப்போல் பீகாரிலே உற்பத்தி ஆகும் உருக்கு, நாடு முழுவதும் பரவுகிறது. அப்படியிருக்க, அதைக் காண்பித்து, பீகாரிலே அதிகமாக ஏற்பட்டுவிட்டது, வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது என்று சொல்கிறவர்கள் அங்கிருக்கும் மக்களைப் பார்த்திருந்தால் சொல்லியிருக்கமாட்டார்கள். ஒரிஸ்ஸாவும் அதே அளவில் இருக்கிறது. புள்ளிவிவரம் அதிகமாக தூக்கி காண்பிக்கிறது அங்குள்ள உருக்குத் தொழிற்சாலையில்தான். ஒரு மிலியன் டன் உற்பத்தியாகும் மதிப்பு அளவையும் மக்களுக்குப் பங்கிட்டால் எவ்வளவு ஆகும்? நீலகிரியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதனால் அங்குள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது என்று சொன்னால் எப்படி பொருத்தமாக இருக்காதோ, அதுபோல்தான் இருக்கிறது இவர்கள் சொல்வதும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரிஸ்ஸாவும், பீகாரும் நம்மைவிட அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்று தைரியமாகச் சொல்லக்கூடிய அங்கத்தினர்கள் இருப்பார்களானால் அவர்களைப்பற்றி என்ன என்று சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

SRI K. ANBAZHAGAN : தைரியமாகச் சொல்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தைரியமாக அச்சடித்த மாதிரி எந்தப் புத்தகத்தையோ படித்துவிட்டு சொல்லுகிறார்கள்.

இவ்வளவு திட்டங்கள் நிறைவேறியிருந்தாலும்கூட, விலைவாசிகள் உயர்ந்துகொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் சொன்னார்கள். எங்களுடைய கட்சி அங்கத்தினர்களும் சொன்னார்கள். நான் அதை எப்போதும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். விலை நிர்ணயக் கொள்கையைப் பொறுத்த வரையில் நாம் இன்னும் வெற்றியடையவில்லை என்று இங்கே ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அதைத்தான் எல்லா இடங்களிலும் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். விலைவாசியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது எத்தனையோ கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அதிலே பல கோளாறுகள் இருப்பது நமக்குத் தெரியவரும். ஆகையால்தான் திரும்பத் திரும்ப புனராலோசனை செய்துகொண்டு வருகிறோம். அப்படிச் செய்யும்போது குறிப்பாக ஏதாவது நடவடிக்கை மூலமாகத்தான் விலைவாசியைத் தடுக்க முடியும் என்ற நிலைமை ஏற்படுமானால் அந்த நடவடிக்கையை எடுக்க சர்க்கார் என்றும் தயங்காது என்பதை திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கும் பிரச்னைகளிலே இது ஒரு முக்கியமான பிரச்னை, இது சிறிய பிரச்னை அல்ல, சுலபமான பிரச்னை அல்ல, ரொம்பச் சிக்கலான

பிரச்னை. ஒரு நடவடிக்கை எடுக்கும்போது இன்னொரு இடத்தில் உதைக்கிறது. இன்றைக்கு நாட்டிலே ஏற்படும் முன்னேற்றத்தைத் தடுக்காமல், நாட்டு மக்களுக்கு பழைய ரேஷன் காலத்து கஷ்டம் ஏற்படாமல், எந்த முறையிலே இந்த விலையை நிர்ணயம் செய்வது என்பதைத்தான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். இதில் வெற்றியடையவில்லையென்றால் வெற்றி அடையவில்லை என்று ஒப்புக் கொள்வதில் குறைவு இல்லை. இது நம்முடைய நாட்டிலுள்ள குறை மட்டுமல்ல. பல நாடுகளில் ஏற்பட்ட குறையாகும். மேலும் மேலும் முன்னேற்றம் அடைந்துகொண்டு போவதன் மூலமாகத்தான் விலைவாசி உயர்வைத் தவிர்க்கமுடியும் என்ற முறையிலே அவர்கள் தொடர்ந்து முன்னேறிக்கொண்டு போன காரணத்தால் அவர்கள் விலை உயர்வைத் தடுத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நலம் பெற்று வந்திருக்கிறார்கள்.

விலை உயர்ந்திருக்கிறது, அதனால் அபிவிருத்தித் திட்டத்தை நிறுத்த வேண்டுமென்று, கம்யூனிஸ்ட் கட்சிகூட அதைச் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதைச் சொல்லக்கூடியது இந்தக் கோடியிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் கட்சி. எப்போதோ ரூபாய்க்கு நாலு படி அரிசி விற்றதென்றால் அந்தக் காலம்தான் நல்ல காலம் என்று யாராவது சொல்வார்களானால், அவர்கள் இந்த யுகத்தில் இருப்பதற்குச் சரியல்ல என்பதைத் தான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் எடுத்துக்கொள்ளுங்கள். இருபது வருஷங்களுக்கு முன்னால் பஞ்சம் வராத வருஷத்தைப் பார்க்க முடியுமா? ஏன், பத்து வருஷங்களுக்கு முன்னாலே கூட நிலைமை எப்படியிருந்தது? (குறுக்கீடு) பஞ்சம் இல்லாமல் இருப்பதே பெரிய காரியம். ஆயிரக்கணக்கான மக்கள் மடிகின்ற சூழ்நிலை இப்பொழுது இல்லை. விலை அதிகமாகயிருந்தாலும், சாப்பிடுவதற்கு போதிய தான்யம் கிடைக்கிறது என்ற நிலை இருக்கிறது. தான்யம் அதிகமாகக் கிடைக்கிறது என்றால் அதைச் சாப்பிடாமல் அது தீர்ந்திருக்க முடியாது. விலை அதிகமாக இருந்தாலும் மக்கள் அதை வாங்கிச் சாப்பிடுவதால்தான், அதை வாங்கிச் சாப்பிடும் சக்தி இருப்பதால் தான் அதை வாங்கிச் சாப்பிட்டு அது தீர்ந்து போயிருக்கிறது. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், துணி விலை இவ்வளவு உயர்ந்திருக்கிறது, உணவுப்பொருள் உற்பத்தி பெருகியிருக்கிறது என்றெல்லாம். உற்பத்தி பெருகி அவை தீர்ந்திருக்கிறதென்றால், அதை மக்கள் வாங்கிச் சாப்பிடுவதால்தான் தீர்ந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. அதிலும் உணவுப் பொருள், துணி இவைகள் எல்லாம் வாங்கித்தான் தீர்ந்திருக்க வேண்டும். விலை உயர்ந்திருக்கிறது என்றால் மக்கள் வாங்கும் சக்தியும் அதிகரித்திருக்கிறது. அப்படியில்லாவிட்டால், யாரும் வாங்குவதில்லை என்றால் அந்தத் தொழிலே ஸ்தம்பித்துப் போயிருக்கும். இரண்டு மாதங்கள் அதை மக்கள் வாங்காது இருந்தால் அந்தத் தொழிலே ஸ்தம்பித்துப் போய் விடும். இந்தத் தொழில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதென்றால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை மக்கள் வாங்கிக்கொண்டேயிருக்கிறார்கள். அது எதைக்





காட்டுகிறதென்றால், மக்களுக்கு அவைகளை வாங்கக்கூடிய சக்தி இருந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. வாங்கும் சக்தி பெருகியிருக்கிறது, மக்களிடம். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைத்து அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நாங்கள் அமைத்திருக்கிறோம் என்று கூறும்போது எல்லாம் சரி என்று சொல்ல நான் தயாராயில்லை. ஆங்காங்கு மாற்றியமைக்கவேண்டிய அவசியம் இருக்கலாம். அதற்காக கல்யாணசுந்தரம் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு விவாதம் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆலோசனைக் கமிட்டி கூட்டப்படவேண்டுமென்றும், பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். அதையெல்லாம் செய்ய நான் தயாராயிருக்கிறேன். நமக்குள்ள வசதிகளை வைத்துக்கொண்டு அதன் மூலம் எந்தளவு நல்ல பலனைப் பெற முடியும் என்பதற்கான ஒரு திட்டத்தை வகுக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே, எதிர்க்கட்சி ஆளும் கட்சி என்பதில்லை. மக்களின் நன்மைக்காக நாம் நல்ல முறையில் திட்டங்கள் வகுத்து அவைகளை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் உற்பத்தி பெருக வேண்டும், அப்படி உற்பத்தி பெருகுவதன் மூலம் நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். இதுதான் இப் பொழுது நம் முன்னுள்ள பெரும் பிரச்னை. பிரிக்கக்கூடிய பிரச்னையல்ல. தனியார் துறை, பொதுத்துறை பிரச்னையல்ல. அடிப்படைப் பிரச்னை, உற்பத்திப் பெருக்குப் பிரச்னை, பொருள் உற்பத்திப் பெருக்குப் பிரச்னை. பட்ஜெட் பற்றி விவாதிக்கும் போது இச்சட்டசபைக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கயிருக் கிறது, அப்பொழுது அதற்கு உருவான திட்டங்களை எடுத்துச் சொன்னால், அவை ஏற்று நிறைவேற்றக்கூடிய திட்டங்களாக இருந்தால் அவற்றை நிறைவேற்றுவதற்கு இந்த சர்க்கார் என்றைக்கும் தயங்காது என்ற கருத்தை தெரிவித்துக்கொண்டு இவ்வளவு நேரம் அமைதியாக இருந்து, மத்தியில் கொஞ்சம் குறுக் கீடு இருந்தாலும்கூட, என் கருத்துக்களை கேட்டுக்கொண்டிருந்த தற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை . . . . . . . . . .

(சில அங்கத்தினர்கள் : "அங்கத்தினர்கள்" என்று சொல்லுங் கள்.) இங்குள்ள அங்கத்தினர்—தோழர்களை நான் கேட்டுக் கொள்வது இந்தக் கருத்துக்களை சிந்தித்துப் பார்த்து பட்ஜெட் விவாதத்தின்போது, இதில் ஏதாவது தவறு இருந்தால் அதை எடுத்துச் சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கிறது. நாங்களும் ஏதாவது தவறான கருத்துக்கள் கொண்டிருந்தால் அதைத் திருத் திக்கொள்ள நாங்கள் என்றைக்கும் தயங்க மாட்டோம், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களைப் போல் நாங்கள் பிடித்தது தான் பிடி என்பதுபோல் அல்லாது என்று சொல்லிக்கொண்டு அந்த முறையில் பட்ஜெட் விவாதம் நடக்கவேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[25th January 1961

**SRI K. ANBAZHAGAN :** கனம் சபாநாயகர் அவர்களே. . . . . .

MR. SPEAKER : Order, order.

**SRI K. ANBAZHAGAN :** முடிவில் எங்களை கேள்விகள் கேட்க அனுமதிப்பதாக . . . . .

**MR. SPEAKER :** இப்படிப் போய்க்கொண்டிருந்தால் எப்பொழுது முடிகிறது? விதிகளில் என்ன சொல்லியிருக்கிறது பாருங்கள்.

I sail now read rule 65 which states "When, for the purpose of elucidating a point during discussion, any member has occasion to ask a question of another member who is speaking, he may ask the question with the permission of the Speaker." Now, I am not granting this permission to the hon. Member. I shall now put the amendment moved by hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar to vote. The question is—

" *Add* at the end the following :

' but regrets to note that no mention has been made about the steps taken to bring down the high prices of foodstuffs and other essential articles '."

The amendment was put and declared lost.

A poll was demanded and the House divided thus :

*Ayes.*

1 Sri A. R. Marimuthu.
2 „ V. K. Ramaswamy Mudaliyar.
3 „ T. L. Sasivarna Thovar.
4 „ A. Govindasamy.
5 „ M. Kalyanasundaram.
6 „ M. P. Subramaniam.
7 „ K. Anbazhagan.
8 „ N. K. Palanisami.
9 „ K. R. Nallasivam.
10 Dr. (Srimathi) Sathiyavanimuthu.
11 Sri N. Marudachalam.
12 „ A. V. P. Asaithambi.
13 „ M. Anandan.
14 „ V. K. Kothanderaman.
15 Sri P. S. Ellappan.
16 „ M. Selvaraj.
17 „ M. P. Sarathi.
18 „ S. M. Annamalai.
19 „ P. U. Shanmugam.
20 „ K. Sattanatha Karayalar.
21 „ P. K. Mookiah Thovar.
22 „ A. V. P. Periavalaguruva Reddi.
23 „ A. Perumal.
24 „ S. Ramasami Thevar.
25 „ D. Subramania Rajkumar.
26 „ V. Subbiah.
27 „ S. R. Munusami.
28 „ P. S. Santhanam.

*Noes.*

1 Sri B. Bhaktavatsalu Naidu.
2 „ M. J. Jamal Moideen.
3 „ G. Annamalai Muthuraja.
4 „ P. Appavu.
5 „ K. S. Ardhanareeswara Gounder.
6 „ M. A. B. Arumughasami.
7 „ V. Arunachala Thevar.
8 „ A. E. Chandrasekhara Nayagar.
9 „ V. Chinniah.
10 „ S. Chinnakaruppa Thevar.
11 „ A. Chinnasami.
12 „ N. V. Chockalingam.
13 „ T. T. Daniel.
14 The Hon. Sri C. Subramaniam.
15 „ M. Bhaktavatsalam.
16 „ M. A. Manickavelu.
17 „ P. Kakkan.
18 Sri P. G. Karuthiruman.
19 „ D. Dasarathan.
20 „ A. S. Duraiswami Reddiar.
21 „ T. P. Elumalai.
22 „ G. Gomathisankara Dikshitar.
23 „ G. G. Gurumurthy.
24 „ K. S. G. Haja Sheriff.
25 „ P. Jayaraj.
26 „ T. M. Kaliannan.
27 „ R. Kandasami.



25th January 1961]

*Noes*—cont.

28 Sri T. Karia Gounder.
29 „ K. Karuthappa Gounder.
30 „ S. Khadar Sheriff.
31 „ S. Kolanda Gounder.
32 „ R. Krishnaswami Naidu.
33 „ P. Kuppuswami
34 „ S. Lakshmana Gounder.
35 „ B. K. Linga Gowder.
36 „ N. Mahalingam.
37 „ T. Manavalan.
38 „ P. G. Manickam.
39 „ K. Marappa Gounder.
40 The Hon. Sri V. Ramaiah.
41 Srimathi T. N. Anandanayaki.
42 „ Hemalatha Devi.
43 „ P. K. R. Lakshmikantam.
44 „ A. S. Ponnammal.
45 „ Rajathi Kunjithapatham.
46 Sri J. Matha Gowder.
47 „ M. Mayandi Nadar.
48 „ P. M. Munusami Gounder.
49 „ M. C. Muthukumaraswamy.
50 „ M. Muthuswamy Nayagar.
51 „ S. Nagaraja Monigar.
52 „ G. Narayanaswami Naidu.
53 „ K. P. Palaniswami.
54 „ K. Pandiyaraj.
55 „ M. P. Periasami.
56 „ K. Ponnian.
57 „ A. Raja Gounder.
58 „ P. Ramachandran.
59 „ M. Ramachandra Reddi.
60 „ S. Ramalinga Padayachi.
61 „ T. R. Ramamirtha Thondaman.
62 Sri A. Vedarathnam.
63 Srimathi A. Suares.
64 Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran.
65 Sri K. L. Ramaswami.
66 „ A. Rathnavel Gounder.
67 „ S. Sadasivam.
68 „ S. C. Sadayappa Mudaliar.
69 „ S. Samikannu Padayachi.
70 „ T. Sampath.
71 „ S. Sangili.
72 „ V. P. Sarangapani.
73 „ P. R. Sreenivasa Padayachi.
74 „ M. S. Selvarajan.
75 „ T. Sivagnanam Pillai.
76 „ M. K. Somasundaram.
77 „ R. Srinivasa Iyer.
78 „ T. K. Subbiah.
79 „ K. S. Subramania Gounder.
80 „ N. S. Sundararajan.
81 „ R. Swaminatha Merkondar.
82 „ T. S. Swaminatha Odayar.
83 „ S. Thangavelu.
84 „ M. D. Thiagaraja Pillai.
85 „ G. Vagheesam Pillai.
86 „ K. Vasudevan.
87 „ A. Chidambaranathan.
88 „ V. Vedayyan.
89 „ K. Vinayakam.
90 „ N. M. Velappan.
91 „ S. Ranganatha Mudaliar.
92 „ R. J. Sundar Singh.
93 „ K. R. Viswanathan.
94 „ G. Venkatachala Nattar.
95 „ M. William.
96 „ P. Vedamanickam.

*Neutral*—Nil.

*Ayes* : 28 ; *Noes* : 96 ; *Neutral* : Nil.

**The amendment was lost.**

The following amendments of Sri V. K. Ramaswamy Mudaliyar and Sri M. Kalyanasundaram respectively were ruled out of order :—

*Add* at the end the following :—

" and on such consideration the House regrets to note that no steps have been taken by this Government to impress on the Centre the urgent need to construct more railway lines in this State which are essential for the prosperity of this State."

*Add* at the end the following :—

" but regrets to point out that the allotment for the Third Plan for the State is far from adequate to meet the essential needs of the State, particularly with regard to Irrigation schemes, Industry and Agriculture."

All the other amendments were put and lost.

[25th January 1961

MR. SPEAKER : The question is—

'That an humble address be presented to the Governor as follows :—

"The Members of the Madras Legislative Assembly thank the Governor for the address delivered to the Members of the Legislature on 19th January 1961".'

The motion was put and carried.

## VI—MOTION UNDER RULE 244 OF THE ASSEMBLY RULES.

MR. SPEAKER : Now, we have got about one hour for discussion on the Second Supplementary Estimates of Expenditure for 1960-61. After the discussion we will take up the Demands for Grants for further Expenditure for 1960-61. According to rules of the Assembly I will apply the guillotine at 1 p.m., unless the Government move a motion that we sit till 1-30 p.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under rule 244 of the Rules, I move—

'That sub-rule (3) of rule 159 of the Assembly Rules be suspended in its application to the termination of the discussion on Demands for Grants and permission be granted to terminate the discussion at 1-30 p.m.'

The motion was put and carried.

## VII.—SECOND SUPPLEMENTARY ESTIMATES OF EXPENDITURE FOR 1960-61.

MR. SPEAKER : How much time does the Hon. Minister require for his reply?

THE HON. SRI C. SUBRAMANIAM : Ten minutes.

MR. SPEAKER : Each hon. Member will be allowed ten minutes.

**SRI M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அதிகப் படியான மான்யக் கோரிக்கை மீது சில விஷயங்கள் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அதில் முக்கியமானது அதிகப்படியாக கோரிக்கைகள் கேட்க வேண்டிய அவசியம் எதனால் வருகிறது என்றால் பெரும்பாலும் எல்லா இலாக்காக்களும் அவர்களுடைய தேவைகள் என்ன என்பதைப்பற்றிய விவரங்களை சரியாக சேர்க்கப் படுவதில்லை என்பதுதான். இதற்கு பல சான்றுகளை கொடுக்க முடியும். உதாரணமாக பிரிண்டிங் அண்ட் ஸ்டேஷனரி இலாகாவை எடுத்துக்கொண்டாலும் சரி, மற்ற ஜில்லாப் பிரிவுகளில் இருக்கின்ற இலாக்காக்களை எடுத்துக் கொண்டாலும் சரி, பஞ்சாயத் கௌன்ஸில்களிலும் பஞ்சாயத்களிலும் இருக்கின்ற சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுப்பதற்காக அதிகப்படியாக கோரிக்கை கேட்கப்படுகிறது. 1958-ல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1960 அக்டோபர் 2-ம் தேதி 75



25th January 1961] [Sri M. Kalyanasundaram]

பஞ்சாயத்துக்கள் இயங்க வேண்டும் என்கிற முடிவு 1960 ஜனவரியில் எடுக்கப்பட்டது. அப்போதே அதற்கான பாரங்கள் முதலியவை அச்சிடுவதற்காக 4 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னால் இப்போது 8 லட்சமாக வேண்டும் என்று கேட்கப்படுகிறது. இவ்வளவு பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிந்திருந்தும் ஏன் இவ்வளவு பாரங்கள் அச்சடிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை எதிர்பார்க்க முடியாதா. நாம் திட்டமிடுகின்றோம், ஒவ்வொரு இலாகாவிலும் இன்னின்ன வேலைகள் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இருந்தும் சரியாக கவனிப்பது இல்லை என்றால் இதில் கோஆர்டினேஷன் இல்லை என்றுதான் பொருள். ரூரல் டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்ட் ஒரு பக்கம் உத்தரவுகளை பிறப்பிக்கிறார்கள். அதை அறிந்து அதோடு சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் தங்களது தேவைகள் என்ன என்பதை சரியாக கணக்கிட்டு கொள்வதில்லை, அதை நன்றாகப் புரிந்து கொண்டு வேலை செய்வதில்லை என்பது அதிகப்படியான கோரிக்கை கேட்பதிலிருந்து தெரியவருகிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதைத் தவிர்க்க முயற்சியெடுக்கவேண்டும். இப்போது பல ஜில்லாக்களில் இருக்கக்கூடிய புகார்கள் என்னவென்றால், புதிதாக ஏற்பட்டுள்ள பஞ்சாயத்துக்களில் ரசீதுப் புத்தகங்கள் கிடையாது. அவர்கள் வரி வசூலிப்பதற்கு நோட்டீஸ் முதலியவை கொடுக்க வேண்டிய பாரங்கள் கிடையாது. மினிட்ஸ் புத்தகங்கள் கிடையாது. மூன்று-நான்கு மாதங்களாகியும் இன்னும் பஞ்சாயத்துக்கள் இயங்க முடியவில்லை. புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்ததைத் தவிர, வேறு எந்த வேலையையும் செய்ய முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தமாதிரி பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன என்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பாரங்களையும், புத்தகங்களையும் அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். பல பஞ்சாயத்துக்களுக்கு 'கிராம நலம்' அனுப்புவதற்குக்கூட கஷ்டம் இருக்கிறது. ரூரல் டெவலப்மெண்ட் இலாகா மான்யமாகக் கொடுத்தாவது, அவர்கள் சந்தா செலுத்தினாலும், சந்தா செலுத்தா விட்டாலும் இந்த ஆண்டு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அடுத்த ஆண்டில் அவர்கள் சந்தா செலுத்துவார்கள்—மறுக்க மாட்டார்கள். இன்றைக்கு பல பஞ்சாயத்துக்களின் விலாசமே கூட தெரியவில்லை. ஆகவே இந்த விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வருஷத்தின் சந்தாவை மானியமாகக் கொடுத்தாவது 'கிராம நலம்' பத்திரிகையை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 12-00 noon.

இது போன்று பல உதாரணங்களைச் சொல்ல முடியும். சேலம் உருக்கு ஆலையைப் பொறுத்த வரையில் ஆரம்ப நடவடிக்கையாக ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அதற்காக தொகை அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். இது வரவேற்கக்கூடியது. சிறிது நேரத்திற்கு முன்பு கனம் அமைச்சர்

அவர்கள் பேசிய விஷயத்திலிருந்து பார்க்கும்போது--எதிர் கட்சிகளை பேச்சு வன்மையினால் மடக்கவேண்டுமென்று சொல்லுவதானால் சொல்லட்டும், அதைப் பொருட்படுத்தத் தேவையில்லை—ஆனால், உண்மையைச் சொல்லவேண்டும். சேலம் இரும்பு தயாரிப்பதிலே விலை அதிகமாக ஆகிவிட்டால் இந்தத் திட்டத்தையே கைவிட வேண்டியதாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதிகரிக்கும் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா? ஏன் கற்பனை செய்துகொண்டு பேசவேண்டும்? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2 கோடி டன் அளவுக்கு உருக்கு தேவையாக இருக்கிறது. இன்றைக்கு எவ்வளவு முயற்சி செய்தாலும் 5 லட்சம் டன் தான் உற்பத்தியாகியிருக்கிறது. இரண்டு கோடிக்கு, 5 லட்சம் தான் உற்பத்தியாகிறது என்று சொன்னால் அகில இந்தியாவிற்கும் சராசரி விலையை நிர்ணயிக்கும் காலத்தில், சராசரி விலை பெருமளவு உயர்ந்துவிடும் என்று ஊகிக்க இடமில்லை. நிலக்கரியை ஏன் இப்போதே எடுக்கவில்லை என்பதற்குக் காரணங்களைச் சொன்னார்கள். நிலக்கரியை இப்போதே எடுத்து அதனால் எங்கும் வெள்ளக்காடாக ஆக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இன்று சீக்கிரமாக நிலக்கரி எடுக்காததற்கு முக்கியமான காரணம் பிரிக்கெட்டிங் பிளாண்ட் அமைக்காதது என்று குறிப்பிட்டிருந்தேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. பிரிக்கெட்டிங் பிளாண்ட் அமைப்பதற்கான மெஷினரிகளை வாங்குவதில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஏன் தாமதம் ஏற்படுகின்றது? . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: இதிலே மூன்று திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று மின்சார உற்பத்தித் திட்டம். இரண்டாவது உர உற்பத்தி. மூன்றாவது பிரிக்கெட்டிங். இந்தத் திட்டங்களில் எது வந்தாலும் மைனிங் ஆரம்பிக்கலாம். முதலில் ஏற்படவேண்டியது தெர்மல் பவர் பிளாண்ட். அது எப்போது வருகின்றதோ அப்போது நிலக்கரி வெட்டியெடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதில் தவக்கம் ஏற்படாது.

SRI M. KALYANASUNDARAM: பிறகு, மூன்றாவது திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை போதாது என்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் நம்முடைய ராஜ்யத்தின் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிக் கூறுகின்றபோது ஒரு விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எந்த அளவு சுபீட்சம் பெருகியிருக்கிறது, எந்த அளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் எவ்வளவு புள்ளிவிவரம் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு நானும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்—அதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். விலைவாசி ஏறுவது கவலைக்குரிய விஷயம் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் செயலில் வரும்போது அதற்கு எதிராக ஓட்டளித்தார்கள். பேசும்போது நல்ல முறையில் பேசிவிட்டு நடைமுறையில் வேறுவிதமாக நடந்து





கொள்ளுகிறார்கள் என்பது இப்போதே, சிறிது நேரத்திற்கு முன்பே நடந்தது. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக நான் தனியார் துறையில் தொழில்கள் வருவதைப்பற்றி தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அரசாங்கத்தில் ஏன் முடியவில்லை என்றுதான் கேட்டேன். அவர்கள் கடன் வசதி பெறுவது போன்று கடன் வசதி பெற்றுவது பொதுத் துறையில் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னேனே தவிர, அரசாங்கத்தினால் முடியவில்லையென்றால் தொழிலே வரவேண்டாமென்று சொன்ன கருத்து அல்ல. தனியார் துறையில் ஒரு தொழில் வந்தால், தற்சமயத்தில் சிறிதளவு முன்னேற்றம் இருப்பதாகத் தோன்றினாலும், பிற்பாடு அது பிரதிகூலமாகவே இருக்கும்.

இப்போது வாங்கும் சக்தி அதிகரித்திருந்தும், எல்லாப் பொருள்களின் உற்பத்தியும் பெருகியிருந்தும், பொருள்கள் மக்களுடைய உபயோகத்திற்கு வராமல் சேமித்து வைக்கப்படுவதால்தான் அதிக விலை விற்கின்றது. அதைத் தடுக்காமல் எந்த நாடும் விலைவாசி ஏற்றத்தைக் குறைத்ததில்லை. அதைப்பற்றிச் சொல்லாமல், மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது, அதனால்தான் விலைவாசிகள் ஏறுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரிசி அதிகமாக இருக்கிறது, ஆனால் மக்கள் சாப்பிட முடியவில்லை. துணி அதிகமாக உற்பத்தியாகியிருக்கின்றது, ஆனால் மக்கள் வாங்குவதற்குக் கிடைக்கவில்லை. இந்தக் கோளாறைத் தீர்க்கவேண்டுமென்றுதான் நான் குறிப்பிட்டேன். அதற்காகத்தான் இந்தக் கருத்தை மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். இதையெல்லாம் எடுத்துச் சொல்லி டில்லி சர்க்காருடைய கொள்கையை மாற்றியாக வேண்டும். சோஷலிஸத்தை அமைப்பது என்று கொள்கை அளவிலே வைத்து, பார்லிமெண்டிலே தீர்மானம் நிறைவேற்றி, பார்லிமெண்டும் ஒப்புக்கொண்டு, நடைமுறையில் தனியார் கை ஓங்கி நிற்கின்ற சோஷலிஸம்தான் நாம் காண்பது. அந்த முறையில் டில்லியில் இருக்கக்கூடிய நிதி இலாகா எல்லா ராஜ்யங்களின் நன்மையை கவனிக்காது, பிளானிங் கமிஷனுக்கு மேல் ஒரு சூபர் பிளானிங் கமிஷனை உட்கார்ந்து பல காரியங்களைச் செய்துவருகின்றது. இதைப்பற்றி பரிசிலனை செய்யவேண்டுமென்று இங்குள்ள அமைச்சர்கள் வாதாடி நல்ல கொள்கையாக வகுத்து, விலைவாசி ஏறுவதைப்பற்றி நான் கூடக் கவலைப்படுகிறேன் என்று சொல்லக்கூடிய கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தால் அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்பற்றிப் பேசுவதற்காக டில்லியில் அமைச்சர் அவர்கள் உட்காருவதற்கு ஏர்-கண்டிஷன்ட் ரூம் வேண்டுமென்று கேட்டால் கூட அதற்குக் கூட நிதி ஒதுக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

டில்லியில் ரெஸ்ட் ஹவுஸ் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதையும் நான் பார்த்தேன். அதற்காக இப்போது ரூ. 56,000 ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒன்றே முக்கால் ஏக்கர் நிலத்தை சொந்தமாகக் கூட வாங்கவில்லை, நில வாடகை கேட்கிறார்கள். அதற்குமேல் நம் ராஜ்ய சர்க்கார் கட்டிடம் கட்டவேண்டும். ஒன்றேமுக்கால் ஏக்கருக்கு ரூ. 1,56,000 நில வாடகை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது டில்லி ரேட்டுக்குச் சர்வ சாதாரணமாக இருக்கலாம். நம்முடைய மத்திய சர்க்கார் நம்முடைய ராஜ்ய சர்க்காருக்குக் கொடுக்கும் நிலத்திற்கு வாடகை வசூலிக்க வேண்டிய அவசியம் என்ன? (குறுக்கீடு.)

"They also suggested that the State Government might if they so desired compound the ground rent by paying in all Rs. 1,56,000 per acre as premium in advance."

இதைக்கொடுத்துவிட்டு பிறகு நாமினல் க்ரௌண்ட் ரெண்டாக ஒரு ரூபாய் வசூலிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் இருக்கக் கூடியதைத்தான் சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: விலைக்கு வாங்கினாலும் க்ரௌண்ட் ரெண்ட் எப்போதும் கொடுக்க வேண்டியதுதான். மத்திய சர்க்காருடைய பூமி இங்கு இருந்தாலும் அவர்கள் நமக்கு க்ரௌண்ட் ரெண்ட் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அப்படி ஆண்டுதோறும் கொடுக்காமலிருப்பதற்காகத்தான் இம்மாதிரி செய்வது.

SRI M. KALYANASUNDARAM: கிரயம் என்று வைத்துக் கொண்டாலும் ஒரு ஏக்கருக்கு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருடைய தேவைக்காக ஒதுக்கும் நேரத்தில் ரூ. 1,56,000 அளவுக்கு வசூல் செய்வது முறையல்ல என்று தெரியப்படுத்த வேண்டும். நாம் அதற்கு மேல் கட்டிடம் கட்டவேண்டும். அதற்கு ஐந்து, ஆறு லட்சம் ரூபாய் தேவைப்படும். அவசியம் இருக்கிறது என்றால் கட்டட்டும். கட்டுவதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. நம்முடைய அமைச்சர்களும், அதிகாரிகளும் வேலையாக டில்லிக்குச் செல்லும்போது இருப்பதற்கு இடத்திற்குக் கஷ்டப்படாமல் இருந்து வேலைகளைச் செய்துவிட்டு வரவேண்டும். ஆனால் அதிகச் செலவு ஏற்படாமல் செலவைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதான் சொல்லுகிறேன். இதிலே மத்திய சர்க்காருக்குப் பொறுப்பு இல்லையா? மத்திய சர்க்காருடைய வேலையாகவும், மாநில சர்க்காருடைய வேலையாகவும்தான் டில்லிக்குச் செல்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தின் தேவை மட்டுமல்லாமல் மத்திய சர்க்காரின் தேவையாகவும்தான் செல்லுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய இடவசதிகளைச் செய்து கொடுப்பதில் மத்திய சர்க்காருக்கு பொறுப்பு உண்டு.

எதற்கு இவ்வளவு கிராக்கியாக, அதிகமாக விலை கொடுக்க வேண்டுமென்ற காரணம்தான் என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதர தேசத்தாராக இருந்தால் பரவாயில்லை, [illegible]



வெளிநாட்டு தூதுவராலயத்திற்கு ஒதுக்கக்கூடிய முறையில் இருந்தாலும் ஆட்சேபணை தெரிவிப்பதற்கில்லை. நம்முடைய தேசத்திலேயே, மத்திய சர்க்கார், ஒரு ராஜ்ய சர்க்காருக்கு நிலம் கொடுப்பதற்கு இவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டுமா? இதைக்குறித்து நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைத் தெரிவிக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

என்னுடைய நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் அதுதான் உண்மை என்று கூறுகிறார்கள். அதுவே அவருடைய கருத்தாக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் இந்த தேசம் பூராவையும் ஒன்றாக நினைக்கக் கூடியவன். இமயமலை வரை என்னுடைய தேசம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் பல இடங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறது. இன்னும் பல இடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் வரப்போகின்றன. இவைகளிலே ஊழியம் செய்யக்கூடிய கிராம மணியக்காரர், கிராம கர்ணம், கிராம தலையாரி ஆகியவர்களுக்கு அவர்கள் அதிலே வேலை செய்வதற்காக ஒரு புதிய சம்பளம் சேர்க்கப்பட்டிருக்கிறது. முழு நேர வேலை செய்தால், கிராம கர்ணத்திற்கு ரூ. 3 கொடுப்பதாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமீபத்திலே சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு பிரகாரம், பொதுவாக கிராம மணியங்கள் எல்லாம் நிரந்தரமாக, பரம்பரை பாத்தியதையுடன் வேலையில் இருக்க முடியாது என்று தெரிகிறது. ஆகவே இவர்களுக்கு இப்போது ஓரளவுக்கு பணம் கொடுக்க உத்தேசித்திருப்பது மிகவும் குறைவு என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்று சொன்னால், பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய பகுதிகளிலும், பஞ்சாயத்து ஆரம்பிக்கப்பட்ட பகுதிகளிலுமாகச் சேர்ந்து நிச்சயமாக வேலை நிறைய இருக்குமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த வேலைகளையெல்லாம் அவர்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு மாதம் 50 ரூபாய்க்கு குறையாது சம்பளம் இருந்தால் தான் வசதியாக இருக்கும். குறிப்பாகச் சொல்லப் போனால், தலையாரிகளுக்கு மிக அதிக வேலை. ஒரு கிராமத்திற்கு இரண்டு அல்லது மூன்று பேர்கள்தான் இருப்பார்கள். ஆனால் அங்கு சுமார் 3,000, 4,000 ஏக்கர்கள் ரெவின்யூ நிலங்கள் இருக்கும். அவைகளுக்கெல்லாம் சுற்றி தீர்வை வசூலிக்கக்கூடிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. ஆகவே அவர்களுக்கு ரூ. 3 என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் குறைவு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கர்ணத்திற்கு எந்த அளவு கொடுக்கப்பட இருக்கிறதோ, அந்த அளவு தலையாரிகளுக்கும் நிச்சயமாக சம்பளத்தைக் கொடுக்கவேண்டும். ஆறு மாத அனுபவத்தை வைத்துக்

[Sri K. R. Nallasivam] [25th January 1961

கொண்டு இவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தினால் வசதியாக இருக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல் ஒரே தலையாரியை வைத்துக்கொண்டு இரண்டு வேலைகளையும் செய்ய வேண்டுமென்று சொன்னால், இரண்டு வேலைகளும் ஒழுங்காக நடக்காது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அவர்கள் முன்பு செய்ததைவிட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக வேலைகளைச் செய்து வருகின்றனர். ஆகவே இவர்களைப் பொறுத்தமட்டில் ரூ. 15, 7, 3 என்ற தொகைக்குப் பதிலாக ரூ. 50-க்குக் குறையாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while supporting this Supplementary Demand I would like to place some facts for the consideration of Government. It is gratifying to note that our Government have completed almost all the schemes included in the Second Five-Year Plan and they have completed the programme of investigation of all the schemes which are likely to be included in the Third Plan. We are very glad to find out that our Government, under the Supplementary Demand, are asking for a sum of Rs. 6·8 crores out of which they want Rs. 30 lakhs for purchasing about 123 vehicles for the Madras Branch and 34 vehicles for the Kanyakumari Branch. I must say that the State Transport unit at Kanyakumari is really working satisfactorily and it has evoked the appreciation of all the people in that district. The Express buses that are now plying from Nagercoil to Trivandrum and from Nagercoil to Tuticorin have proved to be a source of considerable income to the State Transport unit there. I will request the Government to consider the question of running Express buses from Nagercoil to Tanjore and from Nagercoil up to Madras. While speaking about this Demand I would also like to bring to the notice of Government that the conductors working in the Transport Unit there are almost under-graduates and they are always pressing that their scales of pay should be upgraded to that of the lower division clerks in other departments of Government. We also find that Government are spending several lakhs of rupees for the 75 panchayat unions that have come into existence. A sum of Rs. 40 lakhs has been asked for the same and another Rs. 21 lakhs for construction of buildings to house the offices of panchayat unions.

At this juncture I want to tell that though the Government have revised the scales of pay of karnams and others, they have failed to grant the demand of the Panchayat Executive Officers working in the transferred territory. There the scale of pay of the Panchayat Executive Officer is comparatively lower than their companions working in similar panchayats in the rest of Madras State. I would request Government that their scales of pay should be made on a par with the Panchayat Executive Officers working in other parts of the State.



25th January 1961] [Sri T. T. Daniel]

Under 'Harijan Welfare' a sum of Rs. 10 lakhs has been asked for for payment of scholarships to the poor Harijan students. The Harijan students are now compelled to pay examination fees for the School Final Examination and after paying their examination fee, the fee that they remit is refunded later to them. Since they are unable to pay the examination fee, many Harijan students are not in a position to sit for the examination. I would, thertfore, suggest to Government that instead of asking the Harijan students to remit the examination fee and refunding the same to them later, it would be proper if an order is passed by Government stating that Harijan students need not pay the examination fee for the School Final Examination.

A sum of Rs. 12 lakhs is also asked for for increased admisssions to medical colleges and for implementation of the National Malaria Eradication Scheme. There was a proposal to set up an anti-malarial unit at Nagercoil in Kanyakumari district under the Second Plan. That has not been attended to so far. I would request Government to review that matter and set up an anti-filarial unit for the transferred territory as it has been reported that filaria is in vogue in that district.

Coming to hydro-electric schemes I would like to say that at present a division is working to find out the possibility of constructing a Hydro-electric power station at Pechippara Dam and we find that a preliminary report has been submitted to Government to the effect that 33,000 K.W. of power would be available from Pechippara Dam. While considering proposals with regard to inclusion of hydro-electric schemes under the Third Plan I would suggest to Government to allot a certain amount under the Third Plan for construction of a hydro-electric power station at Pechippara.

Regarding the revision of the scales of pay of the teachers working in Government Schools, orders have been passed. Regarding the teachers working in private managements in the district of Kanyakumari and also with regard to teachers in the Aided Schools, Government have not so far passed orders relating to the revision of scales of pay. I would request the Government to pass early orders on this. Further, the Government have revised the scales of pay of the teachers working in Government schools in the transferred territory. I would request the Government to adopt the same for the teachers working in the Aided Management Schools in that area also.

The Government have already passed orders in G.O. No. 710 standing that all the Middle School Assistants working in Kanyakumari district are on a par with the failed or passed S.S.L.C. with one year training of the Madras State Service. Subsequently, I understand that the Government have also passed order, which is contrary to the previous orders that they have passed.

I would request the Government that in revising the scales of pay of teachers working in aided management schools in the transferred teritory, they should keep in mind G.O. No. 710 and it should be followed.

I also desire to say that with regard to Tamil document writers, the Govtrnment are refusing to give licences to new Tamil document writers. Now licences are given to the document writers in Malayalam alone. As the various regions in the district will be using Tamil, I say that this right should not be denied. Therefore, I would request the Government, in the future interests of the district, to revise their orders and grant licences to new Tamil document writers who are efficient in Tamil and who can write documents in Tamil.

SRI M. P. SUBRAMANIAM: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இரண்டாவது உபமான்யக் கோரிக்கையில் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த உபமான்யம் கோரிய அறிக்கையில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அமைவதைப் பற்றி வெகுவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தான் இவைகள் புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், ஆரம்பித்து 2, 3 மாதங்களுக்கு உள்ளாகவே சில உண்மைகளை பரிசீலிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இதைப்பற்றி கூட சில தினங்களுக்கு முன்பு எல்லா ஜில்லா கலெக்டர்களும் கூடி விவாதித்து அதில் கண்ட அநுபவத்தையும்பற்றி ஆலோசித்து மேலும் அந்த வேலைகளை நல்ல முறையில் செய்வதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தார்கள். அதைப்பற்றி பின்னாலே இந்தச் சபைக்கு தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது புதியதாக பஞ்சாயத்து யூனியன்கள் இயங்குவதற்கு பல குழுக்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் என்ன அதிகாரம் இருக்கிறது என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் இந்த பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. உதாரணமாக 'ஜெனரல் பர்பஸஸ் கமிட்டி' என்ற ஒரு குழுவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு என்ன அதிகாரம் இருக்கிறது, அதற்குரிய வேலைகள் என்ன என்பதைப்பற்றி இன்னும் அவர்கள் தெரிந்துகொள்ள முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று என்னவென்றால், இப்பொழுது 'ரூல் மேகிங் பவர்' என்ற அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன் சட்டத்தை அமலாக்குவதற்காக ஏற்பட்ட விதிகளையெல்லாம் நாம் அணுகிப் பார்ப்போமானால், அதிகாரம் முழுவதும், பெரும்பாலான அதிகாரம் கமிஷனருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்களுக்கு அதிலே எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக அவர் ஒரு 'பிகர்ஹெட்' மந்திரி இருக்கிறாரே தவிர, அதிகாரங்களெல்லாம் பி.டி.ஓ. என்று சொல்லப்



படுகிற கமிஷனரிடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படுத்திய அடிப்படை நோக்கத்திற்கு நேர் முரணாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரமும் பரவலாக இருக்க வேண்டும், கீழ்த்தளத்திலுள்ள பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்து ஒரு புரட்சிகரமான சமுதாயத்தை உண்டாக்கவேண்டும். பஞ்சாயத்து தலைவர்களுக்கு நாம் பயப்படாமல் அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று பிரதம மந்திரி நேரு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்து தலைவர்கள் அனுபவம் இல்லாதவர்கள், திறமை இல்லாதவர்கள், அவர்களிடத்தில் அதிகாரத்தை ஒப்படைத்தால் என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று பயப்படாமல் அவர்களுக்கு அதிகமான அதிகாரத்தை அளிக்கவேண்டும். ஏதாவது தவறு ஏற்பட்டால் அதை திருத்திக் கொள்ளுவதற்கு நம்மால் முடியும், அவர்களுக்கு தாராளமாக அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விதிகள் சட்ட சபையின் பரிசிலனைக்கு வரும்பொழுது அதற்கு திருத்தங்கள் கொடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

மற்றொன்று நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் 'அபாயிண்டுமெண்டு கமிட்டி.' என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்பட்ட பிறகு அதில் 4, 5 வேலைகள் காலியாக இருந்தாலும், அவைகளையெல்லாம் ஜில்லா போர்டே பார்த்து 'அபாயிண்டு' செய்து அனுப்பிவிடுகிறார்கள். இதனால் 'அபாயிண்டுமெண்ட் கமிட்டிக்கு' எந்த விதமான வேலையும் இல்லாமல் போய்விடுகிறது. இந்த 'அபாயிண்டுமெண்டுகளெல்லாம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களே செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளின் சம்பள உயர்வைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். புதியதாக அவர்களுக்கு கிடைக்க இருக்கும் பொறுப்புடன் ரூ. 2 முதல் ரூ. 10 வரையிலே கிராம தலையாரி, கிராம கர்ணம் முதலியவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் சேலத்தில் கிராம அதிகாரிகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுவதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்று நினைக்கிறேன். அவர்களை பஞ்சாயத்துக்கள் விரும்பினால் காரியதரிசிகளாக அமர்த்திக்கொள்ளலாம் என்று இருப்பதுபோல, அவர்களும் தாங்கள் அம்மாதிரி சேவை செய்வதற்கு விரும்பினால் தான் அதை ஒப்புக்கொள்ள வேண்டும், அதை ஒப்புக் கொள்ளுவதற்கு தங்களுக்கு 'ஆப்ஷன்' கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது நியாயம் தான் என்று எனக்குத் தோன்றுகிறது. அதையும் கூட அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri M. P. Subramaniam] [25th January 1961

அடுத்தபடியாக, ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டில் இப்
பொழுது ஸ்காலர்ஷிப் கொடுப்பது ஜில்லா கலெக்டர் அலுவலகத்
திற்கே மாற்றப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் வெல்பேர்
ஆபீஸர் அலுவலகத்திலேயே இந்த ஸ்காலர்ஷிப் தொகையை
கொடுக்கும் முறை இந்த ஆண்டிலிருந்து ஏற்பட்டிருக்
கிறது. ஆனல் இதில் கண்ட அனுபவம் என்ன
வென்ருல், பல மாணவர்களுக்கு இன்னும் முதல்
இன்ஸ்டால்மெண்டு ஸ்காலர்ஷிப் கூட கொடுக்கப்படவில்லை
என்பதை உண்மையிலேயே நான் மிகவும் வருத்தத்துடன் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். இந்த ஸ்காலர்ஷிப் உதவியானது
காலம் தாழ்த்தப்படாமல் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட
வேண்டும். அதிலும் குறிப்பாக 'ரென்யூவல் ஸ்காலர்ஷிப்'
கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கு எந்த விதமான காரண
மும் இருப்பதாகத் தெரியவில்லை. இது உடனடியாகச் செய்ய
வேண்டிய பொறுப்பு. பட்ஜெட்டில் இதற்காக வேண்டிய
பணம் ஒதுக்கப்பட்டிருந்தும், மாணவர்களுக்கு 'ரென்யூவல்
ஸ்காலர்ஷிப்' கூட காலம் தாழ்த்தப்பட்டு கொடுத்தால்,
அதுவும் 8, 9 மாதங்கள் ஆன பிறகு கொடுத்தால்,
அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டி
லும் இந்த ஸ்காலர்ஷிப் பிரச்னை பெரிய பிரச்னையாகி
விட்டது. ஏழை மாணவர்கள் 8 மாத காலமாகியும் ஸ்காலர்ஷிப்
வராததால் சமாளிப்பது கஷ்டமாக இருக்கிறது. அதுவும்
உணவு விடுதியில் இருப்பவர்கள் சம்பளம் கட்டவேண்டும் என்று
நிர்ப்பந்தம் செய்யப்படும்பொழுது அவர்கள் நிலைமை மிகவும்
கஷ்டமாக இருக்கிறது. பணத்தைக் கொடுத்தாலும் அதை உரிய
காலத்தில் கொடுக்கவேண்டும். உண்மையிலேயே எப்பொழுதும்
குறை கூறுவதுபோல் இதைக் கருதாமல், அடுத்த ஆண்டிலாவது
இதைக் கட்டாயம் நிவர்த்தி செய்யவேண்டும்.

மற்ருெரு யோசனையையும் குறிப்பிட விரும்புகிறேன். ஜில்லா
கலெக்டர் அலுவலகங்களுக்கு மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்
கொடுக்கும் முறை மாற்றப்பட்டாலும் அது அனுபவசாத்தியமாக
இருக்கிறதா என்பதை உணரவேண்டும். 'எங்களுக்கு போதிய
ஸ்டாப்' ( Staff ) கொடுக்கவில்லை, எங்களுக்கு எத்தனையோ
வேலைகள் இருக்கின்றன, ஆயிரக்கணக்கான பாரங்களை பரிசீலனை
செய்து பார்ப்பதற்கு நேரம் இல்லை, அதனுல்தான் பல மாதங்
கள் தாமதமாகிறது, அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்'
என்று சொல்லுகிருர்கள். உரிய காலத்தில் அவர்களுக்கு
வேண்டிய 'ஸ்டாப்' கொடுக்கவேண்டும். அதுவும் செய்யப்பட
வில்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் குறிப்பிட
விரும்புகிறேன்.

இறுதியாக, சமீபத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக
சென்னை நகரத்திலுள்ள பாதைகள் மிகவும் மோசமான
நிலைமையை அடைந்துவிட்டன. அதற்காக கார்ப்பரேஷனுக்கு
அரசாங்கம் ரூ. 30 லட்சம்,—ரூ. 15 லட்சம் கடனுகவும், ரூ. 15 லட்சம்



25th January 1961] [Sri M. P. Subramaniam]

உதவியாகவும்—கொடுத்திருக்கிருர்கள். பாதைகள் இம்மாதிரி
மோசமான நிலையில் இருப்பது பற்றி பெருங் குறையாக சட்ட
சபையிலும் வெளியிலும் பேசப்படுவது ஒரு பெரிய அவமானகர
மான காரியம்தான். தமிழகத்தின் தலைநகரமாக விளங்கக்கூடிய
சென்னை நகரத்தில் சாலைகளின் நிலைமை நன்ருக இருக்கவேண்டும்
என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உண்மையில்
இதைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறப்பட்டிருந்த
போதிலும், அதற்கு வேண்டிய பரிகாரம் இதுவரையில் செய்யப்
படவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாதை
கள் மோசமாக இருப்பதற்கு கார்ப்பரேஷன் சொல்லும் காரணம்,
அவர்களுக்கு போதிய அளவு மான்யம் இதுவரையில் கொடுத்து
வந்ததுபோல் கொடுக்காதது தான் என்ற குற்றச்சாட்டு கூறப்
படுகிறது. உதாரணமாக 1939-ம் வருஷம் வரையில் இங்குள்ள
வண்டி வாகனுதிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் கார்ப்பரேஷ
னிடம் இருந்தது. அந்த அதிகாரத்தை அரசாங்கம் பிறகு மேற்
கொண்டு விட்டது. அந்தக் காலத்தில் அதற்காக கார்ப்பரேஷ
னுக்கு ரூ. 2.25 லட்சம் 'காம்பல்ஸேஷனுக'' கொடுப்பதற்கு ஒப்புக்
கொண்டிருந்தார்கள். வண்டி வாகனுதிகளுக்கு விதிக்கப்பட்ட
வரியின் மூலம் கிடைத்த வருமானத்திற்கு ஈடாக அந்தத் தொகை
கொடுக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தப் பற்றி
மறுபடியும் பரிசீலனை செய்து அதற்குத் தகுந்த உதவி வழங்கப்
படும் என்ற ஏற்பாடு ஆகியிருந்தது. அப்பொழுது இந்த வரியின்
மூலம் கார்பரேஷனுக்கு ரூ. 2½ லட்சம் தான் வருமானம் வந்து
கொண்டிருந்தது. அரசாங்கத்திற்கும் அவ்வளவு வருமானம்
தான் வந்து கொண்டிருந்தது. ஆனல் இப்பொழுது அவர்கள்
சொல்லிய கணக்கைப் பார்த்தால், வண்டி வாகனுதிகள் மூலம் 35 12.30
லட்சம் ரூபாய் வருவாய் வருகிறது. இப்படி வருவாய் அதிகரித் p.m.
திருக்கும்பொழுது, 1930-லிருந்து 1960 வரையில், அதாவது 30
ஆண்டுகளாக, இரண்டே கால் லட்சம் ரூபாய் நஷ்ட ஈடாகக்
கொடுத்து வந்து பாதைகள் சரியாகப் பராமரிக்கப்
படவில்லை என்று கேட்கிருர்கள். எப்படி அவைகளைச்
சீர்திருத்த முடியுமென்று கட்சிப் பாகுபாடு இல்லாமல்
சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுது பாதைகள்
பல மடங்கு பெருகியிருக்கின்றன. அதே சமயத்தில்
வருவாயும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆனல்
அதற்கேற்றபடி சர்க்கார் கொடுக்கும் பங்கு அதிகரிக்கப்படவில்லை.
மேலும், கார்பரேஷனுடைய வண்டி, வாகனுதிகளுக்காக, அவர்கள்
மட்டுமே அரசாங்கத்துக்கு வரியாக ரூபாய் 2½ லட்சம் கொடுக்
கிருர்கள். ஆனல் அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈடாக 2¼
லட்சம் ரூபாய்தான் கிடைக்கிறது. நிலைமை இப்படியிருக்கும்
பொழுது பாதைகளை நல்ல முறையில் வைத்துக்கொள்ளவில்லை
என்று எப்படிச் சொல்லமுடியுமென்று கேட்கிறேன்.

1947-ல் ஆண்டு ஒன்றுக்கு 30 லட்சத்திலிருந்து 40 லட்சம் வரை
கொடுப்பது என்று முடிவு செய்து, 1954 வரையிலே இந்த
முறையைக் கையாண்டு வந்திருக்கிருர்கள். அதனுலே பாதைகள்

நல்ல முறையில் வைக்கப்பட்டிருந்தன. 1954-லிருந்து இந்த முறை நிறுத்திவிடப் பட்டதினால், உண்மையிலேயே பாதைகளை எப்படி நல்ல முறையில் பராமரிக்க முடியும்? தலைநகரிலே இருக்கிற பாதைகளில் எல்லோருக்கும் பொறுப்பு இருப்பதினாலே, கார்ப்பொரேஷனுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டை அதிகரிக்கவேண்டும். தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக பாதைகள் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. அவைகளை சீர் படுத்துவதற்கான நவீன சாதனங்களும், போதுமான பணமும் கார்ப்பொரேஷனிடம் இல்லாததினால் துரிதமாக வேலைகள் செய்யப் படவில்லை. ஆகவே கார்ப்பொரேஷனுக்கு கூடுமான அளவு நஷ்ட ஈட்டைக் கொடுப்பார்களேயானால், பாதைகளை நல்ல முறை யிலே நிர்வகிக்க முடியுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI N. MARUDACHALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக்கையின்மீது சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கோவை நகரிலே குடி தண்ணீர் சம்பந்தப்பட்ட வரையில் பெரும் கஷ்டம் இருக்கிறது என்று பல எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இந்த சட்ட மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு சிறுவாணி அணைக்கட்டைக் கட்டி, அங்கிருந்து தண்ணீர் கொண்டுவந்தால் நகர மக்களின் குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு அங்கேயுள்ள ஜனத்தொகை 1 லட்சமாக இருந்தது. இப்பொழுது 3 லட்சம் மக்கள் அதிகப்படியாக இருக் கிறார்கள். கோவை நகரம் விரிவு அடைந்துகொண்டு வருகிறது. குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரில் மத்திய சிறைச்சாலை இருக்கிறது. அங்கே இருக்கிற கைதிகளுக்கு குடி தண்ணீர் வசதி கிடையாது. குளிக் கவும் தண்ணீர் வசதி கிடையாது. அந்தச் சிறைச்சாலை சூப்பிரண்டெண்டும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். சுற்றுப்புறம் இருக்கும் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே நமது சர்க்கார், கேரள சர்க் காரோடு சுமுகமான முறையிலே பேச்சு வார்த்தைகள் நடத்தி, இந்தக் குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில கிராமங்களிலே குடி தண்ணீருக்காக டாங்குகள் கட்டப்படுகின்றன. மின்சார மோட் டார் வைக்காமல் தேங்கிக் கிடக்கின்றன. கலெக்டரிடமும், மற்ற அதிகாரிகளிடமும் தெரியப்படுத்தியும் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. சிறுவாணித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRIMATHI T. N. ANANTHANAYAKI:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிற நிதி அமைச்சர் அவர்கள், இந்த அதிகப்படியான



தொகை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டுச் செலவுக்கும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட துவக்க காலத்தில் ஏற்படும் செலவுக்குமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று விரிவாகவும் விளக்கமாகவும் கூறியிருப்பதை வரவேற்கிறேன். இம் மாதிரி உபமான்யக் கோரிக்கையைக் கொண்டு வருவது நமது அரசாங்கம் வேலைகளில் தாமதத்தை ஏற்கத் தயாராயில்லை என்ற விறுவிறுப்பைத்தான் காட்டுகிறது. புதிய சர்விஸுகள் என்று சொல்லக்கூடிய பல திட்டங்களை உருவாக்கி, அவற்றை எல்லாம் நல்ல முறையில் செயலாற்றி வருவது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய விஷயம். அதே சமயத்தில் இதற்கான பணத்தை வரவு செலவுத் திட்டத்திலேயே ஒதுக்கமுடியாமல் உபமான்யக் கோரிக்கையில் கொண்டுவரவேண்டிய சூழ்நிலை இருந்திருக்கலாம். இதை நிதி அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக் கிறேன்.

குறிப்பாக, ஹரிஜன அப்லிப்ட் என்ற தலைப்பின்கீழ் குழந்தை களுக்கு ஸ்காலர்ஷிப்கள் கொடுப்பதற்காக உபமான்யக் கோரிக் கையில் 10 லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இதற்குமேல் தேவை, தேவை என்று பல்லாண்டு காலமாகச் சொல்லி வருவது நம்முடைய நிதி அமைச்சருக்குத் தெரிந்திருக்கலாம். கொடுக்கிற 17 லட்சம் போதவில்லை. குறைந்தது 25 அல்லது 30 லட்சம் ரூபாய் இருந்தால், உண்மையிலேயே தேவைப்படுகிற ஏழைக்குழந்தைகளுக்கு, பிற்பட்ட இனத்தவர்களின் குழந்தை களுக்கு சலுகைகள் தருவதற்கு அவசியம் என்று கூறியும்கூட, 17 லட்சத்தை வரவு செலவுத் திட்டத்திலே காட்டிவிட்டு, இந்த 10 லட்சத்தை உபமான்யக் கோரிக்கையிலே கொண்டு வர வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை சம்பந்தப்பட்ட இலா காவும், நிதி இலாகாவும் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆண்டு தோறும், போதவில்லை, போதவில்லை என்று கேட்டும், ஏதோ அவசரக் குறைகளைத் தீர்ப்பது போல, கேட்கிற தொகையைக் கொடுக்காமல், இந்த 10 லட்சத்தை இடையிலே கொண்டுவருவது இலாகாவின் குறையாகத்தான் இருக்கவேண்டும். அடுத்த வருஷத்திலாவது உபமான்யக் கோரிக்கையில் கொண்டுவராமல், இந்த 10 லட்சத்தையும் வரவு செலவுத் திட்டத்திலேயே சேர்ப்ப தற்கு நிதி இலாகா ஒத்துழைக்குமானால், நிதி அமைச்சர் அவர்கள் கவனத்தைச் செலுத்துவார்களேயானால், அதை பல மக்கள் வர வேற்பார்கள். மாணவ உலகமும் வரவேற்கும் என்று நினைக் கிறேன். அதுபோன்று, போஸ்ட் கிராஜுவேட் படிப்புக்கும் மிகக் குறைவான அளவிலே ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து வருகிறார்கள். ஹரிஜன இலாகா அமைச்சர், அட்வைசரி கமிட்டி யோசனைப்படி 3-லிருந்து 5-ஆகவும், 5-லிருந்து 10-ஆகவும் உயர்த்தி யிருக்கிறார்கள். அப்படி உயர்த்தியும் போதாது என்று உணர்ந் திருக்கிறோம். ஆகவே இந்த உபமான்யக் கோரிக்கையில் கொண்டு வந்த 10 லட்சத்தை அடுத்த வருஷம் உபமான்யக் கோரிக்கையில் கொண்டுவராமல், வருஷா வருஷம் தேவைப் படுகிற பணம் என்ற காரணத்தினாலே, வரவு செலவுத்

திட்டத்திலேயே சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் 10 லட்சத்தை உபமான்யக் கோரிக்கையிலே கொண்டுவந்துவிட்டார்களே என்பதற்காக நன்றி செலுத்தத் தவறிவிடக் கூடாது. அந்தத் தவறைச் செய்ய நான் விரும்ப வில்லை. அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த 10 லட்சத்தையும் வரவு செலவுத் திட்டத்திலே சேர்த்துக் கொடுத்துவிட்டால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். உபமான்யக் கோரிக்கையிலே வருமா, வராதா என்ற காரணத்தினாலே தாமதம் ஏற்படுகிறது. ஒருசில கஷ்டங்களும் ஏற்படுகின்றன. இனிமேல் ஹரிஜன நல இலாகாவுக்குக் கொடுக்கிற சலுகைகளிலே இன்னும் சில லட்சங்களைச் சேர்த்து ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று இன்னும் சில செலவுகளைப் பார்க்கும்பொழுது, ஏன் இந்த இலாகா தவறிவிட்டது என்று தோன்றுகிறது. பன்றி வளர்ச்சிக்காக ரூபாய் 47,400 ஒதுக்கியிருக்கிறோம். இது இடையிலே கொண்டுவரப்பட்ட திட்டமா, அல்லது அவசரமாக ஏற்படுத்தப்பட்ட திட்டமா, முன்னாலே நாம் எதிர்பார்த்திருக்க முடியாத திட்டமா என்பதைப் பற்றி தெரிந்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம். நாம் பணம் ஒதுக்கவில்லை என்பதற்காக திட்டங்கள் நின்றுவிடக் கூடாது. பணம் கேட்கும் இலாக்காக்கள் முதலிலேயே விண்ணப்பித்துக்கொண்டு வாங்கிக்கொள்வது நல்லது. அந்தந்த இலாக்காக்களின் கவனத்தை சற்று முடுக்கி விட்டால்தான், கவனக் குறைவு இல்லாமல், திட்டங்களை முன்னரேயே சேர்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

(Deputy Speaker in the Chair.)

அடுத்த படியாக போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டும் விஷயத்திலும், எல்லா வீடுகட்டும் திட்டங்களையும் இந்த உப மானியத்தில் கொடுத்திருக்கிறார்கள். அது வரவு செலவு திட்டத்திலேயே வந்திருக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதன் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது. எவ்வளவு சீக்கிரமாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது என்பது மறுக்க முடியாது. அத்தகைய திட்டத்தை வரவு செலவு திட்டத்திலேயே கொடுத்திருக்க வேண்டும், என்பதை மட்டும் சொல்ல விரும்பு கிறேன்.

இன்னும் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். கன்யாகுமரி, திருத்தணி முதலிய பகுதிகளுக்கு முன்னேற்றத் திட்டங்கள் வெகு சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லும் போது, எங்கள் தொகுதியிலும், மேல் பாலத்திற்கு அதன் அவசியத்தை உணர்ந்து ஏதாவது செய்ய வேண்டும். ஒரு டோகன் கிராண்டாவது கொடுத்து இருந்தாலும்கூட நன்றாக இருந்திருக்கும். ஒன்றையுமே காணோமே என்று வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்த உப மானியக் கோரிக்கைகளை வரவேற்று, முடிக்கிறேன்.



SRI K. ANBAZHAGAN : சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது இரண்டொரு கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு வழங்கும் முறையில் கேட்டிருக்கும் தொகை ரூ. 34 லட்சம். அதிகமான தாராளத்தோடு இதனை அளிக்கிறார்கள்; ஜமீன்தார்களிடம் அவர்கள் காட்டும் அக்கறை உண்மையாகப் பாராட்டப்பட வேண்டும். சுதந்திரா கட்சியோடு மோதிக்கொள்ளும்போது, காங்கிரஸ் கட்சியினர் இந்த ஜமீன்தார்களுக்குக் காட்டும் தாராளம் உண்மையாகப் பாராட்டத் தக்க அளவு பயனுடையதாக இருக்கும். அதே சமயத்தில், ஜமீன் நிலங்களை சர்வே கணக்கு எடுப்பதில் ஈடுபட்டுள்ள, ஜூனியர் காம்ப்யூடர், ட்ராப்ட்ஸ்மென் போன்றவர்கள் ஏறத்தாழ 850 பேர் தற்காலிகம் என்ற பெயரில், பல ஆண்டுகளாக அலுவலில் இருப்பவர்களுக்கு மற்ற அதிகாரிகளுக்கு ஊதியக்குழுவின் சிபார்சுபடி சம்பளம் அளிக்கப்பட்ட பிறகும், இந்த தற்காலிக சர்வேயர்கள் புதிய ஊதியம் பெறுமல் இருக்கிறார்கள். சர்வே இலாகாவில் இருப்பவர்கள் ஏறத்தாழ 1,100 பேர்கள்; அவர்களுக்கு இதுவரை சம்பள உயர்வு அளிக்கப் படவில்லை. மற்றவர்களுக்கு சம்பள உயர்வு ஆறு திங்களாக அளிக்கப் பட்டிருந்தபோதிலும், அதிகச் சம்பளம் வழங்கப் பட்டிருந்தபோதிலும், இந்த ஊழியர்களுக்கு இன்னும் உரிய ஊதியங்கூடத் தீர்மானிக்கப் படவில்லை. காலையில் நிதியமைச்சரவர்கள் பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டார்கள். "நாங்கள் திறமையோடு பணியாற்றுகிறவர்கள்" என்றும், எங்கள் பணியையும் எங்களையும் வாடகைக்குக்கூட பல வெளி நாட்டு அரசினர் கேட்டிருக்கிறார்கள் என்றும் பெருமையாகச் சொன்னார்கள். ஆனாலும் இந்த 1,000-க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு ஊதியம் தீர்மானித்து அளிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் மட்டுந்தான் என்ன, தங்கள் குறைகளை நீக்குமாறு முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களுக்கும் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் 14—10—1960-லேயே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ மூன்று திங்கள் ஆகியும், திறமையாகப் பணியாற்றுகிறது அரசாங்கம் என்று திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் செய்தபாடில்லை. அதே போலத்தான் பஞ்சாயத்துக்களில் பணியாற்றும் 12,000 ஊழியர்கள் நிலையும். அவர்களுடைய சம்பளமும் அறுதியிட்டுச் சொல்லப் படவில்லை. இந்த 12,000 ஊழியர்களுக்குப் புதிய சம்பளம் அளிக்கப் படாமலே இருக்கிறது. இது குறித்து அரசாங்க ஊழியக்குழு என்ன சொல்லியிருக்கிறது :

"The Commission has proposed that panchayats should also be asked to accept the revised scales of pay recommended by the Commission for other local bodies and Government should encourage them to do so by giving them financial assistance."

ஆக, அரசாங்கம் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு நிதி உதவியளித்து இந்தச் சம்பளத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்த போதிலும், 1960 ஜூன் திங்களில் இந்த அறிக்கை வந்திருந்த போதிலும், (ரிவைஸ்டு பே) புதிய சம்பளம் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், இந்த 12,000 பணியாளர்களுக்கு ஊதியம் இதுவரை அளிக்கப் படவில்லை. ஆறு மாதகாலமாக அவர்கள் அரைப் பட்டினிகளாக இருக்கிறார்கள். அப்படியிருக்கிற நிலையில்தான் இவர்கள் ஜனநாயகத்தைப் போற்றி வளர்ப்பதாகப் பெருமை பேசிக் கொண்டு இருக்கிறார்கள் அமைச்சர்கள். வாழ்க அவர்கள் மனப்பான்மை என்று வாழ்த்துகிறேன்.

அடுத்து, கிராமப் பணியாளர்கள் நிலை கவனத்துக்குரியது. இன்று கணக்கப் பிள்ளை, கர்ணம் போன்றவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணி மிக அதிகமானது; அவர்களுக்குத் தரப்படும் ஊதியமோ மிகக் குறைவு; அவர்கள் பணி திறமையாகச் செய்யப்பட்டாலும் அதை மனமாரப் பாராட்டுவதில்லை அரசாங்கம், என்றாலும், படித்த வாலிபர்களை, எஸ்.எஸ்.எல்.ஸி. தேறியவர்களை நியமித்து விடுவோம் என்று அச்சுறுத்துகிறார்கள். கொடுக்கிற ஊதியத்திலும் உயர்வு கொடுக்க வில்லை. பெயருக்கு மூன்று ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு குறை; அதைவிடப் பெரிய இன்னொரு குறை, அவர்கள் பஞ்சாயத்திற்குத் துணையாக இருந்து பணியாற்ற வேண்டும் என்பது. இன்றைய தினம் இந்த அரசாங்கம் அந்தக் கருத்து தெரிவிப்பது குறித்து நான் வருத்தம் தெரிவிக்கிறேன். அவர்கள் ஆற்றும் பணி அதிகம், அதற்குத் தக்க ஊதியம் இல்லை. அப்படியிருக்க பணியை அதிகப் படுத்த முயற்சிக்கும் வேளையில், வேலை நிரந்தரம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை. அந்த அளவுக்குச் சூழ்நிலை இருக்கும் நிலையில், பஞ்சாயத்துக்களை கிராம உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பஞ்சாயத்துக்களை அரசாங்கமே நடத்துகிற வாய்ப்பைப் பெற்று, பஞ்சாயத்தில் இருக்க வேண்டிய சுய ஆட்சியை, மகாத்மா காந்தி கொண்டிருந்த கிராம இராச்சிய எண்ணத்தைச் சிதைக்கவே இந்த அரசாங்கம் கிராம உத்தியோகஸ்தர்களை ஈடு படுத்துகிறது என்பது என் குற்றச் சாட்டு. பஞ்சாயத்தில் ஈடு பட்ட அதிகாரிகளே பணியாற்ற வேண்டுமே தவிர, எழுத்தாளர்கள் தனியாக இருக்க வேண்டுமே தவிரக் கிராமக் கணக்கர் அல்ல. அவர்களை ஈடு படுத்தும் முறை தவறு. பஞ்சாயத்துக்களை அரசாங்கம் கர்ணம் மூலம் கட்டுப் படுத்துவது காங்கிரஸ் ஆட்சிக்கு இலாபகரமாகப் பயன் படுத்திக்கொள்ளச் செய்கிற முயற்சி என்று தெரிவிக்கிறேன்.

அதற்கு அடுத்தது, ஆசிரியர்கள் நிலை; கல்வித் துறையிலே வளர்ச்சி பற்றி கல்வி அமைச்சரே பாராட்டிக் கொள்கிறார்கள். எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது. மற்றவர்கள் பாராட்டக் கேட்டு மகிழ்ச்சியடைந்திருக்கக்கூட அவருக்குப் பொறுமையில்லை. கல்வித் துறையில் பயிற்சி பெறாத ஆசிரியர்கள்



ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், புதிய ஊதியம் தீர்மானிக்கப்பட்டுக் கொடுக்கப்படவில்லை. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ரூ. 90-110-லிருந்து இப்பொழுது ரூ. 160 பெறுகிறார்கள். ஆனால், பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் பொருத்த வரை ஏற்கனவே கொடுத்த ஊதியத்தையே, உயர்த்த வேண்டுமென்று கேட்டிருந்தும், புதிய ஊதியத்தையே தீர்மானிக்காமல் இருக்கிறார்கள். பயிற்சி பெறாதவர்கள் இனி ஆசிரியர்களாக வரக் கூடாது என்று தீர்மானம் செய்து விட்டாலும் பரவாயில்லை. இருக்கிற வரையில், பெற்றுவரும் குறைந்த ஊதியத்தையாவது ரூ. 20, 30 அளவாவது உயர்த்துகிறோம் என்றாவது தெரிவிக்க வேண்டும். மாறாகப் பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் பழிவாங்காதீர்கள் என்று இந்த அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இவைகளுக்கெல்லாம் சேர்த்து ஒரு துணை மானியக் கோரிக்கை வந்தாலும், வரவேற்றிருப்பேன். சட்ட மன்றத்தில் பேசப் படுகிற பேச்சுகளுக்கு தக்க பதிலளிக்க முடியாத மந்திரிகள், பேசுகையில் மாற்றுக் கட்சியினரைக் குறிப்பிடுகையில் சிறு பிள்ளைத் தனமாக, விளையாட்டுச் செயலில் . . .

**THE HON. SRI P. KAKKAN:** மதிப்பு மிக்க அங்கத்தினர் "சிறு பிள்ளைத் தனமாக" என்று சொல்வது இந்த சட்டசபைக்கு நல்லதா என்று கேட்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: காலையில் அமைச்சர் பேசுகையில் எங்களைச் சொன்னார்கள். அதைத்தான் குறிப்பிட்டேன். காலையில் எங்களை அமைச்சர் "பொம்மை வைத்து விளையாடும் சிறு பிள்ளைகள்போல்" என்று சொன்னார்கள்; அடுத்து "நீங்கள் நல்ல பாடம் படிக்க வேண்டும்" என்று சொன்னார்கள். சிறு பிள்ளைகள் பாடம் படிக்க வேண்டும் என்று சொன்னதற்கு நன்றி. ஆனால், பெரிய பிள்ளைகளே பாடம் படிக்காமல் அலைந்துகொண்டிருக்கும் நேரத்தில், சிறு பிள்ளைகளைப் பற்றிச் சொல்வது சரியன்று. இம் மாதிரிப் பேசினால் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பதற்காகத்தான். . .

**THE HON. SRI C. SUBRAMANIAM:** சப்ளிமெண்டரி கிராண்டைப் பற்றிப் பேசவேண்டும்; இம்மாதிரி எல்லாவற்றையும் பற்றிப் பேச இது சமயம் இல்லை.

Hon. Members **should** confine their speeches to what is contained inthe supplementary estimates.

DEPUTY SPEAKER: Yes, the hon. Member should confine himself to what is contained in the supplementary estimates and should not refer to other matters.

SRI K. ANBAZHAGAN: நிதி அமைச்சர் விவாதத்திற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றுதான் நான் பேசுகிறேன். நான் பேசிய முன் நேரத்தில் அவர்கள் சபையில் இல்லை. திராவிட முன்னேற்றக் கட்சியின் துணைத் தலைவன் என்ற முறையில், தலைவர்

வராததால், தலைவர் என்ற முறையில் பேசுகிறேன். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; அதற்காகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் கூறுவது நமது அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை என்று, நான் அவர்களுக்கு உடம்புக்கு நலம் இல்லை என்று சொல்லவில்லை; ஏன் வெளியிலே போனார் என்று கண்டிக்க வில்லை, வருத்தப்படவில்லை. பொறுப்பில்லை என்று குறை சொல்லவில்லை, என்னை அலட்சியப் படுத்தினர் என்று குற்றம் சொல்லவில்லை, சட்ட மன்றத்தைப் புறக்கணித்தார் என்று பழி சொல்ல வில்லை. மாறாக அவருடைய பெருந்தன்மையை வாழ்த்துகிறேன்; அந்த மனப் பான்மை வளரவேண்டுமென்று விரும்புகிறேன். நான் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லுவது அவருடைய கடமை. நான் குறிப்பிடுவதெல்லாம், சப்ளிமெண்ட்ரி கிராண்டை ஒட்டியதுதான் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக, சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு இந்த ஆண்டிலாவது மானியத் தொகையும் கடனும் கொடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். உண்மையாகவே, 5, 6 ஆண்டுகளாகவே அதிக மானியத் தொகை கொடுக்க வேண்டும், அவர்களுக்குத் தொகையளிக்கவில்லை என்ற குறை இருக்கிறது என்று திரும்பத் திரும்பப் பேசியிருக்கிறேன். 1957, மார்ச்சு 25-ம் தேதி இந்த சட்ட மன்றத்திலே, அவர்களுக்குத் தொகையளிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறேன். அப்பொழுது, மாநகராட்சி மன்றத்திலே காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்பொழுதே அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாநகராட்சி மன்ற ரோடுகள் பழுதடைந்திருக்கின்றன என்று எடுத்துக் காட்டியிருக்கிறேன். அப்பொழுதே அதிகத் தொகை ஒதுக்கப் படவேண்டுமென்றிருந்தாலும், செய்யப்படவில்லை. கடைசியாக இப்பொழுது, ரூ. 30 லட்சம் மாநகராட்சி மன்றத்திற்குத் தந்து விட்ட காரணத்திற்காக அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டை அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் நீங்கள், நிர்வாகத்தில் இருக்கும் காரணத்தால், எந்தெந்தக் காரியம் எந்தெந்தத் தேதியில் நடந்திருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும். இந்தத் தொகை ஏப்ரல் மாதத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கடன் தொகை பற்றி நகராட்சி மன்றத்திற்கு எப்பொழுது தெரிவித்தார்கள்? ஏப்ரல் மாதத்திலா? மே திங்களிலா? ஜூன் 25 தேதிக்குப் பின்னால், ஏறத்தாழ ஜூலையில் என்று நினைக்கிறேன். அரசாங்கம் தெரிவித்த உடனே, உடனடியாக அவர்கள் காண்ட்ராக்ட் கொடுத்தார்கள்; காண்ட்ராக்டர்களின் விண்ணப்பத்தை மாநகராட்சியினர் அரசாங்க சீப் எஞ்ஜினியர் அவர்களின் அனுமதிக்கு அனுப்பினார்கள். இன்ஜினீரிடத்தில் அந்த விண்ணப்பம் ஒரு மாத காலமாகத் தங்கி இருந்திருக்கிறது. அரசாங்கம் அதற்குப் பதில் சொல்லவேண்டும். நான் குற்றம் சாட்டிச் சொல்வேன். அரசாங்கமே அந்த வேலையைத் தாமதப்படுத்தி, அதிகாரிகள் உடனடியாக வேலை செய்யாத அளவுக்கு அவர்களைத்



தடுத்து இருக்கிறார்கள் என்று ஐயுறுகிறேன். இல்லையானால், காலக் குறிப்போடு, நாள் குறிப்போடு, இன்ன தேதியில் நகராட்சி மன்றத்திற்குத் தெரிவித்தோம், இதற்கு இத்தனை நாள் ஆக வேண்டும், அதைவிட அதிக நாள் எடுத்துக் கொண்டார்கள் என்று பொறுப்புள்ள நிதி அமைச்சர் அவர்கள் குற்றம் சாட்டினால் நான் அவர்களிடத்தில் தலை வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன். தாமதம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. வேலை நடக்கிறதா, இல்லையா என்று பெரிய இன்ஜினீயரை வைத்தாவது கண்காணிக்கட்டும். அல்லது அமைச்சரே ரோடுகளில் வேலை நடப்பதைப் பார்வையிடட்டும். இரவு நேரங்களில் வேலை செய்ய அனுமதி கேட்டதற்கு, அமைச்சர் திருமதி லூர்தம்மாள் அவர்கள், 'இரவிலே வேலை நடக்க அனுமதிக்க முடியாது' என்று சட்ட மன்றத்திலேயே சொன்னார்கள். 'விபத்து ஏற்படும், தவறு ஏற்படும்' என்று சொன்னார்கள். பின்னர் ஏற்பட்ட நிலைமை காரணமாக இரவு நேரத்திலே கூட வேலை நடக்கிறது. அந்த அளவு நடப்பதைக் கூட அமைச்சர்கள் குற்றஞ்சாட்ட விரும்பி குறையாகக் கருதுகிறார்கள். உண்மையிலேயே இந்த மாநில அரசு அதிகப் பொறுப்புள்ள அரசு என்ற காரணத்தால், வேண்டுமானால் சென்னை மாநகராட்சிப் பொறுப்பில் உள்ள சாலைகளைத் தங்கள் பொறுப்பிலேயே எடுத்துப் பராமரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, the Hon. Minister for Finance has presented to the Assembly a Demand for Supplementary Grant to the tune of Rs. 6·12 crores which roughly works out to 12 to 13 per cent of the original estimate. A sum of Rs. 1·2 crores has already been advanced from the Contingency Fund. The major items of expenditure are for Education—Rs. 1·207 crores and Rs. 3·3 crores on capital account. It could not be said that most of the items of expenditure could not have been foreseen or classified under New Services. For example, if we see the Explanatory Note, we will find that under Demand XVI, 'the provision of Rs. 105 lakhs made in the current year's budget had been utilised in full and from the particulars of monthly expenditure received from District Board, it was estimated that the total allotment required for block grants for secondary education would be Rs. 140 lakhs and the balance of appropriation required, viz., Rs. 35 lakhs is included in the Supplementary Estimate, it works out to nearly 33 per cent of the original estimate. This has become a general feature. The Public Accounts Committee has been pointing out that very often huge sums were allotted to each and every department, but ultimately those amounts were not actually utilised by them, with the result that other departments which needed allotments very badly were not able to get the amounts. Such cases did happen. Even during the last discussion, I have pointed out this matter. I refer to it again to impress upon the Government that there has not been proper budgetary control exercised by departmental heads.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th January 1961

Under article 267 (2) of the Constitution of India, the Contingency Fund has been created. As per the rules, sums can be withdrawn from the Contingency Fund only for unforeseen expenditure and not for day-to-day expenditure. If moneys were withdrawn from that Fund to meet day-to-day expenditure, it will be a *fait accompli*. If it is done, it will not be conductive to democratic functioning of the Government. That is my submission so far as that matter is concerned. I would impress upon the Hon. Minister to see that the Contingency Fund was not taken advantage to quite often and sums were withdrawn from it only very rarely to meet unforeseen expenditure. Otherwise, there will not be proper budgetary control.

Now, I come to the purchase of additional buses to the tune of about Rs. 17 lakhs both for the Kanyakumari branch and the Madras City Transport. It is presumed that the entire amount would be spent before 31st March. The Estimates Committee has also referred to this matter. In this way, there will always be rush of expenditure and the departments would be obliged to spend the amounts somehow or other before the financial year. We find that the Transport Workshop at Chromepet cannot undertake the body-building work completely. If only that Workshop could undertake this work, we will be able to save to the tune of Rs. 1,500 for each body built. Now, most of the body building work is being entrusted to private firms and that means, for each body built, the State had to incur an extra expenditure of Rs. 1,500.

For the construction of a workshop at Ranithottam at Kanyakumari, a sum of Rs. 2·1 lakhs has been provided. I do not know how this expenditure was an unforeseen expenditure and whether they would be able to spend the amount before 31st March.

With regard to the maintenance of roads, especially in the Madras City, I wish to point out that the work carried out at present is very unsatisfactory. They must consider the possibility of pushing through the work expeditiously, if necessary by working two shifts (i.e.), during nights also. This is a very important matter. The Government should examine the possibility of themselves taking over at least some of the important roads like the Mount Road, Poonamallee High Road, etc. Our roads are not all-weather roads and they were not able to withstand when there were heavy rains and when there was heavy traffic. The Government should see that we had either cement-concrete or some other better formed roads so that they could withstand the heavy traffic and rains.

Under Grant XXII, we find that the Government have appointed a full-time Special Officer in the senior scale of I.A.S. to be in charge of the work connected with the establishment of a Steel Plant. The suggestion that I would like to make in this connection is this. It is a point for consideration whether it will not be better if the Government appointed a Technical Officer



25th January 1961] [Sri V. K. Ramaswamy Mudaliar]

for this work instead of an I.A.S. Officer. The work involves the purchase of machinery and equipment and a Technical Officer will any day be better than an I.A.S. Officer.

